செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

தொகுதி–14

பரத்தையிற்பிரிவு - 2

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

செம்மொழித் தமிழ்
அகப்பொருள் களஞ்சியம்

பரத்தையிற்பிரிவு - 2

தொகுதி - 14

முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பன்

பழனியப்பா பிரதர்ஸ்

'கோனார் மாளிகை'
25, பீட்டர்ஸ் சாலை, இராயப்பேட்டை,
சென்னை - 600 014.
தொலைபேசி : 044-28132863 / 43408000
e-mail: sales@palaniappabrothers.com

கிளைகள்

திருச்சி - 620 002
சேலம் - 636 001
கோயம்புத்தூர் - 641 001
மதுரை - 625 001
ஈரோடு - 638 001

முதல் பதிப்பு : 2017

© உரிமை – ஆசிரியருக்கு

ISBN: 978-81-8379-767-2 (Set of 14)
978-81-8379-781-8 (Vol-14)

னிப்பிரதி விலை ரூ. 520/–
(தொகுதி–14)

ாத்த விலை ரூ. 7200/–
4 தொகுதிகள்)

கணினி அச்சு : திருமதி இந்திராகாந்தி ரவி
ரமணா கணினி வரையகம், 97890 65515

ஏசியன் பிரிண்டர்ஸ், சென்னை - 600 014.

கிளைகள்

திருச்சி
பழனியப்பா பிரதர்ஸ்
அஞ்சல் பெட்டி எண். 312,
தெப்பக்குளம்,
திருச்சிராப்பள்ளி – 620 002
தொலைபேசி : 0431–2702160

சேலம்
பழனியப்பா பிரதர்ஸ்
கதவு இலக்கம் 77,
(பழைய எண் 39) செர்ரி சாலை,
சேலம் – 636 001
தொலைபேசி : 0427–2450711

கோவை
பழனியப்பா பிரதர்ஸ்
683, ராஜா தெரு,
கோயமுத்தூர் – 641 001
தொலைபேசி : 0422–2393704

மதுரை
பழனியப்பா பிரதர்ஸ்
23-A, மேற்கு கோபுரத் தெரு,
மதுரை – 625 001
தொலைபேசி : 0452–2346258

ஈரோடு
பழனியப்பா பிரதர்ஸ்
950, ப்ரோக் சாலை,
ஈரோடு – 638 001
தொலைபேசி : 0424–2256261

பொருளடக்கம்

களஞ்சிய வாயில் x

மதிப்புரை xv

பதிப்புரை xvi

அகத்திணை xviii

பரத்தையிற்பிரிவு - 2

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
அகநானூறு 26	கூன்முள்	பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப்பெருவழுதி	682
அகநானூறு 56	நகைஆ	மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்	496
அகநானூறு 66	இம்மை	செல்லூர்க் கோசிகன் கண்ணனார்	574
அகநானூறு 126	நின்வாய்	நக்கீரர்	510
அகநானூறு 136	மைப்புஅறப்	விற்றூற்று மூதெயினனார்	515
அகநானூறு 186	வானம்	பரணர்	351
அகநானூறு 236	மணிமருள்	பரணர்	691
அகநானூறு 266	கோடுற	பரணர்	474
அகநானூறு 316	துறைமீன்	ஓரம்போகியார்	443
அகநானூறு 336	குழற்கால்	பாவைக் கொட்டிலார்	362
அகநானூறு 376	செல்லல்.	பரணர்	407
அகநானூறு 396	தொடுத்தேன்	பரணர்	401
ஐங்குறுநூறு 1	வாழி	ஓரம்போகியார்	704
ஐங்குறுநூறு 2	வாழி	ஓரம்போகியார்	706
ஐங்குறுநூறு 3	வாழி	ஓரம்போகியார்	707
ஐங்குறுநூறு 4	வாழி	ஓரம்போகியார்	709
ஐங்குறுநூறு 5	வாழி	ஓரம்போகியார்	711

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 11	மனைநடு	ஓரம்போகியார்	664
ஐங்குறுநூறு 12	கரைசேர்	ஓரம்போகியார்	571
ஐங்குறுநூறு 14	கொடிப்பூ	ஓரம்போகியார்	663
ஐங்குறுநூறு 20	அறுசில்	ஓரம்போகியார்	472
ஐங்குறுநூறு 21	முள்ளி	ஓரம்போகியார்	441
ஐங்குறுநூறு 25	அயல்புறம்	ஓரம்போகியார்	508
ஐங்குறுநூறு 26	கரந்தைஅம்	ஓரம்போகியார்	522
ஐங்குறுநூறு 36	அம்ம	ஓரம்போகியார்	572
ஐங்குறுநூறு 40	அம்ம	ஓரம்போகியார்	357
ஐங்குறுநூறு 42	மகிழ்மிகச்	ஓரம்போகியார்	489
ஐங்குறுநூறு 49	அஞ்சில்	ஓரம்போகியார்	500
ஐங்குறுநூறு 52	பயலைச்	ஓரம்போகியார்	714
ஐங்குறுநூறு 58	விண்டு	ஓரம்போகியார்	566
ஐங்குறுநூறு 61	நறுவடி	ஓரம்போகியார்	491
ஐங்குறுநூறு 62	இந்திர	ஓரம்போகியார்	493
ஐங்குறுநூறு 65	கரும்புநடு	ஓரம்போகியார்	479
ஐங்குறுநூறு 67	மடவள்	ஓரம்போகியார்	504
ங்குறுநூறு 68	கன்னி	ஓரம்போகியார்	501
ங்குறுநூறு 96	அணிநடை	ஓரம்போகியார்	715
ஐங்குறுநூறு 97	பகன்றை	ஓரம்போகியார்	700
ஐங்குறுநூறு 99	பழனப்	ஓரம்போகியார்	678
ஐங்குறுநூறு 100	புனலாடு	ஓரம்போகியார்	569
ஐங்குறுநூறு 135	பைதலம்	அம்மூவனார்	499
ஐங்குறுநூறு 137	நின்ஒன்று	அம்மூவனார்	503
ஐங்குறுநூறு 138	பண்புஇலை	அம்மூவனார்	670

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
ஐங்குறுநூறு 139	அம்ம	அம்மூவனார்	494
ஐங்குறுநூறு 140	காண்மதி	அம்மூவனார்	669
ஐங்குறுநூறு 143	எக்கர்	அம்மூவனார்	703
ஐங்குறுநூறு 150	எக்கர்	அம்மூவனார்	712
ஐங்குறுநூறு 151	வெள்ளாங்	அம்மூவனார்	469
ஐங்குறுநூறு 152	வெள்ளாங்	அம்மூவனார்	467
ஐங்குறுநூறு 154	வெள்ளாங்	அம்மூவனார்	470
ஐங்குறுநூறு 155	வெள்ளாங்	அம்மூவனார்	456
ஐங்குறுநூறு 157	வெள்ளாங்	அம்மூவனார்	592
ஐங்குறுநூறு 160	வெள்ளாங்	அம்மூவனார்	478
ஐங்குறுநூறு 167	பெருங்கடற்	அம்மூவனார்	590
ஐங்குறுநூறு 169	பெருங்கடற்	அம்மூவனார்	523
ஐங்குறுநூறு 188	இருங்கழிச்	அம்மூவனார்	452
ஐங்குறுநூறு 198	வளைஅணி	அம்மூவனார்	674
ஐங்குறுநூறு 283	வன்கண்	கபிலர்	717
ஐந்திணை எழுபது 52	காதலின்	மூவாதியார்	509
ஐந்திணை எழுபது 53	உள்நாட்டம்	மூவாதியார்	437
ஐந்திணை எழுபது 56	வளவயல்	மூவாதியார்	436
ஐந்திணை ஐம்பது 26	பெய்வளைக்	மாறன் பொறையனார்	587
ஐந்திணை ஐம்பது 28	ஒல்லென்(று)	மாறன் பொறையனார்	449
ஐந்திணை ஐம்பது 29	ஒல்லென்	மாறன் பொறையனார்	686
ஐந்திணை ஐம்பது 30	குளிரும்	மாறன் பொறையனார்	688
கலித்தொகை 66	வீங்குநீர்	மருதனிளநாகனார்	658
கலித்தொகை 67	கார்முற்றி	மருதனிளநாகனார்	654
கலித்தொகை 68	பொதுமொழி	மருதனிள நாகனார்	383

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 69	போதுஅவிழ்	மருதனிளநாகனார்	378
கலித்தொகை 70	மணிநிற	மருதனிளநாகனார்	428
கலித்தொகை 71	விரிகதிர்	மருதனிளநாகனார்	373
கலித்தொகை 72	இணைபட	மருதனிளநாகனார்	368
கலித்தொகை 73	அகன்துறை	மருதனிளநாகனார்	485
கலித்தொகை 74	பொய்கைப்பூப்	மருதனிளநாகனார்	365
கலித்தொகை 75	நீர்ஆர்	மருதனிளநாகனார்	695
கலித்தொகை 77	இணைஇரண்டு	மருதனிளநாகனார்	650
கலித்தொகை 78	பன்மலர்ப்	மருதனிளநாகனார்	387
கலித்தொகை 79	புள்இமிழ்	மருதனிளநாகனார்	621
கலித்தொகை 80	நயம்தலை	மருதனிளநாகனார்	617
கலித்தொகை 81	மைஅற	மருதனிளநாகனார்	626
கலித்தொகை 82	ஞாலம்	மருதனிளநாகனார்	595
கலித்தொகை 83	பெருந்திரு	மருதனிளநாகனார்	607
கலித்தொகை 84	உறுவளி	மருதனிளநாகனார்	601
கலித்தொகை 85	காலவை.	மருதனிளநாகனார்	612
கலித்தொகை 86	மைபடு	மருதனிளநாகனார்	644
கலித்தொகை 87	ஒருஉ;நீ	மருதனிளநாகனார்	641
கலித்தொகை 88	ஒருஉ	மருதனிளநாகனார்	638
கலித்தொகை 89	யார்இவன்	மருதனிளநாகனார்	634
கலித்தொகை 90	கண்டேன்,நின்	மருதனிளநாகனார்	391
கலித்தொகை 91	அரிநீர்	மருதனிளநாகனார்	397
கலித்தொகை 92	புனவளர்	மருதனிளநாகனார்	526
கலித்தொகை 93	வண்டூது	மருதனிளநாகனார்	535
கலித்தொகை 95	நில்,ஆங்கு	மருதனிளநாகனார்	540

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
கலித்தொகை 96	ஏந்துஎழில்	மருதனிளநாகனார்	546
கலித்தொகை 97	அன்னை	மருதனிளநாகனார்	552
கலித்தொகை 98	யாரைநீ	மருதனிளநாகனார்	557
குறுந்தொகை 9	யாய்ஆ	கயமனார்	423
குறுந்தொகை 10	யாய்ஆ	ஓரம்போகியார்	426
குறுந்தொகை 33	அன்னாய்	படுமரத்து மோசிகீரனார்	584
குறுந்தொகை 45	காலை	ஆலங்குடி வங்கனார்	422
குறுந்தொகை 49	அணிற்பல்	அம்மூவனார்	721
குறுந்தொகை 75	நீகண்	படுமரத்து மோசிகீரனார்	671
குறுந்தொகை 91	அரில்பவர்ப்	ஔவையார்	506
குறுந்தொகை 93	நல்நலம்	அள்ளூர் நன்முல்லையார்	460
குறுந்தொகை 106	புல்வீழ்	கபிலர்	578
குறுந்தொகை 169	சுரம்செல்	வெள்ளிவீதியார்	520
குறுந்தொகை 181	இதுமற்று	கிளிமங்கலங்கிழார்	588
குறுந்தொகை 202	நோம்என்	அள்ளூர் நன்முல்லையார்	459
குறுந்தொகை 203	மலைஇடை	நெடும்பல்லியத்தனார்	464
குறுந்தொகை 231	ஓர்ஊர்	பாலை பாடிய பெருங்கடுங்கோ	465
குறுந்தொகை 252	நெடிய	கிடங்கில் குலபதி நக்கண்ணனார்	689
குறுந்தொகை 271	அருவி	அழிசி நச்சாத்தனார்	585
குறுந்தொகை 293	கள்ளின்	கள்ளில் ஆத்திரையனார்	462
குறுந்தொகை 309	கைவினை	உறையூர்ச் சல்லியன் குமாரன்	420
குறுந்தொகை 349	அடும்புஅவிழ்	சாத்தனார்	676

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
குறுந்தொகை 359	கண்டிசின்	பேயனார்	673
குறுந்தொகை 364	அரில்பவர்ப்	ஔவையார்	349
கைந்நிலை 39	முட்ட	புல்லங்காடனார்	594
கைந்நிலை 44	தண்துறை	புல்லங்காடனார்	458
திணைமாலை நூற்றைம்பது 134	கிழமை	கணிமேதாவியார்	701
திணைமாலை நூற்றைம்பது 135	என்கேட்டி	கணிமேதாவியார்	404
திணைமாலை நூற்றைம்பது 138	கன்றுள்ளிச்	கணிமேதாவியார்	633
திணைமாலை நூற்றைம்பது 139	மருதோடு	கணிமேதாவியார்	718
திணைமாலை நூற்றைம்பது 144	அரத்தம்	கணிமேதாவியார்	563
திணைமாலை நூற்றைம்பது 146	மண்கிடந்த	கணிமேதாவியார்	525
திணைமாலை நூற்றைம்பது 149	புண்கிடந்த	கணிமேதாவியார்	564
திணைமாலை நூற்றைம்பது 150	கண்ணுறுங்கால்	கணிமேதாவியார்	720
திணைமாலை நூற்றைம்பது 152	முலையாலும்	கணிமேதாவியார்	484
திணைமாலை நூற்றைம்பது 153	துனிபுலவி	கணிமேதாவியார்	450
திணைமொழி ஐம்பது 36	செந்தா	கணிமேதாவியார்	435
நற்றிணை 120	தடமருப்பு	மாங்குடி கிழார்	666

நூல்	பாடல்	ஆசிரியர் பெயர்	பக்கம்
நற்றிணை 180	பழனப்	ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை	439
நற்றிணை 210	அரிகால்	மிளைகிழான் நல்வேட்டனார்	432
நற்றிணை 217	இசைபட	கபிலர்	446
நற்றிணை 250	நகுகம்	மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்	582
நற்றிணை 260	கழுநீர்	பரணர்	679
நற்றிணை 270	தடந்தாள்	பரணர்	417
நற்றிணை 280	கொக்கினுக்கு	பரணர்	453
நற்றிணை 290	வயல்வெள்	மதுரை மருதனிளநாகனார்	355
நற்றிணை 300	சுடர்த்தொடிக்	பரணர்	359
நற்றிணை 315	ஈண்டுபெருந்	அம்மூவனார்	410
நற்றிணை 350	வெண்ணெல்	பரணர்	481
நற்றிணை 370	வாராய்	உறையூர் கதுவாய்ச் சாத்தனார்	579
நற்றிணை 386	சிறுகண்	தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்	414
நற்றிணை 400	வாழை	ஆலங்குடி வங்கனார்	405
நாலடியார் 387	கருங்கொள்ளும்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	473
நாலடியார் 389	சாய்ப்பறிக்க	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	687
நாலடியார் 391	முயங்காக்கால்	சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை	567

களஞ்சிய வாயில்

சிலம்பொலி சு. செல்லப்பன்

ஒரு மொழியின் பயன்பாடு உயிர்ப்புடன் இருக்க வேண்டுமெனின் அம்மொழிக்குரிய வேர்களை உயிர்ப்புடன் திகழுமாறு காக்க வேண்டும். மொழிக்கு வேர்கள் என்பவை அதன் இலக்கியங்களே! நூல்களெங்கும் பரந்து கிடக்கும் இலக்கியச்சுவை, ஒரு பூவினடியில் அமைந்திருக்கும் அமிழ்தத்தை ஒத்தது. ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயமும் இலக்கியங்களின் சுவையை அறிந்து மகிழுமாறு செய்ய, ஒவ்வொரு பூவிலும் உறிஞ்சி எடுத்த அமிழ்தத் துளிகளைச் சேகரித்துச் சுவையான தேனடையாக உருவாக்கித் தரும் தேனீயின் உழைப்பினையொத்த அயராத பணி இன்றியமையாததாகிறது. இவ்வாறான பணியை ஒவ்வொரு காலகட்டத்திலும் வெவ்வேறு தமிழறிஞர்கள் மேற் கொண்டுள்ளனர் என்றாலும், 'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்' என்னும் இந்நூலின் தொகுதிகள் உருவாக மேற் கொள்ளப்பட்ட முயற்சி தனித்தன்மை வாய்ந்ததாகும்.

இதுவரை சொல்லப்பட்ட எதையும் தாண்டிச் சொல்லப்படவில்லை என்றாலும், இதுவரை சொல்லப்பட்ட ஒன்றை, இதுவரை யாரும் சொல்லாத முறையில் சொல்ல மேற்கொண்ட முயற்சியால் உருவானதே இக்களஞ்சியமாகும்.

'உரை' என்பதற்கும் 'திரட்டு' என்பதற்கும் உழைப்பு அளவிலேயே வேறுபாடு இருக்கிறது. சிலப்பதிகாரம் உள்ளிட்ட எத்தனையோ நூல்களுக்கு உரை எழுதியிருக்கிறேன். அவை ஒரு நெடுஞ்சாலைப் பயணம்போல் சீராகத் தொடங்கி முடிந்துள்ளன. ஆனால், குறிப்பிட்ட ஒரு பாடுபொருளை, குறித்த ஒரு கால எல்லைக்குள், அது

பாடப்பட்டுள்ள இலக்கிய நூல் ஒன்றுவிடாமல் தேடியெடுத்து, உரிய விளக்கத்துடன் தந்துள்ள இம்முயற்சி, என் வாழ்நாளில், எனக்கு வாழ்க்கை தந்த தமிழுக்கு, என் நன்றிக் கடனைச் செலுத்தக் கிடைத்த ஒரு நல்வாய்ப்பாய் எண்ணி மகிழ்கிறேன்.

'செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியத்தை' உருவாக்க நான் மேற்கொண்ட முயற்சி ஓர் அகழ்வாராய்ச்சிக்கு இணையானது எனலாம். செம்மொழித் தமிழ் இலக்கிய நூல்களிலுள்ள 2586 அகப்பாடல்கள் பதினான்கு தொகுதிகளில் விளக்கம் பெற்றுள்ளன. இக்களஞ்சியம் வெறும் அகத்திரட்டு மட்டுமன்று; ஒரு யுகத்திரட்டு. ஒரு வகையில் இதனைத் தமிழ் அகப்பொருள் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என்று கூடச் சொல்லலாம்.

நூல் உருவாக்கம்

தமிழ் அகத்திணையில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம், குறியிடம், சிறைப்புறம், ஒருவழித்தணத்தல், வரைவு நீட்டிப்பு, வரைவு கடாயது, அறத்தொடு நிற்றல், வரைவிடைப் பிரிவு, வரைவு மலிதல், உடன்போக்கு, ஏறு தழுவுதல், மங்கல மனையறம், பொருள்வயிற் பிரிவு, பரத்தையிற்பிரிவு என்பவற்றோடு இன்னும் பல துறைகள் உள்ளன. ஒவ்வொரு துறை சார்ந்த பாடல்கள் ஒவ்வொரு நூலினின்றும் முதலில் திரட்டப்பட்டன; பின்னர் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தும் ஒன்று சேர்க்கப்பட்டு இக்களஞ்சியம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்கள் அனைத்தையும் ஒரேயிடத்தில், நிகழ்ச்சி நடைபெறும் வரிசை முறையில், தக்க விளக்கத்துடன் இக்களஞ்சியத்தில் காணமுடியும். களவு, கற்பு என்னும் நிலைகளில் ஒவ்வொரு துறைக்குமுரிய பாடல்களைத் தனியே ஓரிடத்தே காண்பதற்கான வாய்ப்பு இக்களஞ்சியத்தில் உள்ளது.

பதிப்பில் பின்பற்றப்பட்டுள்ள நெறிமுறைகள்

மூல பாடம் பலவற்றுள் சிறந்தது என்று கருதப்பட்டது இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளது.

அக்காலப் பாடல் நடையமைப்புச் சற்றுக் கடினமானதுதான். ஆதலின் எளிதில் படித்துப் பொருளறியும் முறையில் சொற்கள் பிரிக்கப்பட்டு அசையும் சீரும் சிதையாவண்ணம் பாடல்கள் தரப்பட்டுள்ளன.

ஒவ்வொரு பாடலும் யாருடைய கூற்று என்பது முதலில் தரப்பட்டுள்ளது. அடுத்த அடியில் அப்பாடல் எந்த நூலில் எத்தனையாவது எண்ணில் அமைந்துள்ளது என்பதும், அதனை இயற்றிய ஆசிரியர் எவர் என்பதும் தரப்பட்டுள்ளன. அடுத்துப் பாடல் எத்திணையைச் சார்ந்தது என்பது கொடுக்கப்பட்டுள்ளது. அதனையடுத்துப் பாடலின் கூற்றும், கூற்று விளக்கமும் இடம் பெற்றுள்ளன. இவற்றையடுத்துப் பாடலும், பாடலின் தெளிவுரையும், கருத்துச் சுருக்கமும் உள்ளன.

மேற்கொண்டு விளக்கமும், தேவையான குறிப்புகளும் உள்ளன. சில பாடல்களுக்கு இறைச்சி, உள்ளுறைப் பொருள் ஆகியன தரப்பட்டுள்ளன. இறுதியில் பாடலிலுள்ள இன்றியமையாச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. சொல்லுக்கு நேரடிப் பொருளோடு, பாடலைப் புரிந்துகொள்ளும் வகையில் மேலும் தேவைப்படும் சொற்களும் இணைக்கப்பட்டுள்ளன. அதனால், பாடலையும் சொற்பொருளையும் ஒன்றிணைத்துப் படித்தால் பாடலின் பொருள் உரையின்றியே நன்கு விளங்குவதை அறியலாம்.

நன்றி மலர்

களஞ்சியத்தை உருவாக்க எனக்குத் துணை நின்றவர், பலர்.

நான் எழுதியதைச் செப்பனிட்டு வரிசையாக்கி, நூல் முழுவதையும் படித்துத் தக்க திருத்தங்களை வழங்கியவர், என் மருகர் பொறிஞர்

நா. புஷ்பராசு. அவருக்கு வாழ்க்கைத்துணையாக மட்டுமன்றி இப்பணிக்குப் பெரிதும் துணை நின்ற என் மகள் முனைவர் மணிமேகலை, இவர்களுக்கு இனிய ஒத்துழைப்பு நல்கிய பொறிஞர் அ. இரவீந்திரன்,

நூல் முழுமைக்கும் மெய்ப்புப் பார்த்துத் துணை செய்ததோடு 'அகத்திணை அஞ்சிறைத் தும்பி' எனப் பாராட்டுரையையும் தந்துள்ள கவிமாமணி தேனி திருமாவளவன்,

'ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்' எனும் நுண்ணிய ஆய்வுரையை வழங்கியுள்ள பேராசிரியர் முனைவர் இராம. குருநாதன்,

உள்ளம் கொள்ளை கொள்ளும் வகையில் அருமையானதோர் அணிந்துரை நல்கியுள்ள பேராசிரியர் முனைவர் மறைமலை இலக்குவனார்,

எத்தனை திருத்தங்கள், மாற்றங்கள் செய்தாலும் சலிப்பின்றி அத்தனையையும் உடனுக்குடன் கணினிமூலம் செம்மையாய்ச் செய்து வெளிவர உதவிய திருமதி இந்திரா காந்தி ரவி,

தரமான இலக்கிய நூல்களைப் பதிப்பிப்போர் என்றதும் முதலில் நினைவில் நிற்பவர் பழனியப்பா பிரதர்ஸ் நிறுவனத்தார் ஆவர். அவர்கள் இக்களஞ்சியத்தைக் காண்பவர் பாராட்டும் வகையில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். அவர்கள் தந்துள்ள பதிப்புரை என் நெஞ்சில் என்றென்றும் பதிந்திருக்கும். அத்தகைய பதிப்பக உரிமையாளர் திரு. ப. செல்லப்பன், பதிப்பில் எனக்கு எல்லா வகையிலும் துணை நிற்கும் சுப்பு என்கிற திரு. இராம. சுப்பையா, களஞ்சியம் சிறந்த முறையில் உருவாக முன்னின்று முழு மூச்சுடன் பாடுபட்ட முனைவர் ப. முத்துக்குமாரசாமி,

முகப்போவியத்தை அழகுற வடிவமைத்துத் தந்துள்ள ஓவியர் ஜீவா,

கடின உழைப்பில் என் உடல் நலம் கெட்டுவிடாதவாறு பேணி வந்ததோடு, களஞ்சியம் வெளிவருவதில் பெரிதும் ஆர்வம் காட்டிய

என் மகன் செ. கொங்குவேள், மருமகள் மருத்துவர் ஈஸ்வரி மற்றும் குடும்பத்தினர் ஆகிய

அனைவரையும் பாராட்டிப் புகழ ஏற்ற சொற்கள் எனக்குக் கிட்டவில்லை என்பதால், 'நன்றி' என்னும் ஒரு சொல்லை என் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வெளிப்படுத்தி வணங்குகின்றேன்.

களஞ்சியப் பொருளைப் பாதுகாத்தல் மட்டும் போதாது; அதனை நாமும் துய்த்து அனைவர்க்கும் வாரிவாரி வழங்க வேண்டும். களஞ்சியத்தைத் துய்த்தால், தமிழரின் வீரம் செறிந்த, அறஞ்சார்ந்த காதல் வாழ்க்கை முறையினைச் சற்றே வாழ்ந்துவிட்ட நுகர்வும், இவ்வளவு மென்மையும் உயர்வும் அரியதும் ஆனதா தமிழ்க்காதல் என்னும் உள்ளுணர்வும் மேலோங்கி நிற்கும் என்பது உறுதி.

களஞ்சியத்தைப் பயன்படுத்துங்கள்; மேலும் மேலும் விரிவடையச் செய்யுங்கள்.

என்றும் உங்கள்

மதிப்புரை

அகத்திணை அஞ்சிறைத் தும்பி

கவிமாமணி தேனி **திருமாவளவன்**

தனி ஒருவராய், இருபது ஆண்டுகள் இடைவிடாது முயன்று, பல மணி நேர உழைப்பை நல்கி, வெற்றிகரமாய் முடித்துள்ளார், சிலம்பொலி. இந்த இமாலயச் சாதனையை எவ்வாறு போற்றிப் புகழ்வது? சிலம்பொலியின் இந்நூல் தமிழறிவைத் தழைத்திடச் செய்யும். பேச்சாற்றலைப் பெருக்கிடப் பயன்படும். ஆராய்ச்சியாளர்க்கு அருந்துணையாகும். மாணவர்க்கு மாங்கனியாகும். ஆசிரியருக்கு உரை நூல் ஆகும். இந்நூலை ஒவ்வொருவரும் பயின்று, "பெருமை கொள்வாய் தமிழா – தமிழ்நாட்டில் பிறந்ததனால் மிகச் சிறந்தவன் நான் என்று" மகிழ்ந்திட வேண்டுகிறேன்...

ஆழங்காற்பட்ட அகப்பொருள் நுணுக்கம்

பேராசிரியர் முனைவர் **இராம. குருநாதன்**

அகப்பொருள் சார்ந்த இப்பெருநூலினைத் தமிழுலகம் நன்கறிந்த முனைவர் சிலம்பொலி சு. செல்லப்பனார் இலக்கிய இன்பம் தோய இதனைப் படைத்துள்ளார். இந்நூல் செல்லப்பனாரின் சொற்சிறப்பச்சிகரம் என்று செப்புவது மிகையான கூற்றன்று. அகப்பொருள் கருத்தாக்கத்தை இவர் போல் சொல்லுவதற்கு இனி ஒருவர் உண்டோ என்று சொல்லும் அளவிற்கு இந்நூல் சிறந்து விளங்குகிறது. இஃது இவரது வாழ்நாள் சாதனை என்று நவின்று, இதற்கு வரவேற்பு வளையம் வைத்துக் கொண்டாடலாம். இந்நூலினை உருவாக்கி உலவ விட்டமைக்குத் தமிழுலகம் நன்றி சொல்லும். கொண்டாடும்...

தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோல்

பேராசிரியர் முனைவர் **மறைமலை இலக்குவனார்**

மிக எளிமையாகவும், இனிய எளிய நடையிலும், பாடல்களில் கருத்துகளையும் சிறப்புகளையும் சுவைபடவும், பயன்பாடு மிக்கதாகவும் சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ள அகப்பொருள் களஞ்சியம் தமிழ்கூறும் நல்லுலகத்திற்கு ஒரு மகத்தான கொடை என உறுதியாகக் கூறலாம். மிகவும் அரிதின் முயன்று, நீண்ட காலம் அயராது உழைத்து, சங்க இலக்கியம் எனும் கடலில் மூழ்கிச் சிறந்த முத்துகளைத் தேடியெடுத்தது போன்று மிகச் சிறந்த படைப்புகளுள் ஒன்றாகவும், தமிழிலக்கியச் செவ்வியற்கால அகப்பொருள் செய்திகளை நிரல்படக் கூறும் கருத்துப்பெட்டகமாகவும் விளங்குகின்றது. தமிழ்க்களஞ்சியத்திற்கு ஒரு தங்கத் திறவுகோலை இதோ சிலம்பொலி செல்லப்பனார் வழங்கியுள்ளார். களஞ்சியப் பொருளைக் கைக்கொள்க! பயன் பெறுக!

பதிப்புரை

சொல்வேந்தர் சிலம்பொலிக்குச் சூட்டுகின்றோம் மணிமகுடம்

பழனியப்பா பிரதர்ஸ்

பொன்னொளியே! பூமழையே!
பூவணியும் காவிரியே!
தண்ணமுதே! தாமரையே!
தாழம்பூ நறுமணமே!
தென்பொதிகைச் சந்தனமே!
தேனிழைக்கும் வண்டினமே!
கன்மலையின் நறுஞ்சுனையே!
கண்ணகலா ஆழ்கடலே!
செண்பகமே! கற்பகமே!
சிலம்பொலியே! வலம்புரியே!

பண்டையநல் புலவர்களும்
பாராட்டும் வகையினிலே
கண்டுகண்டு பாடல்களைக்
காட்சிவழி நீதொகுத்துச்
செண்டெனவே தந்தனையே
செந்தமிழர் கரங்களிலே!
இன்தமிழும் புதியதொரு
ஏற்றமுற வழியமைத்தாய்!
குன்றெனவே இமயமலை
குன்றிடவே நீஉயர்ந்தாய்!

என்னபணி! இரவுபகல்
எத்தனைநாள் பேருழைப்பு!
என்னுமொரு சிந்தனையில்
எம்இதயம் கனக்கிறது!
உன்நூல்கள் பலதொகுப்பாய்
நன்னூலாய் யாம்அளித்தோம்!

உன்கழுத்தில் இன்றணியும்
ஒவ்வொருபூ மாலையிலும்
நன்மலரை ஒன்றிணைக்கும்
நாரெனவே யாம்அமைந்தோம்!

கங்குகரை காணாத
கடல்மூழ்கி எழுவோரே
சங்கொடுநல் முத்துகளைத்
தாம்வாரிக் கொணர்ந்திடுவார்!
பொங்கியெழும் நறுமணத்தைப்
பூங்காவில் நுழையாமல்
எங்ஙனந்தான் பெறக்கூடும்
இயம்பிடுக தோழர்களே!
அங்ஙனமே நீர்விரும்பி
இந்நூலின் தொகுதிகளை

வாங்கிடுக! படித்திடுக!
வரிவரியாய்ப் பொருளறிந்தே
ஓங்கிடுக! உணர்ந்திடுக
உள்ளூறும் கலைநயத்தை!
தேங்கிநின்று மறைபொருளாய்த்
திரட்டுப்பால் போலினிக்கும்
பாங்கான உவமைநலம்
பலர்போற்றும் 'இறைச்சி'யுமே!
வீங்கிடுமே உம்முடலும்
விள்ளரிய பெருமிதத்தால்!

பல்கலையின் கூடமன்றோ
பழனியப்பா பிரதர்ஸும்!
நல்லறிஞர், கவிவல்லார்,
நாடறிந்த பேச்சாளர்,
துள்ளுநடை சிறுவர்க்குச்
சுவைக்கதைகள் படைத்திடுவோர்,
வல்லமையால் எழுத்துலகில்
வந்தமர்ந்தோர் நடுவினிலே
சொல்வேந்தர் சிலம்பொலிக்குச்
சூட்டுகின்றோம் மணிமகுடம்!

அகத்திணை

பொழிலிலோ புனத்திலோ எழிலார்ந்த வேறோர் இடத்திலோ ஆண்மகன் ஒருவன், பெண்மகள் ஒருத்தி, தன் விளையாட்டுத் தோழியர் எவருமின்றித் தனித்து நிற்பதைக் காண்கிறான். எல்லா வகையிலும் தன்னை ஒத்திருக்கும் அவள்பால் அவனையுமறியாமல் ஓர் இயற்கை ஈர்ப்பால் அவள் ஒருத்திமீது மட்டுமே அவன் உள்ளம் செல்லுகிறது. அவளும் அவனை மட்டுமே விரும்புபவளாய் இருக்கிறாள். எதிர்ப்படும் எல்லாரிடமும் ஆண், பெண் உள்ளம் சென்றுவிடாது. அவளது அழகு கண்டு, 'இவள் தெய்வ மகளோ', 'உண்மையிலேயே மானிடப் பெண்தானோ' என ஐயுறுகிறான்; சில செய்கைகளால் அவள் மானிடப் பெண்ணே என்று தெளிவடைகின்றான். தன்னைப்போல அவளும் தன்னை விரும்புகிறாளா என்பதைக் குறிப்புகளால் உணர்கிறான். இருவரும் ஒருவரையொருவர் காண்கின்றனரெனினும், பெண்ணை ஆண் கண்டான் என்று சொல்வதே செய்யுள் வழக்கம். அவ்வாறு காதல் கொள்பவருள் ஆண்மகனைக் 'காதலன்' என்றோ, 'தலைவன்' என்றோ, 'கிழவன்' என்றோ, பெண்மகளைக் 'காதலி' என்றோ, 'தலைவி' என்றோ, 'கிழத்தி' என்றோ இலக்கியங்கள் வழங்குகின்றன.

தலைவனும் தலைவியும் ஒரு நிலத்தைச் சார்ந்தவராகவோ, வெவ்வேறு நிலத்தைச் சார்ந்தவராகவோ இருக்கக்கூடும். ஐவகை

நிலங்களுள் எந்நிலத்தவராயும் இருக்கலாம். எனினும், காதலனும் காதலியும் குறிஞ்சி நிலத்தில் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்கின்றனர் என்று சொல்வதே அக இலக்கிய வழக்கம். எல்லா நிலங்களிலும் காதல் தோன்றத்தான் செய்யும்! 'பின்புலம் இயற்கை யழகு வாய்ந்ததாய் இருந்தால்தான் காதல் காட்சி சிறப்புறும்.' பாலைநிலத்திலும் கடுமையாய் வெயில் வீசும் பசுமையற்ற பின்புலத் திலும் காதல் காட்சியைக் காண எவரும் விரும்பார். எனவேதான், குறிஞ்சி நிலத்தைப் பின்புலமாய்க்கொண்டு, அங்கு ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டுக் காதல் கொள்வதாய் அமைக்கின்றனர். இவ்வாறே காதல் கொள்ளும்போது ஏற்படும் மாறுபட்ட நிலைகளுக் கேற்பப் பின்புலங்களாய் முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகியன அமையும்.

ஒருவனும் ஒருத்தியும் கண்டுகொள்வதைக் 'காட்சி' என்பர். தான் கண்ட பெண் எவ்விடத்தினளோ, யார் மகளோ, நம் காதலுக்கு இசைவளோ என்றெல்லாம் ஆண்மகன் ஐயுறுவான். இஃது 'ஐயம்' எனப்படும்.

அணிகலன்கள் அணிந்திருத்தல், காமப் பார்வை பார்த்தல், புதிதாய்த் தன்னைக் கண்டதால் உடலில் நடுக்கம் தோன்றுதல், தான் நோக்கும்போது அவள் தன்னைப் பார்க்காது நிலத்தைப் பார்த்தல், தான் காணாதிருக்கும்போது அவள் தன்னை நோக்குதல் போன்ற குறிப்புகளால் ஆண்மகன் ஐயம் நீங்கி அவள் தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிவடைகிறான்.

தலைவி அணிந்துள்ள பூக்களில் வண்டுகள் மொய்த்திருத்தல், சிறந்த அணிகலன்களை அவள் அணிந்திருத்தல், அவள் மார்பு மற்றும் உடலில் ஓவியம் எழுதப்பட்டிருத்தல், அணிந்துள்ள மலர்மாலையில் மலர் வாடியிருத்தல், மருண்ட பார்வை கொண்டிருத்தல், கண்களை இமைத்தல், முகத்தில் அச்சம் தோன்றுதல் போன்றவற்றாலும் இன்ன பிறவற்றாலும் காதலன் தன் ஐயம் நீங்கி அவள் மானிடப் பெண்ணே என முடிவு செய்வான்.

"வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என்(று)
அன்னவை பிறவும் ஆங்கவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப" (தொல். கள. 4)

என்பது தொல்காப்பிய நூற்பா.

இயற்கைப் புணர்ச்சி

தலைவி தன்மீது காதல் கொண்டுள்ளாள் எனத் தெளிந்த தலைவன், தன் காதலை உணர்த்தத் துணிவான்; தலைவியும் தன் காதற்குறிப்பை உணர்த்துவாள். நாணத்தால் தலைவி, தன் காதலை வெளிப்படையாய் உணர்த்தாது குறிப்பினாலேயே உணர்த்துவாள்.

தன்னை அவள் விரும்புவதுணர்ந்த பின்னரே அவன் அவளைத் தனிமையில் சென்றடைந்து, ஒன்றுகூடி இன்புறுவான். இவ்வாறு தலைவனும் தலைவியும் ஒருவரையொருவர் கண்டு முதல்நாளில் கூடியிருத்தலை 'இயற்கைப் புணர்ச்சி' என்பர்.

தலைவிக்கு முதன்மைத்தோழி ஒருத்தியும், உடன் விளையாடும் மகளிரும் (ஆயத்தார்) இருப்பர். ஆண்மகனின் பாங்கறிந்தொழுகும் உயிர்த்தோழன் பாங்கன் என்று வழங்கப்படுவான்.

இடந்தலைப்பாடு

தற்செயலாய்க் கண்ட ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்பி, முதல் நாள் ஒன்றுபட்டுக் காதலராயினர். இவ்வாறு இயற்கைப் புணர்ச்சி புணர்ந்த தலைவன், தன் காதலியை முதல் நாள் கண்ட அதே இடத்தில் மறுநாளும் காணலாம் எனச் செல்கிறான்; காதல் மிக்க தலைவியும் அங்கு வந்து நிற்பாள். தோழியரோடு விளையாடாது, பூப்பறித்து மாலை தொடுத்திடாது தனித்திருக்கும் தலைவியிடம் தலைவன், "தனித்து நிற்கும் நீ யாரோ? உன்னைத் தொழுது கேட்கிறேன்" என்று தன் காதல் உள்ளத்தை வெளிப்படுத்துவான். அது கேட்டுத் தலைவி நாணி நிற்பாளேயன்றி மறுமொழி எதுவும் கூறமாட்டாள். தலைவன் அவளை நெருங்கித் தன் காதலை உறுதிப்

படுத்திக்கொள்வான். யாருமறியாதவாறு தலைவன் தனியே வந்து, தலைவியை முதல்நாள் கண்ட அதே இடத்திலேயே இரண்டாம் நாளும் கண்டு, கூடிக் களிப்பது 'இடந்தலைப்பாடு' எனப்படும்.

பாங்கற்கூட்டம்

தலைவியைக் கண்டது முதற்கொண்டு தலைவன் மனஞ்சோர்ந்து, உடல் தளர்ந்து உயிர்க்களையற்றிருப்பான். ஆண்மை மிக்க அவன் அவ்வாறு சோர்ந்திருப்பது எதனால் எனப் பாங்கன் கேட்பான். அது பெண் ஒருத்தியால் நிகழ்ந்ததென்பான், தலைவன். பகைவரும் கண்டஞ்சும் வீரமிக்க அவன், பெண் ஒருத்தியால் இடிந்துபோய் இருத்தல் கூடாதெனப் பாங்கன் இடித்துரைப்பான். இதனைப் பாங்கன் கழறுதல் (இடித்துரைத்தல்) என்பர். பாங்கன் இடித்துரைத்ததை மறுத்துத் தலைவன், 'நீ அவளைக் கண்டாயானால் என்னை இவ்வாறு இழிவாய்ப் பேசமாட்டாய்' என்று கூறுவான். தோழனின் கூற்றினைத் தலைவன் மறுத்துப் பேசுவதைக் 'கழற்றெதிர் மறை' என்பர்.

தலைவனின் காதற்பெருக்கையும், அதை அவன் தாங்க இயலாது தவிப்பதையும் கண்டு, "அப்பெண் யார்? எவ்விடத்துள்ளாள்? எத்தன்மையள்?" என்று பாங்கன் கேட்டறிந்து, அவ்விடம் சென்று, தலைவன் குறிப்பிட்ட அவளைக் கண்டு, தலைவன் அவளை விரும்பியது சரியெனத் தெளிவான்; தலைவனுக்கு எல்லா வகையிலும் துணை நிற்கவும் உறுதி பூணுவான்; தலைவனைத் தலைவி இருக்கு மிடத்திற்கு அழைத்துச் செல்வான். தலைவி இருக்கும் இடத்தைப் பாங்கன் காட்டத் தலைவனோடு தலைவிக்கு ஒருநாள் கூட்டம் நிகழும். இது 'பாங்கற்கூட்டம்' எனப்படும்.

பாங்கியிற்கூட்டம் (தோழியிற்புணர்ச்சி)

தலைவிக்கு விளையாட்டுத்தோழியர் பலராய் இருப்பர். தலைவி அவர்களை விட்டுப்பிரிந்து எப்பொழுதும் மறைந்து செல்லல் அரிது. அவர்களைத் தனியே விட்டுப் பிரிந்து சென்றால் திடீரென்று வந்து தலைவியை அடைவர், தோழியர். இது போன்ற இடையூறுகளை

யெல்லாம் கடந்து, தலைவியைத் தன்னிடம் கொண்டுவந்து விடத் தலைவிக்குத் தோழியராய் உள்ளவருள் முக்கியமான ஒருத்தியை அறியத் தலைவன் முற்படுவான்.

தலைவியைப் பெற்றெடுத்தவள், நற்றாய்; வளர்த்தவள், செவிலித் தாய். நற்றாய், செவிலிக்குத் தலைவியும் தோழியும் ஆவாள். அதே போலவே, செவிலிக்கு மகள், நற்றாய் பெற்ற மகளான தலைவிக்கு உயிர்த்தோழியாய் இருப்பாள். இருவரும் ஈருடலும் ஒருயிருமாயிருப்பர். அத்தகைய தோழியை அறிந்து, அவளிடம் தன் குறையைக் கூறி, அவள் வழிநடத்துதலின்படி தலைவியைக் கூடிடத் தலைவன் விரும்புவான்.

தலைவியைச் சூழ ஒரு படைபோலக் கூட்டமாய்த் தோழியர் வருகின்றனர். அவர்களுள் யார் முதன்மையானவள் என்பதை எவ்வாறு அறிவது? தோழியர் கூட்டத்தை நன்கு கவனித்துப் பார்க்கிறான், தலைவன். அவர்களுள் ஒருத்தி எதைச் சொன்னாலும் தலைவி அதை ஏற்பதையும், அவள் செய்வதுபோலவே தலைவி செய்வதையும் கண்டு, அவள்தான் தலைவிக்கு உயிர்த்தோழி என்றறிகிறான்.

குறையிரத்தல்

அத்தோழியின் தோழமையைப் பெற்றாலன்றித் தலைவியின் நட்பைப் பெறுதல் அரிது என்றுணர்ந்தான், தலைவன். அவன், தான் தலைவி மீது கொண்டுள்ள காதலை அத்தோழியிடம் தெரிவிப்பான். தலைவியைத் தனியே சந்திக்க இயலாதிருப்பதைக் கூறி, அக் குறையை நீக்கித் தான் தலைவியை அடையத் துணை நிற்குமாறு மிகவும் இரங்கிக் கேட்பான். இது 'குறையிரத்தல்' எனப்படும்.

தோழியும் தலைவியும் ஒருங்கே இருக்கும்போது சென்று, வெளிப் படையாகவோ குறிப்பாகவோ தன் நிலையைத் தலைவன் நயமாய்ப் புலப்படுத்துவான். முதலில் தோழி தலைவனுக்குத் துணை நிற்க மறுப்பாள்.

மதியுடம்பாடு

தலைவன் தன்னிடம் கூறியவற்றையும், தலைவியின் செயல்களையும் தனித்தனியாகவும், சேர்த்தும் ஆராய்ந்து, அவர்கள் இருவரும் ஒரே வகையான இன்பதுன்பங்களைக் கொண்டிருத்தலையும், இருவர் அறிவும் ஒன்றாய் இருத்தலையும் தோழி உணர்ந்தறிவாள். தலைவன் தலைவியர் உணர்வோடு தோழியின் உணர்வும் ஒத்துச்செல்லும் நிலை உண்டாதலை, 'மதியுடம்பாடு' என்பர்.

மதியுடம்பட்ட தோழி, தலைவியின் குறிப்பறிய முற்படுவாள். தலைவி, தான் ஒருவனைக் கண்டு காதலுற்றிருப்பதை நாண மிகுதியால் தோழியிடம் கூறமாட்டாள். தலைவி ஆயத்தோடு கூடாது தனித்திருத்தல், ஏதோ ஒன்றை நினைந்து வருந்தியிருத்தல் போன்ற நிகழ்வுகளால், அவள் காதலைத் தான் அறிந்திருந்தும் அறியாதவள் போலத் தலைவியிடம் மறைமுகமாய்க் கூறி, தலைவியின் நாணம் ஊறுபடாதவாறு, தோழி அவள் நெஞ்சக்கருத்தை அறிவாள்.

சேட்படை

தோழியைக் குறையிரந்து வரும் தலைவன், காணிக்கை (கையுறை)யாய் அரிய தழை, முத்து முதலியவற்றைக் கொண்டுவந்து அவற்றைத் தலைவியிடம் தந்து, அவளை எவ்வாறாயினும் தன்னுடன் கூட்டி வைத்திடுமாறு தோழியிடம் வேண்டுவான்.

'நாம் விரும்பியபடி இவள் எளிதிலே நமக்குக் கிடைக்கக் கூடியவள் அல்லள்' என்று கருதும் தலைவன், தழையும் கண்ணியும் கொண்டு வந்து தோழிக்குப் பின்னின்று குறையிரப்பான். அவன் உணரும்படியாகத் தோழி அவனைச் சேட்படுத்துவள் – அஃதாவது, தலைவனைத் தலைவியுடன் நெருக்கமாய்ப் பழக விடாது சற்று அகற்றி வைப்பாள் (சேட்படுத்தல் – அகற்றுதல்).

மடலேறுதல்

தலைவன் தலைவியரின் ஆழமான காதலை அறிந்த பின்னும் தோழி, அவர்கள் எளிதில் சந்திக்க இடமளிக்க மாட்டாள்; காதலன் அரிதின்

முயன்று ஆர்வத்தோடு கொண்டுவரும் கையுறையை ஏற்க மறுப்பாள்; பல்வேறு தடைகளை ஏற்படுத்துவாள். தலைவன் தலைவிமீது கொண்டுள்ள காதல் உறுதியானதுதானா என்பதை அறிவதற்கே இத்தகு செயல்களைத் தோழி செய்வதற்கான நோக்கமாகும்.

தோழி வேண்டுமென்றே தன் குறைக்குச் செவிசாய்க்காது காலங் கடத்துவதைக் காணும் தலைவன், தன் எண்ணம் ஈடேறுவதற்காகத் தான் மடலேற உறுதி பூண்டுள்ளதைத் தோழியிடம் தெரிவிப்பான்.

மடல் மா என்பது பனங்கருக்கினால் செய்யப்பட்ட குதிரையைக் குறிக்கும். தான் காதலித்த பெண்ணை எய்தப்பெறாதவன் தன் உடல் முழுவதிலும் திருநீற்றைப் பூசிக்கொண்டு, ஆவிரம் பூ மாலையை மார்பிலும், எருக்கம்பூ மாலையைத் தலையிலும் அணிந்துகொண்டு பனங்கருக்கால் செய்யப்பட்ட குதிரைமேல் ஏறிக்கொள்வான்; தான் விரும்பும் காதலியின் படத்தைத் துணியில் எழுதிக் கையில் பிடித்திருப்பான். அக்குதிரையைச் சிலர் வீதியில் இழுத்துச் செல்வர். இது மடலேறுதல் எனப்படும். இதனால் அவன் உறுதியான காதல் வெளிப்படும்; மேலும், அரம் போன்ற பனங்கருக்கு உடலினை அறுத்தலால் வெளிப்படும் குருதிப்பெருக்கும் இரக்கத்தை ஏற்படுத்தும். ஊரார், இவ்வளவு காதல் கொண்டுள்ளவனுக்கு மகளைக் கொடுக்க மறுக்கலாமா எனப் பெண்ணைப் பெற்றோரைக் குறை கூறுவர்; அவர்களை அணுகி, எடுத்துரைத்து, அவளை அவனுக்கு மணம் முடித்து வைப்பர். மடல் ஏறுவேன் என வாயளவில் சொல்லுவது ஐந்திணையின்பாற்படும்; சொன்னபடி மடலேறிக் காட்டுவது பெருந்திணையின்பாற்படும். சங்க இலக்கியங்களில் மடலேறுவதாய்ச் சொல்லும் நிலை மட்டுமே உள்ளது; மடல் ஏறியதாய்ப் பாடல் எதுவும் இல்லை.

மடலேறுவேன் என்று தலைவன் சொன்னதும், அவனது காதல் திட்பத்தினைக் கண்ட தோழி, அவனுக்குத் துணை செய்ய முற்படுவாள்.

குறியிடம்

தலைவன் தந்த கையுறையைத் தலைவியிடம் கொடுத்து, அவள் குறிப்பினை உணர்ந்துகொள்வாள், தோழி. தலைவன் குறையைத்

தலைவி நயக்கவே, அவ்விருவரும் ஒருவரை ஒருவர் சந்திப்பதற்கேற்ற வகையில் 'இன்ன இடத்திற்கு வந்தால் தலைவியைக் களவிற் கூடலாம்' என்று தோழி குறியிடங் கூறுவாள்.

தலைவியைத் தலைவன் பகலில் கூடுதற்கு ஓர் இடத்தை வரையறுத்துத் தோழி குறிப்பிடுவாள். இது 'பகற்குறி' எனப்படும்.

அடுக்காய் உள்ள மலைப்பக்கமாகவோ, அழகிய மலர்ச் சோலையாகவோ, காதலுணர்வை மிகுவிக்கும் இன்ன பிற இடங்களாகவோ பகற்குறி அமையும். அவ்விடங்கள் பலவகைப்பட்ட மரங்களால் பொலிவு பெற்றனவாயும், வெளியிலிருப்போர் உள்ளிருப்போரை எளிதில் காண்பதற்கு இயலாதனவாயும், ஆனால், உள்ளே இருப்போர் வெளியிலிருப்பவரை எளிதில் கண்டு கொள்ளத்தக்கனவாயும், ஆசைகளை விட்டொழித்தோரையும் ஆசை கொள்ளத் தூண்டும் தன்மையனவாயும் இருக்கும். பகலில் கூடுமிடம் வீட்டிற்குப் புறத்தே, தலைவி வழியறிந்து வரக்கூடியதாயும், அவளுக்குப் பழக்கமான இடமாயும் அமைந்திருக்கும்.

பகற்குறி நாடி வந்த தலைவன், அக்குறிக்கண் செல்ல இயலாதவாறு தடைகள் சில நேர்வதுமுண்டு. (பகற்குறி இடையீடு)

அந்நிலையில், தலைவன் விருப்பத்தை ஈடேற்றுதலை அறமாய்க் கருதும் தலைவி, அவன் விரும்பியவாறே இரவில் வந்து தன்னைச் சந்திப்பதற்கு வரையறுத்துரைக்குமிடம் 'இரவுக்குறி' எனப்படும். அவ்விடம் தலைவியின் இல்லத்து மதில் எல்லைக்குள் இருக்கும்; இல்லத்தவர் பேசும் பேச்சினை வெளியிலிருந்து கேட்குமளவிற்கு அண்மையில் அகமனைக்கும் புறமனைக்கும் நடுவே அமைந்திருக்கும். அது, தலைவியின் வீட்டு எல்லைக்கு உட்பட்டிருக்கும் செய்குன்று, இளமரக்கா, பூப்பந்தர், விளையாட்டிடம் போல்வனவற்றுள் ஏதேனும் ஒன்றாயிருக்கும். தலைவன், தான் இரவுக்குறியிடத்துக்கு வந்திருப் பதைத் தெரிவிக்க அங்குள்ள நீர்நிலையில் கல்லெறிந்து ஒலி எழுப்பல், மரங்களில் தங்கியிருக்கும் பறவைகளை எழுப்பிவிடல் போன்ற

அடையாளக்குறிகளைச் செய்வான். அவ்வொலி கேட்டுத் தலைவி அங்கு வந்து சேர்வாள்.

சில சமயம், தலைவன் செய்ய வேண்டிய குறி காற்றசைவு போன்றவற்றால் இயற்கையாய் நிகழ்ந்துவிடும். அதை அவன் செய்ததாய் எண்ணி வந்து தலைவி ஏமாந்து திரும்புவாள். பிறகு அங்கு வந்த தலைவன் குறி எழுப்ப, அதைக் கேட்கும் தலைவி, அது தலைவன் எழுப்பிய குறியன்று என்று கருதி வாராதிருப்பாள். அதனால் தலைவன் சந்திப்பு நேராமலே திரும்புவான். இஃது 'அல்ல குறிப்படுதல்' ஆகும்.

சிறைப்புறம்

ஒருவரை ஒருவர் கண்ணால் பார்க்க வாய்ப்பு இல்லாததாயும், ஆனால், ஒருவர் கூறியதை மற்றவர் காதால் கேட்கும் தொலைவில் உள்ளதாயும் இருக்கும் பகுதி 'சிறைப்புறம்' எனப்படும். அதை வீட்டருகே உள்ள ஓர் இடம்; பச்சை உயிர்வேலி எனலாம்.

தோழிக்கும் தலைவிக்கும் இடையே நிகழும் உரையாடல்களைத் தலைவன் மறைந்திருந்து கேட்டு அறிதற்கு வசதியாய் மனைக்குப் புறமாய்க் காவலாய் அமைக்கப்பட்டுள்ள வேலி அமைப்பினைச் சிறைப்புறம் எனலாம்.

இற்செறிப்பு

தலைவன் தலைவியரிடையே ஏற்பட்டுள்ள களவுறவை ஊரார் அறிந்து பழிச்சொல் கூற முற்படுவர். இப்பழிச்சொல் 'அலர்' எனப்படும். ஊரெங்கும் பழிச்சொல் ஏற்பட்டிடவே தலைவி வீட்டார் அவளை வீட்டை விட்டு எங்கும் வெளிச் செல்லாதவாறு வீட்டுக்காவலில் வைப்பர். இஃது 'இற்செறிப்பு' எனப்படும்.

தலைவியின் தோற்ற மாறுபாட்டைக் கண்டும், ஊரவர் குறிப்பாய்ப் பேசிக்கொள்வதைக் கேட்டும், விளையாடல் முதலியவற்றிற்குத் தன் இல்லத்தைவிட்டுத் தலைவி வெளியே செல்ல இயலாதவாறு செவிலி அவளை இல்லத்திற்குள்ளேயே தங்கச்செய்வாள்.

ஒருவழித்தணத்தல்

அலர் அடங்குமாறு தலைவன் தலைவியைக் காண வாராது, தன் ஊரிலேயே சில காலம் தங்கி இருப்பான். இதனை 'ஒருவழித்தணத்தல்' என்பர்.

வரைவு கடாயது

தலைவன் சிறைப்புறத்தானாயிருக்க, ஊரார் அலர் கூறுவதையோ, தலைவிக்கு இற்செறிப்பு ஏற்பட்டிருப்பதையோ, அயலவர் மணம் பேசி வருகின்றனர் என்பதை அறிவித்தோ, இனியும் களவொழுக்கம் நீட இடந்தரலாகாது என்றும், உடனே அவன் வரைவு மேற்கொள்ள வேண்டும் என்றும் தலைவியும் தோழியும் வற்புறுத்திக் கூறுவர். தலைவன் சிறைப்புறமிருக்க, தலைவியும் தோழியும் அவன் கேட்குமாறு தம்முள் பேசி, அவனை உடனடியாக வரைந்துகொள்ளவும் தூண்டுவர்.

வெறியாட்டு

தலைவனோடு களவொழுக்கம் மேற்கொண்டுள்ள தலைவி, அவன் பிரிவைப் பொறுக்க இயலாது உடல் மெலிவாள். தன் மகளின் உடல், நாள்தோறும் மெலிவதற்கான காரணத்தை அறியாது அவள் தாய் கலங்குவாள். உடல் மெலிவு முருகனால் ஏற்பட்டது என நம்பி, செவிலி முருக பூசை செய்ய முனைவாள். முருக பூசை செய்வதற்குரிய பூசாரி, வேலன் எனப்படுவான். அவன் முருகனைக் கூவி அழைத்தும், வெறி யாட்டுக் கூத்தாடியும், கழற்சிக்காயிட்டும் தலைவியின் நோய்க்குக் காரணம் முருகனே என்பான்.

தெய்வம் மக்கள்மீது ஏறி ஆடுவதை 'வெறியாட்டு' என்பர். வெறியாடுபவன் தன் கையில் வேலைத் தாங்கி ஆடுவான். ஆதலின், இவன் வேலன் என்று வழங்கப்பட்டான்.

வெறியாடும் இடத்தில் பல்வகை மலர்களையும் பரப்பி, அழகுறச் செய்து முருகனை வழிபட்டு வேலன் வெறியாட்டயர்வான். அவ் விடத்தை 'வெறியாடு களம்' என்பர். அங்கு வேலன், ஆட்டுக்குட்டியை வெட்டிப் பலி கொடுத்துப் பூசை செய்வான்.

கட்டுவிச்சியை அழைத்து மகளின் நோய்க்குக் காரணம் யாது என வினவுவதும் உண்டு. முறத்தில் நெற்களைப் பரப்பி, எண்ணிக் குறி சொல்வது கட்டுவிச்சியின் வழக்கம்.

அறத்தொடு நிற்றல்

வெறியாட்டு நடத்தச் செவிலி முற்படும்போது தலைவி தோழியிடம், தன் காதலைத் தக்கவாறு செவிலியிடம் கூறி வெறியாட்டினை நிறுத்துமாறு வேண்டுவாள். இஃது 'அறத்தொடு நிற்றல்' எனப்படும்.

செவிலித்தாய் தோழியிடம் 'தலைவிக்கு இவ்வேறுபாடு எதனால் ஏற்பட்டது?' என்று கேட்பாள். தோழி மிக்க கவனத்தோடும் விழிப்போடும், எவர்க்கும் கெடுதியும் துன்பமும் நேராதபடி செவிலி யிடம் உரைப்பாள். கற்பு அழியாதவாறு, தலைவி தலைவனொடு ஒழுகிவந்த களவொழுக்கத்தைப்பற்றிச் செவிலியிடம் வெளிப் படுத்துவாள். இது, 'தோழி செவிலிக்கு அறத்தொடு நிற்றல்' எனப்படும். தலைவி தோழியிடமும், தோழி, தன் தாயாகிய செவிலியிடமும் அறத்தொடு நிற்பர். செவிலி, தன் தோழியும், தலைவியைப் பெற்றெடுத்தவளுமாய நற்றாய்க்கு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தலைவியின் தமையன்மார்க்கும் தந்தைக்கும் அறத்தொடு நிற்பாள். தலைவியின் ஆழ்ந்த காதலை அறிந்த அவள் பெற்றோர் திருமணத் திற்கு உடன்படுவர்.

வரைவிடைப்பிரிவு

அறத்தொடு நின்ற நிலையில், பெற்றோர் வரைவுக்கு உடன்படு வராயின், மகட்கொடையாகவும் மண நிகழ்வுக்காகவும் தலைவியைப் பெற்றோர்க்குத் தலைவன் பொருள் தரவேண்டும். இவ்வாறு அளிக்கப்படும் பொருள், மகட்கொடை, முலை விலை என்னும் பெயர்களால் வழங்கப்படும். இப்பொருளைத் தேடி வரத் தலைவன் தலைவியைப் பிரிந்து செல்வான். இது 'வரைவிடைப்பிரிவு' எனப்படும். வரைவிடைப்பிரிவால், தலைவி ஆற்றாது வருந்தத் தோழி அவளைத் தேற்றுவிப்பாள்.

தலைவன் வரைபொருட்காகப் பிரிந்து சென்று, பொருள் திரட்டி மீண்டதும் தன் சுற்றத்தவர்களை முற்கொண்டு, தலைவியில்லம் போந்து, பெண் தருமாறு வேண்டுவான்; சுற்றத்தவர் அல்லாமல் அறநிலை சான்ற வேறு சான்றோர்களை முற்கொண்டும் பெண் தருமாறு வேண்டுதலுமுண்டு; பின்னர், முறைப்படி திருமணம் நிறைவேறும். (வதுவை அயர்தல்)

உடன்போக்கு

பெற்றோர் சிலர் தம் மகளின் களவொழுக்கத்தை அறியாத நிலையிலும் அறிந்த நிலையிலும் தலைவியை வீட்டை விட்டு வெளிப் போகாதவாறு வீட்டினுள் வைத்துக் காத்து வருவர். அந்நிலையில் தலைவியின் வருத்த மிகுதியைக் காணும் தோழி, தலைவி, தலைவன் ஆகிய இருவர் ஒப்புதலையும் பெற்று, எவருமறியாதவாறு தலைவியைத் தலைவனுடன் அவன் ஊர் செல்ல அனுப்பி வைப்பாள். அவ்வாறு தலைவனுடன் தலைவி செல்லுதல் 'உடன்போக்கு' என்றும், 'கொண்டுதலைக் கழிதல்' என்றும் வழங்கப்பெறும். ஏதமிக்க காட்டு வழியில் தன்னுடன் வரும் தலைவிக்குத் துன்பம் எதுவும் தோன்றா வண்ணம் தலைவன் அவளிடம் இன்மொழி பேசியும் நற்செயல்களைச் செய்தும் அழைத்துச் செல்வான்.

உடன்போகும் காதலர்களை வழியிடையே காண்பவர் அவர்கட்கு ஆதரவாய் இருப்பர். 'பொழுது சென்று இருள் வந்தது; வழி துன்பமானது. இந்நேரத்தில் தனியே செல்லுதல் தகாது. இரவு எம்மூரில் தங்கிச் செல்லுங்கள்' என்று அன்போடு வேண்டுவர்.

தலைவி தம் வீட்டை விட்டு வெளியே சென்றதை அறிந்த நற்றாயும் செவிலியும் மிகவும் வருந்துவர். 'காதலனிடம் மகள் கொண்ட அன்பு இவ்வளவினது என யாம் அறிந்திருந்தால் எம் வீட்டிலேயே திருமணத்தை முடித்து வைத்திருப்போமே' என்பர். உடன்போக்குச் சென்ற மகளைச் செவிலித்தாய் தேடியும் செல்வாள். அவளை எதிர்ப் படும் ஆன்றோர், அவள் நிலை கண்டு இரங்கி, "உன் மகள் அறவழி

யினையே மேற்கொண்டுள்ளாள். அவளைத் தடுக்க வேண்டா; அவளை அவள்வழிச் செல்ல விடுங்கள்" என ஆறுதல் கூறி அனுப்பி வைப்பர்.

தலைவன் தலைவியைத் தன்னூர் அழைத்துச் சென்றதும் அங்கு அவளை மணந்துகொள்வான். களவொழுக்கத்தைத் தலைவியைப் பெற்றோர் ஏற்றனரென்றால் திருமணம் அவர்கள் வீட்டிலும், அவ்வாறன்றித் தலைவனுடன் தலைவி உடன்போக்கில் சென்றால் திருமணம் தலைவன் இல்லத்திலும் நடைபெறும். திருமணம் எங்கு நடைபெற்றாலும் திருமணத்திற்குப் பின்பு இருவீட்டாரும் ஒன்று பட்டிருப்பர்.

மங்கல மனையறம்

திருமணத்தின் பயனாய்த் தலைவன் தலைவியர் இல்வாழ்க்கை யினை மேற்கொள்ளத் தலைப்படுவர். இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவனுக்குத் தன்னைச் சார்ந்த மனைவி, மக்கள், பெற்றோர், உற்றார், ஏனை உறவின் முறையினர், ஆன்றோர், விருந்தினர் ஆகியோரை உண்டி, உடை, உறையுள் முதலியவற்றால் பாதுகாக்கும் கடமையும், இவையொழிய இன்னும் ஏனையவாயமைந்துள்ள இல்வாழ்க்கைக் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வெல்லாக் கடமைகளையும் முறைப்படி அவ்வக் காலங்களில் செய்வதற்குப் பொருள் இன்றியமையாததாகும்.

பொருள்வயிற் பிரிவு

தலைவன் திருமணம் செய்துகொள்ளுதற்கு முன் வரைதற் பொருட்டுப் பொருள் தேடியது, திருமணக் கடமைகளுக்காக மட்டுமே. திருமணத்திற்குப் பின்னர்த் தனது இல்வாழ்க்கைக்குரிய கடமைகளை நிறைவேற்றும்பொருட்டும் பொருளைத் தேட வேண்டியவனாகிறான்.

முன்னோர் தேடிய பொருள் தன்னிடம் மிகுதியாய் இருக்குமாயினும் தலைவன் தன் முயற்சியால் பெற்ற பொருள் கொண்டு இல்வாழ்க்கை யினை நடத்துவதையே பெருமையாகவும் சிறப்பாகவும் கருதுவான்.

பொருள் தேடி வரச் செல்லக் கருதும் தலைவன், தலைவி தன் பிரிவை ஆற்றியிராள் என்பதுணர்ந்து சில காலம் பயணத்தைத் தவிர்ப்பான். பின்னர்த் தோழியிடம் கூறித் தலைவியிடம் தன் பிரிவை அறிவிக்கச் சொல்வான். முதலில் தோழியே செலவினை மறுப்பாள்; நீண்ட பிரிவாய் இருக்குமென்பதால் தலைவியும் ஒருப்படாள்; ஆயினும், அறங்கருதித் தலைவி இசைவாள். நாடுகளை நீங்கியும் காடுகளைக் கடந்தும் தொலைவில் சென்று, பொருளீட்ட வேண்டும். இச்செயலைச் செய்து முடிக்க வேனிற்காலமே ஏற்றதாகும். வேனிற்பருவத்தே பிரிந்து செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பி வருவதாய்க் கூறிச் செல்வான்.

தலைவன் சென்றதும் தலைவி துயர் தாளாது மிகவும் வருந்தி யிருப்பாள்; தோழி அவளை ஆற்றுவிப்பாள். தான் புறப்படும்போது சொல்லிச் சென்றவண்ணம் கார்காலத் தொடக்கத்தே தலைவன் வாராதிருப்பின் தலைவியின் துயரம் மிகுதியாகும். கார்காலத்திற்குரிய அறிகுறிகள் தென்பட்டாலும் அவை கார்காலத்திற்குரியவை அன்று என்று கூறித் தலைவியைத் தோழி தேற்றுவிப்பாள்.

பொருள் தேடப் பிரிந்த தலைவனும், தலைவியைப் பிரிந்திருக்க இயலாதவனாய்த் தவிப்பான்; இடைவழியிலேயே திரும்பிவிடலாமா என்றுகூட எண்ணுவான்; ஆயினும், கடமையில் கருத்தூன்றி, பொருள் தேடி முடித்த பின்னரே திரும்புவான். திரும்புங்கால், விரைந்து சென்று தலைவியை அடைய வேண்டும் என்னும் வேட்கையில் தேரினை விரைவாய்ச் செலுத்துமாறு பாகனிடம் கூறுவான். அவ்வாறே பாகனும் செலுத்தத் தலைவன் தன் இல்லமடைந்து தலைவியைக் கூடி மகிழ்ந்து இனிதே நல்வாழ்க்கை நடத்துவான். இனிய மக்கட்பேறும் வாய்க்க அவர்கள் இல்லறம் மேலும் சிறப்புறும். காதலர் அன்புடையராய், விருந்தோம்பி, நடுவுநிலைமை மேற்கொண்டு, ஒப்புரவறிந்து, ஈகை மேற்கொண்டு புகழ் வாழ்வு வாழ்வர்.

தலைவன் பொருள் தேடுவதற்காக மட்டுமன்றி, உயர்கல்வி கற்பதற்காகவும், அரசனுக்காகப் போர்மேற்செல்வதற்காகவும் பிரிந்து செல்வதுண்டு.

களவுக்காலத்தில் ஒருவழித்தணத்தல், வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல் எனத் தலைவன் பிரியும் நிலைகள் உண்டு.

கற்புக்காலத்தில் ஓதல், காவல், தூது, பொருள் தேடல், வேந்தற்கு உற்றுழி உதவல் முதலியன கருதித் தலைவியை விடுத்துப் பிரிதல் உண்டு.

தலைவன் பிரிந்திருக்கும் காலங்களில் தோழி தலைவியைத் தேற்றுவித்துத் துணை நிற்பாள்.

பரத்தையிற்பிரிவு

இல்லற வாழ்வில் தலைவனோடு தொடர்பு கொள்வதைத் தன் வாழ்க்கைநெறியாய்க் கொண்டிருப்பவள் மனைவி. அவ்வாறு அல்லாது ஆடவர் பலரோடு தொடர்பு கொள்ள விரும்பும் மகளிர் பரத்தையர் எனப்படுவர். இவர்கள் திருமணம் என்னும் வரையறைக்கு உட்பட்டவர் அல்லர். தம்மை நாடி வருபவர்க்கு இன்பமளிப்பதே இவர் தொழில். அதனால் இவரை, ‘வரைவின் மகளிர்’, ‘பொருள்விலைப் பெண்டிர்’ என்றும் கூறுவர்.

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று, பரத்தையர் இல்லத்தில் தங்கி இன்பம் பெறுவதுண்டு.

தலைவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்றதால் தலைவி வெகுண்டு ஊடியிருப்பாள். தலைவனது இல்வாழ்க்கையில் நிகழும் ஊடல் முதலியவற்றைப் போக்கும் வழிகளாய் இருப்பவர் ‘வாயில்கள்’ எனப்படுவர்.

பரத்தையிற்பிரிவுக்குப்பின் தன் இல்லத்திற்கு வரும் தலைவன், ஊடிய தலைவியை நேர்விக்கத் தோழியை வாயிலாக வேண்டுவான். வாயிலாக வந்தவர்க்கு முகங்கொடுக்க மறுத்தல் ‘வாயில்’ மறுத்தலாம். தோழியே தலைவனைக் கண்டித்து வாயில் மறுப்பாள். பாணன், விறலியர் முதலியோரையும் தலைவன் வாயிலாக அனுப்புவதுண்டு. தோழியும் தலைவியும் அவர்களைக் கடிந்து திருப்புவர்.

தலைவன் பல முறை பணிந்து வேண்டியதால், தோழி மனமிரங்கித் தலைவியிடம் உரையாடி, தலைவனை ஏற்று ஊடல் தணியுமாறு செய்து வாயில் நேர்விப்பாள்.

வாயிலை ஏற்று, தலைவனுக்கு இடங்கொடுத்து அவனைத் தலைவி சேர்த்துக்கொள்வாள். ஊடலும் கூடலுமாய் அவர்கள் வாழ்க்கை இன்பமாய் அமையும்.

வாழ்க்கை, காதல் ஒழுக்கத்தால் அமைவது. தமிழ் மக்களின் காதல் வாழ்க்கை களவு, கற்பு என இரு வகைப்படும். தலைவன், தலைவியைக் கண்டு காதல் கொண்டது முதல் அவளைத் திருமணம் செய்து கொள்ளும்வரை உள்ள பகுதி களவு எனப்படும். இது களவியல், களவு நெறி, களவொழுக்கம் என்றும் வழங்கப்பெறும்.

திருமணம் முடிந்த பின் தொடங்கும் இல்லற வாழ்க்கை, கற்பொழுக்கம் என்று வழங்கப்படும்.

நாகரிகத்தில் மேம்பட்டிருந்த பண்டைக் காலத்தில் தமிழர் மேற்கொண்டிருந்த இனிய இல்லற நெறிகளே களவும் கற்புமாகும்.

பரத்தையிற்பிரிவு – 2

தொகுதி 14

பக்கம் 349 முதல் 722 வரை

இற்பரத்தை கூற்று

குறுந்தொகை 364 **ஔவையார்**

திணை : மருதம்

கூற்று

வேறு பரத்தை ஒருத்தி தன்னைப் புறங்கூறினாளெனக் கேட்ட இற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பக் கூறியது.

கூற்று விளக்கம்

சேரிப்பரத்தை தன்னைப் புறங்கூறினாள் எனத் தனக்குப் பாங்காயினார் கூறக் கேட்ட இற்பரத்தை, அச்சேரிப் பரத்தைக்குப் பாங்காயினார் கேட்குமாறு, 'தலைவன் தன்னிடந்தான் பெருங்காதல் கொண்டுள்ளான்' என்று கூறியது.

அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்
வாளை நாள்இரை பெறூஉம் ஊரன்
பொற்கோல் அவிர்தொடித் தற்கெழு தகுவி
எற்புறங் கூறும் என்ப; தெற்றென
வணங்குஇறைப் பணைத்தோள் எல்வளை மகளிர்
துணங்கை நாளும் வந்தன; அவ்வரைக்
கண்பொர, மற்றுஅதன் கண்அவர்
மணம்கொளற்கு இவரும் மள்ளர் போரே.

தெளிவுரை

பின்னிக் கிடக்கும் கொடிப்பிரம்பு போன்ற கோடுகள் பொருந்திய முதுகைக் கொண்ட நீர்நாய்கள் வாளை மீன்களை நாள்தோறும் இரையாய்ப் பெறுகின்ற மருத நிலத்தையுடையவன், தலைவன். பொன்னால் செய்த ஒளி பொருந்திய வளையலை அணிந்தவளாய்த் தலைவனுக்கேற்ற தகுதியினைக் கொண்டவள் தான் ஒருத்தியே எனக் கூறிக் கொள்ளும் சேரிப்பரத்தை ஒருத்தி, என்னைப் புறம் (தலைவனை நான் கவர்ந்து இழுத்துக்கொண்டதாய்க்) கூறுகிறாள் என்று சொல்லுகின்றனர். அவள் சொல்வது உண்மையா பொய்யா என்று தெளிவாய் அறிவதற்கு, வளைந்த மணிக்கட்டையும்,

பருத்த தோள்களையும், ஒளி பொருந்திய வளையல்களையும் கொண்ட மகளிர் துணங்கைக்கூத்தாடும் நாள்களும் இதோ வந்துவிட்டன. அச்சமயத்தில் ஒருவர் கண்ணுடன் மற்றவர் கண் போர் செய்ய, அக்கூத்திலே அப்பெண்களோடு இணைந்து விளையாடுவதற்கு விரும்பி வருகின்ற வீரர்களின் சேரிப்போரும் நடைபெறும். (அப்போது கண்ணுக்கு எதிராய்த் துணங்கைக் கூத்தின்போது தலைவர் எனக்குத் தலைக்கை தந்து ஆடுவதைக் காணலாம்.)

கருத்து

'சேரிப்பரத்தை கூறுவது பொய்; என்னை விரும்பித் தலைவன் தானாக வந்தான்.'

விளக்கம்

தலைவன் ஏனைப் பரத்தையரினும் தன்னையே விரும்புகிறான் என்பதை அண்மையில் நிகழவிருக்கும் விழாவில் ஆடும் துணங்கைக்கூத்தின்போது அவன் தனக்கே தலைக்கை தந்து ஆடுவதைச் சேரிப்பரத்தை கண்கூடாய்க் கண்டு, தலைவன் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறான் என்பதை அறியலாம் என்று கூறுகிறாள், இற்பரத்தை.

குறிப்பு

துணங்கைக்கூத்து - பெண்கள் கைகோத்துக் கலந்தாடும் ஒருவகைக் கூத்து. இக்கூத்தில் ஆடவர்களும் கலந்துகொள்வதுண்டு. அவர்கள் தமக்கு விருப்பமான பெண்களுடன் கைகோத்து ஆடுவர்.

விழாக் காலங்களில் துணங்கை, குரவை முதலான கூத்துகளை மகளிர் நிகழ்த்துவர். மள்ளர்கள் 'சேரிப்போர்' என்னும் விளையாட்டில் ஈடுபடுவர்.

துணங்கைக்கூத்தில் ஆடவர் தாம் விரும்பும் மகளிர்க்குத் தலைக்கை தந்து சேர்ந்தாடி மகிழ்வர். யார் யாரை விரும்புகின்றனர் என்பது அப்போது தெளிவுபட்டுவிடும்.

சொற்பொருள்

1. அரில் - பின்னல்; பவர் - கொடிப்பிரம்பு; வரிப்புறம் - கோடுகளைக் கொண்ட முதுகு.

2. வாளை - வாளை மீன்; நாள்இரை - அதிகாலை உணவாய்.
3. பொன் கோல் - திரண்டு உருண்ட பொன்னால் செய்யப்பட்ட கோல்; அவிர் - ஒளி வீசும்; தொடி - வளையல்; தற்கெழு - தனக்கேற்ற; தகுவி - தகுதி கொண்டவள், சேரிப்பரத்தை.
4. தெற்றென - தெளிவாய்.
5. வணங்கு இறை - வளைந்த மணிக்கட்டு; பணை - பருத்த; எல்வளை - ஒளி வீசும் வளையல்.
6. துணங்கை நாளும் - துணங்கைக்கூத்தாடும் நாள்; அவ்வரை - அப்போது.
7. கண்பொர - ஒருவர் கண்ணுடன் மற்றவர் கண் போர் செய்ய; அதன்கண் - அக்கூத்திலே.
8. அவர் மணம் கொளற்கு - அப்பெண்களோடு இணைந்து விளை யாடுதற்கு; இவரும் - விரும்பி வருகின்ற; மள்ளர் போர் - வீரர்களின் விளையாட்டுப் போர்.

இற்பரத்தை கூற்று

அகநானூறு 186 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகட்குப் பாங்காயினார் கேட்ப, இல்லிடைப்பரத்தை சொல்லி நெருங்கியது.

கூற்று விளக்கம்

தலைவி தன்னைப் பழித்தாள் எனக் கேள்விப்பட்டு வருந்திய இற்பரத்தை, தலைவிக்கு வேண்டியவர்கள் கேட்குமாறு தன் நிலையை எடுத்துக் கூறியது.

வானம் வேண்டா வறன்இல் வாழ்க்கை
நோன்ஞாண் வினைஞர் கோள்அறிந்து ஈர்க்கும்
மீன்முதிர் இலஞ்சிக் கலித்த தாமரை
நீர்மிசை நிவந்த நெடுந்தாள் அகல்இலை
இருங்கயம் துளங்க, கால்உறு தோறும்
பெருங்களிற்றுச் செவியின் அலைக்கும் ஊரனொடு

எழுந்த கௌவையோ பெரிதே; நட்பே,
கொழுங்கோல் வேழத்துப் புணைதுணை யாகப்
புனல்ஆடு கேண்மை அனைத்தே; அவனே
ஒண்தொடி மகளிர் பண்டையாழ் பாட,
ஈர்ந்தண் முழவின் எறிகுணில் விதிர்ப்ப,
தண்நறுஞ் சாந்தம் கமழும் தோள்மணந்து,
இன்னும் பிறள்வயி னானே; மனையோள்
எம்மொடு புலக்கும் என்ப; வென்வேல்,
மாரி அம்பின், மழைத்தோல் பழையன்
காவிரி வைப்பின் போஒர் அன்ன,என்
செறிவளை உடைத்தலோ இலனே; உரிதினின்
யாம்தன் பகையேம் அல்லேம்; சேர்ந்தோர்
திருநுதல் பசப்ப நீங்கும்
கொழுநனும் சாலும்,தன் உடன்உறை பகையே.

தெளிவுரை

“வலிமையான தூண்டில் கயிற்றினால் மீன் பிடிப்போர் மழை பெய்வதை விரும்பமாட்டார்; வறுமையில்லா வாழ்வினைக் கொண்டவராவர். அவர்கள், தூண்டிலை மீன் பற்றியதை யறிந்து இழுப்பர். மீன்கள் நிறைந்துள்ள நீர்நிலையில் அவர்கள் மீன் பிடிப்பர். அந்நீர்நிலையில் தாமரை தழைத்து வளர்ந் திருக்கும். காற்று வீசும் போதெல்லாம் நீரின்மீது நிற்கும் நீண்ட தண்டினைக் கொண்ட தாமரையின் அகன்ற இலைகள் யானை யின் காதுகள்போல அசைந்தாடும். அத்தகைய நீர் வளங் கொண்ட ஊரையுடைய தலைவனால் எனக்கு உண்டான பழிச் சொல்லோ பெரிது.

“நீர்விளையாட்டை விளையாடுவோர் கொறுக்கந்தட்டை யால் செய்யப்பெற்ற தெப்பத்தைப் பயன்படுத்துவர். விளையாடி முடிந்ததும் அதனை வீசி எறிவர். அத்தட்டை பயன்பட்ட குறுகிய கால அளவினதே, அவனோடு நான் கொண்ட நட்பின் காலமும்.

“என்னோடிருந்த அத்தலைவனோ இப்போது, ஒளி பொருந்திய தொடியணிந்த மகளிர் யாழினை இசைத்துப்

பாடவும், ஈரமும் குளிர்ச்சியும் கொண்ட முழவினைக் குறுந் தடியால் அடித்து ஒலி எழுப்பவும், குளிர்ச்சி பொருந்திய சந்தனம் அணிந்த பரத்தை வேறொருத்தியின் தோளினைத் தழுவியவாறு அவள் வீட்டிலே உள்ளான். இதனையறியாத அவன் மனைவி என்மீது சினம் கொண்டுள்ளாள் என்று கூறுகின்றனர். அவன் வேறு பரத்தையர் சேரியில் உறைவதால் எனது வெறுப்பை நான் எச்செயலாலும் புலப்படுத்தவில்லை என்பதுதான் உண்மை. வெற்றி தரும் வேல், மாரி போல் பொழியும் அம்புகள், மேகம் போலக் கருநிறம் கொண்ட கேடயம் ஆகியவற்றையுடைய பழையன் என்பவனுக்குரிய 'போஒர்' என்னும் ஊரை ஒத்த சிறப்பினைக் கொண்ட செறிந்த என் வளையல்களை உடைத்தெறிந்து என் வெறுப்பைக் காட்டி யிருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யவில்லை.

"ஆதலால், தலைவியோடு நான் பகைமை கொண்டவள் அல்லள். தன்னை அன்போடு சேர்ந்தவரது நெற்றி பசலை கொள்ளுமாறு அவர்களைக் கைவிட்டு நீங்கும் அவள் கணவனே அவளுடன் சேர்ந்தேயிருந்தும் பகைவனாயிருப்பவன்" என்று தலைவனுக்குரிய இற்பரத்தை கூறினாள்.

கருத்து

'தலைவன் என்னை விட்டுப் பிரிந்து சேரிப்பரத்தையிடம் சென்று விட்டான். அதை அறியாது தலைவி என்னைப் பழிக்கிறாள்' எனத் தலைவனுக்குரிய இற்பரத்தை கூறுகிறாள்.

விளக்கம்

"தலைவனோடு நான் தொடர்பு கொண்டிருப்பதாய் என்மீது கூறப்படும் பழி மிகுதியானதாகும். நீர்விளையாட்டின்போது பயன்படுத்தும் கொறுக்கந்தட்டையாலான தெப்பத்தை அவ் விளையாடல் முடிந்ததும் வீசி எறிந்துவிடுவர். அத்தட்டை பயன்பட்ட குறுகிய கால அளவினதே அவன் என்னோடு கொண்ட நட்பின் காலம். தலைவன் என்னிடமிருந்து நீங்கி இப்போது சேரிப்பரத்தையிடம் சென்றுவிட்டான். அவன் என்னைப் பிரிந்ததால் ஏற்பட்ட வெறுப்பினை என் வளையல்களை உடைத்தெறிவதன்மூலம் காட்டியிருக்கலாம்.

நான் அவ்வாறு செய்யவில்லை. நான் தலைவியோடு உண்மையான பகை கொண்டவள் அல்லள்; அவள் பகைவனாய் இருப்பவன் அவள் கணவனே" என்று இற்பரத்தை கூறினாள்.

குறிப்பு

மீன் பிடிப்போர் உழுதொழில் செய்வார்போல் மழையை நம்பி இருப்பவர் அல்லர். மேலும், அவர்கள் செய்யும் மீன்பிடிக்கும் தொழில் மூலம், அவர்கள் பெரும் பொருள் ஈட்டுகின்றனர். அதனால் அவர்கள் வாழ்க்கை, 'வானம் வேண்டா வறன்இல் வாழ்க்கை' எனப்பட்டது.

தெப்பம் செய்து, அதில் ஏறி நீர்விளையாட்டு ஆடுவோர், ஆடி முடித்தவுடன் தெப்பத்தை எறிந்துவிடுவர். இற்பரத்தை, தான் தலைவனோடு உறவு கொண்டிருந்த காலம் நீர்விளையாட்டு ஆடுவோர் தெப்பத்தைப் பயன்படுத்திய குறுகிய கால அளவே என்கிறாள்.

தலைவன் சேரிப்பரத்தையருடன் சேர்ந்திருப்பதை அங்கு எழும் யாழொலியும் முழவோசையுமே புலப்படுத்தும். அவ்வாறிருக்கத் தலைவி என்னிடம் சினங்கொள்ளுதல் பொருந்தாது என்கிறாள், இற்பரத்தை.

'குலமகளிர் அல்லாத பரத்தையர், தம்மை விரும்பும் ஆடவர் பிரிந்து வேறொருத்தியிடம் சென்றுவிட்டால், தம் கைவளையல்களை உடைத்துத் தம் வெறுப்பைக் காட்டுவர். நான் அவ்வாறு செய்யாது வளையலுடனேயே இருப்பதால், தலைவன் என்னுடன் இருக்கிறான் என்று தலைவி கருதி விட்டாள் போலும்' என்று கூறி, இற்பரத்தை தலைவன் தன்னிடத்தில் இல்லை என்பதைப் புலப்படுத்துகிறாள்.

சொற்பொருள்

1. வானம் வேண்டா - மழை பெய்தலை வேண்டாத; வறன்இல் வாழ்க்கை - வறுமையில்லாத வாழ்க்கை.
2. நோன் ஞாண் - வலிமையான தூண்டில் கயிறு; வினைஞர் - மீன் பிடிப்போர்; கோள் அறிந்து - தூண்டிலை மீன் பற்றியது என்பதை அறிந்து; ஈர்க்கும் - இழுக்கும்.
3. மீன் முதிர் - மீன் நிறைந்த; இலஞ்சி - நீர்நிலை; கலித்த - தழைத்த.
4. நிவந்த - உயர்ந்த; தாள் - தண்டு.
5. இரு - பெரிய; கயம் - குளம்; துளங்க - அலைய; கால் - காற்று.
6. அலைக்கும் - அசைந்தாடும்.
7. கௌவை - பழிச்சொல்; நட்பு - உறவு.

8. வேழம் - வேழக்கரும்பு; கொழுங்கோல் - செழித்த தட்டை; புணை - தெப்பம்.
9. கேண்மை - நட்பு; அனைத்தே - அளவினதே.
10. பண்டை யாழ் - பழைய யாழ்.
11. எறி - அடிக்கின்ற; குணில் - குறுந்தொடி; விதிர்ப்ப - அடித்து ஓசை எழச்செய்ய.
12. சாந்தம் - சந்தனம்; மணந்து - கூடி.
13. பிறள் வயினான் - பிறளிடத்தே உள்ளான்; மனையோள் - மனைவி.
14. புலக்கும் - ஊடும்.
15. மாரி அம்பு - மழைத்துளி போன்ற அம்பு; மழைத்தோல் - மேகம் போன்ற கேடயம்; பழையன் - தலைவன் ஒருவன்.
16. காவிரி வைப்பு - காவிரி நாடு; போஒர் - ஓர் ஊர்.
17. செறிவளை - செறிந்துள்ள வளையல்.
18. சேர்ந்தோர் - தன்னை அடைந்தோர்.
19. பசப்ப - பசலையடைய.
20. தன் உடன் உறை - தன்னுடனேயே இருந்து வாழும்; பகை - பகைவன்; கொழுநன் - கணவனே; சாலும் - (என்பது) பொருந்தும்.

பரத்தை கூற்று

நற்றிணை 290 **மதுரை மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தை விறலிமேல் வைத்துத் தலைமகளை நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனோடு கொள்ளும் ஊடலைத் தணிவிக்கும் வகையில் பரத்தை ஒருத்தி தலைவி செவியுறுமாறு தன் தோழியாகிய விறலியிடம் கூறியது.

வயல்வெள் ஆம்பல் சூடுதரு புதுப்பூக்
கன்றுடைப் புனிற்றா தின்ற மிச்சில்
ஒய்நடை முதுபகடு ஆரும் ஊரன்
தொடர்புநீ வெஃகினை ஆயின், என்சொல்
கொள்ளல் மாதோ, முள்எயிற் றோயே!

நீயே பெருநலத் தையே, அவனே,
நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தித்
தண்கமழ் புதுமலர் ஊதும்
வண்டுஎன் மொழிப; 'மகன்'என் னாரே.

தெளிவுரை

கூர்மையான பற்களைக் கொண்டவளே! (விறலியே!) வயலில் நெல்லோடு அறுக்கப்பெற்ற ஆம்பல் மலர்கள் கதிர்ச் சூட்டினிடத்தே பூத்திருக்கும். அவற்றை அண்மையில் கன்றை ஈன்ற பசுக்கள் தின்ற பின்னர், எஞ்சியுள்ள பூக்களை எருதுகள் தின்னும். அத்தகைய வளம் நிறைந்த ஊருக்கு உரியவன், தலைவன். அவன் தொடர்பினை நீ விரும்புவாயாயின் என் சொற்களை ஏற்று நட! நீ மிகுந்த அழகினைக் கொண்ட பெண்மை நலம் வாய்ந்தவள். தலைவனோ, நீர் கொண்ட ஆழமான பொய்கைக்கு நள்ளிரவில் சென்று அங்குக் குளிர்ச்சி பொருந்திய புதுமணம் கமழும் புது மலரில் தேனை உண்ணுகின்ற வண்டு போன்றவன் என்று கூறுவர். அவனை யாரும் நல்ல ஆண்மகன் என்று கூறமாட்டார்கள்; அதனால், தலைவி அவனோடு ஊடல் கொள்ள வேண்டா.

கருத்து

'பரத்தமையை விரும்புதல் அவன் இயல்பு. ஆதலின், அதற்காகத் தலைவி அவனோடு ஊடல் கொள்ள வேண்டா.'

விளக்கம்

நடு யாமத்தில் மலரும் ஆம்பல் பூவில் வண்டு தேனருந்தும். அதுபோன்று தலைவன் நள்ளிரவில் பரத்தையர் சேரி புகுந்து புதுப் புதுப் பரத்தையரை நாடித் திரிபவன் என விறலியிடம் கூறித் தலைவியின் புலவியைப் பரத்தை ஒருத்தி தணிக்கின்றாள்.

உள்ளுறை

'வயல்வெள் ஆம்பல் சூடுதரு புதுப்பூக் கன்றுடைப் புனிற்றா தின்ற மிச்சில் ஓய்நடை முதுபகடு ஆரும்'. அஃதாவது அண்மையில் கன்றீன்ற பசு தின்று கழித்த மீதியை முதிய எருது

சென்று மிகுதியாய்த் தின்னும் என்பதாம். இதன்மூலம், தலைவனைக் குலமகளாய தலைவி நுகர்வதேயன்றிப் பரத்தை யரும் நுகர்வர் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. சூடு - நெல் அரிக்கட்டு.
2. புனிற்று ஆ - அண்மையில் கன்றை ஈன்ற பசு.
3. ஓய் நடை - காலோய்ந்து நடக்கும் நடை; முது பகடு - முதிய எருது; ஆரும் - உண்ணும்.
4. வெஃகுதல் - விரும்புதல்.
5. கொள்ளல் - கேள்; முள்எயிறு - கூரிய பற்கள்.
6. பெரு நலம் - மிகுந்த அழகு கொண்டவள், பெருநலம் கொண்டவள்; அவன் - தலைவன்.
7. நடுநாள் - நடு யாமம்; எய்தி - சென்று.
8. தண்கமழ் - குளிர்ச்சி பொருந்திய மணம் வீசும்; ஊதும் - தேனருந்தும்.
9. மொழிப - கூறுவர்; மகன் - நல் ஆண்மகன்.

காதற்பரத்தை கூற்று

ஐங்குறுநூறு 40 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

உலகியல்பற்றித் தலைமகன் தன் மனைக்கண் ஒரு ஞான்று போனதே கொண்டு, 'அவ்வழிப் பிரியாது உறைகின்றான்' என்று அயற்பரத்தையர் பலரும் கூறினாரென்பது கேட்ட காதற்பரத்தை அவர் பாங்காயினார் கேட்பத் தன் தோழிக்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

காதற்பரத்தை வீட்டிலே தலைவன் நெடுங்காலம் இருந்தான். உலகம் பழிக்குமே என்று கருதி ஒரு நாள் மட்டும் அவன் தன் இல்லம் சென்றான். உடனே அயற்பரத்தையர் பலரும், தலைவன் காதற்பரத்தையைக் கைவிட்டுத் தன் வீட்டிலேயே தங்கிவிட்டான் என்றனர். அதனைக் கேட்ட காதற்பரத்தை, அப்பரத்தையரோடு நட்புக்கொண்டுள்ளோர் காதில் விழுமாறு தன் தோழியிடம் கூறியது.

'அம்ம வாழி, தோழி! மகிழ்நன்
ஒண்தொடி முன்கை யாம்அழப் பிரிந்துதன்
பெண்டிர் ஊர்இறை கொண்டனன்' என்ப
கெண்டை பாய்தர அவிழ்ந்த
வண்டுபிணி ஆம்பல் நாடுகிழ வோனே.

தெளிவுரை

தோழியே! நீ வாழ்க! மகிழ்நன் ஒளி பொருந்திய தொடியணிந்த முன்கைகளைக் கொண்ட நாம் வருந்தி அழுமாறு பிரிந்து, தன் பெண்டாகிய மனைவியின் வீட்டிலேயே நிலையாய்த் தங்கினன் என்பர்; அவ்வாறு கூறுபவர், கெண்டை மீன் பாய்தலினாலே மலர்ந்து வண்டுகளைப் பிணித்துக் கொள்ளும் ஆம்பல் மலர்கள் நிறைந்த நாட்டிற்குத் தலைவன் என்பதை அறியார். (அறிந்திருந்தாரெனில், இவ்வாறு கூறார் என்று காதற்பரத்தை தன் தோழியிடம் கூறினாள்.)

கருத்து

'அயற்பரத்தையர் கூறுவதுபோல் அவன் தன் வீட்டில் தங்க மாட்டான்; அவன் என்னிடம் விரைவில் வருவான்.'

உள்ளுறை

கெண்டை பாய்தலால் ஆம்பல் மலரும் ஊரன் என்றது, ஆம்பல் மலர்வது, அது வண்டுகளைப் பிடித்து நிறுத்துவதற்கேயல்லாமல் கெண்டையை நிறுத்திக்கொள்வதற்கு அன்று. அதுபோல, உலகியல் பற்றித் தலைவன் தன் மனைக்குச் சென்றிருந்தாலும், அவன் கொண்ட அன்பு எம்மிடத்திலேயே என்றும் மாறாது நிலைத்திருக்கும்.

குறிப்பு

ஆம்பல் மலர்களில் தேன் நிரம்பியிருத்தலால் அவை வண்டுகளைப் பிற மலர்களை நாடிப் போகவிடாமல் தம்மிடமே தங்க வைத்துக் கொள்ளும். அதுபோல, நாம் அவனுக்குக் காம இன்பம் மிகவும் தருதலால் தலைவன் நம்மை விட்டு நீங்கிப் போகமாட்டான்.

சொற்பொருள்

1. மகிழ்நன் - தலைவன்.

2. யாம் - காதல் பரத்தை.
3. தன்பெண்டிர் - தலைவி; இறைகொண்டனன் - தங்கினன்.
4. கெண்டை - கெண்டைமீன்; பாய்தர - பாய; அவிழ்ந்த - மலர்ந்த.
5. ஆம்பல் - ஆம்பல் மலர்; வண்டுபிணி - வண்டுகளைப் பிணித்துக் கொள்ளும்.

பரத்தை கூற்று

நற்றிணை 300 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வேறொருத்தியின் வீடு சென்றுவிட்டான் என்பதால் அவனோடு முதல் பரத்தை ஊடல் கொண்டாள். அவள் ஊடலை நீக்கத் தலைவனின் தூதாய் வந்த பாணனிடம் அப்பரத்தை கூறியது.

சுடர்த்தொடிக் கோமகள் சினந்தென, அதன்எதிர்
மடத்தகை ஆயம் கைதொழு தாஅங்கு,
உறுகால் ஒற்ற ஒல்கி, ஆம்பல்
தாமரைக்கு இறைஞ்சும் தண்துறை ஊரன்
சிறுவளை விலைஎனப் பெருந்தேர் பண்ணிஎம்
முன்கடை, நிறீஇச் சென்றிசி னோனே
நீயும், தேரொடு வந்து போதல்செல் லாது
நெய்வார்ந் தன்ன துய்அடங்கு நரம்பின்
இரும்பாண் ஒக்கல் தலைவன்! பெரும்பூண்
ஏளர் தழும்பன் ஊணூர் ஆங்கண்,
பிச்சைசூழ் பெருங்களிறு போலஎம்
அட்டில் ஓலை தொட்டனை நின்மே.

தெளிவுரை

"நெய்யை ஒழுகவிட்டாற்போன்ற பிசிர் நீங்கிய நரம்பு கட்டப் பெற்ற யாழையும் பெரிய சுற்றத்தினையும் கொண்ட பாணனே! ஒளி வீசும் வளையல்களை அணிந்த அரசகுமாரி சினங்

கொண்ட போது அதற்கு அஞ்சி இளம் பெண்களாகிய தோழியரெல்லாம் கைதொழுது வணங்கி நிற்பர். அதுபோல, மிகுதியான காற்று வீசியவுடன் ஆம்பல் மலர்கள் குவிந்து தாமரை மலரை வணங்குவதுபோலச் சாய்ந்து நிற்கும். அத்தகைய காட்சியினைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய துறையை உடையவன், உன் தலைவன். அவன் என் கையில் உள்ள சிறு வளையல்களுக்கு விலையாய்ப் பெரியதொரு தேரை ஒப்பனை செய்த எமது மனைவாயிலில் நிறுத்திவிட்டு வேறு பரத்தை மனைக்குச் சென்றுவிட்டான். நீயோ, அவன் பின்னாலே செல்லவில்லை. போரில் பெரும்புண்ணுற்ற அழகினைக் கொண்ட தழும்பன் என்பானின் 'ஊணூர்' என்னுமிடத்தில் பிச்சைக்கு வந்து நின்ற பெரிய களிறு போல, எம் சமையலறைக் கூரையின் பனையோலையைத் தொட்டுக் கொண்டு நிற்கின்றாய். அங்கேயே நில். (உள்ளே நுழையாதே; உன் பேச்சு எதனையும் கேளேன்)" என அத்தூதாய் வந்த பாணனிடம் பரத்தை கூறினாள்.

கருத்து

பரத்தை வேறொருத்தியிடம் தலைவன் சென்றுவிட்டான் என்பதால் அவனோடு ஊடல் கொண்டாள், முதற்பரத்தை. அவ்வூடலைத் தீர்க்கத் தூதாய் வந்த பாணனிடம், 'பாண! உன் கருத்தினை ஏற்க மாட்டோம். நீ இங்கு நிற்பதால் பயனில்லை' என்றாள், ஊடல் கொண்ட முதற்பரத்தை.

விளக்கம்

தலைவன் பரத்தை ஒருத்தியோடு கூடியிருந்தான். அப்பரத்தை, அவன் தன்னைவிட்டுப் பரத்தை வேறொருத்தியிடம் சென்று வருகிறானென்று சினந்து, அவனைத் தன் வீட்டில் நுழையக்கூடாதெனத் தடுத்துவிட்டாள். தான் விடுத்த தூதர்களால் அப்பரத்தையின் சினம் தணியாமை கண்ட தலைவன், தன்னுடன் வந்த பாணனையும் தன் தேரையும் அவள் வீட்டின் மனைவாயிலில் நிறுத்திச் சென்றான். பாணன் அவள் வீட்டு அட்டிற்சாலைக்கு அருகே சென்று நின்றான். அவன் வரவுணர்ந்த பரத்தை அவனை நோக்கிச் சென்றதும், அவளைக் காண நாணியவன்போல அட்டிற்கூரையின் பனையோலையை

நிமிர்த்துப் பற்றி நின்றான். அவனிடம் வாயில் மறுக்கும் கருத்துடன் அப்பரத்தை இவ்வாறு கூறினாள்.

உள்ளுறை

மிகுந்த காற்று மோதுவதால் ஆம்பல் மலர்கள் குவிந்து தாமரை மலரிடத்துத் தாழ்ந்து இறைஞ்சும். அதுபோலத் தலைவனின் ஏவுதலினாலே பாணன் முதற்பரத்தையிடம் வந்து இறைஞ்சி நின்றான் என்பதாம்.

சொற்பொருள்

1. கோமகள் - அரசிளங்குமரி; அதன் எதிர் - அதற்கு அஞ்சி நிற்கும்.
2. மடத்தகை ஆயம் - இளம்பெண்களாகிய தோழியர்.
3. உறுகால் - மிகுந்த காற்று; ஒற்ற - அசைத்தலால்; ஒல்கி - தளர்ந்து; ஆம்பல் - ஆம்பல் பூக்கள்.
4. தாமரைக்கு இறைஞ்சும் - தாமரைக்கு எதிரில் சாய்ந்து வணங்குவது போல நிற்கும்.
5. சிறுவளை - முன்கை சிறிய வளையலுக்கு; பண்ணி - ஒப்பனை செய்து.
6. முன்கடை - வீட்டு வாயில்; நிறீஇ - நிறுத்தி; சென்றிசினோன் - சென்றனன்.
7. நீயும் - பாணனாகிய நீயும்; போதல் செல்லாது - அத்தலைவனோடு செல்லாது.
8. வார்ந்தன்ன - ஒழுகினாற்போன்ற; துய்அடங்கு - பஞ்சு போன்ற பிசிர் நீக்கப்பட்ட.
9. ஒக்கல் - சுற்றத்தார்; பெரும்பூண் - பெரிய பூணாரம் (அணிந்து).
10. ஏர் - அழகு (பெற்றுள்ள); தழும்பன் - தழும்பன் (என்பவனுடைய); ஊணூர் - ஊணூர் என்னும் ஊரில்.
11. பிச்சைசூழ் - பிச்சைக்கு வந்து நிற்கும்.
12. அட்டில் - சமையற்கூடம்; ஓலை - (கூரையிலுள்ள) ஓலை; நின்ம் - நிற்கிறாய்.

காதற்பரத்தை கூற்று

அகநானூறு 336 **பாவைக் கொட்டிலார்**

திணை : மருதம்

கூற்று

நயப்புப் பரத்தை இற்பரத்தைக்குப் பாங்காயினார் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுக்கு இற்பரத்தையாய் ஒருத்தியும், காதற்பரத்தையாய் ஒருத்தியும் ஆக இருவர் இருந்தனர். ஒரு சமயம் அவ்விருவருள் இற்பரத்தை காதற்பரத்தையின் அழகினைக் குறை கூறிப் பழித்தனளாம். அதனைக் கேட்டுச் சினங்கொண்ட காதற்பரத்தை, இற்பரத்தைக்குத் தோழியாயினோர் கேட்கும்படியாய்ச் சொல்லியது.

குழற்கால் சேம்பின் கொழுமடல் அகல்இலைப்
பாசிப் பரப்பில் பறழொடு வதிந்த
உண்ணாப் பிணவின் உயக்கம் சொலிய,
நாள்இரை தரீஇய எழுந்த நீர்நாய்,
வாளையொடு உழப்ப, துறைகலுழ்ந் தமையின்,
தெண்கள் தேறல் மாந்தி, மகளிர்
நுண்செயல் அம்குடம் இரீஇ, பண்பின்
மகிழ்நன் பரத்தைமை பாடி, அவிழ்இணர்க்
காஞ்சி நீழல் குரவை அயரும்
தீம்பெரும் பொய்கைத் துறைகேழ் ஊரன்
தேர்தர வந்த நேர்இழை மகளிர்
ஏசுப என்ப,என் நலனே; அதுவே
பாகன் நெடிதுஉயிர் வாழ்தல் காய்சினக்
கொல்களிற்று யானை நல்கல் மாறே;
தாமும் பிறரும் உளர்போல் சேறல்
முழவுஇமிழ் துணங்கை தூங்கும் விழவின்,
யான்அவண் வாராமாறே; வரினே, வானிடைச்
சுடரொடு திரிதரும் நெருஞ்சி போல,
என்னொடு திரியான் ஆயின், வென்வேல்
மாரி அம்பின் மழைத்தோற் சோழர்
வில்ஈண்டு குறும்பின் வல்லத்துப் புறமிளை,

ஆரியர் படையின் உடைகஎன்
நேர்இறை முன்கை வீங்கியே வளையே!

தெளிவுரை

துளையமைந்த தண்டினைக் கொண்ட சேம்பின் செழுமை யான அகன்ற இலைகளுடன் கூடிய பாசி படர்ந்த நீர்ப்பரப்பில், பெண் நீர்நாய் தன் குட்டியுடன் இரையுண்ணாது வருந்திக் கிடந்தது. அதன் வருத்தத்தைப் போக்குதற்காக ஆண்நாய் காலையில் எழுந்து நீர்நிலையிலுள்ள வாளை மீனைக் கௌவி அதனோடு போரிட்டது. எனவே, உண்ணும் நீர் கலங்கலாயிற்று. அதனால் துறைக்கு நீர் மொள்ளுதற்கு வந்த பெண்கள் சிறந்த வேலைப்பாடமைந்த தங்கள் குடங்களில் நீர் மொள்ளாது அவற்றைக் கீழே வைத்தனர். தெளிந்த கள்ளினைக் குடித்த தம் கணவன்மாரின் பண்பற்ற பரத்தமை குறித்துப் பழித்துப் பாடியவராய், விரிந்த பூங்கொத்துகளைக் கொண்ட காஞ்சி மரத்தின் நிழலிலே குரவைக்கூத்தாடிக்கொண்டிருந்தனர். அத்தகைய இனிய காட்சியினைக் கொண்ட பெரிய பொய்கைத் துறையினை உடைய ஊரனாகிய தலைவன், தேரில் ஏற்றிக் கொண்டு வந்த அணிகலன்களை அணிந்த அவன் மகளிர் என் அழகினை இகழ்ந்து ஏசினர் என்பர்.

மிகுந்த சினத்தினையும், கொல்லும் தன்மையினையும் கொண்டதுமான களிற்றியானை கொல்லாது விடுதலாலேயே யானைப்பாகன் நெடுங்காலம் பிழைத்திருக்கிறான். அது போன்றே அப்பெண்டிரும் பிறரும் என்னை ஏசியவண்ணம் தலைவனிடம் செல்லுதற்குக் காரணம், முழவு ஒலிக்கக் குரவை ஆடும் விழாக் காலத்தே நான் அவ்விடம் செல்லாததே ஆகும்.

நானும் என் அழகுநலம் காட்டி அங்குச் செல்வேனேயானால், ஞாயிறு செல்லும் திசையை நோக்கியே செல்லும் நெருஞ்சிப் பூப்போல, நான் செல்லுமிடமெல்லாம் தலைவன் என்னைச் சுற்றியே சுழலுமாறு ஆக்கிடுவேன். அவ்வாறு நான் செய்யா விடில், வெற்றி பொருந்திய வேலினையும், மழை போலச் சொரி யும் அம்பினையும், மேகம் போன்ற தோல் கேடயங்களையும்

உடைய விற்படை நெருங்கிய சோழரது அரணைக் கொண்ட வல்லம் என்னும் ஊருக்குப் புறத்தேயுள்ள காவற்காட்டினை வந்தடைந்த ஆரியரது படை தோற்றுச் சிதறி ஓடியது போன்று, என் முன்கையிலே செறிந்துள்ள என் வளையல்கள் உடைந்து சிதறி வீழட்டும்.

கருத்து

'தலைவன் இருக்குமிடம் சென்றேனேயானால் அவன் யாருடன் இருப்பினும் என்னுடன் வந்துவிடுவான்' எனக் காதற்பரத்தை பெருமை படக் கூறுகிறாள்.

விளக்கம்

'ஊரன் தேர் தர வந்த மகளிர் என் நலனை இகழ்ந்து கூறுவதாய்ச் சொல்லுகின்றனர்; அச்செயல், பாகன் நெடுங் காலம் உயிருடன் வாழ்தல், மிகுந்த சினங்கொண்ட யானை அவனைக் கொல்லாது அருள் செய்ததாலேயாகும். அதுபோல, அம்மகளிரும் பிறரும் சிறப்புப் பெற்றவர்போல உலவுதல், முழவு ஒலிக்கும் துணங்கைக்கூத்து நிகழும் இடத்திற்கு நான் செல்லாததாலேயாகும். நான் அங்குச் சென்றால், ஞாயிறு செல்லும் திசையிலேயே செல்லும் நெருஞ்சிப்பூப்போல, தலைவனை என் பின்னாலேயே சுற்றி வரும்படி ஆக்கிடுவேன். அப்படி ஆக்காவிடில், என் முன்கையில் உள்ள திரண்ட வளையல்களை உடைத்தெறிவேன்' என்று கூறித் தலைவனுக்குத் தன்பால் உள்ள காதலையும், பிற மகளிரினும் தனக்குள்ள முதன்மையையும் கூறிக் காதற்பரத்தை தன் பெருமிதத்தினைப் புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. குழல்கால் - துளை பொருந்திய தண்டு.
2. பாசிப் பரப்பில் - பாசியினைக் கொண்ட நீர்ப்பரப்பில்; பறழ் - குட்டி.
3. பிணவு - பெண்நாய்; உயக்கம் - வருத்தம்; சொலிய - நீக்குதற்கு.
4. நாள் இரை - காலை இரை; தரீஇய - தருவதற்காக.
5. வாளை - வாளை மீன்; உழப்ப - போரிட; கலுழ்தல் - கலங்குதல்.
6. தெண் - தெளிந்த; கள் தேறல் - தெளிந்த கள்; மாந்தி - உண்டு.

7. நுண்செயல் - நுண்மையாய்ச் செய்யப்பட்ட; இரீஇ - கீழே வைத்துவிட்டு.
8. மகிழ்நன் - தலைவன்; அவிழ் இணர் - மலர்ந்த பூங்கொத்து.
9. குரவை - குரவைக்கூத்து; அயரும் - ஆடும்.
10. துறைகேழ் ஊரன் - துறை பொருந்திய ஊரினைக் கொண்டவன்.
11. நேர்இழை - நேரிய அணிகலன்கள்; மகளிர் - பெண்டிர், பரத்தையர்.
12. ஏசுப - ஏசுகின்றனர்.
13. காய்சினம் - மிகுந்த சினம்.
14. நல்கல் - அருளுதல்.
15. சேறல் - (விழா நடைபெறும் இடத்திற்குச்) செல்லுதல்.
16. துணங்கை - மகளிர் ஆடும் கூத்து; தூங்கும் - ஆடும்.
17. வாராமாறே - வாராதிருத்தலாலேயாம்.
18. சுடர் - சூரியன்; நெருஞ்சி - நெருஞ்சிப்பூ.
19. திரியான் - உடன் வாரான்; வென்வேல் - வெற்றி பொருந்திய வேல்.
20. மழைத்தோல் - மேகம் போன்ற கேடயம்.
21. வில் ஈண்டு - விற்படை நெருங்கிய; குறும்பு - அரண்; வல்லம் - ஓர் ஊர்; புறமிளை - (ஊருக்குப்) புறத்தே உள்ள காவற்காடு.
22. வீங்கிய - செறிந்துள்ள.

காமக்கிழத்தியர் கூற்று

காமக்கிழத்தி கூற்று

கலித்தொகை 74 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகனொடு ஊடிய காமக்கிழத்தியை, ‘அவன் இவ்வகையன கூற, நீ ஏமுற்றாயோ?’ என்றாற்கு அவள் கூறியது.

(ஏமுறுதல் - பைத்தியம் பிடித்தல்.)

கூற்று விளக்கம்

பரத்தையர் இல்லங்களிலிருந்து பிரிந்துவந்த தலைவன் காமக் கிழத்தியை நாடிச் சென்றான். அவனோடு அவள் ஊடினாள். ‘உனக்கென்ன

பைத்தியமா பிடித்திருக்கிறது?' என்று தலைவன் அவளிடம் கேட்டான். அப்பொழுது அவள் அவனிடம் கூறியது.

தரவு

பொய்கைப்பூப் புதிதுஉண்ட வரிவண்டு கழிப்பூத்த
நெய்தல்தாது அமர்ந்துஆடிப் பாசடைச் சேப்பினுள்
செய்துஇயற்றி யதுபோல வயற்பூத்த தாமரை,
மைதபு, கிளர்கொட்டை மாண்பதிப் படர்தரூஉம்,
கொய்குழை அகைகாஞ்சித் துறைஅணி நல்ஊர!

தாழிசை

'அன்பிலன், அறனிலன், எனப்படான்' எனஏத்தி,
நின்புகழ் பலபாடும் பாணனும் ஏமுற்றான்.

நஞ்சுஉயிர் செகுத்தலும் அறிந்துஉண்டாங்கு அளிஇன்மை
கண்டும்,நின் மொழிதேறும் பெண்டிரும் ஏமுற்றார்.

முன்பகல் தலைக்கூடி, நன்பகல் அவள்நீத்து,
பின்பகல் பிறர்த்தேரும் நெஞ்சமும் ஏமுற்றாய்.

எனவாங்கு—

சுரிதகம்

'கிண்கிணி மணித்தாரோடு ஒலித்தார்ப்ப ஒண்தொடிப்
பேரமர்க் கண்ணார்க்கும் படுவலை இது'என,
ஊரவர் உடன்நகத் திரிதரும்
தேர்ஏமுற் றன்று நின்னினும் பெரிதே.

தெளிவுரை

"பொய்கையிலே பூத்த புதுமலரின் புதுத் தேனை உண்டது, ஒரு வரிவண்டு. பின்னர்க் கழியிலே பூத்த நெய்தல் மலரின் தாதினை விரும்பி உண்டது. பிறகு, வயல்களில் உள்ள தாமரையை நோக்கிப் பறந்தது. பசிய இலையைக் கொண்ட சேப்பங்கிழங்கினை அழகுபடுத்தி வைத்திருப்பதுபோலத் தோன்றுவதும், கருஞ்சிவப்பாய்த் தோன்றுவதுமான அத்தாமரை மொட்டின்மேல் தங்கியது. இத்தகைய காட்சியுடன், 'மகளிர்

கொய்யக் கொய்ய மேலும் தளிர்க்கின்ற காஞ்சி மரங்களைக் கொண்ட துறைகளையுடைய நல்ல ஊரனே!

"அன்பில்லாதவன், அறம் தவறியவன் என்று உன்னைச் சொல்லக்கூடாது என்று என்னிடமே கூறும் உன் பாணன் பித்தேறியவன்.

"நஞ்சு, உயிரைக் கொல்லும் என்பதை அறிந்திருந்தும், அதை உண்பவர் போல, நீ இரக்கமற்றவன் என்பதை அறிந்திருந்தும் உன் பேச்சை நம்பும் பெண்டிரும் பித்தேறியவரே!

"காலையில் ஒருத்தியுடன் கூடி, நண்பகலில் அவளைக் கை விட்டுப் பிறரிடம் சென்று, பிற்பகலிலே கூடுவதற்கு வேறு சிலரைத் தேடித் திரியும் உன் நெஞ்சமும் பித்தேறியதே!

"சதங்கைகளையும், சிறு மணிகள் சேர்த்துக் கோத்த மாலை களையும் அணிந்து ஒலி எழுப்பி நடப்பவரும், ஒளி பொருந்திய வளையல்களை அணிந்தவரும், கண்டாரை ஈர்க்கும் பெரிய கண் களைக் கொண்டவருமாகிய பரத்தையரைத் தேடிப் பிடிக்கும் வலைபோல விளங்குகிறது, உன் தேர் என்று ஊர் மக்கள் அனைவரும் எள்ளி நகையாடுகின்றனர். இவ்வாறாய் ஊர் சிரிக்கும் அளவுக்குக் காணப்படும் உன் தேர் உன்னைவிடப் பித்தேறியதாய் இருக்கிறது.

"இவ்வாறு உன் பாணனும், உன் பரத்தையரும், உன் தேரும், தேர்ப்பாகனும் பித்துக்கொண்டு அலைவதுபோல அலைபவள் அல்லள், நான்" என்று காமக்கிழத்தி தலைவனிடம் கூறுகிறாள்.

கருத்து

தலைவனிடம் ஊடல் கொண்ட காமக்கிழத்தியிடம் தலைவன், 'உனக் கென்ன பைத்தியமா?' என்று கேட்க, அதற்கு அவள், "நானா பைத்தியம்? உன் பாணன் பைத்தியம்; உன் பரத்தையர் பைத்தியம்; உன் தேர் பைத்தியம். அவ்வளவு ஏன்? நீயே பைத்தியம்" என்று கூறுகிறாள்.

குறிப்பு

தேரில் ஏற்றிக்கொண்டுவந்த பரத்தையரோடு முதலில் கூடி, பின்பு சேரிப் பரத்தையரோடு சேர்ந்து, விடியற்காலத்தில் காமக்கிழத்தியின் வீட்டிற்குத்

தலைவன் சென்றான் என்னும் குறிப்புப் பொருள் இப்பாடலில் உள்ள இயற்கை வருணனையால் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. பூப்புதிது - புதிய பூ; கழி - உப்பங்கழி.
2. நெய்தல் - நெய்தல் பூ; அமர்ந்து - விரும்பி; ஆடி - உண்டு; பாசடை - பசிய இலை; சேப்பு - சேப்பங்கிழங்கு.
3. இயற்றியது - உண்டாக்கியது.
4. மை தபு - குற்றம் அற்ற; கொட்டை - தாமரைப் பொகுட்டு; படர்தரும் - மொய்க்கும்.
5. கொய்குழை - கொய்யப்படும் இலை; அகை - துளிர்க்கும்; காஞ்சி - காஞ்சி மரம்.
6. ஏத்தி - பாராட்டி.
7. ஏமுற்றான் - பித்தேறினான்.
8. செகுத்தல் - நீக்குதல்; அளி - அருள், இரக்கம்.
9. தேறும் - நம்பும்.
10. தலைக் கூடி - முதலாவதாய்க் கலந்து; நீத்து - கைவிட்டு.
11. தேரும் - தேடும்.
13. மணித்தார் - சிறு மணிகளைச் சேர்த்துக் கோக்கப்பட்ட மாலை.
14. பேரமர்க் கண்ணார் - மிகவும் விரும்பப்படும் கண்களைக் கொண்டவள்; படுவலை - அகப்படுத்தும் வலை.
15. நக - எள்ளி நகையாட.

காமக்கிழத்தி கூற்று

கலித்தொகை 72 — **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகனது வரவு கண்டு ஊடிய காமக்கிழத்தி ஊடியவாறு கண்டு, சென்று சார்ந்த தலைமகனுடன், அவள் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

கூற்று விளக்கம்

காமக்கிழத்தியுடன் இருந்த தலைவன், ஒரு முறை பரத்தையைச் சந்தித்துத் திரும்பினான். அதனால், காமக்கிழத்தி அவனிடம் ஊடல்

கொண்டாள். அதை அறிந்துகொண்ட அவன், அவளை உரிய முறையில் அமைதிப்படுத்த அவளும் ஊடல் தீர்ந்து கூறியது.

தரவு

இணைபட நிவந்த நீலமென் சேக்கையுள்,
துணைபுணர் அன்னத்தின் தூவிமெல் அணைஅசைஇ,
சேடுஇயல் வள்ளத்துப் பெய்தபால் சிலகாட்டி,
ஊடும்மென் சிறுகிளி உணர்ப்பவள் முகம்போலப்
புதுநீர புதல்ஒற்றப் புணர்திரைப் பிதிர்மல்க,
மதிநோக்கி அலர்வீத்த ஆம்பல்வான் மலர்நண்ணிக்
கடிகயத் தாமரைக் கமழ்முகை, கரைமாவின்
வடிதீண்ட, வாய்விடூஉம் வயல்அணி நல்ஊர!

தாழிசை

கண்ணிநீ கடிகொண்டார்க் கனைதொறும் யாம்அழப்
பண்ணினால் களிப்பிக்கும் பாணன்'காட்டு' என்றானோ?
'பேணான்'என்று உடன்றவர் உகிர்செய்த வடுவினால்
மேனாள்நின் தோள்சேர்ந்தார் நகைசேர்ந்த இதழினை.

நாடிநின் தூதுஆடித் துறைச்செல்லாள், ஊரவர்
ஆடைகொண்டு, ஒலிக்கும்நின் புலைத்தி,'காட்டு' என்றாளோ?
கூடியார் புனல்ஆடப் புணையாய மார்பினில்,
ஊடியார் எறிதர, ஒளிவிட்ட அரக்கினை.

வெறிதுநின் புகழ்களை வேண்டார்இல் எடுத்துஏத்தும்
அறிவுடை அந்தணன் அவளைக்'காட்டு' என்றானோ?
களிபட்டார் கமழ்கோதை கயம்பட்ட உருவின்மேல்
குறிபெற்றார் குரல்கூந்தல் கோடுஉளர்ந்த துகளினை.

எனவாங்கு—

சுரிதகம்

செறிவுற்றேம், எம்மைநீ செறிய; அறிவுற்று,
அழிந்துஉகு நெஞ்சத்தேம்; அல்லல் உழப்பக்
கழிந்தவை உள்ளாது, கண்ட இடத்தே,
அழிந்துநிற் பேணிக் கொளலின் இழிந்ததோ?
இந்நோய் உழத்தல் எமக்கு.

தெளிவுரை

(தான் ஊடல் கொண்டிருந்த தலைவனிடம் காமக்கிழத்தி பேசுகிறாள்:)

"மென்மையான பலவற்றையும் உள்ளீடாய் வைத்து நீலப் பட்டினாலே செய்யப்பட்ட மெல்லிய படுக்கை; அதன்மேல், துணையோடு கூடிய அன்னத்தின் தூவி நிரப்பப்பட்ட வெண்மையும் மென்மையும் வாய்ந்த பட்டுத்தலையணை; அப்படுக்கையில் அமர்ந்துகொண்டு பெண் ஒருத்தி வெள்ளிக் கிண்ணத்தில் பாலை ஊற்றி, தான் வளர்க்கும் கிளிக்கு அதனை ஊட்டுகிறாள்; கிளி பால் உட்கொள்ள மறுக்கிறது; அதை மெல்ல மெல்ல இசைவித்து உண்ணச்செய்கிறாள்; கிளி, பாலை உட்கொண்டதும் அதனை முத்தமிட்ட அவள் முகம் மலர்கிறது.

"குளத்தில் புதுவெள்ளம் கரை புரளுகிறது; கரையோரத்துப் புதர்களிலெல்லாம் அலைகள் மோதுவதால் சிறு நீர்த்துளிகள் எழும்புகின்றன. முதல் நாள் இரவில் நிலவை நோக்கி மலர்ந்த அல்லிக்குப் பக்கத்தே தாமரை மொட்டு ஒன்று தன் மலர்ச்சிக் காலத்தை நோக்கிக் காத்திருந்தது. கரையில் நின்ற மாவினது தாழ்ந்த கிளையிலேயிருந்து காலை நேரத்தில் விழுந்த வடு அத்தாமரை மொட்டினைத் தாக்கியதால் அது மலர்ந்தது. அத்தகைய அழகு சேர்க்கும் நீர்த்துறையைக் கொண்ட நல்ல ஊரனே!

(காமக்கிழத்தி மேலும் கூறுகிறாள்:)

"இன்பத்தைக் கருதி, காதல் கொண்ட பரத்தையரை நீ கூடி மகிழ்ந்திருக்கும்போது நான் இங்கு வருந்தி ஏங்கியிருந்தேன். அப்போது உன் பாணனோ தன் பாடல்கள்மூலம் உன்னை மகிழ்வித்திருப்பான். 'நம்மை இவன் பேணான்' என்று கருதிச் சினம் கொண்ட பரத்தையர் தம் நகங்களை உன் தோள்களில் பதித்துச் செய்த வடுவினையும், பின்னர்ப் பரத்தையரை நீ முயங்கியபொழுது அவர்தம் பற்கள் உன் இதழிலே பதிந்ததால் ஏற்பட்ட வடுவினையும் சேர்த்து என்னிடம் வந்து காட்டுமாறு அப்பாணன்தான் உனக்குச் சொன்னானோ?

"உனக்குப் பரத்தையரைத் தேடித் தரும் வேலையைச் செய்வதால் புலைத்தியாகிய வண்ணாத்தி ஊரார் துணிகளைத் துவைப்பதற்குக்கூட நீர்த்துறைக்குச் செல்வதில்லை. நீ புனலாடுகின்றபோழ்து உன் மார்பிலே சாய்ந்து அதைத் தெப்பமாய்க் கருதும் உன் பரத்தையருள் சிலருக்கு உன் மார்பாகிய அத்தெப்பம் கிட்டாததால், சினங்கொண்டு சாதிலிங்கக் குழம்பைக் கொண்ட சிமிழால் உன் மார்பைத் தாக்கியுள்ளனர். அப்போது ஏற்பட்ட சாதிலிங்கக் கறையை நீக்காமலே, உன் ஆடையை வெளுக்காமலே, அந்தக் கறையை என்னிடம் காட்டுமாறு அந்தப் புலைத்திதான் உன்னை இங்கு அனுப்பிவைத்தாளோ?

"வீணாய் உன் புகழைக் கேட்க விரும்பாத எம்மிடம், 'அறிவு கொண்டவன்' என்று கூறப்படும் அந்தணன் ஒருவன் வந்து உன்னைப் புகழ்ந்து பேசினான். உன்னொடு கூடிக் களித்த பரத்தையரின் தழுவலினால் உன் மேல் கிடக்கும் அவர்களின் தலைமாலையினையும், அதன்பின் நீ குறித்த இடத்திற்கு வந்து கூடியவளின் கூந்தலை நீ வாரி முடித்தபோது அவர்கள் கூந்தலி லிருந்து வீழ்ந்த பூந்தாதுகளையும் என்னிடம் காட்டுமாறு அந்த அந்தணன்தான் உனக்கு அறிவுரை கூறினானோ?

"நீ முன்னம் விரும்பி முயங்கிய காரணத்தை உணர்ந்து நானும் இப்போது உன்னை முயங்கினேன். உன்னைக் கண்டதும், என் நெஞ்சம் அழிந்து உன்னை முயங்க விரும்பியது என்பதே உண்மை; இஃது ஒரு தாழ்ந்த செயலன்று. ஆனால், நீ உன் நிலையிலிருந்து தாழ்ந்து, கண்களால் கண்டவர்களையெல்லாம் நாடிச் சென்றுவிட்டாய்; எனினும், உன்னை எண்ணிக் காம நோயால் வாடி வருந்தி வாழ்தல் எனக்கு இழிவன்று.'

கருத்து

காமக்கிழத்தி தலைவனிடம் ஊடல் கொண்டாளெனினும், ஊடல் நீங்கிக் கூடிய பின்னர் அவன் குறைகளைச் சுட்டிக் காட்டினாள்.

விளக்கம்

சேரிப்பரத்தையரோடு இன்பம் துய்த்தபின் காமக் கிழத்தியைக் கண்டு களிக்கத் தலைவன் அவளுடைய இல்லத் திற்குச் சென்றான். அது போழ்து அவன் உடலில் காணப்பட்ட பரத்தையரின் நகக்குறிகள், இதழ்களில் அமைந்திருந்த பற் பதிவுகள், உடையிலும் மார்பிலும் காணப்பட்ட சாதிலிங்கக் கறைகள் ஆகியவற்றைக் காமக்கிழத்தி கண்டு, தலைவனையும் அவன் பரத்தையரையும் இழித்துரைக்கிறாள்.

காமக்கிழத்தி தன்னிடம் தலைவன் வந்தபோது ஊடினாள்; எனினும், அவளது காம இச்சை தலைவனோடு கூடச் செய் கிறது. கூடிய பின்னும் அவன் குறைகளைச் சுட்டிக் காட்டு கின்றாள்.

குறிப்பு

பண்டையோர், சேவலும் பெடையுமாகிய அன்னங்கள் புணரும் பொழுது, அவ்வின்ப உணர்ச்சி காரணமாய் அவற்றின் உடலினின்றும் தாமே உதிர்கின்ற மெல்லிய தூவிகளைக்கொண்டு மெத்தைகளை உருவாக்கியுள்ளனர்.

பரத்தையர் தொடர்பிற்குப் பாணன் உதவுதல் உண்டு; புலைத்தியும் அந்தணனும் உதவுவர் என்பதை இப்பாடலால் அறிகிறோம்.

சொற்பொருள்

1. இணைபட - இரட்டையாய்; நிவந்த - உயர்ந்த; சேக்கை - படுக்கை.
2. தூவி - இறகு; அணை - படுக்கை, தலையணை; அசைஇ - உட்செலுத்தி.
3. சேடு இயல் - பெருமை பொருந்திய; வள்ளம் - கிண்ணம்; சில - சில முறை.
4. உணர்ப்பவள் - (கோபத்தைத்) தணிவிப்பவள், தெளிவிப்பவள்.
5. நீர் - நீரைக் கொண்ட; ஒற்ற - மோத; பிதிர் - துளி; மல்க - பெருக.
6. அலர்வீத்த - மலர்ந்த; வான்மலர் - வெண்மையான மலர்; நண்ணி - சேர்ந்து.
7. கடிகயம் - காவலினைக் கொண்ட குளம்; மாவின்வடி - மாவடு.
8. தீண்ட - மோத; வாய்விடூஉம் - மலரும்.
9. கண்ணி - கருதி; கனைதொறும் - தழுவுந்தொறும்.

10. பண் - பாட்டு, இசை; களிப்பிக்கும் - மகிழ்வுண்டாக்கும்.
11. உடன்றவர் - சினந்தவர்; உகிர் - நகம்; வடு - தழும்பு.
12. மேனாள் - முந்தைய நாள்; நகை - (சிரிப்பைத் தோற்றுவிக்கும்) பல்.
13. நாடி - விரும்பி; ஆடி - சென்று.
14. ஒலிக்கும் - துவைக்கும்; புலைத்தி - வண்ணாத்தி.
15. புணை - தெப்பம்.
16. அரக்கு - சாதிலிங்கம்.
17. வெறிது - வீணாய்; ஏத்தும் - பாராட்டும்.
19. களிபட்டார் - கூடிக் களித்தவர்; கயம்பட்ட - மென்மை அடைந்த.
20. குறி பெற்றார் - குறித்த இடத்திற்கு வருமாறு கூறப்பட்டவர்; குரல் கூந்தல் - குரல் என்னும் கொண்டையினைக் கொண்ட கூந்தல்; கோடு உளர்ந்த - வாரிச் சிக்கெடுத்து முடித்த.
22. செறிவுற்றேம் - நிறைவுற்றோம்; அறிவுற்று - உன் செயல்களை அறிந்து.
24. கழிந்தவை - கழிந்து போன குற்றங்கள்; கண்ட இடத்து - பார்க்க நேரும்போது.
25. அழிந்து - நெஞ்சு அழிந்து; இழிந்ததோ? - இழிந்தது அன்று.
26. உழத்தல் - வருந்துதல்.

காமக்கிழத்தி கூற்று

கலித்தொகை 71 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகனது வரவு கண்டு ஊடிய காமக்கிழத்தி ஊடியவாறு கண்டு, சென்று சார்ந்த தலைமகனுடன், அவள் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

கூற்று விளக்கம்

காமக்கிழத்தியுடன் இருந்த தலைவன், ஒரு முறை பரத்தையைச் சந்தித்துத் திரும்பினான். அதனால் காமக்கிழத்தி அவனோடு ஊடல் கொண்டாள். அதை அறிந்துகொண்ட அவன், அவளை உரிய முறையில் அமைதிப்படுத்த, அவளும் ஊடல் தீர்ந்து கூறியது.

தரவு

விரிகதிர் மண்டிலம் வியல்விசும்பு ஊர்தரப்
புரிதலை தளைஅவிழ்ந்த பூஅங்கண் புணர்ந்துஆடி,
வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கையுள்—
துனிசிறந்து இழிதரும் கண்ணின்நீர் அறல்வார,
இனிதுஅமர் காதலன் இறைஞ்சித்தன் அடிசேர்பு
நனிவிரைந்து அளித்தலின், நகுபவள் முகம்போலப்
பனிஒரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்
தனிமலர் தளைவிடூஉம் தண்துறை நல்ஊர!

தாழிசை

'ஒருநீ, பிறரில்லை அவன்பெண்டிர்' எனஉரைத்துத்
தேரொடும் தேற்றிய பாகன்வந் தீயான்கொல்;
ஓர்இல்தான் கொணர்ந்துய்த்தார் புலவியுள் பொறித்தபுண்
பாரித்துப் புணர்த்தநின் பரத்தைமை காணிய.

'மடுத்துஅவன் புகுவழி மறையேன்'என்று யாழொடும்
எடுத்துச்சூள் பலவுற்ற பாணன்வந் தீயான்கொல்?
அடுத்துத்தன் பொய்யுண்டார்ப் புணர்ந்தநின் எருத்தின்கண்
எடுத்துக்கொள் வதுபோலும் தொடிவடுக் காணிய.

'தணந்தனை' எனக்கேட்டுத் தவறுஓராது, எமக்குநின்
குணங்களைப் பாராட்டும் தோழன்வந் தீயான்கொல்?
கணங்குழை நல்லவர் கதுப்புஅறல் அணைத்துஞ்சி,
அணங்குபோல் கமழும்நின் அலர்மார்பு காணிய.

— என்று, நின்

சுரிதகம்

தீரா முயக்கம் பெறுநர்ப் புலப்பவர்
யார்?நீ வரும்நாள்போல் அமைகுவம்யாம்; புக்கீமோ!
மாரிக்கு அவாவுற்றுப் பீள்வாடும் நெல்லிற்கு,ஆங்கு
ஆராத் துவலை அளித்தது போலும்நீ
ஓர்யாட்டு ஒருகால் வரவு.

தெளிவுரை

(காமக்கிழத்தி தலைவனை நோக்கிக் கூறுகிறாள்:)

"விரிந்த கதிர்களைப் பரப்பிக் கதிரவன் கீழ்வானத்தில் உலா வரத் தொடங்கினான். வளம் நிறைந்த பொய்கையில் தாமரை மலர்கள் முறுக்கவிழ்ந்து மலர்ந்தன. வண்டுகள் பூத்தோறும் சென்று தேன் குடிக்க மொய்த்தன. பனிநீர் படிந்திருக்கப் பசிய இலைகளோடு கூடிய ஒற்றைத் தாமரை மொட்டு அங்கு இருந்தது. கதிரவன் அதன்மேல் பட்டதும், பனிநீர் மறைந்து, கட்டவிழ்ந்து மலர்ந்து புதிய பொலிவுடன் விளங்கியது.

"காதலனைப் பிரிந்து கண்ணீர் மல்க நின்றிருந்தாள், பெண் ஒருத்தி. பிரிந்து சென்றவன் தன் தவற்றை உணர்ந்து விரைந்து அவளைத் தேடி வந்தான்; அவள் காலடியில் வீழ்ந்து தன்னைப் பொறுத்தருளுமாறு வேண்டினான். அந்நொடியிலேயே அவள் கண்ணீர் மறைய முகம் மலரப் புன்முறுவல் பூத்தாள். குளத்தில் மலர்ந்த தனித் தாமரையின் மலர்ச்சி இப்பெண்ணின் முக மலர்ச்சியைப் போன்றிருந்தது. இத்தகைய காட்சிகள் கொண்ட நீர்த்துறைகளையுடைய நல்ல ஊரனே!

" 'நீ ஒருத்தியே அன்றி அவனுக்குரிய பெண்டிர் வேறு எவரும் இலர்' என்று உன் பாகன் உன் தேரைத் தொட்டுச் சத்தியம் செய் தான். அவனே உன்னைக் கொண்டுசென்று பரத்தை ஒருத்தி வீட்டில் விட்டான். அப்பரத்தை கலவியின்போது செய்த நகக் குறிகள், பற்குறிகள் ஆகியவற்றால் ஏற்பட்ட வடுக்கள் மறையாது இருக்கும்போதே உன் பரத்தமையை நான் காண வேண்டும் என்பதற்காகவே உன்னை இங்கே அவன் அனுப்பி வைத் தானோ? என் நிலையைக் காண அவன் இங்கு இல்லையா? இருந்தால் நன்றாய் இருக்குமே!

" 'உன்னை விட்டுப் பரத்தையர் எவரிடத்தும் அவன் செல்வதில்லை; சென்றால் அவன் போகுமிடத்தை உன்னிடம் சொல்லாது மறையேன்' என்று உன் பாணன் யாழ்த் தெய்வத்தின்மீதும் மற்றும் பல தெய்வங்களின்மீதும் சத்தியம் செய்து என்னிடம் சொன்னான். ஆனால், நீ கூறிய பொய்யை நம்பி உன்னோடு சேர்ந்த பரத்தையரின் வளையல்கள் அழுத்திய வடு உன் கழுத்தில் நன்றாய்த் தெரிகிறது. அதைக் காண அவன் இங்கு இல்லையா? இருந்தால் நன்றாய் இருக்குமே!

"நீ என்னைப் பிரிந்து துன்பமுறச் செய்தாய் என்பதை உன் பாணன் அறிவான். இருந்தாலும், உன்னிடம் தவறு காணாமல் உன் நல்ல குணங்களையே சொல்லிப் பாராட்டிக்கொண் டிருப்பான். பரத்தையரின் கூந்தலாகிய அணையில் உறங்கியமை யால் அச்சுறுத்தும் பெண் தெய்வம்போல ஒரு மணம் உன் மார்பைச் சுற்றிப் பரவ, அதனோடு நீ இங்கு வந்திருக்கிறாய். அதைக் காண அவன் இங்கு இல்லையா? இருந்தால் நன்றாய் இருக்குமே!

"இடைவிடாத உன் தழுவுதலைப் பெற்று இன்புறும் பரத்தை யரை நான் வெறுக்கவில்லை. பெருமழையை விரும்பி நீண்ட நாள் வாடிக்கொண்டிருந்த நெற்பயிருக்குச் சிறு தூறல்களால் ஏதாவது பயன் உண்டா? அத்தூறல் வெப்பத்தைக் கிளப்பிவிட்டு அழிவைத்தான் தரும். ஓராண்டுக்கு ஒரு முறைதான் நீ இங்கே வருகிறாய்; வந்ததும் உடனே பிரிகின்றாய்! இதனால் எமக்கு என்ன பயன்?

"நீ முற்றிலும் மனம் திருந்தி இங்கு வரும்வரையும் நான் உனக்காகக் காத்திருப்பேன்; இப்போது பரத்தையர் வருந்தி யிருப்பர். நீ அவர்களை நோக்கியே செல்."

கருத்து

காமக்கிழத்தி தன் காதலனுடன் ஊடிப் பின்னர்க் கூடிய பின்னும் தலைவனுக்குத் தன் எண்ணங்களை எடுத்துரைக்கிறாள். தலைவன் மற்ற பரத்தையர்களுடன் கூடி இன்பம் அனுபவிப்பவன்; அவர்களோடு இன்பம் கொள்ளவே விருப்பம் கொண்டுள்ளவன் என்று காமக்கிழத்தி கூறுகிறாள்.

காமக்கிழத்தி தலைவனை நோக்கி, அவன் ஊரில் உள்ள நீர்த்துறை எப்படிப்பட்டது, அங்குள்ள மலர்கள் எவ்வண்ணம் உள்ளன என்பவற்றை யெல்லாம் உள்ளுறை உவமமாய்க் கூறி, அதன்மூலம் அவன் பண்பை உணருமாறு செய்கிறாள்.

உள்ளுறை

'தளைஅவிழ்ந்த பூஅங்கண் புணர்ந்து ஆடி வரிவண்டு வாய்சூழும் வளங்கெழு பொய்கை' : அஃதாவது பல மலர்களில் தேனுண்ட பின்பும் புது மலரை நாடி வண்டு ஓடும் என்பதாம்.

அதன்மூலம், தலைவன் வைகறைக் காலத்தும் தன் தலைவியை நாடிச் செல்லாது, பரத்தையரோடு மேலும் மேலும் இன்பம் கொள்ள விழைபவன்; தலைவி மிகுந்த வருத்தம் கொண்டிருக்கும் போது மட்டும் அவளைக் கூடி உடனே பிரியும் இயல்பினன்; இத்தகைய இயல்பு கொண்டவன் காமக்கிழத்தியை வருந்துமாறு செய்ததில் வியப்பொன்றும் இல்லை என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

குறிப்பு

இப்பாடல் காமக்கிழத்தியின் கூற்றாய் அமைந்துள்ளது. இதற்கு மாறாய்ச் சிலர் இதனைத் தலைவி கூற்றாய்க்கொண்டு தெளிவுரை கூறியிருப்பர். அது பாடலின் கூற்று விளக்கத்திற்கு மாறாய் உள்ளது. காமக்கிழத்தியின் கூற்று எனக் கொள்வதே பொருத்தமானது.

தேரும் யாழும் முறையே பாகன், பாணன் ஆகியோர் தொழிலுக்கு இன்றியமையாதவை. ஆதலின், இருவரும் தாம் தெய்வம் எனப் போற்றும் தேரையும் யாழையும் முன்னிட்டுச் சூளுரைத்தனர். செய்யும் தொழிலே தெய்வம் என்று கருதுவது மரபாகும். அத்தொழிலுக்குரிய கருவிகள் அவ்வத் தொழில் செய்வார்க்குத் தெய்வங்கள் ஆயின.

சொற்பொருள்

1. கதிர் மண்டிலம் - கதிரவன்; வியல் - அகன்ற; விசும்பு- ஆகாயம்.
2. புரிதலை - இதழ் முறுக்குண்ட உச்சிகள்; தளை அவிழ்ந்த - முறுக்கு அவிழ்ந்த; புணர்ந்து - சேர்ந்து; ஆடி - நுழைந்து.
3. வாய் சூழும் - மலரின் மேற்புறம் மொய்க்கும்.
4. துனி சிறந்து - ஊடல் மிகுந்து; இழி தரும் - வழியும்; அறல்வார - துளித்துளியாய் விழ.
5. அமர் - விரும்பும்; இறைஞ்சி - வணங்கி; அடிசேர்பு - காலடியில் விழ.
6. நனி - மிகவும்; அளித்தலின் - அருள் செய்தலால்; நகுபவள் - புன் சிரிப்புக் கொள்பவள்.
7. பனி - பனிநீர்; ஒரு திறம் - ஒரு பக்கம்; வார - ஒழுக; பாசடை - பசிய இலை.
8. தளைவிடூஉம் - கட்டவிழும்.
9. அவன் பெண்டிர் ஒரு நீ; பிறர் இல்லை.
10. தேற்றிய - சூளுரைத்த; வந்தீயான் கொல்? - வரவில்லையா?

11. ஓர் இல் - ஒரு வீட்டில்; கொணர்ந்து உய்த்தார் - கொண்டுவந்து சேர்த்தவர் (பரத்தையர்); பொறித்த - உண்டாக்கிய.
12. பாரித்து - விரும்பி; காணிய - காண்பதற்கு.
13. மடுத்து - (உன்னை) மோசம் செய்து; புகுவழி - சேருமிடம்; மறையேன் - மறைக்க மாட்டேன்.
14. சூள் - தெய்வத்தின்மீது சத்தியம் செய்தல்.
15. தன் பொய்யுண்டார் - உன் பொய் உரையை நம்பியவர்; எருத்து - கழுத்து.
16. தொடி - வளையல்; வடு - புண்ணின் தழும்பு.
17. தணத்தல் - நீங்கல், பிரிதல்; ஓராது - நினையாது.
18. தோழன் - பாணன்.
19. கணங்குழை - கனவிய குழையை அணிந்த பெண்; இழை - காதில் அணியும் அணி; நல்லவர் - பரத்தையர்; கதுப்பு அறல் - நெளிவினைக் கொண்ட மணல் பரப்பினைப் போன்ற கூந்தல்; அணை - மெத்தை; துஞ்சி - தூங்கி.
20. அணங்கு - வருத்தும் தெய்வம்; அலர் - பலர் பழிதூற்றும்; காணிய - காண்பதற்கு.
22. முயக்கம் - புணர்ச்சி.
23. அமைகுவம் - பொறுத்துக்கொள்வோம்; புக்கீமோ? - சென்று வாழ்க.
24. மாரி - மழை; பீள் - பச்சையாய் உள்ள கதிர்.
25. ஆராத் துவலை - சிறு துளி.
26. ஓர் யாட்டு - ஓர் ஆண்டு; ஒரு கால் - ஒரு முறை; வரவு - வருவது.

காமக்கிழத்தி கூற்று

கலித்தொகை 69 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகனோடு ஊடிய காமக்கிழத்தி தன் காதல் மிகுதி கூறி ஊடியவாறு கண்டு, சென்று சார்ந்த தலைமகனுடன் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் சேரியில் தங்கிப் பிறகு தனக்குரிய காமக்கிழத்தியிடம் சென்றான். அவள் அவனோடு ஊடினாள். அப்பொழுது அவள் தனது மிகுதியான காதலைக் கூறினாள். அதைக் கேட்டு அவளைத் தலைவன் நெருங்கி அமைதிப்படுத்தினான். அவள் ஊடல் தீர்ந்து கூறியது.

தரவு

போதுஅவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட,
தாதுசூழ் தாமரைத் தனிமலர்ப் புறஞ்சேர்பு,
காதல்கொள் வதுவைநாள், கலிங்கத்துள் ஒடுங்கிய
மாதர்கொள் மான்நோக்கின் மடந்தைதன் துணையாக,
ஒத்துடை அந்தணன் எரிவலம் செய்வான்போல்,
ஆய்தூவி அன்னம்தன் அணிநடைப் பெடையொடு—
மேதகத் திரிதரூஉம் மிகுபுனல் நல்ஊர!

தாழிசை

தெள்அரிச் சிலம்புஆர்ப்பத் தெருவின்கண் தாக்கி,நின்
உள்ளம்கொண்டு ஒழித்தாளைக் குறைகூறிக் கொளநின்றாய்
துணிந்தது பிறிதாகத் 'துணிவிலள் இவள்'எனப்
பணிந்தாய்போல் வந்து,ஈண்டுப் பயனில மொழிவாயோ?

பட்டுழி அறியாது, பாகனைத் தேரொடும்
விட்டு,அவள் வரல்நோக்கி, விருந்தேற்றுக் கொளநின்றாய்
நெஞ்சத்த பிறவாக, 'நிறையிலள் இவள்'என
வஞ்சத்தான் வந்து,ஈங்கு வலிஅலைத் தீவாயோ?

இணர்ததை தண்காவின், இயன்றநின் குறிவந்தாள்
புணர்வினில் புகன்று,ஆங்கே புனலாடப் பண்ணினாய்
தருக்கிய பிறவாகத் 'தன்னிலள் இவள்'எனச்
செருக்கினால் வந்து,ஈங்குச் சொல்உகுத் தீவாயோ?

எனவாங்கு—

சுரிதகம்

தருக்கேம், பெரும!நின் நல்கல் விருப்புற்றுத்
தாழ்ந்தாய்போல் வந்து, தகவுஇல செய்யாது,
சூழ்ந்தவை செய்து,மற்று எம்மையும் உள்ளுவாய்,
வீழ்ந்தார் விருப்புஅற்றக் கால்.

தெளிவுரை

காமக்கிழத்தி (தலைவனிடம்) :

“காதலர் இருவரும் விரும்பும் திருமண நாளில், காதல் கொண்ட மருண்ட மான் நோக்கினைக் கொண்ட ஆடைக்குள் வெட்கத்தால் ஒடுங்கியவளாய் மடந்தை அந்தணன் மந்திரம் ஓத, துணைவன் கைப்பற்றி அக்கினியை வலம் வந்தாள். அக்காட்சி, குளிர்ச்சி பொருந்திய நீரைக் கொண்ட குளத்தில் புதிதாய்ப் பூத்து, தாது நிறையப் பெற்றுத் தனியாய் நின்ற ஒரு தாமரைக்குப் பக்கமாய் ஓர் அன்னம், தன் அழகுநடை கொண்ட பெடையொடு மேன்மையுடன் வலம் வந்துகொண்டிருப்பதை ஒத்திருக்கும். இத்தகைய காட்சிக்குரிய நீர்வளம் நிறைந்த ஊரினை உடையவனே!

“காற்சிலம்பு ஒலிக்க, தெருவில் வந்து நின்ற பரத்தை ஒருத்தி, தன் அழகினால் உன்னைக் கவர்ந்து, உன் உள்ளத்தைத் தன் வசப்படுத்திக்கொண்டு தன் வீட்டினுள் சென்றுவிட்டாள். அவளை எப்படி அடைவது என்று எண்ணிக்கொண்டிருக்கிறாய். அதுபற்றி என்னிடம் சொன்னால் நான் ஆற்ற மாட்டேன் என்று கருதி, ஏதோ என்னிடம் அன்பு கொண்டவன்போலப் பணிந்து வந்து (அவளிடம் கூற வேண்டிய) பயனற்ற உன் காதல் வார்த்தைகளை என்னிடம் கூறுகின்றாயா?

“நீ ஒருத்தியைக் காதலித்து, அவள்மீது காமம் கொண்டு, அவளை அடைய உன் பாகனை அவளிடம் தூதாய் அனுப்பியுள்ளதை நான் அறிவேன். அவளை எதிர்பார்த்து ஏக்கம் கொண்டுள்ளாய். அத்தகைய நெஞ்சம் கொண்ட நீ என்னை அணுகி, நான் பொறுத்துக்கொள்ளும் ஆற்றலற்றவள் என்று கருதி, என் உள்ளத்து உறுதியைத் தகர்த்துவிடக் கருதினால், அஃது உன்னால் இயலுமா?

“மலர்கள் நிறைந்து மணம் வீசும் பூஞ்சோலையில் நீ விரும்பியவண்ணம் வந்து இன்பமளித்தபோது, நீ அவளிடம் கூறியவற்றையெல்லாம் அவள் மறந்துவிடச் செய்ய, அவளையும் நீராடச்செய்து அனுப்பிவிட்டாய். நீ நடப்பதோ வேறு விதம்.

இருந்தும், 'இவள் தனக்கென்ற நெஞ்சம் கொண்டவள் அல்லள்' எனக் கருதி இங்கு வந்து செருக்குடன் பேசுகின்றாய்! உன் எண்ணம் வெற்றி பெறும் என்றா கருதுகின்றாய்?

"நீ என்னை விரும்பி வந்துள்ளாய் என்று நான் நினைக்குமாறு பணிவுடையவன்போலப் பாசாங்கு செய்கிறாய் என்பதை நான் அறிவேன். உன் உயர்நிலைக்கு ஊறுதரும் செயல் எதையும் செய்து உன்னை நீயே தாழ்த்திக்கொள்ளாதே.

"நீ உன் எண்ணப்படி, நீ அனுபவிக்க வேண்டிய இன்பங்களை யெல்லாம் உன் பரத்தையரிடம் அனுபவித்து முடித்து உன் ஆசையற்ற பிறகுதான் நீ என்னை நினைப்பாய் என்பதையும் நான் நன்றாய் அறிவேன்" என்று காமக்கிழத்தி தலைவனிடம் கூறினாள்.

கருத்து

தலைவ! உன் காம இச்சையை உன் பரத்தையிடம் அனுபவித்து முடித்த பின்னரே என்னை நினைத்து வருவாய் என்பதை அறிவேனாதலின், 'நீ என் ஒருத்திக்கே உரியவனென்று செருக்கடைய மாட்டேன்' என்று கூறிய வளாய்க் காமக்கிழத்தி ஊடல் கொள்கிறாள்.

விளக்கம்

தலைவன், பரத்தை ஒருத்தியின் அழகுத் தோற்றத்தைக் கண்டு, அவள் வலையில் சிக்கி, அவளை அடைய வேண்டும் என்ற ஆர்வம் பொங்கும் நிலையில், அவளை அடைவதற்கான ஏற்பாடுகளைத் தன் பாகன்மூலம் செய்துவிட்டுத் தன் காமக் கிழத்தியை அணுகுகின்றான்; பணிவு கொண்டவன் போலக் குறையிரந்து அவளோடு கலவி கொள்ள விரும்புகின்றான். அவள், 'உன்னைப்பற்றிய செய்திகளையெல்லாம் அறிவேன். ஏன் இவ்வாறெல்லாம் செயல்படுகிறாய்? இதனால், நீ என் ஒருத்திக்கே உரியவனென்று செருக்குக் கொண்டிட மாட்டேன்' எனக் கூறி ஊடுகின்றாள்.

குறிப்பு

திருமண நடைமுறைபற்றிய செய்திகள் சங்க இலக்கியத்தில் அரிதாகவே காணப்படுகின்றன. அகநானூற்றில் எண் 83, 136 ஆகிய இரு பாடல்களில்

மட்டும் திருமணம்பற்றிய செய்திகள் தென்படுகின்றன. இந்தக் கலித்தொகைப் பாடல் ஒன்றில் மட்டுமே திருமணத்தில் தீயை வலம் வருதல்பற்றிக் கூறப்பட்டுள்ளது. இச்சங்கப் பாடலில் அன்றி வேறு எப்பாடலிலும் அந்தணன் மந்திரம் ஓதுதல்பற்றிய செய்தி இல்லை. திருமணச் செய்தி இடம் பெற்றுள்ள அகநானூற்றுப் பாடல்களிலும் அந்தணர் மந்திரம் ஓதுவதுபற்றியோ, தீ வலம் வருவதுபற்றியோ குறிப்பிடப்பட வில்லை.

சொற்பொருள்

1. போது - மலரும் பருவத்து அரும்பு; அவிழ் - மலரும்; பனி - குளிர்ந்த; பொய்கை - குளம்; புதுவது - புதிதான ஒன்று.
2. தனிமலர் - தனித்து நின்ற மலர்; புறஞ்சேர்பு - பக்கத்திலே சென்றடைந்த.
3. வதுவை நாள் - திருமண நாள்; கலிங்கம் - (மேல்) ஆடை; ஒடுங்கிய - அடங்கிய.
4. மாதர் - காதல், அழகு.
5. ஓத்துடை - மந்திரம் கற்ற; எரி - தீ.
6. ஆய்தூவி - அழகான இறகு; அணி நடை - அழகான நடை; பெடை - பெண் அன்னம்.
7. மேதக - பெருமையாக; திரிதரூஉம் - சுற்றி வரும்.
8. தெள் - தெளிந்த; அரி - உள்ளிடு பரல்; ஆர்ப்ப - ஒலிக்க; தாக்கி - எதிர்ப்பட்டு.
9. ஒழித்தாள் - மறைந்தவள்.
10. துணிந்தது பிறிது ஆக - நீ அறுதியிட்டு வந்த காரியம் வேறொன்றாய் இருக்க.
11. ஈண்டு - இங்கு.
12. பட்டுழி - சென்ற இடம்.
13. விருந்தேற்றுக் கொள - அவள் உன்னை விருந்தாய் ஏற்றுக்கொள் வதற்காக.
14. நெஞ்சத்த பிறவாக - உன் நெஞ்சம் வேறொருத்தியைக் கருதியிருக்க.
15. வலி - உறுதி; அலைத்தீவாயோ? - தகர்த்துவிடுவாயோ?
16. இணர் ததை - பூங்கொத்துகள் நிறைந்த; தண்கா - குளிர்ந்த சோலை.
18. தருக்கல் - ஆணவங்கொள்ளல்; தன்இலள் - தனக்கென ஓர் இயல்பினைக் கொண்டவள் அல்லள்.

19. செருக்கு - அகங்காரம்; உகுத்தல் - வீணே கொட்டுதல்.
21. நல்கல் - அருளுதல்.
22. தாழ்ந்தாய் - தாழ்ந்தவன்; தகவில - பொருத்தமில்லாத.
23. சூழ்ந்தவை - உள்ளம் விரும்பியதை.
24. வீழ்ந்தார் - (நீ) விருப்பப்பட்டவர்; அற்றக்கால் - நீங்கிய பொழுது.

காமக்கிழத்தி கூற்று

கலித்தொகை 68 **மருதனிள நாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் சேரியினின்றும் வந்த தலைமகனோடு ஊடிய காமக்கிழத்தி தன் காதல் மிகுதி கூறி ஊடியவாறு கண்டு, சென்று சார்ந்த தலைமகனுடன் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் சேரியில் தங்கிப் பிறகு தனக்குரிய காமக் கிழத்தியிடம் சென்றான். அவள் அவனோடு ஊடினாள். அப்பொழுது அவள் தனது மிகுதியான காதலைக் கூறினாள். அதைக் கேட்ட தலைவன் அவளை நெருங்கி அமைதிப்படுத்தினான். அவள் ஊடல் தீர்ந்து கூறியது.

தரவு

பொதுமொழி பிறர்க்குஇன்றி முழுதாளும் செல்வர்க்கு
மதிமொழி இடல்மாலை வினைவர்போல் வல்லவர்
செதுமொழி சீத்த செவிசெறு வாக,
முதுமொழி நீராப் புலன்நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும், புரிசைசூழ் புனல்ஊர!

தாழிசை

'ஊரன்மன் உரன்அல்லன், நமக்கு'என்ன உடன்வாளாது,
ஒரூர்தொக்கு இருந்தநின் பெண்டிருள் நேராகிக்
களையாநின் குறிவந்து,எம் கதவஞ்சேர்ந்து அசைத்தகை
வளையின்வாய் விடல்மாலை மகளிரை நோவேமோ?

'கேள்அலன் நமக்குஅவன்; குறுகன்மின்'எனமற்றுஎம்
தோளொடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்;

'ஊடியார் நலம்தேம்ப, ஒடியெறிந்து அவர்வயின்
மால்தீர்க்கும் அவன்மார்பு'என்று எழுந்தசொல் நோவேமோ?

முகைவாய்த்த முலைபாயக் குழைந்தநின் தார்எள்ள,
வகைவரிச் செப்பினுள் வைகிய கோதையேம்;
சேரியாற் சென்று,நீ சேர்ந்தஇல் வினாயினன்,
தேரோடு திரிதரும் பாகனைப் பழிப்பேமோ?

ஒலிகொண்ட சும்மையான் மணமனை குறித்து,எம்இல்,
'பொலிக'எனப் புகுந்தநின் புலையனைக் கண்டயாம்;

எனவாங்கு–

சுரிதகம்

நனவினான் வேறாகும் வேளா முயக்கம்,
மனைவரின், பெற்றஉவந்து, மற்றுஎம்தோள் வாட,
இனையர் எனஉணர்ந்தார்' என்றுஏக்கற்று, ஆங்குக்
கனவினான் எய்திய செல்வத்து அனையதே
ஐய! எமக்குநின் மார்பு.

தெளிவுரை

"இவ்வுலகம் பிறர்க்கும் பொது என்று சொல்லுதற்கிடமின்றி உலகம் முழுவதையும் தாமே ஆளும் அரசர்க்கு அறிவுரை கூறுபவர், அமைச்சர்கள்; அவ்வமைச்சர் போன்ற சான்றோரின் தீமையில்லாச் சொற்களைக் கேட்கும் செவியை வயலாகவும், முன்னோரின் பாடல்களைத் தண்ணீராகவும் கொண்டு, புலவர்கள் தமது அறிவு மிக்க நாவன்மை எனும் உழவால் புதிய கவிதைப்பயிரைப் படைக்கின்றனர். அப்புலவர்களின் புதிய கவிதைகளைக் கூடியிருந்து சுவைக்கும் மக்களைக் கொண்ட, மதில் சூழ்ந்த ஊருக்குத் (மதுரையின்) தலைவனே!'

" 'ஊரன் நமக்கு வேண்டியவன் அல்லன்' என்று உன் பரத்தையர் ஒருவரோடு ஒருவர் கூறுவர். அவ்வாறு கூறினும், அவர்கள் பலரும் உன்னை விரும்புகின்றனர். அவர்களுக்கென்று தனியாக ஓர் ஊரையே அமைத்துத் தரவேண்டிய அளவுக்கு அவர்கள் ஏராளமானவராய் உள்ளனர். நானும் அவர்களுள் ஒருத்தி என்று என்னைப்பற்றி நீ முடிவு செய்கிறாயா? அவர்களுள் சிலர், நீ சொன்னதை மறந்து, வேறு எங்கோ தேடி

உன்னைக் காணாமல் என் வீட்டுக்கதவையும் வந்து தட்டினர்; வளையல் ஒலிக்க, தம் வரவை அறிவிக்கும் அப்பரத்தையரை நான் நொந்துகொள்வதால் என்ன பயன் உண்டாகப்போகிறது?'

" 'எனக்கு அவனோடு இப்போது உறவில்லை; இனி அவனைத் தேடி இங்கு வாராதீர்கள்' என்று அவர்களுக்கு உரைத்துவிட்டு, உன் பிரிவால் மெலிந்த தோளோடு வாடுகின்ற நெஞ்சம் கொண்டவள்தானே நான்! நான் உன்னோடு ஊடல் கொண்டிருக்கிறேனாம். நீ என்னை உதறிவிட்டுப் பரத்தையரிடம் சென்று இன்பம் நுகர்கிறாயாம்; அதனால் என் அழகெல்லாம் குலைந்துவிட்டதாம். இவ்வாறு ஊரார் கூறும் சொல்லை எண்ணி நொந்துகொள்வதைத் தவிர வேறு என்ன செய்வது?

"மாலையைக் கூந்தலில் சூடினால் பயன் தரும்; செப்பினுள் வைத்து மூடி வைத்தால் அம்மாலை வாடியழியத்தானே செய்யும்! பரத்தையரின் மொட்டுகள் போன்ற மார்பகங்கள் பதிந்து உன் மார்பு மாலை குழைந்துவிட்டது. அஃது என்னைப் பார்த்து எள்ளி நகையாடுகிறது. நான் என்ன செய்வேன்? செப்பிலிட்ட மாலையைப் போல நானும் வாடி அழிய வேண்டியவள்தானா?

"உன் பாணன் பரத்தையர் ஒவ்வொருவர் வீட்டிற்கும் போய் நீ அங்கே இருக்கின்றாயா என்று கேட்கிறான். அவனைப்பற்றிக் குறை கூற எனக்கு என்ன உரிமை இருக்கிறது? உன்னைப்பற்றிப் பலரும் இங்கு வந்து என்னிடம் பேசுகின்றனர். இத்தகைய ஆரவாரத்தைக் கண்ட உன் பாணன், 'இஃது ஓர் மணமனை' என்றெண்ணிப் 'பொலிக பொலிக' என்று வாழ்த்துகிறான். இந்த அவலத்தை எண்ணி நான் நொந்துகொள்வதைத் தவிர வேறு என்ன செய்ய இயலும்?

"நீ என் வீட்டிற்கு வரும்போது கூடி மகிழ்வேன். நீ பிரிந்ததும் என் தோள்கள் மெலிகின்றன; நான் வாடுகின்றேன். என் நிலையை அயலவரும் காண்கின்றனரே என்று ஏங்குவேன். அவ்வேளையில் நீயும் வந்து தழுவுகின்றாய். நனவிலே உன் மார்பைத் தழுவினாலுங்கூட, அது கனவிற் காணும் இன்பம்போலச் சற்றும் நிலையாததுதானே?"

இவ்வாறு, காமக்கிழத்தி தலைவனிடம் கூறித் தன்னைத் தானே நொந்துகொள்கிறாள்.

கருத்து

'உன்னிடம் காணும் இன்பம் கனவில் காண்பதுபோல நிலையற்றது' எனக் காமக்கிழத்தி தலைவனைக் குறை கூறினாள்.

விளக்கம்

பரத்தையர் பலரை நுகரும் இயல்புள்ளவன், தலைவன். காமக்கிழத்தி வாழும் இல்லத்தை அடைந்தபோது அவள் அவனிடம் ஊடல் கொண்டாள். அவன் அவளை நெருங்கி, ஊடலைத் தீர்க்க முயல்கின்றான். அப்போது அவள், 'இது நனவில் நிகழ்வதாயினும் நிலையானது அன்று; ஆதலால், கனவில் பெற்ற செல்வந்தான் நீ தரும் இன்பம்' என்று கூறித் தன் நிலை குறித்து வருந்துகிறாள்.

சொற்பொருள்

1. பொது மொழி - யாவர்க்கும் பொது என்று சொல்லப்படுதல்; செல்வர் - அரசர்.
2. மதிமொழி - அறிவுரை; வினைவர் - அமைச்சர்; வல்லவர் - புலவர்.
3. செதுமொழி - பொல்லாச் சொல்; *சீத்தல்* - நீக்குதல்; செறு - வயல்.
4. முதுமொழி - மூத்த மொழியாகிய தமிழ்; புலன் - அறிவு; நா உழவர் - புலவர்.
5. புதுமொழி - புதிய புதிய கருத்துகள்; கூட்டுண்ணும் - பெருமளவில் பெற்று மகிழும்; புரிசை - கோட்டை.
6. உரன் அல்லன் - உறுதிவாய்ந்தவன் அல்லன்; உடன் வாளாது - ஒருவர் போல் ஒருவர் பேசாமல்.
7. தொக்கு இருந்த - கூடியிருந்த; பெண்டிர் - பரத்தையர்; நேராகி - ஒப்பாகி.
8. களையா - களைந்து; கதவம் - கதவு; அசைத்த - தட்டிய.
9. வளையின் வாய்விடல் - வளையல் ஒலி; நோவேமோ - நொந்து கொள்வேனா?
10. கேள் அலன் - உறவு அல்லன்; குறுகன்மின் - வாராதீர்.
11. பகைபட்டு - வாடுகின்ற.
12. நலம் தேம்ப - அழகு அழிய; ஒடியெறிந்து - உதறியெறிந்துவிட்டு.

13. மால் - மயக்கம், வருத்தம்.
14. முகை - மொட்டு; குழைந்த - அழிந்த; தார் - மாலை.
15. வைகிய - வைக்கப்பட்ட.
16. வினாயினன் - வினவினான்.
18. சும்மை - ஆரவாரம்; மணமனை - திருமண வீடு.
19. பொலிக - மங்கலம் பெறுக; புலையன் - பாணன்.
21. வேளா முயக்கம் - விருப்பமில்லாத புணர்ச்சி.
23. இனையர் - இத்தன்மையர்.
24. அனையதே - போன்றதே.

காமக்கிழத்தி கூற்று

கலித்தொகை 78 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் சேரியிற்சென்று வந்த தலைமகனோடு ஊடிய காமக்கிழத்தி ஊடல் தீர்கின்றாள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் சேரிக்குச் சென்று திரும்பி வந்த பொழுது காமக்கிழத்தி அவனொடு ஊடினாள்; பின்னர், ஊடல் தீர்ந்து கூறியது.

தரவு

பன்மலர்ப் பழனத்த பாசடைத் தாமரை
இன்மலர் இமிர்புஊதும் துணைபுணர் இருந்தும்பி,
உண்துறை உடைந்தபூப் புனல்சாய்ப்பப், புலந்துஊடிப்
பண்புடை நன்னாட்டுப் பகைதலை வந்தென,
அதுகைவிட்டு அகன்றுஒரீஇ, காக்கிற்பான் குடைநீழல்
பதிபடர்ந்து, இறைகொள்ளும் குடிபோலப் பிறிதும்ஒரு
பொய்கைதேர்ந்து அலமரும் பொழுதினான், மொய்தப
இறைபகை தணிப்பஅக் குடிபதிப் பெயர்ந்தாங்கு
நிறைபுனல் நீங்கவந்து, அத்தும்பி அம்மலர்ப்
பறைதவிர்பு அசைவிடூஉம் பாய்புனல் நல்ஊர!

தாழிசை

'நீங்குங்கால் நிறம்சாய்ந்து, புணருங்கால் புகழ்பூத்து,
நாம்கொண்ட குறிப்பு,இவள் நலம்'என்னும் தகையோதான்—
எரிஇதழ் சோர்ந்துஉக ஏதிலார்ப் புணர்ந்தமை
கரிகூறும் கண்ணியை, ஈங்குஎம்இல் வருவதை?

'சுடர்நோக்கி மலர்ந்து,ஆங்கே படின்கூம்பும் மலர்போல்,என்
தொடர்நீப்பின், தொகும்இவள் நலம்'என்னும் தகையோதான்—
அலர்நாணிக் கரந்தநோய் கைம்மிகப் பிறர்கூந்தல்
மலர்நாறும் மார்பினை, ஈங்குஎம்இல் வருவதை?

பெயின்நந்தி, வறப்பின்சாம் புலத்திற்குப் பெயல்போல்,யான்
செலின்நந்தி, செறின்சாம்பும், இவள்'என்னும் தகையோதான்—
முடியுற்ற கோதைபோல் யாம்வாட, ஏதிலார்
தொடிஉற்ற வடுக்காட்டி, ஈங்குஎம்இல் வருவதை?

ஆங்க—

சுரிதகம்

ஐய அமைந்தன்று; அனைத்துஆக; புக்கீமோ,
வெய்யாரும் வீழ்வாரும் வேறாகக் கையின்
முகைமலர்ந் தன்ன முயக்கின் தகையின்றே,
தண்பனி வைகல் எமக்கு.

தெளிவுரை

"பலவகை மலர்களும் விளங்கிய வயல்களிலே, பசிய இலைகளைக் கொண்ட தாமரையின் இனிய மலர்களிலே ஆரவாரத்துடன் ஊதி ஊதித் தேனுண்டு தன் துணையோடு மகிழ்ந்திருந்தது, ஒரு கருவண்டு. வயல்களுக்கு நீரூட்டிக் கொண் டிருந்த பொய்கை உடைத்துக்கொள்ள, நீரெல்லாம் வயலுள் பாய்ந்து தாமரை மலர்களெல்லாம் சாய்ந்து அமிழ்ந்தன. அதனால், வேறொரு பொய்கையைத் தேடி அலைந்து வருந்தியது, அவ்வண்டு. வயல்களிலே பெருகியிருந்த வெள்ளம் வடிய, வண்டு மீண்டும் அவ்வயல்களுக்கே வந்து, பறப்பதைக் கைவிட்டு அத்தாமரை மலர்களிலேயே தங்கி இளைப்பாறத் தொடங்கிற்று. இக்காட்சி, ஒரு நல்ல நாட்டில் குடியிருந்த மக்கள் அந் நாட்டின்மீது பகைவர் பகையெடுத்து வந்த பொழுது, வாழும்

ஊரை விட்டு வேறு நாடு சென்று வாழ்ந்திருந்து, அந்நாட்டை விட்டுப் பகை மன்னன் விரட்டியடிக்கப்பட்ட பின்னர், மீண்டும் தன் நாட்டிற்குத் திரும்பி வந்து வாழ்வதைப் போன்றுள்ளது.

"எரிபோன்ற செவ்விதழ்கள் சோர்ந்து உதிருமாறு நீ அயல் மகளிராய பரத்தையரோடு கலந்திருந்தமைக்குச் சான்று பகரும் கண்ணியுடனே இங்கே எம் வீட்டிற்கும் வருகின்றாய். நீ இவ்வாறு செய்வது, 'நாம் நீங்கினால் நிறம் கெடுகிறாள்; வந்து கலந்தால் மீண்டும் அழகு பெறுகிறாள்; இவள் அழகெல்லாம் நாம் கொள்ளும் எண்ணத்தைப் பொறுத்தே' என்று நீ கருதும் மதிப்பீட்டின் அடிப்படையிலா?

"முதலில் ஊராரின் பழிச்சொல்லுக்கு நாணினாய்; காலப் போக்கில் உன் காம மிகுதியால் ஒழுக்கக் கட்டுப்பாட்டைக் கடந்தாய். இப்பொழுது நாணாமல் வெளிப்படையாகவே பரத்தை ஒழுக்கம் மேற்கொண்டுள்ளாய். பரத்தையர் கூந்தலில் உள்ள மலரின் மணம் நீங்காத மார்போடு என் மனைக்கு வருகிறாய். அவ்வாறு வருவது, 'சூரியனைப் பார்த்து மலர்ந்து, அவன் மறைந்துவிட்டால் கூம்பிவிடும் தாமரை மலர்போல இவள் அழகு என் சேர்க்கையால் மலர்ந்து என் பிரிவால் குன்றும்' என நீ கருதும் மதிப்பீட்டின் அடிப்படையிலா?

"கூந்தலில் முடிந்து களைந்த மாலைபோல நான் மனம் வாட, பரத்தையரின் வளையல் அழுத்தியதால் ஏற்பட்ட வடுவைக் காட்டிக்கொண்டு இங்கே நீ என் வீட்டிற்கு வருகிறாய். நீ இவ்வாறு வருவது, 'தான் பெய்வது பொய்த்தால் வயல் தரிசாகவும், பெய்தால் வளமாகவும் செய்திடும் மழைபோல, இவள் நாம் பிரிந்தால் வாடியும், கூடினால் அழகினைப் பெற்றும் இருப்பாள்' என்று நீ கருதும் மதிப்பீட்டின் அடிப்படையிலா?

"அண்ணலே! அவ்வாறே ஆகுக! நீ விரும்பும் பரத்தையரும், உம்மை விரும்பும் பரத்தையரும் உம்மோடு உறவின்றி ஆகும் வண்ணம் இங்கு நீ நிற்க வேண்டா. குளிர் காலத்திலேகூடத் தனித்தே வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்டேன். மொட்டு, தானாய் மலர்ந்திட வேண்டும்; கையால் மலரச் செய்தனால் மணம் உண்டாகாது. அன்பு இல்லாத நீ என்னைத் தழுவினாலும்

பயனில்லை. அஃது உனக்கோ எனக்கோ இன்பம் தாராது" என்று காமக்கிழத்தி கூறினாள்.

கருத்து

மற்ற பரத்தையர்களிடம் சென்று இன்பம் நுகர்ந்த தலைவன் தன் காமக்கிழத்தியைக் காணச் சென்றான். அவனிடம் ஊடல் கொண்ட அக் காமக்கிழத்தி, 'நீ இன்றித் தனித்து வாழ நான் பழகிவிட்டேன்; அன்பு இல்லாது நீ தழுவுவதில் பயனில்லை' என்று அவன் குறையைக் கூறிப் பின்னர் ஊடலை நீக்கினாள்.

குறிப்பு

இப்பாடல் காமக்கிழத்தியின் கூற்றாய் அமைந்துள்ளது என நச்சினார்க் கினியர் எனும் சிறந்த உரையாசிரியர் கூறியுள்ளார். இப்பாடலைச் சிலர் தலைவி கூற்றாய்க் கொண்டு விளக்கியுள்ளனர். எனினும், காமக்கிழத்தியின் கூற்றாய்க் கொள்வதே பொருத்தமானது.

பனிக்காலத்துத் தனிமை தன்னை வருத்துவதைக் காமக்கிழத்தி தலைவனிடம் குறிப்பாய்க் கூறியதால் காமக்கிழத்தி தன்னை ஏற்றுக் கொள்ளுவாள் என்றும், ஊடலை விட்டுவிடுவாள் என்றும் தலைவன் கருதினான் என்பது பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. பழனம் - வயல்; பாசடை - பசிய இலை.
2. இமிர்பு - மொய்த்தல், ஒலித்தல்; இரு - கரிய.
3. பூப் புனல் சாய்ப்ப - பூக்களை நீர் சாய்த்து அமிழ்த்த.
4. பகை - பகை அரசன்; தலைவந்தென - படையெடுத்து வர.
5. அதுகைவிட்டு - அந்நாட்டை விட்டு; ஓரீஇ - நீங்கி; காக்கிற்பான் - போரில் வென்று காக்கும் அரசன்.
6. பதி - நாடு; படர்ந்து - சென்று; இறை கொள்ளும் - தங்கும்; குடிபோல - குடிமக்கள் போல.
7. அலமரல் - வருந்துதல்; மொய்தப - பகைவன் வலிமை கெடுமாறு.
8. இறை பகை தணிப்ப - தம் அரசன் பகைவரை வென்று ஓட்ட; அக்குடி - முன்பு வெளியேறிய அக்குடிமக்கள்; பதிப்பெயர்ந் தாங்கு - தம் பழைய இடத்திற்கு வந்ததுபோல.
10. பறை தவிர்பு - பறத்தலைக் கைவிட்டு; அசைவு - வருத்தம்.
11. நிறம் சாய்ந்து - ஒளி குன்றி.

12. இவள்நலம் நாம் கொண்ட குறிப்பு; தகை - மதிப்பீடு.
13. ஏதிலார் - அயலவராகிய பரத்தையர்.
14. கரி - சாட்சி; வருவதை - வருவது.
15. சுடர் - கதிரவன்; படின் - மறையின்.
16. இவள்நலம் - இவள் அழகு; தொகும் - மறையும்.
17. அலர் - பழிச்சொல்; கரந்த - மறைத்த; கைம்மிக - அளவிறந்து பெருக; பிறர் - பரத்தையர்.
19. நந்தி - தழைத்து; வறப்பின் - வறட்சியுற்றால்; புலம் - நிலம்; பெயல் - மழை.
20. செறின் - (செல்லாமல்) வருத்தினால்; சாம்பும் - வாடும்.
24. அமைந்தன்று - பொருத்தந்தான்; புக்கீமோ - போய் வருக.
25. வெய்யார் - விரும்பப்படுபவர்; வீழ்வார் - விரும்புவார்.
26. முயக்கம் - தழுவுதல்; தகை இன்று - பொருத்தமுடையது அன்று.

காமக்கிழத்தி கூற்று

கலித்தொகை 90 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

'புல்லுதன் மயக்கும் புலவிக்கண்ணும்' என்பதனால், தலைமகன் புலப்படப் பரத்தையரிடத்து ஒழுகாது மறைந்தொழுகி, வந்து நின்றவனுடன் காமக்கிழத்தி ஊடிச் சொல்லித் தலைமகன் ஆற்றாமை கண்டு, தன் ஆற்றாமையுஞ் சொல்லி, ஊடல் தீர்ந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையரோடு தான் கொண்டிருந்த உறவைப் புலப்படாமல் மறைத்துத் தன் காமக்கிழத்தியைக் காண வந்தான். அவனோடு காமக்கிழத்தி ஊடல் கொண்டு பேசினாள். பின்னர்த் தலைவன் பிரிவாற்றாமையால் வருந்துவதைக் கண்டு, அவ்வகையில் தன் துன்பத்தையும் கூறி ஊடல் தீர்ந்தது.

காமக்கிழத்தி

கண்டேன்,நின் மாயம் களவாதல்; பொய்ந்நகா,
மண்டாத சொல்லித் தொடாஅல்; தொடீஇயநின்
பெண்டிர் உளர்மன்னோ, ஈங்கு?

தலைவன்

ஒண்தொடி!நீ கண்டது எவனோ தவறு?

காமக்கிழத்தி

கண்டது, நோயும் வடுவும் கரந்து, மகிழ்செருக்கிப்
பாடு பெயல்நின்ற பானாள் இரவில்,
தொடிபொலி தோளும், முலையும், கதுப்பும்,
வடிவார் குழையும், இழையும், பொறையா,
ஒடிவது போலும் நுசுப்போடு, அடிதளரா,
ஆராக் கவவின் ஒருத்திவந்து, அல்கல்தன்
சீரார் ஞெகிழம் சிலம்பச் சிவந்து,நின்
போரார் கதவம் மிதித்தது அமையுமோ?

ஆயிழை ஆர்க்கும் ஒலிகேளா, அவ்எதிர்
தாழாது எழுந்துநீ சென்றது அமையுமோ?
மாறாள் சினைஇ, அவள்ஆங்கே, நின்மார்பில்
நாறிணர்ப் பைந்தார் பரிந்தது அமையுமோ?
தேறிநீ; தீயேன் அலேன்,என்று மற்றுஅவள்
சீறடி தோயா இறுத்தது அமையுமோ?

கூறு இனிக் காயேமோ, யாம்?

தலைவன்

தேறின் பிறவும் தவறிலேன் யான்
அல்கல் கனவுகொல் நீகண் டது?

காமக்கிழத்தி

'கனைபெயல் தண்துளி வீசும் பொழுதில் குறிவந்தாள்
கண்ட கனவு'எனக் காணாது, மாறுற்றுப்
பண்டைய அல்ல,நின் பொய்ச்சூள், நினக்கு;எல்லா!
நின்றாய்;நின் புக்கில் பல.

தலைவன்

மென்தோளாய்! நல்குநின் நல்,எழில் உண்கு.

காமக்கிழத்தி

ஏடா! குறையுற்று நீஎம் உரையல்!நின் தீமை
பொறைஆற்றேம் என்றல் பெறுதுமோ யாழ!
நிறையாற்றா நெஞ்சுடை யேம்.

தெளிவுரை

தலைவன் காமக்கிழத்தியை நெருங்கி அவளைத் தொடச் சென்றபோது, அவள் தலைவனை நோக்கிக் கூறுகிறாள்:

காமக்கிழத்தி : *நீ செய்கின்ற மாயங்களெல்லாம் திருட்டுத்தனம் என்பதை நன்றாகவே அறிவேன். பொய்ச் சிரிப்புச் சிரிக்காதே. நான் விரும்பாதவற்றைச் சொல்லி என்னைத் தொடாதே. நீ தொட்டு இன்புற உன் பெண்டிர் இங்கு எவரும் இல்லர். (நீ இவ்விடம் விட்டு நீங்கு.)*

தலைவன் : *ஒளியுடன் கூடிய வளையலை அணிந்தவளே! நீ என்னிடம் என்ன தவறு கண்டாய்?*

காமக்கிழத்தி : *என்ன தவறு கண்டேன் என்றா கேட்கிறாய்? சொல்கிறேன், கேள்.*

உன்னால் நான் பெற்ற காமநோயையும், ஊரார் கூறிய பழிச் சொற்களையும் மறைத்துக்கொண்டேன். அந்நிலையிலும் ஒரு நாள், வாடிய பயிரைக் காக்கும் மழை போல நள்ளிரவில் நீ வந்து எனக்கு அருள் புரிந்தாய். அதனால் மகிழ்ச்சி மிகுந்தவளாய் இருந்தேன். அந்நேரத்தில் யாரோ ஒருத்தி வந்தாள். அவள் தொடியணிந்த பொலிவு கொண்ட தோள்களையும், அழகிய மார்பகங்களையும், கருங்கூந்தலையும்; நல்ல வடிவமைந்த காதணிகளையும், அணிகளைச் சுமக்க இயலாத, வஞ்சிக்கொடி போன்று ஒடிந்துவிடும் இடையையும் கொண்டவளாய் இருந்தாள். அளவு கடந்த முயக்கத்தால் தளர்வு கொண்டவள் போலக் காணப்பட்டாள். அவள் தன் காற்சிலம்பு ஒலிக்குமாறு நடந்து வந்து, பெருங்கதவினைக் கொண்ட உன் வீட்டு வாயிலை

மிதித்து, சினத்துடன் உன்னை அழைத்தாள். அஃது உனக்குத் தவறாகப் படவில்லையா?

ஆராய்ந்தெடுத்த அணிகலன்களைப் பூண்ட அந்த அழகி ஆரவாரிக்கும் ஒலியைக் கேட்டுக் காலம் நீட்டிக்காமல் உடனே எழுந்து சென்று அவளை அணுகினாயே! அஃது உனக்குத் தவறாகப் படவில்லையா?

நீ அவளை அணுகியும் தன் சினம் தணியாதவளாய் உன் மார்பில் கிடந்த மணம் நிறைந்த மாலையை அறுத்து வீசினாளே! அஃது உனக்குத் தவறாகப் படவில்லையா?

பின்னர் அவளிடம், 'நான் குற்றமற்றவன்; நீ இதனை ஆராய்ந்து அறிக' என்று சொல்லி அவளது சிறிய பாதங்களைத் தொட்டாயே! அஃது உனக்குத் தவறாகப் படவில்லையா?

இவற்றையெல்லாம் நான் சொல்லக் கேட்ட பின்னர், இப்போது சொல், நான் உன்னைக் கோபித்தது தவறா?" (இவ்வாறு கேட்ட காமக்கிழத்தியை நோக்கி)

தலைவன் : *கூறியவை அனைத்தும் இரவு நேரத்தில் நீ கண்ட கனவாகத்தான் இருக்க வேண்டும். நீ ஆராய்ந்து பார்த்தால் நான் எக்குற்றமும் இழைத்தவன் அல்லன் என்பதை உணர்வாய்.*

காமக்கிழத்தி : *அன்றைக்கு நல்ல மழை பொழிந்துகொண் டிருந்த வேளையில், குறியிடத்திற்கு உன்னைத் தேடி வந்த ஒருத்தியை நானே நேரில் கண்டேன். அதனையும் கனவு என்கின்றாயா? நான் கண்ணால் கண்டதையே இப்படித் திருத்தி மாற்றிக் கூறுகிறாயே! நீ உன் பழைய நிலையில் இப்போது இல்லை. ஏடா! உன் பொய்ச்சூள் உனக்கே துன்பம் தரும். ஏன் இன்னும் இங்கேயே நிற்கிறாய்? நீ போக வேண்டிய இல்லங்கள் பலவாக உள்ளனவே! அங்கேயெல்லாம் நீ செல்லலாம்; இங்கே நில்லாதே.*

(காமக்கிழத்தி இவ்வாறு கூறியதைக் கேட்ட)

தலைவன் : *மென்மை பொருந்திய தோள்களைக் கொண் டவளே! என்மீது ஏதேதோ குற்றம் சொல்லி ஊடுகின்றாய்.*

அதனைக் கை விட்டு, உன் நல்லெழிலை நான் அனுபவிக்க இடம் கொடு.

காமக்கிழத்தி : *ஏடா! பணிந்தது போல ஏதும் என்னிடம் கூறாதே; நீ செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளவில்லை என்னும் குற்றம் எனக்கு நேரக்கூடாது. உன்னிடம் பரிவு கொண்ட நெஞ்சமுள்ளவள் நான் (என்று கூறி, ஊடலை நீக்கிக் கூடினாள்.)*

கருத்து

காமக்கிழத்தி ஊடல் கொள்ள, தலைவன் அவள்மீதே தான் விருப்பம் கொண்டிருப்பதாய்க் கூறி, ஊடல் நீக்கிப் புணர்கிறான்.

விளக்கம்

தலைவன் காமக்கிழத்திக்கு அஞ்சி அவள் அறியாமல் பரத்தையர் இல்லங்களுக்குச் சென்று இன்பம் துய்த்து வருகின்றான். மறைந்து ஒழுகினும் காமக்கிழத்தி அவன்மீது ஐயம் கொண்டு அவள் கண்ட சில நிகழ்ச்சிகளைக் கூறி அவனிடம் ஊடல் கொள்கிறாள். ஆனால், அவள் கூறுவன வெல்லாம் அவள் கண்ட கனவாகத்தான் இருக்க வேண்டும் என்று தலைவன் அவளோடு வாதாடி, அவளையே தான் விரும்பி வந்ததாய்க் கூறித் தன் ஆர்வ மிகுதியை வெளிப்படுத்து கின்றான். காமக்கிழத்தியும் அவன்மீது தணியாத ஆசை கொண்டவள்; ஆதலின், இறுதியில் ஊடல் தணிந்து அவனோடு கூடுகிறாள். இதுவே இப்பாடலின் உட்பொருள்.

சொற்பொருள்

1. களவாதல் - திருட்டுத்தனம்; நகா - நக்கு - சிரித்து.
2. மண்டாத - விரும்பாத; தொடாஅல் - தொடாதே.
3. உளர் - உள்ளனரோ?
4. எவனோ? - என்ன?
5. நோய் - காமத்துன்பம்; வடு - பழிச்சொல்; கரந்து - மறைத்து.
6. பாடு பெயல் - இடைவிடாத மழை; பானாள் இரவு - இரவின் நடு யாமம்.
7. தொடி - வளையல்; கதுப்பு - கூந்தல்.

8. வடிவார் - வடிவம் அமைந்த; குழை - காதணி; இழை - அணிகலன்; பொறையா - தாங்க இயலாது.
9. நுசுப்பு - இடை; தளரா - தளர்ந்து.
10. ஆரா கவவு - அளவு கடந்த முயக்கம்; அல்கல் - இரவு.
11. ஞெகிழம் - சிலம்பு; சிலம்ப - ஒலிப்ப.
12. போரார் கதவம் - இரட்டைக்கதவு; மிதித்தது - உதைத்தது.
13. ஒலி கேளா - ஒலி கேட்டு.
14. தாழாமல் - காலம் நீட்டிக்காமல்.
15. மாறாள் - தன் நிலையிலிருந்து மாறாதவள்; சினைஇ - சினந்து.
16. நாறுஇணர் - மணக்கும் பூங்கொத்து; பைந்தார் - பசுமையான மாலை; பரிந்தது - அறுத்தது.
17. தேறுதல் - தெளிதல்; அலேன் - அல்லாதவன்.
18. சீறடி - சிறிய அடி; தோயா - வீழ்ந்து; இறுத்தது - எழாமல் கிடந்தது.
19. காயோமோ? - சினம் கொள்ள மாட்டோமோ?
20. தேறின் - தெளிந்தால்.
22. கனை பெயல் - பெருமழை; தண்துளி - குளிர்ந்த மழைத்துளி; குறி - சந்திக்கக் குறித்த இடம்.
23. மாறுற்று - மாற்றி.
24. எல்லா - தலைவனே.
25. புக்கில் - புகும் வீடுகள்.
26. உண்கு - அனுபவிப்பேன்.
27. குறையுற்று - பணிந்து.
28. பொறை ஆற்றேம் - பொறுத்துக்கொள்ள மாட்டோம்; பெறுதுமோ - பெறமாட்டோம்.
29. நிறை - உறுதி; ஆற்றா - தளர்கின்ற.

காமக்கிழத்தி கூற்று

கலித்தொகை 91 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

'புல்லுதன் மயக்கும் புலவிக்கண்ணும்' என்பதனால், தலைமகன் புலப்படப் பரத்தையரிடத்து ஒழுகாது மறைந்தொழுகி வந்து நின்றவனுடன் காமக்கிழத்தி ஊடிச் சொல்லித் தலைமகன் ஆற்றாமை கண்டு, தன் ஆற்றாமையுஞ் சொல்லி, ஊடல் தீர்ந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையரிடத்தில் தான் கொண்ட சேர்க்கையைப் புலப்படாதவாறு மறைத்துத் தன் காமக்கிழத்தியைக் காண வந்தான். அவனோடு காமக்கிழத்தி ஊடல் கொண்டு பேசினாள். பின்னர்த் தலைவன் பிரிவாற்றாமையால் வருந்துவதைக் கண்டு, அவ்வகையில் தன் துன்பத்தையும் கூறி, காமக்கிழத்தி ஊடல் தீர்ந்தது.

காமக்கிழத்தி

அரிநீர் அவிழ்நீலம், அல்லி, அனிச்சம்,
புரிநெகிழ் முல்லை, நறவோடு, அமைந்த
தெரிமலர்க் கண்ணியும் தாரும், நயந்தார்
பொருமுரண் சீறச் சிதைந்து, நெருநையின்
இன்றுநன்று, என்ஐ அணி.

தலைவன்

அணைமென்தோளாய்! செய்யாத சொல்லிச் சினவுவது ஈங்குஎவன்?
ஐயத்தால், என்னைக் கதியாதி; தீதின்மை
தெய்வத்தால் கண்டீ தெளிக்கு.

காமக்கிழத்தி

மற்றது அறிவல்,யான் நின்சூள்; அனைத்தாக நல்லார்
செறிதொடி உற்ற வடுவும், குறிபொய்த்தார்
கூர்உகிர் சாடிய மார்பும், குழைந்தநின்
தாரும் ததர்பட்ட சாந்தமும் சேரி
அரிமதர் உண்கண்ணார் ஆராக் கவவின்,
பரிசழிந்து யாழநின் மேனிகண்டு, யானும்

செருஒழிந்தேன்; சென்றீ, இனி.

தலைவன்

தெரியிழாய்! தேற்றாய் சிவந்தனை, காண்பாய்நீ தீதின்மை
ஆற்றின் நிறுப்பல் பணிந்து.

காமக்கிழத்தி (தனக்குள்)

அன்னதேல், ஆற்றல் காண்.

தலைவனிடம்

வேறுபட் டாங்கே கலுழ்தி; அகப்படின்,
மாறுபட்டு ஆங்கே மயங்குதி; யாதொன்றும்
கூறி உணர்த்தலும் வேண்டாது; மற்றுநீ
மாணா செயினும், மறுத்து,ஆங்கே நின்வயின்,
காணின் நெகிழும்என் நெஞ்சாயின், என்உற்றாய்?
பேணாய்நீ பெட்பச் செயல்.

தெளிவுரை

(தன்னிடம் வந்து நின்ற தலைவனை நோக்கிக் காமக்கிழத்தி கூறியது):

"நீரில் மலர்ந்த நீலப்பூ, அல்லி, அனிச்சம், மலர்ந்த முல்லை, நறவ மலர் முதலியவற்றைக் கொண்டு நெருங்கக் கட்டப்பட்ட உன் கண்ணியும், மாலையும் உன் பரத்தையர் ஊடிச் சினந் தமையால் அழகு சிதைந்து நேற்றைவிட இன்று அழகாகவே உள்ளன."

(அது கேட்ட தலைவன் கூறியது):

"தலையணை போன்ற மென்மையான தோளினைக் கொண்டவளே! என்மீது ஐயங்கொண்டு நான் செய்யாததைச் சொல்லிச் சினம் கொள்வது ஏனோ? நான் குற்றமற்றவன் என்பதைத் தெய்வத்தின்மீது ஆணையிட்டுத் தெளிவுபடுத்து வேன். ஆகவே, என்மீது சினம் கொள்ளாதே."

(அது கேட்ட காமக்கிழத்தி):

"உன் சூள்தானே! அதனை நான் நன்கு அறிவேன். அது பொய்ச்சூள். பரத்தையரின் வளையல்கள் அழுத்தியமையால்

உண்டான வடு, அவர் தழுவியதால் கசங்கிய மாலை, குறியிடத்திற்கு நீ செல்லாமையால் கோபம் கொண்டு அவர் தம் கைந்நகத்தால் தாம் விரும்பியவாறு கீறப்பட்ட உன் மார்பு, செவ்வரி படர்ந்த செழிப்பான கண்களைக் கொண்ட சேரிப் பரத்தையர் தழுவியதால் சிதைந்த சந்தனக் கோலம் ஆகியவற்றால் நிலைகுலைந்துள்ள உன் உடல்நிலை நீ கூறியவை பொய் என்று உணர்த்துகின்றது. இனி நான் வருந்தப்போவதில்லை. நீ விரும்பிய அவர்களிடமே செல்" என்று தலைவனிடம் கூறினாள்.

(அது கேட்ட தலைவன்,) "தேர்ந்தெடுத்த அணிகலன்களைக் கொண்டவளே! நீ என்னை நம்பாமல் கோபம் கொள்கிறாய். நான் குற்றமற்றவன் என்பதை உன்னைப் பணிந்து வணங்கி முறைப்படி நிறுவுவேன்" என்றான்.

அது கேட்ட காமக்கிழத்தி, 'இவன் இன்னும் தன் பொய்யை நிலைநிறுத்தலாம் என்றே முயல்கிறான். இவனது திறமையைப் பார்' என்று தன்னுள் சொல்லிக்கொண்டவள், பின் தலைவனை நோக்கி, "நான் வேறுபட்டுப் பேசும்போது நீ மனம் கலங்குகின்றாய். உன் வயப்பட்டால் வேறு மகளிரைக் கலந்துவிட்டு வருகிறாய். இனி நீ என்னைத் தெளிவிக்கத் தேவையில்லை. நீ பேணத் தகாதன செய்தாலும் அவற்றை ஒதுக்கிவிட்டு, உன்னைக் கண்டால் அப்பொழுதே உன்பால் நெகிழ்ந்து ஓடி வருகிறது என் நெஞ்சு! நீ ஏன் அதனை உணராது ஏதேதோ கூறிப் பணிந்து நிற்கின்றாய்!" என்று கூறித் தன் ஊடல் விடுகிறாள்.

கருத்து

பரத்தையரிடமிருந்து திரும்பி வந்த தலைவன், பரத்தையோடு தான் கொண்ட சேர்க்கையை மறைத்தான். அதனால், காமக்கிழத்தி ஊடல் கொண்டாள்; தலைவன் பணிய, ஊடல் தீர்ந்து கூடினாள்.

விளக்கம்

காமக்கிழத்தியைப் பிரிந்து சென்ற தலைவன் திரும்பி வந்து அவளை நெருங்கியபோது, அவள் அவனோடு ஊடல் கொண்டாள். தான் விரும்பிய பரத்தையருடன் தலைவன் இன்பம் நுகர்ந்து வந்துள்ளான் எனக் காமக்கிழத்தி, குற்றம் சுமத்தினாள்.

"நான் சிறிது நேரம் பிரிந்தால்கூட நான் பரத்தையர் இல்லங்கட்கே சென்றுவந்ததாய் நீ ஐயம் கொள்கிறாய். இந்த ஐயம் தவறானது" என்று தலைவன் காமக்கிழத்தியிடம் கூறினான். அவள், அவன் கூறியதற்கு மாறுபட்டுக் கூற, அவன் அவளைச் சமாதானப்படுத்திய பின் அவள் ஊடலை விடுத்தாள்.

சொற்பொருள்

1. அரிநீர் - அழகிய பொய்கை; அவிழ் - மலர்ந்த; நீலம் - நீல மலர்.
2. புரி - முறுக்கு.
3. கண்ணி - தலையில் அணியும் மாலை; தார் - மார்பில் அணியும் மாலை; நயந்தார் - விரும்பப்பட்ட பெண்டிர் (பரத்தையர்).
4. முரண் - மாறுபாடு; சீற - சினம் கொள்ள; நெருநை - நேற்று.
5. என்ஐ - என் தலைவன்; அணி - அழகு.
6. சினவுவது - கோபிப்பது.
7. கதித்தல் - சினத்தல்.
8. தெளிக்கு - தெளிவிப்பேன்.
9. சூள் - உறுதிமொழி; அனைத்தாக - பொய்யே ஆகும்; நல்லார் - பரத்தையர்.
11. கூர் உகிர் - கூரிய நகம்.
12. ததர்பட்ட - கலைந்த; சாந்தம் - சந்தனம்.
13. அரிமதர் - செவ்வரி படர்ந்த செழிப்பான; ஆரா - மனநிறைவு தாராத; கவவின் - தழுவலினால்.
14. பரிசு - தன்மை.
15. செருவொழிந்தேன் - கோபம் தீர்ந்தேன்; சென்றீ - செல்க.
16. தெரியிழாய் - தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகலன்களை அணிந்தவளே!; தேற்றாய் - நம்பாமல்; சிவந்தனை - கோபித்தாய்.
17. ஆற்றின் - முறைப்படி; நிறுப்பல் - நிலைநாட்டுவேன்.
19. வேறுபட்டாங்கே - புலந்து வேறுபட்ட அப்பொழுதே; கலுழ்தி - வருந்துகிறாய்; அகப்படின் - உன் ஐயப்பாட்டால்.
20. ஆங்கே -பரத்தையரிடம்.
21. உணர்த்தலும் - தெளிவித்தலும்.
22. மாணா - சிறப்பில்லாத.
24. பெட்ப - விரும்புமாறு.

காமக்கிழத்தி கூற்று

அகநானூறு 396 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

காதற்பரத்தை தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுடன் ஊடல் கொண்ட காதற்பரத்தை, அவனைத் தன்னிட மிருந்து செல்லவிடாது தடுத்துக் கூறியது.

தொடுத்தேன், மகிழ்ந! செல்லல்– கொடித்தேர்ப்
பொலம்பூண் நன்னன் புன்னாடு கடிந்தென,
யாழ்இசை மறுகின் பாழி ஆங்கண்,
அஞ்சல் என்ற ஆஅய் எயினன்
இகல்அடு கற்பின் மிஞிலியொடு தாக்கி,
தன்உயிர் கொடுத்தனன், சொல்லியது அமையாது,
தெறல்அருங் கடவுள் முன்னர்த் தேற்றி,
மெல்இறை முன்கை பற்றிய சொல்இறந்து,
ஆர்வ நெஞ்சம் தலைத்தலை சிறப்ப,நின்
மார்புதரு கல்லாய், பிறன்ஆ யினையே,
இனியான் விடுக்குவென் அல்லேன், மந்தி,
பனிவார் கண்ணள், பலபுலந்து உறைய,
அடுந்திறல் அத்தி ஆடுஅணி நசைஇ,
நெடுநீர்க் காவிரி கொண்டுஒளித் தாங்கு,நின்,
மனையோள் வவ்வலும் அஞ்சுவல், சினைஇ
ஆரியர் அலறத் தாக்கி பேர்இசைத்
தொன்றுமுதிர் வடவரை வணங்குவில் பொறித்து,
வெஞ்சின வேந்தரைப் பிணித்தோன்
வஞ்சி அன்ன,என் நலம்தந்து சென்மே!

தெளிவுரை

"தலைவ! நான் உன்னைக் கைப்பற்றிக்கொண்டேன். என்னை விட்டுச் செல்லாதே!

"கொடி விளங்கும் தேரினையும் பொன்னாலான அணிகலன் களையும் கொண்ட நன்னன் என்பான், புன்னாடு என்னும் நாட்டில் உள்ளார்மீது சினம் கொண்டு எழுந்தான். அதனை யறிந்த ஆய் எயினன் என்பான், யாழிசை ஒலிக்கும் தெருக்களைக் கொண்ட 'பாழி' என்னுமிடத்தில் தோன்றிப் புன்னாட்டு மக்களை நோக்கி, 'அஞ்சாதீர்' என்றான். தான் சொன்ன சொல் தவறாது நன்னனுக்கு நண்பனாகிய மிஞிலியோடு போரிட்டுத் தன் உயிரையும் தந்தான்.

"ஆனால் நீயோ, தீமையை அழிக்கும் ஆற்றலைக் கொண்ட தெய்வத்தின்முன் நின்று என்னைத் தெளிவித்தாய்; என் முன்கையைப் பற்றி, 'இனி உன்னை விட்டுப் பிரியேன்' என்று சூளுரைத்தாய். இன்றோ, நீ சொன்ன சொல்லையும் மீறினாய். என் நெஞ்சிடத்தே விரும்பிப் பொருந்திய நீயோ, உன் மார்பினை எனக்குத் தாராது அயலவன்போல ஆகிவிட்டாய்!

"ஆதிமந்தி என்பவள் நீர் சொரியும் கண்களைக் கொண்ட வளாய்ப் பலவாறு வெறுத்துப் புலம்பிப் பேசிக்கொண்டிருக்க, ஆட்டன்அத்தி என்னும் அவள் காதலன் ஆடும் அழகினைக் கண்டு, மிகுந்த நீர்ப்பெருக்கினைக் கொண்ட காவிரி ஆறு அவனைக் கவர்ந்துகொண்டுபோய் ஒளித்து வைத்தது. அதைப் போல உன் மனைவியும் உன்னைக் கவர்ந்துகொண்டுபோய் ஒளித்து வைத்துக்கொள்வாளோ என்று நான் மிகவும் அஞ்சுகிறேன்.

"சினத்துடன் வெகுண்டெழுந்து, ஆரிய மன்னர்கள் அலறுமாறு அவர்களைத் தாக்கி, மிகுந்த புகழ் கொண்ட பழமையான இமயமலையின்மீது வளைந்த விற்கொடியைப் பொறித்து, கடுஞ்சினம் கொண்டிருந்த பகைமன்னரைப் பிணித்துக் கொண்டுவந்தான், சேர மன்னன். அவனுடைய வஞ்சி நகரைப் போன்ற வளமான என் மேனி நலத்தினை என்னிடம் தந்துவிட்டு நீ செல்க!" என்று காதற்பரத்தை தலைவனைத் தன்னிடமிருந்து செல்லவிடாது தடுத்தாள்.

கருத்து

தலைவன் தன்னைப் பிரிவான் என்பதறிந்த காதற்பரத்தை, 'நீ செல் வதானால், நீ கொண்ட என் மேனிநலத்தினை என்னிடம் தந்துவிட்டுச் செல்' என்கிறாள்.

விளக்கம்

மகிழ்ந! உன்னை நான் பற்றிக்கொண்டேன்; செல்லாதே! ஆய் எயினன் தான் சொல்லிய சொல் தப்பாது அயலார்பொருட்டுத் தன் உயிரையும் கொடுத்தான். நீயோ என் நலத்தை நுகர்ந்தாய்; கடவுள் முன்னர் என்னைப் பிரியேன் என்று சூளுரைத்தாய்! இன்றோ, உன் உறுதிமொழியை மறந்து என்னைப் பிரிய எண்ணு கிறாய்! உன் மனைவி உன்னைக் கைக்கொண்டு மறைத்துக் கொள்வாள் என அஞ்சுகிறேன். நீ செல்வதானால் நீ கொண்ட என் மேனி நலத்தினை என்னிடம் தந்துவிட்டுச் செல்.

குறிப்பு

ஆரிய மன்னரைத் தாக்கி, வென்று, இமயமலையில் விற்கொடியைப் பொறித்துப் பகைவேந்தரைச் சிறைப்பிடித்து வந்த பெருமை இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் சேரன் செங்குட்டுவனுக்கும் உண்டு. பரணர் இங்கு அதனைப் பொதுவாய்க் கூறியுள்ளார்.

சொற்பொருள்

1. தொடுத்தேன் - வளைத்தேன், பற்றினேன்; செல்லல் - செல்லாதே.
2. நன்னன் - மன்னருள் ஒருவன்; புன்னாடு - ஒரு நாடு; கடிந்தென - சினந்து எழுந்தான்.
3. பாழி - ஒரு நகரம்.
4. அஞ்சல் - அஞ்சாதே; ஆய் எயினன் - மன்னன் ஒருவன்.
5. இகல் அடு - பகைவரை வெல்லும்; கற்பின் - பயிற்சியைக் கொண்ட; மிஞிலி - படைத்தலைவன்.
6. சொல்லியது அமையாது - தான் சொல்லிய சொல் பிழையாது.
7. தேற்றி - தெளிவித்து.
8. மெல் இறை - மெல்லிய மணிக்கட்டு; சொல் இறந்து - சொல்லிய சொல்லினைக் கடந்து.
9. தலைத்தலை சிறப்ப - மேன்மேலும் மகிழ்ந்து சிறக்க.
10. பிறன் ஆயினை - எனக்கு யாரோ ஒருவன் ஆகிவிட்டாய்.
11. மந்தி - ஆதிமந்தி என்பவள்.
12. புலந்து - வெறுத்து.
13. அடுந்திறல் - போரிடும் ஆற்றல்; அத்தி - ஆட்டன்அத்தி என்பவன்; ஆடு அணி - ஆடுகின்ற அழகு; நசைஇ - விரும்பி.
14. ஒளித்தாங்கு - மறைத்து வைத்தது போல.

15. வவ்வல் - கைப்பற்றிக்கொள்ளுதல்; அஞ்சுவல் - அஞ்சுகிறேன்.
16. பேர் இசை - பெரும் புகழ்.
17. தொன்றுமுதிர் - மூத்துப் பழையதாகிய; வடவரை - வடக்கில் உள்ள மலை (இமயமலை); வணங்கு வில் - வளைந்த விற்பொறியை; பொறித்து - பதித்து.
18. பிணித்தோன் - சிறை பிடித்துக் கட்டியவனாகிய சேர மன்னன்.
19. வஞ்சி - வஞ்சி நகரம், சேரர் தலைநகரம்; சென்ம் - செல்.

காமக்கிழத்தி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 135 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

காமக்கிழத்தி தலைமகளின் இல்லற இயல்பினை அறிந்து, தலைமகனைத் தன் தோழியிடத்து இகழ்ந்து கூறியது.

கூற்று விளக்கம்

தன்னிடம் உறவு கொண்டிருந்த தலைவன், தன்னை விட்டுப் பிரிந்து இல்லம் சென்று மனைவியிடம் சேர்ந்து வாழ்வதைக் காமக்கிழத்தி தன் தோழியிடம் இகழ்ந்து கூறியது.

என்கேட்டி ஏழாய்! இருநிலத்தும் வானத்தும்
முன்கேட்டும் கண்டும் முடிவறியேன் – பின்கேட்(டு)
அணிஇகவா நிற்க அவன்அணங்கு மாதர்
பணிஇகவான் சாலப் பணிந்து.

தெளிவுரை

“பெண்ணே! கேள்! அன்று என்னைவிட்டுப் பிரிந்துபோன தலைவன், அணங்கு போன்ற தலைவியின் பின்னே போய், அவள் ஏவுகின்ற அனைத்தையும் பணிந்து குனிந்து தட்டாமல் செய்துகொண்டிருக்கிறான். இந்நில உலகத்திலும் விண்ணுலகத் திலும் இவ்வாறு மாறிய நிலையை நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை” என்று காமக்கிழத்தி தன் தோழியிடம் தலைவனைப்பற்றி இகழ்ந்து கூறினாள்.

கருத்து

தன்னைப் பிரிந்து சென்ற தலைவன் அவன் மனைவிக்கு அஞ்சி அவள் சொல்வனவற்றையெல்லாம் குனிந்து பணிவுடன் செய்கிறான் என்று அவன் காமக்கிழத்தி பழித்துப் பேசுகிறாள்.

சொற்பொருள்

1. என் கேட்டி - நான் சொல்வதைக் கேள்; ஏழாய் - பெண்ணே; இரு நிலம் - பெரிய நிலவுலகம்; வானம் - வானுலகம்.
2. முடிவு - இம்முறையின் முடிந்த நிலையை; பின் கேட்டு - பின்னே சென்று அவள் சொல்வதைக் கேட்டு.
3. அணி இகவா - மார்பில் அணிந்துள்ள அணிகள் மார்பினை விட்டு முன்னே செல்லும்படியாக; நிற்க - குனிந்து நின்று; அணங்கு - தெய்வம்; மாதர் - மனைவி.
4. பணி - அவள் கூறும் கட்டளைகளை; இகவான் - விலகான்; சால - மிகவும்.

பரத்தை கூற்று

நற்றிணை 400 **ஆலங்குடி வங்கனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தை தலைமகனைப் புகழ்ந்தது.

கூற்று விளக்கம்

பரத்தை தன்னைப் பிரிந்து செல்லும் தலைவனை நோக்கி, ‘உன்னையன்றி வேறு எனக்கு என்ன நலன் இருக்கிறது? ஆகவே, நீ என்னை விட்டுச் சென்றாலும் மறவாது மீண்டும் வருக’ என்று புகழ்ந்து கூறி வழி அனுப்புவது.

வாழை மென்தோடு வார்புறுபு ஊக்கும்
நெல்விளை கழனி நேர்கண் செறுவின்,
அரிவனர் இட்ட சூட்டுஅயல், பெரிய
இருஞ்சுவல் வாளை பிறழும் ஊர!
நின்இன்று அமைகுவென் ஆயின், இவண்நின்று,
இன்னா நோக்கமொடு எவன்பிழைப்பு உண்டோ?
மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து,

அறம்கெட அறியா தாங்கு, சிறந்த
கேண்மையொடு அளைஇ, நீயே
கெடுஅறி யாய்என் நெஞ்சத் தானே.

தெளிவுரை

"வாழையின் மெல்லிய தாற்றின் நுனியிலே தொங்கும் பூவினை, நிலத்தில் செழித்து வளர்ந்த நெற்கதிர் தொட்டு அசைக்கும். (நெற்பயிர் அந்த அளவுக்கு உயர்ந்து வளர்ந்திருக்கும்.) இத்தகைய நெற்கதிர் விளைந்த வயலில் கண்ணுக்கினிய சேற்றில் மள்ளர் கதிரறுப்பர். அவர் அறுத்துப் போட்ட அரிச்சூட்டிற்கு அருகில் பெரிய கரிய முதுகு கொண்ட வாளை மீன் பிறழும். இத்தகைய வளமிக்க ஊரினை உடையவனே! நீ இல்லாது நான் இங்கிருப்பேனாயின், பலரும் இன்னாச் சொற்களைக் கூறும் நிலையில் எனக்குப் பிழைப்பும் உண்டா? வீரம் பொருந்திய சோழரின் உறையூர் அவைக்களத்தே அறம் அழியாது நிலைத்திருப்பதுபோல, சிறந்த நட்புரிமையோடு அளவளாவி என்னை இன்புறுத்திய நீ, என் நெஞ்சத்தினின்றும் எப்போதும் நீங்காதவனாய் இருப்பாய்" என்று பரத்தை தன்னைவிட்டு நீங்கும் தலைவனிடம் கூறுகிறாள்.

கருத்து

நீ இப்போது பிரியினும், விரைவில் திரும்பி வந்து அருள் செய்.

விளக்கம்

"நீ என்னுடன் இருக்கும்போது இனிமையன்றிப் பிற அறியேன்; நீ இல்லையென்றால் எனக்குப் பிழைப்பு ஏது? சோழ மன்னரின் உறையூர் அவையில் அறம் எவ்வாறு நீங்காது தங்குமோ, அவ்வாறு என் நெஞ்சில் நீ என்றும் தங்கியிருக்கிறாய்" என்று பரத்தை தன் அன்பின் பெருக்கினைத் தலைவனிடம் எடுத்துக் கூறுகிறாள்.

குறிப்பு

வாழைப்பூவினை வளர்ந்திருக்கும் நெற்பயிர்கள் அசைக்கும் என்பதும், மள்ளர்கள் அறுத்துப்போட்ட கதிர்களுக்குப் பக்கத்தே வாளை மீன்கள் பிறழும் என்பதும் அவ்வூரின் வளத்தைக் காட்டுவனவாகும். இத்தகைய

இனிமையான வள நாட்டில் வாழும் அவனுக்குப் பரத்தையர் பலர் போட்டியிட்டு அவனோடு கூடுதற்கு வருவர் என்றாலும், பரத்தை அவன் பிரிவைக் கண்டு வருந்தாமல் அவன் மீண்டும் தன்னிடம் வருவான் என உறுதி கொண்டாள் என்பது குறிப்புப் பொருள்.

சொற்பொருள்

1. வாழை மென்தோடு - வாழைக்குலையில் தொங்கும் பூ; வார்புறுபு - தீண்டி; ஊக்கும் - அசைவிக்கும்.
2. கண்நேர் - கண்ணுக்கு இனிய; செறு - வயல்.
3. அரிவனர் - நெல் அரிவோர்; சூடு - அரிக்கட்டு.
4. இருஞ்சுவல் - கரிய பிடரி; வாளை - வாளை மீன்.
5. நின்இன்று - நீ இல்லாமல்; அமைகுவென் - வாழ்வேன்.
6. எவன் பிழைப்பு - இனிமையைத் தரும் பிழைப்பு ஏது?
7. உறந்தை - உறையூர்; அவை - அரசவை.
8. அறம் கெட - அறம் நீங்குதல்.
9. கேண்மை - உறவு; அளைஇ - கலந்த.
10. கெடுஅறியாய் - நீங்குதல் அறியாய் (நீங்க மாட்டாய்.)

காதற்பரத்தை கூற்று

அகநானூறு 376 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

காதற்பரத்தை புலந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

காம இன்பம் கருதித் தலைவனால் வரைந்துகொள்ளப்பட்ட காதற் பரத்தை, சேரிப்பரத்தையிடம் தலைவன் நட்புக்கொண்டுள்ளான் என்பதை அறிந்து, அவன் தன் இல்லம் வந்தபோது அவனுடன் ஊடிச் சொல்லியது.

செல்லல், மகிழ்ந!நின் செய்கடன் உடையென்மன்—
கல்லா யானை கடிபுனல் கற்றென,
மலிபுனல் பொருத மருதுஒங்கு படப்பை,
ஒலிகதிர்க் கழனி, கழாஅர் முன்துறை,
கலிகொள் சுற்றமொடு கரிகால் காண,

தண்பதம் கொண்டு, தவிர்ந்த இன்இசை
ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரள,
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று,
இரும்பொலம் பாண்டில், மணியொடு தெளிர்ப்ப,
புனல்நயந்து ஆடும் அத்தி அணிநயந்து,
காவிரி கொண்டுஒளித் தாங்கும் அன்னோ!
நும்வயின் புலத்தல் செல்லேம், எம்வயின்,
பசந்தன்று, காண்டிசின் நுதலே, அசும்பின்,
அம்தூம்பு வள்ளை அழற்கொடி மயக்கி,
வண்தோட்டு நெல்லின் வாங்குபீள் விரிய,
துய்த்தலை முடங்குஇறாத் தெறிக்கும், பொற்புடைக்
குரங்குஉளைப் புரவிக் குட்டுவன்
மாந்தை அன்ன,என் நலம்தந்து சென்மே!

தெளிவுரை

"மருதநிலத் தலைவனே! நீ செல்லாதே! உனக்கு நான் செய்ய வேண்டிய கடமைகள் சில உள்ளன.

"பாகனால் பழக்கப்படாத யானை, காவலைக் கொண்ட நீரில் இறங்கி விளையாடியது. அதனால் அலைபாய்ந்து மேலெழுந்த மிகுந்த நீர் உயர்ந்து வளர்ந்துள்ள மருத மரங்கள்மீது மோதும் தோட்டத்தினையும் தழைத்த கதிர்கள் கொண்ட வயல்களையும் கொண்ட கழார் என்னும் ஊரில் முன்பு, ஆரவாரம் மிகுந்த சுற்றத்தாருடன் கரிகால் வளவன் நீர்விளையாட்டு விழாவினைக் கண்டு மகிழ்ந்திருந்தான்.

"அந்நீராட்டுவிழாவில் அத்தி என்பான், ஒளிவாய்ந்த தன் சிவந்த திருவடிகளில் வீரக்கழல் கிடந்து புரள, கரிய கச்சினைக் கட்டியவாறு, காண்பதற்கு இனிதாய் வயிற்றில் மணியையும் கட்டிக்கொண்டு, கஞ்சதாளம் ஒலிக்க நீர்விளையாட்டினை விரும்பி ஆடிக்கொண்டிருந்தான். அவனது அழகினை விரும்பிய காவிரி, அவனைக் கவர்ந்து சென்று, கடலில் ஒளித்து வைத்துக் கொண்டதுபோல, சேரிப்பரத்தை உன்னைக் கவர்ந்து சென்றாள். அதனால் உன்னை நான் வெறுக்கவில்லை. ஆயினும்,

பழைய அன்பு காரணமாய் என் நெற்றியில் பசலை படர்ந் திருப்பதைப் பார்.

“சேற்றில் வளர்ந்த, அழகிய உள்துளையைக் கொண்ட வள்ளைக் கொடி பின்னிக்கொள்ளுமாறும், வளம் பொருந்திய இதழ்களைக் கொண்ட நெற்கதிர் விரியுமாறும், மென்மையான தலையினைக் கொண்ட வளைந்த இறால் மீன்கள் பாயுமாறும் காட்சி கொண்டுள்ள வளமிகுந்த இடம், மாந்தை. அழகிய வளைந்த பிடரிமயிரினைக் கொண்ட குதிரைகளையுடைய குட்டுவனது மாந்தை என்னும் ஊரினது அழகு போன்ற என் அழகினை என்னிடம் தந்துவிட்டு நீ செல்” என்று காதற்பரத்தை தலைவனிடம் கூறுகிறாள்.

கருத்து

‘தலைவ! சேரிப்பரத்தை உன்னைக் கவர்ந்து சென்றாள்; ஆயினும், நான் உன்னை வெறுக்கவில்லை’ என்கிறாள், காதற்பரத்தை.

விளக்கம்

“மகிழ்ந! உனக்கு நான் செய்ய வேண்டிய கடமைகள் சில உள்ளன. ஆதலால், நீ இங்கிருந்து செல்லாதே! சேரிப்பரத்தை உன்னைக் கவர்ந்து சென்றாள்; ஆயினும், நான் உன்னை வெறுக்கவில்லை. பிரிவாற்றாமையால் என் நுதல் பசந்திருப் பதைப் பார். நீ என்னிடம் நுகர்ந்த அழகினைத் திருப்பித் தந்துவிட்டுச் செல்” எனக் காதற்பரத்தை வருந்திச் சொல்கிறாள்.

சொற்பொருள்

1. செல்லல் - செல்லாதே.
2. கடிபுனல் - காவலைக் கொண்ட நீர், மிக்க நீர்.
3. மலி - மிகுந்து எழுந்து; பொருத - மோத; மருதம் - மருத மரங்கள்; ஓங்கு - உயர்ந்த; படப்பை - தோட்டம்.
4. ஒலி - தழைத்த; கழாஅர் - ஒரு நீர்த்துறை.
5. கலிகொள் - ஆரவாரம் மிக்க; கரிகால் - கரிகால் வளவன் என்னும் சோழ மன்னன்.
6. தண்பதம் - நீராட்டு விழாவிற்கான ஒப்பனை.
7. ஒண் பொறி - ஒள்ளிய புள்ளிகளைக் கொண்ட; கழல் - வீரக் கழல்கள்; சேவடி - சிவந்த அடி.

8. கருங்கச்சு - கரிய கச்சை; யாத்த - கட்டிய; காண்பின் - காட்சிக்கு இனிய.
9. பொலம் - பொன்; பாண்டில் - கஞ்சதாளம் (பெரிய கைத்தாளம்); தெளிர்ப்ப - ஒலிக்க.
10. அத்தி - ஆட்டன் அத்தி, இளவரசன்; அணி நயந்து - அழகினை விரும்பி.
12. புலத்தல் செல்லேம் - வெறுத்தல் இல்லேம்.
13. பசந்தன்று - பசந்தது; காண்டிசின் - காண்க; அசும்பு - சேறு.
14. அம் தூம்பு - அழகிய உள்துளை; அழல் - ஒள்ளிய.
15. வண்தோடு - வள்தோடு - வளம் பொருந்திய இதழ்; வாங்கு பீள் - வளைந்த கதிர்.
16. துய்த்தலை - துய்யினைத் தலையில் கொண்ட (துய் - பஞ்சின் மென்மை); முடங்கு இறா - வளைந்த இறால் மீன்; தெறிக்கும் - பாயும்.
17. குரங்கு உளை - வளைந்த பிடரிமயிர்; குட்டுவன் - சேர மன்னன்.
18. மாந்தை - சேரர் நகரம்; சென்ம் - செல்.

காமக்கிழத்தி கூற்று

நற்றிணை 315 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகனைப் பரத்தை நொந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்த தலைவன், மீண்டும் தன் தலைவியிடம் சென்றான். தலைவிக்கு அவன்மீது சினம் மிகுதியாய் எழ, அதனைத் தீர்க்க இயலாதவனாய் உள்ளான், தலைவன். அங்கு, முதுமையுற்ற அவன் காமக்கிழத்தி ஒருத்தி தலைவனிடம், 'அவன் தலைவியிடம் குற்றம் நேராது நடந்து கொள்ள வேண்டும் என்றும், இன்றேல் தலைவி தீயிலே இட்ட மலர்போலக் கருகிவிடுவாள்' என்றும் கூறியது.

ஈண்டுபெருந் தெய்வத்து யாண்டுபல கழிந்தென,
பார்த்துறைப் புணரி அலைத்தலின், புடைகொண்டு,
மூத்துவினை போகிய முரிவாய் அம்பி,
நல்எருது நடைவளம் வைத்தென, உழவர்
புல்லுடைக் காவில் தொழில்விட் டாங்கு,
நறுவிரை நன்புகை கொடாஅர், சிறுவீ
ஞாழலொடு கெழீஇய புன்னைஅம் கொழுநிழல்
முழவுமுதற் பிணிக்கும் துறைவ! நன்றும்
விழுமிதின் கொண்ட கேண்மை நொவ்விதின்
தவறும்;நன்கு அறியாய் ஆயின், எம்போல்,
ஞெகிழ்தோள், கலுழ்ந்த கண்ணர்,
மலர்தீய்ந்து அனையர், நின்நயந் தோரே.

தெளிவுரை

"பெருந்தெய்வங்களின் பெயர்களைக் கொண்ட ஆண்டுகள் பல ஒவ்வொன்றாய்ச் சென்றன. கரையைச் சார்ந்த நீர்த் துறையில் கடல்நீரின் அலைகள் அலைத்தலால் மோதப்பட்டுப் பழையதாய் ஆன தோணி ஒன்று பயன் தாராது முரிந்த முன் பகுதியைக் கொண்டிருந்தது. பழையதான அத்தோணிக்குப் பரதவர் மணங்கொண்ட அகிற்புகை முதலியவற்றைக் காட்டுவர். பிறகு, அதை ஞாழல் மரத்தோடு சேர்ந்து ஓங்கி வளர்ந்திருக்கும் புன்னை மரத்தின் தழைத்த நிழலில், முழவு போன்ற அம் மரத்தின் அடிப்பகுதியோடு கட்டி வைப்பர். இச்செயல், நன்கு உழைத்ததால் பயன் கிட்டுவதற்குக் காரணமான எருதினை முன்புபோல் பயன்படாது என்று உழவர்கள், புல் வளரும் தோட்டத்திலே வறிதே மேய விட்டுவிடுவது போன்றதாயிற்று. இத்தகைய நெய்தல் நில நீர்த்துறைக்கு உரியவனாகிய தலைவனே! உன் தலைவிமீது கொண்ட நட்பில் சின்னஞ்சிறு தவறும் வாராதபடி நன்றாய் அறிந்து நீ நடத்தல் வேண்டும். அவ்வாறு நீ நடவாவிட்டால் உன்னை விரும்பும் மகளிர் எம் போன்ற தளர்வுற்ற தோள்களையும் கலங்கியழும் கண்களையும் கொண்டவராயும், மலர்ந்த உடனே கருகிவிடும் பூக்களைப் போன்றவராயும் ஆகிவிடுவர்" என்று காமக்கிழத்தியாகிய பரத்தை தலைவனிடம் கூறினாள்.

கருத்து

'நீ திருந்தி, மனைவிமீது கொண்ட நட்பில் சிறு தவறும் நேராது காத்துக் கொள்' எனக் காமக்கிழத்தி தன் நல்லெண்ணத்தைப் புலப்படுத்தினாள்.

விளக்கம்

"கடலை அடுத்த நீர்த்துறையில், அலைகள் மோதியதால் முரிந்து பயனற்றுவிட்ட படகு ஒன்றனைப் பரதவர் ஞாழல் மரத்திற்கு அருகில் உயர்ந்து வளர்ந்துள்ள புன்னை மரத்திற்கு அடியில் பிணித்து வைப்பர். உழவர்களும், பல ஆண்டுகள் நன்கு உழைத்துப் பின் வேலை செய்ய இயலாதாகிவிட்ட எருதினைப் புல் விளைந்துள்ள தோட்டத்தில் மேய விட்டுவிடுவர். இத்தகைய நீர்த்துறைக்குரியவன், தலைவன். பல காலம் ஆகி விடுவதால் பழமையாகிவிடும் பொருள்கள் பல உண்டு. ஆதலால், தலைவன் தன் மனைவிமீது கொண்டுள்ள காதல் குறைந்திடாதவாறு நடந்துகொள்ள வேண்டும். இன்றேல், எம்மைப் போன்று அவளும் வாடிய தோளையும் கலங்கிய கண்களையும் கொண்டு தீயில் வாடிய பூக்கள் உற்ற நிலையை அடைவாள்" எனக் காமக்கிழத்தி, எச்சரிக்கையுடன் தவற்றுக்கு இடமின்றித் தலைவியிடம் தலைவன் நடந்துகொள்ள வேண்டும் என்கிறாள்.

குறிப்பு

காமக்கிழத்தி இவ்வாறு கூறியது, அவள் அவனோடு கொண்டுள்ள பழைய தொடர்பையும், உரிமையையும், அக்குடும்பத்தினிடம் அவளுக் குள்ள நல்லெண்ணத்தையும் புலப்படச்செய்கிறது.

உள்ளுறை

பழையதாகி, முனை முரிவுற்று, அலைகளால் சிதைவுற்ற படகைப் புன்னை மரத்திற்கு அடியில் கட்டிப்போடுவர். இதன் மூலம், தலைவனால் விரும்பப்பட்ட தலைவி சற்று முதிர்ந்து அழகு குன்றினளாயின் அவளை முன்புபோல் பேணாது கைவிட்டுவிடுவான் என்னும் கருத்துப் பெறப்படுகிறது. தலைவன் அவ்வாறு நடக்கக் கூடாது என முதிய பரத்தை இடித்துரைக்கிறாள்.

சொற்பொருள்

1. தெய்வத்து யாண்டு - தெய்வத்தின் பெயர் கொண்ட ஆண்டுகள்.
2. பார்த்துறை - பாறைகள் பொருந்திய துறை (பார் - பாறை); புணரி - அலை; அலைத்தலின் - மோதி அலைத்தலால்; புடை கொண்டு - பலவாறு அடியுண்டு.
3. மூத்து - முதுமையுற்று; வினைபோகிய - தொழில் செய்ய இயலாததாகிவிட்ட; முரிவாய் - விளிம்பு முரிந்து கெட்ட; அம்பி - தோணி.
4. நடைவளம் - நடைச்சிறப்பு; வைத்தென - நீங்கியது என (இனி உழவுத்தொழிலுக்குப் பயன்படாது என்னும் நிலை ஏற்பட்டபோது).
5. புல்லுடைக் கா - புற்கள் வளர்ந்துள்ள தோட்டம்; தொழில் விட்டாங்கு - உழைக்க இயலாதபடியால் வறிதே மேயவிட்டது போல.
6. நறுவிரை - நல்மணம்; நன்புகை - மணம் கமழும் நல்ல புகை; கொடாஅர் - செய்யாதவராய்; சிறுவீ - சிறிய பூக்களைக் கொண்ட.
7. ஞாழலொடு - ஞாழல் மரங்களோடு; கெழீஇய - பொருந்திய; புன்னை - புன்னை மரத்தின்; கொழுநிழல் - அடர்ந்த நிழலில்.
8. முழவு முதல் - முழவு போன்ற அடிமரத்தில்; பிணிக்கும் - கட்டி வைப்பர்.
9. விழுமிதின் கொண்ட - பெருமையாய்க் கருதிக்கொண்ட; கேண்மை - நட்பு; நொவ்விதின் - எளிதில்.
10. தவறும் - தவறி (துன்பம் பயக்கும்); அறியாய் - அறியாதிருக் கின்றாய்; ஆயின் - ஆதலால்.
11. ஞெகிழ்தோள் - மெலிந்த தோள்; கலுழ்ந்த - கலங்கியழும்; கண்ணர் - கண்களைக் கொண்டவர்.
12. தீய்ந்து அனையர் - தீயிற்பட்டு வாடினாற்போல (மேனி வேறு பட்டனர்); நின் நயந்தோர் - உன்னைக் காதலித்து ஒழுகிய பெண்டிர்.

தோழி தலைவனுக்கு வாயில் நேர்தல்.

தோழி கூற்று

நற்றிணை 386 **தங்கால் ஆத்திரேயன் செங்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

பரத்தையின் மறுத்தந்த தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி, தலைமகளை முகம்புகுவல் என முற்பட்டாள். தலைமகள்மாட்டு நின்ற பொறாமை நீங்காமை அறிந்து, பிறிது ஒன்றன்மேல் வைத்து, 'பாவியேன் இன்று பேதைமை செய்தேன்; எம் பெருமாட்டி குறிப்புணர்ந்து வழிபடுவேன் ஆவேன் மன்றோ' எனச் சொல்லியது. (மறுத் தந்த - திரும்பி வந்த; முகம் புகுவல் - நேரில் காண்பேன்.)

கூற்று விளக்கம்

பரத்தையின் வீட்டிற்குச் சென்ற தலைவன் திரும்பி வந்தான்; மனைவியிடம் நேரே செல்ல அஞ்சியவன், அவள் சினத்தைத் தணித்தற்குத் தோழியின் உதவியை நாடினான். தோழியும் அவர்களை ஒன்றுபடுத்த நினைத்து, தலைவியைக் காணச் சென்றபோது, தலைவியின் முகக்குறிப்பில் தோன்றிய சினம் தோழியை ஏதும் சொல்ல இயலாதவாறு செய்துவிட்டது. தான் வந்ததற்குத் தலைவி தன்மீது சினம் கொள்ளலாம் என்று கருதி, இனித் தான் தலைவியின் குறிப்பின்படியே நடந்துகொள்வதாய்த் தலைவியிடம் கூறியது.

சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்,
துறுகண் கண்ணிக் கானவர் உழுத
குலவுக்குரல் ஏனல் மாந்தி, ஞாங்கர்,
விடர்அளைப் பள்ளி வேங்கை அஞ்சாது,
கழைவளர் சாரல் துஞ்சும் நாடன்,
'அணங்குடை அருஞ்சூள் தருகுவென்' எனநீ,
'நும்மோர் அன்னோர் துன்னார் இவை'என,
தெரிந்துஅது வியந்தனென் தோழி! பணிந்துநம்
கல்கெழு சிறுகுடிப் பொலிய,
வதுவை என்றுஅவர் வந்த ஞான்றே.

தெளிவுரை

தலைவியே! தலைமாலை அணிந்த கானவர் உழுது விளைவித்த வளைந்த தினைக்கதிரைச் சிறிய கண்ணும் மிகுந்த சினமும் கொண்ட ஆண்பன்றி தின்னும்; பின், அருகிலிருக்கும் மலைப் பிளவைத் தனக்குத் தங்குமிடமாய்க் கொண்டிருக்கும் புலிக்கும் அஞ்சாமல், மூங்கில் வளர்ந்துள்ள மலைச்சாரலில் தூங்கும். இத்தகைய காட்சி கொண்ட மலைக்குரிய நாடன், ஒரு பொழுது (களவுக்காலத்தில்) உன்னிடம் வந்து, தன் வாய்மைக்குச் சான்றாய்க் கடவுளரைச் சுட்டி, 'நான் உன்னை மணப்பேன் எனச் சூளுரைப்பேன்' என்றான். நீயோ அவனிடம், 'உன் போன்ற சால்பினைக் கொண்டோர் தம் வாக்கிலிருந்து வழுவி நடவார். ஆதலினால் இத்தகைய சூளுறவுகள் வேண்டா' என்று கூறினாய். உன் சொல் மெய்யாகும்படி ஒருநாள், நம் மலையி லுள்ள சிறு குடியிருப்புகள் பொலிவு பெறுமாறு, 'மணக் கொடையுடன் மணம் முடிப்பேம்' என்று அவன் வந்தது கண்டு அவனது வாய்மையை உணர்ந்து வியந்தேன்.

கருத்து

'தலைவியே! தலைவனை நீ வெறுத்து ஒதுக்குதல் முறையன்று' என்றாள், தோழி.

விளக்கம்

"களவுக் காலத்தில் அவன், 'உன்னே மணப்பேன் என்று சூளுரைப்பேன்' என்று சொல்ல, நீ 'சூளுரைத்தல் வேண்டா. நின் சொல்லே போதும்' என்று அவனிடமுள்ள பெருகிய காதலால் கூறினாய். பின் அவன் திருமணம் பேசி வந்தபோது, உன் சொற்கள் மெய்யாயினதை அறிந்து வியந்தேன். இன்றும் உன்னை விரும்பி மீண்டும் வந்து வீட்டிற்குமுன் நிற்கின்றான்; அவனை இப்போது ஏற்றுக்கொள்ளாமல் சினமுற்று ஒதுக்கு கின்றாய். அவனை ஏற்றுக்கொள்வதும், ஏற்க மறுப்பதும் உன் விருப்பம். உன் குறிப்பை என்னால் புரிந்துகொள்ள இயல வில்லை; உனக்கு நான் ஏதும் சொல்ல வேண்டுவதில்லை; ஆராய்ந்து ஏற்றதைச் செய்க" என்று தோழி உணர்த்தினாள்.

பயன்

இதனால், தலைவி சினம் தணியப்பெற்றுத் தலைவனை ஏற்றுக்கொள்வாள் என்பது பயன்.

உள்ளுறை

'சிறுகண்..... சாரல் துஞ்சும்' : அஃதாவது, ஆண் பன்றி, கானவர் அறியாது அவர் விளைத்த தினைக்கதிரை மிகுதியாய்த் தின்று விட்டு, பக்கத்திலே தங்கியிருக்கும் வேங்கைப்புலி குறித்து அச்சப்படாது மூங்கிற்காட்டிலே கிடந்து உறங்கும் என்பதாம். இதன்மூலம், தலைவனும் பரத்தையரைப் பெற்ற அன்னையர் அறியாதே பரத்தையரிடமிருந்து இன்பத்தை நுகர்ந்து களித்து மயங்கி, அண்டை அயலிலுள்ளார் பழித்துப் பேசுதற்கும் அச்சப்படாது, மனைவி வீட்டு முற்றத்திலே காத்து நிற்கின்றனன் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. ஒருத்தல் - ஆண்பன்றி.
2. துறுகண் - நெருங்கிய; கண்ணி - தலைமாலை.
3. குலவு - வளைவு; குரல் - கதிர்; ஏனல் - தினை; மாந்தி - உண்டு; ஞாங்கர் - பக்கம்.
4. விடர் - மலைப்பிளவு; அளை - குகை; பள்ளி - தங்குமிடம்; வேங்கை - புலி.
5. கழை - மூங்கில்; துஞ்சும் - தூங்கும்.
6. அணங்கு - அச்சம்; சூள் - உறுதிமொழி.
7. துன்னார் - சொல்லார்.
8. பணிந்து - (நம் உறவினரை) வணங்கி.
9. பொலிய - சிறப்பெய்துமாறு.
10. வதுவை - திருமணம்; அவர் - தலைவன்.

தோழி கூற்று

நற்றிணை 270 **பரணர்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வாயில் நேர்கின்றாள், தலைமகனை நெருங்கிச் சொல்லி, வாயில் எதிர் கொண்டது, உடனிலைக் கிளவி வகையால். (நேர்தல் - உடன்படுதல்.)

கூற்று விளக்கம்

தலைவன், பரத்தமைக்குணம் கொண்டவனாய் இருத்தலை அறிந்து தலைவி மிகுந்த வருத்தம் கொண்டிருந்தாள். தலைவன், இல்லத்திற்கு மீண்டு வந்தபோது, தலைவி அவனை ஏற்க உடன்படவில்லை. தோழி, அவர்களுக்கிடையே உடம்பாடு உண்டாக்குவிக்கும் வகையில், தலைவனைக் குறை கூறுவாள்போலத் தலைவியின் மனம் இரங்குமாறு கூறியது.

தடந்தாள் தாழைக் குடம்பை, நோனாத்
தண்தலை கமழும் வண்டுபடு நாற்றத்து
இருள்புரை கூந்தல் பொங்குதுகள் ஆடி,
உருள்பொறி போல எம்முனை வருதல்,
அணித்தகை அல்லது பிணித்தல் தேற்றாப்
பெருந்தோள் செல்வத்து இவளினும் எல்லா!
எற்பெரிது அளித்தனை, நீயே; பொற்புடை
விரிஉளைப் பொலிந்த பரியுடை நன்மான்
வேந்தர் ஒட்டிய ஏந்துவேல் நன்னன்
கூந்தல் முரற்சியின் கொடிதே;
மறப்பல் மாதோ,நின் விறல்தகை மையே.

தெளிவுரை

தலைவ! கூட்டில் இருக்க இயலாத ஒரு வண்டு, பெரிய அடிப் பகுதியைக் கொண்ட தாழையில் அமைந்த குளிர்ச்சி பொருந்திய நறுமணம் மிகுதியாய்க் கமழ்வதும், வண்டுகள் மொய்க்கின்ற நறுநாற்றத்தைக் கொண்டதுமான மலர்களைச் சூடியுள்ள, இருளைப்போலும் கருமையான மகளிரது கூந்தலை நோக்கிச் சென்றது. அங்கிருந்த பூக்களில் உள்ள மிகுதியான மகரந்தத்

துகள்களில் ஆடியதனால் மயக்கமுற்று நிலத்தே உருண்டும் விழுவதாயிற்று. அதனைப்போல எம்முன்பு வந்து நீ வருந்துவது உனக்கு அழகாமோ? தலைவி, தன்னை அணிகளால் அழகு செய்துகொள்வதன்றி, உன்னைப் பிரியா வகையில் பிணிக்கும் திறமை எதையும் கொண்டிராதவள். பெருத்த தோள்களாகிய செல்வத்தைக் கொண்ட இவளிடத்திலன்றி வேறு நீ எவரிடத்து மிகுந்த அன்பு காட்டுகின்றனையோ?

நன்னன் என்பான், அழகிய விரிந்த பிடரிமயிரால் பொலிவு பெற்றதும், விரைகின்ற செலவினைக் கொண்டதுமான நல்ல குதிரைப் படைகளை உடையவன்; பகையரசர் பலரையும் தோற்றோடச்செய்து வெற்றிவேலை ஏந்தியவன். தோற்றோடிய அரசர்க்குரிய உரிமை மகளிரின் கூந்தலைக் கொய்து முறுக்கிய கயிற்றாலே அவர்களின் போர்யானைகளைப் பிணித்துக் கொண்டு வந்தவன். நீ தலைவியைப் பிரிந்து சென்ற செய்கை அந்நன்னனது செய்கையினும் கொடியதாகும். ஆதலால், வலிமையான உன் தகுதிப்பாட்டினை நான் மறப்பேன்.

கருத்து

'நன்னன் தன் பகையரசர் மகளிர் கூந்தலைக் கொய்து கயிறாய்த் திரித்த அக்கொடுமையைக் காட்டிலும் மிகவும் கொடுமையானது, நீ தலைவியைப் பிரிந்த செயல்.'

விளக்கம்

மணத்தினாலே சிறப்புற்ற தாழையில் அமைந்த தன் இருப்பிடத்தை வெறுத்தது, ஒரு வண்டு; அஃது அங்கிருந்து சென்று, பிற பூக்களாலே அழகுபெற்ற மகளிரது கூந்தலிடத்தே மொய்த்தது; அப்பூக்களிலுள்ள துகளிலே ஆடியபடி, மயங்கித் தரையிலே வீழ்ந்தது. அதுபோல, நீயும் உன் மனைக்குரிய சிறந்தவளாகிய இவளை வெறுத்துச் சென்றாய்; பகட்டுக் கவர்ச்சியினராகிய பரத்தையர்களிடத்தே கூடிக் களித்து மயங்கினாய்; அதற்குரிய அடையாளங்கள் உன் மேனியிலே தோன்றும்படி எம் முன்னேயும் வந்து தாழ்ந்து நிற்கிறாய்" எனத் தலைவனைக் குறை கூறுகிறாள், தோழி.

பயன்

தோழியின் கூற்றைக் கேட்ட தலைவன் தன் குற்றத்தை உணர்ந்து நாண, தன் முன்னே தலைவனைப் பழித்தலைப் பொறாதவளான தலைவியும் தோழியைக் கடிந்து, அவனை ஏற்றுக்கொள்வதற்கு முற்படுவாள்.

குறிப்பு

நன்னன் 'பாரம்' என்னும் ஊருக்குத் தலைவன்; பிண்டன் முதலிய வேந்தரை வென்று அழித்தவன். அதனோடு நில்லாமல் அவர் உரிமை மகளிரைப் பற்றி, அவர்தம் கூந்தலைக் களைந்து, அக்கூந்தலைக் கயிறாய்த் திரித்துக்கொண்டான்.

சொற்பொருள்

1. தடந்தாள் - பெரிய அடிப்பகுதி; தாழை - தாழை மரம்; குடம்பை - கூடு; நோனா - பொறுக்க மாட்டாது.
2. தண்தலை கமழும் - குளிர்ந்த மிகுதியான மணம் வீசும்; படு - படியும்.
3. பொங்கு துகள் - மிகுதியான மகரந்தத்தூள்.
4. உருள் பொறி - உருண்டை வடிவமான வண்டு; எம்முனை - எம் முன்னே.
5. அணித்தகை அல்லது - அணி வகைகளால் அழகு செய்து கொள்ளுதல் அல்லது; பிணித்தல் - (பிரியாது இருக்குமாறு) அன்பினால் கட்டுண்ணச்செய்தல்; தேற்றா - அறியாத.
6. இவள் - இத்தலைவி; எல்லா - தலைவ!
7. எற்பெரிது அளித்தனை - எவரிடத்து மிகவும் அன்பு செலுத்தினை; பொற்புடை - அழகிய.
8. விரி - விரிந்த; உளை - பிடரிமயிர்; பரியுடை - சிறந்த வேகத்தைக் கொண்ட; நன்மா - நல்ல குதிரை.
9. ஓட்டிய - வென்று துரத்திய; ஏந்துவேல் - உயர்ந்த வேற்படை; நன்னன் - மன்னருள் ஒருவன்.
10. கூந்தல் முரற்சி - கூந்தலால் முறுக்கேறிய கயிறு.
11. விறல் தகைமை - வலிமையான தகுதிப்பாடு; மறப்பல் - மறப்பேன்.

தோழி கூற்று

குறுந்தொகை 309 **உறையூர்ச் சல்லியன் குமாரன்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த கிழவற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

(வாயில் - தூது, சமாதானப்படுத்த முயல்வது. நேர்தல் - அதற்கு உடன்படுதல்.)

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்து வந்த தலைவனை நோக்கி, 'நீ எங்கட்கு இன்னாதன பல செய்யினும் உன்னிடம் நாங்கள் அன்புடனேயே இருப்போம்' என்று கூறித் தோழி வாயில் நேர்ந்தது.

கைவினை மாக்கள்தம் செய்வினை முடிமார்,
சுரும்புஉண மலர்ந்த வாசம் கீழ்ப்பட,
நீடின வரம்பின் வாடிய விடினும்,
'கொடியோர் நிலம்பெயர்ந்து உறைவேம்' என்னாது,
பெயர்த்தும் கடிந்த செறுவில் பூக்கும்
நின்ஊர் நெய்தல் அனையேம் பெரும!
நீஎமக்கு இன்னாதனபல செய்யினும்,
நின்இன்று அமைதல் வல்லா மாறே.

தெளிவுரை

உழவுத்தொழில் புரியும் உழவர், தம் தொழிலைச் செய்யும் போது வயலில் வண்டு உண்ணும்படி மலர்ந்துள்ள நெய்தல் மலரைக் கொடியோடு பறித்து, அம்மலரின் மணம் கெடும்படி, வரப்பின்மீது எறிவர்; ஆயினும், அம்மலர்கள், தமக்கு இக் கொடுமையைச் செய்த கொடியோரது வயலில் பூவாது வேறு நிலத்தில் சென்று பூப்போம் என்று கருதாது மீண்டும் அவ் வயலிலேயே பூக்கும். உன் ஊர் வயலிலுள்ள நெய்தல் பூக்களின் இத்தன்மையைக் கொண்டவர்கள், நாங்கள். நீ எமக்கு இன்னாதன பலவற்றைச் செய்தாலும், நீயின்றி வாழ்தல் எம்மால் இயலாது என்பதால் உன்னையே ஏற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளோம்.

கருத்து

'தலைவ! நீ இன்றி எம்மால் வாழ இயலாது என்பதால், நீ இன்னாதன செய்யினும் உன்னையே ஏற்றுக்கொள்ளும் நிலையிலுள்ளோம்.'

விளக்கம்

தலைவ! உன் ஊரில் உழவுத்தொழில் புரியும் உழவர்கள், தமது தொழிலைச் செய்யும்போது, வயலிலே வண்டுகள் தேனுண்ணுமாறு மலர்ந்துள்ள நெய்தற்பூக்களைக் கொண்ட கொடிகளைக் களையாகக் கருதிப் பிடுங்கி, அம்மலர்களின் மணம் கெடுமாறு வரப்பிலே போடுவர். இவ்வாறு செய்த கொடியவர் வயலில் நாம் மீண்டும் முளைக்கக்கூடாது என்று கருதாமல் அவை, அவ்வயலிலேயே முளைத்துப் பூக்கின்றன. நாங்கள் உன் ஊர் நெய்தல் மலர் போன்றவர்களே! நீ எமக்கு இன்னாதன பலவற்றைச் செய்தாலும், நீ இன்றி வாழ்தல் இயலாது என்பதால் உன்னுடனேயே இருப்போம்.

சொற்பொருள்

1. கைவினை மாக்கள் - கையால் தொழில் செய்யும் உழவர்; செய்வினை - செய்யும் தொழிலை; முடிமார் - முடிப்பதற்காக.
2. சுரும்பு - வண்டு; வாசம் - மணம்; கீழ்ப்பட - கெடும்படியாக.
3 நீடின - நீண்ட; வரம்பு - வயல் வரப்பு; வாடிய - வாடும்படி; விடினும் - பிடுங்கிப் போட்டாலும்.
4. கொடியோர் - நம்மைப் பிடுங்கி எறிந்த கொடியவர்; பெயர்ந்து - விட்டு நீங்கி; உறைவேம் - (வேறு நிலம் சென்று) வாழ்வோம்; என்னாது - என்று கருதாது.
5. பெயர்த்தும் - மீண்டும்; கடிந்த - தம்மைக் களைந்த; செறுவில் - வயலில்.
6. அனையேம் - போன்றவர்.
7. இன்னாதன - துன்பங்கள்.
8. நின் இன்று - நீ இல்லாமல்; அமைதல் - வாழ்தல்; வல்லாம் - வல்லவர் அல்லேம்.

தோழி கூற்று

குறுந்தொகை 45 **ஆலங்குடி வங்கனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகற்குப் பாங்காயினார் வாயில் வேண்டியவழித் தோழி வாயில் நேர்ந்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்த தலைவன், ஊடல் கொண்டுள்ள தலைவியிடம் தூதரை அனுப்ப, அவர் சென்று தலைவியை ஊடலைத் தவிர்க்கும்படி வேண்டினர். தலைவி ஊடலைத் தவிர்த்ததைக் கண்ட தோழி, அதனைத் தூதரிடம் கூறியது.

காலை எழுந்து, கடுந்தேர் பண்ணி,
வால்இழை மகளிர்த் தழீஇய சென்ற
மல்லல் ஊரன், 'எல்லினன் பெரிது'என,
மறுவரும் சிறுவன் தாயே;
தெறுவது அம்ம,இத் திணைப்பிறத் தல்லே.

தெளிவுரை

மகனைப் பெற்ற தாயாகிய தலைவி, காலையிலே எழுந்தாள். அப்போது, வளப்பம் பொருந்திய ஊரனாகிய தலைவன், விரைந்து செல்லும் தன் தேரைப் பயணத்திற்கு ஏற்றதாய்ச் செய்து, ஒளி பொருந்திய அணிகலன்களைக் கொண்ட இளம்பரத்தையொருத்தியைத் தழுவுவதற்குச் சென்றனன். அவன் இப்போது விளக்கமான ஒப்பனையுடன் மீண்டு வருவதைக் கண்டனள். அவனது அத்தோற்றம் அவன் பரத்தை வீட்டி லிருந்து வருவதைக் காட்டுவதால், தலைவி அவனை இப்போது ஏற்றுக்கொள்ளத் தயங்கி மனம் மறுகுகின்றாள். எனினும், வேறு வழியின்றிக் கற்புக் காரணமாய் உடம்படு கிறாள். கற்பு நெறியில் வாழும் குடியில் பிறத்தல் கொடுமை வாய்ந்ததே!

கருத்து

'கற்பினைப் போற்றும் குடியிலே பிறந்தவள், தலைவி. கணவன் தவறு செய்தாலும் அவனை ஏற்றுக்கொள்வாள்.'

விளக்கம்

தலைவன், காலையில் எழுந்தவுடன் தேரேறிப் பரத்தையைத் தழுவும்பொருட்டு விரைந்து சென்றுவிட்டனன். அவன் செயலை நினைந்து தலைவி மிகவும் வருந்துகின்றாள். எனினும், மகனுக்குத் தாயாய் இருக்கும் அவள் அவனை ஏற்கிறாள். கற்பு நெறியில் வாழும் குடியில் பிறந்தால், இத்துன்பத்தை அனுபவித்துத்தான் தீரவேண்டும்.

சொற்பொருள்

1. கடுந்தேர் - விரைந்து செல்லும் தேரை; பண்ணி - பயணத்திற்கு ஏற்றதாய்ச் செய்து.
2. வால் இழை மகளிர் - ஒளி பொருந்திய அணிகலன்களை அணிந்த பெண்கள், பரத்தையர்; தழீஇய - தழுவுவதற்காக.
3. மல்லல் - வளப்பம்; ஊரன் - தலைவன்; எல்லினன் - (பரத்தை யர்க்கு நண்பன் என்பதிலே பெரிதும்) விளக்கமுற்றிருப்பவன்.
4. மறுவரும் - மனம் குழம்புதல், வருந்துதல்.
5. தெறுவது - துயரைத் தருவது; திணைப் பிறத்தல் - கற்பு நெறியில் வாழும் குடியிலே பிறத்தல்.

தோழி கூற்று

குறுந்தொகை 9 **கயமனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வீடு சென்றிருந்தமையால் தலைவி ஊடியிருந்தாள். அந்த ஊடலைத் தீர்க்க உதவுமாறு தலைவன் தோழியின் துணையை நாடியபொழுது, தோழி, தலைவியின் ஊடல் தீரும் என்னும் குறிப்பைத் தலைவனிடம் கூறியது.

யாய்ஆ கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பில் தமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே;
பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும்
கயம்மூழ்கு மகளிர் கண்ணின் மானும்
தண்ணம் துறைவன் கொடுமை
நம்முன் நாணிக் கரப்பா டும்மே.

தெளிவுரை

தலையில் சூடப்படாமல், செப்பினுள்ளே தனித்து வைக்கப் பட்டு இறுக்கமான மூடியினால் மூடப்பெற்ற பூக்கள் எவ்வளவு வாடியிருக்குமோ, அவ்வளவிற்கு மாந்தளிர் போன்ற நிறத்தைக் கொண்ட தலைவியின் உடல் வாடி மெலிந்துள்ளது. மீன்கள் கூட்டமாய் நிறைந்துள்ள கரிய கழிகளிலுள்ள நீர்ப்பரப்பில் பசுமையான இலைகளுக்கு மேலே திரண்ட தண்டினைக் கொண்ட நெய்தல் மலர்கள், அலைகள் பெருகிவரும் போது, ஆழமான குளத்தில் மூழ்கும் மகளிர் கண்களைப் போலக் காணப்படும். அத்தகைய காட்சி கொண்ட குளிர்ச்சி பொருந்திய துறையை உடைய தலைவனது கொடுமையைத் தலைவி நம் முன்னே சொல்வதற்கு வெட்கப்பட்டு, மறைத்துப் பேசுகிறாள். இத்தகைய கற்புக்கடம் பூண்ட நம் தலைவி, தாய்போல மதிக்கத்தக்க பெருமை வாய்ந்தவள்.

கருத்து

'தலைவி கற்பு நெறி வழி ஒழுகியவளாதலின், தலைவனின் கொடுமையை மறந்து அவனை ஏற்றுக்கொள்வாள்.'

விளக்கம்

"தலைவ! நீ பரத்தையை நாடிச் சென்றதால் வாடி வதங்கிய மலர்போலத் தலைவியின் மேனி மெலிந்து அழகு கெட்டது; கற்பு நெறியில் வாழ்வதைத் தன் கடமையாய்க் கொண்டுள்ள அவள் நீ செய்த குற்றத்தை மறந்து, நீ செய்த கொடுமையை வெளியில் சொல்ல நாணமுற்றுத் தன்னுள்ளேயே மறைத்துக்கொண் டுள்ளாள். தாய்போல மதிக்கத்தக்க பெருமையைக் கொண்ட

அவள், உன்னை அன்புடன் ஏற்றுக்கொள்வாள். அஞ்சாது செல்'' எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

உவமை விளக்கம்

தலையில் சூட வேண்டிய பூவைச் செப்பினுள் இட்டு இறுக்கமாய் மூடி வைத்தால் அது வதங்கி அழகிழப்பது போல, உன்னால் நுகரப்படாத தலைவியின் உடல் சுருங்கி அழகிழந்துள்ளது.

கழியில் வெள்ளம் பெருகும்போதெல்லாம் நெய்தல் மலர்கள் முழுகி எழும். இத்தோற்றம், குளங்களில் குளிக்கும்போது மூழ்கி எழும் பெண்களின் கண்களைப்போலக் காட்சியளிக்கின்றன. நீல மலர்கள் பெண்களின் கரிய கண்கள் போன்றுள்ளன என்பதாம்.

குறிப்பு

நீல மலர் 'கயம் மூழ்கு மகளிர்' கண்ணினைப் போன்றது எனும் அரிய உவமையைப் பயன்படுத்தியுள்ளமையால், இப்பாடலாசிரியர் கயமனார் என்று வழங்கப்படுகிறார். இயற்பெயர் அறியோம்.

சொற்பொருள்

1. யாய் ஆகியளே - அன்னைபோல் கற்பிற்சிறந்த தலைவி; மாயோள் - மாந்தளிர் நிறத்தைக் கொண்டவள்.
2. மடைமாண் - இறுக மூடப்பட்டுள்ள; செப்பில் - சிமிழினுள்; தமிய வைகிய - தனியாய் இருக்கின்ற.
3. பெய்யா - சூட்டிக்கொள்ளப்படாத; மெய் - உடல்; சாயினள் - மெலிந்தாள்.
4. பாசடை - பசுமையான இலை; நிவந்த - உயர்ந்து காணப்படும்; கணைக்கால் - திரண்ட காம்புகள்.
5. இனமீன் - மீன் கூட்டம்; இருங்கழி - பெரிய உப்பங்கழி; ஓதம் - வெள்ளம்; மல்குதொறும் - பெருகும்போதெல்லாம்.
6. கயம் - குளம்; மானும் - காணப்படும்.
8. நம்முன் நாணி - நம் எதிரில் சொல்லுவதற்கு வெட்கப்பட்டு; கரப்பு ஆடும் - தன் உள்ளத்திலே மறைத்துக்கொண்டு வேறு மொழிகளைப் பேசிக்கொண்டிருப்பாள்.

தோழி கூற்று

குறுந்தொகை 10 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகற்குத் தோழி வாயில் நேர்ந்தது.

கூற்று விளக்கம்

பரத்தை வீட்டிற்குச் சென்று திரும்பிய தலைவன், தலைவி கொண்டிருக்கும் ஊடலைத் தீர்த்துத் தன்னைக் கூட்டுவிக்கத் தோழியின் துணையை நாடினான். அப்போது தோழி, "தலைவ! நீ தலைவிக்கு மிகவும் கொடுமை செய்துள்ளாய்; ஆயினும், உயர்ந்த கற்பொழுக்கம் கொண்ட அவள் உன்னை வரவேற்க வருகிறாள், பார்" எனத் தலைவனிடம் கூறி வாயில் நேர்ந்தது.

யாய்ஆ கியளே விழவுமுத லாட்டி;
பயறுபோல் இணர பைந்தாது படீஇயர்
உழவர் வாங்கிய கமழ்பூ மென்சினைக்
காஞ்சி ஊரன் கொடுமை
கரந்தன ளாகலின், நாணிய வருமே.

தெளிவுரை

விழாவினைக் கொண்டாடுதலால் மகிழ்ச்சி ஏற்படும். அத்தகைய மகிழ்ச்சியினைக் கொண்டிருக்கத் தக்கவள், தலைவி. பயற்றங்காயைப் போன்று கொத்துக்கொத்தாய் மலர்ந்த பூக்களின் பசுமையான மகரந்தத்தூள் தங்கள் உடலில் படும்படி, உழவர் வளைக்கும்படியான மணம் கமழும் மலர்கள் நிறைந்த மெல்லிய கிளைகளைக் கொண்ட காஞ்சி மரங்கள் நிற்கும் ஊரினையுடையவன், தலைவன். அவன் தன்னைப் பிரிந்து பரத்தையிடம் சென்ற கொடுமையை வெளியில் சொல்லாமல் மறைத்திருந்தவள், தலைவி. இவள் தாய்போலும் தன்மையினள். ஆதலின், தலைவன் நாணமடையும்படியாக அவனை வரவேற்க அவளே வருகிறாள்.

கருத்து

'தலைவன் செய்த கொடுமையை மறந்து அவனை வரவேற்கத் தலைவி தானே வருகின்றாள், காண்க.'

விளக்கம்

தலைவன் கொடுமை புரிந்தான்; ஆயினும், கற்பிற்சிறந்த தலைவி, அவன் கொடுமையைத் தன் உள்ளத்திலேயே மறைத்துக்கொண்டாள். தலைவன் நாணமடையும்படி அவனை வரவேற்க அவளே முன்வருகிறாள்.

உள்ளுறை

உழவர்கள் உடலில் உதிர்ந்து படர்ந்த மகரந்தத்தூள்கள் அவர்கள் காஞ்சி மரத்தின் கிளைகளை வளைத்ததைச் சுட்டிக் காட்டிவிடுகின்றன. இத்தொடர்வழி, தலைவன் பரத்தை வீட்டிற்குப் போய் வருகிறான் என்பதை அவன் உடம்பில் பூசப்பட்டுள்ள சந்தனம் முதலிய நறுமணப் பொருள்கள் காட்டிவிடுகின்றன என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப் படுகிறது.

சொற்பொருள்

1. யாய் - தாய்; விழவு - திருவிழா.
2. இணர - பூங்கொத்து; படீஇயர் - படியும்படி.
3. வாங்கிய - வளைத்த; சினை - கிளை.
4. காஞ்சி - காஞ்சி மரங்கள்; கொடுமை - பிரிந்து சென்ற கொடுமை.
5. கரந்தனள் - வெளியில் சொல்லாமல் மறைத்தனள்; நாணிய - தலைவன் நாணும்படியாக; வருமே - அவனை வரவேற்கத் தானே முன்வருகிறாள்.

தோழி கூற்று

கலித்தொகை 70 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன் தோழியை வாயில் வேண்ட அவள் வாயில் நேர்வாள் நெருங்கிக் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீட்டில் தங்கியிருந்த தலைவன் தன் வீட்டிற்கு வந்தான். ஊடல் கொண்டிருந்த தலைவி அவனை வீட்டினுள் அனுமதிக்கவில்லை. அதனால் தலைவன் தோழியை அணுகி, அவளைத் தலைவியிடம் தூது செல்லும்படி வேண்டிக்கொண்டான். அவள் முதலில் மறுத்துப் பிறகு ஒப்புக்கொண்டாள். அப்பொழுது அவள் தலைவனைக் கண்டித்துக் கூறியது.

தரவு

மணிநிற மலர்ப்பொய்கை, மகிழ்ந்தாடும் அன்னம்தன்
அணிமிகு சேவலை அகல்அடை மறைத்தெனக்
கதுமெனக் காணாது கலங்கி,அம் மடப்பெடை
மதிநிழல் நீருள்கண்டு, அதுஎன உவந்துஓடித்
துன்னத்தன் எதிர்வரூஉம் துணைகண்டு, மிகநாணிப்
பன்மலர் இடைப்புகூஉம் பழனம்சேர் ஊர!கேள்:

தாழிசை

நலம்நீப்பத் துறந்துஎம்மை, நல்காய்நீ விடுதலின்,
பலநாளும் படாதகண், பாயல்கொண்டு இயைபவால்;
துணைமலர்க் கோதையார் வைகலும் பாராட்ட,
மணமனைத் ததும்பும்நின் மணமுழவந்து எடுப்புமே.

அகலநீ துறத்தலின், அழுதுஓவா உண்கண்,எம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துதல் இயைபவால்;
நினக்குஒத்த நல்லாரை நெடுநகர்த் தந்து,நின்
தமர்பாடும் துணங்கையுள் அரவம்வந்து எடுப்புமே.

வாராய்நீ துறத்தலின், வருந்திய எமக்கு,ஆங்கே
நீர்இதழ் புலராக்கண் இமைகூம்ப இயைபவால்;

நேரிழை நல்லாரை நெடுநகர்த் தந்துநின்
தேர்பூண்ட நெடுநல்மான் தெள்மணிவந்து எடுப்புமே
எனவாங்கு–

சுரிதகம்

மெல்லியான் செவிமுதல் மேல்வந்தான் காலைபோல்
எல்லாம் துயிலோ எடுப்புக – நின்பெண்டிர்
இல்லின் எழீஇய யாழ்தழீஇ, கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்.

தெளிவுரை

தன்னை வேண்டி நிற்கும் தலைவனிடம் தோழி, "எம் தலைவ! உன் ஊரில் பல வண்ண மலர்கள் உள்ள பொய்கையில் அன்னப் பெடையும் அதன் சேவலும் மகிழ்ச்சியாய் விளையாடிக்கொண் டிருந்தன. அப்பொழுது, அன்னச்சேவலை ஒரு தாமரை மலர் மறைத்தது. சட்டென அதைக் காணாத பெண்அன்னம் வருந்தியது. அவ்வேளையில், அக்குளத்து நீருக்குள் வானத்துச் சந்திரனின் நிழல் படிந்து காணப்பட்டது; அந்நிழலை, அந்தப் பெடை தன் சேவல் என்று கருதி அதனிடம் விரைந்து சென்றது. அப்பொழுது உண்மையான சேவல் அன்னத்திற்கு எதிர்வந்து நின்றதைக் கண்டதும் அது சந்திரன் நிழலைத் தன் சேவல் என எண்ணியதற்கு நாணி, மலர்களினிடையே சென்று தன்னையே ஒளித்துக்கொண்டது. இத்தகைய மருத வளமிக்க வயல்களைக் கொண்ட ஊருக்குத் தலைவன் நீ! நான் சொல் வதைக் கேள்.

தலைவியின் நலம் கெடும்படி நீ எம்மைவிட்டு நீங்கிப் பல நாள் ஆயின. உன் அருள் தலைவிக்குக் கிடைக்காமையால் அவள் கண்கள் தூக்கத்தை இழந்தன. பல நாளும் உறங்காத அவள், ஒருநாள் சற்றே அயர்ந்தமையால் அவள் கண் இமைகள் பொருந்தின. ஆனால்,பரத்தையர் சேரியில் நீ அவர்களோடு கூடிக் களித்தபோது எழுந்த முரசின் ஒலி, அத்தூக்கத்தையும் கலைத்துவிட்டது.

பல நாள் நீ தலைவியைக் காண வாராமலேயே இருந்தபோது, வாடிய அவள் கண்கள், நீரைச் சொரிந்துகொண்டே இருந்தன; அவள் தன் புதல்வனை மெல்லத் தழுவியதால் அவை இமை

பொருந்தின. அப்போது உன் விருப்பத்துக்குரிய பெண்ணை, உனக்கு வேண்டியவர் கொண்டுவந்து சேர்த்துப் பாடல் நிகழ்த்த, அதற்கேற்ப நீ ஆடிய துணங்கைக்கூத்தின் ஒலி நீ அமைத்த பெரிய வீட்டில் வந்து ஒலித்து அவளை எழுப்பி விட்டது.

நீ வாராமல் கைவிட்டதால் வருந்தி அழுத ஈரம் புலராத அவள் கண்ணிமைகள் சற்றே பொருந்தின. அந்த நேரத்தில், பரத்தையரை நீ இருந்த நெடிய வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்த தேரில் பூட்டப்பட்டிருந்த குதிரைகளில் கட்டப் பட்டிருந்த மணிகள் ஒலிக்க, அந்த ஒலி தலைவியின் தூக்கத்தைக் கெடுத்துவிட்டது.

இவ்வாறு பரத்தையர் சேரியில் பல வகையான ஒலிகள் எழுந்தன. குறைந்த அளவு படை கொண்ட மன்னன் தன் கோட்டை மதிலை அடைத்திருப்பான். மதிலை முற்றுகை யிட்டவன் முரசறைந்து ஒலி எழுப்புவான். அந்த ஒலி போன்று, உன் பரத்தையர் சேரியில் எழுப்பப்படும் பல வகையான ஒலிகளால் தலைவியின் தூக்கத்தைக் கெடுப்பது குற்றமென உனக்குத் தோன்றவில்லையா? உன் பாணன் உன் பரத்தையரின் யாழைச் சுமக்கின்றவனே அன்றி இசையைக் கற்றவன் அல்லன். இந்நேரம் அவன் உன்னைத் தேடி வாராத நேரம்போலும். அதனால்தான் இங்கே நீ வந்திருக்கிறாய்.

கருத்து

தலைவன் தோழியை அணுகித் தலைவியின் ஊடலைத் தீர்த்து வைக்குமாறு வேண்டுகிறான். தலைவி வருத்தம் கொள்வதற்குரிய காரணங்கள் பலவற்றையும் தோழி எடுத்துரைத்து, இனியாவது இத்தகைய துன்பங்களை இழைக்காதிருக்க வேண்டுமெனக் கண்டிப்பான முறையில் கூறினாள்.

விளக்கம்

சங்க இலக்கியங்களிலுள்ள அகத்துறையினைச் சார்ந்த பாடல்களுள் பலவற்றில் தலைவிக்கும் தோழிக்கும் வேறு பாடின்றிக் கூறப்படும் கூற்றுகள் மிகுந்து காணப்படும். தோழி, தலைவியோடு மிகுந்த நெருக்கம் கொண்டவள் என்பதால்

தலைவியின் கருத்துகளைத் தன் கருத்துகள் போலவே கூறுவாள். அந்த நிலையிலே கூறப்பெற்ற பாடல் இது.

உள்ளுறை

"மணிநிறப்.... இனப்பு கூஉம்" என்னும் தொடர்மூலம், பரத்தையர் சேரியில் காமக்கிழத்தி தன் தலைவனோடு விளையாடிக்கொண்டிருந்தாள். அப்போது தலைவனைச் சட்டென்று காணாது அவள் வருந்தினாள். மற்றொருவன் வேறு பரத்தை ஒருத்தியை மணம் கொள்கின்ற காட்சியைத் தொலைவிலே பார்த்த அவள், அவனைத் தன் தலைவன் என்று தவறாய்க் கருதி அவனை நோக்கிச் சென்றாள். அப்போது அவள் தலைவன் எதிரே வர, நாணி, தோழியருக்கிடையே மறைந்துகொண்டாள், என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அன்னம் - அன்னப்பறவை.
2. அகல் அடை - அகன்ற இலை.
3. கதும் என - திடீரென்று; மடப்பெடை - இளம் பெண் அன்னம்.
4. அது என - அது தன் ஆண் துணை என்று கருதி.
5. துன்ன - நெருங்கி வர; எதிர்வரும் - எதிரே வருகின்ற; துணை - ஆண் அன்னம்.
6. இடைப்புகூஉம் - இடையே புகுந்து (மறைந்துகொள்ளும்); பழனம் - வயல்.
7. நல்குதல் - அருளுதல்.
8. படாத கண் - உறங்காத கண்; பாயல் கொள்ளுதல் - தூங்குவதற்காக; இயைப - (இமைகள்) பொருந்த.
9. கோதையார் - மாலையையணிந்த பெண்டிர், பரத்தையர்; வைகலும் - நாள்தோறும்.
10. ததும்பும் - ஒலிக்கும்; எடுப்பும் - கலைத்துவிடும்.
11. அகல - பல நாள்; ஒவா - நீங்கா.
12. மெய் தீண்ட - உடலைத் தழுவியதால்.
13. நல்லார் - பரத்தையர்; நெடுநகர் - பெரிய வீடு.
14. தமர் - பரத்தையராகிய உறவினர்; துணங்கை - இருகையினையும் முடக்கி ஆடுதல்; அரவம் - ஒலி.
15. வாராய் நீ - நீ வாராது; துறத்தல் - கை விடுதல்.

16. நீர் இதழ் - நீர் நிறைந்த மலர் போலும்; புலராக் கண் - நீர் அறாத கண்கள்; இமை கூம்ப - கண் இமைகள் குவிய.
17. நெடுநகர் - நெடிய வீடு; தந்து - கொண்டுவந்து.
18. மான் - குதிரை; தெள்மணி - தெளிந்த மணியோசை.
20. மெல்லியான் - வலிமை குறைந்தவன்; மேல்வந்தான் - படையெடுத்து வந்தவன்.
21. எல்லாம் - எழுப்பிய ஒலிகள் எல்லாம்.
22. எழீஇய - வாசித்த.
23. புகுதராக் கால் - வந்து சேராதபோது.

தோழி கூற்று

நற்றிணை 210 **மிளைகிழான் நல்வேட்டனார்**

திணை : மருதம்

கூற்று

தோழி தலைமகனை நெருங்கிச் சொல்லுவாளாய் வாயில் நேர்ந்தது.

கூற்று விளக்கம்

பரத்தையின் வீட்டை நாடிச் சென்றான், தலைவன். அதனால் தலைவி கொண்டுள்ள சினத்தைப் போக்கத் தோழியின் உதவியை நாடினான், தலைவன். அவள், தலைவனின் பரத்தமையைச் சான்றோர் ஏற்கார் எனக் கடிந்து மொழிந்து, பின் தலைவியைப் புலவி தீரத் துணை செய்ய முற்பட்டது.

அரிகால் மாறிய அம்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈரச் செறுவின்,
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர!
நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்றுதன் செய்வினைப் பயனே;
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்

புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம் செல்வம்என் பதுவே.

தெளிவுரை

நெல்லறுத்து முடித்த பின் அவ்வகன்ற வயலை மீண்டும் உழுது விதைக்கும்பொருட்டு உழவர்கள் விதைகளை ஓலைப் பெட்டியில் கொண்டுசெல்வர். விதைத்துத் திரும்புகையில் அந்த ஓலைப்பெட்டி நிறைய மீன்களைக் கொண்டுவருவர். இத்தகைய புது வருவாயைக் கொண்ட ஊரனே! அரசரிடம் சிறப்புப் பெறுதலும், அவன் முன்பு விரைந்து செல்லும் தேர், குதிரை, யானை ஆகியவற்றின்மேல் ஏறிச் செல்லுதலும் அரிய செல்வம் என்று நீ கருதுகின்றாய்; அவை செல்வமாகா; அவையாவும் முன்பு செய்த வினைப்பயனால் ஏற்படுவன. சான்றோர் பலரும் செல்வம் என்று போற்றுவது எதனை என்று ஆராயின், அது தம்மிடம் அடைக்கலமென வந்தவர்க்கு நேரும் துன்பம் துடைக்கும் நற்செயலேயாம்; துன்பப்படுவோரின் துன்பத்தை நீக்கி அவரிடம் அன்போடு இருக்கும் பண்பே செல்வம்! இதனை நீ அறிந்திலையே!

கருத்து

'எவரையும் நம்பியிராதவர், பரத்தையர் ஆவர். தலைவியோ உன்னையே உயிர் என்று கொண்டு வாழ்பவள். அவளைக் கைவிட்டு, அன்பற்றவனாய்ப் பரத்தையை நாடிச் செல்வது பண்புடைச் செயல் ஆகாது என்பதை அறிக.'

விளக்கம்

"ஏவலர்களைக்கொண்டு வேலை வாங்குவதும், விரைந்து செல்லும் தேர், யானை முதலியவற்றை வைத்திருப்பதும் செல்வ மென்று கருதப்பட மாட்டா. தன்னை அடைந்தோரின் துன்பம் தீர்ப்பதே, உண்மையான செல்வம். இதுவே பண்பாயிருக்க, நீயோ உன்னையே நம்பி உன்னை அடைந்திருக்கும் தலைவியை வருத்தமுறச் செய்திருக்கிறாய். ஆதலால், நீ வறியவனினும் வறியவன்" என்று தோழி தலைவனைக் கடுமையாய்க் கண்டித் தாள். (இனியாவது, தலைவிமீது அன்பு செலுத்தும் செல்வனாய்

விளங்கு எனத் தலைவனிடம் கூறியதோடு, தலைவியின் மனத்தையும் மாற்றி இணங்கச்செய்தாள்.)

உள்ளுறை

“வித்தொடு சென்ற வட்டி பற்பல மீனொடு பெயரும்” : அஃதாவது விதைகளைக் கொண்டுசென்ற ஓலைப்பெட்டியில் மீனொடு திரும்புவர் என்பதாம். இத்தொடர்மூலம், பரத்தையரைக் கொணர்ந்து தலைவனோடு சேர்த்த பாணன், தான் விரும்பும் பொருளைப் பெற்று மீள்வான் எனும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

குறிப்பு

தன்னை அடைக்கலமென நாடி வந்து சேர்ந்தோரின் துன்பங்களை அறிந்து அவற்றை நீக்குவதே பண்பாடு; அதுவே மிகப்பெரிய செல்வமும் ஆகும்.

சொற்பொருள்

1. அரிகால் - பயிர் அறுத்த தாளடி நிலம்.
2. மறுகால் உழுதல் - மீண்டும் பயிர் செய்யக்கருதி உழுதல்; செறு - வயல்.
3. வித்து - விதை; வட்டி - விதை வைக்கப்பட்டுள்ள ஓலைப்பெட்டி.
5. நெடிய மொழிதல் - தன் பெருமிதம் புலப்படக் கூறுதல்; கடிய ஊர்தல் - விரைந்து தேரைச் செலுத்துதல்.
6. செய்வினை - தான் செய்த நல்வினை, தீவினை.
7. சேர்ந்தோர் - தன்னை அடைந்தோர்.
8. புன்கண் - துன்பம்.
9. மென்கண் - இனிதான செயல்கள்.

தோழி கூற்று

திணைமொழி ஐம்பது 36 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தோழி வாயில் நேர்வாள் கூறியது.

கூற்று விளக்கம்

தோழி தலைவன் கூறியதை ஏற்றுத் தலைவியிடம் தூது போய்க் கூட்டுவிக்க இணங்குதல்.

செந்தா மரைமலரும் செய்வயல் நல்ஊர!
நொந்தால்மற்(று) உன்னைச் செயப்படுவ(து) என்உண்டாம்?
தந்தாயும் நீயே தரவந்த நன்னலம்
கொண்டாயும் நீஆயக் கால்.

தெளிவுரை

“செந்தாமரை மலர்கள் மலர்ந்துள்ள சிறந்த நன்செய் நில வயல்களுக்கு உரிமையுடைய தலைவனே! இப்போது பரத்தைய ரிடமிருந்து பிரிந்து வந்துள்ள உன்மீது சினங்கொண்டு என்ன பயன்? மேலும், களவொழுக்கத்தில் புணர்ச்சியின்பத்தால் பேரழகைத் தந்தவனும் நீ! பிரிந்து சென்றதனால் முன்பு கொடுத்த அந்த நல்லழகினை எடுத்துக்கொண்டவனும் நீயே! அவ்வாறிருக்கும்போது உன்னை என்ன செய்ய இயலும்?” என்று கூறித் தோழி தலைவன் சொற்களை ஏற்றுக்கொண்டாள்.

கருத்து

‘எங்கட்கு எல்லாமே நீ! ஆதலால், உன் பேச்சுக்கு என்ன மறுப்புக் கூற இயலும்?’ எனத் தோழி தலைவனிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. செய் - பண்படுத்தப்பட்ட; நல்ஊர - நல்ல ஊர்களையுடைய தலைவனே!
2. உன்னை நொந்தால் - உன்மீது வருத்தமுற்றுச் சினந்தால்; செயப்படுவது - எங்களால் செய்யக்கூடியது; என் உண்டு? - என்ன உள்ளது?

3. தந்தாயும் - (களவுக் காலத்துப் புணர்ச்சியால் தலைவிக்குப் பேரழகு) தந்தவனும் நீயே; தர - நீ கொடுத்து; வந்த - உண்டாகிய, கிடைத்த; நல் நலம் - நல்ல அழகினை.
4. கொண்டாயும் - (பிரிவால்) எடுத்துக்கொண்டவனும்; நீ ஆயக்கால் - நீயே ஆனால்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 56 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்த தலைமகனின் வரவினை வேட்டுத் தோழி தலைமகட்குக் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பிரிந்து பரத்தையிடம் சென்றான். அவன் தன் வீட்டுக்கு விரும்பி வருவதைத் தலைவி ஏற்க வேண்டுமென்று தோழி தலைவியிடம் கூறியது.

வளவயல் ஊரன் மருள்உரைக்கும் மாதர்
வளைஇய சக்கரத்(து) ஆழி – கொளைபிழையா
ஒன்(று)இடை இட்டு வருமேல்நின் வாழ்நாட்கள்
ஒன்றி அனைத்தும் உளேன்.

தெளிவுரை

"*தலைவியே! மயக்கும் மொழிகளைப் பேசி, வளைந்த சக்கரங்கள் போன்ற மோதிரங்கள் அணிந்த பரத்தையரால் ஈர்க்கப்பெற்றுச் சென்றுள்ள தலைவன், இடையில் ஒருநாள் பரத்தையர் உறவை விலக்கி உன்னிடம் திரும்பி வருவானேல், அன்று வாழ்நாள்களில் பெற்ற அனைத்தையும் பெற்றதாய் மகிழ்வேன்.*"

கருத்து

தலைவியிடம் தோழி, 'தலைவன் பரத்தையரிடமிருந்து விலகி உன்னிடம் வந்தால் பெறற்கரிய பேறு பெற்றதாய் மகிழ்வேன்' என்கிறாள்.

குறிப்பு

பரத்தையிடமிருந்து பிரிந்து வரும் தலைவனைத் தலைவி தன்னிடமே இருத்திக்கொள்ள வேண்டுமென்பது, தோழியின் குறிப்பு.

சொற்பொருள்

1. வளவயல் ஊரன் - வளமான வயல்களையுடைய தலைவன்; மருள் உரைக்கும் - மாய மொழிகளைக் கூறும்; மாதர் - பரத்தையர்.
2. வளைஇய - வளைந்த; சக்கரத்து ஆழி - சக்கரம் போன்ற மோதிர மணிந்த தலைவன்; கொளை - ஏற்றுக்கொள்ளப்படுவதனின்றும்; பிழையா - தப்பி.
3. இடைஇட்டு - என்றைக்காவது இடையில் ஒருநாள்; வருமேல் - நம்மிடத்து வருவானாயின்.
4. ஒன்றி - அவனைச் சார்ந்து; அனைத்தும் - வேண்டியனவெல்லாம்; உளேன் - பெற்றவள்போல் மகிழ்வேன்.

தோழி கூற்று

ஐந்திணை எழுபது 53 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகளின் ஊடல் தீர்த்தலை விரும்பிய தலைமகன் வயத்தளாய் நின்று தலைமகளைக் கழறியது. (கழறுதல் - இடித்துரைத்தல்.)

கூற்று விளக்கம்

தலைவி தலைவனோடு கொண்ட ஊடலை நீக்க எண்ணித் தோழி, தலைவன் பக்கம் சார்ந்து தலைவியை இடித்துரைத்தது.

உள்நாட்டம் சான்றவர் தந்த நசையிற்றென்(று)
எண்ணார்க்குக் கண்ணோட்டம் தீர்க்குதும்என்(று) – எண்ணி
வழிபாடு கொள்ளும் வளவயல் ஊரன்
பழிபாடு நின்மே லது.

தெளிவுரை

"சான்றோர் ஆழ்ந்த ஆராய்ச்சியுடன் ஏற்படுத்திய இல்லற வாழ்க்கை அன்புடன் கூடியது. இதைக் கருதாது புணர்ச்சி ஒன்றையே கருதும் பரத்தையரிடத்துக் காட்டிய அருளை இனி விட்டுவிடத் தலைவன் கருதியுள்ளான். உன்னிடம் பணிவுடன் வந்துள்ளான். வளமான ஊர்களையுடைய தலைவனை நீ ஏற்றுக் கொள்ளாவிட்டால் பழி உன்னையே சாரும்; அதனால் அவனை ஏற்றுக்கொள்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

'தலைவியே! அறவாழ்க்கையை மேற்கொள்ளாப் பரத்தையரை நீங்கித் தலைவன் உன்னிடம் பணிவுடன் வந்துள்ளான். அவனை ஏற்றுக் கொள்வதே முறை.'

குறிப்பு

குடும்பம் என்னும் அமைப்பினைச் சான்றோர் ஏற்படுத்தினர் என்பது கருத்து. பரத்தையர் குடும்பப் பாங்கில்லாதவர்; ஆதலின், அவரை விலக்க வேண்டும்.

சொற்பொருள்

1. உள்நாட்டம் - ஆழ்ந்த ஆராய்ச்சி; சான்றவர் - பெரியோர்; தந்த - ஏற்படுத்திய (இல்லறம்); நசையிற்று - அன்போடு கூடியது.
2. என்று எண்ணார்க்கு - என நினையாது (கலவியொன்றனையே கருதும் பரத்தையரிடத்தில் காட்டிய); கண்ணோட்டம் - அருள்; தீர்க்குதும் - விட்டொழிப்போம்.
3. வழிபாடு கொள்ளும் - (உன்னிடம்) பணிவுடன் இருக்கும்.
4. பழி - (அவனை ஏற்றுக்கொள்ளாமையால் உண்டாகும்) பழி; பாடு - குற்றப்பாடு; நின்மேலது - உன்னையே சேரும்.

தோழி கூற்று

நற்றிணை 180 **ஆசிரியர் பெயரை அறிய இயலவில்லை**

திணை : மருதம்

கூற்று

தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி, தலைமகளிடத்துப் பொறாமை கொண்டு சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் இல்லத்திற்குச் சென்றிருந்த தலைவன் தன் வீடு திரும்பி, தலைவியின் சினத்தை நீக்கித் தன்னை அவளோடு சேர்த்து வைக்குமாறு தோழியை வேண்டினான். தோழியும் தலைவியைத் தேற்றி ஒன்றுபடுமாறு கூறினாள். தலைவி சினங்கொண்டு உடன்படாதவள் ஆயினாள். அந்நிலையில் தோழி உள்ளங் கலங்கித் தன்னைத்தானே வெறுத்துக் கூறியது.

பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை
கழனி நாரை உரைத்தலின், செந்நெல்
விரவுவெள் ளரிசியின் தாஅம் ஊரன்
பலர்ப்பெறல் நசைஇநம் இல்வா ரலனே;
மாயோள், நலத்தை நம்பி விடல்ஒல் லாளே
அன்னியும் பெரியன்; அவனினும் விழுமிய
இருபெரு வேந்தர்; பொருகளத்து ஒழித்த
புன்னை விழுமம் போல,
என்னொடு கழியும்இவ் இருவரது இகலே.

தெளிவுரை

வயலில் உள்ள பாகல் கொடியில் அதன் இலைகளையே கூடாக்கி அங்கு முயிறுகள் என்னும் எறும்புகள் முட்டையிட்டு நெருங்கி வாழுகின்றன. இரை தேடுவதற்கு வந்த நாரைகள் அக்கூடுகளை உறிஞ்சும். அதனால் சிவந்த முயிறுகளும் வெண்மையான முட்டைகளும் செந்நெல்லோடு கலந்த அரிசி போல வயல் முழுவதும் உதிர்ந்து பரவும். இத்தகைய வயல் சூழ்ந்த ஊரினையுடைய தலைவன், பரத்தையர் பலரைப் பெற்று, அவர்களோடு இணைவதை விரும்பியிருப்பவன்; ஆதலால், நம் வீட்டிற்கு வருவதில்லை. ஒருவேளை அவன் வந்தாலும் தலைவி

ஊடலை விட்டுவிட மாட்டாள். ஆகவே, 'அன்னி' குடியைச் சார்ந்த 'அன்னி' என்னும் வேந்தன் தேரழுந்தூரில் உள்ள திதியன் என்னும் வேந்தனோடு 'குறுக்கை' என்னும் இடத்தில் நிகழ்ந்த போரில், அன்னியால் வெட்டிச் சாய்க்கப்பட்ட பூவும் மலரும் கூடிய புன்னை மரம் சாய்ந்தவுடன் வேந்தர் இருவர் பகையும் முடிந்ததுபோல, தலைவன், தலைவி ஆகிய இருவர் இடையிலுள்ள பகையாகிய ஊடல் நான் இறந்து படுவேனாயின், என்னொருத்தியோடு முடிந்துவிடும்.

கருத்து

'தலைவனும் தன் பரத்தமை நெறியிலிருந்து நீங்குவான் அல்லன். தலைவியும் அவனுக்கு வாயில் நேர்வாள் அல்லள். இந்நிலையில் தோழியாகிய நான் என்ன செய்ய இயலும்? ஒரு வேளை, நான் இறந்து பட்டால்தான் இவர்கள் பகையாகிய ஊடல் தீருமோ' என்று தோழி வருந்தினாள்.

விளக்கம்

அன்னியோடு திதியன் போரிட்ட பொழுது, திதியனின் காவல் மரமாகிய புன்னையை அன்னி வெட்டி வீழ்த்தினான். அதனால், அவ்விருவரும் ஒருவர்மீது ஒருவர் கொண்ட பகைமையும் தீர்ந்து ஒழிந்தது. அதுபோல, தலைவனோடு தலைவி கொண்ட பகையாகிய ஊடல் இடையில் நிற்கும் நான் செத்தொழிந்தால்தான் தீரும் போலும் என்று தோழி வெறுப் புற்றுக் கூறினாள்.

உள்ளுறை

"பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை கழனி நாரை உரைத்தலின்" : அஃதாவது, நாரை உறிஞ்சுதலால் முயிறுகள் தம் கூட்டிலிருந்து நிலத்தில் உதிரும் என்பதாம். அதுபோல, தலைவி சினம் மிகுந்த ஊடல் கொள்ளுவதால் தன் உடலிலிருந்து உயிர் நீங்கும் எனத் தோழி கருதுகிறாள்" என்பதாம்.

சொற்பொருள்

1. பழனம் - வயல்; பாகல் - பாகல் கொடி; முயிறு - முயிறுகள் என்னும் எறும்புகள்; மூசு - மொய்த்தல்; குடம்பை - கூடு.

2. உரைத்தலின் - சிதைத்து உதிர்த்தலால்; செந்நெல் - சிவந்த நெல்லோடு.
3. விரவு - விரவிய; வெள்ளரிசியின் - வெண்ணிற அரிசி போல; தாஅம் - பரவிக் கிடக்கும்.
4. நசைஇ - விரும்பி; வாரலனே - வருவதில்லை.
5. மாயோள் - தலைவி; நலத்தை நம்பி - நலம் கெடாமையை விரும்பி; விடல் ஒல்லாளே - தன் ஊடலை விட்டுக் கொடுக்க மாட்டாள்.
6. அன்னியும் - அன்னி என்பவனும்; பெரியன் - பொருள், படை ஆகியவற்றால் பெரியவன்; அவனினும் விழுமியன் - அவனினும் சிறந்தோன் (திதியன்).
7. இருபெருவேந்தர் - இவ்விரு பெரிய அரசர்களும்; பொருது - சண்டையிட்டு; களத்து ஒழித்த - களத்திலே வீழ்த்திய.
8. புன்னை விழுமம் போல - புன்னை மரம் காரணமாய் உளதாகிய இருவரது பகையும் நீங்கினாற்போல.
9. இவ்விருவரது இகல் - இவ்விருவரிடையேயும் உள்ள பிணக்கு; என்னொடு கழியும் - என் உயிரோடே கழியும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 21 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

'புறத்தொழுக்கம் எனக்கு இனி இல்லை' என்று தலைமகன் தெளிப்பவும் 'அஃது உளது' என்று வேறுபடும் தலைமகட்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன், 'நான் இனிமேல் பரத்தை ஒழுக்கம் மேற்கொள்ள மாட்டேன்' என்று தெளிவாய் உறுதி கூறினான். ஆனால், தலைவி அதனை ஏற்க மறுத்து மனம் வேறுபட்டாள். தலைவியின் வேறுபாட்டை நீக்கித் தோழி கூறியது.

முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப்
புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்
தண்துறை ஊரன் தெளிப்பவும்,
உண்கண் பசப்பது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! நீர்முள்ளிச் செடிகள் நீண்டு வளர்ந்துள்ள பழைய நீர்நிலைகளின் கரைகளில் வாழும் புள்ளிகளைக் கொண்ட நண்டு, நீரில் சென்று ஆம்பல் தண்டினை அறுக்கும். அத்தகைய குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறையையுடைய தலைவன், 'இனி நான் பரத்தையரோடு ஒருபோதும் உறவு கொள்ளேன்' என்று தெளிவாய் உறுதி கூறிய பின்னரும், மையுண்ட உன் கண்கள் பசலை பாய்ந்து வேறுபடுவது ஏனோ?

கருத்து

'தலைவியே! தலைவன் தெளிவித்த பின்பும் நீ தெளியாதது ஏன்?'

உள்ளுறை

"முள்ளி நீடிய முதுநீர் அடைகரைப் புள்ளிக் களவன் ஆம்பல் அறுக்கும்" : அஃதாவது, நண்டு, ஆம்பலின் தண்டை அறுத்துத் தனக்குரிய அடைகரையில் தங்கும் என்பதாம். இத்தொடர் மூலம், தலைவன் பரத்தையர் தொடர்பை விடுத்துத் தன் இல்லத்திலேயே தங்குவான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. முள்ளி - நீர்முள்ளிச்செடி; நீடிய - உயர்ந்து ஓங்கிய; அடைகரை - நீரடைந்த கரை.
2. புள்ளிக் களவன் - புள்ளிகளைக் கொண்ட நண்டு; ஆம்பல் - ஆம்பலின் தண்டு.
3. தெளிப்பவும் - தெளிவுபடுத்தவும்.
4. பசப்பது - பசலை பாய்வது; எவன்? - ஏன்?; அன்னாய் - தலைவி.

தோழி கூற்று

அகநானூறு 316 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகற்கு வாயில் நேர்ந்த தோழி தலைமகளை நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையின் வீட்டிற்குச் சென்று தலைவன் தங்கியிருந்தான். அவன், தலைவியின் ஊடலைத் தீர்த்து, தான் தன் இல்லத்தில் நுழைவதற்குத் தோழியின் துணையை நாடினான். அதனை ஏற்ற தோழி, தலைவியிடம் சென்று, தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்திக் கூறியது.

துறைமீன் வழங்கும் பெருநீர்ப் பொய்கை,
அரிமலர் ஆம்பல் மேய்ந்த நெறிமருப்பு
ஈர்ந்தண் எருமைச் சுவல்படு முதுபோத்துத்
தூங்குசேற்று அள்ளல் துஞ்சிப் பொழுதுபட,
பைந்நிண வராஅல் குறையப் பெயர்தந்து,
குரூஉக்கொடிப் பகன்றை சூடி, மூதூர்ப்
போர்செறி மள்ளரின் புகுதரும் ஊரன்
தேர்தர வந்த தெரிஇழை நெகிழ்தோள்
ஊர்கொள் கல்லா, மகளிர் தரத்தர,
பரத்தைமை தாங்கலோ இலென்என வறிதுநீ
புலத்தல் ஒல்லுமோ? – மனைகெழு மடந்தை!–
அதுபுலந்து உறைதல் வல்லி யோரே,
செய்யோள் நீங்க, சில்பதம் கொழித்துத்
தாம்அட்டு உண்டு, தமியர் ஆகி,
தேமொழிப் புதல்வர் திரங்குமுலை சுவைப்ப,
வைகுநர் ஆகுதல் அறிந்தும்,
அறியார் அம்ம,அஃது உடலு மோரே!

தெளிவுரை

பெரிய பொய்கையாகிய நீராடும் துறையில் மீன்கள் திரியும். வளைந்த கொம்பினையும் குளிர்ச்சி பொருந்திய ஈரமான

முதுகினையும் கொண்ட முதிய எருமைக்கடா அதிலுள்ள ஆம்பல் மலரை மேய்ந்து, மிகுதியான சேற்றிலே கிடந்து இரவெல்லாம் தூங்கியது; ஞாயிறு தோன்றும் காலை வேளையில் அந்த எருமை, பசிய கொழுப்பினைக் கொண்ட வரால் மீன்கள் தன் கால் குளம்புகளுக்கிடையில் மிதிபட்டு அழியுமாறு பொய்கையை விட்டு வெளியே வந்தது; அங்கிருந்த வெண்மையான பூக்களைக் கொண்ட பகன்றைக்கொடியினைக் கொம்பிலே சூடிக்கொண்டு பழமையான ஊரினுள் வெற்றி பெற்ற வீரர்போல நுழைந்தது. இத்தகைய காட்சிக்குரிய மருதநில ஊரினையுடையவன், நம் தலைவன்.

ஆராய்ந்தெடுத்த அணிகளையும் நெகிழ்ந்த தோள்களையும் கொண்ட பரத்தையர் பலரைத் தலைவன் தன் தேரில் கொணர்ந்தான். கற்பு நெறியைக் கல்லாத அவர்கள், தலைவனுக்கு மேலும் மேலும் இன்பம் தந்துகொண்டிருப்பதால், தலைவன் அவர்களைக் கைவிட இயலாதவனாய் உள்ளான். அவன் பரத்தமையைக் கைவிட இயலாதவனாய் இருக்கிறானே என்று, மனையறத்தில் பொருந்தியுள்ள மடந்தையான நீ, பயனில்லாது தலைவனோடு ஊடியிருத்தல் உனக்குப் பொருந்துவதாகுமா?

தலைவனின் பரத்தமையைக் கருதி ஊடிப் பிரிந்து வாழும் வல்லமை கொண்ட மகளிரை நீ பார். அவர்கள் தம்மிடத்தினின்றும் திருமகள் நீங்க, சிறிதளவு அரிசியைப் புடைத்துத் தாமே சமைத்து உண்டு தனித்து வாழ்கின்றனர். பால் இல்லாது வற்றிய முலையினைச் சுவைத்துப் பார்க்கும் தேன்போலும் இனிய சொற்களைப் பேசும் குழந்தைகளைக் கொண்டு வறியவராய்த் தங்கியிருப்பர். அந்நிலையை அறிந்திருந்தும் தலைவனது பரத்தமையைக் குறித்து மாறுபடுபவர் அறிவில்லாதவரே ஆவர். ('நீ தலைவனிடம் ஊடிப் பயனில்லை; அவனை ஏற்றுக்கொள்' என்கிறாள், தோழி!)

கருத்து

'ஊடலை விடுத்து, தலைவனை ஏற்றுக்கொள்' எனத் தோழி தலைவியிடம் வற்புறுத்திச் சொல்கிறாள்.

விளக்கம்

"மனையறம் காக்கும் மடந்தையே! தலைவன் தேரில் ஏற்றிக் கொண்டுவரும் பரத்தை மகளிர் பலராவர். அவர் தலைவனுக்கு மேலும் மேலும் இன்பம் தந்துகொண்டிருக்கின்றனர். அதனைத் தாங்க இயலாதவளாய்த் தலைவனோடு ஊடி அவனை ஏற்க மறுப்பதால் பயனில்லை. தலைவனின் பரத்தமையை வெறுத்து அவனைப் பிரிந்து உறையும் வல்லமை கொண்டோர் சிறிதளவு அரிசியைப் புடைத்துச் சமைத்துண்டு தனித்து வாழும் துன்பத் தினைக் கொண்டவராய் இருப்பர்; அவர்கள் குழந்தைகள் பாலின்றிச் சுருங்கிய முலையைச் சுவைத்துப் பார்த்து வருந்தி யிருப்பர். இந்நிலையினை அறிந்திருந்தும் நீ தலைவனோடு ஊடியிருப்பது அறியாமையே. ஆதலின், ஊடலை நீக்கி அவனை ஏற்றுக்கொள்" எனத் தோழி, தலைவனை ஏற்குமாறு தலைவியிடம் வலியுறுத்திக் கூறுகிறாள்.

உள்ளுறை

"துறைமீன்.... புகுதரும்" அஃதாவது, பொய்கையில் ஆம்பலை மேய்ந்த முதிய எருமைக்கடா, சேற்றில் புரண்டு கொண்டு இரவில் தூங்கியது; காலையில் எழுந்து, தன் காற்குளம்புகளில் அகப்பட்டு வரால் மீன்கள் சிதையக் கரையேறியது; பகன்றைக்கொடி அறுபட்டு அதன் கொம்பில் சுற்றிக்கொள்ள, ஊரினுள் வெற்றி வீரனைப் போல் நுழைந்தது என்பதாம். இத்தொடர்மூலம், தலைவன் பரத்தையர் சேரியில் நுழைந்து அப்பரத்தையரை நுகர்ந்து, இரவெல்லாம் அந்த இன்பத்தில் மயங்கிக் கிடந்து, காலையில் தன் பெருமை குறையவும், அலர் எழுமாறும் நாணம் இன்றித் தன் இல்லம் வந்தான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. பெருநீர் - மிகுந்த நீர் கொண்ட; பொய்கை - நீர்நிலை.
2. அரிமலர் - அழகிய மலர்; நெறி மருப்பு - முறுக்குண்ட கொம்பு.
3. சுவல் - முதுகு; முதுபோத்து - முதிய எருமைக்கடா.
4. தூங்கு - மிகுந்த; சேற்று அள்ளல் - சேற்றுக்குழம்பு; துஞ்சி - தூங்கி.

5. பைந்நிண - பசிமையான கொழுப்பு; வரால் - வரால் மீன்; குறைய - மிதிபட்டு அழிய.
6. குரூஉக்கொடிப் பகன்றை - வெண்மையான பூக்களைக் கொண்ட பகன்றைக்கொடி.
7. மள்ளர் - வீரர்; புகுதரும் - நுழையும்.
8. தேர் தர வந்த - தனது தேரில் கொணர்ந்ததால் வந்த.
9. ஊர்கொள் - ஊரே கொள்ள இயலாத அத்தனை மகளிர்; கல்லா - கற்பு நெறியைக் கல்லாத.
10. தாங்கலோ இலென் - தாங்க இயலாதவளாய் உள்ளேன்; வறிது - பயனில்லாது.
11. புலத்தல் - ஊடுதல்; ஒல்லுமோ? - இயலுமா?; மனைகெழு - இல்லத்தில் தங்கியுள்ள.
12. அது புலந்து - தலைவன் பரத்தையைப் புலந்து; வல்லியோர் - வல்லமை கொண்ட.
13. செய்யோள் - திருமகள்; சில்பதம் - சிறிதளவு உணவு; கொழித்து - புடைத்து.
14. தாம் அட்டு - தாமே சமைத்து; தமியர் - தனித்து.
15. தேமொழி - இனிய மொழி; திரங்கு - வாடிய.
16. வைகுநர் - தங்குவர்.
17. அஃது - தலைவனின் பரத்தமை குறித்து; உடலுமோர் - மாறுபடுவோர்.

தலைவி தோழிக்கு வாயில் மறுத்தது.

தலைவி கூற்று

நற்றிணை 217 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகள், வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையின் வீட்டிற்குச் சென்றிருந்த தலைவன் தன் வீட்டிற்குத் திரும்பினான். தலைவியோ ஊடல் கொண்டிருந்தாள். அவள் சினத்தைத்

தணிவிக்குமாறு தலைவன் தோழியை வேண்டினான். அவளும் தலைவி யிடம் சென்று வேண்ட, அவள் பேச்சினை மறுத்துத் தலைவி கூறியது.

இசைபட வாழ்பவர் செல்வம் போலக்
காண்தொறும் பொலியும் கதழ்வாய் வேழம்,
இருங்கேழ் வயப்புலி வெரீஇ, அயலது
கருங்கால் வேங்கை ஊறுபட மறலி,
பெருஞ்சினம் தணியும் குன்ற நாடன்
நனிபெரிது இனியன் ஆயினும், துனிபடர்ந்து
ஊடல் உறுவேன் தோழி! நீடு
புலம்புசேண் அகல நீந்திப்
புலவி உணர்த்தல் வண்மை யானே.

தெளிவுரை

தோழி! புகழ் உண்டாக வாழ்பவருடைய செல்வம் சிறந்து விளங்கும். அதுபோலப் பொலிவுடன் தோன்றுவதும் விரைந்த நடையினைக் கொண்டதுமான ஆண் யானை ஒன்று, கரிய நிறம் கொண்ட வலிமையான புலியைக் கண்டு அஞ்சி அகன்று ஓடியது. அப்போது கரிய நிறமுள்ள அடிப்பகுதியைக் கொண்ட வேங்கை மரம் ஒன்று எதிர்ப்பட (அதனைப் புலியெனக் கருதி) அம்மரத்தைச் சிதைத்து அழித்தது; பின்னரே, அதன் பெரும் சினம் தணிந்தது. இத்தகைய காட்சிகளுள்ள குன்றுகளுக்கு உரியவன், நம் தலைவன். நமக்கு மிகவும் இனியவனே என்றாலும், அவன் செய்த செயலை எண்ணி மனம் வருந்தி ஊடலுக்குரிய வற்றையே செய்வேன். ஆயினும், அவன் என் ஊடலைப் போக்கிக் கூடுதற்கு, சொல்லாலும் செயலாலும் அன்பு காட்டும் தன்மை கொண்டவன். அவனுடைய அத்தன்மையைக் காண் பதற்காகவே நான் ஊடல் கொண்டுள்ளேன்.

கருத்து

'மலைநாடன் மிக இனியவனாயினும் புலவி நீங்கிக் கூடினால் இன்பம் மிகுமாதலால், நான் ஊடியிருக்கிறேன்.'

விளக்கம்

“அயலே நின்ற வேங்கை மரத்தைப் புலியென மயங்கி, அதன் மீது மோதிச் சிதைத்து அழிப்பதன்மூலம், யானை தன் சினம் தணித்துக் கொள்ளும். பகையான புலியை ஒழித்தற்கு உரித்தான இடத்திலே அதை ஒழிக்காது ஒதுங்கிப்போன யானை, பகையாகா வேங்கை மரத்தைப் பகையென மயங்கி அதைச் சிதைக்கும் அறியாமையினைத் தன் சினத்தால் மேற்கொண்டது. வேழத்தின் இச்செயல் நகைத்தற்குரியது. இக்காட்சி கொண் டுள்ள நாட்டையுடைய தலைவனும் அத்தகைய மயக்கத்தைக் கொண்டவனாய்த் தனக்குரிய காதல் மனைவிக்குத் தலையளி செய்து இன்புறுத்தாது, ஒதுங்கிப் பரத்தையின் அழகிலே மயங்கி அவளோடு இன்புற்று வாழ்தலை மேற்கொண்டுள்ளான். தலைவன் இனியவனே! ஆனாலும் அவன் என் ஊடலைத் தெளிவித்து அன்பு காட்டுவதைக் காணவே ஊடல் கொண்டி ருக்கிறேன்” எனத் தோழியிடம் தலைவி கூறுகிறாள்.

தலைவி ஊடல் நீங்கிக் கூடுவாள் என்னும் குறிப்பு அவள் பேச்சில் வெளிப்படுவதைக் காணலாம்.

உள்ளுறை

“கதழ்வாய் வேழம்..... பெரும் சினம் தணியும்” : அஃதாவது, களிற்றியானை புலிக்கு அஞ்சி ஒதுங்கி, வேங்கை மரத்தைச் சிதைத்துத் தன் சினம் தணியப்பெறும் என்பதாம். இத்தொடர் மூலம், தலைவனும் தலைவியின் சினத்தைக் கண்டு அஞ்சித் தோழி மூலம் தலைவியின் இசைவினைப் பெற்றுத் தன் துயரத்தைப் போக்குதற்கு முயன்றான்” என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. இசை - புகழ்.
2. காண்தொறும் - காணுந்தோறும்; பொலியும் - சிறந்து விளங்கும்; கதழ்வு - விரைவு; வேழம் - யானை.
3. இருங் கேழ் - கரிய நிறம்; வயப்புலி - வலிமை கொண்ட புலி; வெரீஇ - அஞ்சி.

4. வேங்கை - வேங்கை மரம்; ஊறு - இடையூறு; மறலி - மோதிச் சிதைத்து.
5. தணியும் - குறையும்.
6. நனி - மிகவும்; துனி - வருத்தம்.
7. ஊடல் உறுவேன் - ஊடல் கொள்வேன்.
8. நீடு - நீள நின்று.
9. புலம்பு - தனிமைத் (துயர்); சேண் அகல - நெடுந்தொலைவில் நீங்கிச் செல்லுமாறு.
10. புலவி - ஊடல்; உணர்த்தல் - செய்தல்; வண்மையான் - வளப்பத்தினை உடைய தலைவன்.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 28 **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள், தோழிக்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவன், தலைவியின் ஊடலைத் தீர்த்துத் தன்னை அவளோடு சேர்த்து வைக்குமாறு தோழியை வேண்டினான். தோழி அதனைத் தலைவியிடம் சொல்ல, தலைவி தோழியின் கூற்றினை மறுத்துக் கூறியது.

ஒல்லென்(று) ஒலிக்கும் ஒலிபுனல் ஊரற்கு
வல்லென்ற(து) என்நெஞ்சம் வாட்கண்ணாய் – நில்என்னா(து)
ஏக்கற்றாங்(கு) என்மகன் தான்நிற்ப என்னானும்
நோக்கான்தேர் ஊர்ந்தது கண்டு.

தெளிவுரை

“வாள் போன்ற கண்களைக் கொண்ட தோழியே! ‘ஒல்’ என்னும் ஒலியுடன் ஆரவாரத்தை எழுப்பும் ஒலிமிக்க நீர்வளம் வாய்ந்த மருத நிலத்து ஊரினையுடையவன், தலைவன். முன்பொரு நாள் என் மகன் தெருவில் நின்று, தேர்மீது ஏறிச்

சென்ற தன் தந்தையைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவனைப் பார்த்தும் தலைவன், தேரோட்டும் பாகனிடம், 'நில்' என்று சொல்லாமல், என் மகனைச் சற்றும் பாராமல் தேரினைச் செலுத்திக்கொண்டு பரத்தையர் இல்லத்திற்குச் சென்றான். அதனை நான் கண்ணாரக் கண்டேன். ஆதலால், என் உள்ளம் தலைவனிடம் இரக்கம் காட்டாது" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

புதல்வனையும் பாராது பரத்தையரிடம் சென்ற தலைவனுக்கு என் நெஞ்சம் இரக்கம் காட்டாது.

சொற்பொருள்

1. 'ஒல்' என்று - ஒல் என்று ஒலிக்கும்படியாக.
2. வல் என்றது - இரக்கம் கொள்ளாத வன்மை உடையதாயிற்று; நில் என்னாது - (பாகனிடம் தேரை) நிறுத்து என்று சொல்லாமல்.
3. ஏக்கற்று - விரும்பி; ஆங்கு - அங்கே; என்னானும் - சற்றும்.
4. நோக்கான் - பாராதே; ஊர்ந்தது - சென்றது.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 153 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் தோழியிடத்துத் தலைமகனைக் காய்ந்து கூறியது.

கூற்று விளக்கம்

தோழி தலைவியிடத்து, 'நீ தலைவனோடு கொண்டிருக்கும் ஊடலை நீக்க வேண்டும்' என்றாள். அதைக் கேட்ட தலைவி, தோழியிடம் சினந்து கூறியது.

துனிபுலவி ஊடலின் நோக்(கு)என் தொடர்ந்த
கனிகலவி காதலினும் காணேன் – முனிவு(அ)கலின்
நாணா நடுங்கும் நளிவயல் ஊரனைக்
காணாஎப் போதுமே கண்.

தெளிவுரை

"தலைவனோடு சேர்ந்திருந்த காலத்திலும், இன்பம் என்னும் கனியினை நான் முற்றும் பெற்றதில்லை. பிரிந்து பரத்தையரிடம் சென்றுள்ள அவன்மீது கொண்டுள்ள வெறுப்பு இன்னும் நீங்கவில்லை. குளிர்ச்சி பொருந்திய மருத நில ஊர்த்தலைவனை என் கண்கள் எப்பொழுதுமே காண விரும்பவில்லை. அப்படி யிருக்க, வருத்தமிக்க இந்த மனப்பிணக்கினை, பொதுவான ஊடுதலினைப்போலக் கருதிப் பேசுதல் எதற்காக?" என்று, 'ஊடலை ஒழி' என்ற தோழியினை நோக்கித் தலைவி கூறினாள்.

கருத்து

'தோழி! தலைவன்மீது கொண்டுள்ள வெறுப்பு இன்னும் நீங்கவில்லை. பொதுவான ஊடலைப் போலக் கருதி, 'ஊடல் நீங்கு' என்று நீ கூறுவது எதற்காக?'

சொற்பொருள்

1. துனி - வருத்தம் மிக்க; புலவி - மனப்பிணக்கு; ஊடலின் - பொதுவான ஊடலைப் போல; நோக்கு - கருதிப் பேசுதல்; என் - எதற்காக?; தொடர்ந்த - தொடர்புடையதான.
2. கனி - இன்பமாகிய கனியினை; கலவி - தலைவனோடு கூடிய; காதலினும் - அன்புமிக்க காலத்திலும்; காணேன் - காணவில்லை; முனிவு - வெறுப்பு; அகலின் - நீங்குமாயின்.
3. நாணா - நாணமுற்று; நடுங்கும் - நடுங்கச்செய்யும்; நளி - குளிர்ச்சி பொருந்திய.
4. காணா - காண விரும்பவில்லை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 188 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

விருந்து வாயிலாகப் புகுந்த தலைமகன் தலைமகளின் இல்வாழ்க்கைச் சிறப்புக் கண்டு, மகிழ்ந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தமை ஒழுக்கம் கொண்டிருந்ததால், தலைவி ஊடல் கொண்டிருந்தாள். அவள் ஊடலைப் போக்கும்பொருட்டுத் தலைவன் விருந்தினரோடு இல்லம் புகுந்தான். அப்போது தன் மனைவியின் இல்லறச் சிறப்பினைக் கண்டு தலைவன் மகிழ்ந்து தனக்குள் கூறியது.

> இருங்கழிச் சேயிறா இனப்புள் ஆரும்
> கொற்கைக் கோமான் கொற்கையம் பெருந்துறை
> வைகறை மலரும் நெய்தல் போலத்
> தகைபெரிது உடைய, காதலி கண்ணே!

தெளிவுரை

கொற்கை நகரத்தின் பெரிய துறையில் உள்ள கருமையான உப்பங்கழியில் பறவைக்கூட்டம் செம்மையான இறால் மீன்களை உண்ணும். பாண்டியனுக்குரியகொற்கைத்துறையில் வைகறைப் பொழுதில் மலரும் நெய்தல் பூவைப் போல என் காதலியின் கண்கள் அழகு மிக உடையன எனத் தலைவன் தன்னுள் கூறி மகிழ்கிறான்.

கருத்து

தலைவியின் விருந்தோம்பும் பண்பு மாண்பு வாய்ந்தது.

குறிப்பு

தொலைவில் சூரியனைக் கண்ட அளவிலேயே நெய்தல் மலர்வது போல, விருந்தினரைச் சேய்மையில் கண்டபோதே தலைவியின் கண்கள் மலர்ந்ததைக் கண்ட தலைவன் அவளது விருந்தோம்பல் பண்பினைக் கண்டு பெரிதும் மகிழ்ந்தனன்.

கொற்கைப் பெருந்துறையில் பறவைக்கூட்டம் இறால் மீன்களை உண்ணும். அதுபோல் தலைவியின் வீட்டிற்கு விருந்தினர் பலர் வந்து உண்டு மகிழ்வர் என்பது குறிப்புச் செய்தி.

தலைவன் பரத்தை இல்லத்தை நாடிச் சென்றதால் ஊடல் கொண்ட தலைவியின் முகம் திரிந்திருக்கிறது. அவனோ விருந்தோடு வருகிறான். முகம் திரிந்திருந்தால் வந்த விருந்து மனம் வருந்தும். எனவே, விருந்தைக் கண்டதும் அவள் முகம் மலர வரவேற்கிறாள். அதுவே தனக்குரிய வரவேற்பாகவும் கொண்டு தலைவனும் உள்ளே நுழைந்துவிடுகிறான்.

சொற்பொருள்

1. இருங்கழி - கருமையான உப்பங்கழி; சேய்இறா - செந்நிற இறால் மீன்; இனப்புள் - பறவைக்கூட்டம்; ஆரும் - உண்ணும்.
2. கொற்கைக் கோமான் - கொற்கை நகரை ஆளும் பாண்டிய மன்னன்; கொற்கை - ஒரு பெரிய துறைமுகம், கொற்கை முத்து உலகப்புகழ் பெற்றது.
3. வைகறை - புலர்காலை; நெய்தல் - நெய்தல் மலர்.
4. தகை - அழகு.

தலைவி கூற்று

நற்றிணை 280 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிச் சென்ற தோழிக்குத் தலைமகள் மறுத்து மொழிந்தது.

கூற்று விளக்கம்

பரத்தையை நாடிச் சென்ற தலைவன் தன் இல்லம் திரும்பி, மீண்டும் தலைவியைக் கூட விரும்பியவனாய்த் தோழியைத் தூது விடுக்கின்றான். அவள் தலைவியிடம் சென்று, தலைவனை மீண்டும் ஏற்குமாறு சொல்ல, தலைவி மறுத்துக் கூறியது.

கொக்கினுக்கு ஒழிந்த தீம்பழம், கொக்கின்
கூம்புநிலை அன்ன முகைய ஆம்பல்
தூங்குநீர்க் குட்டத்துத் துடுமென வீழும்
'தண்துறை ஊரன் தண்டாப் பரத்தமை

புலவாய்' என்றி தோழி! புலவேன்
பழன யாமைப் பாசறைப் புறத்துக்
கழனி காவலர் சுடுநந்து உடைக்கும்,
தொன்றுமுதிர் வேளிர், குன்றூர் அன்னஎன்
நல்மனை நனிவிருந்து அயரும்
கைதூவு இன்மையின் எய்தா மாறே.

தெளிவுரை

தோழி! கொக்கு அமர்ந்ததனாலே மாமரத்தின் கிளை அசைவுற்றது. அதனால், கொக்கின் குவிந்த நிலை போன்ற அரும்புகளைக் கொண்ட ஆம்பல் நிறைந்த, ஆழம் மிகுந்த நீரினுள்ளே 'துடும்' எனும் ஒலியோடு மாம்பழம் விழும். அத்தகைய தண்ணிய நீர்த்துறைகளைக் கொண்டவன், நம் ஊரன். ஊரனது பரத்தமைப் பண்பைக் கண்ட பின்பும் நீ அவனிடம் ஊடல் கொள்ள வேண்டா என்கின்றனை. பசுமை மிக்க இலை போன்ற வயல் ஆமையின் முதுகிலே, அவ்வயலைக் காவல் செய்யும் மள்ளர் தாம் சுடுகின்ற நத்தையை உடைத்துத் தின்பர். அத்தன்மையைக் கொண்ட பழமை மிக்க வேளிர்களது குன்றூரைப் போன்றது, என் நல்ல வீடு. அவ்வீட்டிற்கு ஏராளமாய் வருகின்ற விருந்தினர்களை நாளும் பேணுதலால் கையொழியாமையினாலே நான் தலைவனை எதிர்ப்படவில்லை. அதனால் நான் அவனோடு ஊடியதும் இல்லை.

கருத்து

'நாள்தோறும் ஏராளமான விருந்தினர்களைப் பேணி வருவதால் நான் தலைவனை நினையாமலும் சந்திக்காமலும் இருக்கிறேன். அதனால் சினம் கொள்ளாதவளாயுமுள்ளேன். அவனைக் காணுவேனாயின் என் சினம் எல்லை மீறிவிடும். ஆதலால், அவன் இங்கு வரவேண்டா.'

விளக்கம்

'தோழி! நான் ஊடல் கொள்ளாதிருப்பதாய்க் கருதித் தலைவனை உள்ளே விட்டுவிடாதே. ஏராளமான விருந்தினர் நாள்தோறும் வந்துகொண்டேயிருப்பதால், அவர்களை அன்புடன் பேணுவதிலேயே என் சிந்தனை முழுதும் கழிந்து

விடுகின்றது. அதனால், தலைவனைப்பற்றிய சிந்தனை இன்றியே இருக்கின்றேன். விருந்தோம்புதல் இல்லறக் கடமைகளுள் முதன்மையானது. தலைவன் உடனிருந்து ஆற்ற வேண்டிய அரும்பணியை நான் தனித்துச் செய்துகொண்டிருக்கின்றேன். இல்லறக் கடமையில் ஈடுபாடின்றிப் பரத்தையுடன் மகிழ்ந் திருக்கும் தலைவனை நம் வீட்டினுள் நுழைய விடாதே' எனத் தோழியிடம் தலைவி கடுமையாய்க் கூறினாள்.

உள்ளுறை

"கொக்கினுக்கு .... வீழும்" : அஃதாவது "கொக்காலே உதிர்ந்த மாம்பழமானது ஆம்பல் பொய்கையில் 'துடும்' என விழும் என்பதாம். இத்தொடர்மூலம், பரத்தை யாலே வெறுத்தொதுக்கப்பட்ட தலைவன் தோழியைத் தூதாய்க் கொண்டு தலைவியிடம் வந்தனன் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

இறைச்சி

வயல் காப்பவர், சிறப்பில்லாத நத்தையைச் சுட்டு, ஆமை யின் புற ஓட்டிலே தட்டியுடைத்துத் தின்பர் என்பதன்மூலம், தலைவனும் சிறப்பு வாய்ந்த தலைவியை வருத்தமுற விட்டுவிட்டு, சிறப்பில்லாத பரத்தையிடம் இன்பம் பெற்று மகிழ்கிறான் என்னும் இறைச்சிப் பொருள் கிட்டுகிறது.

சொற்பொருள்

1. ஒழிந்த - வீழ்ந்த; தீம்பழம் - இனிய மாம்பழம்; கொக்கின் - கொக்கினது.
2. கூம்பு நிலை அன்ன - குவிந்த நிலை போன்ற; முகை - அரும்பு; ஆம்பல் - ஆம்பல் மலர்.
3. தூங்குநீர் - அலையுடன் அசைகின்ற; குட்டம் - ஆழமான நீர் நிலையில்.
4. தண்டா - நீங்காத.
5. புலவாய் - ஊடல் கொள்ளாதே; என்றி - என்று சொல்கிறாய்.
6. பழனம் - வயல்; யாமை - ஆமை; பாசறைப் புறம் - பசிய முதுகாகிய ஓடு.
7. கழனி காவலர் - உழவர்; சுடுநந்து - சுடப்பட்ட நத்தையை.

8. தொன்றுமுதிர்வேளிர் - பழமை மிக்க வேளிர் குடியின்; குன்றூர் - ஓர் ஊர்.
9. நனி விருந்து - ஏராளமான விருந்தினர்; அயரும் - ஓம்பும்.
10. கை தூவல் - கையொழிதல்; இன்மையின் - இல்லாததால்; எய்தாம் - எதிர்ப்படவில்லை.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 155 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பல வழியாலும் வாயில் நேராளாகிய தலைமகள், 'மகப்பேற்றிற்கு உரித்தாகிய காலம் கழிய ஒழுகுகின்றாய்' என நெருங்கிய தோழிக்குச் சொன்னது.

கூற்று விளக்கம்

தலைவன் கொண்டுள்ள பரத்தமை காரணமாய்த் தலைவி ஊடியிருந்தாள்; பலர் மூலமாயும் பலவழியிலும் தலைவன் வேண்டிக்கொண்டும் வாயில் நேரவில்லை. தோழி அவளை நெருங்கி, 'மகப்பேற்றிற்குரிய காலமும் கழியவிருக்கிறது. இக்காலத்தில் நீ ஊடியிருத்தல் நேரிதன்று' என வற்புறுத்தினாள். அது கேட்ட தலைவி, வெகுண்டு அவளிடம், 'நான் களவுக் காலத்திலேயே மகப்பேறு பெற்றுவிட்டேன்; நீ பேசாது போ' என்று கூறியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தென
காணிய சென்ற மடநடை நாரை
பதைப்பத் ததைந்த நெய்தல் கழிய
ஓதமொடு பெயரும் துறைவற்குப்
பைஞ்சாய்ப் பாவை ஈன்றனென் யானே

தெளிவுரை

"*வெள்ளாங்குருகின் பிள்ளையைத் தனக்குரியதாய்க் கருதிக் காணச் சென்ற நாரை மெய்சிலிர்த்துச் சிறகடிக்கும். அதனால் சிதறுண்ட நெய்தல் மலர், கழியின் அலைகளோடு மிதந்து செல்லும் கடல்துறையை உடையவன், நம் தலைவன்.*

அத்தலைவனுக்கு நான் களவுக் காலத்திலேயே பஞ்சாய்க் கோரையாலான மகவினைப் பெற்றுத் தந்திருக்கின்றேன்; அம்மகவு ஒன்றே போதும். இனி மகப்பேறு வேண்டா; நீ பேசாது போ" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

'நான் களவுக் காலத்திலேயே கோரைப்புல்லால் செய்த மகவைப் பெற்றெடுத்துவிட்டேன். வேறு மகவு வேண்டா.'

விளக்கம்

பேதைப்பருவத்து மகளிர் பஞ்சாய்க்கோரையால் விளையாட்டுப் பொம்மை செய்து, அதனைத் தம் மகவாய்க்கொண்டு உணவூட்டியும் தாலாட்டியும் விளையாடுவது வழக்கம். மகப்பெறுங்காலத்தும் நீ தலைவனுடன் ஊடியிருத்தல் அறமாகாது என்ற தோழியிடம், 'நான் விளையாட்டுச் சிறுமியாய் இருந்த போதே, பஞ்சாய்க்கோரையாலான மகவைப் பெற்றுவிட்டதை நீ அறிந்ததுதானே!' என்று வெகுண்டு பேசித் தலைவனுக்கு வாயில் நேர மறுக்கிறாள்.

குறிப்பு

மகப்பேற்றிற்குக் கருவுறுங்காலம் பூப்புப் புறப்பட்டதை அடுத்த பன்னிரு நாள்களுமே ஆகும். மகப்பெறுங்காலம் இது என்பதை அறிந்து தலைவன் உலகியல் காரணமாய் வந்துள்ளானே அன்றி, என்னிடம் கொண்ட காதலால் அன்று என்று கூறித் தலைவி தலைவனை ஏற்க மறுத்தாள்.

இங்ஙனம் மறுப்பாளாயினும், இல்லறம் கருதி வாயில் நேர்வள்.

சொற்பொருள்

2. மடநடை - மென்மையான நடை.
3. பதைப்ப - மெய் சிலிர்த்துச் சிறகடிக்க; ததைந்த - நெருங்கிய; கழிய - சிதறுண்டு போக.
4. ஓதம் - அலை; பெயரும் - மிதந்து செல்லும்.
5. பஞ்சாய் - பஞ்சாய்க்கோரை; பாவை - விளையாட்டுப்பொம்மை.

தலைவி கூற்று

கைந்நிலை 44 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் வேண்டிய தோழிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவனை ஏற்குமாறு தலைவியிடம் வேண்டுகிறாள். தலைவி மறுக்கிறாள்.

தண்துறை ஊரன் தடமென் பணைத்தோளாய்
வண்டுஊது கோதை வகைநாடிக் கொண்டிருந்து,
கோல வனமுலையும் புல்லினான் என்றெடுத்துச்
சாலவும் தூற்றும் அலர்.

தெளிவுரை

'தலைவனின் பிழையைப் பொறுத்து அவனை ஏற்க வேண்டும்' என வாயில் வேண்டிய தோழியிடம், "மூங்கில் போன்ற மென்மையான பெருமைமிக்க தோள்களைக் கொண்ட தோழியே! குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறைகளையுடைய மருதநிலத் தலைவனான நம் தலைவன், வண்டுகள் இசை பாடும் மாலையை அணிந்த பரத்தையர்களின் திறத்தை ஆராய்ந்து, சந்தனக் கோலம் வரையப்பட்ட மார்பகங்களைக் கொண்ட ஒருத்தியைத் தழுவினான் என்று அச்சேரி முழுவதும் அலர் தூற்றுகின்றது. அத்தகைய தலைவனை நான் எவ்வாறு வரவேற்பேன்?" என்று மறுத்துத் தலைவி கூறினாள்.

கருத்து

'தோழி! பரத்தையைத் தழுவினான் என்று ஊர் தூற்றும் அவனை நான் எப்படி ஏற்க இயலும்?'

சொற்பொருள்

1. தட - பெருமை; பணை - மூங்கில்.
2. கோதை - மாலை (அணிந்தவர்களின்); வகை நாடி - திறத்தை ஆராய்ந்து; கொண்டு - அவளைத் தனக்குரியவளாய்க் கொண்டு; இருந்து - அவளோடு இருந்து.

3. கோலம் - சந்தனக்கோலம் வரையப்பட்ட; வனமுலை - அழகிய முலை; புல்லினான் - தழுவினான்.
4. சாலவும் - மிகுதியும்; அலர் - பழிச்சொல்.

தலைவி கூற்று

குறுந்தொகை 202 **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

'பரத்தையிற்பிரிந்துவந்த தலைவனை ஏற்றுக்கொள்ள வேண்டும்' என்று தலைவியிடம் வேண்டிய தோழியிடம் தலைவி மறுத்துக் கூறியது.

நோம்என் நெஞ்சே! நோம்என் நெஞ்சே!
புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்
கட்குஇன் புதுமலர் முட்பயந் தாஅங்கு,
இனிய செய்தநம் காதலர்
இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே!

தெளிவுரை

தோழி! என் நெஞ்சு வருந்துகின்றது. புன்செய் நிலத்தில் நெருங்கிப் படர்ந்துள்ள சிறிய இலைகளைக் கொண்ட நெருஞ்சியின் புதுமலர், கண்ணுக்கு இனிதாய்த் தோன்றும். முதிர்ந்தால் அதுவே முள்ளாய் மாறும். அதுபோல, நம் காதலர் முன்பு களவுக் காலத்தில் நெருஞ்சி மலர் போல இனிமையையே செய்தார். இக்கற்புக் காலத்தில் பரத்தையிற் பிரிந்து நெருஞ்சி முள்ளைப் போலத் துன்பத்தையே தந்துகொண்டிருக்கிறார். என் நெஞ்சு நோகின்றது.

கருத்து

'முன்பு இனியவனாய் இருந்த தலைவன் இப்போது முள்ளாய் வருத்து கிறான்; அவனை எவ்வாறு ஏற்பது?'

விளக்கம்

சிறிய இலைகளைக் கொண்டு முல்லை நிலத்திலே வளர்வது, நெருஞ்சிக்கொடி. அதன் மலர், தொடக்கத்தில் அழகாய், காலில் பட்டால் மெத்தென்றிருக்கும். நாள் பல கழிய அதுவே முள்ளாய் மாறி நாம் அடி வைக்கும்போது சுருக்கென்று தைக்கும். இதுபோலவே, நமக்கு முதலில் அன்புடன் மகிழ்ச்சி தந்த காதலர் இப்பொழுது துன்பம் அளிக்கிறார். இத்தீய நடத்தையினால் என் மனம் மிகவும் நோகிறது.

சொற்பொருள்

1. நோம் - வருந்தும்.
2. புன்புலம் - புன்செய் நிலம்; அமன்ற - நெருங்கிப் படர்ந்த; சிறியிலை - சிறிய இலைகள் கொண்ட; நெருஞ்சி - நெருஞ்சிக் கொடி.
3. கட்குஇன் - கண்ணுக்கு இனியதாய்; தோன்றும் - பூ உண்டாகும் போது தோன்றும். (அது முற்றினால்) முள் பயந்து ஆங்கு - அதுவே முள்ளாய் மாறும்.

தலைவி கூற்று

குறுந்தொகை 93 **அள்ளூர் நன்முல்லையார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகப் புக்க தோழிக்கு வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தமையிற் பிரிந்தமையால் தலைவனோடு தலைவி ஊடல் கொண்டிருந்தாள். அதனைத் தீர்த்துத் தலைவனோடு கூட்டுவிக்க முயன்ற தோழியிடம், தலைவி மறுத்துக் கூறியது.

நல்நலம் தொலைய, நலம்மிகச் சாஅய்,
இன்உயிர் கழியினும் உரையல்; அவர்நமக்கு
அன்னையும் அத்தனும் அல்லரோ?
புலவிஅஃது எவனோ அன்பிலங் கடையே?

தெளிவுரை

சிறந்த மென்மை நலம் நீங்கி, மேனி அழகு முழுவதும் கெட்டு, எல்லாவற்றினும் இனிதாகிய என் உயிரே நீங்கும் நிலை ஏற்படு வதாயிருந்தாலும், தலைவனிடம் அன்பு காட்ட வேண்டும் என்று மட்டும் சொல்லாதே! காதலி என்று கருதி அவர் என்மீது அன்பு கொள்ளாதபோது, அவரிடம் ஊடல் கொள்வது எதற்காக? இனி அவர் நமக்கு அன்னையும் தந்தையுமாய் இருக்கட்டும்!

கருத்து

'மனைவி என்னும் கருத்துடன் தலைவன் என்னிடம் அன்பு காட்டவில்லை. (ஆதலால், நாமும் அவனை அன்னையும் தந்தையுமாய்க் கருதி அன்பு காட்டுவோம்.) மனைவியாய் ஒழுக உடன்படேன்.

விளக்கம்

பரத்தையுடன் சேர்ந்து வாழ்ந்துவிட்டுத் தன் வீட்டுக்குத் திரும்பிய தலைவன், 'இனி அவ்வாறு நடக்க மாட்டேன்' என்று தோழியிடம் கூறி, தலைவியின் ஊடலைப் போக்குமாறு வேண்டு கிறான். தோழி தலைவியிடம் அவனுக்காகப் பரிந்து பேசுகிறாள். தலைவி, 'அவன் என்னை மனைவிபோல் நடத்தி, கூடியும் ஊடியும் மகிழாமல், தாய் தந்தையர்போல அன்பு காட்டுவதால் என்ன பயன்?' என்று தோழியிடம் கூறி அவனுக்காகப் பரிந்து பேசாதிருக்குமாறு கூறினாள்.

சொற்பொருள்

1. நன் நலம் - அழகிய பெண்மை நலம்; தொலைய - நீங்க; நலம் - மேனி அழகு; சாஅய் - கெட.
2. கழியினும் - நீங்குவதாயினும்; உரையல் - கூறாதே.
3. அன்னை - தாய்; அத்தன் - தந்தை.
4. அன்பிலங் கடை - அன்பு இல்லாதபோது; புலவி எவன்? - ஊடல் எதற்காக?

தலைவி கூற்று

குறுந்தொகை 293 **கள்ளில் ஆத்திரையனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த கிழவற்கு வாயிலாகப் புக்க தோழிக்குக் கிழத்தி உரைத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனுக்குத் தூதாய் வந்த தோழியைப் பார்த்து, 'தலைவன் இங்கு வந்திருப்பதைப் பரத்தை அறிந்தால், அவள் இங்கு வந்தே அவனைக் கொண்டுசென்றுவிடுவாள்' என்று தலைவி கூறியது.

கள்ளின் கேளிர் ஆத்திரை உள்ளூர்ப்
பாளை தந்த பஞ்சியம் குறுங்காய்
ஓங்குஇரும் பெண்ணை நுங்கொடு பெயரும்
ஆதி அருமன் மூதூர் அன்ன,
அயவெள் ஆம்பல் அம்பகை நெறித்தழை
தித்திக் குறங்கின் ஊழ்மாறு அலைப்ப,
வருமே சேயிழை, அந்தில்
கொழுநற் காணிய; அளியேன் யானே!

தெளிவுரை

ஆதி அருமன் என்பவனுடைய பழமையான ஊரில் கள்ளைப் பருகும் பழக்கம் கொண்ட உறவினர் ஒன்றாய்க் கூடி, ஊருக்கு வெளியே பயணம் சென்று கள்ளைக் குடித்துவிட்டுத் திரும்புவர். அவ்வாறு திரும்பும்போது உயர்ந்த கரிய பனை மரத்தின் பாளையில் விளைந்த, புறத்தே நாரினைக் கொண்ட சிறிய காய்களிலிருந்து கிடைக்கும் நுங்குகளையும் கொண்டு வருவர். தலைவனின் பரத்தை, அந்தப் பழைய ஊரைப் போன்ற அழகுடன் விளங்குபவள்; நீர்நிலையிலுள்ள வெள்ளாம்பலின் அழகிய, நிறம் மாறுபட்ட முதிர்ந்த தழைகளால் செய்யப்பெற்ற தழை ஆடை அணிந்திருப்பவள். அத்தழையாடை தேமல் பொருந்திய அவள் தொடையில் மாறி மாறி அசைய,

தலைவனைக் காண அவள் இங்கேயே வந்துவிடுவாள். நான் இரங்கத்தக்கவள் ஆவேன். (அவள் என் கணவனை அழைத்துச் சென்றுவிடவும் கூடும்.)

கருத்து

தலைவனைப் பரத்தை மீண்டும் கைக்கொள்ளவும் கூடும்; அவனை ஏற்று என்ன பயன்?

குறிப்பு

'பனை மரத்தில் உள்ள கள்ளை உண்ணச் சென்றோர், அதனை உண்ணுதலோடமையாது, நுங்கையும் கைக்கொண்டு திரும்புவதுபோல, தலைவனைக் காண வரும் பரத்தை அவனைக் கைக்கொண்டும் சென்று விடுவாள்' எனத் தலைவி அஞ்சுகிறாள்.

கள் உண்பார் கூடிச் செல்வதை, 'கள்ளின் கேளிர் ஆத்திரை' என்று நகைச்சுவை படக் கூறியிருப்பதால், இச்செய்யுளை இயற்றிய புலவர் 'கள்ளில் ஆத்திரையனார்' என்னும் பெயரைப் பெற்றிருக்கிறார்.

சொற்பொருள்

1. கள்ளின் கேளிர் - கள்ளினைப் பருகும் பழக்கம் கொண்ட உறவினர்; ஆத்திரை - பயணம்.
2. பாளை - பனம் பாளை; பஞ்சிஅம் - நாரைக் கொண்ட அழகிய; குறுங்காய் - சிறிய காய்.
3. ஓங்கு - ஓங்கி வளர்ந்த; இரும் - கரிய; பெண்ணை - பனை மரம்; நுங்கு - பனை நுங்கு; பெயரும் - திரும்புவர்.
4. ஆதி அருமன் - தலைவருள் ஒருவன்; மூதூர் - பழமையான ஊர்.
5. அய - நீரில் வளர்ந்த; அம்பகை - அழகிய நிறம் மாறுபட்ட.
6. தித்தி - தேமல்; குறங்கு - தொடை; ஊழ் - முறையே; மாறு அலைப்ப - மாறி மாறி அசைய.
7. வருமே - வருவாள்; சேயிழை - பொன்னால் செய்யப்பெற்ற அணிகலன்களை அணிந்த பரத்தை; அந்தில் - அவ்விடத்தில்.
8. கொழுநன் - தலைவனை; காணிய - காணும்பொருட்டு; அளியேன் யான் - நான் இரங்கத்தக்கவள் ஆவேன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 203 **நெடும்பல்லியத்தனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து பிரிந்து வந்த தலைவனுக்குத் தூதாய் வந்த தோழியை நோக்கி, 'அவரிடம் முன்பு பரிவு கொண்டவளாயிருந்தேன்; அவரது நடத்தையால் இப்போது அது நீங்கியது' எனத் தலைவி மறுத்துக் கூறியது.

மலைஇடை யிட்ட நாட்டரும் அல்லர்;
மரந்தலை தோன்றா ஊரரும் அல்லர்;
கண்ணின் காண நண்ணுவழி இருந்தும்,
கடவுள் நண்ணிய பாலோர் போல,
ஒரீஇனன் ஒழுகும் என்னைக்குப்
பரியலென் மன்யான், பண்டுஒரு காலே.

தெளிவுரை

தோழி! நம் தலைவர் மலைகள் இடையிட்டு அமைந்த வேற்று நாட்டில் வாழ்பவரும் அல்லர்; மரங்களின் உச்சி கண்ணுக்குத் தோன்றாத அளவில் அமைந்துள்ள தொலைதூரத்தில் வாழும் வேற்றூரினரும் அல்லர்; கண்களால் கண்டு பழகக்கூடிய அண்மையில் இருக்கிறார்; இருந்தாலும், கடவுளை அடையும் பொருட்டுத் துறவுக்கோலம் பூண்டவர் உலகை விட்டு மேன் மேலும் விலகிப்போவதைப் போல, அவர் என்னை விட்டு விலகி ஒழுகுகின்றார். அத்தகைய தலைவரிடம் முன்பு இருந்ததுபோல் இப்போது பரிவு கொண்டவளாய் இருக்க மாட்டேன். இனி அது கழிந்தது.

கருத்து

'தலைவன் என்னைப் புறக்கணித்து ஒழுகுவதால், முன்புபோல அவரிடம் பரிவு கொண்டவளாய் இருக்க இயலவில்லை.'

குறிப்பு

களவுக் காலத்தில் காடிடையிட்டும் ஊரிடையிட்டும் வந்து தலைவியொடு கூடியிருந்த தலைவன், இப்போது கற்பு வாழ்வில் நீங்கி வாழ்கிறான்.

விளக்கம்

தோழியே! அவர் தொலைதூரத்தில் இருப்பவர் அல்லர். எம் இருவரையும் எந்த மலையும் இடையிலிருந்து தடுக்கவுமில்லை; எந்தப் பெரிய காடும் குறுக்கிட்டுத் தடுத்துக்கொண்டிருக்கவு மில்லை. இருவரும் ஓரூரில் இருந்தும், அவர் நம்மை விட்டுப் பிரிந்துள்ளார். குற்றமுள்ள நெஞ்சு கொண்ட அவர் என்னைக் காண அஞ்சுகிறார்.

சொற்பொருள்

1. மலை இடை இட்ட - மலை குறுக்கிட்ட.
2. மரந்தலைத் தோன்றா - மரங்கள் நிறைந்த காட்டினில் காண இயலாத; ஊரரும் அல்லர் - எட்டியுள்ள ஊரில் இருப்பவரும் அல்லர்.
3. நண்ணுவழி - விரைவில் வந்து சேரும்படியான அண்மையிலிருந்தும்.
4. கடவுள் நண்ணிய - கடவுளை அடைய; பாலோர் போல - துறவிகள் போல.
5. ஒரீஇனன் ஒழுகும் - (மேன்மேலும்) விலகிச் செல்லும்; என் ஐக்கு - என் தலைவர்க்கு.
6. பரியலென் - அன்பு கொண்டிருந்தேன்; பண்டு ஒரு காலே - முன்பொரு காலத்தில் (இப்போது அந்த அன்பு மறைந்துவிட்டது).

தலைவி கூற்று

குறுந்தொகை 231 **பாலை பாடிய பெருங்கடுங்கோ**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகப் புக்க தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தமை மேற்கொண்டிருந்த தலைவனோடு தலைவி ஊடல் கொண்டிருந்தாள். தன்னிடம் வந்து குறையிரந்த தலைவனுக்கு இரங்கிப்

பரிவு காட்ட வேண்டும் என்று தோழி கூறியபோது, தலைவி மறுத்துக் கூறியது.

ஓர்ஊர் வாழினும் சேரி வாரார்;
சேரி வரினும் ஆர முயங்கார்;
ஏதி லாளர் சுடலை போலக்
காணாக் கழிப மன்னே நாண்அட்டு,
நல்லறிவு இழந்த காமம்
வில்உமிழ் கணையின் சென்றுசேண் படவே.

தெளிவுரை

தோழி! தலைவர் நாம் இருக்கும் இதே ஊரிலே வாழ்ந்தாலும் நாம் வாழும் பகுதிக்கு வரமாட்டார்; ஒருவேளை வந்தாலும் நம்மை ஆர்வத்தோடு தழுவ மாட்டார். நமது நாணத்தை அழித்து, நல்ல அறிவையும் இழக்க வைத்த காமம், வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல வேகமாய்த் தொலைவில் சென்று விழுந்துவிட்டது. அவ்வாறு காம உணர்வு முற்றிலும் அழியுமாறு செய்த அவர், தொடர்பற்றவர்களின் சுடுகாட்டைக் கண்டு வெறுத்து விலகிப் போகின்றவரைப்போல, என்னைக் கண்டும் காணாமலே விலகிச் சென்றுவிட்டார். (அவர் என்னை முற்றிலும் வெறுத்துவிட்டார்.)

கருத்து

"தலைவர் நம்மிடம் அன்பு கொண்டவர் அல்லர். அவர்பொருட்டு நீ பரிந்து பேச வேண்டா" என்று கூறி, தலைவி வாயில் மறுத்தாள்.

விளக்கம்

இருவரும் ஒரூரில் வாழ்கிறோம்; ஆனாலும் வந்து காண்பதில்லை. ஒருவேளை நாம் இருக்கும் பகுதிப் பக்கம் வர நேர்ந்தாலும், நம்மைக் காண்பதில்லை. அவரையே நினைந்திருக்கும் என்னைக் கண்டு ஆசை தீரத் தழுவிக்கொள்வதுமில்லை. நாணத்தையும் நல்லறிவையும் இழந்த என் காமம் வில்லிலிருந்து விடுபட்ட அம்பைப் போலத் தொலைவில் போய் விழும்படி அவர் செய்துவிட்டார். அயலாருக்குரிய சுடுகாட்டைக் காணாது செல்வார்போல அவர் என்னைக்

காணாமலேயே ஒதுங்கிவிடுகிறார். இப்படிப்பட்டவரின் சொல்லை எப்படி நம்புவது?

சொற்பொருள்

1. சேரி - (நாம் இருக்கும்) பகுதி.
2. ஆர முயங்கார் - நன்றாய்த் தழுவ மாட்டார்.
3. ஏதிலாளர் சுடலை போல - அயலார் சுடுகாட்டைக் கண்டால் விலகிச் செல்லுவார் போல.
4. காணாக் கழிய - நம்மைக் கண்டும் விலகிச் செல்கிறார்; நாண் அட்டு - நாணத்தைக் கொன்று.
5. நல்லறிவு இழந்த காமம் - நன்மை தீமையை உணர இயலாதவாறு செய்யும் காமம்.
6. வில்உமிழ் கணையின் - வில்லிலிருந்து விடப்பட்ட அம்பைப் போல; சென்று சேண்பட - சென்று நெடுந்தூரத்தில் விழுந்துவிட்டது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 152 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகள் வாயில் மறுத்துழி, ‘இவன் நின்மேல் தொடர்ச்சியிற் குறைவிலன், அருளுமுடையன்; ஆதலால் நீ இவனோடு புலத்தல் தகாது’ என நெருங்கி வாயில் நேர்விக்கும் தோழிக்கு அவள் சொல்லியது. (தொடர்ச்சி - தொடர்பு; புலத்தல் - ஊடுதல்).

கூற்று விளக்கம்

பரத்தை இல்லிலிருந்த தலைவன்பொருட்டாய் வந்த தூதுவர்களிடம், தலைவி உடம்பட மறுத்து அவர்களைப் போக்கிவிடுகின்றாள். அது கண்ட தோழி, ‘அவன் செய்த பிழை எதுவேயாயினும், அவன் உன்னிடம் அன்பு கொண்டவன்; விடாது உன்னோடு உறவு கொண்டிருப்பவன்; ஆகவே, அவனை ஒதுக்காது ஏற்று இன்புறுத்தலே தக்கது’ என்று கூற, தலைவி அவளுக்கு மறுமொழியாய்க் கூறியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கையறுபு இரற்றும் கானல்அம் புலம்பந்
துறைவன் வரையும் என்ப;
அறவன் போலும்; அருளுமார் அதுவே.

தெளிவுரை

வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தன் குஞ்செனக் கருதிக் காணச்சென்ற இளமை நடை கொண்ட நாரை, அது தன் பிள்ளை அன்று என்பதை அறிந்து செயலற்று ஒலித்தபடி இருக்கும். இத்தகைய தன்மையுள்ள கடற்கரைச் சோலையைக் கொண்ட துறைக்குரிய தலைவன், பரத்தை ஒருத்தியைத் தனக்கு இற்பரத்தையாய் வரைந்துகொள்வான் என்று பலரும் கூறுகின்றனர். உன்னால் கூறப்பட்ட அவன் கொள்ளும் அறமும் அருளும் இவைதாமோ?

கருத்து

'அன்பும் அறமும் மறந்தானை என் அகத்தில் கொள்ளேன்.'

விளக்கம்

தலைவன் அறவோனாகவும், அருளாளனாகவும், அன்புத் தொடர்ச்சி கொண்டவனாகவும் இருப்பதாய் நீ சொல்வது உண்மையே! ஆனால், அந்த அன்பும் அறமும் அருளும் எனக்கன்றி, அவன் புதியவளாய் மணந்துகொள்ளவிருக்கும் பரத்தைக்கே என எள்ளல் குறிப்புத் தோன்றச் சொல்லித் தலைவி வாயில் மறுத்தாள்.

சொற்பொருள்

3. கையறுபு - செயலற்று; இரற்றும் - ஒலிக்கும்; புலம்பன் - நெய்தல் நிலத் தலைவன்.
4. வரையும் - (இற்பரத்தையை) வரைந்துகொள்வான்.
5. அறவன் - அறம் கொண்டவன்; அருளுமார் அதுவே - அருளும் அதுவே.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 151 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

வாயில் வேண்டிய தோழிக்குத் தலைமகள் வாயில் மறுப்பாள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிற்பிரிந்து வந்த தலைவனை ஏற்குமாறு தோழி தலைவியிடம் வேண்ட, தலைவி மறுத்துக் கூறியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
மிதிப்ப, நக்க கண்போல் நெய்தல்
கள்கமழ்பு ஆனாத் துறைவற்கு
நெக்க நெஞ்சம் நேர்கல் லேனே.

தெளிவுரை

"இளமையான நடை கொண்ட நாரை, வெள்ளைக் கொக்கின் குஞ்சினைத் தன் குஞ்செனக் கருதிக் காணச் சென்றது. அப்போது அதன் காலால் மிதிபட்டு இதழ் விரிந்த நெய்தல் பூ, கண்போலத் தோன்றும். அப்பூவின் தேன் மணம் கமழும் துறையையுடைய தலைவனால் என் நெஞ்சம் உடைந்துவிட்டது. அதனால் அவனை ஏற்க உடம்படேன்" என்று தலைவி கூறினாள்.

கருத்து

'தலைவனால் என் நெஞ்சம் உடைந்துவிட்டது; அதனால் அவனை ஏற்க மாட்டேன்.'

உள்ளுறை

தனக்குரித்தல்லாத வெள்ளைக் கொக்கின் குஞ்சினைத் தனக்குரியது எனக் கருதி நாரை தன் குஞ்சினைக் கைவிட்டுக் காணச் சென்றது. இத்தொடர்மூலம், தலைவன் தனக்குரிய வளான தலைவியைக் கைவிட்டுப் பரத்தையை நாடிச்

சென்றொழுகுகின்றான்" என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

குறிப்பு

நாரை மிதிக்க இதழ் விரிந்து மலர்ந்த நெய்தல் மலர், மணம் வீசுவதுபோல, தலைவன் விடுத்த தூதர்களால் நெருக்குண்டு நான் அவனை ஏற்கக் கருதினாலும், என் நெஞ்சு அவனை ஏற்க மறுக்கிறது எனக் கூறித் தலைவன் வரவைத் தடுத்தாள்.

சொற்பொருள்

1. குருகு - கொக்கு; பிள்ளை - குஞ்சு; செத்தென - தன் குஞ்செனக் கருதி.
2. மட நடை - இளமை நடை கொண்ட.
3. நக்க - இதழ் விரிந்த.
4. கள் - தேன்; கமழ்பு - மணம்; ஆனா - குறையாத.
5. நெக்க - உடைந்துவிட்ட; நேர்கல்லேன் - உடம்படேன், ஒப்ப மாட்டேன்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 154 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தோழி வாயில் வேண்டி நெருங்கியவழி வாயில் மறுக்கும் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவனை ஏற்கலாம் எனத் தோழி சொல்லிய போது, 'அவனை வரவிடமாட்டேன்' என்று தலைவி சொல்லியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
கானல் சேக்கும் துறைவனோடு
யான்எவன் செய்கோ? பொய்க்கும்இவ் வூரே?

தெளிவுரை

மென்மையான நடை நடக்கும் நாரை, வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தனக்குரியது என்று கருதி அதனைப் பார்க்கச் சென்று கடற்கானலில் தங்கிவிடும் துறையினை உடையவன், தலைவன். அவனோடு நான் உறவு கொள்வதற்கு என்ன இருக்கிறது? இவ்வூர் பொய் சொல்கிறதோ? (அவனுக்காகப் பரிந்து பேசுவோர், பொய் சொல்லுகின்றனர்.)

கருத்து

'பரத்தையிடமே மயங்கிக் கிடக்கும் அவனோடு நான் எவ்வாறு மனம் பொருந்துவேன்?'

விளக்கம்

தலைவனுக்காகப் பரிந்து பேசும் தோழியைத் தலைவி, 'இவ்வூர்' என்று சாடையாய்க் குறிப்பிடுகிறாள்.

உள்ளுறை

"வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தெனக் காணிய சென்ற மடநடை நாரை கானல் சேக்கும்" : அஃதாவது, "வெள்ளாங் குருகின் குஞ்சினைத் தனக்குரியது என்று கருதிப் பார்க்கச் சென்ற நாரை கானலிலேயே தங்கிவிட்டது என்பதாம். இத்தொடர் மூலம், தானறிந்தாள் ஒருத்திக்கு மகளோ எனக் கருதிச் சென்ற தலைவன், அச்சேரியிடத்திலே மயங்கிக் கிடக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

3. கானல் - கடற்கரைச்சோலை; சேக்கும் - தங்கும்.
4. யான் எவன் செய்கு? - நான் என்ன செய்வேன்?; பொய்க்கும் - பொய் சொல்லுகிறது.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 20 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகளை வாயில் நேர்வித்தற்பொருட்டாக, 'காதலர் கொடுமை செய்தாராயினும் அவர் திறம் மறவாதொழிதல் வேண்டும்' என்று முகம்புகுகின்ற தோழிக்கு, 'என் கைவளை நில்லாதாகின்றது அவரை நினைந்ததன் பலனன்றே; இனி அமையும்' என்று தலைமகள் சொல்லியது. (முகம் புகுதல் - முகம் நோக்கி நிற்றல்.)

கூற்று விளக்கம்

தோழி, தலைவனுக்கு வாயில் நேர்விப்பதற்காகத் தலைவியிடம், 'காதலர் செயல் கொடிதேயாயினும் அவர் பெருமையை நாம் மறத்தலாகாது' என்கிறாள். அவளிடம் தலைவி, 'அவரை நெஞ்சில் கொண்டதற்குப் பலன் உடல் மெலிவாகி என் கைவளைகள் கழன்றோடுவதுதான். அவரை நினைத்தது போதும்' என்று வாயில் மறுத்துக் கூறியது.

அறுசில் கால அம்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்
காம்புகண் டன்ன தூம்புடை, வேழத்துத்
துறைநணி ஊரனை உள்ளி,என்
இறைஏர் எல்வளை நெகிழ்பு ஓடும்மே.

தெளிவுரை

ஆறு சிறிய கால்களையும் அழகிய சிறகினையும் கொண்ட தும்பி, தன் முட்டைகளை நூற்றுக்கணக்கான இதழ்களைக் கொண்ட தாமரைப் பூவில் இட்டு வைக்கும். அம்முட்டைகளை மூங்கில்போல உள் துளை கொண்ட வேழத்தட்டை சிதைத்து அழிக்கும். அத்தகைய நீர்த்துறைகளைக் கொண்டிருக்கும் ஊரைச் சார்ந்தவன், நம் தலைவன். அவனை நினைந்து வருந்தி உடல் மெலிந்ததால் என் கைகளில் வளையல்கள் நில்லாமல் கழன்றோடுகின்றன; காண்.

கருத்து

'நம்மைப் பிரிந்து சென்று உடல் மெலியும்படி செய்த அவனை ஏற்பது எதற்கு?'

உள்ளுறை

"அறுசில் கால அம்சிறைத் தும்பி நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினை சீக்கும்" : அஃதாவது, தாமரைப்பூவிலுள்ள தும்பியின் முட்டைகளை வேழத்தட்டை மோதிச் சிதைக்கும் என்பதாம். இத்தொடர்மூலம், தலைவியிடம் மீண்டும் வரும் தலைவனைப் பரத்தையர் நெருங்கிப் பிரித்துத் தம்மிடம் கொண்டு செல்வர் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. அறு - ஆறு; சில் - சிறிய; கால - கால்களைக் கொண்ட; சிறை - சிறகு.
2. நூற்றிதழ் - நூறு இதழ்; சினை - முட்டை; சீக்கும் - அழிக்கும்.
3. காம்பு - மூங்கில்; தூம்பு - உள்துளை; வேழம் - வேழக்கரும்பு.
4. நனி - அருகிலுள்ள; உள்ளி - நினைந்து.
5. இறை - முன் கை; ஏர் - அழகு; நெகிழ்பு - நெகிழ்ந்து.

தலைவி தலைவனை மறுத்தல்.

தலைவி கூற்று

நாலடியார் 387 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : மருதம்

கூற்று :

பரத்தையிடம் சென்று திரும்பும் தலைமகனைப் பற்றித் தலைமகள் தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் சென்ற தலைவன் திரும்பி வீடு வருவதைத் தோழி தலைவிக்குக் கூற, தலைவி, அவன் திரும்பி வந்தாலும் அவனைத் தான் ஏற்கப் போவதில்லை எனத் தோழிக்குக் கூறியது.

கருங்கொள்ளும் செங்கொள்ளும் தூணிப் பரக்கென்(று)
ஒருங்கொப்பக் கொண்டானாம் ஊரன் – ஒருங்கொவ்வா
நன்னுதலார்த் தோய்ந்த வரைமார்பன் நீராடா(து)
என்னையும் தோய வரும்.

தெளிவுரை

ஊரனாகிய தலைவன், ஒரே விலைக்கு முறையே தூணி, பதக்கு என்ற அளவுகளில் தாழ்ந்த கருமையான கொள்ளையும் உயர்ந்த சிவப்புக் கொள்ளையும் வாங்கி, அவற்றை ஒரே தன்மையதாய்க் கொண்டானாம். அவ்வாறே, என்னொடு எவ்வகையிலும் ஒத்திராத, அழகிய நெற்றிப் பகட்டையுடைய பரத்தையைத் தழுவித் துய்த்த, மலை போன்ற மார்பையுடைய தலைவன், அவளைத் தொட்ட தீட்டு நீங்க நீராடாது, என்னையும் அவளோடு ஒப்ப நினைத்து, தழுவித்தோய வருகிறான். நான் அவனை ஏற்க மாட்டேன்.

கருத்து

பரத்தையைத் தழுவிய தலைவனை நான் ஏற்க மாட்டேன்.

சொற்பொருள்

1. கொள் - ஒருவகைத் தானியம்; தூணி, பதக்கு - அளத்தல் அளவைகள் (தூணி - நான்கு மரக்கால், பதக்கு - இரண்டு மரக்கால்).
2. ஊரன் - தலைவன்.
3. தோய்ந்த - தழுவிய; வரை - மலை.

தலைவி கூற்று

அகநானூறு 266 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்து கூடிய தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் சென்று திரும்பி வந்த தலைவனோடு ஊடிய தலைவி கூறியது.

கோடுற நிவந்த நீடுஇரும் பரப்பின்
அந்தீம் பராஅய புதுப்புனல், நெருநை,
மைந்துமலி களிற்றின் தலைப்புணை தழீஇ,
நரந்தம் நாறும் குவைஇருங் கூந்தல்
இளந்துணை மகளிரொடு ஈர்அணிக் கலைஇ,
நீர்பெயர்ந்து ஆடிய ஏந்துஎழில் மழைக்கண்
நோக்குதொறும் நோக்குதொறும் தவிர்விலை யாகி,
காமம் கைம்மிகச் சிறத்தலின், நாண்இழந்து,
ஆடினை என்ப– மகிழ்ந!– அதுவே
யாழ்இசை மறுகின் நீடூர் கிழவோன்
வாய்வாள் எவ்வி ஏவல் மேவார்
நெடுமிடல் சாய்த்த பசும்பூண் பொருந்தலர்
அரிமண வாயில் உறத்தூர் ஆங்கண்
கள்ளுடைப் பெருஞ்சோற்று எல்இமிழ் அன்ன,
கவ்வை ஆகின்றால் பெரிதே; இனிஅஃது
அவலம் அன்றுமன், எமக்கே; அயல
கழனி உழவர் கலிசிறந்து எடுத்த
கறங்குஇசை வெரீஇப் பறந்த தோகை
அணங்குடை வரைப்பகம் பொலியவந்து இறுக்கும்
திருமணி விளக்கின் அலைவாய்ச்
செருமிகு சேஎயொடு உற்ற சூளே!

தெளிவுரை

தலைவ! ஆற்றின் கரையைத் தொட்டுச் செல்லும் நீண்ட பரப்பினைக் கொண்ட அழகிய, மனத்திற்கு விருப்பமான புதுவெள்ளத்தில், நேற்று நீ வலிமைமிக்க யானையைப்போல, தெப்பத்தின் தலைப்புறத்தினைப் பற்றிக்கொண்டு, நரந்தம்புல் மணம் கமழும் நெருக்கமான கூந்தலைக் கொண்ட மங்கையரோடு நீராடியுள்ளாய். அவர்கள் நீர் விளையாட்டிற்குரிய அணிகளை அணிந்துகொண்டு, வெள்ளத்தில் புரண்டு நீந்தி, தம் அழகிய குளிர்ச்சி பொருந்திய கண்களால் உன் அழகைப் பருகினராம். அவர்கள் நோக்க நோக்க, உன் விருப்பம் அளவு கடந்து மிகுந்துவிட, அதனால் நாணத்தை இழந்து, நீயும் அவர்களுடன் விளையாடி மகிழ்ந்திருந்தாயாம்.

எவ்வி, யாழ் ஒலிக்கும் தெருக்களைக் கொண்ட நீருக்குத் தலைவன்; வாட்போரில் வல்லவனான அவன் தனக்கு அடங்காத பகைவர்களோடு 'அரிமண வாயில் உறத்தூர்' என்னுமிடத்தில் போர் நிகழ்த்தி வெற்றி கொண்டான். அந்த வெற்றி விழாவில் தன் படைவீரர்களுக்குக் கள்ளுடன் கூடிய பெருஞ்சோறு வழங்கினான். அதனால் அங்கு எழுந்த ஆரவாரம் போல, நீ நீராடிய செயலால் எழுந்த பழிச்சொல் விளங்குகின்றது.

அதுகூட எமக்குத் துன்பம் தரவில்லை. அயலேயுள்ள வயல் களில் உழவர்கள் செருக்குமிகுந்தவராய் எழுப்பிய ஒலிக்கு அஞ்சிப் பறந்து சென்ற மயில், தெய்வம் உறையும் அழகிய குன்றில் பொலிவுடன் வந்து தங்கியது; அழகிய மணிவிளக்கு ஒளிரும் அச்சீரலை வாயிலில் எழுந்தருளியுள்ள முருகக் கடவுள் மீது, என்னை மணந்தபோது செய்த சூளுரையே எமக்குத் துன்பம் தருவதாய் இருக்கிறது.

கருத்து

'தலைவ! தெய்வத்தின் பெயரால் நீ செய்த சூளுரையைப் பொய் ஆக்கினாய். அதனால் உனக்குத் தெய்வம் தீங்கு செய்யுமோ என அச்சம் கொள்கிறேன்.'

விளக்கம்

தலைவ! நீ உன் பரத்தை மகளிரோடு தெப்பத்தில் ஏறிப் புனலாடியிருக்கிறாய். அதனால் ஊரில் பழிச்சொல் மிகுதியாய் எழுந்துள்ளது. அதுகூட எமக்குத் துன்பம் தருவதன்று. அலைவாய் எனப்படும் திருச்செந்தூரில் உள்ள முருகன் பெயரால் நீ சூளுரை செய்தாயே, அதுதான் பெரிய துன்பத்தைத் தருகிறது. (திருமணக் காலத்தில் என்னிடம் முருகன்மீது ஆணையிட்டு, 'உன்னைப் பிரியேன்; பிரியின் உயிர் வாழேன்' என்று கூறினாய். இப்போது அச்சூளுரையைப் பொய்யாகும் படி செய்துவிட்டாய். அதனால் அம்முருகு உன்னை என்ன செய்யுமோ என அச்சம் கொள்கிறேன்.)

உள்ளுறை

"கழனி உழவர்.... இறுக்கும்" : அஃதாவது, உழவர் ஒலிக்கு அஞ்சிப் பறந்த மயில், தெய்வம் உறையும் குன்றத்தில் வந்து அழகாய் அமர்ந்தது என்பதாம். இத்தொடர்மூலம், தலைவனும் ஊரில் எழுந்துள்ள பழிச்சொல்லுக்கு அஞ்சியே, கட்டுப்பாடு மிக்க மனையில் தங்க வந்துள்ளான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

குறிப்பு

குறிஞ்சி நிலத்துக்குரிய மயில் தன் இடம்விட்டு மருத நிலமாகிய வயலுக்குச் சென்றது. அங்கு உழவர்களது ஒலிக்கு அஞ்சி மீண்டும் தன் மலைக்கு வந்து சேர்ந்தது.

சொற்பொருள்

1. கோடு - (கரையின்) உச்சி; நிவந்த - உயர்ந்த.
2. பராஅய - பரவிய; நெருநை - நேற்று.
3. மைந்து - வலிமை; களிறு - ஆண்யானை; தலைப்புணை - தெப்பத்தின் தலைப்புறம்.
4. நரந்தம் - நரந்தம் புல்; குவை - திரண்ட; இரு - கரிய.
5. ஈர் அணி - நீர் விளையாட்டிற்குரிய அணிகலன்; கலைஇ - அணிந்து.
6. ஏந்துஎழில் - மிகுந்த அழகு; மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்.
7. தவிர்வு இலை - நீ விருப்பம் தவறாதவன் ஆகி.
8. கைம்மிக - அளவு கடந்து மிகுதலின்.
9. மகிழ்ந - தலைவ!
10. மறுகு - வீதி; நீடுர் கிழவோன் - நீடூருக்குத் தலைவன்.
11. எவ்வி - தலைவருள் ஒருவன்; ஏவல் - கட்டளை; மேவார் - பொருந்தாதவர், கீழ்ப்படியாதவர் (தனக்கு அடங்காதவர்).
12. நெடு மிடல் - மிக்க வலிமை; சாய்த்த - அழித்த; பொருந்தலர் - பகைவர்.
13. அரிமண வாயில் உறத்தூர் - ஒரு போர்க்களம்.
14. எல்இமிழ் - பகலில் எழுந்த ஆரவாரம்.
15. கவ்வை - பழிச்சொல்.
16. அவலம் அன்று - (அப்பழிச்சொல்) எமக்குத் துன்பம் தருவதன்று.
17. கலி சிறந்து - செருக்கு மிகுந்து.

18. கறங்கு இசை - ஒலிக்கின்ற ஆரவாரம்; வெரீஇ - அஞ்சி; தோகை - ஆண்மயில்.
19. அணங்குடை - (தெய்வ) அச்சத்தைக் கொண்ட; வரைப்பகம் - மலையிடம்; பொலிய - அழகு பெற; இறுக்கும் - தங்கும்.
20. அலைவாய் - திருச்சீரலைவாய் (முருகன் கோவில் உள்ள இடம்)
21. செருமிகு - போர்வன்மை மிக்க; சேய் - குழந்தை (முருகன்); சூள் - உறுதிமொழி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 160 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

புலந்த காதற்பரத்தை புலவி தீராது, தலைமகன் வாயில் வேண்டி வந்தான் என்றதறிந்த தலைமகள் வாயில் மறுத்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை ஒருத்தியோடு தங்கியிருந்தான். அவள் தலைவனுடன் ஊடினாள். அவள் ஊடலைத் தீர்க்காது விடுத்துத் தலைவன் தலைவியை நாடி வந்து, அவள் ஊடலைத் தீர்த்துக் கூட விரும்பினான். அவனிடம் தலைவி சொல்லியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
நொந்ததன் தலையும் நோய்மிகும் துறைவ!
பண்டையின் மிகப்பெரிது இனைஇ,
முயங்குமதி, பெரும! மயங்கினள் பெரிதே!

தெளிவுரை

வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தனக்குரியது என்று கருதிக் காணச் சென்ற நாரை, அக்குஞ்சு தனக்குரியது அன்று என்று அறிந்து மிகவும் வருத்தம் கொண்டது. அந்நாரை கொண்டுள்ள வருத்தத்தினும் அதிகமாய் வருத்தம் கொண்டிருக்கும் தலைவனே! நீ ஊடலைத் தீர்க்காமையால், உன் காதல் பரத்தை முன்பு கொண்டிருந்த வருத்தத்தைவிட இப்போது மிகவும் வருத்தம்

கொண்டிருக்கிறாள். ஆதலால், பெருமானே! நீ விரைந்து சென்று அவளைத் தழுவி இன்புறச் செய்க.

கருத்து

உன் காதற் பரத்தை வருத்தம் கொண்டிருக்கிறாள்; அதனால் நீ அவளிடம் செல்.

விளக்கம்

நாரை கொண்டுள்ள வருத்தத்தைக் காட்டிலும் தலைவன் கொண்டுள்ள வருத்தமும், தலைவன் வருத்தத்தைக் காட்டிலும் பரத்தை கொண்டுள்ள வருத்தமும் மிகுதியாய் இருப்பதால், 'நீ என் வருத்தத்தை நீக்க இங்கே வர வேண்டா; அங்கே சென்று அவள் வருத்தத்தை நீக்கு' என்று கூறித் தலைவி வாயில் மறுக்கிறாள்.

சொற்பொருள்

3. நொந்ததன் தலையும் - வருத்தம் கொண்டதற்கு மேலும்; நோய் மிகும் - அதிகமாய் வருத்தம் கொண்டிருக்கும்.
4. பண்டையின் - முன்னினும்; இனைஇ - வருந்தி.
5. முயங்கு - தழுவு; மயங்கினள் பெரிதே - (உன் பரத்தை) மிகவும் மயங்கியிருக்கிறாள்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 65 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகற்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீட்டிலிருந்த தலைவன் தனக்குப் புதல்வன் பிறந்துள்ளான் என்பதை அறிந்து தன் இல்லம் திரும்பினான். தலைவியின் ஆற்றாமையினைப் பயன்படுத்தித் தலைவியைத் தழுவ நெருங்க, தலைவி அவனைக் கடிந்து பேசியது.

கரும்புநடு பாத்தியில் கலித்த ஆம்பல்
சுரும்பு பசிகளையும் பெரும்புனல் ஊர!
புதல்வனை ஈன்றஎம் மேனி
முயங்கன்மோ தெய்யநின் மார்புசிதைப் பதுவே.

தெளிவுரை

கரும்பு நடப்பட்டு வளர்ந்துள்ள பாத்தியில் தானாகவே தழைத்த நீராம்பல், வண்டினத்தின் பசியைப் போக்குகின்ற வளம் நிறைந்த மிகுதியான நீர்நிலைகளைக் கொண்ட ஊரனே! புதல்வனை ஈன்ற என் மேனியைத் தழுவாதே! என் மார்பில் சுரக்கும் பால், உன் மார்பின் அழகுப் புனைவுகளைச் சிதைத்து விடும்.

கருத்து

உன் மார்பின் அழகு சிதைந்தால், உன் பரத்தை உன்னை வெறுப்பாள். அதனால் என்னைத் தழுவாதே!

விளக்கம்

தலைவன் தன்னைத் தழுவ முயலும்போது, அவன் மார்பில் உள்ள பூச்சு, புனைவு ஆகியவற்றைக் கண்டு, அவன் பரத்தை யிடம் செல்ல இருப்பதாய்க் கருதி, 'என்னைத் தழுவினால் என் மார்பில் ஊறும் பால்பட்டு உன் மார்பின் அழகுப் புனைவுகள் சிதையும்; அது கண்டு பரத்தை உம்மை வெறுப்பாள்' என்று தலைவி அவன் தன் அருகில் வர மறுத்துக் கூறினாள்.

உள்ளுறை

"கரும்புநடு பாத்தியில் கலித்த ஆம்பல் கரும்பு பசிகளையும்" : அஃதாவது, கரும்பு நடுவதற்கென்று ஒழுங்கு செய்யப்பட்ட பாத்தியில் தழைத்த ஆம்பல், வண்டுகளின் பசியினைக் களையும் என்பதாம். இத்தொடர்மூலம், தலைவனும் தலைவியும் இல்லறம் செய்தற்கு இயற்றிய வீட்டில் பரத்தையர் குழுமித் தலைவனின் நலத்தினைப் பெற்று வருகின்றனர் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கலித்த - தழைத்த; ஆம்பல் - ஆம்பல் மலர்.
2. சுரும்பு - வண்டு; களையும் - நீக்கும்.
4. முயங்கன்மோ - தழுவாதே; சிதைப்பது - புனைந்துள்ள அழகைக் கெடுக்கும்.

தலைவி கூற்று

நற்றிணை 350 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் ஊடல் மறுத்தாள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையின் வீட்டிற்குச் சென்று தங்கிய தலைவன் மீண்டும் தன் மனைக்கு வந்தான். அவன் எத்துணை உணர்த்தியும் வெகுளியை நீக்காது தலைவன் தன்னை நெருங்குதல் கூடாதெனத் தலைவி கடிந்து கூறியது.

வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ,
பழனப் பல்புள் இரியக் கழனி
வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிரும்
தேர்வண் விராஅன் இருப்பை அன்ன,என்
தொல்கவின் தொலையினும் தொலைக! சார
விடேஎன்; விடுக்குவென் ஆயின், கடைஇக்
கவவுக்கை தாங்கும் மதுகையம் குவவுமுலை
சாடிய சாந்தினை வாடிய கோதையை;
ஆசுஇல் கலம்தழீஇ யற்று;
வாரல்; வாழிய, கவைஇநின் தோளே!

தெளிவுரை

வெண்ணெல்லை அரிபவர்கள் முழக்குகின்ற தண்ணுமையின் ஒலிக்கு அஞ்சி, வயலில் உள்ள பறவை இனங்கள் பலவும் வயற் பரப்பை விட்டகன்று, வயலின்மீது தாழ்ந்து வளைந்த கிளையைக் கொண்ட மருத மரத்தில் சென்று தங்கும்; அதனால், அம்மரத்துப் பூக்கள் உதிரும். தம்மை நாடிவரும் இரவலர்

களுக்குத் தேரைக் கொடுக்கும் வள்ளன்மை மிக்க விரான் என்பவனுடைய இருப்பையூர் போன்ற என் அழகெல்லாம் நீங்குவதாயினும் நீங்கட்டும். என் அருகில் நெருங்க உன்னை அனுமதியேன். அங்ஙனம் நெருங்கவிடுவேனாயின், என் சொற்கள் உன்னை விலக்கினாலும், உன் கைகள் என்னைப் பற்றி உன் மார்பிலே அகப்படுத்தி நான் மீளாதவாறு பிணித்துத் தாங்கும் வலிமையுடையன. பரத்தை தானே வந்து சந்தனம் பூசப் பெற்ற தன் குவிந்த முலைகள் மோதி உன்னைத் தழுவியதால் சந்தனத்தை உன் மார்பிலே கொண்டுள்ளாய்; அவள் தழுவிய தால் உன் மாலையும் துவண்டுள்ளது. ஆதலால், உன்னைத் தழுவுதல் என்பது, கழித்தெறியப்பட்ட தாழி, கலம் முதலிய வற்றைத் தீண்டுதல்போல ஆகும். ஆகவே, நீ இங்கு வரவேண்டா. (அப்பரத்தையே உன்னைத் தழுவி இன்புறட்டும்!)

கருத்து

'பரத்தையால் நுகரப்பட்ட உன்னை நான் முயங்குவது, கழித்தெறிந்த கலத்தைப் பயன்படுத்த எடுத்துக்கொள்ளுதல் போலாகும்.'

விளக்கம்

"தலைவ! பரத்தையிடமிருந்து நீ வருகிறாய் என்பதற்கான அடையாளங்கள் உன் மார்பிலும் மாலையிலும் தென்படு கின்றன. என் அழகு தொலைந்தாலும் தொலையட்டும்; உன்னை என்னிடம் நெருங்க அனுமதிக்க மாட்டேன். அனுமதித்தால் நீ என்னைத் தழுவ முனைவாய். பரத்தையின் மார்பைத் தழுவிய உன்னைத் தழுவுதல் என்பது, கழித்து எறியப்பட்ட கலத்தினை நான் தீண்டுவதற்கு ஒப்பாகும். ஆதலின், அருகில் வாராதே" எனத் தலைவி தலைவனிடம் கடிந்து சொல்கிறாள்.

உள்ளுறை

"வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇ, பழனப் பல்புள் இரியக் கழனி வாங்குசினை மருதத் தூங்குதுணர் உதிரும்" : அஃதாவது, "மள்ளர் முழக்கும் தண்ணுமை ஒலிக்கு அஞ்சிய புள்ளினம் செறிதலால், மருத மரக் கிளையிலுள்ள பூங் கொத்துகள் உதிரும் என்பதாம். இத்தொடர்மூலம், தலைவிமீது

தலைவனுக்கு அன்பில்லையாயினும், அயலார் உரைக்கும் பழிக்கு அஞ்சியே தலைவன் தன் மனைக்கு வந்தான்" என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

குறிப்பு

தலைவன் வலிந்து பற்றி, கையை வளைத்து இறுகத் தழுவினால், அப் பிடியை விலக்கித் தன்னால் அவனை ஒதுக்க இயலாது என்று தலைவி கூறுதலால், வெறுப்பினிடையேயும் குடிப்பண்பின் உயர்ச்சி அவள் உள்ளத்தில் இழையோடுவதைக் காணலாம். ஆகவே, ஊடிப் பிணங் கினாலும் முடிவில் இசைந்து கூடுவள் என்று கொள்ளலாம்.

சொற்பொருள்

1. அரிநர் - அரிபவர்; தண்ணுமை - முழவு (முழக்கம்); வெரீஇ - அஞ்சி.
2. பல்புள் - பலவகைப் பறவைகள்; இரிய - பறந்தோட.
3. வாங்கு சினை - வளைந்த கிளை, மருதம் - மருத மரம்; தூங்கு துணர் - தொங்கும் பூங்கொத்து.
4. விரான் - தலைவருள் ஒருவன்; இருப்பை - விரானின் ஊர்.
5. தொல்கவின் - இயற்கை அழகு; சார - என்னை நெருங்க.
6. விடேன் - விடமாட்டேன்; கடைஇ - தாவி.
7. கவவுக்கை - என்னை உன் மார்பகத்தே அணைக்கும் உன் கைகள்; தாங்கும் மதுகைய - நான் மீளாதவாறு தாங்கும் வலிமை கொண்டுள்ளன; குவவு முலை - குவிந்த முலை.
8. சாடிய - பாய்ந்து உழக்கிய, மோதிய; சாந்து - சந்தனம்; கோதை - மலர் மாலை.
9. ஆசு இல்கலம் - கழித்து எறியப்பட்ட கலம்; தழீஇயற்று - தீண்டுதல் போன்றது, தழுவிக்கொள்ளுதல் போன்றது.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 152 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

நெய்யணி நயந்த கிழவனைக் கிழத்தி நெஞ்சு புண்ணுறீஇக் கூறியது.

(நெய்யணி - தலைவி மகப்பெற்ற அண்மைக் காலத்தில், மகப்பேற்றால் உடம்பில் உண்டாய தூய்மையற்ற கசடுகள் நீங்க, அவளுக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டும் மங்கல நீராட்டு.)

கூற்று விளக்கம்

தலைவி மகப்பெற்று நெய்யணிந்து நீராடிய பின் இல்லத்துப் புகுந்த நிலையில், தலைவியைத் தலைவன் முயங்க எண்ணினான். அவன் பரத்தையருடன் கூடி வந்ததை நினைத்துத் தலைவி வருந்திக் கூறியது.

முலையாலும் பூணாலும் முன்கண்தாம் சேர்ந்த
இலையாலும் இட்ட குறியை – உலையாது
நீர்சிதைக்கும் வாய்ப்புதல்வன் நிற்கும் உனை,முலைப்பால்
தார்சிதைக்கும் வேண்டா தழூஉ.

தெளிவுரை

முன்னே புணர்ச்சிக் காலத்தில் பரத்தையர் தம் கொங்கைகளாலும், அணிகலன்களாலும், இளந்தளிர்களாலும் உன் மார்பில் பொருத்தி வைத்த குறியானது இன்னும் நீங்காது என்முன் தோன்றுகிறது. நீ என்னைத் தழுவினால் உமிழ்நீரைச் சிந்தும் வாயைக் கொண்ட என் மகன் உண்ணும் கொங்கையின் பால் உன் மாலையைக் கெடுத்துவிடும். எனவே, நீ என்னைத் தழுவ வேண்டா.

கருத்து

'உன் மார்பிலுள்ள மாலையினை என் முலைப்பால் சிதைக்குமாதலின் என்னைத் தழுவ வேண்டா' எனத் தன்னை நெருங்கி வந்த தலைவனை நோக்கி, மகப்பெற்றெடுத்த தலைவி கூறினாள்.

குறிப்பு

பரத்தையரைத் தழுவிய தலைவனின் மார்பு தன்னைத் தழுவுதலைவிட, மகனது எச்சில் வாய் தழுவுதலே இன்பம் தரும் என்கிறாள் தலைவி.

சொற்பொருள்

1. பூண் - அணிகலன்; முன்கண் - முன்னர்; தாம் - பரத்தையர்.
2. குறி - அடையாளம்; உலையாது - நீங்காது.
3. நீர் - உமிழ்நீர்; நிற்கும் உனை - என்முன் நிற்கும் உன்னை.
4. தார் - மாலை; சிதைக்கும் - அழிக்கும்; தழூஉ வேண்டா - தழுவ வேண்டா.

தலைவி கூற்று

கலித்தொகை 73 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

"தங்கியவொழுக்கத்துக் கிழவனை வணங்கி, 'எங்கையர்க் குரை'யென இரத்தற்கண்" தலைமகள் கூறியது. (தங்கிய - பரத்தை வீட்டில் தங்கிய; கிழவன் - தலைவன்; எங்கையர் - எம் தங்கையர் (பரத்தையர்); இரத்தற் கண் - ஊடலை விட்டுவிடுமாறு தலைவன் தலைவியைத் தீர வேண்டிய பொழுது.)

கூற்று விளக்கம்

பரத்தை இல்லத்தே தங்கிவிட்டுத் திரும்பும் தலைவனிடத்துத் தலைவி ஊடல் கொண்டு தன் சினத்தைக் குறிப்பு மொழியால் வெளிப்படுத்துகிறாள். 'உன் பொய்யுரைகளை உன் பரத்தையராகிய என் தங்கையரிடமே சொல்லி இன்பம் பெறுக" என்று தலைவி கூறுகிறாள்.

தரவு

அகன்துறை அணிபெறப் புதலொடு தாழ்ந்த
பகன்றைப்பூ உறநீண்ட பாசடைத் தாமரை,
கண்பொர ஒளிவிட்ட வெள்ளிய வள்ளத்தால்
தண்மகழ் நறும்தேறல் உண்பவன் முகம்போல,
வண்பிணி தளைவிடூஉம் வயல்அணி நல்ஊர!

தாழிசை

நோதக்காய் எனநின்னை நொந்தீவார் இல்வழித்
'தீதிலேன்' யான்எனத் தேற்றிய வருதிமன்!
ஞெகிழ்தொடி இளையவர் இடைமுலை தாதுசோர்ந்து,
இதழ்வனப்பு இழந்தநின் கண்ணிவந்து உரையாக்கால்?

கனற்றிநீ செய்வது கடிந்தீவார் இல்வழி,
'மனத்தில்தீது இலன்'என மயக்கிய வருதிமன்!
அலமரல் உண்கண்ணார் ஆய்கோதை குழைத்தநின்
மலர்மார்பின் மறுப்பட்ட சாந்தம்வந்து உரையாக்கால்?

என்னைநீ செய்யினும், உரைத்தீவார் இல்வழி,
முன்அடிப் பணிந்து,எம்மை உணர்த்திய வருதிமன்!
நிரைதொடி நல்லவர் துணங்கையுள் தலைக்கொள்ளக்
கரையிடைக் கிழிந்தநின் காழகம்வந்து உரையாக்கால்?

எனவாங்கு—

சுரிதகம்

மண்டுநீர் ஆரா மலிகடல் போலும்நின்
தண்டாப் பரத்தை தலைக்கொள்ள, நாளும்
புலத்தகைப் பெண்டிரைத் தேற்றி;மற்று யாம்எனின்,
தோலாமோ நின்பொய் மருண்டு?

தெளிவுரை

"அழகு பொலியும் வயல்களைக் கொண்ட ஊர்களை உடையவனே! உன் ஊரின் குளக்கரையில், அகன்ற வெள்ளிக் கிண்ணங்கள் போலத் தோன்றுகின்ற பகன்றை மலர்கள் சிறுசிறு புதர்களுடன் காட்சி தருகின்றன. அம்மலர்களோடு உராயுமாறு நீண்டு வளர்ந்திருந்தது, ஒரு தாமரை மொட்டு. பகன்றையோடு அது உராய்ந்து மலர்ந்த காட்சி, வெள்ளிக் கிண்ணம் ஒன்றில் குளிர்ச்சியோடு கூடிய மணம் கமழும் மதுவை ஊற்றி, அதனை அருந்தும் மங்கை ஒருத்தியின் முகம் போன்றிருந்தது. இத்தகைய காட்சியினைக் கொண்ட ஊருக்குத் தலைவனே!

" 'நீ தவறு புரிபவன்' என்று நோகும்படி கூறி உன்னைப் பழித்துரைப்போர் இல்லாத காரணத்தால், நீ என்னிடம் வந்து, 'நான்

தீதற்றவன்' என்று உரைத்து எனக்கு ஆறுதல் கூறுகின்றாய். என்றாலும், சுழலும் தொடியினைக் கொண்ட இளையவரான பரத்தையரைத் தழுவும்போது, உன் கண்ணியின் இதழ்க ளெல்லாம் அவர்கள் முலையிடையே உதிர்ந்துவிடும். தன் வனப்பிழந்துள்ள அக்கண்ணி உன்னைக் காட்டிக் கொடுத்து விடுகிறதே!

"நெஞ்சம் வருந்துமாறு நீ செய்யும் செயலைக் கடிந்து கூறுபவர் இல்லாததனால், 'உள்ளத்தால் உனக்கு எந்தத் தீங்கும் நினையாதவன்' என்று கூறி, என் ஊடலைத் தீர்க்க எண்ணு கிறாய்! சுழலும் கண்களைக் கொண்ட பரத்தையர், உன் மார்பிலே தலை வைத்து இன்பம் நுகருங்கால் அவர்கள் தலைமாலை உன் மார்புச் சந்தனத்தினைக் கலைத்துவிட்டதுவே! அச்சந்தனமே இப்போது உன்னைக் காட்டிக் கொடுத்து விடுகிறதே!

"நீ என்ன குற்றம் செய்தாலும் அதனை எடுத்துரைத்து உன்னைத் திருத்துவோர் இங்கில்லாத காரணத்தால், நீ என் முன் வந்து, அடிபணிவதுபோலப் பாசாங்கு செய்து என்னை உன் வசமாக்க முற்படுகிறாய். நிறைந்த வளையல்களை அணிந்த பரத்தையர் உன்னோடு துணங்கைக்கூத்து ஆடியபோது உன் ஆடையின் கரை கிழிந்திருக்கிறதே! அக்கிழிந்த கரை உன்னைக் காட்டிக் கொடுத்துவிடுகிறதே!

"எவ்வளவு ஆற்றுநீர் சென்று வீழ்ந்தாலும் கடல் நிறைந்து விடப்போவதில்லை. அக்கடல் போன்றவன், நீ! உன் பரத்தமை ஆவல் எப்போதும் அடங்கப்போவதில்லை. உன் பரத்தையர் ஊடல் கொண்டால் உன்னால் பொறுத்துக்கொள்ள இயலாது. எனவே, உன் பரத்தையர் ஊடலைத் தீர்த்து வை. என்னைப் பற்றிக் கவலைப்படாதே! உன் பொய்ம்மைக்கு மயங்கி, உன்னிடம் தோற்று, உன் ஆசையை நிறைவேற்றுபவள்தானே நான்!" என்று தலைவி தலைவனிடம் உரைத்தாள்.

கருத்து

பரத்தையரிடம் இன்பம் நுகர்ந்துவிட்டுத் தன் இல்லம் திரும்பிய தலைவன், 'தான் எந்தத் தவறும் செய்யவில்லை' என்று கூறித் தலைவியின் ஊடலைத் தீர்க்கக் கருதுகிறான்.

தலைவன் கூறியவை அனைத்தும் பொய்யென்பதை அவனுடைய தலைக்கண்ணியும், மார்பில் பூசிய சந்தனமும், கரை கிழிந்த ஆடையும் தலைவியிடம் காட்டிக்கொடுத்துவிடுகின்றன.

தலைவன் பரத்தையரோடு கொண்டிருந்த உறவை விளக்கிக் கூறிய தலைவி, 'இத்தகைய பொய்யுரைகளை உன் பரத்தையராகிய என் தங்கை யரிடமே சொல்லி இன்பம் பெற்றுக்கொள்' என்று அவனை ஏற்க மறுக்கிறாள்.

விளக்கம்

பகன்றைப்பூ வெண்மையானது; கிண்ணம் போன்ற அமைப் பினைக் கொண்டது. மகளிர் முகம் தாமரையை ஒத்தது. பகன்றை மலரில் தாமரை உராய்ந்திருப்பது வெள்ளிக் கிண்ணத்தில் மங்கை ஒருத்தி மது அருந்துவதுபோல இருக்கிறது.

கண்ணியும், சாந்தமும், ஆடையின் கரையும் தலைவன் பரத்தையர் இல்லத்திலிருந்து நேராய் வந்தவன் என்பதைக் காட்டிக்கொடுத்துவிட்டன.

பரத்தையரோடு உறவுகொண்டு ஒழுகும் ஆடவரைப் பெரியோர் கண்டித்துள்ளனர் என்பதைத் தலைவி கூறும் 'நொந் தீவார்', 'கடிந்தீவார்', 'உரைத்தீவார்' என்னும் தொடர்கள்மூலம் அறியலாம்.

உள்ளுறை

குளத்தினது அகன்ற துறையைப் பரத்தையர் சேரியாகவும், புதர்களைப் பரத்தையரைத் தலைவனுடன் கூட்டுவிக்கும் பாணர்களாகவும், பகன்றை மலர்களைப் பரத்தையராகவும், பகன்றையோடு உராய்ந்து மலரும் தாமரையைத் தலைவனாக வும் கொண்டு உள்ளுறைப் பொருள் காணலாம்.

சொற்பொருள்

1. புதல் - புதர்.
2. உற - பொருந்த; பாசடை - பசிய இலை.
3. கண்பொர - கண் கூசுமாறு.
4. தேறல் - மது
5. வண்பிணி - வலிமையான முறுக்கு; தளை விடூஉம் - கட்டவிழும்.

6. நோதக்காய் - தவறு புரிகின்றாய்; நொந்தீவார் - பழித்துரைப்பவர்; இல்வழி - இல்லாததால்.
7. தீதிலேன் - நான் தீதற்றவன்; வருதி - வந்திருக்கிறாய்.
8. ஞெகிழ் - கழலும்; தொடி - வளையல்; இளையவர் - பரத்தையர்.
9. கண்ணி - தலைமாலை; உரையாக்கால் - சொல்லாவிட்டால் (காட்டிக் கொடுத்துவிடுகிறது).
10. கனற்றி - உள்ளத்தை வருத்தி; கடிந்தீவார் - கடிந்து சொல்பவர்.
11. மயக்கிய - மயக்குவதற்காக.
12. அலமரல் - சுழலுதல்.
13. மறுப்பட்ட சாந்தம் - கலைந்துள்ள சந்தனம்.
14. என்னை நீ செய்யினும் - நீ என்ன செய்தாலும்; உரைத்தீவார் - (கடிந்து) உரைப்பவர்.
15. முன் அடிப் பணிந்து - என்முன் அடிபணிந்து; உணர்த்திய - ஊடலைத் தீர்க்க.
16. நிறைதொடி - நிறைந்த வளையல்; துணங்கை - துணங்கைக்கூத்து; தலைக்கொள்ள - தலைக்கை கொடுத்தலை மேற்கொள்ள.
17. கரை - விளிம்பு; காழகம் - ஆடை.
19. மண்டு நீர் - மிகுந்த வெள்ளத்தால்; ஆரா - நிறையாத.
20. தண்டா - அடங்காத (ஆசை), ஒழியாத.
21. புலத்தகைப் பெண்டிர் - ஊடியிருக்கும் பெண்டிர், பரத்தையர்; தேற்றி - தேற்றுவாயாக.
22. தோலாமோ? - தோற்றுவிடுவேன்; மருண்டு - மயங்கி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 42 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைநின்று ஒழுகப்படா நின்ற பரத்தை, 'தலைமகன் பிற பரத்தையருடன் ஒழுகினான்' என்று புலந்தாளாக, அதையறிந்த தலைமகள், தன் இல்லத்துள் புகுந்துழி, தான் அறிந்தமை தோன்றச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன்மீது மிக அன்பு கொண்ட பரத்தை ஒருத்தி, தலைவனுக்கு வேறு பரத்தையர் பலருடன் உறவிருப்பதறிந்து அவனோடு ஊடல்

கொண்டிருந்தாள். அதனை அறிந்த தலைவி, தன் கணவன் தன் இல்லத்திற்கு மீண்டபொழுது தான் அறிந்த அச்செய்தியைப்பற்றிக் கூறியது.

மகிழ்மிகச் சிறப்ப மயங்கினள் கொல்லோ
யாணர் ஊரநின் மாண்இழை அரிவை?
காவிரி மலிர்நிறை அன்னநின்
மார்புநனி விலக்கல் தொடங்கி யோளே.

தெளிவுரை

நாள்தொறும் புதுப் புது வருவாயினைக் கொண்ட வளமிக்க ஊருக்குத் தலைவனே! மாட்சிமைப்பட்ட அணிகலன்களைப் பூண்ட நின் காதலியான பரத்தை, காவிரியாற்றின் பெரு வெள்ளம்போல் பரந்த உன் மார்பினை மிகவும் வெறுத்து விலக்கத் தொடங்கினாளாமே! இதனை நான் அறிவேன். ஒருவேளை, கள்ளை மிக உண்ட வெறியினால் அவள் அறிவு மயங்கியதோ?

கருத்து

'பரத்தை, குடி மயக்கத்தால் உன்னை விலக்கியிருப்பாள்; தெளிந்ததும் உன்னைத் தேடுவாள். நீ உடனே அங்குச் செல்.'

விளக்கம்

"நீ பரத்தை மற்றொருத்தியிடம் சென்றதற்கே ஊடல் கொண்டிருக்கும் பரத்தை, நீ இங்கு வந்ததை அறிந்தால் இன்னும் சினம் கொள்வாள். ஆதலின், நீ மீண்டும் அவளிடத்திற்கே செல்" என்றாள், தலைவி.

சொற்பொருள்

1. மகிழ்மிக - மது மயக்கம் மிக.
2. யாணர் ஊர - புது வருவாயினைக் கொண்ட ஊரனே!; அரிவை - பரத்தை.
3. காவிரி மலிர் நிறை அன்ன - காவிரியாற்றின் பெருவெள்ளம் போல.
4. மார்பு - மார்பினை; நனிவிலக்கல் தொடங்கியோள் - மிகவும் விலக்கத் தொடங்கினாள்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 61 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வதுவை அயர்ந்தபாள் ஒரு பரத்தையைச் சின்னாளில் விட்டு மற்றொரு பரத்தையை வதுவை அய்ர்ந்தான் என்பது அறிந்த தலைமகள், அவன் மனைவயிற்புகுந்துழிப் புலந்தாளாக, 'இது மறைத்தற்கு அரிது' என உடன் பட்டு, 'இனி என்னிடத்து இவ்வாறு நிகழாது' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னைப் பிரிந்துபோய்ப் பரத்தையொருத்தியின் மையலிலே தலைவன் சிக்கிக் கிடந்ததால் வேதனையுற்றிருந்தாள், தலைவி. தலைவன் அப் பரத்தையையும் கைவிட்டு வேறு பரத்தை ஒருத்தியோடு கூடியிருக்கிறான் என்பதைத் தலைவி கேள்விப்பட்டாள். அப்போது வீட்டிற்குத் திரும்பிய தலைவன் தலைவியிடம், 'இனி இவ்வாறு நடவாது' என்று கூறித் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினான். தலைவி அவனை ஏற்காது கூறியது.

நறுவடி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்
நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்,
கைவண் மத்தி, கழாஅர் அன்ன
நல்லோர் நல்லோர் நாடி,
வதுவை அயர விரும்புதி நீயே.

தெளிவுரை

வள்ளல் தன்மை மிக்க 'மத்தி' என்பவருக்குரியது, 'கழார்' என்னும் ஊர். அங்கு மாமரத்தில் காய்த்த மணமிக்க வடுக்கள் பழமாகிக் கனிந்து, காம்பறுபடப் பக்கத்துப் பொய்கையில் 'திடும்' எனும் ஓசையுடன் விழும். கழார் நகரை ஒத்த நல்ல நல்ல பரத்தையரையே நாடிச் சென்று அவர்களோடு சேர்ந்து இன்பம் துய்க்கவே நீ விரும்புகின்றாய். (அப்படியிருக்க நீ ஏன் இங்கு வந்தாய்?)

கருத்து

'நீ என்மீது அன்பு கொள்ளாதவன்; பரத்தையரையே நாடுபவன்; ஆதலின், இங்கு வரவேண்டா!'

விளக்கம்

கழாஅர் நகர் அன்ன 'நல்ல நல்ல' பெண்களையே நாடிச் செல்கிறாய் என்பது, தலைவனைக் குறித்துத் தலைவியின் உள்ளத்திலே தோன்றிய இகழ்ச்சியைக் குறிக்கிறது.

உள்ளுறை

"நறுவடி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம் நெடுநீர்ப் பொய்கைத் துடுமென விழூஉம்" : அஃதாவது, "மாவின் முதிர்ந்த பழம் அம்மரத்தினின்று நீங்கிப் பொய்கையில் விழுந்து அங்குள்ள மீன்களுக்கு இரையாகிறது என்பதாம். இத்தொடர் மூலம், தலைவன் தலைவிக்குப் பயன்படாமல் பரத்தையர் பலருக்கே பயன்படுகின்றான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நறு வடி மா - மணமுள்ள வடுவினைக் கொண்ட மாமரம்; உகு - விழும்; தீம்பழம் - இனிய பழம்.
2. நெடு நீர் - நிறைந்த நீர்; துடுமென - 'துடும்' என்னும் ஒலியுடன்.
3. கைவண் - வள்ளல் தன்மை மிக்க கையைக் கொண்ட; மத்தி - மத்தி என்பவன்; கழாஅர் அன்ன - கழாஅர் என்னும் நகரத்தை ஒத்த.
4. நல்லோர் நல்லோர் நாடி - நல்ல நல்ல பரத்தையரை நாடி.
5. வதுவை அயர - இன்பம் துய்க்க.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 62 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வதுவை அயர்ந்தாள் ஒரு பரத்தையைச் சின்னாளில் விட்டு மற்றொரு பரத்தையை வதுவை அயர்ந்தான் என்பது அறிந்த தலைமகள், அவன் மனைவயிற் புகுந்துழிப் புலந்தாளாக, 'இது மறைத்தற்கு அரிது' என உடன் பட்டு, 'இனி என்னிடத்து இவ்வாறு நிகழாது' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னைப் பிரிந்துபோய்ப் பரத்தையொருத்தியின் மையலிலே தலைவன் சிக்கிக் கிடந்ததால் வேதனையுற்றிருந்தாள், தலைவி. தலைவன் அப் பரத்தையைக் கைவிட்டு வேறு பரத்தை ஒருத்தியோடு கூடியிருக்கிறான் என்பதைத் தலைவி கேள்விப்பட்டாள். அப்போது வீட்டிற்குத் திரும்பிய தலைவன் தலைவியிடம், 'இனி இவ்வாறு நடவாது' என்று கூறித் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினான். தலைவி அவனை ஏற்காது கூறியது.

இந்திர விழவில் பூவின் அன்ன
புன்தலைப் பேடை வரிநிழல் அகவும்,
இவ்வூர் மங்கையர்த் தொகுத்துஇனி
எவ்வூர் நின்றன்று மகிழ்நநின் தேரே?

தெளிவுரை

பெரும! தன் புல்லிய தலையில் பூப்போன்ற சூட்டினைக் கொண்ட மயிற்பேடை, அடர்த்தியில்லாது புள்ளி புள்ளியாய் உள்ள நிழலில் இருந்து, தன் சேவலை அன்புடன் அகவி அழைப்பதற்கு இடமானது, இவ்வூர். இந்திர விழாவில் ஆடல் பாடல்களை நிகழ்த்துவதற்குத் தொகுப்பதுபோல, இவ்வூரில் வாழும் பரத்தை மகளிர் பலரையும் அவரிடம் காமம் நுகர் வதற்காகத் தொகுத்துள்ளாய். அத்தோடமையாமல், வேற்றூர் மகளிரையும் கொண்டுவருவதற்காக இப்போது உன்னுடைய தேர் எந்த ஊரில் நிற்கிறதோ?

கருத்து

'பரத்தையரோடு உறவு கொள்வதில் எல்லை கடந்திருக்கும் உன்னை ஏற்பது எற்றுக்கு?' என்று கூறி அவனை ஏற்க மறுத்தாள்.

விளக்கம்

உள்ளூர்ப் பரத்தையர் பலரையும் நுகர்ந்த தலைவன் வேற்றூர்ப் பரத்தையரையும் நுகரத் துடிக்கிறான் என்பது தலைவியின் இகழ்ச்சியுரை.

சொற்பொருள்

1. இந்திர விழா - மருத நிலத் தெய்வமாகிய இந்திரனைக் குறித்து நிகழ்த்தப்படும் விழா; பூவின் அன்ன - பூவைப் போன்ற.
2. புன்தலைப் பேடை - சிறிய தலையைக் கொண்ட பெட்டை மயில்; வரி நிழல் - இடைவெளி அமைந்த நிழல்; அகவும் - கூவும்.
3. தொகுத்து - சேர்த்து; இனி - இதனோடு அமையாமல்.
4. (வேறு ஊர் மகளிரையும் கொண்டுவருவதற்கு) மகிழ்ந - தலைவனே!; நின் தேர் - உன் தேர்; எவ்வூர் நின்றன்று - எவ்வூரில் நிற்கிறது.

தலைவியின் ஊடல்

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 139 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

ஆற்றாமை வாயிலாகப் புகுந்திருந்த தலைமகற்குப் பாணன் வந்துழித் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீட்டிலிருந்த தலைவன் தன் ஆற்றாமையை எடுத்துரைத்துத் தலைவியின் ஊடலைத் தீர்த்து, உடம்பாடு எய்தித் தன் வீட்டில் இருந்தான். அப்போது அவனைத் தேடி அங்கே வந்த பாணனைப்பற்றித் தலைவி, அவன் எதிரிலேயே தலைவனிடம் சொல்லியது.

அம்ம வாழி, கொண்க! எம்வயின்
மாண்நலம் மருட்டும் நின்னினும்,
பாணன் நல்லோர் நலம்சிதைக் கும்மே.

தெளிவுரை

கொண்கனே! நீ வாழ்க! மாட்சிமை வாய்ந்த எம் பேரழகைச் சிதைக்கும் உன்னை விடவும், உன் பாணன், பெண்டிர் பலரது நலத்தினைச் சிதைக்க வல்லவனாய் இருக்கிறான்.

கருத்து

'உன்னைப் போன்று பலரைப் பரத்தையரோடு கூட்டுவித்துக் குலப் பெண்டிரின் நலத்தை இப்பாணன் அழித்துக்கொண்டிருக்கிறான். இக் கொடியவன் இங்கு ஏன் வருகிறான்?'

விளக்கம்

என் நலன் ஒன்றையே கெடுக்கும் உன்னைவிட, உனக்காகப் பெண்டிர் பலரை மயக்கி இசைவிக்கும் உன் தூதனான இப் பாணன் மிகவும் கொடியனாகிறான்.

சொற்பொருள்

1. கொண்க - தலைவ!; எம்வயின் - எம்மிடத்தில்.
2. மாண்நலம் - மாட்சிமைப்பட்ட நலம்; மருட்டும் - கலங்கச்செய்யும்; நின்னினும் - உன்னைவிட.
3. நல்லோர் - மகளிர் பலர்; சிதைக்கும் - அழிக்கின்றான்.

தலைவி கூற்று

அகநானூறு 56 **மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தை மனைக்குச் செல்கின்ற பாணன் தன் மனைக்கு வந்தானாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையின் வீட்டிற்குச் செல்கின்ற பாணன், வழியில் தன் வீட்டிற்குள் எதிர்பாராமல் வந்தது கண்டு, அப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சியைத் தலைவி தோழியிடம் நகைப்புடன் சொன்னது.

நகைஆ கின்றே– தோழி! நெருநல்–
மணிகண் டன்ன துணிகயம் துளங்க,
இரும்புஇயன் றன்ன கருங்கோட்டு எருமை,
ஆம்பல் மெல்அடை கிழிய, குவளைக்
கூம்புவிடு பல்மலர் மாந்தி, கரைய,
காஞ்சி நுண்தாது ஈர்ம்புறத்து உறைப்ப,
மெல்கிடு கவுள அல்குநிலை புகுதரும்
தண்துறை ஊரன் திண்தார் அகலம்
வதுவை நாள்அணிப் புதுவோர்ப் புணரிய,
பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்
புனிற்றாப் பாய்ந்தெனக் கலங்கி, யாழ்இட்டு,
எம்மனைப் புகுதந் தோனே, அதுகண்டு,
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்று,
'இம்மனை அன்று,அஃது உம்மனை' என்ற
என்னும் தன்னும் நோக்கி,
மம்மர் நெஞ்சினோன் தொழுதுநின் றதுவே.

தெளிவுரை

"தோழி! இரும்பினால் செய்தது போன்ற கரிய பெரிய கொம்பினைக் கொண்ட எருமை ஒன்று, குளத்தில் இறங்கிப் பளிங்கு மணியினைப் போன்ற தெளிந்த நீரினைக் கலக்கியது; ஆம்பலின் மெல்லிய இலைகளைக் கிழித்தது; மலர்ந்த குவளை

மலர்கள் பலவற்றைத் தின்றது; பிறகு கரையேறி, காஞ்சிப் பூக்களின் மகரந்தத்தூள் தன் உடம்பின்மேல் சிந்திக் கிடக்க, அசையிடும் வாயுடன் தான் தங்கும் கொட்டிலில் வந்து புகுந்தது. அத்தகைய குளிர்ச்சி பொருந்திய துறையினையுடைய ஊரனாகிய நம் தலைவனின் மாலையணிந்த திண்ணிய மார்போடு திருமண ஒப்பனையுடனிருந்த பரத்தை யினைக் கூட்டுவிக்க வேண்டும் என்னும் அவாவுடன் பாணன் ஒருவன் தெருவில் வந்துகொண்டிருந்தான். அப்போது, அண்மையில் கன்றை ஈன்ற பசு ஒன்று அவன்மேல் பாய, அதனால் பயந்து, தன் கையிலிருந்த யாழினைக் கீழே போட்டு விட்டு, நம் இல்லத் தினுள் புகுந்தான்.

"நான் அவன்முன் சென்று, உடல் விம்ம எழுந்த உவகையை மறைத்து, 'பாண! இஃது உன் இல்லம் அன்று; அஃது அங்கே இருக்கிறது' என்று கூறினேன். அவன் என்னையும் தன்னையும் பார்த்து மயங்கிய நெஞ்சினனாய்த் தொழுது நின்றான்; அதனை நினைத்தால் சிரிப்புத்தான் எழுகிறது"என்று தலைவி, முந்தைய நாள் நடந்த நிகழ்ச்சியைக் கூறுகிறாள்.

கருத்து

தலைவனைப் பரத்தையின் வீட்டுக்கு அழைத்துச் செல்லும் பாணன் எதிர்பாராது தலைவியின் வீட்டினுள் நுழைய நேரிட்டது. அது கண்டு தனக்குச் சிரிப்புத் தோன்றியதுபற்றித் தலைவி தோழியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

"தோழி! நம் தலைவனைப் புதுவோராகிய பரத்தையருடன் கூட்டுவிக்க நினைத்துத் தலைவனைக் காணும் விருப்பத்தோடு பாணன் தெருவில் வந்துகொண்டிருந்தான். அப்போது, அண்மையில் கன்று ஈன்ற பசு ஒன்று அவன் மேல் பாய்ந்ததால் அவன் அஞ்சித் தன் கையிலிருந்த யாழினைக் கீழே போட்டு விட்டு நம் வீட்டினுள் புகுந்தான். அது கண்டு நான் கொண்ட மகிழ்ச்சியை மறைத்துக்கொண்டு, அவன் எதிரில் சென்று, 'பாணனே! இஃது உன் வீடு அன்று; அஃது அதோ இருக்கிறது' என்றேன். அப்போது என்னையும் தன்னையும் பார்த்துக் குழம்பிய பாணன் கும்பிட்டு நின்ற காட்சியினை இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான் எழுகிறது" என்று தலைவி தோழி யிடம் கூறினாள்.

உள்ளுறை

"இரும்புஇயன்.... புகுதரும்" : அஃதாவது, இரும்பு போன்ற கொம்பினைக் கொண்ட எருமை, குளத்தில் இறங்கி, நீரைக் கலக்கி, ஆம்பலின் மெல்லிய இலை கிழிய நடந்து, பூத்திருந்த குவளை மலர்களைத் தின்று, மேலேறிக் கரையிலிருந்த காஞ்சிப் பூக்களின் தாது தன் உடம்பிலே படிய, அசையிடும் வாயுடன் தான் தங்குமிடம் வந்து சேரும் என்பதாம். இத்தொடர்மூலம், "தலைவன் இரும்பு நெஞ்சினனாய், பரத்தையர் சேரி முழுவதும் கலங்க, தான் முன்பு கூடிய பரத்தையரைப் பெற்ற தாய்மாரும் கலங்க, பரத்தையராகிய ஆம்பல் மலர் குவிய, அப்பரத்தையரை நுகர்ந்து வருகின்றபொழுது, வழியில் அகப்பட்ட சேடியர் முதலாயினாரையும் நுகர்ந்து தன் வீட்டில் தங்குவதற்காக வந்திருக்கிறான்" என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. நகை ஆகின்று - சிரிப்பு ஏற்படுகிறது; நெருநல் - நேற்று.
2. மணி - நீலமணி; துணி - தெளிந்த; கயம் - குளம்; துளங்க - கலங்க.
3. இரும்பு இயன்றன்ன - இரும்பினால் செய்யப்பட்டது போன்ற.
4. மெல் அடை - மெல்லிய இலை.
5. கூம்பு விடு - மலர்ந்த; மாந்தி - தின்று; கரைய - கரையிலிருந்த.
6. காஞ்சி - காஞ்சி மரம்; ஈர்ம் புறம் - ஈரம் கொண்ட முதுகு; உறைப்ப - சிந்த.
7. மெல்கிடு - அசையிடும்; கவுள் - வாய்; அல்கு நிலை - தங்கும் கொட்டில்.
9. வதுவை நாள் அணி - திருமணக்காலத்து ஒப்பனையைக் கொண்ட; புதுவோர் - புதிய பரத்தையர்.
10. பரிவு - அவா.
11. புனிற்று ஆ - அண்மையில் கன்று ஈன்ற பசு.
12. மனை - இல்லம்; புகுதந்தோன் - புகுந்தனன்.
13. மெய்ம்மலி - உடல் முழுவதும்; மறையினென் - மறைத்துக் கொண்டு.
14. அஃது உம் மனை - உன் வீடு அதோ அங்குள்ளது.
15. என்னும் - என்னையும்; தன்னும் - தன்னையும்.
16. மம்மர் - மயக்கம்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 135 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தை ஒருத்தியைத் தலைப்பெய்வான் வேண்டி, அதனைத் தலைமகன் மறைத்து ஒழுகுகின்றதறிந்த தலைமகள், அவன் கேட்குமாற்றாற் பாணற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை ஒருத்தியைச் சேர விரும்புகின்றான். அதனைப் பிறர் அறியாதவாறு மறைவாய்ச் செயல்படுகிறான். அதனை அறிந்த தலைவி, தலைவன் காதில் விழுமாறு அவன் பாணனிடம் சொல்லியது.

பைதலம் அல்லேம், பாண! பணைத்தோள்,
ஐதுஅமைந்து அகன்ற அல்குல்,
நெய்தல்அம் கண்ணியை நேர்தல்நாம் பெறினே.

தெளிவுரை

பாணனே! மூங்கில் போன்ற தோள்களையும், மெல்லியதாய் அகன்று அமைந்த அல்குலையும், நெய்தல் மலர் போலும் கண்களையும் கொண்ட பரத்தையை நான் என் கண்ணெதிரேயே காண்பேனாயினும், அது குறித்து யான் யாதொரு துன்பமும் அடைய மாட்டேன்.

கருத்து

‘பாண! தலைவன் தன் கருத்துப்படி நடக்கலாம்; நான் துன்ப மடையேன்.’

விளக்கம்

இதனைக் கேட்கும் தலைவன், தலைவி தன் பரத்தமை நோக்கத்தை அறிந்தாள் என்பதை உணர்ந்து மேலும் அதனைத் தொடராது திருந்துவான் என்பதாம்.

சொற்பொருள்

1. பைதல் - துன்பம்; அல்லேம் - ஆக மாட்டோம்.

2. ஐது - மெல்லிது.
3. நெய்தல் - நெய்தல் மலர்; நேர்தல் - நேரில் காணுதல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 49 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பாணன் வாயிலாகப் பரத்தையோடு கூடினான் என்பது கேட்ட தலைமகள் தனக்கும் பாணனால் காதன்மை கூறுவிப்பான் புக்க தலைமகற்குச் சொல்லியது. (காதன்மை - அன்புடைமை, காதல் தன்மை; புக்க - புகுந்த.)

கூற்று விளக்கம்

பாணன் துணைசெய்யப் பரத்தையோடு தலைவன் கூடினான் என்று தலைவி கேள்விப்பட்டாள். பாணன் வாயிலாய்த் தலைவியோடு தன்னைச் சேர்த்து வைக்கக் கூறித் தன் அன்புடைமையைப் புலப்படுத்தித் தன் பாணனோடு தன் வீட்டிற்குத் தலைவன் வந்தான். அப்போது, தலைவனை நோக்கித் தலைவி சொல்லியது.

அஞ்சில் ஓதி அசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து, பல்நெல் பெறூஉம்
யாணர் ஊரநின் பாண்மகன்
யார்நலம் சிதையப் பொய்க்குமோ இனியே?

தெளிவுரை

திரட்சி குறைந்த அழகிய கூந்தலும் அசைந்த நடையும் கொண்ட பாண்மகள் குறைந்த அளவில் மீனைக் கொடுத்து மிகுந்த அளவில் நெல்லைப் பெற்றுச் செல்லும் வளமிகுந்த புதுவருவாய் நிரம்பிய ஊருக்குத் தலைவனே! உன் பாணன் இனி யார் யார் நலமெல்லாம் சிதைந்துவிடுமாறு பொய் பேசித் திரிவானோ?

கருத்து

பாணன் தன் பொய்யால் யார் யாரைக் கெடுப்பானோ? அவனுடன் இங்கே வரவேண்டா.

உள்ளுறை

"பாண்மகள் சின்மீன் சொரிந்து, பல்நெல் பெறூஉம்" : அஃதாவது, பாண்மகள் குறைவாய் மீன் கொடுத்து, மிகுதியாய் நெல் பெறுவாள் என்பதாம். இத்தொடர்மூலம், தலைவனுக்கு வாயிலாய் வந்த பாணனும் தன் சிறுமை மிகுந்த பொய்ச் சொற்களைச் சொல்லி இன்னும் பரத்தையர் பலரின் உறவினைத் தேடித் தலைவனோடு கூட்டுவிப்பான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

மேலே கண்டவாறு பாணனோடு சேர்ந்து தலைவன் நடப்பதால் தலைவனை இங்கே வரவேண்டா எனக் கூறி அவனை வீட்டினுள் அனுமதிக்கத் தலைவி மறுக்கிறாள்.

சொற்பொருள்

1. அஞ்சில் ஓதி - அழகிய திரட்சி குறைந்த கூந்தல்.
2. சின் மீன் - சில மீன்கள்; பல்நெல் - மிகுதியான நெல்.
3. யாணர் - புதுவருவாய்.
4. நலம் - அழகு; சிதைய - அழிய; பொய்க்குமோ - பொய் சொல்வானோ; இனி - இனியும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 68 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தை, தான் தலைமகளைப் புறங்கூறிவைத்துத் தன்னைத் தலைமகள் புறங்கூறினாளாகப் பிறர்க்குக் கூறினமை கேட்ட தலைமகள், தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவி தன்னைப் பழித்ததாகப் பரத்தை புறங்கூறித் திரிந்தாள். அதனைக் கேள்வியுற்ற தலைவி தலைவனிடம் சொல்லியது.

கன்னி விடியல், கணைக்கால் ஆம்பல்
தாமரை போல மலரும் ஊர!
பேணா ளோநின் பெண்டே
யான்தன் அடக்கவும், தான்அடங் கலளே!

தெளிவுரை

திரண்ட தண்டினைக் கொண்ட ஆம்பல் அதிகாலையிலேயே தாமரையினைப் போலவே இதழ் விரித்து மலர்ந்திருக்கும் ஊருக்குத் தலைவனே! உன் போற்றா ஒழுக்கத்தை அறிந்திருந்தும் என் வேதனையை அடக்கிக்கொண்டிருக்கிறேன். அப்படியிருந்தும் உன் பரத்தை அடக்கமில்லாது புறம் பேசித் திரிகின்றாள்; அவள் எப்போதுமே அடக்கத்தைப் பேண மாட்டாளோ?

கருத்து

'தலைவ! என்னைப்பற்றிப் புறம் பேசித் திரியும் பரத்தையை விரும்பும் உனக்கு எதற்கு என்னோடு உறவு?'

குறிப்பு

சிறப்பில்லாத ஆம்பல், தாமரைபோல மலரும் என்னும் தொடர், கற்புச் சிறப்பு இல்லாமையால் அடங்கிக் கிடக்க வேண்டிய பரத்தை, குலமகள் போலச் சிறப்பினைக் கொண்டவள் எனத் தன்னைக் கருதித் தருக்கிக் கொண்டிருக்கிறாள் என்பதைக் குறிக்கிறது.

சொற்பொருள்

1. கன்னி விடியல் - மிகுந்த ஒளி குன்றிய காலை நேரம்; கணைக்கால் - திரண்ட தண்டு.
3. பேணாளோ - பாதுகாக்க மாட்டாளோ?; பெண்டு - பரத்தை.
4. தன் அடக்கவும் - அவள் பேசுவதை யான் பொறுத்து அடக்கிக் கொண்டிருக்கவும்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 137 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்து நீங்கின இடத்தும், அவன் முன்பு செய்த தீங்கு நினைந்து தலைமகள் வேறுபட்டிருந்தாளாக, 'இனி இந்த வேறுபாடு ஏன்?' என்று வினவிய பாணற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையரோடு வாழ்ந்த தலைவன், தலைவியின் இசைவு பெற்று மீண்டு வந்து சேர்ந்தான். எனினும், தலைவி அவன் முன்பு செய்த தீங்கை நினைத்து உடலாலும் உள்ளத்தாலும் வேறுபட்டிருந்தாள். அது கண்ட பாணன், 'தலைவனைக் கூடிய பிறகும் இந்த வேறுபாடு ஏன்' என்று கேட்டபோது தலைவி கூறியது.

நின்ஒன்று வினவுவல், பாண! நும்ஊர்த்
திண்தேர்க் கொண்கனை நயந்தோர்
பண்டைத் தம்நலம் பெறுபவோ மற்றே?

தெளிவுரை

பாண! உன்னை ஒன்று கேட்கிறேன். உன் ஊர்த்தலைவன் உறுதியான தேரினை உடையவன். அவன் விரும்பிய பெண்களுள் எவரேனும் தாம் இழந்த முந்தைய நலத்தை மீண்டும் பெற்றவர் உள்ளனரா? கூறு.

கருத்து

'பாண! தலைவன் எந்நாளும் திருந்தி நடப்பதற்கு வாய்ப்பே இல்லை.'

விளக்கம்

தலைவன் விரும்பிய பெண்டிர் பலர் நலம் கெட்டொழிந்ததை நீ நன்கறிவாயே! அறிந்துமா என்னைக் காரணம் கேட்கிறாய்?

அவன் திண்ணிய தேரினன்; ஆயினும், திண்ணிய ஒழுக்கம் கொண்டவனல்லன்.

சொற்பொருள்

1. வினவுவல் - கேட்பேன்.
2. திண்தேர் - உறுதியான தேர்; நயந்தோர் - விரும்பியோர்.
3. பண்டை - முந்தைய; பெறுபவோ - பெறுவரோ?

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 67 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைநின்று ஒழுகப்படாநின்ற பரத்தை புறனுரைத்தாள் எனக் கேட்ட தலைவி, தலைமகன் வந்துழி அவன் திறத்தாராய் நின்று ஒழுகும் வாயில்கள் கேட்பச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனால் புதிதாய்த் தேர்ந்தெடுக்கப்பெற்ற பரத்தை, தன்னைப்பற்றிக் குறை கூறினாள் எனக் கேள்விப்பட்டாள், தலைவி. தலைவன் தன் வீடு வந்தபோது பரத்தையின் சார்பாளர்கள் தலைவனை அழைத்துச் செல்ல வந்தனர்; அவர்கள் காதில் விழுமாறு தலைவனிடம் தலைவி கூறியது.

மடவள் அம்மநீ இனிக்கொண் டோளே
'தன்னொடு நிகரா என்னொடு நிகரிப்
பெருநலம் தருக்கும்' என்ப விரிமலர்த்
தாதுஉண் வண்டினும் பலரே,
ஓதி ஒள்நுதல் பசப்பித் தோரே.

தெளிவுரை

தலைவ! நீ இப்போது வரித்துக்கொண்ட பரத்தை அறியாமை மிக்கவளாய் இருக்கிறாள். எவ்வகையிலும் எனக்கு நிகராகாத அவள் என்னைத் தன்னோடு ஒப்பிட்டுத் தான் சிறந்தவள் என்று என்னைப் பழிப்பதாய்க் கூறுகிறார்கள். முன்கூந்தலுக்கு அருகே ஒளி வீசித் திகழும் தம் நெற்றியில் பசலை பாயுமாறு, உன்னால்

கைவிடப்பட்டவர்கள், வண்டுகள் தேன் குடித்துவிட்டுக் கழித்த பூக்களினும் பலராவர்! இதனை அவள் அறியாள் போலும்!

கருத்து

'தலைவன், பரத்தையர் பலருடன் கூடி அவர்கள் நலத்தை அழித்தவன் என்பதை என்னைப் பழித்த பரத்தை அறியாள் போலும்' என வாயில்கள் காதில் விழுமாறு தலைவி கூறினாள்.

விளக்கம்

உன்னால் துறக்கப்பட்டுத் தம் நெற்றியின் ஒளியை இழந்த இளம் பரத்தையர் பலர் இருப்பதை, இப்போது உன்னோடு உள்ள பரத்தை அறியாதவளாய் இருக்கிறாள். அதனால்தான் நீ அவளைப் பிரிந்ததற்குக் காரணம் நான் என அவள் கருது கிறாள். உன்னால் முன்னரே கைவிடப்பட்டுள்ள மகளிரைப் போலத் தானும் கைவிடப்படுவோம் என்பதை அறியாத மடமை கொண்டவளாய் அவள் இருக்கிறாள்.

சொற்பொருள்

1. மடவள் - அறிவில்லாதவள்; இனி - இப்பொழுது.
2. என்னொடு நிகரி - என்னோடு ஒப்பிட்டு; தன்னொடு நிகரா - தனக்கு நான் நிகரில்லாதவள்.
3. பெருநலம் தருக்கும் - தான் பெருநலம் கொண்டுள்ளதாய்த் தருக்கினைக் கொண்டுள்ளாள்; என்ப - என்று சொல்கின்றனர்; விரிமலர் - அகன்ற மலர்.
4. தாது உண் வண்டினும் - மகரந்தத்தை உண்ணும் வண்டினும்; பலரே - பலர்.
5. ஓதி ஒள்நுதல் பசப்பித்தோர் - கூந்தலுக்கு அருகே ஒளி வீசித் திகழும் தம் நெற்றியில் பசலை படர்ந்திருக்கப்பெற்றோர்.

தலைவி கூற்று

குறுந்தொகை 91 **ஔவையார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர்மாட்டுப் பிரிந்த தலைமகன் வாயில் வேண்டிப் புக்கவழி, தன்வரைத்தன்றி அவன் வரைத்ததாகித் தன் நெஞ்சு நெகிழ்ந்துழி, தலைமகள் அதனை நெருங்கிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் வீடு சென்றதால், தலைவி ஊடல் கொண்டிருந்தாள். ஒரு நாள் தலைவன் தன் இல்லத்திற்கு வந்தான். தலைவனை ஒறுக்க எண்ணியிருந்த தலைவி அவனைக் கண்டதும் அவள் நெஞ்சின் நிறையழிந்தது; ஊடல் கொள்ளாது அவனோடு கூட முயன்றது. அது கண்ட தலைவி அந்நெஞ்சிற்குச் சொல்லியது.

அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற விளைகனி
குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்
தண்துறை ஊரன் பெண்டினை ஆயின்,
பலஆ குகநின் நெஞ்சில் படரே!
ஓவாது ஈயும் மாரி வண்கை,
கடும்பகட்டு யானை, நெடுந்தேர், அஞ்சி
கொன்முனை இரவுஊர் போலச்
சிலஆ குகநீ துஞ்சும் நாளே!

தெளிவுரை

நெஞ்சே! கரையில் பின்னிக் கிடக்கும் பிரம்பங்கொடியின் மேற்புறம் வரிகளைக் கொண்ட முற்றி விளைந்த கனிகள் உதிரும்; ஆழமான நீருள்ள குளத்திலே உள்ள கெண்டை மீன்கள் எளிதில் அவற்றைக் கௌவி உண்ணுதற்கு இடனான குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறைகளையுடைய ஊருக்கு உரியவன், தலைவன். அவனிடம், அவன் மனைவி நான் என்று அவன்மீது இப்பொழுது இரக்கம் காட்டுவாயானால், உன் துயரம் மேலும் பலவாகும்.

எல்லார்க்கும் மழை பொழியும் மேகம்போலும் எப்பொழுதும் வள்ளல் தன்மை கொண்டவன், அதியமான் நெடுமான் அஞ்சி. வலிமைமிக்க ஆண்யானைகளையும் உயரமான தேர்களையுமுடைய அவன் போர்க்களத்திற்கு அருகிலேயுள்ள ஊரில் உள்ளவர்கள் இரவில் உறக்கமின்றித் தவிப்பதுபோல, நீ தூங்குகின்ற நாள்களும் சில ஆகிவிடும். (பல நாள் உறங்க இயலாமல் துன்புறுவாய்.)

கருத்து

'நெஞ்சமே! இப்பொழுது நீ தலைவனிடம் இரக்கம் கொண்டு வரவேற்றால், பின்னும் அவன் பரத்தையரிடம் செல்வதற்குத் துணிவான். நீ மிகுந்த துன்பம் உறுவாய்.'

விளக்கம்

பிரம்பம் பழத்தைக் கெண்டை மீன் எப்படி எளிதில் கௌவுகிறதோ, அதுபோல் பரத்தையர் மீண்டும் தலைவனைக் கவர்ந்து கொள்வர். அப்பொழுது உன் உள்ளத்தில் அளவற்ற துன்பம் உண்டாகும். நீ இரவிலே உறக்கமின்றி வருந்துவாய்.

குறிப்பு

அதியமான் அஞ்சி பெரும் வள்ளல்; தகடூரை ஆண்டவன்; ஔவைக்கு நெல்லிக்கனி தந்தவன்.

சொற்பொருள்

1. அரில் - பின்னுதல்; பவர் - கொடி; பிரம்பு - பிரம்பங்கொடி; வரிப்புறம் - கோடுகளை மேற்புறத்தில் கொண்டு; விளைகனி - விளைந்து முதிர்ந்த கனி.
2. குண்டு - மிகுந்த ஆழம்; இலஞ்சி - பொய்கை, குளம்; கெண்டை - கெண்டை மீன்; கதூஉம் - கௌவும்.
3. தண்துறை - குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறை; பெண்டு - மனைவி.
4. படர் - துன்பம்.
5. ஓவாது - இடையறாது; ஈயும் - கொடுக்கும்; மாரி - மழையைப் போன்ற; வண்கை - வள்ளல் தன்மை கொண்ட கை.
6. கடும் - வலிய; பகட்டு யானை - ஆண்யானை; நெடுந்தேர் - உயரமான தேர்; அஞ்சி - அதியமான் அஞ்சி.
7. கொன்முனை - அச்சந்தரும் போர்க்களம்.
8. துஞ்சுதல் - உறங்குதல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 25 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையருள்ளும் ஒருத்தியை விட்டு ஒருத்தியைப்பற்றி ஒழுகுகின்றானென்பது கேட்ட தோழி, வாயிலாய் வந்தார் கேட்பத் தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் பலருள் ஒருத்தியைக் கைவிட்டு இன்னொருத்தியோடு வாழுகின்றான் என்று தோழி கேள்விப்பட்டாள். அந்நிலையில் அவளையும் விட்டுவிட்டுத் தலைவியிடம் வருவதற்கு இசைவு பெற அவன் தூதுவர் வந்தனர். அவர்கள் காதில் விழுமாறு தோழி தலைவியிடம் சொல்லியது.

அயல்புறம் தந்த புனிற்றுவளர் பைங்காய்
வயலைச் செங்கொடி களவன் அறுக்கும்
கழனி ஊரன் மார்புபலர்க்கு
இழைநெகிழ் செல்லல் ஆக்கும் அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! வீட்டுக்குப் பக்கத்தில் நட்டு வளர்த்த பசலைக் கொடியில் முற்றாத பச்சைக்காய் காய்த்திருக்கிறது. அதன் சிவந்த கொடியை நண்டு தன் கூர்மையான நகத்தால் அறுக்கும். இத்தகைய காட்சிக்குரிய கழனியை உடையவன், நம் தலைவன். அவன் மார்பு, மகளிர் பலருக்கு அணிகலன்கள் நெகிழத்தக்க ஆற்றாமையைத் தருவதாய் உள்ளது.

கருத்து

'தூதுவரே! தலைவனால் துயரமடைந்த மகளிர் பலர்; அவன் இங்கு வர வேண்டா.'

உள்ளுறை

"*அயல்புறம் தந்த புனிற்றுவளர் பைங்காய் வயலைச் செங்கொடி களவன் அறுக்கும்*" : *அஃதாவது, வயலைக் கொடியின்*

பச்சைக்காய் வாடிட, நண்டு அதன் கொடியை அறுக்கும் என்பதாம். இத்தொடர்மூலம், மகனைப் பெற்று மனையில் இருக்கும் தலைவியின் நலத்தினை, அவள் மகனும் வருந்தத் தலைவன் சிதைக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. புறந்தந்த - பாதுகாத்த, வளர்த்த; புனிறு - அண்மையில் தோன்றிய; பைங்காய் - பசிய காய்.
2. வயலை - பசலை; களவன் - நண்டு.
4. செல்லல் - துன்பம்; ஆக்கும் - உண்டாக்கும்.

தலைவி கூற்று

ஐந்திணை எழுபது 52 **மூவாதியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையரும் ஏனைத் தலைமகளிரும் தம்முறு விழுமம் கூறிய பொழுது தலைமகள் அவர்கள்மாட்டுப் பரிந்து பேசியது.

கூற்று விளக்கம்

தம் துன்பம் கூறிய சேரிப் பரத்தையர், காதற் பரத்தையர் ஆகியோரிடம் தலைவி அவர்கட்குப் பரிந்து பேசியது.

காதலின் தீரக் கழிய முயங்கன்மின்
ஓதம் துவன்றும் ஒலிபுனல் ஊரனைப்
பேதைப்பட்(டு) ஏங்கன்மின் நீயிரும் எண்ணிலா
ஆசை ஒழிய உரைத்து.

தெளிவுரை

"*தங்கையரே! வெள்ளம் மிகுதியாய் ஒலிக்கின்ற நீர்வளம் மிக்க மருத நில ஊரனை, அன்பு முற்றிலும் நீங்கும்படியாய் இனித் தழுவாதிருப்பீர்; அறியாமையில் அகப்பட்டுத் தலைவன் மேல் மிகவும் விருப்பம் கொண்டு காதற் சொற்களைச் சொல்ல*

ஏங்காதீர்! இவ்வாறு இருந்தால் தலைவன் முன்போல் அன்புடன் இருப்பான்" என்று தலைவி பரத்தையரிடம் கூறினாள்.

கருத்து

'தங்கையரே! நீங்கள் தலைவனிடம் அன்பில்லாதவர்போல் நடந்து கொண்டால் அவனே உங்களைத் தேடி வருவான்.'

விளக்கம்

சில காலம் அவனை நாடாமல் இருந்தால், அவன் தானே வந்து முன்போலக் காதல் கொண்டு ஒழுகுவான்.

குறிப்பு

தலைவி பரத்தையரிடம் நேரில் பேசுவதுபோல இப்பாடல் அமைந்துள்ளது. சங்க கால முறையிலிருந்து இது மாறுபட்டது.

சொற்பொருள்

1. காதல் - அன்பு; தீர - முற்றிலும் நீங்கும்படியாக; முயங்கன்மின் - தழுவாதீர்.
2. ஓதம் - வெள்ளம்; துவன்றும் - நெருங்கி மிகும்; ஒலிபுனல் - நீர் ஒலிக்கும்.
3. பேதைப்பட்டு - அறியாமையில் அகப்பட்டு; ஏங்கன்மின் - ஏங்காதீர்; எண்ணிலா - அளவின்றி.
4. ஒழிய - நீங்கும்படி.

தலைவன் கூற்று

அகநானூறு 126 **நக்கீரர்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண், தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

கற்புக் காலத்தே தலைவி தலைவனுடன் ஊடி இருந்தாள்; தலைவன் தான் தவறிலன் என அவள் ஊடல் தீர்க்கப் பணிவைப் புலப்படுத்தும் மொழிகள் பலவற்றையும் பலகால் கூறி இரந்தான்; இரந்தும் தேறாளாய்ப்

பின்னும் ஊடினாள்; அப்பொழுது தலைவன் தன்னெஞ்சை நோக்கி வருந்திக் கூறியது.

(உணர்ப்பு - தலைவன் பரத்தமை கருதி அவனோடு ஊடுதல் கொண்ட தலைவிக்குத் தன்மாட்டு அத்தகைய தவறு எதுவுமின்று என்று தலைவன் தன் சொற்களாலும் செயல்களாலும் தெளிவித்தலும், தன் பரத்தமை மறைக்க முடியாத அளவு வெளிப்பட்டதாயின் 'தப்பினேன்' என வணக்கத்துடன் கூறி அவளை அமைதியுறுத்தலும் ஆம். (கலி. 89).

நின்வாய் செத்து நீபல உள்ளி,
பெரும்புன் பைதலை வருந்தல் அன்றியும்,
மலைமிசைத் தொடுத்த மலிந்துசெலல் நீத்தம்
தலைநாள் மாமலர் தண்துறைத் தயங்கக்
கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேரியாற்று
அறல்வார் நெடுங்கயத்து அருநிலை கலங்க,
மால்இருள் நடுநாள் போகி, தன்ஐயர்
காலைத் தந்த கணைக்கோட்டு வாளைக்கு,
அவ்வாங்கு உந்தி, அம்சொல், பாண்மகள்,
நெடுங்கொடி நுடங்கும் நறவுமலி மறுகில்
பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்,
கழங்குஉறழ் முத்தமொடு நன்கலம் பெறூஉம்
பயம்கெழு வைப்பிற் பல்வேல் எவ்வி
நயம்புரி நன்மொழி அடக்கவும் அடங்கான்,
பொன்இணர் நறுமலர்ப் புன்னை வெஃகித்
திதியனொடு பொருத அன்னி போல,
விளிகுவை கொல்லோ, நீயே— கிளிஎனச்
சிறிய மிழற்றும் செவ்வாய், பெரிய
கயல்என அமர்த்த உண்கண், புயல்எனப்
புறம்தாழ்பு இருளிய பிறங்குகுரல் ஐம்பால்,
மின்நேர் மருங்குல், குறுமகள்
பின்னிலை விடாஅ மடம்கெழு நெஞ்சே?

தெளிவுரை

சில சொற்களே, கிளியைப் போலக் கொஞ்சிப் பேசும் சிவந்த வாய்; ஒன்றோடு ஒன்று மோதுவதாக, கெண்டை மீன் போலப்

பிறழும், மைத் தீட்டிய விரும்பத்தக்க கண்கள்; மேகம் போலக் கறுத்து, கொத்தாக முதுகில் படியும் ஐந்தாகப் பகுத்துப் பின்னப்பட்டுள்ள கூந்தல்; மின்னல் ஒத்த இடை ஆகிய இவற்றைக் கொண்டுள்ள இளம் மகளை, அவளது அன்புக்காக ஏங்கி, விடாமல் பின்னே தாழ்ந்து நிற்கும் அறியாமை மிக்க நெஞ்சே!

உன்னிடம் தோன்றும் எண்ணங்களை உண்மையென்று கருதுகிறாய்; பலவாறாக எண்ணிப் பெரிதும் துன்புற்று வருந்துகிறாய். (இன்னும் கேள்).

அன்னி என்று ஒரு குறுநில மன்னன் இருந்தான். அவனுடைய நண்பன், எவ்வி என்ற மற்றொரு குறுநில மன்னன். அவன் ஆளும் பகுதி, காவிரியாறு கடலோடு கலக்கும் துறையை உள்ளடக்கிய நெய்தல் நிலம் (கடல் சார்ந்த நிலம்). குடகு மலையிலிருந்து அருவியாகப் பொழிந்த வெள்ளம் விரைந்து செல்லும் நீர்ப் பெருக்கினைக் கொண்டு காவிரியாக, முதல் நாள் மாலையில் பூத்த பெரிய மலர்களை, மறுநாள் துறைகளில் ஒதுக்கிக் கடல்வரை சென்று கரையைக் குத்தி மெலியச் செய்யும்.

அத்தகைய காவிரியில் உள்ள கருமணல் ஒழுகும் நீண்ட மடுவின் நிலைத்தற்கரிய நீர்நிலை கலங்குமாறு பாண்மகளின் அண்ணன்மார், கரிய இருள் மிக்க இரவில் சென்று வேட்டை யாடினர்; உருண்டு திரண்ட கொம்புகளைக் கொண்ட வாளை மீன்களைப் பிடித்துக் கொண்டு வந்து காலையில் கொடுத்தனர்.

அழகிய, உட்குழிந்த, கொப்பூழும், அழகாகப் பேசும் பேச்சும் கொண்ட பாண்மகள், அவற்றைக் கூடையில் இட்டு, ஊருக்குள் உயர்ந்த கொடிகள் அசையும் தெருவில், விற்கச் சென்றாள். மீன்களுக்கு விலையாக, முகந்துதரும் பழைய செந்நெல்லை அவள் வாங்கவில்லை; கழற்சிக்காய் போன்ற பெரிய முத்து களையும், சிறந்த அணிகலன்களையும் வாங்கிக் கொண்டாள். அத்தகைய வளம் மிகுந்த ஊர்களையும், வேல் பிடித்த வீரர் பலருள்ள படையையும் கொண்டவன், எவ்வி என்பான்.

நீதி வாய்ந்த எவ்வி அறிவுரை கூறித் தணிக்க முயன்றும், அன்னி என்பவன் தணியாதவனாய், திதியன் என்பவனது காவல் மரமாகிய மணம் மிக்க பொன்னை ஒத்த பூங்கொத்துகளைக் கொண்ட புன்னை மரத்தை, வெட்டிச் சாய்க்க விரும்பிப் போர் புரிந்து இறந்தான். அவனைப் போல நீயும் இறந்து படுவாய் போலும்.

கருத்து

அறிவற்ற நெஞ்சமே! தலைவியின் அன்புக்காக அவளை விடாமல் தொடர்ந்து பின் சென்று வருந்தி நிற்கிறாய். பகை மன்னனின் காவல் மரத்தை வெட்டி இறந்த ‘அன்னி’ என்னும் மன்னன் போல் நீயும் இறக்க நேரிடுமோ?

விளக்கம்

தலைவன் உணர்த்தவும் உணரா ஊடல் எய்தினாள், தலைவி. அப்போது அவன் தன் நெஞ்சை நோக்கிக் கூறுகிறான்: ‘இளமகளாகிய தலைவியின் பின்னின்று வேண்டி இரத்தலை விடாத மடமை பொருந்திய நெஞ்சமே! உன் வார்த்தையை நீயே மெய் என்று கருதி, நான் சொல்லவும் கேளாமல் பல பல நினைந்து பெரிய துன்பம் உடையையாய் வருந்துவதன்றி, இறந்தும் போவாய் போலும்!’ என்றதோடு, ‘இவள் சிறிதும் நம்மிடம் அன்பில்லாதவள்; இவளிடம் இரத்தலாற் பயனில்லை’ எனத் தன் நெஞ்சு உணரும்படியாகத் தலைவன் கூறினான்.

சிறப்புக் குறிப்பு

1. அன்னி, திதியனோடு பொருத இடம் குறுக்கைப் பறந்தலை. திதியன் பொதிகை மலையைக் கொண்டவன். அவன், பிறர் அறுவருடன், ஒரு போரில், தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ் செழியனால் கொல்லப்பட்டான். (அன்னி, திதியனின் புன்னை மரத்தை வெட்டிய வரலாறு, அகநானூறு 145ஆம் பாடலிலும் கூறப்பட்டுள்ளது.)

   கோசர் என்னும் கூட்டத்தாரின் கொடுமையை, அன்னிமிஞிலி என்னும் பெண், திதியனிடம் முறையிட அவன் அக்கொடுமை புரிந்த சிலரைக் கொன்றான் (அகநானூறு 262).

இறைச்சி

தன் தமையன்மார் இருளில் சென்று கொணர்ந்த வாளை மீனைப் பாண்மகள் தெருவில் விலை கூறி, நெல் கொடுப்பினும் வாங்காமல், முத்தும் அழகிய அணிகலன்களும் பெறுவாள். அதுபோல, நான் பரத்தையிற் பிரிந்தேனென்று பாணன் வந்து சினமூட்ட அச்சினத்தை என்மீது ஏற்றி, நான் பணிந்து வேண்டினாலும் ஏற்காதவளாய்த் தலைவி என் உயிரை வாங்கும் தன்மை கொண்டனள் என்று இறைச்சிப் பொருள் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. நீ நின்வாய் செத்து - நீ உன் எண்ணங்களை உண்மையானவை என்று கருதி; பல உள்ளி - பலவற்றை எண்ணி.
2. பெரும்புன் பைதலை - மிகப் பெரிய வருத்தத்தினை அடைவாய்.
3. மலைமிசை - மலை உச்சியிலிருந்து; தொடுத்த - தொடர்புற்று வீழ்ந்த; மலிந்துசெலல் - மிக்கச் செல்லுதலையுடைய; நீத்தம் - வெள்ளம்.
4. தலைநாள் - முதல் நாள் (பூத்த); மாமலர் - சிறந்த மலர்; தயங்க - விளங்க.
5. மெலிக்கும் - கரைத்திடும்.
6. அறவ்வார் - கருமணல் ஒழுகும்; நெடுங்கயம் - நீண்ட மடு; அருநிலை - நிலை கொள்ளாத நீர்.
7. மால்இருள் - கரிய இருளினைக் கொண்ட; நடுநாள் - நள்ளிரவு; போகி - சென்று; ஐயர் - தமையன்மார்.
8. காலைத் தந்த - விடியலில் கொணர்ந்த; கணைக்கோடு - திரண்ட கொம்பு; வாளை - வாளை மீன்.
9. அவ்வாங்கு உந்தி - அழகிய வளைந்த கொப்பூழ் (உந்தி - கொப்பூழ்).
10. நுடங்கும் - அசையும்; நறவுமலி - கள்மிக்க; மறுகு - தெரு.
11. முகவை கொள்ளாள் - முகந்து தருதலைக் கொள்ளாள்.
12. கழங்கு - கழற்சிக்காய்; முத்தம் - முத்து; நண்கலம் - நல்ல அணிகலன்; பெறூஉம் - பெறும்.
13. பயம்கெழு - பயன் பொருந்திய, வளம் மிக்க; வைப்பு - ஊர்; பல்வேல் - பல வேற்படைகளைக் கொண்ட; எவ்வி - எவ்வி என்பவன்.

14. நயம்புரி - நீதியை உட்கொண்ட; நன்மொழி - நன்மொழிகள் (கூறி); அடக்கவும் - தணிக்கவும்.
15. பொன்இணர் - பொன் போன்ற பூங்கொத்து; புன்னை - (காவல் மரமாகிய) புன்னை மரம்; வெஃகி - (வெட்டிச் சாய்க்க) விரும்பி.
16. திதியனொடு - திதியன் என்பவனோடு; பொருத - போரிட்ட; அன்னி போல - அன்னி என்பவனைப் போல.
17. விளிகுவை - இறந்து படுவாய் (விளிதல் - இறத்தல்).
18. சிறிய - சில சொற்கள்; மிழற்றும் - கொஞ்சிப் பேசும்; செவ்வாய் - சிவந்த வாய்.
19. கயல் - கயல் (கெண்டை) மீன்; அமர்த்த - விரும்பத்தக்க; உண்கண் - மையுண்ட கண்; புயல் - மேகம்.
20. புறம்தாழ்பு - முதுகில் தாழ்ந்து; பிறங்கு - விளங்கும்; குரல் - கொத்து; ஐம்பால் - ஐந்தாகப் பகுக்கப்பட்ட கூந்தல்.
21. மின் - மின்னல்; மருங்குல் - இடை; குறுமகள் - இளைய தலைவி.
22. பின்னிலை - பின்னே தாழ்ந்து நிற்றல்; விடாஅ - விடாத; மடம்கெழு - அறியாமை மிக்க.

தலைவன் கூற்று

அகநானூறு 136 **விற்றூற்று மூதெயினனார்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனொடு தலைவி ஊடி இருந்தாள். அவன் அவளது ஊடலைத் தணிக்கவும், கூடி மகிழவும் முயன்றான். அவ்வாறு முயல முயல அவளது ஊடலும் அதிகமாயிற்றே தவிரக் குறையவே இல்லை. இதனால் மனம் நொந்து தன் நெஞ்சிற்குத் தலைவன் சொல்லியது.

மைப்புஅறப் புழுக்கின் நெய்க்கனி வெண்சோறு
வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி,
புள்ளுப் புணர்ந்து இனியஆக தெள்ஒளி,
அம்கண் இருவிசும்பு விளங்க, திங்கள்
சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து,

கடிநகர் புனைந்து, கடவுட் பேணி,
படுமண முழவொடு பரூஉங்பபணை இமிழ,
வதுவை மண்ணிய மகளிர் விருப்புற்று,
பூக்கணும் இமையார் நோக்குபு மறைய,
மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை,
பழங்கன்று கறித்த பயம்புஅமல் அறுகைத்
தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற
மண்ணுமணி அன்ன, மாஇதழ்ப் பாவைத்
தண்நறு முகையொடு வெண்நூல் சூட்டி,
தூஉடைப் பொலிந்து மேவரத் துவன்றி,
மழைபட் டன்ன, மணல்மலி பந்தர்
இழைஅணி சிறப்பின் பெயர்வியர்ப்பு ஆற்றி,
தமர்நமக்கு ஈத்த தலைநாள் இரவின்,
உவர்நீங்கு கற்பின்எம் உயிர்உடம் படுவி!
முருங்காக் கலிங்கம் முழுவதும் வளைஇ,
பெரும்புழுக்கு உற்றநின் பிறைநுதற் பொறிவியர்
உறுவளி ஆற்றச் சிறுவரை திற என,
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்,
உறைகழி வாளின் உருவுபெயர்ந்து இமைப்ப,
மறைதிறன் அறியாள் ஆகி, ஒய்யென
நாணினள் இறைஞ்சி யோளே– பேணி,
பரூஉப்பகை ஆம்பற் குரூஉத்தொடை நீவி,
சுரும்புஇமிர் ஆய்மலர் வேய்ந்த
இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே.

தெளிவுரை

நெஞ்சே! செம்மறியாட்டின் பின் சந்தினை அவித்துச் செய்த இறைச்சியுடன் நெய் மிக்க வெண்மையான சோற்றினைச் சேர்த்துக் குற்றமற ஆக்கினர்; அளவற்ற வள்ளன்மையுடன் உயர்ந்தோரை உண்பித்தனர்; புள் நிமித்தம் பார்த்தனர்; தெளிந்த ஒளியுடைய இடமகன்ற அழகிய பெரிய வானம் விளக்குமுறத் திங்களை உரோகிணி கூடிய நன்னாளில் மணமனையினை அழகுபடுத்தினர்; கடவுளை வழிபட்டனர்;

மணத்தை அறிவிக்கும் மணமுழவுடன் பெரிய முரசம் முழங்க, மங்கல மகளிர் தலைவிக்கு மண நீராட்டினர்; தம் பூப்போலும் கண்களால் அவள் பேரழகினை இமையாது பார்த்துவிட்டு அவ்விடம் நில்லாது மறைந்தனர்.

மெல்லிய பூவையும், புல்லிய புறத்தினையும் கொண்ட கவடு பொருந்திய வாகை இலை; மழை பெய்ததால் தழைத்து, முதிய கன்றினால் கறிக்கப்படும் அறுகம்புல்லின் கிழங்கில் தளிர்த்த நீலமணி போன்ற அறுகுக்கொடி; குளிர்ச்சி பொருந்திய நறுமணம் கமழும் பூ மொட்டு ஆகியவற்றை விரவிக் கட்டிய வெண்மையான காப்பு நூலை அவளுக்கு அணிவித்தனர்; தூய ஆடையால் அவளைப் பொலிவுறச் செய்தனர்; சுற்றத்தார் பெரு வியப்புடன் ஒன்று கூடினர்; மேகத்தைப் பரப்பினாலொத்த மணல் பரப்பிய பந்தரிலே அவளுக்குச் சிறப்பாக அணிகலன் அணிவித்தனர்; தோன்றிய வியர்வையைத் துடைத்து ஆற்றினர்; இவ்வாறாக, முதல் நாள் இரவில் நம் தலைவியை நமக்கு இல்லக் கிழத்தியாகத் தந்தனர்.

எம் தலைவியோ, மாதர்க்கு இன்றியமையாத கற்பைக் கடமாகப் பூண்டவள்; என் உயிர்க்கு உடம்பாகும் பொருத்தம் உடையவள்; (முதல் இரவில்) புதுமை கெடாத ஆடையால் தன் உடல் முழுதும் போர்த்திக் கொண்டாள்; 'மிக்க புழுக்கத்தால் உனது பிறை போன்ற நெற்றியில் வியர்வை அரும்பியது; அதனைக் காற்று வீசி ஆற்றும் பொருட்டு, போர்த்திய ஆடையைச் சிறிதுபொழுது திறவாய்' எனக் கூறினேன்; அன்புடை நெஞ்சமோடு ஆடையை அகற்றினேன்; உறை யினின்றும் எடுத்த வாளைப் போல அவள் வடிவம் வெளிப்பட்டு விளங்கித் தோன்றியது; அவ்வடிவத்தை மறைக்கும் வகை யறியாது சட்டென நாணம் கொண்டாள்.

ஆம்பல் மலரின் இதழ்களால் ஆன பருத்த நிறம் பொருந்திய மாலையை அகற்றினாள்; வண்டுகள் ஒலிக்கும் ஆராய்ந்தெடுத்த மலர்களைச் சூடிய கரிய பலவாகிய கூந்தலை இருண்ட போர்வையாகக் கொண்டாள்; கொண்டு, மறைத்தற்குரிய

உறுப்புகளை மறைத்தாள். விரைந்து நாணி எம்மை விரும்பிக் கைதொழுது வணங்கி நின்றாள்.

அத்தகையாள், இன்று யான் பல பல சொல்லி உணர்த்தியும் உணராது ஊடுகின்றாள்; இவள் நமக்கு யாரோ? என்ன உறவினளோ?

கருத்து

முதல் இரவில் என்னை நாணத்தோடு வணங்கிப் புணர்ந்திருந்தவள், இன்று நான் பல சொல்லி உணர்த்தியும் உணராது ஊடுகின்றாள்.

விளக்கம்

தனக்கும் தலைவிக்கும் நடந்த திருமண நிகழ்ச்சியைத் தலைவன் நினைவு கூர்கிறான். "நன்னாளில், கடவுளை வழிபட்டு, முழவொடு முரசம் இயம்பியது. தலைவியை நீராட்டி, புத்தாடை அணிவித்து எனக்கு இற்கிழத்தி ஆக்கினர். முதல் நாள் இரவு புத்தாடை போர்த்து முகத்தை மறைத்திருந்தாள். 'காற்றாட உன் புத்தாடையைச் சிறிது நீக்கு' என்று கூறியவனாய் ஆடையை அகற்ற அவள் உடல் உறை கழிந்த வாள்போல் விளங்கியது; அதை மறைக்கும் வகை அறியாது கூந்தலாகிய மேகத்தினுள் ஒளித்துக் கொண்டாள். அன்று நான் செய்த குறும்பினை விரும்பிக் கைதொழுது நின்றாள். அத்தகையவள், இன்று நான் பல சொல்லவும் ஏற்காது ஊடுகின்றாள்" என்று தலைவன் தன் நெஞ்சொடு வருந்திக் கூறினான்.

உவமை

போர்வை களைந்தவுடன் தோன்றும் தலைவியின் உருவத் திற்கு, உறை கழிவாள் உவமையாகக் கூறப்பட்டுள்ளது ஒரு சிறப்பு.

சொற்பொருள்

1. மை - செம்மறியாடு; புறம் - பின் சந்து; புழுக்கல் - அவித்தல்.
2. வரையா - அளகூற்று; வன்மையொடு - வள்ளல் தன்மையுடன்; புரையோர் - உயர்ந்தோர்; பேணி - போற்றி உண்பித்து.
3. புள்ளும் புணர்ந்து - புள் நிமித்தம் பார்த்து; இனிய ஆக - அந்நிமித்தம் இனியதாய் இருக்க; தெள் ஒளி - தெளிந்த ஒளி.

4. அம்கண் - அழகிய இடமகன்ற; இரு விசும்பு - பெரிய வானம்; திங்கள் - நிலவு.
5. சகடம் மண்டிய - உரோகிணியோடு நெருங்கிய; துகள்தீர் - குற்றம் நீங்கிய; கூட்டத்து - திங்கள் உரோகிணியோடு கூடிய நன்னாளில்.
6. கடிநகர் - காவலையுடைய மாளிகை; புனைதல் - அழகுபடுத்து தல்; பேணி - வழிபட்டு.
7. பருஉப் பணை - பெரிய முரசு; இமிழ - முழங்க, ஒலிக்க.
8. வதுவை பண்ணிய மகளிர் - திருமண நீராட்டிய மகளிர் (மணப்பெண்ணை மங்கல மகளிர் நால்வர் கூடி நீராட்டல் இயல்பு).
9. பூக்கணும் - பூப் போன்ற கண்களும்.
10. மென்பூ வாகை - வாகை மரத்தின் மென்மையான பூ; புன்புற - புல்லிய புறத்தையுடைய; கவட்டு இலை - கவடுபட்ட இலையை.
11. பழங்கன்று - முதிய கன்று; பயம்பு - குழி; அமல் - நெருங்கி (வளர்ந்த); அறுகை - அறுகம்புல்.
12. தழங்குகுரல் - ஒலிக்கின்ற குரல்; வாளின் - வானத்தின்; தலைப்பெயல் - முதல் பெயல்.
13. மண்ணுமணி - கழுவப் பெற்ற நீலமணி; மாஇதழ் - கருநீல இதழ் (கொண்ட); பாவை (அறுகின்) - கிழங்கு (அறுகின் கொடிக்கு நீலமணி உவமை).
14. தண்நறு - குளிர்ந்த நறிய; முகை - அரும்பு.
15. தூஉடை - தூய உடை; பொலிந்து - பொலிவு பெறச் செய்து; மேவர - விருப்பம் வர; துவன்றி - ஒன்று கூடி.
16. மழைபட்டன்ன - மேகத்தைப் பரப்பினாற் போன்ற (மழை - மேகம்); மலி - நிறைந்த, பரப்பப்பட்ட.
17. இழை அணி சிறப்பின் - அணிகலன்களை அணிந்த சிறப்பினால்; பெயர் - உண்டாகிய, தோன்றிய; ஆற்றி - துடைத்து, போக்கி.
18. தமர் - தலைவியின் உறவினர்; நமக்கு - எனக்கு; ஈத்த - அளித்த; தலைநாள் - முதல் நாள்.
19. உவர் நீங்கு - வெறுப்பு நீங்கிய; உயிர் உடம்படுவி - உயிர்க்கு உடம்பாகும் பொருத்தம் கொண்டவள்.
20. முருங்குதல் - வளைதல், அழிதல்; கலிங்கம் - (புதிய) ஆடை; வளைஇ - போர்த்தி.
21. பெரும் புழுக்கு - பெரிய புழுக்கம்; பொறிவியர் - அரும்பிய வியர்வை.
22. உறுவளி ஆற்ற - காற்று வீசி ஆற்றும் பொருட்டு (வளி - காற்று); சிறுவரை - சிறிது பொழுது (சிறிது நேரம்).

23. ஆர்வ நெஞ்சு - ஆசையுற்ற நெஞ்சு; போர்வை - போர்த்திருந்த ஆடை, வவ்வலின் - பற்றி அகற்றிட (வவ்வுதல் - பற்றுதல்).
24. உறை கழி - உறை நீங்கப் பெற்ற (உறையை எடுத்த); வாளின் - வாளினைப் போல; உருவு பெயர்ந்து - உருவம் வெளிப்பட; இமைப்ப - இமை படபடக்க.
25. மறைதிறன் - அதனை மறக்குந் (எனக்கு வரும் மகிழ்ச்சியை அடக்கும்) திறத்தை; ஒய்யென - விரைவாக.
26. நாணினள் - வெட்கமுற்றவளாய்; இறைஞ்சுதல் - தலை தாழ்தல்.
27. பரூஉப் பகை - பகை பரூஉ - இதழ் பருத்த; குரூஉத் தொடை - நிறம் அழகிய மாலை.
28. சுரும்பு இமிர் - வண்டுகள் ஒலிக்கும்; ஆய் மலர் - அழகிய மலர்; வேய்ந்த - சூடிய.
29. இரும்பல் கூந்தல் - பெரிய பலவாகிய கூந்தல்; இருள் மறை ஒளித்து - இருளில் ஒதுங்கி ஒளிந்து நின்று.

தலைவி கூற்று

குறுந்தொகை 169 **வெள்ளிவீதியார்**

திணை : மருதம்

கூற்று

கற்புக் காலத்துத் தெளிவிடை விளங்கியது. (தலைமகன் தெளிவிப்பதை மறுப்பது.)

கூற்று விளக்கம்

தலைவனின் பரத்தமை காரணமாய்த் தலைவி ஊடியிருந்தபொழுது, தலைவன் பலவாறு கூறித் தான் தீதிலன் என்று தெளிவிக்க முயன்றான். ஆனால், ஊடல் தீராத தலைவி வருந்திக் கூறியது.

சுரம்செல் யானைக் கல்உறு கோட்டின்
தெற்றென இறீஇயரோ ஐய! மற்றுயாம்
நும்மொடு நக்க வால்வெள் எயிறே;
பாணர், பசுமீன் சொரிந்த மண்டைபோல,
எமக்கும் பெரும்புலவு ஆகி,
நும்மும் பெறேஎம், இறீஇயர்எம் உயிரே.

தெளிவுரை

"ஐய! நான் முன்பு உன்னுடன் கூடிச் சிரித்த வெண்மையான பல்வரிசை, சுரவழியில் பாறையைக் குத்தி உடைந்த யானையின் கொம்பைப் போல முரிந்து சிதையட்டும். பாணர், பச்சை மீன்களைப் பிடித்து வைத்த பாத்திரம் எவ்வாறு கடைசிவரை புலால் நாற்றம் நீங்காது வெறுப்பைத் தருமோ, அதுபோல உன்னிடம் நான் கொண்ட காதல் எனக்கு வெறுப்பைத் தருவதோடு என் உயிரும் அழியட்டும்" என்று தலைவி, தலைவனிடம் கடுமையாய்ப் பேசினாள்.

கருத்து

'தலைவ! உன்னுடன் கொண்ட நட்பு எனக்கு வெறுப்பைத் தருகிறது. என் உயிர் அழியட்டும்' எனத் தலைவி கடிந்து பேசுகிறாள்.

விளக்கம்

'பாணர், மீனையிட்ட கலம் அப்பாணர்க்கே பிறிதொன் றற்கும் பயன்படாது புலவு நாறிக் கெட்டாற்போன்று, எனக்கு வெறுக்கத்தக்கதாகிவிட்ட என் உயிர், உனக்கும் பயன்படாது கெடுக' என்பன தலைவியின் வெறுப்புச் சொற்கள்.

சொற்பொருள்

1. சுரம் - பாலைநில வழி; கல்உறு - பாறையைக் குத்திய; கோடு - கொம்பு.
2. தெற்றென - விரைவாய்; இறீஇயர் - முரிக.
3. நக்க - சிரித்த; வால் - தூய; வெள் - வெண்மையான; எயிறு - பல்.
4. பசுமீன் - பச்சை மீன்; சொரிந்த - இட்டு வைத்த; மண்டை - பாத்திரம், கலம்.
5. புலவு - வெறுப்பு.
6. பெறேஎம் - அடையப்பெறாது; இறீஇயர் - கெடுக.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 26 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகற்கு வாயிலாய்ப் புகுந்தார், 'நின் முனிவிற்கு அவன் பொருந்தா நின்றான்' என்றவழித் தலைமகட்குத் தோழி, 'அவன் பாடு அஃதில்லை' என்பதுபடச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன்பொருட்டுத் தூதுவராய் வந்தவர் தலைவியிடம், 'தலைவன் உன் சினத்திற்கு அஞ்சி நன்னெறியிலே ஒழுகுவான்' என்று கூறக் கேட்ட தோழி, தலைவியிடம், 'அவன் இன்னும் திருந்தினான் அல்லன்' என்று கூறிக் குறிப்பாய் வாயில் மறுத்தது.

கரந்தைஅம் செறுவில் துணைதுறந்து, களவன்
வள்ளை மென்கால் அறுக்கும் ஊரன்
எம்மும் பிறரும் அறியான்;
இன்னன் ஆவது எவன்கொல்? அன்னாய்!

தெளிவுரை

தலைவியே! கரந்தைக்கொடி படர்ந்த வயலிலிருந்து ஆண் நண்டு தன் துணையான பெடையினைத் துறந்து சென்று, அருகேயிருந்த வள்ளிக்கொடியின் மெல்லிய தண்டினை அறுத்துவிட்டுச் செல்லும் காட்சி கொண்ட ஊரினைக் கொண்டவன், நம் தலைவன். அவன் நம் துன்பத்தையும் அறிய மாட்டான்; பரத்தையரின் துன்பத்தையும் அறிய மாட்டான். அவன் இவ்வாறு பண்பறியாதவனாய் ஆனதற்குக் காரணம் யாதோ?

கருத்து

'தலைவி, தலைவன் தான் விரும்பிய மகளிரையெல்லாம் துன்பத்திலே விடுத்து, மனம் போனவாறு புதிய மகளிரைத் தேடித் திரிகின்றான்; அவன் இன்னும் திருந்தினானல்லன்' என்றாள், தோழி.

குறிப்பு

'கரந்தைக்கொடி படர்ந்த வயலிலே துணை துறந்து செல்லும் ஆண் நண்டு, மெல்லிய வள்ளைத்தண்டினை அறுத்துவிட்டுச் செல்லும் ஊரன் என்பதிலிருந்து, தலைவன் தன் இல்லத்திலிருந்து மனைவியைத் துறந்து சென்று, பரத்தையரிடம் இன்புற்று, பின்பு அவரையும் வாடவிட்டுச் செல்பவனாயிருக்கிறான்' என்னும் குறிப்புச் செய்தி பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கரந்தை அம் செறு - கரந்தைக்கொடி படர்ந்த வயல்; துணை துறந்து - தன் பெண் நண்டை நீங்கி; களவன் - நண்டு.
2. வள்ளை - வள்ளைக்கொடியின்; மென்கால் - மெல்லிய தண்டு.
3. எம்மும் பிறரும் - நம்மையும் பரத்தையரையும்; அறியான் - அறியாதவனாகி.
4. இன்னன் - இவ்வாறு பண்பறியாதவனாய் ஆனது; எவன்? - யாது?; அன்னாய் - தலைவி.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 169 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

காதற்பரத்தையைவிட்டு மற்றொருத்தியுடன் ஒழுகாநின்ற தலைமகன் வாயில் வேண்டி விடுத்துழி வாயில் நேர்தல் வேண்டி, 'நின்கண் பசந்தன காண்' என்று முகம்புகு தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தன் காதற்பரத்தையைவிட்டு மற்ற பரத்தை ஒருத்தியுடன் வாழ்கின்ற நாளில், வாயில் வேண்டித் தலைவியிடம் தூது விடுத்தான். அப்போது தோழி, தலைவி உடன்படுவதற்காக, 'உன் கண்கள் பசந்தன' எனப் பேசத் தொடங்கியபொழுது தலைவி கூறியது.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
ஒள்இணர் ஞாழல் முனையின், பொதிஅவிழ்
புன்னைஅம் பூஞ்சினைச் சேக்குந் துறைவன்
நெஞ்சத்து உண்மை அறிந்தும்
என்செயப் பசக்கும் தோழி! கண்ணே?

தெளிவுரை

பெரிய கடற்கரையில் வாழும் சிறுவெண்காக்கையானது, பொன்போலும் பூங்கொத்துகளைக் கொண்ட ஞாழலை வெறுத்ததனால், மொட்டவிழும் பூக்களைக் கொண்ட புன்னை மரத்தின் கிளைகளில் தங்கும். அத்தகைய காட்சிக்குரிய துறையினைக் கொண்ட தலைவன் என் நெஞ்சத்தில் என்றும் இருப்பதனை அறிந்தும், என் கண்கள், என்ன செய்வதற்காகப் பசலை பாயப்பெற்றனவோ?

கருத்து

'தோழி! என் கண்கள் பசப்புறுமாறு செய்பவனுக்கு இங்கென்ன வேலை?'

விளக்கம்

காக்கை ஞாழல் மரத்தை வெறுத்தால் புன்னை மரக் கிளையில் தங்கும். அதுபோல் தலைவன், பரத்தை ஒருத்தியை வெறுத்தால் மற்றொருத்தியை விரும்பும் இயல்பினன் ஆவான்.

'தலைவன் என் நெஞ்சத்தில் தங்கியிருப்பதை என் கண்கள் அறியும். அவன் என்னை விட்டு நீங்கியிருப்பதால் பசலை பாய்ந்த தன்றி, நீங்கள் வந்து சமாதானம் செய்வதற்காக அன்று' எனத் தலைவி விளக்குகிறாள்.

சொற்பொருள்

2. ஒள் இணர் - ஒள்ளிய பூங்கொத்து; ஞாழல் - ஞாழல் மரம்; முனையின் - வெறுத்தால்; பொதி அவிழும் - மொட்டவிழும்.
3. புன்னை - புன்னை மரம்; அம் பூ சினை - அழகிய பூக்கள் உள்ள கிளை; சேக்கும் - தங்கும்.
4. நெஞ்சத்து உண்மை - நெஞ்சத்தில் உள்ளதை.
5. என்செய - என்ன செய்வதற்காக; பசக்கும் - பசலை பாய்ந்தது.

வாயிலோன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 146 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

அகம்புகல் மரபின் வாயில் தலைமகள் அன்பின் சிறப்பினைத் தலைமகற்கு முகம்புகல் முறைமையிற்கூறியது. (வாயில் - தலைமகளின் அகமாகிய இல்லில் புகுந்து பழகி அறியும் முறைமை.)

கூற்று விளக்கம்

தலைவனின் சார்பில் தலைவியைக் காண வந்த தூதன், தலைவன் அன்போடு எதிர்பார்க்கும் தலைவியின் குறிப்பறிந்து அதனைத் தலைவனிடம் சென்று கூறியது.

மண்கிடந்த வையகத்தோர் மற்றுப் பெரியராய்
எண்கிடந்த நாளான் இகழ்ந்தொழுகப் – பெண்கிடந்த
தன்மை ஒழியத் தரள முலையினாள்
மென்மைசெய் திட்டாள் மிக.

தெளிவுரை

"*தலைவ! மண் வடிவாய்க் காணப்பெறும் உலகில் வாழும் மக்களுள் பலர் சான்றோராயுள்ளனர். எண்ணிக்கையளவில் ஏற்பட்டுள்ள குறுகிய வாழ்நாளில், அச்சான்றோர் புகழுமாறு பெண்ணின் மேன்மை நிலைத்திருக்கும்படி வாழும் தன்மை கொண்டவள், உன் தலைவி. முத்துமாலைகள் அணிந்துள்ள மார்பகங்களைக் கொண்ட தலைவி மிகவும் எளிமையும் இனிமையும் அமைந்த இல்லற வாழ்க்கையைக் கைகொண்டு நடக்கிறாள்" என்று அவளிடம் சென்று வந்த தூதுவன் தலைவனிடம் கூறினான்.*

கருத்து

தலைவனின் தூதாய்த் தலைவியிடம் வந்தவன், மீண்டும் தலைவனிடம் சென்று, 'தலைவ! தலைவி மிகுந்த எளிமையும் அடக்கமும் கொண்டவள்' என்றான்.

விளக்கம்

பெரியாராய் இருக்கும் சிலரும் நெருக்கடிகள் நேரும்போது உரியவரை இகழ்ந்துவிடுவர். நீ தலைவியைப் பிரிந்து அவளை வருத்தினும் உன்னை அவள் இகழவில்லை. அதன்வழி, தான் பெரியவள் என்பதை அவள் நிறுவியுள்ளாள்.

சொற்பொருள்

1. மண் கிடந்த - மண் வடிவமாய்க் காணப்படும்; வையகம் - உலகில்; பெரியராய் - சான்றோராய்.
2. எண்கிடந்த - எண்ணிக்கையளவில் ஏற்பட்ட; நாளான் - வாழ்நாளிலே; இகழ்ந்தொழுக - இகழும்படியாய்.
3. பெண் கிடந்த தன்மை - பெண்கள் இருக்கும் நிலைமை; ஒழிய - நீங்கும்படி; தரளம் - முத்துமாலை.
4. மென்மை - எளிமையான அன்பினை; செய்து இட்டாள் - இல்லற வாழ்க்கையில் கைக்கொண்டு ஒழுகுகிறாள்.

ஊடல் தீரத் தலைவன் நயமொழி கூறல்.

தலைவன் கூற்று

கலித்தொகை 92 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன் வாயில்பெறாது ஆற்றாமை வாயிலாகப் புக்குத் தலைமகளை நயப்பித்தல் காரணமாக, 'தெய்வமகளிர் பொய்தலயர்வதோர் கனாக் கண்டேன்; அது நன்வாயாப் பருவம் வந்து இறுத்தது பாராய்' என ஊடல் தீர்வது பயனாகத் தலைமகளுக்குக் கூறியது.

(பொய்தல் - மகளிர் விளையாட்டு; அயர்தல் - விளையாடுதல்; நன் வாய்தல் - நன்மையாய் நிகழ்தல்; பருவம் - காலம்; இறுத்தது - வந்து சேர்ந்தது.)

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையரை நாடிச் சென்று மீண்டு தன் இல்லம் வந்தபோது, தலைவி ஊடல் கொண்டவளாய் அவனை ஏறிட்டுப் பாராதிருந்தாள். அவள்

ஊடலைத் தீர்க்க, தோழி போன்றோர் எவருமிலர். அந்நிலையில் தனது ஆற்றாமையையே வாயிலாய்க்கொண்டு தலைவியிடம் சென்று, 'தெய்வ மகளிர் பலர் கூடி ஒரு சோலையில் விளையாடுவதாய் ஒரு கனாக் கண்டேன்; அக்கனவு நனவாகிப் பயன் தரும் பருவம் வந்தது' என்று தலைவியின் ஊடலைத் தீர்க்க நயமாய்ப் பேசத் தொடங்கியது.

தலைவன்

புனவளர் பூங்கொடி அன்னாய்! கழியக்
கனவெனப் பட்டதோர் காரிகை நீர்த்தே;
முயங்கிய நல்லார் முலையிடை மூழ்கி,
மயங்கி,மற்று ஆண்டுச் சேறலும் செல்லாது,
உயங்கி இருந்தார்க்கு உயர்ந்த பொருளும்,
அரிதின் அறம்செய்யா ஆன்றோர் உலகும்
உரிதின் ஒருதலை எய்தலும், வீழ்வார்ப்
பிரிதலும் ஆங்கே புணர்தலும், தம்மில்
தருதல் தகையாதால் மற்று.

நனவினால் போலும், நறுநுதால்! அல்கல்
கனவினால் சென்றேன், கலிகெழு கூடல்
வரைஉறழ் நீள்மதில் வாய்சூழ்ந்த வையைக்
கரைஅணி காவின் அகத்து.

தலைவி

உரை,இனி; தண்டாத்தீஞ் சாயல் நெடுந்தகாய்! அவ்வழிக்
கண்டது எவன்மற்று நீ?

தலைவன்

கண்டது; உடன்அமர் ஆயமொடு அவ்விசும்பு ஆயும்
மடநடை மாஇனம், அந்தி அமையத்து,
இடன்விட்டு இயங்கா இமையத்து ஒருபால்,
இறைகொண்டு இருந்தன்ன, நல்லாரைக் கண்டேன்
துறைகொண்டு உயர்மணல்மேல் ஒன்றி நிறைவதை;

தலைவி

ஓர்த்தது இசைக்கும் பறைபோல்,நின் நெஞ்சத்து
வேட்டதே கண்டாய், கனா.

('முற்றும் கேட்டு வெகுள்' என்ற தலைவனுக்குத் தலைவி 'உரை' என்ன, அவன் உரைத்தல்)

'கேட்டை! விரையல்நீ மற்று வெகுள்வாய்!, 'உரை'ஆண்டு;
இதுவாகும், இன்னகை நல்லாய், பொதுவாகத்
தாம்கொடி அன்ன தகையார் எழுந்ததோர்
பூங்கொடி வாங்கி, இணர்கொய்ய, ஆங்கே,
சினையலர் வேம்பின் பொருப்பன் பொருத
முனைஅரண் போல உடைந்தன்று, அக்காவின்
துணைவரி வண்டின் இனம்.

மற்றாங்கே நேரிணர் மூசிய வண்டெல்லாம் அவ்வழிக்
காரிகைநல்லார் நலங்கவர்ந்து உண்பபோல் ஓராங்குமூச,

அவருள்,
ஒருத்தி, செயலமை கோதை நகை,
ஒருத்தி, இயலார் செருவில் தொடியொடு தட்ப;
ஒருத்தி, தெரிமுத்தம், சேர்ந்த திலகம்,
ஒருத்தி, அரிமாண் அவிர்குழை ஆய்காது வாங்க;
ஒருத்தி, வரியார் அகல்அல்குல் காழகம்,
ஒருத்தி, அரியார் ஞெகிழத்து அணிசுறாத் தட்ப;
ஒருத்தி, புலவியால் புல்லாது இருந்தாள், அலவுற்று
வண்டினம் ஆர்ப்ப, இடைவிட்டுக் காதலன்
தண்தார் அகலம் புகும்.

ஒருத்தி, அடிதாழ் கலிங்கம் தழீஇ, ஒருகை
முடிதாழ் இருங்கூந்தல் பற்றிப், பூவேய்ந்த
கடிகயம் பாயும்,அலந்து.

ஒருத்தி, கணங்கொண் டவைமூசக் கையாற்றாள் பூண்ட
மணம்கமழ் கோதை பரிபுகொண்டு ஒச்சி,
வணங்குகாழ் வங்கம் புகும்.

ஒருத்தி,இறந்த களியாள் இதழ்மறைந்த கண்ணள்,
பறந்தஅவை மூசக் கடிவாள், கடியும்
இடம்தேற்றாள், சோர்ந்தனள் கை.

ஆங்க, கடிகாவில் கால்ஒற்ற, ஒல்கி ஒசியாக்
கொடிகொடி தம்மில் பிணங்கி யவைபோல்,
தெரிஇழை ஆர்ப்ப மயங்கி இரிவுற்றார், வண்டிற்கு,
வண்டலவர்; கண்டேன் யான்.

தலைவி

நின்னைநின் பெண்டிர் புலந்தனவும், நீஅவர்
முன்அடி ஒல்கி உணர்த்தினவும், பன்மாண்
கனவின் தலையிட்டு உரையல்; சினைஇயான்
செய்வதுஇல் என்பதோ? கூறு.

தலைவன்

பொய்கூறேன்; அன்னவகையால் யான்கண்ட கனவுதான்
நன்வாயாக் காண்டை, நறுநுதால்! பன்மாணும்
கூடிப் புணர்ந்தீர்! பிரியன்மின்; நீடிப்
பிரிந்தீர்! புணர்தம்மின்' என்பன போல,
அரும்புஅவிழ் பூஞ்சினை தோறும் இருங்குயில்
ஆனாது அகவும் பொழுதினான், மேவர,
நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்
தேன்இமிர் காவில் புணர்ந்திருந்து ஆடுமார்,
ஆனா விருப்போடு அணிஅயர்ப, காமற்கு
வேனில் விருந்தெதிர் கொண்டு.

தெளிவுரை

தலைவன் : *வயலிலே வளர்கின்ற மலர்க்கொடி போன்ற மங்கையே! பல இடங்களுக்கும் சென்று பொருள் தேட முயலாதவனைப் பொருள் தானே நாடி வந்துவிடாது; பொருள் இல்லாது அறம் செய்யவும் இயலாது; அறத்தைச் செய்யாதவர்களுக்கு ஆன்றோர் உலகம் கிட்டாது; அறம் செய்ய எண்ணுவோர் அதனைக் கனவிலே செய்ய இயலாது. ஆனால், இன்பம் வேறு தன்மையைக் கொண்டது. முயங்கிய மகளிரின் மார்பகங்களில் வீழ்ந்து, அந்த இன்பத்திலே மூழ்குதலும், அவ்வாறு விரும்பியவரைப் பிரிதலும், பிரிந்து சென்ற இடத்தே பரத்தையரைப் புணர்தலும் ஆகிய இன்பம் நனவிலே மட்டும் அன்றிக் கனவிலும் உண்டாகலாம். ஆதலால், இப்படிப்பட்ட கனவும் ஓர் அழகினைக் கொண்டதுவே."*

தலைவன் இவ்வாறு கூறிய போது, அதுபற்றிய மறுமொழி எதுவும் கூறாது இருந்தாள், தலைவி. அதனால் மீண்டும் தலைவியை நோக்கித் தலைவன், "நறுமணம் கொண்ட நெற்றியைக் கொண்டவளே! நான் நேற்று இரவு கனாக் கண்டேன்; மதுரை மாநகரம் எப்போதுமே ஆரவாரம் கொண்டது; அந்நகருக்கு மதில்சுவர் உண்டு; அது மலை போலக் காட்சி தரும்; அம்மதிலைச் சூழ்ந்து ஓடுகிறது, வையை ஆறு; அந்த ஆற்றங்கரையில் அழகிய சோலைகளும் உண்டு; அச்சோலையுள்ளே நான் சென்றதாய்க் கனாக் கண்டேன்" என்றான்.

தலைவி : இனிமையும் மென்மையும் வாய்ந்த சாயலைக் கொண்ட பெருந்தன்மை மிக்கவனே! நீ கண்ட கனாக் காட்சியை நானும் அறியுமாறு சொல்.

தலைவன் : மதுரை மகளிர் பலர், நீர்த்துறையருகே, வையையாறு கொண்டுவந்து குவித்திருந்த மணல்முகடுகளின் மேல் ஒன்றாய்க் கூடித் தத்தம் தோழியரோடு அமர்ந்திருந்தனர். அக்காட்சி, அன்னப்பறவைகள் பறந்து, தமக்குத் தேவையான இரையினைக் கவர்ந்துண்டு களித்து, மாலைக்காலத்தில் வெண்மை நிற இமயமலை முகட்டில் தங்கியிருந்ததுபோல இருந்தது."

தலைவி : பறையடிப்பவன் தன் உள்ளத்தில் அமைத்துக் கொண்ட இசையைத்தான் பறையிலே இசைப்பான். அதுபோல நீயும் உன் மனத்தில் எண்ணியதையே கனவாய்க் கண்டுள்ளாய்.

தலைவன் : அவசரப்படாதே! முழுவதையும் கேட்ட பின்னர்ச் சினம் கொள்வாய்.

தலைவி : மேலே சொல்.

தலைவன் : இனிய புன்சிரிப்பைக் கொண்டவளே! அங்கே நடந்தது இதுதான். பூங்கொடி போல் துவண்டு விழும் அம் மாதர்கள் அங்கிருந்து எழுந்துபோய், ஒரு பூங்கொடியை வளைத்து மலர்க்கொத்துகளைக் கொய்தனர். அக்கொத்து களிலே திரண்டிருந்த வண்டினமெல்லாம், வேப்பமாலை அணிந்த பாண்டிய மன்னன், பகைவர்மீது சினம் கொண்டு போர்

செய்யும்போது பகைவர்கள் எவ்வாறு சிதைந்து ஓடுவார்களோ, அப்படி அச்சோலையின் நாற்புறமும் எழுந்து பறந்தன.

அவை அக்காரிகை நல்லாரின் அழகைக் கவர்ந்துண்பன போல, ஒரே சமயத்தில் அவர்கள்மேல் மொய்த்தன.

வண்டுகள் மொய்க்கத் தொடங்கியதும் அவ்வனிதையர் என்ன பாடுபட்டார்கள் என்பதை அறிவாயா? ஒருத்தியின் கூந்தலில் அணிந்திருந்த நகை இன்னொருத்தியின் வளையலில் மாட்டிக்கொண்டது. ஒருத்தியின் உச்சந்தலையிலிருந்து நெற்றித் திலகம்வரை அணிந்திருந்த நீண்ட முத்துச்சரம் மற்றொருத்தி யின் காதணியோடு கொழுவிக்கொண்டது. ஒருத்தி தன் தேமல் அழகுடன் கூடிய அகன்ற அல்குலின்மேல் அணிந்திருந்த ஆடை மற்றொருத்தியின் சுறாமீன் வாய் வடிவம் கொண்ட சிலம்பின் மூட்டுவாயிலில் சென்று சிக்கிக்கொண்டு அவள் நடக்க இயலாதவாறு தடுத்துக்கொண்டிருந்தது.

ஒரு பக்கத்தில் இன்னொருத்தி தன் கணவனோடு ஊடல் கொண்டு, நெருங்கி நில்லாது எட்டியே நின்றுகொண் டிருந்தாள். அவளைத் தழுவத் துடித்த அவள் கணவன், அவள் ஊடலை எப்படிப் போக்குவது என்று சிந்தித்துக்கொண்டிருந்த போழ்து, வண்டினங்கள் ஆர்த்தெழுந்து அவள்மீது மொய்க்கத் தொடங்கின; வண்டுகளைக் கண்டு பயந்த அந்தக் காரிகை, தன் ஊடலை மறந்து தன் கணவனின் மார்பிலே தானாகப் போய் விழுந்து தழுவிக் கிடந்தாள்.

ஒருத்தி, நெகிழும் தன் ஆடையை ஒரு கையிலே பிடித்துக் கொண்டு, அவிழ்ந்து வீழ்கின்ற தன் கூந்தலை இன்னொரு கையில் பற்றிக்கொண்டு, மலர் நிறைந்துள்ள மலர்ப் பொய்கை யில் பாய்ந்து விழுந்தாள்.

அப்பொய்கைக்கு அருகே ஓர் ஓடம் தென்பட்டது. அவ்வோடம் வளைந்த தண்டுகளைக்கொண்டு வலிமையாகச் செய்யப்பட்டிருந்தது. அந்த ஓடத்திற்கு அருகில் வந்த ஒருத்தியைத் திரண்டு வந்த வண்டுகள் மொய்க்கத் தொடங்கின. அவற்றை அவள் தன் கையால் விரட்டினாள்; அவை மிரண் டோடவில்லை; எனவே, தான் அணிந்திருந்த நறுமணம் கமழும்

மாலையை அறுத்து அவ்வண்டுகள்மேல் எறிந்தாள்; அப்போதும் அவை அகலாதிருந்ததைக் கண்டு அந்த அழகி அங்கிருந்த ஓடத்துள் புகுந்து ஒளிந்துகொண்டாள்.

கள்ளுண்டதால் கண் செருகி நிற்கும் ஒருத்தி, மொய்க்கும் வண்டுகளை எப்படி ஓட்டுவது என அறியாமல் ஓட்டி ஓட்டிக் கைசோர்ந்துவிட்டாள்.

அந்தப் பொழிலில் விளையாட வந்த அழகிகள், இவ்வாறாய் வண்டுகளை விலக்க இயலாது தோற்றுத் தம்முள் ஒருவரோ டொருவர் பின்னிப் பிணைந்து அணிகலன்களிலிருந்து ஆரவாரம் எழுமாறு நின்றனர். அக்காட்சி, ஒரு சோலையில் மிகுதியான காற்று வீசும்போது, அங்கிருக்கும் கொடிகள் தளர்ந்து, சாய்ந்து, பிணைந்து நிற்பன போன்றிருந்தது. இப்படிப் பட்ட கனவை யான் கண்டேன்.

தலைவி : உன் நனவுச் செயல்களையே கனவாய்க் கற்பித்துக் கொண்டு என்னிடம் கூறுகிறாய். உன் பரத்தைப் பெண்டிர் உன்னைத் தழுவாது ஊடல் கொண்டபோது, நீ அவர் அடிபணிந்து அவரது ஊடலை நீக்கியிருக்கிறாய். அவற்றை யெல்லாம் இப்பொழுது கனவு என இட்டுச் சொல்கிறாய். இதனால், உன்மீது நான் கொள்ளும் சினம் உனக்கு எந்தவிதத் தீமையையும் அளிக்காது என்று நீ கருதியதாலன்றோ இவ்வாறு கூறுகிறாய். சொல்.

தலைவன் : நான் எப்பொழுதும் எதற்காகவும் பொய் சொல்வதில்லை. நறுநுதலாளே! அது கனவெனினும் நன்மை தரும் உண்மை எனவே கருது. அதோ, அரும்புகளாய் இருந்து மலர்ந்துகொண்டிருக்கும் பூங்கொத்துகளில் கருங்குயில்கள் தங்கிக் கூவுகின்ற ஒலியைக் கேள்! அவ்வொலிகள் எதை அறிவிக் கின்றன? ‘பலவித மாட்சிமைகளுடன் ஒன்றாய்க் கூடிப் புணர்ந்தோரே! நீவிர் யாவரும் பிரிந்து வாழக்கூடாது. பிரிந்திருந்தாலும் மீண்டும் கூடி மகிழுங்கள்’ என்றுதான் அவ்வொலிகள் அறிவிக்கின்றன. அத்துடன் இளவேனிற்காலம் தொடங்கியதற்கான அறிகுறிகளும் தென்படுகின்றன.

நான்மாடக்கூடலில் ஆண்களும் பெண்களும் தேன் பிலிற்றும் சோலைகளில் கூடிக் களித்து ஆடுவதற்குப் பெருவிருப்புடன் அணிஅணியாய்ச் செல்லுகின்றனர். காமதேவனுக்கு விருந்து செய்ய இளவேனிலும் முந்தி நிற்கிறது. நாமும் அங்குச் செல்வோம், வா.

கருத்து

'பூங்காவில் புணர்ந்திருந்தாட நீயும் விரும்பு' என்று ஊடலோடிருக்கும் தலைவியிடம் தலைவன் கூறுகிறான்.

சொற்பொருள்

1. புனம் - வயல்; கழிய - மிகுந்த.
2. காரிகை - அழகு; நீர்த்தே - தன்மை கொண்டது.
3. முயங்கிய - தழுவிய; நல்லார் - பரத்தையர்.
5. உயங்கி - முயற்சி செய்யாமல்.
7. வீழ்வார் - விரும்புவார்.
9. தகையாது - நிகழாது.
10. அல்கல் - இராக் காலம்.
11. கலிகெழு - ஆரவாரம் மிக்க; கூடல் - மதுரை மாநகர்.
12. வரைஉறழ் - மலையை ஒத்த; நீள்மதில் - நீண்ட மதில்.
13. கரைஅணி கா - கரையை அழகு செய்யும் சோலை; அகத்து - உள்ளே.
14. தண்டா - குறையாத; தீம் - அழகிய; நெடுந்தகாய் - பெருந்தன்மை மிக்கவனே.
15. எவன் - என்ன?
16. ஆயும் - (இரையை) ஆராயும்.
17. மடநடை மா- அழகிய நடையைக் கொண்ட பறவை, அன்னம்; அமையம் - பொழுது.
18. இயங்கா - நகராத; இமையம் - இமயமலை; ஒருபால் - ஒரு பக்கம்.
19. இறை கொண்டு - ஒருசேரத் தங்கி; நல்லார் - இளைய மகளிர்.
20. துறை - வையை ஆற்றுத்துறை; ஒன்றி - ஒன்றாய்ச் சேர்ந்து.
21. ஓர்த்தது - மனம் நினைந்தது.
22. வேட்டதே - விரும்பியதே.
23. கேட்டை - கேட்பதற்கு.
25. தகையார் - தன்மை கொண்டவர்.
27. அலர் வேம்பின் - மலர்ந்த வேப்பம் பூ; பொருப்பன் - பாண்டியன்.

28. முனை அரண் - போர் முனை.
29. துனை - விரைந்து.
30. மூசிய - மொய்த்த.
33. கோதை நகை - கூந்தலில் அணிந்த நகை.
34. தட்ப - மாட்டிக்கொள்ள.
35. தெரிமுத்தம் - ஆராய்ந்த முத்து.
36. அரி - அழகு; அவிர் - ஒளி வீசும்; ஆய்காது - அழகிய காது; வாங்க - மாட்டிக் கொள்ள.
37. காழகம் - ஆடை.
38. அரிஆர் - பரல் நிறைந்த; ஞெகிழம் - சிலம்பு.
39. அலவுற்று - வருத்தமுற்று.
41. தண்தார் அகலம் - குளிர்ந்த மாலையணிந்த மார்பு.
42. கலிங்கம் - ஆடை.
44. கடிகயம் - மணம் நிறைந்த பொய்கை.
45. கணங்கொண்டு - கூட்டமாய் வந்து; கையாற்றாள் - கையால் ஓட்ட இயலாமல்.
46. பரிபு - அறுத்து; ஓச்சி - ஓட்டி.
47. வங்கம் - படகு.
48. இறந்த களியாள் - மிகுந்த போதை கொண்டவள்; இதழ் மறைந்த கண்ணாள் - கண செருகி நிற்பவள்.
50. இடந்தேற்றாள் - இடம் இது என அறியாள்.
51. காலொற்ற - காற்று வீச; ஒல்கி ஒசியா - நுடங்கிச் சாய்ந்து.
53. இரிவுற்றார் - நாற்புறமும் சிதறி ஓடினர்.
58. சினைஇ - சினந்து.
60. நன்வாயா - நன்மை வாய்ப்பதாக; காண்டை - காண்க.
62. புணர்தம்மின் - புணருங்கள்.
64. ஆனாது ஆகவும் - இடைவிடாது கூவும்.
65. நான்மாடக்கூடல் - மதுரை.
67. ஆனா விருப்பம் - மிகுந்த விருப்பத்துடன்; அணிஅயர்ப - அணியணி யாய்ச் செல்லுகின்றனர்.

தலைவி கூற்று

கலித்தொகை 93 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

'காவற்பாங்கின் ஆங்கோர் பக்கமும்' என்புழி, 'ஆங்கோர் பக்கமான கடவுளரைக் கண்டு தங்கினேன்' என்ற தலைமகற்கு, நீ கண்ட கடவுளர் இவரெனக் கூறிப் புலந்தது.

கூற்று விளக்கம்

பரத்தையின் வீட்டிற்குச் சென்றிருந்த தலைவன் வீடு திரும்பினான். 'இவ்வளவு காலம் தாழ்ந்து வருவதற்குக் காரணம் என்ன' என்று கேட்டாள், தலைவி. 'கடவுளரைக் கண்டேன்; தங்கினேன்; காலம் கடந்துவிட்டது' என்று பொய் கூறினான், தலைவன். 'எந்தக் கடவுளின் கோவிலோ' என்று கேட்டுத் தலைவி அவனிடம் ஊடல் கொண்டு வெறுத்துப் பேசியது.

தலைவி

வண்டூது சாந்தம் வடுக்கொள நீவிய,
தண்டாத் தீம்சாயல் பரத்தை, வியல்மார்ப!
பண்டு,இன்னை அல்லைமன்; ஈங்குஎல்லி வந்தீய,
கண்டது எவன்? மற்று உரை.

தலைவன்

நன்றும், தடைஇய மென்தோளாய்! கேட்டீவா யாயின்
உடனுறை வாழ்க்கைக்கு உதவி உறையும்
கடவுளர் கண்தங்கி னேன்.

தலைவி

சோலை, மலர்வேய்ந்த மான்பிணை யன்னார் பலர்,நீ
கடவுண்மை கொண்டொழுகு வார்.
அவருள், எக்கடவுள்? மற்றக் கடவுளைச் செப்பீமன்.

தலைவன்

'முத்தேர் முறுவலாய்! நாம்மணம் புக்கக்கால்,
'இப்போழ்து போழ்து'என்று அதுவாய்ப்பக் கூறிய
அக்கடவுள், மற்றுஅக் கடவுள்.'

தலைவி

அதுஒக்கும். நாவுள் அழுந்து தலைசாய்த்து நீகூறும்
மாயமோ; கைப்படுக்கப் பட்டாய்நீ; கண்டாரை
வாயாக யாம்கூற வேட்டீவாய்! கேளினி.

பெறல்நசை வேட்கையின் நின்குறி வாய்ப்பப்
பறிமுறை நேர்ந்த நகாராக, கண்டார்க்கு
இறுமுறை செய்யும் உருவொடு, நும்இல்,
செறிமுறை வந்த கடவுளைக் கண்டாயோ?

நறும்தண் தகரமும் நானமும் நாறும்
நெறிந்த குரல்கூந்தல் நாளணிக்கு ஒப்ப,
நோக்கிற் பிணிகொள்ளும் கண்ணொடு, மேனாள்,நீ
பூப்பலி விட்ட கடவுளைக் கண்டாயோ?

ஈர்அணிக்கு ஏற்ற ஒடியாப் படிவத்துச்
சூர்கொன்ற செவ்வேலான் பாடிப் பலநாளும்,
ஆராக் கனைகாமம், குன்றத்து நின்னொடு
மாரி இறுத்த கடவுளைக் கண்டாயோ?

கண்ட கடவுளர் தம்முளும், நின்னை
வெறிகொள் வியன்மார்பு வேறாகச் செய்து,
குறிகொளச் செய்தார்யார்? செப்பு! மற்று யாரும்
சிறுவரைத் தங்கின் வெகுள்வர்; செறுதக்காய்!
தேறினேன்; சென்றீநீ; செல்லா விடுவாயேல்,
நற்றார் அகலத்துக்கு ஓர்சார மேவிய
நெட்டுஇரும் கூந்தல் கடவுளர் எல்லார்க்கும்
முட்டுப்பாடு ஆகலும் உண்டு!

தெளிவுரை

தலைவி :

வண்டு மொய்க்கும் சந்தனம், கை வடுக்கொள்ளும்படியாய்ப் பூசப்பட்டிருக்கும் இனிமையான சாயல் அமைந்த பரத்தையரால் தழுவப்பெற்ற அகன்ற மார்பினைக் கொண்டவனே! முன்னர் நீ இப்படி இருக்கவில்லை! இங்கு இரவுக்காலத்திலே வந்துள்ளாய். நீ வெளியே சென்று கண்டது எதை? அதனைக் கூறு.

தலைவன் :

மென்மையான தடந்தோளினைக் கொண்டவளே! கேட்ப தென்றால் நான் சொல்வதைக் கேள்! நாம் இருவரும் உடனிருந்து வாழும் வாழ்க்கைக்கு உதவியாய் இருக்கும் கடவுளர்களைக் கண்டு அந்தந்தக் கோவில்களில் அவரவர்களுடன் தங்கி வந்தேன்.

(தலைவன் கூறியதைக் கேட்டு எள்ளி நகையாட எண்ணிய)

தலைவி :

சோலையிலே, ஒத்த மலர்களை அணிந்த, மான் கண் நோக்கினைக் கொண்ட பரத்தையர் பலரும் உன் கண்ணுக்குக் கடவுளர்களாகவே தோன்றுவர். அவருள் நீ கண்டுவந்த கடவுள் எக்கடவுள்? அக்கடவுளைச் சொல்.

அது கேட்ட தலைவன் :

முத்தனைய பற்களால் முறுவலிக்கும் தன்மையளே! அந்தக் கடவுளர் வேறு எவருமல்லர்; நாம் திருமணம் செய்து கொள்வதற்கு 'இது நல்ல பொழுது' என்று நம்மிடம் கூறினாரே, அந்தக் கடவுளர் (முனிவர்)தாம்.

அது கேட்ட தலைவி:

அக்கடவுளர் நம் இருவருக்குமே ஒத்துவரக்கூடியவர்தாம். ஆனால், நீ இதைக் கூறும்போது உன் தலை சாய்ந்து நாக்குக் குழறியதே, அஃது ஏன்? நீ சொன்னவை உண்மையல்ல என்று என்னிடம் கையும் களவுமாய்ப் பிடிபட்டாய். நீ கண்டவர் யாவர் என்று என் வாயால் கூற வேண்டும் என்று விரும்புகிறாய் போலும்! சொல்கிறேன், கேள்.

நீ கண்ட கடவுளர் உன்னை அடைய வேண்டும் என்று விரும்பி நீ சொன்ன இடத்திற்கு வந்தவர்; அக்கடவுளர் இப்போதுதான் பல் விழுந்து முளைத்த இளம் பருவத்தினர்; தம்மைக் காண்பாரைக் கொல்லும் உடல் அழகு கொண்டவர். உன் குறியிடம் வந்து சேர்ந்து உனக்கு இன்பம் தரும் கடவுளர் அவர். அவர்களைத்தாம் நீ கண்டாயோ?

மேலும், நாள்தோறும் பூக்களைப் பறித்துச் சென்று, நல்ல குளிர்ச்சி பொருந்திய சந்தனமும் புனுகும் மணக்கும் அடர்ந்த

கொண்டையிட்ட கூந்தலிலே வைத்து அருச்சிப்பாயோ! அப்போது பார்வையாலேயே உன்னைப் பற்றி இழுத்துக் கொள்ளும் பண்பு கொண்ட கடவுளர்களைத்தாம் கண்டாயோ?

மழைக்காலத்தில் நீ திருப்பரங்குன்றத்தில் பல நாள் தங்கியிருந் தாய். அங்கே குதிரை முகமும் மனித உடலும் கொண்டு, விலங்கு, மனிதன் ஆகிய இருவகை அழகையும் கொண்ட சூரபன்மன் என்ற அசுரனைக் கொன்ற செவ்வேளாகிய முருகப் பெருமானைக் காண வந்த காரிகையர் பலரும், தம் காம வேட்கையில் உன்னுடன் தங்கியிருந்தனர்; அவர்தாம் உன் கண்களுக்குக் கடவுளர்களாய்க் காணப்பட்டார்களோ?

நீ பார்த்த கடவுளர்களுள், மணம் கமழும் அகன்ற உன் மார்பைத் தழுவித் தமது கைகளால் அடையாளமிட்டிருப்பவர் (வடுவுண்டாக்கியிருப்பவர்) யார் எனக் கூறு. அவர் யாராய் இருப்பினும், சிறிதுபோது நீ வேற்றிடத்தில் தங்கினாலும் வெகுள்வர். நான் வெறுத்தொதுக்கும் செயல்களைச் செய் பவனே! நான் உன்னைத் தெளிவாய்ப் புரிந்துகொண்டேன். நீ இப்பொழுதே இவ்விடம் விட்டு அகன்று செல். நீ செல்லா விட்டால், நல்ல மாலையணிந்த உன் மார்பினை ஒன்றித் தழுவி இன்புற்ற, நீண்ட கூந்தலைக் கொண்ட கடவுளர் எல்லார்க்கும் முட்டுப்பாடு ஏற்படக்கூடுமன்றோ?

இவ்வாறு தலைவி தலைவனை எள்ளி நகையாடி அவனோடு ஊடல் கொண்டாள்.

கருத்து

உன் பிரிவை நீ கண்ட கடவுளராய பரத்தையர் பொறார்; உடனே நீ அவரிடம் செல்.

விளக்கம்

பரத்தையர் பலரிடமும் இன்பம் துய்த்த பின் இரவு நேரத்தில் தலைவன் தன் வீட்டுக்கு வந்தான். வண்டுகள் மொய்க்குமளவுக்கு அவன் மார்பில் சந்தனம் பூசப்பட்டிருந்தது. சந்தனப் பூச்சு மிகுதியாகவும், அது அழுத்தி நீவியும் பூசப்பட்டதால் அதில் வடுக்கள் உண்டாகியிருப்பதையும் கண்ட தலைவி, அவை

பரத்தையரால் ஏற்பட்டவையே என்றறிந்தாள். 'காலங்கடந்து இரவில் வருவதேன்?' என்று தலைவி தலைவனைக் கேட்டாள். அவன், 'கடவுளரைக் கண்டு வந்தேன்' என்றான். 'எந்தக் கடவுள்?' என்று அவள் கேட்க, அவன், 'நம் திருமணத்திற்கு நல்ல பொழுதினைக் குறித்துக் கொடுத்த முனிவர்' என்றான். கடவுளர் என்று தலைவன் குறிப்பிட்டது பரத்தையரையே என்பதை உணர்ந்த தலைவி, அவன், தான் கண்டதாய்க் கூறும் கடவுளர் இத்தன்மையவர் என்று பரத்தையர் செயலைச் சுட்டிக் காட்டினாள். 'இனியும் நீ காலம் தாழ்த்திருந்தால் நீ கண்ட கடவுளர் பொறுத்துக் கொள்ளமாட்டார்; உடனே சென்று மீண்டும் அவரை வழிபடு' என்று தலைவி புலந்து கூறினாள்.

குறிப்பு

முருகன் சூரபன்மனைக் கொன்ற புராணக்குறிப்பு இப் பாடலில் உள்ளது.

சொற்பொருள்

1. சாந்தம் - சந்தனம்.
2. தண்டா - அமையாத; தீம் - இனிய; வியல் மார்ப - அகன்ற மார்பைக் கொண்டவனே.
3. இன்னை அல்லை - நீ இவ்வாறு இருந்ததில்லை; எல்லி - இரவு.
5. தடைஇய - பெருத்த; கேட்டிவாய் - கேட்பாய்.
6. உடனுறை வாழ்க்கை - திருமண வாழ்க்கை.
8. வேய்ந்த - சூடிய; மான்பிணை - பெண்மான்.
9. கடவுண்மை - கடவுள் தன்மை.
10. செப்பீமன் - சொல்.
11. முத்தேர் - முத்து + ஏர் - முத்தினை ஒத்த; மணம் புக்கக்கால் - மணம் செய்துகொண்டபோது.
12. இது போழ்து போழ்து - இதுவே நல்ல பொழுது.
14. நாவுள் அழுந்து - நாத் தடுமாறி.
15. கைப்படுக்கப்பட்டாய் - கையும் களவுமாய்ப் பிடிபட்டாய்.
16. வாயாக - உண்மையாக; வேட்டீவாய் - விரும்பியவனே.
17. நசை - விருப்பம்; நின் குறி - நீ செய்த குறியிடம்.
18. பறிமுறை நேர்ந்த - விழுந்து வரிசையாய் முளைத்த; நகார் - பல்.
19. இறுமுறை - அழிவு.
20. செறிமுறை - சேர்ந்து வரும் உரிமை.

21. தகரம் - மயிர்ச்சாந்து; நானம் - புனுகு; நாறும் - மணக்கும்.
22. நெறிந்த - அடர்த்தியான, நெளிவுற்ற; குரல் - கொண்டை; நாளணி - நாளும் அணிதல்.
23. பிணி கொள்ளும் - (காதல்) நோய் உண்டாக்கும்.
24. பூப்பலி - பூ அருச்சனை.
25. ஈர் அணி - இருவகை அழகு.
26. சூர் - சூரபன்மன் (சூரபன்மன் - குதிரை முகமும், மனித உடலும் கொண்டிருந்த தோற்றம்); செவ்வேலான் - முருகன்.
27. ஆரா - தீராத; கனை - மிகுதி; குன்றம் - திருப்பரங்குன்றம்.
28. மாரி - மாரிக்காலம்; இறுத்த - தங்கிய.
31. செப்பு - சொல்.
32. சிறுவரை - சிறுபொழுது; செறுதக்காய் - வெறுக்கத் தக்கவனே.
33. தேறினேன் - (உன் நடவடிக்கைகளைத்) தெரிந்துகொண்டேன்; சென்றீ - செல்.
34. நற்றார் - நல் + தார் - நல்ல மாலை; அகலம் - மார்பு.
35. நெட்டு இரும் - நெடிய கரிய.
36. முட்டுப்பாடு - நெருக்கடி, வருத்தம்.

தலைவி கூற்று

கலித்தொகை 95 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

"கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது, நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇ, பகுதியின் நீங்கிய தகுதிக் கண்" (தொல். நூற்பா. 1093) தலைமகள் பரத்தையரைப் பூழாக்கிக் கூறியது. (பூழ் - காடை)

கூற்று விளக்கம்

பரத்தையர் சேரியிலிருந்து தன் மனைக்கு வந்த தலைவனிடம் தலைவி ஊடல் கொண்டாள். தலைவன் தூதாய் வந்த பாணர், கூத்தர் முதலியோர் தலைவனைப் புகழ்ந்து பேசினர். அது தன் நெஞ்சைச் சுடுவதாய்க் கூறி, தலைவன் செய்த தவற்றை முழுவதுமாய்த் தலைவி எடுத்துரைத்தது.

தலைவி சினங்கொண்டிருக்கிறாள். தலைவன் பொய்யாய்க் 'காடைச் சண்டை பார்க்கப் போயிருந்தேன்' என்று கூறுகின்றான். தலைவி, பரத்தை யரைக் காடை என்று கூறியது.

தலைவி

நில்,ஆங்கு; நில்,ஆங்கு; இவர்தரல்— எல்லா!நீ
நாறுஇருங் கூந்தலார் இல்செல்வாய், இவ்வழி;
மாறு மயங்கினை போறி!நீ; வந்தாங்கே
மாறு,இனி, நின்னாங்கே, நின்,சே வடிசிவப்ப.

தலைவன்

செறிந்துஒளிர் வெண்பல்லாய்! யாம்வேறு இயைந்த
குறும்பூழ்ப்போர் கண்டேம்; அனைத்தல்லது, யாதும்
அறிந்ததோ இல்லை,நீ வேறுஓர்ப் பது.

தலைவி

குறும்பூழ்ப்போர் கண்டமை கேட்டேன், நீஎன்றும்
புதுவன ஈகை வளம்பாடி, காலின்
பிரியாக் கவிகைப் புலையன்தன் யாழின்
இகுத்த செவிசாய்த்து, இனிஇனிப் பட்டன
ஈகைப்போர் கண்டாயும் போறி;மெய் எண்ணில்,
தபுத்த புலர்வுஇல புண்.

ஊரவர் கவ்வை உளைந்தீயாய், அல்கல்நின்
தாரின்வாய்க் கொண்டு முயங்கிப் பிடிமாண்டு,
போர்வாய்ப்பக் காணினும் போகாது கொண்டு,ஒடும்
பார்வைப்போர் கண்டாயும் போறி;நின் தோள்மேலாம்
ஈரமாய் விட்டன புண்.

கொடிற்றுப்புண் செய்யாது, மெய்ம்முழுதும் கையின்
துடைத்து,நீ வேண்டினும் வெல்லாது, கொண்டு,ஒடும்
ஒட்டியபோர் கண்டாயும் போறி; முகந்தானே
கொட்டிக் கொடுக்கும் குறிப்பு.

தலைவன்

ஆயின், ஆயிழாய்! யான்ஆங்கு அறியாமை
போற்றிய நின்மெய் தொடுகு.

தலைவி

'அன்னையோ' –

மெய்யைப் பொய்என்று மயங்கிய, கைஒன்று
அறிகல்லாய் போறிகாண் நீ.

தலைவன்

நல்லாய்! பொய்யெல்லாம் ஏற்றித் தவறு தலைப்பெய்து,
கையொடு கண்டாய்; பிழைத்தேன்; அருள்இனி.

தலைவி

அருளுகம்; யாம்யாரேம், எல்லா! தெருள
அளித்து,நீ பண்ணிய பூழ்எல்லாம்– இன்னும்
விளித்து,நின் பாணனோடு ஆடி அளித்தி–
விடலை!நீ நீத்தலின், நோய்பெரிது ஏய்க்கும்;
நடலைப்பட்டு, எல்லா!நின் பூழ்.

தெளிவுரை

தலைவி *(வீட்டினுள் தலைவன் நுழையும்போது கூறுகிறாள்:)*

தோழ! நில்; அங்கேயே நில்; மேலும் நகராதே, நில். நறுமணம் கமழும் கூந்தலைக் கொண்ட பரத்தையர் வீடு நோக்கிச் செல்ல வேண்டியவன், வழி மாறி, மயங்கி இங்கே வந்துள்ளாய். அதனால் வந்த வழியே அங்கே செல்; நடந்து நடந்து உன் பாதங்கள் சிவந்துள்ளன.

தலைவன்

ஒளி வீசும் வெண்மையான பற்களைக் கொண்டவளே! நான் வேறு இடத்திலிருந்து காடைப்போர் கண்டு வருகிறேன். அதையன்றி வேறொன்றையும் நான் அறியேன். நீ வேறேதோ நினைக்கிறாய்.

தலைவி

நீ காடைப்போர் கண்டதுபற்றி நானும் கேள்வியுற்றேன். புதிது புதிதாய் நீ கொடுக்கும் வளத்தைப் பாடிக்கொண்டு, உன்னிடத்தினின்றும் பிரியாத உன் பாணன் யாழை இசைக்க, அதற்குச் செவி சாய்த்த காடைகளைப் (பரத்தையர்களைப்) புதிதாய்க் கொண்டுவந்தான். அவை இட்ட போரைக் கண்டாய் போலும்! நீ போரில் பெற்ற ஆறாத புண்கள் அந்த உண்மையை

எடுத்துக் கூறுகின்றனவே! (அவற்றுள் ஆண்காடை - நீ; பெண்காடை - பாணன் அளித்த பரத்தை. நீ போரிட்டதை உன் முகத்தில் உள்ள வடுக்களே உண்மை எனக் கூறும்.)

என்னைப் பிரிந்து சென்றதால் ஊரவர் தூற்றும் அலர் கேட்டும் திருந்தாத பண்பு கொண்டவன், நீ. காடைகள் நிகழ்த்திய போரைக் கண்டதாய்ச் சொல்கிறாய்; ஆனால், உனக்கு ஏன் புண்கள் ஏற்பட்டுள்ளன? நீயும் ஒரு காடையுடன் போரிட்டாயா? அது மாலையணிந்த உன் மார்பில் புகுந்து தழுவி உன்னை நன்றாய் வயப்படுத்திக்கொண்டதோ? நீ மற்ற காடைகளை நாடிப் போனதால், அந்தக் காடை உன்னுடன் போரிட்டதோ? அல்லது கலவிப்போர் நிகழ்ந்து உன் தோள் களில் புண்கள் உண்டாயினவா? நீ போரைப் பார்த்தவனா, போர் புரிந்தவனா? உன் தோள்மேல் உள்ள புண்களெல்லாம் ஆறாமல் இன்னும் ஈரமாகவே உள்ளனவே!

உன்னுடன் கலவிப்போரில் ஈடுபடும் அந்தப் பறவைக்குக் கன்னத்தில் எந்தவிதப் புண்ணையும் நீ உண்டாக்கவில்லை; எனினும், அதனைக் கையால் தழுவி, உடம்பு முழுவதையும் துடைப்பதுபோன்று மென்மையாய்ப் போரிட்டாய்! பந்தயம் வைத்து நீர் விளையாட்டு விளையாடுவதுபோல, உனக்கு ஆட் படாது, நீண்ட நேரம் அந்தப் பறவை உன்னுடன் விளையாட முற்பட்டதை உன் முகமே காட்டிக் கொடுக்கிறது.

(தலைவி சொல்லும் இவை காடைப் போர் பற்றியவை போலத் தோன்றினாலும், உண்மையில் தன் பரத்தமை நிலையை இடித்துக் கூறப்பட்டவை என அவனும் உணர்ந்ததால், அவளுக்குச் சமாதான வார்த்தைகள் கூற முற்படுகிறான்.)

தலைவன் : நான் குறும்பூழ்ப் பறவைப் போரினைக் கண்டதாய்ச் சொன்னதை எவ்வாறெல்லாமோ கூறி, உண்மையை நீ உணர்ந்து கொண்டாய்! நான் அவ்வாறு கூறியதும் நடந்துகொண்டதும் தவறுகளாகவே இருப்பினும், அவை அறியாமையினால் ஏற்பட் டவை என உன் உடல் தொட்டுச் சத்தியம் செய்ய விரும்புகிறேன்.

தலைவி : அப்படியா! மெய்யைப் பொய் என்று வஞ்சிக்கும் நடத்தையை நீ அறியாதவனா? நீயே உணர்ந்து பார்.

தலைவன் : *நல்லவளே! என் கூத்துகளைப் பொய்யென்று நிறுவி நான் தவறிழைத்தவன் என்பதை நிலைநாட்டிவிட்டாய்! நான் உனக்குத் தவறு இழைத்துவிட்டதை உணர்கிறேன். நீ என்னிடம் கருணை காட்டு.*

தலைவி : *உன்மீது கருணை காட்டுவதற்கு நான் யார்? ஏடா! நான் கூறுவதைத் தெளிவாய் உணர்ந்துகொள். நீ முன்னர் அருள் செய்து, பின்னர் அருளாது கைவிட்ட காடைகள் உன் கருணைக்காகக் காத்துக் கிடக்கின்றன. அவை உன் நடிப்பை அறியாமையால் உன்னை நம்பியவை. உன் பாணனோடு சென்று அவைமீது கருணை காட்டு.*

கருத்து

தலைவ! நீ பார்த்த காடைகளாய உன் பரத்தையர் உனைக் காணக் காத்திருக்கின்றனர். நீ சென்று அவர்மீது கருணை காட்டு.

விளக்கம்

பாணன் முதலியோரின் தூண்டுதலால் தலைவன் தலைவியை நீங்கிப் பரத்தையரில்லங்களுக்குச் சென்று, இன்பம் துய்த்து, மீண்டும் தலைவியைக் காண வந்தபோழ்து, தலைவி, தலைவன் ஆகிய இருவருக்கும் இடையே நிகழ்ந்த உரையாடல்களைக் கொண்டது, இப்பாடல்.

தலைவியின் சொற்கள் சிலேடை அணி நிறைந்தனவாய்க் காணப்படுகின்றன. பரத்தைப் பெண்டிரைக் குறும்பூழ் என்று உருவகப்படுத்தித் தன் தலைவனையும் அத்தகைய பறவையாக்கி அப்பறவைகள் தம்முள் போரிடுவதாய்த் தலைவி கூறுகிறாள். அஃதாவது, பரத்தையும் தன் தலைவனும் கலவிப்போர் நிகழ்த்து வதாய்க் கூறுகிறாள்.

குறிப்பு

ஆட்டுக்கிடாய்ப் போர், சேவல் போர் ஆகியவைபோலப் பண்டு காடைப்பறவைப் போரும் நிகழ்ந்திருக்கிறது.

சொற்பொருள்

1. நில்; இவர்தரல் - மேலே வாராதே; எல்லா - தோழன்.
2. நாறு இருங்கூந்தலார் என்றது பரத்தையரை, மணம் வீசும் கரிய கூந்தலைக் கொண்டவர்
3. வழி மாறி மயக்கமுற்றுள்ளாய்.
5. செறிந்த - நெருங்கிய; வேறு இயைந்து - வேறு இடத்திலிருந்து.
6. குறும்பூழ் - காடை, சிவல் பறவை; அனைத்தல்லது - அவற்றைத் தவிர.
7. ஓர்ப்பது - ஆராய்ந்து உணர்ந்தது.
9. காலின் பிரியா - உன் காலினின்றும் பிரியாத.
10. கவிகை - கவிழ்ந்த, கையையே கொண்டவனான; புலையன் - பாணன்.
11. இகுத்த - யாழில் வாசித்ததை; இனிஇனி - புதிது புதிதாய்; பட்டன - அகப்பட்ட.
12. ஈகை - புதுமை.
13. தபுத்த - ஈரம்; புலர்வில - உலரவில்லை.
14. கவ்வை - பழிச்சொல்; உளைதல் - மிக வருந்துதல்; அல்கல் - இரவு.
15. தாரின் வாய்க் கொண்டு - உன் மார்பிலுள்ள மாலையைக் கையாலே அணைத்துக்கொண்டு; பிடிமாண்டு - வயப்படுத்தலில் திறமை பெற்று.
19. கொடிறு - கன்னம்.
20. கொண்டு - போரிட்டுக்கொண்டே.
22. உண்மையை முகம் வெளிப்படுத்திவிடுகிறது.
24. மெய்தொடுகு - உன் மேனியைத் தொட்டுச் சத்தியம் செய்வேன்.
27. தலைப்பெய்து - ஒன்றாய்க் கூட்டி.
29. யாரேம்? - நாங்கள் யார்?; தெருள் - தெளிவு.
31. விளித்து - அவர்களை எல்லாம் அழைத்து; அளித்தி - அருள் செய்.
32. விடலை - தலைவன்.
33. நடலைப்பட்டு - துன்பப்பட்டு, எல்லா நின் பூழ் - தலைவ! உன் காடைகள் எல்லாம் (வருந்தியிருக்கின்றன).

தலைவி கூற்று

கலித்தொகை 96 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

இஃது "கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது, நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇ, பகுதியின் நீங்கிய தகுதிக்கண்" தலைமகள் பரத்தையரைக் குதிரையாக்கிக் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் சேரியிலிருந்து தன் மனைக்கு வந்த தலைவனிடம் தலைவி ஊடல் கொண்டாள். தலைவன் தூதாய் வந்த பாணர், கூத்தர் முதலியோர் தலைவனைப் புகழ்ந்து பேசினர். அது தன் நெஞ்சைச் சுடுவதாய்க் கூறி, தலைவன் செய்த தவறுகள் முழுவதையும் தலைவி எடுத்துரைத்தாள்.

தலைவி சினங்கொண்டிருக்கிறாள். தலைவன் பொய்யாய்க் 'குதிரைச் சண்டை பார்க்கப் போயிருந்தேன்' என்று கூறுகின்றான். தலைவி பரத்தை யரைக் குதிரை என்று குறிப்பிட்டாள்.

தலைவி

ஏந்துஎழில் மார்ப! எதிர்அல்ல, நின்வாய்ச்சொல்;
பாய்ந்துஆய்ந்த தானைப் பரிந்துஆனா மைந்தினை;
சாந்தழி வேரை; சுவல்தாழ்ந்த கண்ணியை;
யாங்குச்சென்று, ஈங்குவந் தீத்தந்தாய்?

தலைவன்

'கேள்,இனி
ஏந்தி, எதிர்இதழ் நீலம் பிணைத்தன்ன கண்ணாய்!
குதிரை வழங்கிவரு வல்'

தலைவி

அறிந்தேன், குதிரைதான்;
பால்பிரியா ஐங்கூந்தல் பன்மயிர்க் கொய்சுவல்,
மேல்விரித்து யாத்த சிகழிகைச் செவ்வுளை,
நீல மணிக்கடிகை வல்லிகை, யாப்பின்கீழ்
ஞால்இயல் மென்காதின் புல்லிகைச் சாமரை,
மத்திகைக் கண்ணுறை யாகக் கவின்பெற்ற

உத்தி ஒருகாழ்,நூல் உத்தரியத் திண்பிடி,
நேர்மணி நேர்முக்காழ்ப் பல்பல கண்டிகை,
தார்மணி பூண்ட தமனிய மேகலை,
நூபுரப் புட்டில், அடியொடு அமைத்துயாத்த
வார்பொலம் கிண்கிணி, ஆர்ப்ப இயற்றி,நீ,
காதலித்து ஊர்ந்தநின் காமக் குதிரையை,
ஆய்சுதை மாடத்து, அணிநிலா முற்றத்துள்,
ஆதிக் கொளீஇய, அசையினை ஆகுவை,
வாதுவன்; வாழிய, நீ!

சேகா! கதிர்விரி வைகலின் கைவாரூஉக் கொண்ட
மதுரைப் பெருமுற்றம் போல,நின் மெய்க்கண்
குதிரையோ, வீறி யது?

கூர்உகிர் மாண்ட குளம்பின் அது;நன்றே
கோரமே– வாழி!குதி ரை.

வெதிர்உழக்கு நாழியால் சேதிகைக் குத்திக்
குதிரை உடல்அணி போல,நின் மெய்க்கண்
குதிரையோ, கவ்வி யது?

சீத்தை! பயம்இன்றி ஈங்குக் கடித்தது நன்றே!
வியமமே– வாழி!குதி ரை,

மிகநன்று, இனிஅறிந்தேன்; இன்றுநீ ஊர்ந்த குதிரை;
பெருமணம் பண்ணி, அறத்தினிற் கொண்ட
பருமக் குதிரையோ அன்று; பெரும!நின்
ஏதில் பெரும்பாணன் தூதுஆட, ஆங்கேயோர்
வாதத்தான் வந்த வளிக்குதிரை; ஆதி
உருவழிக்கும், அக்குதிரை; ஊரல்,நீ; ஊரில்,பரத்தை
பரியாக; வாதுவனாய், என்றும்மற்று அச்சார்த்
திரி;குதிரை ஏறிய செல்.

தெளிவுரை

தலைவி : *உயர்ந்த அழகிய மார்பைக் கொண்டவனே! உன் பேச்சுக்கு எதிர்ப்பேச்சும் உண்டோ? ஆனால், உன் தோற்றம்*

வேறாய் இருக்கிறது. உறுதியுள்ள உன் ஆடைமடிப்புகள் விரிந்தும், கரை நைந்தும், ஆடை கிழிந்துமுள்ளன. வியர்வை மிகுந்து உன் மார்புச் சந்தனம் கலைந்திருக்கின்றது. உன் தலைமாலை சரிந்து பிடரியில் கிடக்கின்றது. நீ எங்கே சென்று விட்டு இங்கு வந்துள்ளாய்?

தலைவன் : *(வினவிய தலைவிக்கு விடையளிப்பவன்போலப் பேசுகின்றான்.) ஒரே மாதிரியான நீல மலர்கள் இரண்டை எதிர் எதிராய் இணைத்து வைத்ததுபோன்ற கண்களைக் கொண் டவளே! கேள்! நான் குதிரையேற்றம் பயின்றுவிட்டு இங்கு வந்துள்ளேன்.*

தலைவி : *(தலைவன் கூறியதைக் கேட்ட தலைவி, அவனை நோக்கிக் கூறுகிறாள்:)*

நீ ஏறி வந்த குதிரை எத்தகையது என்பதைத் தெரிந்து கொண்டேன். அது ஐந்து வகையாக வகிரப்பட்டுக் கத்தரிக்கப் பட்டு அழகு செய்யப்பெற்ற கூந்தலைக் கொண்டது; மயிர் முடியின் மேல் துஞ்சாகிய தலையாட்டத்தைக் கொண்டது; நீலமணிகளைத் தோலில் வைத்துத் தைத்துச் செய்யப்பெற்ற கழுத்துவடமாகிய வல்லிகை அணியப்பெற்றது; கீழாகத் தொங்கும் புல்லிகை என்று கூறப்பெறும் சாமரை என்னும் காதணியைக் கொண்டிருப்பது. ஒரு வடமாய்த் தொங்கும் சுட்டியணி, கண்ணுக்கு அச்சம் தரக்கூடிய சம்மட்டி, நூலால் ஆக்கப்பட்ட குசை என்னும் கடிவாளம், மணிகளால் செய்யப்பட்ட மூவடமாகிய கட்டுவடம் என்னும் கண்டிகை, பொன்னாலான மேகலை, சதங்கைகள் ஆகியவற்றை அணி யாய்க் கொண்டிருப்பது. இத்தகைய அணிகளைக் கொண்ட குதிரையின் மேலேதானே ஏறிப் பழகினாய்! நீ காதலிக்கும் குதிரையைச் செண்டு வெளியிலே செலுத்தவில்லை; அழகிய நிலா முற்றத்திலே ஆதி எனும் நெடுஞ்செலவினை அதற்குத் தந்தாய். அதனால் நீ இளைத்தாய். நன்றாய்க் குதிரையைச் செலுத்துபவனே, நீ வாழ்க.

(நையாண்டியாய்த் தலைவி 'நீ வாழ்க' எனக் கூறக் கேட்டும் வாய் பேசாதிருந்த தலைவனை நோக்கி)

தலைவி : *குதிரைகளுக்கு நன்றாய்ச் சேவகம் செய்பவனே! சூரியன் தன் கதிர்களை விரிக்கவிருக்கும் வைகறைப்போழ்தில் துடைப்பமாகிய வாருகோலால் கூட்டும்போது, மதுரை மாநகரத் தெருக்களில் காணப்படும் கீறல்களைப் போன்று, உன் உடலில் காணப்படும் நகக்கீறல்கள் அந்தக் குதிரையால் ஏற்பட்டனவோ? அக்குதிரை கூரிய நகங்களைக் கொண்ட குளம்புகளைக் கொண்டதோ? எத்தகைய கொடுமையைப் புரிந்துள்ளது அது? எனினும், அக்குதிரை வாழ்க!*

மூங்கில் உழக்காலும் நாழியாலும் சேதிகை என்னும் பெயர் கொண்டுள்ள பச்சை குத்தப்பட்ட குதிரையின் உடல் அழகு போல, உன் உடலிலும் கௌவப்பட்ட அடையாளங்களை இட்டதும் அக்குதிரைதானோ?

சீச்சீ, மிகவும் கெட்டது அது! பயமின்றி இங்கெல்லாம் கடித்திருக்கிறதே! பெரும் வியப்பாகவே உள்ளது; என்றாலும், நீ அதன்மேல் ஏறி மகிழ்ந்துள்ளாயே! அக்குதிரை வாழ்க!

இன்று நீ ஏறிய குதிரை எப்படிப்பட்டது என்பதை மிக நன்றாய் அறிந்துகொண்டேன். அஃது அறநூல் கூறியவாறு திருமணம் செய்துகொண்ட, மேகலை அணிந்த, காமக்கிழத்தி யாகிய குதிரை அன்று. பெருமானே! ஏதுமற்ற உன் பெரும் பாணன் தூதாய்ப் போக, அவ்விடத்துப் பரத்தையருடனே ஏற்பட்ட மாறுபாட்டால், காற்றுப் போல் உன்னிடம் வந்து சேர்ந்துள்ள (பரத்தை) குதிரை அது. உன் பழைய நல்ல அழகினை அழிக்கின்ற அக்குதிரைமேல் இனி ஏறாதே! நாம் குதிரை ஏற்றத்தில் வல்லவர் என்று நீ உன்னைக் கருதிக்கொண்டு அக்குதிரைமீது ஏற விரும்புவாயின், அக்குதிரை மேலேயே ஏறித் திரி. இங்கு வாராதே! அக்குதிரையைச் செலுத்திடச் செல்."

கருத்து

தலைவ! நீ கண்ட குதிரைகளாய பரத்தையர் காத்திருப்பர்; உடனே அவரிடம் செல்.

விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன், தன் இல்லம் வந்த போது, 'எங்கே சென்றுவிட்டு வந்துள்ளாய்?' என்று தலைவி

கேட்டாள். 'நான் குதிரை ஏற்றம் பழகி வந்தேன்' என்று தலைவன் மாற்றம் உரைத்தான். அது கேட்ட தலைவி, தலைவனின் பரத்தமையை இருபொருள்பட - அஃதாவது, பரத்தையரை அனுபவித்தலை, தலைவன் குதிரையேற்றம் எனச் சிலேடை மொழியில் கூறி அவனை எள்ளி நகையாடினாள்.

குதிரைக்கும் பரத்தைக்கும் பொருந்துமாறு இரு பொருள் கொண்ட சொற்களில் இப்பாடல் எழுதப்பெற்றுள்ளது.

குதிரைக்குப் பூட்டப்பட்ட அணிகளெல்லாம் பரத்தைக்கும் பொருந்தும்படி தலைவி வருணித்தாள். தலைவனால் விரும்பப் படுபவளைப் பரத்தை என வெளிப்படையாய்க் கூறாமலே சுட்டிக் காட்டினாள். 'அப்பரத்தையினையே குதிரையாகக் கொண்டு என்றும் ஏறித் திரிவாய். இங்கு நில்லாதே; செல்' என்றும் கூறினாள்.

பரத்தைக்கும் குதிரைக்கும் பொருந்துமாறு பல்வேறு அணிகலன்கள் இப்பாட்டில் கூறப்பெற்றுள்ளன. அவை மகளிர் அணிகலன்களாய புல்லிகை, உத்தி, துஞ்சு, மேகலை, முக்காழ், சதங்கை, சிலம்பு, நீலமணிக் கண்டிகை ஆகியவையாகும்.

அக்காலத்தில் மூங்கில் உழக்கினையும், நாழியினையும் வண்ணங்களில் தோய்த்துக் குத்திக் குதிரையை அழகுபடுத்தி யுள்ளனர்.

குறிப்பு

குதிரையேற்றம் என்பது பரத்தையின் நலம் நுகர்தல் என்னும் பொருள் தரும் வகையிலும் சிலேடையாய்த் தலைவி கூறியிருப்பது நயம் மிக்கது.

சொற்பொருள்

1. ஏந்து எழில் மார்ப! - உயர்ந்த அழகினைக் கொண்ட மார்பனே; நின் வாய்ச்சொல் - உன் பேச்சு.
2. பாய்ந்து ஆய்ந்த - பரந்து அழகமைந்த; தானை - ஆடை; பரிதல் - கிழிதல்; ஆனா மைந்தினை - அளவு கடந்த வலிமை உடையை.
3. சாந்து - சந்தனம்; வேரை - வியர்வை கொண்ட; சுவல் தாழ்ந்த - கழுத்துப்பட்டைவரை தாழ்ந்துள்ள; கண்ணியை - தலை மாலையைக் கொண்டுள்ள.

5. ஏந்தி எதிர் - எதிர் எதிராய்; நீலம் - நீலமலர்; பிணைத்து அன்ன - கட்டப்பட்டது போன்ற.
6. வழங்கி வருவல் - பயன்படுத்தி (ஏறி) வருகின்றேன்.
8. கொய் சுவல் - கத்தரித்து அழகுபடுத்தப்பட்ட கழுத்துமயிர்
9. சிகழிகை - தலையில் அணியும் மாலை வகை.
10. வல்லிகை - குதிரையின் கழுத்தில் கட்டப்படும் ஒரு வடம்.
11. ஞாலுதல் - தொங்குதல்; புல்லிகை - மகளிர் தம் காதில் அணியும் ஓர் அணி.
12. மத்திகை - குதிரைச் சம்மட்டி, பூமாலை; கண்ணுறை - கண்ணால் காணும்படி வைக்கப்பட்ட பொருள் - குதிரையின் கண்ணுக்குத் தெரியுமாறு தொங்கவிடப்பட்ட சாட்டை.
13. உத்தி - சீதேவி உருவம் பொறிக்கப்பட்ட தலையணி.
13. காழ் - வடம்.
15. தமனிய மேகலை - பொன்னாலான மேகலை.
16. நூபுரம் - பாதக் கிண்கிணி
17. கிண்கிணி - காற்சதங்கை.
19. சுதை - சுண்ணாம்பு.
20. ஆதி - குதிரையின் நேரோட்டம்; கொளீஇய - கொண்டனை; அசையினை - இளைத்தாய்.
21. வாதுவன் - குதிரைப்பாகன்.
22. சேகா - சேவகா - சேவகன்; கைவாரூஉக் கொண்ட - கையிலே வாரும்போது உண்டாகும் கீறல்.
23. பெருமுற்றம் - பெரிய வீதி; மெய்க்கண் - உடம்பில்.
24. வீறியது - கீறியது.
25. கூர் உகிர் - கூர்மையான நகம்.
26. கோரமே - கொடுமையே, கோரம் - குதிரை.
27. வெதிர் - மூங்கில்; உழக்கு, நாழி - முகத்தலளவைக் கருவிகள்; சேதிகை - வண்ணம் தீட்டும் தொழில்.
30. *சீத்தை* - குணமில்லாது, *சீச்சீ*.
31. வியமமே - பாராட்டத்தக்கது.
36. ஆதி உரு - பழைய அழகு.
37. ஊரல் நீ - நீ ஏறாதே.
38. அச்சார் - அந்த (பரத்தையர்)ச் சார்பிலே.
39. திரி - திரிவாயாக.

தலைவி கூற்று

கலித்தொகை 97 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

மேற்பாடலுக்கு உரிய கூற்றில், தலைமகள் பரத்தையரைக் குதிரையாகக் கூறியது என்பதை இப்பாடலில் தலைமகள் பரத்தையரை யானையாகக் கூறிப் புலந்தது என மாற்றிக்கொள்க.

கூற்று விளக்கம்

பரத்தையர் சேரியிலிருந்து தன் மனைக்கு வந்த தலைவனோடு தலைவி ஊடல் கொண்டாள். பாணர், கூத்தர் முதலியோர் அவன் தூதாய் வந்து தலைவனைப் புகழ்ந்து பேசினர். அது தன் நெஞ்சைச் சுடுவதாய்க் கூறி, தலைவன் செய்த தவறுகள் முழுவதையும் தலைவி எடுத்துரைத்தது.

தலைவி சினங்கொண்டிருக்கிறாள். தலைவன் பொய்யாய், ‘யானைச் சண்டை பார்க்கப் போயிருந்தேன்’ என்று கூறுகின்றான். தலைவி பரத்தையரை யானை என்று குறிப்பிட்டாள்.

தலைவி

அன்னை, கடுஞ்சொல் அறியாதாய் போல,நீ
என்னைப் புலப்பது, ஒறுக்குவேன் மன்யான்;
சிறுகாலை இற்கடை வந்து, குறிசெய்த
அவ்வழி என்றும்யான் காணேன் திரிதர,
‘எவ்வழிப் பட்டாய்’ சமனாக, இவ்வெள்ளல்.

தலைவன்

முத்தேர் முறுவலாய்! நம்வலைப் பட்டதோர்
புத்தியானை வந்தது; காண்பான்,யான் தங்கினேன்.

தலைவி

ஒக்கும்,
அவ்வியானை வனப்புடைத்து ஆகலும் கேட்டேன்;
அவ்வியானைதான், சுண்ணநீறு ஆடி, நறுநறா நீருண்டு–
ஒண்ணுதல் யாத்த திலக அவிர்ஓடை,
தொய்யில் பொறித்த வனமுலை வான்கோட்டுத்
தொய்யகத் தோட்டிக் குழைதாழ் வடிமணி,

உத்தி பொறித்த புனைபூண் பருமத்து–
முத்துஏய்க் கும்வெண் பல்நகை திறந்து,
நன்னகர் வாயில் கதவ வெளில்சார்ந்து,
தன்நலம் காட்டித் தகையினால், கால்தட்டி வீழ்க்கும்,
தொடர்தொட ராக வலந்து; படர்செய்யும்
மென்தோள் தடக்கையின் வாங்கித்தற் கண்டார்
நலம்கவளம் கொள்ளும்; நகைமுக வேழத்தை
இன்றுகண் டாய்போல் எவன்எம்மைப் பொய்ப்பதுநீ?

எல்லா! கெழீஇ, தொடிசெறித்த தோளிணை, தத்தித்
தழீஇக் கொண்டு, ஊர்ந்தாயும் நீ.

குழீஇ, அவாவினால், தேம்புவார் இற்கடை ஆறா,
உவாஅணி ஊர்ந்தாயும் நீ.

மிகாஅது சீர்ப்பட உண்ட சிறுகளி ஏர்உண்கண்
நீர்க்குவிட்டு, ஊர்ந்தாயும் நீ.
சார்ச்சார் நெறிதாழ் இருங்கூந்தல் நின்பெண்டிர் எல்லாம்
சிறுபாக ராகச் சிரற்றாது, மெல்ல,
விடாஅது, நீஎம்இல் வந்தாய்;அவ் யானை
கடாஅம் படும்;இடத்து ஓம்பு.

தெளிவுரை

தலைவி

ஒரு நாள், சிறுகாலை எனப்படும் வைகறைப்பொழுதில், தலைவியின் இல்லத்தில் தலைவன் தங்கியிருந்தபோது பரத்தை ஒருத்தி அங்கே வந்தாள். 'நான் கூடுவதற்கு நீ குறித்துக் கூறிய இடத்திற்குச் சென்றேன். அங்கே உன்னைக் காணோம். நீ எங்குச் சென்றிருந்தாய்?' என்று அவனைக் கேட்டாள். அவன் மறுமொழி சொல்லாததால் கடுஞ்சொற்களைக் கூறித் தலைவனோடு ஊடிச் சினம் கொண்டாள். இந்த நிகழ்ச்சியை நினைவூட்டித் தலைவனிடம், "பரத்தையரோடு தொடர்பு வைத்துக்கொண்டு இங்கேயும் வருவது என்னை இகழ்வதாகவே அமையும். அதனால் என்னை நானே தண்டித்துக்கொள்வதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை" என்று தலைவி கூறித் தலைவனோடு ஊடல் கொண்டாள்.

தலைவன்

ஊடிய தலைவியை நோக்கி, "முத்துகளைப் போன்ற வெண்மை நிறம் பொருந்திய பற்களைக் கொண்டவளே! நான் விரித்த வலையில் புதிய யானை ஒன்று வந்து அகப்பட்டது. அதனைக் காண்பதற்குச் சென்று அவ்விடத்தில் தங்கினேன்" என்றான்.

தலைவி

(தலைவனை எள்ளி நகையாடும் வகையில்)

"நீ சொன்னது சரிதான். அந்த யானை மிகவும் அழகு கொண்டது என்றும் கேள்விப்பட்டேன். அந்தப் புதிய யானை அழகூட்டும் வண்ணச்சுண்ணம் பூசிக்கொண்டு, நல்ல மணமுள்ள கள்ளை உண்டு, நெற்றியிலே திலகமாகிய பொற் பட்டமும் அணிந்திருந்தது; தொய்யில் என்னும் ஓவியம் வரையப்பெற்ற முலைகளாகிய கொம்புகளைக்கொண்டு விளங்கியது எனவும் கேள்விப்பட்டேன். மேலும், அது தொய்யகம் என்னும் தலைக்கோலமும் பூண்டிருந்தது; காதுகளில் மணிகளாலான குழையணியையும் கொண்டதாய் விளங்கியது. திருவைப் பொறித்து வைத்த தலைப்பணி என்னும் கழுத்து மெத்தையினையும் கொண்டிருந்ததாய்க் கேள்விப்பட் டேன். அந்த யானை மேலும் என்ன செய்தது என்று உனக்குச் சொல்லவா?

"அது முத்தனைய வெண்மை நிறமுள்ள தன் பற்களைக் காட்டி, தன் நல்ல வீட்டின் வாயிற்கதவின் தூணிலே சாய்ந்து நிற்கும்; தன்னைக் கண்டாரைத் தடுமாற்றம் அடையவும் செய்யும்; தடுமாறித் தன் பக்கம் வந்தோரின் மென்மையான தோள்களைத் தன் தடக்கையால் தழுவி முத்தமும் கொடுக்கும்; அத்தகைய நகைமுக யானையை ஏதோ இன்றுதான் புதிதாய்க் கண்டவன்போல் என்னிடம் பொய் கூறுவது உனக்கு என்ன பயனைத் தரும் என்று நீ கருதுகிறாய்?

"அந்த யானையை நீயும் தழுவினாயா? வளையணிந்த அதன் இரு தோள்களிலேயும் தத்தித் தத்தி ஏறி நீயும் சவாரி செய்தாயா?

"உன்னைத் தழுவிய பரத்தையரை நீ மீண்டும் விரும்பாத போது அவர்கள் கண்ணீர் விட்டுத் தேம்புவர். அவர்களுடைய வீட்டின்முன் உள்ள வீதி வழியே உன் புதிய யானையின்மீதேறி அவர்கள் வருந்துமாறு ஊர்வலம் வந்தாயோ?

"அளவோடு நுகர்ந்து உன் அழகு கெடாதவாறு மகிழ்ச்சி கொண்ட மடந்தையரின் அழகிய கண்கள் நீர் நிறைந்து அழுமாறு இந்தப் புதிய யானையின்மீது ஊர்பவனாயிற்றே நீ.

"நீ எங்கெங்குச் சென்றாயோ, அங்கங்கெல்லாம் நெளிந்து நீண்ட கருங்கூந்தலைக் கொண்ட உன் பரத்தையர் இருக்கின்றனர். அவர்களெல்லாம் உன்னைச் சிறிதளவே புணரக் கிடைத்தமைக்காகச் சினம் கொள்ளாதிருக்க வேண்டும் எனக் கருதித் தப்பித்துக்கொள்வதற்காக, 'நான் என் இல்லத்திற்குச் சென்றிருந்தேன்' என்று நீ கூறியிருப்பதை மெய்ப்பிப்பதற்காக, இப்போது நீ இங்கு வந்துள்ளாய். அந்தப் புதிய யானையைக் கைவிட்டுவிட்டு நீ இப்படி வரலாமா? அது மதம் (கோபம்) கொண்டு உன்னைத் தன்மீது ஏற இயலாத பாகனாய் ஆக்கினாலும் ஆக்கிவிடுமே! ஆகவே, நீ உடனே அங்கே போய், முதலில் அதை உன் வசமாக்கிக்கொள்" என்று கூறித் தலைவி தலைவனை எள்ளி நகையாடினாள்.

கருத்து

"தலைவ! உன் புதிய பரத்தையைப் பிரிந்து நீ இங்கு வந்துள்ளாய். அவள் சினம் கொண்டு உன்னை ஒதுக்கினாலும் ஒதுக்கிவிடுவாள். அதனால் நீ உடனே அங்குச் செல்" என்று கூறித் தலைவி ஊடினாள்.

விளக்கம்

தலைவியின் வீட்டு வாயிலுக்கே பரத்தை வந்து கடுஞ்சொல் கூறியிருக்கிறாள். தலைவன் அதை அறியாதவன்போல இப்போது வீட்டின்முன் வந்து நிற்கிறான். அவனது அச்செயல் மூலம் அவன் தன்னை இகழ்வதாய்க் கருதுகிறாள்.

தலைவன் பரத்தையர் ஒரிருவரிடம் மட்டுமன்றிப் பரத்தையர் பலரோடு தொடர்பு கொண்டிருப்பதையும் தலைவி சுட்டிக் காட்டுகிறாள்.

யானையின் அணிகள், செயல்கள் ஆகியவையும், பரத்தையர் அணிகள், செயல்கள் ஆகியவையும் ஒன்றுக்கொன்று உருவகமாகக் கூறப்பட்டுள்ளன.

முன் பாடலில் பரத்தையையும் குதிரையையும் இணைத்துக் காட்டினார். இப்பாடலில் புதிய பரத்தையையும், புதிய யானையையும் தனித்தனியே சித்திரித்துக் காட்டி அவர்களுக்கு இடையே உள்ள ஒப்புமைத் தன்மை புலனாகுமாறு செய் துள்ளார்.

சொற்பொருள்

1. அன்னை - அத்தகையவன்.
2. ஒறுக்குவேன் - நொந்துகொள்வேன்.
3. சிறுகாலை - விடியற்காலை; இற்கடை - வீட்டுவாயில்.
4. திரிதர - திரிய.
5. சமனாக - ஓர் உணர்வும் இல்லாத நடுநிலைமை.
6. முத்தேர் - முத்து + ஏர் - முத்துகளைப் போன்ற அழகு.
7. புத்தி யானை - புது யானை.
8. ஒக்கும் - அது சரி.
9. வணப்பு - அழகு.
10. சுண்ணநீறு ஆடி - அழகூட்டும் வண்ணப்பூச்சுப் பூசிக்கொண்டு; நறு நறா நீர் - நல்ல மணம் கொண்ட கள்.
11. திலகம் - நெற்றிப்பொட்டு; அவிர்ஓடை - ஒளி வீசும் நெற்றிப்பட்டம்.
12. தொய்யில் - மகளிர் முலைகளில் எழுதப்படும் சந்தன வரிக்கோலம்; வான்கோடு - அழகிய கொம்பு.
13. தொய்யகம் - தலைக்கோலத்தில் ஓர் உறுப்பு; குழை - மகரக்குழை.
14. உத்தி - சீதேவி உருவம் பொறித்த தலை அணி; பருமம் - யானைக்கு முதுகிலிடும் மெத்தை.
15. நகை திறந்து - புன்முறுவல் காட்டி.
16. நல்நகர் - அகன்ற வீடு; கதவ - கதவு; வெளில் - தூண்.
17. நலம் - அழகு; தகை - அழகு; கால்தட்டி வீழ்க்கும் - கால் இடறச் செய்து வீழ்த்தும்.
18. வலந்து - வளைந்து; படர் - துன்பம்.
19. கையின் வாங்கி - கையால் தழுவி அணைத்து.
20. நலம் - அழகு; கவளம் - சோற்று உருண்டை; நகை முகம் - மலர்ந்த முகம்.

22. கெழீஇ - பொருந்தி; தோள்இணை தத்தி - தோள்களிலே தத்தி.
24. இற்கடை - வீட்டின் முன் உள்ள வீதி; ஆறா - வழியாய்.
25. உவா அணி - ஊர்வலம்.
27. நீர்க்கு விட்டு - கண்ணீர் விட்டு.
28. சார்ச் சார் - செல்லுமிடமெல்லாம்.
29. சிரற்றுதல் - சினம் கொள்ளுதல்.
31. கடாஅம் - மதம் (கோபம்); ஓம்பு - உன் வசமாக்கிக் கொள்.

தலைவி கூற்று

கலித்தொகை 98 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகன் ஆற்றாமையே வாயிலாகச் சென்றுழி, அவனைக் கண்டு, 'நீ தாழ்த்த காரணமென்' எனப் 'புதுப் புனலாடித் தாழ்த்தது' என்ன, தலைமகள், 'இன்ன புதுப்புனலே, ஆடியது' என நெருங்கிக் கூறியது. (தாழ்த்த - காலம் கடந்து வர; புதுப்புனல் ஆடி - புது வெள்ளத்தில் ஆடி; நெருங்கி - கண்டித்து.)

கூற்று விளக்கம்

பரத்தையர் வீட்டிற்குச் சென்ற தலைவன் தன் இல்லத்திற்குத் திரும்பி வந்தான். தலைவி, 'நீ காலம் கடந்துவரக் காரணம் என்ன?' என்று கேட்டாள். அவன், 'வையையில் புதுவெள்ளத்தில் ஆடினேன்; அதனால் காலம் கடந்தது' என்றான். 'நீ ஆடிய புதுவெள்ளம் இத்தகையதுதானோ?' என்று, அவன் பரத்தையரோடு புனலாடி வருவதைக் கண்டிக்கும் வகையில் தலைவி கூறியது.

தலைவி

யாரைநீ எம்இல் புகுதர்வாய்? ஒரும்
புதுவ மலர்தேரும் வண்டேபோல் – யாழ
வதுவை விழவணி வைகலும் காட்டினையாய்
மாட்டுமாட்டு ஓடி, மகளிர்த் தரத்தரப்,
பூட்டுமான் திண்தேர் புடைத்த மறுகுஎல்லாம்
பாட்டாதல் சான்றநின் மாயப் பரத்தைமை–

காட்டிய வந்தமை கைப்படுத்தேன், பண்டெலாம்
கேட்டும் அறிவேன்மன், யான்.

தலைவன்

தெரிகோதை அம்நல்லாய்! தேறியல் வேண்டும்–
பொருகரை வாய்சூழ்ந்த பூமலி வையை
வருபுனல் ஆடத் தவிர்ந்தேன்; பெரிதுஎன்னைச்
செய்யா மொழிவது எவன்?

தலைவி

ஒஒ! புனலாடி னாய்எனவும் கேட்டேன், புனல்ஆங்கே
நீள்நீர் நெறிகதுப்பு வாரும் அறலாக,
மாண்எழில் உண்கண் பிறழும் கயலாக,
கார்மலர் வேய்ந்த கமழ்பூம் பரப்பாக,
நாணுச் சிறைஅழித்து, நண்பகல் வந்தஅவ்
யாணர்ப் புதுப்புனல் ஆடினாய், முன்மாலைப்,
பாணன் புணையாகப் புக்கு.
ஆனாது, அளித்துஅமர் காதலோடு அப்புனல் ஆடி,
வெளிப்படு கவ்வையை யான்அறிதல் அஞ்சிக்
குளித்துஒழுகி னாய்எனவும் கேட்டேன்; குளித்துஆங்கே,
போர்த்த சினத்தால் புருவத் திரையிடா,
ஆர்க்கும் ஞெகிழத்தால் நன்னீர் நடைதட்பச்
சீர்த்தக வந்த புதுப்புனல் நின்னைக்கொண்டு,
ஈர்த்துய்ப்பக் கண்டார் உளர்.
ஈர்த்தது, உரைசால் சிறப்பின்நின் நீர்உள்ளம் வாங்கப்
புரைதீர் புதுப்புனல் வெள்ளத்தின் இன்னும்
கரைகண் டதூஉம் இலை.

தலைவன்

நிரைதொடீஇ! பொய்யாவாள் தானைப் புனைகழற்கால் தென்னவன்
வையைப் புதுப்புனல் ஆடத் தவிர்ந்ததைத்
தெய்வத்தின் தேற்றித் தெளிப்பேன்; பெரிதுஎன்னைச்
செய்யா மொழிவது எவன்?

தலைவி

மெய்யதை; மல்கும் மலர்வேய்ந்த மாயப் புதுப்புனல்

35 பல்காலும் ஆடிய செல்வுழி, ஒல்கிக்
கனைஞரும் இல்வழிக் கால்ஆழ்ந்து தேரோடு
இளமணல் உட்படல் ஓம்பு; முளைநேர்
முறுவலார்க்கு ஓர்நகை செய்து.

தெளிவுரை

தலைவி : *(தன் எதிரே வந்து நின்ற தலைவனை நோக்கி),*

'எம் வீட்டினுள் நுழைந்துள்ளவனே! நீ யார்?' (என்று கேட்கிறாள். மேலும்), புதுப் புது மலர்களை நுகரும் வண்டுபோல, நீயும் நாள்தோறும் புதுப் புதுப் பெண்டிரைத் தேடி ஓடி மணக் கோலத்திலேதான் விளங்குகிறாய். அவ்வவ் இடங்களுக்கும் ஓடிச் சென்று, நீ விரும்பிய பரத்தையரைக் கொண்டுவந்து சேர்க்க, உன் வலிய தேர் எல்லா இடங்களிலும் ஓடிக்கொண்டிருப்பதுபற்றி இந்த ஊரெங்கும் இதே பேச்சாய் இருக்கிறது. எல்லோரும் எப்பொழுதும் உன் பரத்தமைக்குணத்தைப்பற்றிப் பேசி அலர் தூற்றிக்கொண்டிருப்பதைக் கேள்வியுற்றிருக்கிறேன். அஃது உண்மையே என்பதை இப்பொழுது அறிந்தேன்.

தலைவன் : *(அது கேட்ட தலைவன்) தலைவியை நோக்கி,*

ஆராய்ந்தெடுத்த மாலையை அணிந்துள்ள அழகியே! நான் சொல்வதை நீ ஆராய்ந்து அறிக. கரைகளை மோதி, பூக்களுடன் பெருகி வருகின்ற வையை நீரைக் கண்டு, அந்நீருள் மூழ்கி விளையாடச் சென்றிருந்தேன். நான் செய்யக்கூடாததைச் செய்து விட்டதாய்ச் சொல்வது ஏன்?

தலைவி : *(அதைக் கேட்ட தலைவி),*

ஓஒ! நீ புனல் ஆடியதையும் கேள்வியுற்றேன். அந்தப் புனல், கருமணலை நீண்ட கூந்தலாகவும், கயல் மீன்களை அழகிய மையுண்ட கண்களாகவும், வெள்ளத்தில் மிதந்து செல்லும் மலர்களைக் கூந்தலில் சூடிய மலர்களாகவும் கொண்டு, நாணமாகிய கரையை இடித்துச் சென்றது. பகல் நேரத்தில் வந்த (பரத்தையராகிய) அந்தப் புது வெள்ளத்தில், முதல் நாள் மாலையில் தூது சென்ற பாணனாகிய தெப்பத்தைப் பற்றிக் கொண்டு ஆடினாய்.

மேன்மேலும் ஆர்வம் பொங்கும் காதலோடு நீ அந்தப் புனலில் ஆடியதால் அலர் தோன்றலாயிற்று. அச்செய்தியை நானும் அறிந்துவிடுவேனோ என்று அஞ்சி மூழ்கி மறைந்து நீராடினாய் என்றும் கேள்வியுற்றேன். அது பொறாமல் அந்தப் புதுவெள்ளம், சினத்தால் அலைகளாகிய புருவங்களை உயர்த்தி நோக்கி, காற்சிலம்பின் ஒலி ஆரவாரிக்குமாறு வந்து, உன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு சென்றதைக் கண்டோரும் உள்ளனர்.

அங்ஙனம், தன்னோடு இழுத்துச் சென்ற அப்புதுப்புனல், புகழமைந்த சிறப்பினைக் கொண்ட உன் உள்ளத்தைத் தன்னிடம் இழுத்துக்கொண்டுவிட்டதால், அந்தப் புனலை இன்னும் நீந்திக் கரை கடக்க உன்னால் இயலவில்லை என்றே நான் கருது கின்றேன்.

தலைவன் : (இவ்வாறு தலைவி தன்னை எள்ளி நகையாடு வதைக் கண்ட தலைவன் தலைவியை நோக்கி),

கை நிறையுமாறு வளையல் அணிந்திருப்பவளே! பொய்க் காத வாட்போர் வீரர்களையும், வெற்றிக் கழல்களையும் கொண்ட பாண்டியனது வையை நதிப் புதுப்புனலில்தான் நான் நீராடச் சென்றிருந்தேன். இதைச் சொல்லாலும், தெய்வத்தின் மேல் சூளுரை செய்வதாலும் தெளிவிப்பேன். ஆனால், நான் செய்யாத செயலை நீ பெரிதாய்க் கருதிப் பேசிக்கொண்டிருப்ப தால் ஒரு பயனும் ஏற்படப்போவதில்லை."

தலைவி :

(இருவரும் வாதாடிக்கொண்டிருப்பதால் பயன் ஏதுமில்லை என்பதை ஓரளவுக்குத் தெளிந்த தலைவி, தலைவனுக்கு அறிவுரை கூறுவாள்போல் கூறினாள்:)

நான் கூறியது உண்மையே! நிறைந்த மலர்களைச் சூடிய புதுவெள்ளத்தில் ஆடுதற்காகப் பலமுறையும் தேரேறிச் சென்றாய். அப்போது வரிசையாய் அமைந்ததும், வனப்பு மிக்கதுமான பற்களைக் கொண்ட பரத்தையர்க்கு மகிழ்ச்சி உண்டாக, உன்னை அவரிடம் செலுத்தும் பாணரோ, பாகரோ

இல்லாதபோது வலிவுள்ள உன் தேர்ச்சக்கரம் மணலுள் சிக்கிக்கொள்ளாதவாறு காத்துக்கொள்.”

கருத்து

‘தலைவ! பரத்தையரோடு புனலாடி வந்த நீ, என்னிடம் பொய்யுரைப்பது ஏன்?’ என்று கூறித் தலைவி புலந்தாள்.

விளக்கம்

தலைவன் பரத்தையரோடு வையைப் புனலாடி வீடு திரும்பினான். ‘காலம் தாழ்த்தது ஏன்?’ என்று கேட்டாள், தலைவி. ‘வையையில் பெருகி வரும் புதுப்புனலில் நீராடி வந்தேன்’ என்றான், தலைவன். ‘அப்படியா? நீ நீராடி வந்த ஆற்றுக்குக் கரிய நெடுங்கூந்தலும், மையுண்ட கண்களும், கூந்தலில் சூடப்பட்ட மலர்களும் உண்டோ?’ என்று கேட்டுத் தலைவன் வையைப் புனலில் பரத்தையரோடு புனலாடி வந்ததை வெளிப்படுத்தினாள். தலைவனோ, தான் பரத்தையரோடு புனலாடவில்லை; தெய்வசாட்சியாக வேண்டுமானாலும் தெளிவிப்பேன் என்றான். தலைவி, ‘வாதாடிக்கொண்டிருப்பதால் என்ன பயன்? இனியேனும் மாயப் பரத்தையரின் புன்சிரிப்பில் மயங்கிப் புகழைக் கெடுத்துக்கொள்ள வேண்டா’ என்று கண்டிக்கும் வகையில் கூறினாள்.

இவ்வாறு கண்டித்துக் கூறினாள் எனினும், ஊடல் நீங்கித் தலைவனைக் கூடுவாள் எனக் கொள்க.

குறிப்பு :

வையையில் புதுப்புனல் பெருகும்போது ஆடவரும் மகளிரும் கைகோத்து விளையாடும் ‘நீராடல் விழா’ நடைபெறுவது வழக்கம்.

சொற்பொருள்

1. யாரை நீ - நீ யார்?; புகுதர்வாய் - புகுந்து வருவது; யாழ, ஓரும் - அசைச்சொற்கள்.
2. புதுவ - புதிய.
3. வதுவை விழவு - திருமண விழா; வைகலும் - நாள்தோறும்.
4. மாட்டு மாட்டு ஓடி - இடந்தோறும் இடந்தோறும் சென்று; தர - கொண்டுவந்து கொடுக்க.

5. பூட்டு மான் - குதிரை பூட்டப்பட்டுள்ள; மறுகு - தெரு.
6. பாட்டு - பேச்சு.
7. கைப்படுத்தேன் - நன்கு அறிந்துகொண்டேன்.
9. தேறியல் - ஆராய்ந்து அறிதல்.
10. பூமலி - பூக்கள் நிறைந்த; வையை - வையை ஆறு.
11. தவிர்ந்தேன் - சென்றேன்.
12. செய்யா மொழிவது - செய்யாததைச் செய்வதாய்ச் சொல்வது.
14. நெறி - அடர்ந்த, நெளிந்த; கதுப்பு - கூந்தல்; வாரும் - கோதிவிடும்; அறல் - கருமணல்.
15. பிறழும் - துள்ளும்; கயல் - கயல் மீன்.
16. கார் - கார் காலம்.
17. சிறை - கட்டுப்பாடு.
18. யாணர் - புது வருவாய்.
19. புணை - தெப்பம்.
20. ஆனாது - குறையாது.
21. கவ்வை - ஆரவாரம்.
22. குளித்து - மறைந்து.
24. ஞெகிழம் - சிலம்பு; தட்ப - தடுக்க.
26. ஈர்த்துய்ப்ப - இழுத்துக்கொண்டு செல்ல.
27. வாங்க - நீக்க.
30. பொய்யாவாள் - வெற்றி பெறுதலில் தவறாதவாள்; தானை - படை; தென்னவன் - பாண்டிய மன்னன்.
31. தவிர்ந்ததை - சென்றிருந்ததை.
32. தெளிப்பேன் - தெளிவிப்பேன்.
34. மெய்யதை - நீர்ப்பரப்பினை; மல்கும் - நிறைக்கும்.
35. செல்வுழி - செல்லும்போது; ஒல்கி - தளர்ந்து.
36. களைஞரும் - நீக்குவாரும்; கால் - சக்கரம்.
37. உட்படல் - புதைதல்; ஓம்பு - பாதுகாத்துக்கொள்; முளைநேர் - மூங்கில் முளையை ஒத்த.
38. முறுவலார் - புன்சிரிப்பைக் கொண்ட பரத்தையர்.

தோழர் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 144 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தோழி, தலைமகளின் சேடிகளிலொருத்திக்குச் செவ்வணி அணிந்து விட்டமையினைத் தலைமகற்குப் பாங்காயினார் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையரிடம் சென்ற தலைவனிடம் தலைவி பூப்புற்றதனைத் தெரிவிக்க, தலைவியின் விருப்பப்படி தோழி, தம் தோழியருள் ஒருத்திக்குச் செவ்வணி அணிவித்துத் தலைவனிடம் அனுப்பி வைப்பது வழக்கம். அவ்வாறு அனுப்பப்பட்டவளைக் கண்ட தலைவன் தோழர்கள், அவளைப்பற்றித் தலைவனிடம் கூறியது.

அரத்தம் உடீஇ அணிபழுப்பப் பூசிச்
சிரத்தையால் செங்கழுநீர் சூடிப் – பரத்தை
நினைநோக்கிக் கூறினும் நீமொழியல் என்று
மனைநோக்கி மாண விடும்.

தெளிவுரை

"தலைவ! தலைவிக்குத் தோழியராய் உள்ளவர்களுள் ஒருத்திக்குச் செம்பட்டினை உடுத்தச் செய்துள்ளனர்; அவள் அணிந்திருக்கும் சிவந்த அணிகளெல்லாம் நிறம் மாறுமாறு செஞ்சாந்து அணிவித்துள்ளனர்; மிக்க கருத்தோடு செங்கழு நீர்ப்பூக்களைச் சூடியுள்ளனர். 'தலைவன் விரும்பும் பரத்தை உன்னைப் பார்த்து வசைமொழிகள் கூறினாலும் அவற்றிற்கு நீ எப்பதிலும் சொல்லாது திரும்பிவிடு' என்று அவளிடம் கூறி அவளைப் பரத்தையின் வீடு நோக்கி அனுப்பியுள்ளனர். மகப்பேற்றால் உன் குலம் விளங்கி மேன்மையுற வேண்டுமென் பதற்காகவே இவ்வாறு செய்துள்ளனர். இதனை நீ அறிக" என்று தலைவனுக்குத் தோழர்கள் அவனிடம் கூறினர்.

கருத்து

தலைவி, செவ்வணி அணிந்த சேடியை உன்னிடம் அனுப்பியிருப்ப தால், நீ உடனே உன் இல்லம் திரும்பு.

விளக்கம்

தலைவி பூப்புற்றமையினைப் பரத்தையிற் பிரிந்து சென்றுள்ள தலைவன் அறிந்துகொள்ளும்படியாக, தலைவிக்குத் தோழியராய் உள்ள ஒருத்திக்குச் செவ்வணி அணிந்து விடுதலும், அதனைக் கண்ட தலைவன், வீட்டிற்குத் திரும்பி வந்து தலைவியை மகிழ்விப்பதும் அக்கால மரபு. பூப்புற்ற நான்காம் நாள்முதல் பன்னிரண்டாம் நாள்வரை கருவுறும் காலமாதலின், அக்காலத்தே தலைவனும் தலைவியும் கூடி வாழ்தல் இன்றியமையாதது.

சொற்பொருள்

1. அரத்தம் - செம்பட்டு; உடீஇ - உடுத்து; அணி - அணிந்துள்ள அணிகளெல்லாம்; பழுப்ப - நிறம் மாற; பூசி - செஞ்சாந்து அணிந்து.
2. சிரத்தையால் - மிக்க கருத்தோடு; செங்கழுநீர் - சிவந்த ஆம்பல் மலர்கள்.
3. நினை - உன்னை; கூறினும் - எது கூறினாலும்; மொழியல் - எதுவும் பேசாதே.
4. மனை - (பரத்தை) வீடு; மாண - மகப்பேற்றால் உன் குலம் விளங்கி மேன்மையுறும்படியாக.

அறிவர் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 149 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாராது ஊடிய தலைமகள்மாட்டு ஊடிய தலைமகனை அறிவர் கழறியது.

(உணர்ப்பு - உணர்த்துதல்; தலைவன் பரத்தமை கருதித் தலைவி அவனோடு ஊடல் கொண்டாள். தான் அத்தகைய தவறு எதுவும் செய்யவில்லை என்று தலைவன் தன் சொற்களாலும் செயல்களாலும் தெளிவித்தான். உணர்ப்பு வயின் வாரா ஊடல் - உணர்த்தியும் தணியப்பெறாத தலைவியின் ஊடல்; கழறல் - இடித்து அறிவுரை கூறல்; அறிவர் - நற்பொருளைக் கற்பிக்கும் பெரியோர்.)

கூற்று விளக்கம்

தலைவனிடம் பிடிவாதமாய் ஊடல் கொண்டு ஒழுகினாள், தலைவி. அவள் பிடிவாதத்தைக் கண்டு தலைவன் பிரிந்து போனான். அதுகண்ட அறிவர், தலைவி அவன்மீது கொண்டுள்ள உண்மை அன்பை விளக்கி, அவனை அவளுடன் வாழுமாறு கூறியது.

புண்கிடந்த புண்மேல்நுன் நீத்தொழுகி வாழினும்
பெண்கிடந்த தன்மை பிறி(து)அரோ – பண்கிடந்து
செய்யாத மாத்திரையே செங்கயல்போல் கண்ணினாள்
நையாது தான்நாணும் ஆறு.

தெளிவுரை

'தலைவ! தன்னைத் தலைவன் பிரிந்திருக்கிறான் என்னும் ஒரு துன்பம் தலைவிக்கு ஏற்பட்டுள்ள முதல் புண்; தலைவன் பிரிந்து பொருள் கருதியோ, போர் கருதியோ செல்லாமல் பரத்தையை விரும்பிச் சென்றிருக்கிறான் என்பது அவளுக்கு ஏற்பட்டுள்ள இன்னொரு புண். உன் நடத்தையால், அவள் துன்பத்திற்கு மேல் துன்பம் உற்றாலும், அவள் இருக்கும் தன்மை வேறு. உன் பிரிவால் அழுதழுது, சிவந்த மீன்களைப் போன்ற கண்களைக் கொண்ட அவள், நம்பிக்கை இழக்காமல், தன்னைப் பிரிந் திருக்கும் தலைவனாகிய நீ நாணுமாறு பண்புடன் இருக்கிறாள்' என்று சான்றோர், தலைவனிடம் கூறி, அவனை உடனே தலைவியிடம் சேருமாறு கூறினர்.

கருத்து

தலைவன் தவறு பல செய்தாலும் தலைவி பொறுமையுடன் இருக்கிறாள். ஆதலின், தலைவன் அவளை உடனே சென்றடைய வேண்டும் எனச் சான்றோர் தலைவனிடம் இடித்துரைத்தனர்.

சொற்பொருள்

1. புண் - (பிரிந்துள்ள) துன்பம்; மேல் புண் - பிரிந்ததுமின்றிப் பரத்தையர் வீட்டிற்குச் சென்றதால் ஏற்பட்ட துன்பம்; நீத்து - பிரிந்து.
2. பெண் - உன் தலைவி; கிடந்த - பொருந்தி இருக்கும்; தன்மை - போக்கு; பிறிது - வேறு (பெண்மைக்குரிய பெருமைக்குணம் பொருந்தியிருக்கும்); பண் கிடந்து - உன் பெருமைபற்றிய பாடல்களை.

3. செய்யாத - பாணர்கள் பாடாத; மாத்திரை - அளவிலேயே; செங்கயல் - சிவந்த கயல்மீன்.
4. நையாது - ஊடலை மேற்கொண்டு வருந்தாமல்; நாணும் - வெட்க முறும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 58 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

உணர்ப்புவயின் வாரா ஊடற்கண் புலந்த தலைமகற்குத் தோழி கூறியது.

(உணர்ப்புவயின் வாரா ஊடல் - தலைவன் தான் தவறு செய்யாதவன் என உணர்த்தியும் தலைவி ஊடல் நீங்காதிருத்தல்.)

கூற்று விளக்கம்

தான் தவறு செய்யவில்லை என்று உணர்த்தியும், உள்ளம் தெளிந்து தலைவி தன் ஊடலை நீக்காதபோது, தானும் அவளோடு ஊடுவதாய்த் தலைவன் தோற்றம் காட்டிய பொழுது, அவனிடம் தோழி கூறியது.

விண்டு அன்ன வெண்ணெல் போர்வின்
கைவண் விராஅன், இருப்பை அன்ன,
இவள்அணங்கு உற்றனை போறி;
பிறர்க்கும் அனையையால்; வாழி நீயே!

தெளிவுரை

மலைபோல் உயர்ந்த வெண்ணிற நெற்போர்களை மிகுதி யாய்க் கொண்ட 'விரான்' என்னும் வள்ளல் தன்மை மிக்க தலைவனுக்குரியது, 'இருப்பை' என்னும் ஊர். அந்த ஊரை நிகர்த்த நலங்கொண்டவள், என் தலைவி! நீ அவளால் மிகவும் துன்பமுற்றவன்போல உள்ளாய்! நீ மணந்து கொண்ட இவளால் மட்டுமன்றி, நீ உறவு கொண்டுள்ள பரத்தையர் பலரிடமும் இப்படித்தான் துன்புற்றிருப்பாய்! நீ வாழ்க!

கருத்து

உன் வருத்தமும் எம்மை மயக்கச்செய்யும் ஒரு செயலே.

விளக்கம்

தலைவன் வருத்தமுற்றவன்போல் இருப்பதால், பிற பெண்களிடத்திலும் இவ்வாறுதான் இருந்திருப்பான் என்று முடிவு கட்டி, அவன் புலந்துகொள்வது சரியன்று என்று தோழி காரணம் காட்டுகிறாள்.

குறிப்பு

நெல்லினை நிரம்பப்பெற்ற இருப்பை எனும் ஊரினைப் போன்றவள் தலைவி என்றதால், அவள் நற்பண்புகள் நிறைந்தவள் என்பதும், அவளோடு ஊடுதற்குரிய காரணம் அவனிடம் எதுவுமில்லை என்பதும் உணர்த்தப் பெற்றன.

சொற்பொருள்

1. விண்டு - மலை; போர்வின் - போர்களைக் கொண்ட.
2. கைவண் - வள்ளல் தன்மை மிக்க கையைக் கொண்ட; விரான் - வள்ளல்களுள் ஒருவன்; இருப்பை - அவ்வள்ளலின் ஊர்.
3. இவள் - தலைவியால்; அணங்கு உற்றனை - துன்பமுற்றாய்; போறி - போல உள்ளாய்.
4. பிறர்க்கும் - பிற பெண்டிரிடத்தும்; அனையை - அதே தன்மையை உடையாய்.

தோழி கூற்று

நாலடியார் 391 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : மருதம்

கூற்று

தலைமகளின் ஊடல் தணிப்பான் வேண்டித் தோழி தலைமகளிடம் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவி தலைவனிடம் ஊடல் கொண்டிருந்ததைக் கண்ட தோழி, தலைவியின் ஊடலைத் தீர்க்குமாறு தலைவனுக்குக் கூறியது.

முயங்காக்கால் பாயும் பசலை;மற்(று) ஊடி
உயங்காக்கால் உப்(பு)இன்றாம் காமம்; – வயங்(கு)ஓதம்
நில்லாத் திரைஅலைக்கும் நீள்கரைத் தண்சேர்ப்ப!
புல்லாப் புலப்பதோர் ஆறு.

தெளிவுரை

தெளிந்த அலைகள் ஓயாது மோதுதற்கு இடமான நீண்ட குளிர்ச்சி பொருந்திய கடற்கரைக்குத் தலைவனே! காதலனுடன் கூடாதபோது மேனி எங்கும் பசலை பரவும்; ஊடல் கொண்டு வருந்தாவிட்டால் காதலானது உணவில் உப்பில்லாததுபோலச் சுவையில்லாமல் போகும். எனவே கூடி, ஊடுவதே வழி.

கருத்து

காமத்திற்கு இன்பம் ஊடுதல்; அவ்வூடலுக்கு இன்பம் கூடித் தழுவுதல் ஆம்.

விளக்கம்

தலைவி ஊடல் கொண்டிருப்பது காதலுக்கு ஒருவகையில் இன்பமே; ஆயினும், அவ்வூடல் புணர்ச்சியில் முடிய வேண்டும். அப்பொழுதுதான் ஊடலின் பயனைப் பெற்று இன்பம் துய்க்க முடியும். இந்த இன்பத்தைத் துய்க்க, தலைவி கொண்டுள்ள ஊடலைத் தீர்க்குமாறு தோழி தலைவனுக்குக் கூறுகிறாள்.

குறிப்பு

ஊடுதல் காமத்திற்கு இன்பம்; அதற்கின்பம் கூடி முயங்கப் பெறல்.

சொற்பொருள்

1. முயங்குதல் - தழுவுதல்; பாயும் - பரவும்.
2. உயங்குதல் - வருந்துதல்; உயங்கு - தெளிந்த; ஓதம் - கடல்.
3. நில்லா - ஓயாது; திரை - அலை; அலைக்கும் - மோதும்.
4. புல்லுதல் - தழுவுதல்; ஆறு - வழி.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 100 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் நேர்தற்பொருட்டு முகம்புகுவான் வேண்டி இயற்பழித்துழித் தலைமகள் இயற்பட மொழிந்த திறம் தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி, தலைவியின் இசைவினைப் பெறுவதற்காகத் தலைவன் இயல்பைப் பழிப்பவள்போல் பேசத் தொடங்கினாள். ஆனால், தலைவி அதனை மறுத்துத் தலைவன் இயல்பைப் புகழ்ந்தாள். தலைவியின் இச் சிறப்பைத் தோழி தலைவனிடம் கூறியது.

புனலாடு மகளிர் இட்ட ஒள்இழை,
மணல்ஆடு சிமையத்து எருமை கிளைக்கும்
யாணர் ஊரன் மகள்இவள்;
பாணர் நரம்பினும் இன்கிள வியளே.

தெளிவுரை

நீராடும் மகளிர் தம் அணிகலன்களைத் தாம் நீராடுவதற்கு முன்பு மணலின்மேல் வைத்துச் செல்வர். காற்று வீசுவதால் அவ்வணிகலன்களை மணல் மூடி மறைத்து மேடாக்கிவிடும். அம்மணல்மேடுகளை எருமைகள் தங்கள் கொம்பாலும் காற் குளம்பாலும் கிளறி அவ்வணிகலன்களை வெளிப்படுத்தும். அத்தகைய ஊருக்குத் தலைவன் மகள், தலைவி. இவள் சொற்கள் பாணர்கள் மீட்டுகின்ற யாழ் இசையைக் காட்டிலும் இனிமை யானவை.

கருத்து

என் தலைவி என்றும் இனியனவே பேசுபவள்.

விளக்கம்

புனலாடும் மகளிர், நீராடும்போது தம் அணிகலன்கள் நீரில் வீழ்ந்துவிடாதிருக்க, அவற்றை மணல்மேட்டில் வைத்துவிட்டுச்

செல்வர். வீசப்படும் காற்றால் எழும்பும் மணல் தொகுதிகள் அணிகலன்கள்மீது நிறைந்து மூடப்பட்டுவிடுகின்றன. அதனால், நீராடி வெளிவந்த மகளிர் அணிகலன்களைக் காணாது வருந்துவர். அப்போது அங்கிருந்த எருமைகள், மூடப்பட்ட மணலைக் கிளற, அணிகலன்கள் வெளிப்படும்.

மகளிர் தம் அணிகலன்களைச் சிறிதளவு நேரம் இழந்து கவலையுறினும், மீளவும் அவற்றினைப் பெற்று மகிழ்வர். அவ்வாறே சில நாள் உன்னைப் பிரிந்து வருந்தினாலும், மீளவும் பெறுவோம் என உறுதியாய் நம்பிக்கை கொண்டதனால், உன் வரவை உவந்து ஏற்று இனிய சொல் கூறினள் என்று தலைவியின் குடிப் பெருமையினைத் தோழி போற்றுகிறாள்.

குறிப்பு

தலைவனைத் தலைவியோடு கூட்டவே தோழி இயற்பழித்தாள். அவள் எண்ணம் ஈடேறும் வகையில் தலைவி இயற்பட மொழிந்தது தோழிக்கு இன்பமளிக்கிறது.

சொற்பொருள்

1. இட்ட - கழற்றி வைத்த; ஒள்இழை - ஒள்ளிய அணிகலன்.
2. மணல் ஆடு சிமையம் - மணலால் மூடப்பட்ட மேடு; கிளைக்கும் - கிளறும்.
4. நரம்பினும் - யாழினும்; இன் - இனிய; கிளவியள் - சொற்களைக் கொண்டவள்.

தலைவி தலைவனை ஏற்க உடன்படல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 12 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

உழையர் நெருங்கிக் கூறிய திறமும் தனது ஆற்றாமையும் நினைந்து, வாயில் நேரக் கருதிய தலைமகள், பரத்தையர்க்குப் பின்பும் அவன் சிறப்புச் செய்தான் என்பது கேட்டுப் பொறாளாய்க் கருத்தழிந்து தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையரை நீங்கி வந்த தலைவனை ஏற்றுக்கொள்ளுமாறு வாயில்கள் சொன்னதற்கு இணங்கியும், தன் ஆற்றாமைக்கு ஆட்பட்டும் அவனை ஏற்றுக்கொள்ளக் கருதினாள், தலைவி. ஆனால், அவன் மீண்டும் பரத்தை யர்க்கே அன்பு செய்தான் எனக் கேட்டுத் தலைவி தனக்குள் சொல்லியது.

கரைசேர் வேழம் கரும்பில் பூக்கும்
துறைகேழ் ஊரன் கொடுமை நன்றும்
ஆற்றுக தில்ல; யாமே;
தோற்க தில்லஎன் தடமென் தோளே.

தெளிவுரை

கரையோரத்தே இருக்கும் வேழக்கரும்பு, வயலிலுள்ள கரும் பினைப் போலவே வெண்ணிறப் பூக்களைப் பூக்கின்ற ஊரினைக் கொண்டவன், தலைவன். அவனது பிரிவின் கொடுமையினை யாம் மிகவும் பொறுத்து ஆற்றியிருக்கிறோம்; ஆனால், பெருமை யினையும் மென்மையினையும் கொண்ட எம் தோள்களோ, அப்பிரிவினை ஆற்ற இயலாதனவாய்த் தோற்று மெலிகின்றன; அவை அவ்வாறே மெலியட்டும்.

கருத்து

'தலைவனை ஏற்றுக்கொள்ளக் கருதினேன். அவனோ மீண்டும் பரத்தையரை நாடுகிறானே!'

விளக்கம்

வேழமும் கரும்பும் ஒரே நிறமான வெண்ணிறத்தில் பூக்கும். இவ்வாறு பூத்தலிலே அவற்றுக்கிடையே உயர்வு தாழ்வு இல்லை. ஆனால், வேழப்பூ, கரும்புப்பூ ஆகாது. அதேபோலத் தலைவியும் பரத்தையும் இன்பம் துய்த்தற்குரியரே; ஆயினும், கற்பினைக் கொண்ட தலைவிக்குக் கற்பில்லாப் பரத்தை ஈடாக மாட்டாள்.

சொற்பொருள்

1. கரை சேர் - கரையிலே பொருந்தியிருக்கிற; வேழம் - வேழக்கரும்பு; கரும்பில் - வயற்கரும்பினைப் போலவே.
2. நன்றும் - மிகவும்.
3. ஆற்றுக - பொறுத்திருப்போம்.
4. தோற்க - மெலிகின்றன.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 36 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தான் வாயில் நேரும் குறிப்பினள் ஆனமை அறியாது, தோழி வாயில் மறுத்துழி, அவள் நேரும் வகையால் அவட்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனால் அனுப்பப்பட்ட பாணர் முதலான தூதர்களுக்கு உடம்பட்டு வாயில் நேரத் தலைவி எண்ணியிருந்தாள்; ஆனால், தோழி, தலைவியின் மனக் கருத்தை அறியாதவளாய் வாயில் மறுத்தாள். அப்போது, தோழியும் தன் கருத்துக்கு இசையுமாறு, தலைவி அவளிடம் தெளிவுபடுத்திக் கூறியது.

அம்ம வாழி, தோழி! ஊரன்
நம்மறந்து அமைகுவன் ஆயின், நாம்மறந்து
உள்ளாது அமைதலும் அமைகுவம் மன்னே
கயல்எனக் கருதிய உண்கண்
பயலைக்கு ஒல்கா ஆகுதல் பெறினே.

தெளிவுரை

தோழியே! வாழ்க! நான் கூறுவதைக் கேள். நம் தலைவன் நம்மை மறந்து, பரத்தை வீட்டில் தங்குகிறான். கயல்மீன்கள் போன்ற மையுண்ட நம் கண்கள் பசலை பாய்ந்து தளர்ச்சியுற வில்லை என்றால், அவனை மறந்து, அவன் நினைவே இல்லாமல் இருந்துவிட நம்மாலும் இயலும்.

கருத்து

தோழியே! என் கண்கள் தலைவன் பிரிவால் பசலை அடைந்து விடுகின்றனவே; எனவே, அவனை ஏற்பதே நல்லது.

விளக்கம்

'நம்மை மறந்த தலைவனை நாமும் மறந்து வாழ இயலும். ஆனால், என் கண்கள் பசலை பாய்ந்து சுருங்கி என் ஆற்றாமையை வெளிப்படுத்திவிடுகின்றனவே. எனவே, தலைவனை வரவிடுதலே ஏற்றது' என்று வாயில் மறுத்த தோழியிடம் தலைவி கூறினாள்.

சொற்பொருள்

2. நம் மறந்து - நம்மை மறந்து; அமைகுவன் ஆயின் - பரத்தைய ரிடத்துப் பொருந்துவானாயின்; நாம் மறந்து - நாமும் அவனை மறந்து.
3. உள்ளாது - நினையாது; அமைகுவம் - அமைந்திருப்போம்.
4. கயல் - கயல் மீன்; உண்கண் - மையுண்ட கண்.
5. பயலைக்கு - பசலை நோய்க்கு; ஒல்கா ஆகுதல் - சுருங்காதிருத்தல்; பெறின் - பெற்றால்.

தலைவி கூற்று

அகநானூறு 66 **செல்லூர்க் கோசிகன் கண்ணனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்த தலைமகற்கு வாயிலாய்ப் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் இல்லம் சென்ற தலைவன், தன் வீடு திரும்பினான்; ஊடியிருந்த தலைவியின் ஊடலைத் தீர்க்கத் தோழியின் உதவியை நாடினான். தோழி, தலைவியிடம் சென்று தலைவனை ஏற்குமாறு கூறியபோது, தலைவி தோழியிடம் கூறியது.

'இம்மை உலகத்து இசையொடு விளங்கி,
மறுமை உலகமும் மறுஇன்று எய்துப,
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்ம லோர்'எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம்– தோழி!
நிரைதார் மார்பன் நெருநல் ஒருத்தியொடு
வதுவை அயர்தல் வேண்டி, புதுவதின்,
இயன்ற அணியன், இத்தெரு இறப்போன்
மாண்தொழில் மாமணி கறங்க, கடைகழிந்து,
காண்டல் விருப்பொடு தளர்தளர்பு ஓடும்
பூங்கண் புதல்வனை நோக்கி, 'நெடுந்தேர்
தாங்குமதி வலவ'என்று இழிந்தனன், தாங்காது,
மணிபுரை செவ்வாய் மார்பகம் சிவணப்
புல்லிப் பெரும, 'செல்இனி, அகத்து'எனக்
கொடுப்போற்கு ஒல்லான் கலுழ்தலின், 'தடுத்த
மாநிதிக் கிழவனும் போன்ம்'என மகனொடு,
தானே புகுதந் தோனே, யான்அது
படுத்தனென் ஆகுதல் நாணி, இடித்து,'இவன்
கலக்கினன் போலும்,இக் கொடியோன்'எனச்சென்று
அலைக்கும் கோலொடு குறுகத் தலைக்கொண்டு

இமிழ்கண் முழவின் இன்சீர் அவர்மனைப்
பயிர்வன போலவந்து இசைப்பவும், தவிரான்,
கழங்குஆடு ஆயத்து அன்றுநம் அருளிய
பழங்கண் ணோட்டமும் நலிய,
அழுங்கினன் அல்லனோ அயர்ந்ததன் மணனே.

தெளிவுரை

'பகைவரும் விரும்பும் நிறைவான அழகினைக் கொண்ட மக்களைப் பெற்ற சிறப்புடையோர், இவ்வுலகத்தில் புகழோடு விளங்குவதோடு, மறுமையிலும் இன்பத்தை அடைவர்' எனப் பெரியோர் கூறும் பழைய மொழிகளெல்லாம் உண்மையே என்பதைக் கண்கூடாய், என் அனுபவத்திலேயே அறிந்தேன்.

வரிசையாய் அமைந்த மாலையைத் தரித்த மார்பினனாய நம் தலைவன், நேற்றுப் பிறள் ஒருத்தியோடு சேர விரும்பி, புதிதாய் ஒப்பனை செய்துகொண்டு, நம் வீட்டுத் தெருவினைக் கடந்து சென்றனன். அவனுடைய தேரின் மணி ஒலி கேட்டுப் பூப் போலும் கண்களைக் கொண்ட புதல்வன் தன் தந்தையைச் சென்றடைய விரும்பி, தளர் நடையிட்டு ஓடிவருதலைத் தலைவன் கண்டான். உடனே, 'வலவனே! தேரைச் சற்று நிறுத்து' என்று கூறித் தேரினின்றும் இறங்கி, மகனைத் தூக்கிப் பவளமணி போன்ற அவன் சிவந்த வாய் தன் மார்பில் பொருந்து மாறு தழுவி அணைத்துக்கொண்டான். பிறகு, அவனைக் கீழே இறக்கிவிட்டு, 'வீட்டுக்குள் செல்' என்று கூறினான். புதல்வன் அதற்குடன்படாது அழுது தடுத்ததால், 'நீ குபேரன் போன்றவன் அல்லனோ?' என்று பாராட்டியபடி இல்லத்துள் புகுந்தான்.

நான்தான் புதல்வனைத் தூண்டிவிட்டு அவன் பயணத்தைத் தடுத்ததாய் அவன் கருதிவிடக்கூடாதே என்று நாணமுற்று, 'இக்கொடியோன் உங்களைக் கலக்கிவிட்டானோ?' என்று கூறிக்கொண்டு, மகனை அடிப்பதற்கு ஒரு கோலுடன் சென்றேன். அப்பொழுது தலைவன் என்னைத் தடுத்துப் புதல்வனை அணைத்துக்கொண்டான். அந்நிலையில் அவன் செல்லவிருந்த (பரத்தை) வீட்டிலிருந்து அவனை அழைக்கும் முழவொலி கேட்டது. அதைக் கேட்ட தலைவனுக்கு, களவுக் காலத்தில் தோழியர் கூட்டத்திடையே வந்து நம்மை

இன்புறுத்திய பழைய நினைவெல்லாம் அவனுக்குத் தோன்றிய தால், மனச்சாட்சி உறுத்தவே, பரத்தை வீட்டுக்குச் செல்வதை விட்டுவிட்டான். "இத்தகைய இயல்பு கொண்ட தலைவனை நாம் ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும்" என்று தலைவி தோழி யிடம் குறிப்பாய்த் தன் இசைவைத் தெரிவித்தாள்.

கருத்து

'பரத்தையர் அழைக்கும் குறிப்பினை அறிந்தும் தலைவன் அங்குச் செல்லாதிருக்கிறான். இனியும் வெறுப்புக் கொள்ளாது அவனை ஏற்றுக்கொள்வதே முறை' எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

விளக்கம்

தலைவியைப் பிரிந்து பரத்தையரின் மனை நாடித் தலைவன் தேரேறிச் சென்றான். அப்போது அவன் மகன் அவனைக் கண்டு அருகே ஓடி வர, தலைவன் தேரை நிறுத்தச் சொல்லி இறங்கி மகனைத் தழுவிக்கொண்டான். மகனை வீட்டுக்குள் செல்லு மாறு கூற, அவன் மறுத்து அழுது நின்றதால் அவனைத் தூக்கிக்கொண்டு வந்து வீட்டினுள் விட்டான். அப்போது பரத்தை வீட்டிலிருந்து அவனை அழைக்கும் முழவொலியும் கேட்டது. ஆனால், களவுக் காலத்தில் தான் தலைவியிடம் காட்டிய அன்பினை நினைந்தவனாய்ப் பரத்தை வீடு செல்வதை நிறுத்திவிட்டான். அவன் மகனிடமும் தன்னிடமும் காட்டிய அன்பினைச் சுட்டிக்காட்டி அவனை ஏற்றுக்கொள்வதே ஏற்புடையது எனத் தலைவி தன் தோழியிடம் குறிப்பாய்த் தெரிவித்தாள். (தலைவியின் மனநிலை அறிந்த தோழியும், தலைவனை இல்லத்துள் வர அனுமதிப்பாள் எனக் கொள்ள லாம்.)

சொற்பொருள்

1. இம்மை - இப்பிறப்பு; இசை - புகழ்.
2. மறுமை - மறுபிறப்பு; மறுஇன்று - குற்றமின்றி; எய்துப - அடைவர்.
3. செறுநர் - பகைவர்; செயிர்தீர் - குற்றமற்ற.
4. செம்மலோர் - சிறப்பினைக் கொண்டவர்.

5. பல்லோர் கூறிய - பெரியோர் பலரும் கூறிய.
6. வாயே - உண்மையே; வாய்த்தனம் - கண்கூடாய் வாய்த்ததை.
7. நிரைதார் - வரிசையாய் அமைந்த மாலை; நெருநல் - நேற்று.
8. வதுவை அயர்தல் - சேர விரும்பி; புதுவதின் - புதிதாய்.
9. அணியன் - ஒப்பனை செய்துகொண்டான்; இறப்போன் - கடந்து சென்றோன்.
10. கறங்க - ஒலிக்க; கடைகழிந்து - தலைவாயிலைக் கடந்து.
11. காண்டல் - காண்பதற்காக; தளர்பு - தளர்ந்து.
12. பூங்கண் - பூப்போன்ற கண்.
13. தாங்குமதி - நிறுத்து; வலவன் - பாகன்; இழிந்தனன் - இறங்கினான்.
14. மணிபுரை - பவளமணி போன்ற; சிவண - பொருந்த.
15. புல்லி - தழுவி; அகத்து - வீட்டுக்குள்.
16. கொடுப்போற்கு - விடுப்போனுக்கு; ஒல்லான் - மறுத்தான்; கலுழ்தல் - அழுதல்.
17. மாநிதிக் கிழவன் - குபேரன்; போன்ம் - போன்றவன் அல்லனோ?
18. புகுதந்தோன் - இல்லத்தினுள் புகுந்தான்.
19. படுத்தனென் - செய்வித்தேன்.
20. கலக்கினன் - கலங்கச்செய்தனன்; கொடியோன் - புதல்வன்.
21. அலைக்கும் கோல் - அடிக்கும் கோல்; குறுக - நெருங்க.
22. அவர் மனை - பரத்தையர் வீடு.
23. பயிர்வன - அழைப்பன; இசைப்பவும் - ஒலிக்கவும்; அன்று - இயற்கைப் புணர்ச்சிக்காலத்தில் ஒரு நாள்.
25. கண்ணோட்டம் - அருள்; நலிய - வருத்த.
26. அழுங்கினன் - நிறுத்திவிட்டான்; அயர்ந்ததன் மணன் - தான் விரும்பிய மணத்தை (பரத்தை வீட்டுக்குச் செல்வதை).

தலைவி கூற்று

குறுந்தொகை 106 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் தூது கண்டு, கிழத்தி தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையிற் பிரிந்த தலைவன், தான் குறையற்ற அன்பு கொண்டவனாயிருப்பதாய்த் தூது விட, அது கேட்ட தலைவி, தாமும் பழைய அன்புடன் இருப்பதாய்ச் சொல்லியனுப்பலாம் எனத் தோழியிடம் கூறியது.

புல்வீழ் இற்றிக் கல்இவர் வெள்வேர்
வரைஇழி அருவியின் தோன்றும் நாடன்
தீதுஇல் நெஞ்சத்துக் கிளவி நம்வயின்
வந்தன்று வாழி, தோழி! நாமும்
நெய்பெய் தீயின் எதிர்கொண்டு,
'தான்மணந் தனையம்'என விடுகம் தூதே.

தெளிவுரை

"தோழி! புல்லிய விழுதாகிய இற்றி மரத்தினது வெள்ளை நிற வேர்கள், மலைப்பாறையில் ஏறியிருக்கும் காட்சி, மலையிலிருந்து விழும் அருவிபோலத் தோன்றும் மலைநாட்டுக்குத் தலைவன், 'நான் தீது இல்லாத நெஞ்சத்தைக் கொண்டவன்' என அனுப்பியுள்ள தூதுச் செய்தி நம்மிடம் வந்துள்ளது. நாமும் அச்சொல்லை நெய் பெய்யப் பட்ட தீப்போல ஏற்றுக்கொண்டு, 'அவன் மணந்தபோது கொண்டிருந்தது போன்ற அதே அன்புடன் இருக்கின்றோம்' என்று சொல்லி அனுப்புவோம்."

கருத்து

தலைவனை நாம் ஏற்றுக்கொள்வோம்.

குறிப்பு

பரத்தையிற் பிரிந்த தலைவன் தன் குற்றத்தை உணர்ந்து தான் குற்றமற்ற அன்புடன் இருப்பதாய்த் தலைவியிடம் தூது அனுப்பினான். தலைவியும் அவனை ஏற்றுக்கொண்டதாய்த் தூது அனுப்புவோம் என்றாள்.

உவமை விளக்கம்

'நெய்யை ஏற்கும் தீ' என்பது உவமை. நெய்யும் தீயும் ஒன்றோடு ஒன்று கலந்துவிடும். எரிந்துகொண்டிருக்கும் தீயோடு நெய் சேரும்போது அது மேலும் கொழுந்துவிட்டு எரியும். அது போல, தலைவனை, தலைவி தழுவிக்கொள்வதால் அவள் தளர்ச்சி நீங்கப்பெற்றுப் புகழ்ச்சி பெறுவாள் என்னும் கருத்தினைத் தருவது இவ்வுவமை.

சொற்பொருள்

1. புல் - புல்லிய; வீழ் - விழுது; இற்றி - இற்றி மரம்; கல் இவர் - மலைப்பாறையில் படர்கின்ற; வெள்வேர் - வெண்மையான வேர்.
2. வரை இழி - மலையிலிருந்து இறங்கும்.
3. நெஞ்சத்துக் கிளவி - நெஞ்சிலே உள்ள தூதுச் சொற்கள்; நம்வயின் - நம்மிடம்.
4. வந்தன்று - வந்துள்ளது.
5. நெய்பெய் தீயின் - நெய் ஊற்றப்பட்ட நெருப்புப் போல; எதிர்கொண்டு - ஏற்றுக்கொண்டு.
6. தான் மணந்த அனையம் - அவர் எம்மை மணந்த காலத்தில் எத்தகைய அன்பு கொண்டவராய் இருந்தோமோ அதே அன்புடன் இன்றும் இருக்கிறோம்; விடுகம் - அனுப்புவோம்.

தலைவன் கூற்று

நற்றிணை 370 **உறையூர் கதுவாய்ச் சாத்தனார்**

திணை : மருதம்

கூற்று

ஊடல் நீட ஆற்றானாய் நின்றான் பாணற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

மனைவியைப் பிரிந்து பரத்தை வீடு சென்றவன் தன் மனைவியை நாடி வருகின்றான். அவளோ சினந்து அவனை ஒதுக்கி விடுகின்றாள். அவன் பன்முறை வேண்டியும் அவள் ஒப்பவில்லை. அப்போது அவனிடம் ஆற்றாமை மிகுகின்றது. அவளும் கேட்டறியுமாறு, தன் முன்னைக் காலத்து நிகழ்ச்சிகளை எல்லாம் நினைவு கூர்ந்தவனாகத் தன் பாணனிடம் தலைவன் சொல்லியது.

வாராய், பாண! நகுகம் நேரிழை
கடும்புடைக் கடுஞ்சூல் நம்குடிக்கு உதவி,
நெய்யோடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்
விளங்குநகர் விளங்கக் கிடந்தோள் குறுகி,
'புதல்வன் ஈன்றெனப் பெயர்பெயர்த்து, அவ்வரித்
திதலை அல்குல் முதுபெண்டு ஆகி,
துஞ்சுதி யோ,மெல் அம்சில் ஓதி?'எனப்
பல்மாண் அகட்டில் குவளை ஒற்றி,
உள்ளினென் உறையும் என்கண்டு, மெல்ல,
முகைநாண் முறுவல் தோற்றி,
தகைமலர் உண்கண் கைபுதைத் ததுவே.

தெளிவுரை

பாணனே! இங்கே வருக! (நான் சொல்வதைக் கேள்.) சிறந்த அணிகலன்களை அணிந்த நம் தலைவி, சுற்றத்தார் சுற்றி நின்று பாதுகாக்க, நம் குடி வளர அழகிய மகவை ஈன்றனள். நெய் யுடனே கலந்து ஒளி வீசும் வெண்கடுகின் திரண்ட விதைகளை நம் வீடு முழுதும் பொலிவு பெறும்படி தூவி வைத்திருந்தனர். அதற்கிடையே படுத்திருந்தவளை நெருங்கி, "அழகிய கூந்தலைக் கொண்டவளே! புதல்வனைப் பெற்றதனால் பெறுதற்கரிய தாய் என்னும் வேறொரு பெயரையும், அழகிய தேமலையுடைய அல்குலினையும் பெற்று உறங்குகின்றாயே" என்று கூறி மாட்சிமை மிக்க அவள் வயிற்றிடத்தை என் கையிலிருந்த குவளை மலரால் தீண்டினேன். அவ்வாறு தீண்டி நின்ற என்னைப் பார்த்து, முல்லையின் நாளரும்பைப் போன்ற குறுநகையினைத் தோற்றுவித்தனள். சிறந்த நீல மலர் போன்ற மையுண்ட தன் கண்களையும் கையால் மறைத்துக் கொண் டனள். அதனை நினைத்து இப்போதும் மகிழ்ச்சியடை கின்றேன். இனி எப்போதும் மகிழ்ச்சியடைவேன்.

கருத்து

தாய் எனத் தகுதி பெற்றுள்ள என் தலைவியை நான் என்றும் மறவேன்.

விளக்கம்

குடும்பத் தலைவியான அவளை யான் என்றும் மறந்ததில்லை. அவள், குடிக்கு விளக்காகிய புதல்வனைப் பெற்றுத் தந்த சிறப்பு டையவள். அவள் மகவைப் பெற்று அந்தக் களைப்புடன் கிடந்து துயின்றபோது அங்குச் சென்று கண்டேன்; அவள் முறுவலித்துக் கையாற் கண்புதைத்தது கண்டு மகிழ்ந்தேன்.

அத்துணை உறவுடையவளே இப்போது நம்மை வெறுத்து ஒதுக்குகின்றாள்; 'நம் நிலை இவ்வாறு தாழ்ந்ததனை நினைத்து நாம் நகைப்போம், வா' என்று மனம் நொந்து கூறினான். இதனைக் கேட்கும் தலைவி, தன்னுடைய இல்லறக் கடமையை நினைத்தவளாய்த் தலைவனை ஏற்றுக் கொள்வாள்.

சொற்பொருள்

1. நகுகம் - மகிழ்வோம்; நேரிழை - தலைவி.
2. கடும்பு - சுற்றம்; கடுஞ்சூல் - முதற் பிள்ளைப் பேறு.
3. ஐயவி - வெண்சிறு கடுகு; திரள்காழ் - திரண்ட விதைகள்.
4. நகர் - வீடு; கிடந்தோள் - படுத்திருந்தவள்; குறுகி - நெருங்கி.
5. ஈன்றென - ஈன்றதால்; பெயர் பெயர்த்து - பெயர் வேறொன்றாகி (தாய் என்னும் பெயர் பெற்று); அவ்வரி - அழகிய வரிகள்.
6. திதலை - தேமல்; முதுபெண்டு - தாய்மையுற்ற பெண்.
7. மெல்அம்சில் ஓதி - மெல்லிய அழகிய சிலவாய கூந்தலை யுடையவளே!
8. மாண் - மாட்சிமை பெற்ற; அகடு - வயிறு; குவளை - குவளை மலர்; ஒற்றி - தொட்டு.
9. உள்ளினென் உறையும் - அவள் மீது கண்களை ஓடவிட்டு நினைந்து நின்ற; என்கண்டு - என்னைப் பார்த்து.
10. முகை நாண் முறுவல் - முல்லையின் நாளரும்பு போன்ற புன்முறுவல்.
11. தகை - அழகு.

தலைவன் கூற்று

நற்றிணை 250 **மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்**

திணை : மருதம்

கூற்று

புதல்வனொடு புக்க தலைமகன், ஆற்றானாய்ப் பாணற்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையிடம் சென்றிருந்த தலைவன் ஒரு சமயம் தன் மனை அருகே தெருவில் விளையாடிக் கொண்டிருந்த புதல்வனைக் கண்டு மகிழ்கிறான். அவனை எடுத்து அணைத்துத் தலைவியிடம் செல்ல, அவள், 'நீர் யாவிரோ?' என்று வினவுகிறாள். அதனைக் கேட்ட தலைவன் தன் பாணனிடம் கூறியது.

நகுகம் வாராய் பாண! பகுவாய்
அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில்
தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காமர் நெஞ்சந் துரப்ப யாம்தன்
முயங்கல் விருப்பமொடு குறுகினேம் ஆகப்
பிறைவனப் புற்ற மாசறு திருநுதல்
நாறுஇரும் கதுப்பின்எம் காதலி வேறுஉணர்ந்து
வெரூஉமான் பிணையின் ஒரீஇ
யாரை யோ,என்று இகந்துநின் றதுவே!

தெளிவுரை

“பாணனே! இனிமையான மொழியைக் கொண்ட என் புதல்வன் தெருவில் சிறுதேர் உருட்டியிருந்தான். பரல்கள் இடப்பட்ட கிண்கிணி காலில் ஒலி செய்தது. செவ்வாம்பல் போலும் சிவந்த அவன் வாயிலிருந்து நீர் ஒழுகுதலால் சந்தனப் பூச்சுச் சிதைந்து அவன் உடலில் பரவியிருந்தது. நான் அவனை எடுத்து அணைத்தவாறு தலைவியை அணைக்கும் விருப்பத்துடன் வீட்டினுள் சென்றேன். என் தலைவி, பிறை நிலவு போன்ற குற்றமற்ற அழகிய நுதலையும், நறுமணம் கமழும் கரிய கூந்தலையும் கொண்டவள். அவள் என்னை வேற்று ஆள்போல்

எண்ணி, அஞ்சியோடும் பெண்மான்போல என்னை விட்டு அகன்று சென்றனள். பிறகு என்னை நோக்கி, 'நீ யார்?' என்று கேட்டு வெறுத்து ஒதுங்கி நின்றனள்! இதனை எண்ணி நாம் சிரித்து மகிழலாம் வா" எனப் பாணனிடம் தலைவன் கூறினான்.

கருத்து

எம் உறவால் உண்டான எம் புதல்வனை நான் அணைத்திருக்கவும் என்னை 'நீ யார்?' என்று கேட்பது எனக்கு நகைப்பை உண்டாக்குகிறது.

விளக்கம்

தலைவன் தன்னை விரும்பி வரவில்லை. தெருவில் செல்வோன் தன் புதல்வனைக் கண்டதும் பாசத்தால் ஈர்க்கப் பட்டு, அவனைத் தூக்கி அணைத்தவாறு வீட்டினுள்ளே வந்தவன், தன்னைக் கண்டதும் ஆசை மீதூர நெருங்குகின்றான் என்றெண்ணிய தலைவி, அவனை 'நீ யார்?' என்று கேட்டு வெறுத்து ஒதுங்கி நின்றாள். தங்கள் உறவால் உண்டான புதல்வனை நினையாதவளாய், 'நீ யார்?' என்று கேட்டது தலைவனுக்கு நகைப்பை உண்டாக்குகிறது. அதனைத் தன் பாணனோடு சொல்லி மகிழ்கின்றான். இதனால் பாகனும் சிரிக்க, தலைவியும் தன் சினம் தணிந்து தலைவனை ஏற்று இன்புறுத்துவாள் என்பது இதன் பயன் ஆகும்.

சொற்பொருள்

1. நகுகம் - நகைப்போம், சிரிப்போம்; பகுவாய் - பிளவுபட்ட வாய்.
2. அரிபெய் - பரல்கள் இடப்பட்ட; கிண்கிணி - சலங்கை போலக் காலில் அணியப்படும் ஓர் அணிகலன்; ஆர்ப்ப - ஒலிக்க.
3. தேர் நடை பயிற்றும் - சிறு தேர் உருட்டியபடி நடை பயின்று கொண் டிருந்த; தேமொழி - இனிய மழலைப் பேச்சு.
4. நாறு - மணக்கும்; சிதைத்த - கலைத்த; சாந்தம் - சந்தனம்.
5. காமர் - விருப்பம்; துரப்ப - செலுத்த; யாம்தன் - நான் தலைவியை.
6. முயங்கல் - தழுவுதல்; குறுகினேம் - அருகில் சென்றேன்.
7. வனப்பு - அழகு; மாசறு - குற்றமற்ற.
8. நாறுஇரும் - மணம் வீசும் கரிய; கதுப்பு - கூந்தல்; வேறு உணர்ந்து - வேற்று ஆளைப் போலக் கருதி.
9. வெரூஉம் - அஞ்சும்; பிணை - பெண்மான்; ஒரீஇ - அகன்று.
10. யாரையோ? - நீ யார்?: இகந்து - வெறுத்து ஒதுங்கி.

தலைவி கூற்று

குறுந்தொகை 33 **படுமரத்து மோசிகீரனார்**

திணை : மருதம்

கூற்று

வாயிலாகப் புக்க பாணன் கேட்பத் தோழியை நோக்கித் தலைமகள் வாயில் நேர்வாள் கூறியது.

கூற்று விளக்கம்

தன்னோடு தலைவி கொண்டிருக்கும் ஊடலைத் தீர்க்கும்பொருட்டுத் தலைவன் பாணனைத் தூதாய் அனுப்பினான். அறிவு நிறைந்த அவன் பேச்சினைக் கேட்ட தலைவி, தான் தலைவனை ஏற்றுக்கொள்ளும் எண்ணம் கொண்டவளாயிருப்பதைத் தோழி அறியுமாறு கூறியது.

அன்னாய்! இவன்ஓர் இளமா ணாக்கன்;
தன்ஊர் மன்றத்து என்னன் கொல்லோ?
இரந்தூண் நிரம்பா மேனியொடு
விருந்தின் ஊரும் பெருஞ்செம் மலனே.

தெளிவுரை

தோழி! இப்பாணனைப் பார்! இவன் வயது முதிராத இளையவனாய் இருக்கின்றான்; இரந்து உணவினை உண்டவனாதலால் நன்கு வளர்ச்சி பெறாத உடலினைக் கொண்டவனாய் உள்ளான். ஆயினும், தனக்குப் புதியதாகிய இவ் வேற்றூரிலேயும் சிறந்த தலைமைத் தன்மை கொண்டவனாய் விளங்குகிறான். இவன் தன் ஊர் மன்றத்தில் எத்தகைய சிறப்பினைக் கொண்டவனோ!

கருத்து

பாணனது நய உரையினை வியந்த தலைவி, அவன் உரையின்படி தலைவனை ஏற்றுக்கொள்ளும் நிலையில் தான் இருப்பதைத் தோழியிடம் புலப்படுத்துகிறாள்.

விளக்கம்

பாணன் வயதில் முதிர்ச்சியற்றவனாயிருந்தும் பேச்சுத் திறனிலும் தலைமைத் தன்மையிலும் சிறந்து விளங்குவதைக்

கண்டு தலைவி வியப்புறுகிறாள். அதனால் அவன் மேற் கொண்டுள்ள செயல் தனக்கு உடன்பாடானது என்பதையும் உணர்த்துகின்றாள்.

குறிப்பு

தலைவன்பொருட்டு வந்த பாணன் விருந்து பெறுவான் என்று கூறுவதன் வழி, தலைவி தான் தலைவனை ஏற்றுக்கொள்ளும் எண்ணம் கொண் டிருத்தலைப் புலப்படுத்தினாள்.

சொற்பொருள்

1. அன்னாய் - தோழி!; இளமாணாக்கன் - இளைய மாணாக்கன் (பாணன்).
2. மன்றம் - பொதுமன்றம்; என்னன் கொல்? - எத்தகைய சொல் வன்மை கொண்டவனாய் விளங்குவானோ?
3. இரந்து ஊண் - இரந்து பெறுகின்ற உணவினை உண்பவனாதலால்; நிரம்பா - நன்றாய் வளர்ச்சியடையாத; மேனி - உடல்.
4. விருந்தின் ஊரும் - விருந்து கிடைக்கும் இடம் நோக்கிச் செல்லும்; பெரும் செம்மலன் - பெருமிதம் வாய்ந்த தலைமைத் தன்மையினைக் கொண்டவன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 271 **அழிசி நச்சாத்தனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகற்கு வாயில் நேர்ந்து புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன், தலைவியின் ஊடலைப் போக்கி, உடம்படுவிக்குமாறு தோழியை வேண்டினான். அதனை ஏற்ற தோழி தலைவியைக் கண்டு, 'அவனை ஏற்க வேண்டும்' என்று தெரிவிக்க, தலைவி தான் உடம்பட்டமை தோன்ற உரைத்தது.

அருவி அன்ன பருஉறை சிதறி,
யாறுநிறை பகரும் நாடனைத் தேறி,
உற்றது மன்னும் ஒருநாள், மற்றுஅது
தவப்பல் நாள்தோள் மயங்கி,
வெளவும் பண்பின் நோய்ஆ கின்றே.

தெளிவுரை

தோழி! அருவி கொட்டுவதுபோல் ஆறு பெரும் நீர்த் துளிகளைச் சிதறி, நிறைந்த நீரை ஊர்தோறும் சென்று கொடுக்கும் நாட்டினையுடையவன், நம் தலைவன். அவனை நல்லவன் என நம்பி, அவனோடு முயங்கியது ஒரே ஒருநாள்தான். அது மிகப் பல நாள்களாய் என் தோள்களை வாட்டி, அழகையெல்லாம் கவர்ந்துகொள்ளும் நோயாய் மாறிவிட்டது.

கருத்து

அவனுடன் உரிமை பூண்ட அறங் கருதித் தலைவனை ஏற்றுக் கொள்கிறேன்.

குறிப்பு

நாடனுடன் கொண்ட நட்பு எனக்கு நோய் தந்துவிட்டது. அந்நோய் நீங்க நாடனைச் சேர்வது ஒன்றுதான் வழி என்பதால், அவனை ஏற்றுக் கொள்கிறேன்.

ஆறு தன் நீர்த்துளிகளைச் சிதறி வெளியேயுள்ள பொருள்களுக்குப் பயன்படுவதுபோல, தலைவன் புறத்தேயுள்ள பரத்தையர்க்குப் பயன் படுகின்றான் என்பதாம்.

சொற்பொருள்

1. பரு உறை - பெரும் நீர்த்துளி.
2. யாறு - ஆறு; பகரும் - கொண்டு தரும்; தேறி - நம்பி.
3. உற்றது - அவனோடு கூடியது; ஒருநாள் - ஒரு நாளே ஆகும்; மற்று அது - அந்த ஒரு நாள் உறவு.
4. தவப்பல் நாள் - மிகப்பல நாள்; தோள் மயங்கி - என் தோளை வாட்டி.
5. வெளவும் - அழகைக் கவரும்; பண்பின் - தன்மையில்; நோய் ஆகின்று - நோயாய் ஆனது.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 26 **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

புதல்வனை முனிந்து தலைமகன் மறுத்தாளைப் போலத் தோழிக்கு வாயில் நேர்ந்தது.

கூற்று விளக்கம்

மகன்மீது சினம் கொண்டு, தலைவி தலைவனை ஏற்க மறுப்பவளைப் போன்று தோழியிடம் உடன்பட்டுக் கூறியது.

பெய்வளைக் கையாய் பெருநகை ஆகின்றே!
செவ்வயல் ஊரன் வதுவை விழவியம்பக்
கைபுனை தேரேறிச் செல்வானை சென்றிவன்
எய்தி இடருற்ற வாறு.

தெளிவுரை

"வளையல் அணிந்த கைகளைக் கொண்ட தோழியே! தலைவன், திருத்தப்பெற்ற மருத நில ஊர்களை உடையவன். அவன் புதுமண விழாக் கொண்டாடும்பொருட்டுப் பரத்தையர் முழவை ஒலிக்க அதனைக் கேட்டு அலங்கரிக்கப்பட்ட தேரின்மீது அமர்ந்து அப்பரத்தை இல்லம் செல்லப் புறப் பட்டான். அவ்வேளை, என் புதல்வனாகிய இவன், தலைவனுக்கு எதிரே போய்ப் பார்த்துவிட்டான். அதனால் தலைவன் பரத்தை வீடு சென்று புதுமணம் பெறாத துன்ப நிலையை அடைந்தான். இதைக் கண்ட எனக்கு மிகுந்த சிரிப்பு உண்டாகியது" என்று தலைவி கூறினாள்.

கருத்து

'மகனைப் பார்த்ததால் பரத்தையின் வீட்டிற்குச் செல்வதைத் தவிர்த்துக் கொண்ட தலைவனை ஏற்றுக்கொள்வோம்.'

குறிப்பு

தலைவன் பரத்தையின் வீட்டிற்குச் செல்லப் புறப்பட்டான். அப்போது அவன் புதல்வன் போய்ப் பார்த்ததால், தலைவன் தன் பயணத்தைத் தவிர்த்து

விட்டான். தலைவன், தான் விரும்பியபடி செய்ய இயலாதவாறு இந்தப் புதல்வன்தானே தடுத்துவிட்டான் என்று புதல்வன்மீது சினம் கொள்வது போலப் பேசி, தலைவன் நிலை கண்டு தலைவி உள்ளூரச் சிரித்துக் கொண்டாள்.

பெருஞ் சிரிப்பை உண்டாக்கியது எனத் தலைவி வெளிப்பட எள்ளி நகைப்பது போலக் கூறிடினும், தலைவனோடு தான் கொண்டிருந்த ஊடலை நீக்கி அவனோடு ஒன்றுபடவே விரும்பினாள் என்பதைத் தோழியிடம் அவள் கூறியதிலிருந்து அறிய இயலுகிறது.

சொற்பொருள்

1. பெய் - அணியப்பெற்ற; வளைக்கையாய் - வளையல்களைக் கொண்ட கைகளைக் கொண்ட தோழியே!
2. செய் வயல் ஊரன் - நன்செய் நில ஊர்த்தலைவன்; வதுவை விழவு - பரத்தையர் புதுமணவிழாக் கொண்டாடும்பொருட்டு; இயம்ப - ஒலிக்க.
3. கைபுனை தேர் ஏறிச் செல்வானை இவன் சென்று - தலைவனுக்கு எதிர்ச் சென்று என் புதல்வனாகிய இவன்.
4. எய்தி - காணுதலால்; இடர் உற்ற ஆறு - (தலைவன் பரத்தையர் வீட்டை அடைய இயலாது) துன்புற்ற நிலை.

1. பெருநகை ஆகின்று - எனக்குப் பெருநகைப்பைத் தருகின்றது.

தலைவி கூற்று

நற்றிணை 181 **கிள்ளிமங்கலங்கிழார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையிற்பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள் ஆற்றல் வேண்டித் தோழி இயற்பழித்தவழி, தலைமகள் இயற்பட மொழிந்தது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையிடம் சென்றமையால் தலைவி வருந்தியிருந்தாள். அவளுக்கு ஆறுதல் கூறிய தோழி, தலைவனின் செயலைப் பழித்துப் பேசினாள். அதனைப் பொறாத தலைவி, தோழியைக் கடிந்து தலைவனைப் பெருமைபடப் பேசியது.

இதுமற்று எவனோ தோழி! துனியிடை
இன்னர் என்னும் இன்னாக் கிளவி
இருமருப்பு எருமை ஈன்றணிக் காரான்
உழவன் யாத்த குழவியின் அகலாது,
பாஅல் பைம்பயிர் ஆரும் ஊரன்
திருமனைப் பலகடம் பூண்ட
பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே.

தெளிவுரை

பெரிய கொம்புகளைக் கொண்ட கரிய எருமை; அஃது அண்மையில் கன்று ஈன்றுள்ளது; அக்கன்றினை உழவன் கயிற்றோடு பிணைத்திருந்தான்; தன் கன்றை விட்டுப் பிரியாமலே எருமை, பக்கத்திலே உள்ள பசுமையான பயிரை மேய்ந்து கொண்டே இருக்கும். இத்தகைய செழிப்பு மிகுந்த ஊரினை உடையவன், தலைவன்.

அவனது செல்வ மனையில் வாழ்கின்றோம். இம்மனையில் முதிய பெண்டிராகிய நாம் பல கடமைகளை மேற்கொண்டுள் ளோம். தலைவனுடன் ஊடல் கொண்டிருக்கும் இக்காலத்தில், 'அவர் கொடியவர்' என்று இன்னாச் சொல் கூறுவது எதற்கு? இச்செயல் என்ன பயனைத் தரும்?

கருத்து

'தலைவனைப் பழிக்க வேண்டா; அது கற்பு நெறியன்று; நம் கடமைகளை நாம் செய்வோம்' என்று சொல்வதன்வழி அவள், தலைவனை ஏற்க உடன்படும் நிலையில் உள்ளாள் என்பதை வெளிப்படுத்துகிறாள்.

விளக்கம்

"தலைவனுடைய செல்வ மனையிலே நாம் வாழ்கிறோம். நாம் வயது முதிர்ந்த இல்லக்கிழத்தியர்; நாம் இல்லத்தில் செய்ய வேண்டிய வேலைகள் பல உண்டு. அவற்றைச் செய்வதை விடுத்துத் தலைவனைப் பழித்துரைக்கும் செயல் எதற்கு?" என்று தலைவி, தலைவனைப் பழிப்பதோ குறை சொல்வதோ தகாது என்கிறாள்.

குறிப்பு

பயிரை மேய்ந்தாலும் எருமை தன் கன்றினையே நினைந்து அன்பு காட்டும் என்பதிலிருந்து, தலைவன் சில முறை தலைவியைப் பிரிந்திருந் தாலும் அவள்மீது மாறாத அன்பு கொண்டவன் என்னும் குறிப்புப் பொருளைப் பெறுகிறோம்.

சொற்பொருள்

1. இது - (தலைவன் இயல்பைப் பழிக்கும்) இச்செயல்; எவனோ? - என்ன பயனைத் தரும்?; துனிஇடை - ஊடல் கொண்டிருக்கும் இக்காலத்தில்.
2. இன்னர் - அவர் இப்படிப்பட்டவர் என்று சொல்லும்; இன்னாக் கிளவி - இன்னாத சொற்கள்.
3. இரு மருப்பு - பெரிய கொம்பு; ஈன்றஅணி - அண்மையில் கன்று ஈன்ற; கார்ஆன் - கரிய எருமை.
4. யாத்த - கட்டப்பட்ட; குழவி - கன்று.
5. பால் - பக்கத்தில்; பைம்பயிர் - பசுமையான பயிர்; ஆரும் - மேயும்.
6. திருமனை - செல்வமிக்க வீடு; பல கடம் - பல கடமைகள்.
7. பெருமுதுப் பெண்டிர் - வயது முதிர்ந்த பெண்கள்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 167 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தையிற்பிரிந்த தலைமகன்விட வாயிலாய் வந்தார்க்கு, அவன் கொடுமை கூறித் தோழி இயற்பழித்தவழித் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வீட்டிலிருந்து மீண்டு தன் வீட்டுக்கு வர விழைந்து சிலரைத் தூதாய் அனுப்பினான். அவர்களிடம் தோழி, தலைவன் செய்த கொடுமைகளைக் கூறி அவன் இயல்பைப் பழித்தாள். அதுகேட்ட தலைவி அவள் கூற்றை மறுத்துத் தலைவன் பிழை செய்தாலும் அவன் நமக்கு உறவினனே என்று கூறியது.

பெருங்கடற் கரையது சிறுவெண் காக்கை
இருங்கழி இனக்கெடிறு ஆரும் துறைவன்
நல்குவன் போலக் கூறி,
நல்கான் ஆயினும், தொல்கேள் அன்னே.

தெளிவுரை

பெருங் கடற்கரையில் வாழும் சிறுவெண்காக்கை, கரிய கழியிடத்தே வாழும் கெளிற்றுமீனைத் தன் வயிறார உண்ணுதற்கு இடனான துறையைக் கொண்டவன், தலைவன். அவன், தான் அருள் கொண்டவன்போல முன்பு பேசிப் பின் அதற்கு மாறாய்த் துயர் செய்தனன். ஆயினும், அவன் நமக்குப் பல பிறவிகளிலும் உறவாகும் உரிமை கொண்டவன்.

கருத்து

'இவன் நமக்குப் பல பிறவிகள் உறவாய் அமைபவன்; ஆகவே, அவனை வெறுக்க இயலாது.'

விளக்கம்

தலைவன் நம்மீது அருள் காட்டுவதாய்ச் சொல்லி அவ்வாறு காட்டாவிடினும், அவன் நம்மோடு தொன்றுதொட்டு வரும் உறவினைக் கொண்டிருப்பவன்.

உள்ளுறை

"பெருங்கடற்கரையது சிறுவெண் காக்கை இருங்கழி இனக் கெடிறு ஆரும்" : அஃதாவது, பெருங்கடற்காக்கை நல்ல மீன்கள் பல இருப்பினும், அவற்றை விடுத்து, உண்டபின் துன்பத்தை ஏற்படுத்தும் கெளிற்றுமீன்களை நாடிக் கழிக்குச் செல்லும் என்பதாம். இத்தொடர்மூலம், தலைவனும் தன் தலைமைப் பண்பிற் கேற்பத் தலைவியோடு கூடி வாழாதவனாய்ப் பரத்தையரை நாடிச் செல்லும் இழிதகைமை கொண்டவனாயிருக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

2. இருங்கழி - கரிய உப்பங்கழி; கெடிறு - கெளிற்றுமீன்; ஆரும் - உண்ணும்.
3. நல்குவன் - அருள் செய்பவன்.
4. நல்கான் - செய்யான்; தொல்கேள் - நெடுங்கால உறவுடையவன்.

மகனுடன் பெற்றோர்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 157 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வாயில் வேண்டி ஒழுகுகின்ற தலைமகன், புதல்வன் வாயிலாக வருமெனக் கேட்டு அஞ்சிய தலைமகள், புதல்வன் விளையாடித் தனித்து வந்துழிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்ட தலைவனிடம் ஊடல்கொண்டிருந்தாள், தலைவி. தெருவில் விளையாடிக்கொண்டிருக்கும் புதல்வனை ஏந்திக்கொண்டு வருவானாயின், அவனை மறுக்க இயலாது போய்விடுமே எனத் தலைவி அஞ்சியிருந்தனள். விளையாடப்போன புதல்வன் தந்தையின்றித் தனித்தே வந்தது கண்டு அவனைத் தழுவிக்கொண்டு கூறியது.

வெள்ளாங் குருகின் பிள்ளை செத்தெனக்
காணிய சென்ற மடநடை நாரை
காலை இருந்து மாலைச் சேக்கும்
தெண்கடல் சேர்ப்பனொடு வாரான்,
தான்வந் தனன்எம் காத லோனே!

தெளிவுரை

வெள்ளாங்குருகின் குஞ்சினைத் தன் குஞ்செனக் கருதி அதனைக் காணச் சென்ற மென்மை நடை கொண்ட நாரை, காலைப்பொழுதிலிருந்தே அக்குருகோடு இருந்ததோடன்றி இரவிலும் அங்கேயே தங்கியிருந்தது. அத்தகைய காட்சி கொண்ட தெளிந்த நீரைக் கொண்ட நெய்தல் நிலத்திற்கு உரியவன், தலைவன். தன் தந்தையோடு வாராமல் என் அன்பு மகன் தனியாகவே வந்துவிட்டான்.

கருத்து

'ஓர் இக்கட்டிலிருந்து விடுபட்டேன்' என்கிறாள், தலைவி.

விளக்கம்

புதல்வனைத் தூக்கிக்கொண்டு தலைவன் வீட்டினுள் வந்தால், தலைவியால் அவன்மீது சினம் கொள்ள இயலாது. மகன் தந்தையோடு விளையாடுவதையும் தடுக்க இயலாது. புதல்வன் தன்னோடும் தலைவனோடும் சேர்ந்து மகிழ்ந்து பேசும்போது, தானும் தலைவனுடன் பேசாமல் இருக்க இயலாது. இந்நிலையில் மகன் தனியே வந்ததால், தலைவி மன நிம்மதி பெற்றனள்.

உள்ளுறை

"வெள்ளாங்குருகின்..... சேக்கும்" : அஃதாவது, காலையிலே சென்ற நாரையானது மாலை நேரமாகியும் கூட்டுக்குத் திரும்பாது அங்கேயே தங்கியது என்பதாம். இத்தொடர்மூலம், பிரிந்து பரத்தையிடம் சென்ற தலைவன் பகலிலும் இரவிலும் அவள் மனையிலேயே தங்கினான் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

3. காலை இருந்து - காலையிலிருந்து; மாலைச் சேக்கும் - மாலையிலும் அங்கேயே தங்கியிருக்கும்.
4. சேர்ப்பன் - நெய்தல்நிலத் தலைவன் (தன் கணவன்)
5. தான் - மகன்; காதலோன் - அன்புக்குரியவன்.

மகன்வழி தலைவன் ஊடல் தீர்தல்.

தோழி கூற்று

கைந்நிலை 39 **புல்லங்காடனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் மகற்கொண்டு வரும் சிறப்பினைத் தோழி கண்டு மகிழ்ந்து கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் இல்லம் சென்ற தலைவன் தன் வீட்டிற்குத் திரும்பும்போது வாயிலில் விளையாடிக்கொண்டிருந்த தன் மகனை எடுத்துக் கொஞ்சினான். அதனைப் பார்த்த தோழி, தலைவியிடம் மகிழ்ந்து சொல்லியது.

முட்ட முதுநீர் அடைகரை மேய்ந்(து)எழுந்து
தொட்ட வரிவரால் பாயும் புனல்ஊரன்
கட்டுஅலர் கண்ணிப் புதல்வனைக் கொண்டு,எம்இல்
சுட்டி அலைய வரும்.

தெளிவுரை

"பதிக்கப்பட்டன போன்ற வரிகளைக் கொண்ட வரால் மீன்கள், பழமையான நீர் மோதும் கரை முழுவதும் திரிந்து இரைகளை உண்டு எழுந்து நீரினுள் பாயும். அத்தகைய காட்சிக்குரிய மருத நிலத்திற்குரியவன், தலைவன். அவன் மலர்மாலை அணிந்த தன் புதல்வனை, அவனது நெற்றிச்சுட்டி அசையும்படி நம் இல்லத்திற்கு எடுத்துக்கொண்டு வருகின்றான்" என்று தோழி தலைவியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் தன் மகனை எடுத்துக்கொண்டு வருவதைக் காட்டித் தலைவியின் ஊடலைப் போக்க முயல்கின்றாள், தோழி.

சொற்பொருள்

1. முட்ட - முழுவதும்; மேய்ந்து - இரை உண்டு திரியும்.

2. தொட்ட - பதிக்கப்பட்டுள்ள; வரிவரால் - வரிகளைக் கொண்ட வரால் மீன்; புனல் ஊரன் - மருத நிலத் தலைவன்.
3. கட்டு அலர் - மலர்க்கட்டு விரிந்த; கண்ணி - மாலை; இல் - வீடு.
4. சுட்டி - நெற்றிச்சுட்டி; அலைய - அசைய.

தலைவி கூற்று

கலித்தொகை 82 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

புத்தேளிர் கோட்டம் வலஞ்செய்வித்துக்கொண்டு வருதற்குச் சேடிய ருடன் மகற்போக்கிய தலைமகள், அவன் நீட்டித்து வந்தவழித் 'தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப் பரத்தை உள்ளியவழி'யால் தலைமகன் சிறைப்புறத்தானாகச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தேவகோட்டங்களைத் தொழுது வலம் செய்து வருமாறு தலைவி தன் மகனைப் பணிப்பெண்களுடன் போகச் செய்தனள். ஆனால், மகன் காலம் நீட்டித்து வந்தான். 'மகன் திரும்பும் வழியில், தலைவன் விரும்பும் பரத்தை ஒருத்தி அம்மகனைக் கண்டு தூக்கி முத்தம் கொடுத்தனள்; அதனால் காலதாமதம் ஏற்பட்டது' என்றாள், தோழி. அச்சமயம் தலைவன் சிறைப்புறமாய் வந்து நின்றான். அவன் கேட்குமாறு தலைவி தன் மகனிடம் உரைத்தது.

தலைவி (மகனிடம்)

ஞாலம் வறம்தீரப் பெய்யக் குணக்குஏர்பு,
காலத்தில் தோன்றிய கொண்மூப்போல், எம்முலை
பாலொடு வீங்கத் தவநெடிது ஆயினை;

(தோழியிடம்)

புத்தேளிர் கோட்டம் வலம்செய்து இவனொடு
5 புக்க வழிஎல்லாம் கூறு.

தோழி

கூறுவேன்; மேயாயேபோல வினவி, வழிமுறைக்
காயாமை வேண்டுவல், யான்.

தலைவி

காயேம்;

தோழி

மடக்குறு மாக்களோடு ஓரை அயரும்
அடக்கம்இல் போழ்தின்கண் தந்தை காமுற்ற
தொடக்கத்துத் தாய்உழைப் புக்காற்கு, அவளும்
மருப்புப்பூண் கையுறை யாக அணிந்து,
'பெருமான் நகைமுகம் காட்டு!'என்பாள் கண்ணீர்
சொரிமுத்தம் கார்சோர்வ போன்றன; மற்றும்,
வழிமுறைத் தாய்உழைப் புக்காற்கு, அவளும்
மயங்குநோய் தாங்கி, மகன்எதிர் வந்து,
முயங்கினள் முத்தினள் நோக்கி, நினைந்தே,
'நினக்குயாம் யாரேம் ஆகுதும்?' என்று
வனப்புறக் கொள்வன நாடி அணிந்தனள்
ஆங்கே–
'அரிமதர் உண்கண் பசப்பநோய் செய்யும்
பெருமான் பரத்தைமை ஒவ்வாதி' என்றாள்;
அவட்குஇனிது ஆகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயும்மற்று ஈதுஓர்
புலத்தகை புத்தேள்இல் புக்கான்

தலைவி

அலைக்கஒரு கோல்தா;

மகனிடம்

நினக்குஅவள் யாராகும்? – எல்லா!
வருந்தியாம் நோய்கூர, நுந்தையை என்றும்
பருந்துஎறிந் தற்றாகக் கொள்ளும்;கொண் டாங்கே
தொடியும் உகிரும் படையாக நுந்தை
கடியுடை மார்பில் சிறுகண்ணும் உட்காள்,
வடுவும் குறித்தாங்கே செய்யும்; விடு,இனி;
அன்ன பிறவும், பெருமான்! அவள்வயின்

துன்னுதல் ஓம்பித், திறவதின் முன்னிநீ
ஐயம்இல் லாதவர் இல்ஒழிய, எம்போலக்
கையாறு உடையவர் இல்அல்லால் செல்லல்
அமைந்தது இனிநின் தொழில்.

தெளிவுரை

தலைவி : (மகனிடம் கூறுகிறாள்)

உலகத்தில் வறட்சி தீருமாறு மழை பெய்வதற்குக் கூதிர்க் காலத்தில் கிழக்குத் திசையில் எழுந்து தோன்றும் மேகம் நீர் நிறைந்து விளங்குவதைப் போல என் மார்பகம் பால் நிரம்பி விம்மும்படி மிகுந்த நேரம் கழித்து வந்துள்ளாய்.

(தோழியிடம்)

திருக்கோவிலை வலம் செய்த பின் இவனோடு எங்கெங்கே சென்றாய்?

தோழி : *சொல்லுகிறேன். அதை விருப்பத்தோடு கேட்டுப் பிறகு வினாக்கள் கேட்டு என்னைச் சினம் கொள்ளாதிருக்க வேண்டுகிறேன்.*

தலைவி : *கோபிக்க மாட்டேன், சொல்.*

தோழி : *சிறு பருவமும் பேதைமையும் கொண்ட சிறாரோடு விளையாடும் அடக்கமில்லா வயதில் சிறுமிகள் கோரைப்புற் களால் பொம்மைகள் செய்து விளையாடிய அக்காலத்திலேயே, அவருள் ஒருத்தியைத் தலைவன் விரும்பிக் காமுற்றான். தொடக்கத்தில் பழகிய அவள் உன் மகனைத் தன் மகனாய்க் கருதி அழைத்து, காளை உருவம் பொறித்த சிறுமாலையை அன்பளிப்பாய் இவனுக்கு அணிவித்து, 'பெருமானே! சற்றே சிரி' என்றாள். அப்பொழுது அவள் சிந்திய கண்ணீர், முத்து வடத்திலிருந்து முத்துகள் உதிர்வனபோல இருந்தது.*

அந்தத் தொடக்க காலத் தாயிடமிருந்து வந்துகொண்டிருந் தவன், பின் முறைத்தாயினிடம் (தலைவனுக்கு இரண்டாம் பரத்தை) சென்றான். அவள் தன் துன்பத்தை அடக்கிக்கொண்டு, அவனை வரவேற்று, அணைத்து முத்தமிட்டாள். சிறிது நேரம் நினைவில் ஆழ்ந்து, 'உனக்கு நான் என்ன உறவு?' என்று

கேட்டாள். (நானும் உன் தாய்தான்.) அவ்வாறு கேட்டவள், உன் மகனுக்கு அழகு மிகுந்து தோன்றும்படி அணிகலன்களை ஆராய்ந்தெடுத்து அணிவித்தாள். அணிகலன்களை அணி வித்துக் கொண்டே, "பெண்களின் அரி படர்ந்த மையுண்ட கண்கள் பசலை எய்தி வருந்தும்வண்ணம் செயல்படும் உன் தந்தையைப் போலப் பரத்தமை உடையவனாய் இராதே" என்றாள். அவளிடம் சில சொற்களைக் கூறிவிட்டு, அவ்விடம் விட்டு உன் மகன் அகன்றான்.

அப்படி அகன்றவன், இப்போது நம் பகையாய் விளங்கும் புதிய தெய்வத்தின் (பரத்தையின்) இல்லத்துள் புகுந்துவிட்டான். அங்கிருந்தும் அழைத்து வந்தேன்; அதனால் நேரமாகிவிட்டது.

தலைவி (தோழியிடம்) : *இவனை அடிக்க ஒரு பிரம்பை எடு.*

உடனே தன் மகனை நோக்கி : *ஏடா உனக்கு உறவா அவள்? பருந்து தன் இரையைக் கொத்திச் செல்வதுபோல உன் தந்தையை என்னிடமிருந்து கவர்ந்துகொண்டவள். உன் தந்தையின் மார்பில் தன் வளையலையும் கை நகத்தையும் கொண்டு வடு உண்டாகும்படி சிறிதும் வருந்தாது புண் செய்தவள். அவள் வீட்டிற்கு இனி நீ செல்லாதே. நம் வீட்டை விட்டுப் பரத்தையர் வீட்டிற்கெல்லாம் இனி நீ செல்லக்கூடாது. ஒரு வேளை உன் தந்தை இருப்பார் என்று ஐயப்படக்கூடிய வீடுகளுக்கும் செல்லாதே. இவ்வூரில் என்போல் பண்பு கொண்ட பெண்கள் பலருண்டு; அவர்களின் இல்லத்திற்கு வேண்டுமானால் செல்லலாம்; இதுவே, இனி உன் செயலாய் அமைதல் வேண்டும்.*

கருத்து

'மகனே! வழியில் செல்லத்தகாத இடத்திற்கெல்லாம் உன் தந்தையைப் போல் செல்லக்கூடாது' என்றாள், தாய்.

விளக்கம்

மருதநிலத் தலைவன் ஒருவன் பரத்தையர் பலரிடம் தொடர்பு கொண்டு வாழ்கிறான். அவன் மணம் புரிந்துகொண்ட

மனைவிக்கு மகன் ஒருவன் இருக்கிறான். தலைவி, தன் மகனை அவ்வூரிலுள்ள கோவில்களுக்கு அழைத்துச் சென்று வருமாறு தோழியிடம் கூறினாள். சென்று நீண்ட நேரம் ஆகியும் மகன் திரும்பி வாராமையால் அவள் வருந்தினாள். மகன் பாலுண்ணும் நேரமாகையால் அவள் மார்பகங்கள் பாலைச் சுரக்கத் தொடங்கின. அப்போதுகூட அவன் வரவில்லை. தோழியுடன் அவன் திரும்பிய போது, 'ஏன் இவ்வளவு நேரம் ஆனது?' என அவளைக் கேட்டாள். 'வழியில் தலைவனுக்கு வேண்டிய பரத்தையர் அவனை அழைத்து, முத்தமிட்டு, அணிமணிகள் பூட்டி அழகு பார்த்ததால் நேரமாகிவிட்டது' என்றாள், அவள். தாய் தன் மகனைக் கடிந்துகொள்வதுபோல, 'இனி அப்படிப் பட்ட இடங்களுக்குச் செல்லக்கூடாது' என்றாள்.

குறிப்பு

தலைவி கூறியதைச் சிறைப்புறத்திலிருந்த தலைவன் கேட்டான்; தன் தலைவியின் நெஞ்சத் துயரை உணர்ந்தான்.

பரத்தையர், தம்மோடு கூடும் தலைவன் மக்களைத் தம் மக்களாகவே கருதியிருக்கின்றனர். பரத்தமைத் தாயாய் விளங்கியிருக்கின்றனர். தொடக்கத்துத் தாய் என்பதால் அவள் வயதானவள், வழிமுறைத் தாய் என்பதால் அவள் நடுவயதினள், புத்தேள் என்பதால் அவள் இளவயதினள் என்பதும் தெரிகிறது என்பார், நச்சினார்க்கினியர்.

ஆண்கள் பரத்தையர் பலரோடு கூடி வாழ்ந்திருக்கின்றனர் என்பதை இப்பாடல் உணர்த்துகிறது.

சொற்பொருள்

1. ஞாலம் - உலகம்; வறம் - வறட்சி; குணக்கு - கிழக்கு; ஏர்பு - ஏறி.
2. கொண்மூ - மேகம்.
3. தவநெடிது - மிகவும் நீண்ட நேரம்.
4. புத்தேளிர் - தெய்வம்; கோட்டம் - கோவில்.
5. புக்க - சென்று வந்த.
6. மேயாயே - விருப்பம் கொண்டவள் போல; வழிமுறை - பிறகு.
7. காயாமை - சினவாமை.
8. மடக்குறு மாக்கள் - மடப்பம் பொருந்திய இளமகளிர்; ஓரை - விளையாட்டு.

10. அடக்கம் இல் போழ்து - வேண்டியவாறு ஒழுகும் பொழுதில்; காமுற்ற - விரும்பிய.
11. தொடக்கத்துத் தாய் - தலைவனுக்கு முதல் பரத்தை; உழை - இடம், இல்லம்.
12. மருப்பு - (கொம்பு, இங்குக்)காளை; பூண் - அணிகலம்; கையுறை - அன்பளிப்பு.
13. நகைமுகம் காட்டு - சிரி.
14. முத்தம் கார் சோர்வ - முத்தாரம் அறுந்து வீழ்வது போல.
15. வழிமுறைத்தாய் - தலைவனுக்கு இரண்டாம் பரத்தை.
16. மயங்கு நோய் - மனம் மயங்குதற்குக் காரணமான காமநோய்.
17. முயங்கினள் - தழுவினள்; முத்தினள் - முத்தமிட்டனள்.
18. யாரேம் ஆகுதும்? - என்ன உறவுள்ளவள் ஆவேன்?
19. வனப்பு - அழகு; நாடி - தேடி.
20. அரி - கண்வரி; மதர்த்த - செழித்த.
21. பெருமான் - (உன்) தந்தை; ஒவ்வாதி - ஒத்திராதே.
22. இனிது ஆகி - இனிய மொழிகள் கூறி; விடுத்தனன் - அவளை விட்டு நீங்கினான்.
23. தலைக் கொண்டு - தலைமைப்பாடு கொண்டு; காயும் - வெகுளும்.
24. புலத்தகை - மனம் வேறுபடும் தன்மை கொண்ட; புத்தேள் - புதியவள்; அலைக்க - தண்டிப்பதற்கு.
25. கோல் - குச்சி; தா - கொடு.
26. நோய்கூர - துன்பமடைய.
27. எறிந்து அற்றாக - இரையைக் கொத்திச் செல்வது போல.
28. தொடி - வளையல்; படையாக - படைக்கலமாய்க் கொண்டு; உகிர் - நகம்.
29. சிறுகண்ணும் - சிறிய இடமும்; உட்காள் - வருந்தாள்.
31. பெருமான் - மகனே.
32. துன்னுதல் - நெருங்குதல்; திறவதின் - (நீ செல்லுதற்குச்) செவ்வியான; முன்னி - அடைந்து.
33. ஐயம் இல்லாதவர் இல் - உன் தந்தை இருப்பான் என்று ஐயப்படக் கூடியவர் இல்லத்திலிருந்து; ஒழிய - நீங்கி.
34. கையாறு உடையவர் - காதலனை நீங்கித் துன்புறுபவர்; இல் அல்லால் - அல்லாது பிற இல்லங்களுக்கு.
35. இது இனி உன் கடமையாய் இருக்கட்டும்.

தலைவி கூற்று

கலித்தொகை 84 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

கடவுட் கடிநகர்தோறும் வலங்கொளீஇ வரற்குச் சேடியரோடு மகற் போக்கிய தலைமகள், அவன் நீட்டித்து வந்துழி, 'தாயர்கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப் பரத்தையுள்ளிய வழி'யின்கண், தந்தை தொடி மகன் கைக்கண்டு புலந்தாள் தன்னுளே அழிந்து கூறியது.

கூற்று விளக்கம்

'கடவுளர் கோட்டங்களுக்குச் சென்று வலங்கொண்டு வழிபட்டு வருக' என மகனைத் தோழியோடு அனுப்பினாள், தலைவி. மகனை அவன் தந்தை விரும்பும் பரத்தையர் அழைத்துச் சென்றமையால் தோழியும் மகனும் காலங்கடந்து வந்தனர். தந்தை அணிந்திருந்த தொடியை மகன் கையில் கண்டு, தலைவி புலந்து தன்னுள்ளே அழிந்து கூறியது.

தலைவி தோழியை வினாவுதல்

உறுவளி தூக்கும் உயர்சினை மாவின்
நறுவடி ஆர்இற் றவைபோல் அழியக்
கரந்துயான் அரக்கவும், கைநில்லா வீங்கிச்
சுரந்தஎன் மென்முலைப் பால்பழு தாக,நீ
நல்வாயில் போத்தந்த பொழுதினான்; 'எல்லா!
கடவுட் கடிநகர் தோறும் இவனை
வலங்கொளீஇ வா'எனச் சென்றாய்; விலங்கினை
ஈரம் இலாத இவன்தந்தை பெண்டிருள்
யார்இல் தவிர்ந்தனை? கூறு.

தோழி கூறுதல்

நீருள், அடைமறை ஆய்இதழ்ப் போதுபோல் கொண்ட
குடைநிழல் தோன்றும்நின் செம்மலைக் காணூஉ,
'இவன்மன்ற யான்நோவ, உள்ளம்கொண்டு உள்ளா
மகனல்லான் பெற்ற மகன்'என்று அகன்நகர்
வாயில் வரைஇறந்து போத்தந்து, தாயர்
தெருவில் தவிர்ப்பத் தவிர்ந்தனன்; மற்று,அவர்

தத்தம் கலங்களுள், கையுறை', என்றுஇவற்கு
ஒத்தவை ஆராய்ந்து, அணிந்தார்.

(தலைவி தனக்குள்)

பிறன்பெண்டிர்
ஈத்தவை கொள்வானாம், இஃதுஒத்தன்; சீத்தை,
செறுதக்கான் மன்ற பெரிது.

தலைவி புதல்வனொடு புலந்து உரைத்தல்

சிறுபட்டி; ஏதிலார் கை,எம்மை எள்ளுபு நீதொட்ட,
மோதிரம் யாவோ?யாம் காண்கு.
அவற்றுள், நறாஇதழ் கண்டன்ன செவ்விரற்கு ஏற்பச்
சுறாஏறு எழுதிய மோதிரம் தொட்டாள்
குறிஅறிந்தேன்; காமன் கொடிஎழுதி, என்றும்
செறியாப் பரத்தை 'இவன்தந்தை மார்பில்
பொறிஒற்றிக் கொண்டுஆள்வல்' என்பது, தன்னை
அறீஇயச் செய்த வினை.

அன்னையோ? - இஃது ஒன்று.
முந்தைய கண்டும் எழுகல்லாது என்முன்னர்
வெந்தபுண் வேல்எறிந்தற்றா, இஃதுஒன்று.

தந்தை இறைத்தொடி மற்றுஇவன் தன்கைக்கண்
தந்தார்யார், எல்லாஅ! இது?

இஃதுஒன்று, என்ஒத்துக் காண்க, பிறரும் இவற்குஎன்னும்
தன்னலம் பாடுவி தந்தாளா; நின்னை
இதுதொடுக, என்றவர் யார்?

தலைவி தன் நெஞ்சு அழிந்து கூறுதல்

அஞ்சாதி; நீயும் தவறிலை; நின்கை இதுதந்த
பூஎழில் உண்கண் அவளும் தவறிலள்;
வேனில் புனல்அன்ன நுந்தையை நோவார்யார்?
மேல்நின்றும் எள்ளி, 'இதுஇவன் கைத்தந்தாள்,
தான்யாரோ?' என்று வினவிய, நோய்ப்பாலேன்
யானே தவறுடை யேன்!

தெளிவுரை

தலைவி தோழியிடம், "தோழி! நீ வெளியில் செல்லும்போது, நான் உன்னிடம், 'இவனைக் கோவில்களுக்கு அழைத்துச் சென்று வணங்கச்செய்து திரும்பி வா' என்றேன். நீ சென்று குறித்த நேரத்தில் திரும்பவில்லை. காற்றால் வேகமாய் அசைந்த மாமரத்தில் உள்ள மாவடு, காம்பு கழன்றதால் விழுந்து அதனிடம் பால் பெருகுவதுபோல் என் மார்புப் பால் பெருகி வெளிப்பட, நான் அதைப் பிறர் அறியாவண்ணம் மறைத்துத் தேய்த்தாலும் நில்லாமல் வழிந்து வீணாகிவிட்டது. அன்பில்லாத இவன் தந்தைக்கு நட்பான மகளிருள் யார் வீட்டில் இத்துணை நேரம் தங்கினாய்" என்று கேட்டாள்.

அதைக் கேட்ட தோழி, "பொய்கை இலையால் மறைக்கப் படும் தாமரைப் பூவைப்போல் குடை நிழலில் உன் மகன் சென்றான். அவனைப் பரத்தையர் கண்டனர்; 'நம் நெஞ்சத்தைக் கொள்ளைகொண்டு, இப்போது நினையாமல் இருக்கின்ற மனிதப் பண்பில்லாதவன் மகன்தான் இவன்' என்று கூறித் தம் வீட்டு வாயிலை விட்டு வந்து, தெருவில் இவனுக்கு முன்னால் நின்றுகொண்டனர். இவனும் நின்றான். அவர்கள் தத்தம் அணிகலன்களுள் இவனுக்குப் பொருத்தமானவை எவை என ஆராய்ந்து அவற்றை இவனுக்கு அன்பளிப்பாய் அணிவித்தனர்" என்றாள்.

தோழியின் மறுமொழியைக் கேட்ட தலைவி, 'இவன், பரத்தையர் கொடுத்தவற்றை ஏற்றுக்கொண்டிருக்கிறானே! இவன் குணமில்லாதவன். பெரிதும் வெறுக்கத்தக்கவன்' என்று தன்னுள் கூறி வருந்தினாள்.

பின்னர் அவனிடம், "என் கட்டுக்கு அடங்காத சிறுவனே! என்னை வெறுக்கின்ற அயலார் யாரோ கொடுக்க, நீ அணிந்து கொண்ட மோதிரங்கள் எங்கே, காட்டு?" என்றாள். அவன் காட்டினான்.

பரத்தை ஒருத்தி, ஆண் சுறாமீன் வடிவத்தில் அமைந்திருந்த அழகிய மோதிரத்தைச் சிவந்த அவன் விரலுக்கு ஏற்றபடி

அணிவித்திருந்தாள். "இதன் கருத்து என்ன என்பதை அறிந்து கொண்டேன். சுறாமீன், காமனின் கொடியில் அமைந்திருப்பது. மன்மதனின் கொடியாகிய மீனை மோதிரத்தில் பதித்திருப்பது போல, இவன் தந்தையின் மார்பில் என்னையே பதித்து நானே அவனை ஆட்கொள்வேன்' என்பதை நான் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இம்மோதிரத்தை உனக்கு அணிவித் திருக்கின்றாள்" என்றாள், தலைவி.

அதைக் கேட்ட மகன், "அன்னையே! இதோ பார்! இன்னோர் அணிகலன்" என்று காட்டினான்.

அதைப் பார்த்த தலைவி, "முன்னர்க் காட்டிய மோதிரத்தைக் கண்டே தலைநிமிர இயலாதிருக்கும் என்முன், வெந்த புண்ணிலே வேல் எறிந்தாற்போல் இதைக் காட்டுகிறாயே! இஃது உன் தந்தையினுடைய முன் கைத்தொடி. இந்த வளையைத் தந்தவள், இதன்மூலம் என்னைவிட அவளே அழகுள்ளவள் என்றும், அதனால்தான் உன் தந்தை தன் வளையையே அவளுக்குத் தந்து, அவளை விரும்பியுள்ளார் என்றும் பெருமை பேசிக்கொள்ளவே இவ்வாறு செய்துள் ளாள். இதனை அணியுமாறு உன்னிடம் தந்தவர் யார்?" என்றாள்.

(மகன் அஞ்சக் கண்டு) "அஞ்சாதே மகனே! நீ தவறற்றவன். உனக்கு இதனை அணிவித்த மலர்க்கண்ணாளும் தவறற்றவள். வேனிற்காலத்துத் தண்ணீர் எல்லாராலும் விரும்பப்படுவது போல உன் தந்தையும் பலராலும் விரும்பப்படுகிறார். அவரைக் கடிந்துகொள்பவர் இங்கு எவருமிலர். அதனால் இத்தொடியை உனக்கு அணிவித்தவர் யார் என்று கேட்ட நானே தவறிழைத் தவள் (என் கணவனை வேறு எவரும் விரும்பாதவாறு செய்திட என்னால் இயலாததால் நானே தவறிழைத்தவள்!)" என மனமழிந்து தலைவி கூறினாள்.

கருத்து

'மகனே! நீ தவறிழைத்தவன் அல்லன்; பரத்தையரும் தவறிழைத்தவர் அல்லர்; தலைவனை அவர் வீடு செல்லாது தடுக்க இயலாத நானே தவறுள்ளவள்' என்றாள் தலைவி.

உரை விளக்கம்

மகனை அழைத்துச் சென்று கோவில்களில் வழிபட்டுத் திரும்புமாறு தலைவி, தோழியிடம் கூறினாள். அவர்கள் காலம் கடந்து திரும்பினர். காரணம் என்ன என்று தலைவி வினவினாள். தோழி, "திரும்புகையில் வழியில் தலைவனை விரும்பும் பரத்தையர், மகனைத் தடுத்து நிறுத்தினர். ஏற்ற அணிகலன்களை அன்பளிப்பாய் அவனுக்கு அணிவித்தனர். அதனால் நேரம் கடந்தது" என்றாள், தோழி. 'அன்பிலாப் பெண்டிரான பரத்தையிடம் அணிகலன் பெற்றது தவறு' என்று மகனைக் கண்டித்து அவர்கள் அணிவித்த நகைகளைக் காட்டுமாறு சொன்னாள். மகன் தன் விரலில் அணிந்திருந்த சுறாமீன் வடிவம் பொறித்த மோதிரத்தைக் காட்டினான். 'சுறாமீனைத் தன் கொடியில் பொறித்துக் காமன் உலகைக் கவர்கிறான். நான் என்னையே தலைவன் மார்பில் பொறித்து அவனை என் வயப்படுத்திக்கொண்டேன்' என்று எனக்கு அறிவிப்பதற்காக அவள் இதை உனக்கு அணிவித்திருக்கிறாள்" என்று மகனிடம் சொன்னாள்.

மகன் அடுத்து ஓர் அணிகலனைக் காட்டினான்; தலைவி அதிர்ச்சியுற்றாள். அது தலைவன் தன் கையில் அணியும் தொடி. " 'தான் அணிவதையே தலைவன் எனக்குக் கொடுத்திருப்பதால் நானே எல்லோரையும்விட அவனைக் கவர்ந்துள்ளேன்' என்று பெருமை பேசிக்கொள்ளவே இதனை அப்பரத்தை அணிவித் திருக்கிறாள்" என்று கூறியபடி, "இந்நகையை உனக்குத் தந்தவர் யார்?" என மகனிடம் கேட்டாள். மகன் அஞ்சினான். தாய், 'அஞ்சாதே! நீயும் தவறு இழைக்காதவன்; இதனை அணிவித்த அவளும் தவறு இழைக்காதவள். உன் தந்தையும் தவறு இழைக் காதவர்; நானே தவறு இழைத்தவள்' என்று மனமழிந்து கூறினாள்.

குறிப்பு

பரத்தையரிடம் செல்லும் எண்ணம் எழாதவாறு கணவனுக்கு இன்பந் தருவதில் மனைவி வல்லவளாயிருக்க வேண்டும் என இப்பாடல் குறிக்கிறது.

சொற்பொருள்

1. உறுவளி - கடுமையான காற்று; தூக்கும் - அசைக்கும்; சினை - கிளை; மா - மாமரம்.
2. வடி - மாம்பிஞ்சு, மாவடு; ஆர்இற்று - காம்பு அறுபட்டு.
3. கரந்து - மறைத்து; அரக்குதல் - தேய்த்தல்; கை நில்லா - நிற்காத.
4. பழுதாக - வீணாகிவிட.
5. நல் வாயில் - நல்ல வீடு.
6. கடிநகர் - கோவில்.
7. வலங்கொளீஇ - வலம் வந்து வணங்கச்செய்து; விலங்கினை - நேரம் கடந்தாய்.
8. ஈரம் - அன்பு; பெண்டிர் - பரத்தையர்.
9. தவிர்ந்தனை - தங்கினாய்.
10. அடை மறை - இலையால் மறைக்கப்பெற்ற; போது - மலர்.
11. செம்மல் - மகன்; காணூஉ - கண்டதும்.
12. உள்ளா - நினையாத.
13. மகன் அல்லான் - மனிதப்பண்பு இல்லாதவன்; அகன்நகர் - அகன்ற வீடு.
.4. இறந்து - தாண்டி; போத்தந்து - வெளிவந்து.
.5. தவிர்ப்ப - தடுக்க; தவிர்ந்தனன் - செல்வதைத் தவிர்த்து நின்றான்.
.6. கலம் - அணிகலன்; கையுறை - அன்பளிப்பு.
.7. ஒத்தவை - பொருத்தமானவை; பிறன் பெண்டிர் - பரத்தையர்.
.8. ஈத்தவை - கொடுத்தவை; ஒத்தன் - ஒருத்தன்; சீத்தை - குணமில்லாதவன்.
.9. செறுதக்கான் - தண்டிக்கத் தக்கவன்.
20. சிறுபட்டி - கட்டுக்கடங்காதவன்.
21. காண்கு - காண்பேன்.
22. நறா - நறாம்பூ; செவ்விரல் - சிவந்த விரல்.
23. சுறா ஏறு - ஆண்சுறாமீன்; தொட்டாள் - அணிவித்தாள்.
24. காமன் கொடி - (காமன் கொடியில் பொறிக்கப்பட்ட) சுறாமீன்.
25. செறியா - அன்பில்லாத.
26. பொறி - முத்திரை; ஆள்வல் - ஆட்கொள்வேன்.
27. வினை - செயல்.
29. எழுகல்லாது - தலை நிமிர இயலாது.
30. எறிந்தற்றா - எறிந்தது போல.
31. இறைத்தொடி - கைவளை.
34. பாடுவி - புகழ்ந்துகொள்பவள் (பரத்தை).
35. தொடுக - அணிந்துகொள்.

38. நோவார் - வருத்தப்பட்டுக்கொள்பவர்.
40. நோய்ப்பாலேன் - குற்றமுள்ளவள்.

தலைவி கூற்று

கலித்தொகை 83 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

விளையாட்டிக்கொண்டு வரற்குச் சேடியரோடு மகற் போக்கிய தலைமகள், அவன் நீட்டித்து வந்தவழி, 'தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை, மாயப் பரத்தையுள்ளிய வழி'ச் சிறைப்புறமாகக் கேட்டுவந்த தலைமகனைக் கண்டு, அவள் தன்னுள்ளே புலந்தது.

கூற்று விளக்கம்

தலைவி தன் மகனை விளையாடிவிட்டு வருமாறு தோழியுடன் அனுப்பினாள். வரக் காலதாமதமாகவே தோழியிடம் ஏன் என்று கேட்டாள். தோழி, வழியில் தலைவனுக்குப் பழக்கமான பரத்தையர் இவனைத் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்றதால் காலம் கடந்துவிட்டது என்றாள். அந்நிலையில் தலைவன் சிறைப்புறமாய் நிற்ப, அவன் கேட்கும்வண்ணம் தலைவி தன்னுள்ளே வருந்திக் கூறியது.

தலைவி தன் புதல்வனுடன் சென்ற தோழி, நீட்டித்து வந்தமைபற்றி வினாவுதல்

பெருந்திரு நிலைஇய வீங்குசோற்று அகல்மனை,
பொருந்துநோன் கதவுஒற்றிப் புலம்பியாம் உலமர
இளையவர் தழூஉ ஆடும் எக்கர்வாய் வியன்தெருவின்
விளையாட்டிக் கொண்டு வரற்குஎனச் சென்றாய்,
உளைவுஇலை; ஊட்டல்என் தீம்பால் பெருகும்அளவெல்லாம்
நீட்டித்த காரணம் என்?

தோழியின் மறுமொழி

கேட்டீ—
பெருமடல் பெண்ணைப் பிணர்த்தோட்டுப் பைங்குரும்பைக்
குடவாய்க் கொடிப்பின்னல் வாங்கித் தளரும்
பெருமணித் திண்தேர்க் குறுமக்கள் நாப்பண்,

அகன்நகர் மீள்தருவா னாகப், புரிஞெகிழ்பு
நீல நிரைப்போது உறுகாற்கு உலைவனபோல்,
சாலகத்து ஒல்கிய கண்ணர், 'உயர்சீர்த்தி
ஆலமர் செல்வன் அணிசால் மகன்விழாக்
கால்கோள்என்று ஊக்கி, கதும்என நோக்கி,
திருந்தடி நூபுரம்ஆர்ப்ப இயலி, விருப்பினால்,
கண்ணும், நுதலும், கவுளும், கவவியார்க்கு,
ஒண்மை எதிரிய அங்கையும், தண்ணெனச்
செய்வன சிறப்பின் சிறப்புச்செய்து, 'இவ்இரா
எம்மொடு சேர்ந்துசென் றீவாயால்; செம்மால்!
நலம்புதிது உண்டு,உள்ளா நாண்இலி செய்த
புலம்புஎலாம் தீர்க்குவேம் மன்'என்று இரங்குபு
வேற்றுஆனாத் தாயர் எதிர்கொள்ள, மாற்றாத
கள்வனால் தங்கியது அல்லால், கதியாதி,
ஒள்இழாய்! யான்தீது இலேன்.

தலைவி கூறுகிறாள்

எள்ளலான், அம்மென் பணைத்தோள் நுமர்வேய்ந்த கண்ணியோடு
எம்இல் வருதியோ? எல்லா!நீ தன்மெய்க்கண்

தனக்குள்

அம்தீம்சொல் நல்லார் அணிந்த கலம்காட்டி,
முந்தை இருந்து மகன்செய்த நோய்த்தலை
வெந்தபுண் வேல்எறிந் தற்றால், வடுவொடு
தந்தையும் வந்து நிலை.

தெளிவுரை

(தலைவி தோழியை வினவுதல்)

"பெருஞ்செல்வம் நிலை பெற்ற, நெல் மிக உடைய அகன்ற இல்லத்தில் வாயிலின் இரட்டைக் கதவைச் சேர்ந்து நின்று மகன் வரவை எதிர்பார்த்து நான் தனித்து வருந்துகிறேன். பிள்ளைகள் கூடி விளையாடும் மணல் செறிந்த தெருவில் மகனை விளை யாட விட்டு அழைத்து வருவதாய்க் கூட்டிச் சென்றாய்.

"பிள்ளைக்கு ஊட்டாமல், என் இனிய பால் முழுவதும் சுரந்து வழிந்து வீணாகின்றதே! நீ சற்றும் வருத்தம் கொள் ளாமல் காலம் நீட்டித்ததற்குக் காரணம் என்ன?" என்று தலைவி தோழியிடம் கேட்டாள்.

தோழியின் மறுமொழி :

"கேள்; பெரிய மடலைக் கொண்ட பனையின் சொரசொரப் பான, வெட்டப்பட்ட நுங்குக்காய்களை உருளும் தேராக்கி, அதனைக் கயிற்றிலே கட்டிச் சிறுபிள்ளைகள் தெருவில் தளர்நடையோடு இழுத்து வந்தனர். அவர்களுக்கு நடுவே மணிகள் அழுத்தப்பெற்ற தேரிலே நம் அகன்ற வீட்டுக்கு வந்து கொண்டிருந்தோம். வரிசையாய் மலர்ந்த நீல மலர்கள் ஒருசேர அசைவனபோலத் தெருவோரச் சாளரங்களிலிருந்து மகளிர் பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்கள் (தெருவில் பிள்ளைகளை யும் தேரையும் கண்டு) மிக்க புகழுடைய ஆல்அமர் செல்வன் மகன் முருகப்பெருமானின் திருவிழாத் தொடங்கிவிட்டது போலும் என்று கருதினர். விரைந்து நோக்கி, தம் திருந்தடியின் சிலம்புகள் ஒலிக்க வந்து, இவனைப் பார்த்தனர். இவன் இன்னார் மகன் என்பதை அறிந்துகொண்டனர். அன்புடன், 'உன் கண், நெற்றி, கன்னம், கை ஆகியவற்றைக் கொண்டு உன் தாய்க்கும் தந்தைக்கும் இன்பம் தருவதுபோல எங்களுக்கும் இன்பம் தந்து இன்று இரவு மட்டும் எங்களோடு தங்கிச் செல்' என்று வேண்டினர். 'எங்கள் நலத்தின் புதுமையை நுகர்ந்து, எங்களை நினையாது கைவிட்டு நாணமிலாது நீங்கினவன், உன் தந்தை. நீ தங்கிச் சென்றால் அவன் செய்த துயரெலாம் நாங்கள் தீரப்பெறுவோம் மகனே' என்று இரங்கிக் கேட்டனர். வேற்றுத் தாயர் வந்து அவ்வாறு எதிர்கொள, அதனை மறுக்காது அவர்கள் வீட்டுக்குச் சென்று பொழுதைக் கழித்த உன் மகனாகிய கள்வனால்தான் காலம் கழித்துத் திரும்ப நேரிட்டது; இதில் என் தவறு ஏதுமில்லை."

தோழி கூறியதைக் கேட்டு, தலைவி தன் மகனைக் கடிந்து, "அந்தப் பரத்தையர்கள் சூட்டிய மாலையுடன் வந்துள்ளாயே" என்று கூறிக்கொண்டிருக்கும்போது தலைவன் வந்து அங்கு

ஒருபுறம் நிற்பதைக் கண்டாள். அவனுக்குக் கேட்கும்வண்ணம், ‘உன் தந்தை என் நெஞ்சைப் புண்ணாக்கியது போதாதென்று, வெந்த புண்ணிலே வேல் எறிவது போல, உன் தந்தை விரும்பும் பரத்தையர், தம் அணிகலன்களால் உண்டாக்கிய வடுக்களோடு இங்கு வந்து நிற்கிறாயே!'' என்று தலைவி கடிந்து கூறினாள்.

கருத்து

தலைவன் சிறைப்புறமாய் நின்றபோது தலைவி, மகனிடம், ‘உன் தந்தை பரத்தையர் வீடு சென்று நெஞ்சைப் புண்ணாக்கியது போதாதென்று நீயும் அவர்கள் அணிவித்த அணிகலன்களை அணிந்து வந்து என் முன் நிற்கிறாயே’ என்று வருந்திக் கூறினாள்.

விளக்கம்

விளையாடச் சென்ற மகன் இளமகளிராலும் அவன் தந்தை விரும்பும் பரத்தையராலும் இடையீடுபட்டுக் காலந்தாழ்த்தி வந்தான். தந்தையும் பரத்தையர் செய்த கோலங்களோடு அப்போது அங்கு வந்து ஒருபுறம் நின்றனன். மகன் செய்ததை ஆற்றாது அவனைக் கடிந்துகொண்டிருக்கும் நிலையில், தலைவனும் பரத்தையர் செய்த அடையாளங்களோடு அங்கு வந்தது தாங்கொணாத் துயரைத் தலைவிக்குத் தந்தது. அவன் வந்தது, ‘வெந்த புண்ணிலே வேலெறிந்ததுபோல’ இருக்கிற தெனத் தலைவி வருத்தம் கலந்த சினத்துடன் அவனை இடித்துரைத்தாள்.

சொற்பொருள்

1. பெருந்திரு - மிக்க செல்வம்; வீங்குசோறு - நிறைந்த நெல்.
2. பொருந்து நோன் கதவு - ஒன்றோடொன்று வந்து பொருந்தக்கூடிய வலிமையான இரட்டைக்கதவு; ஒற்றி - சேர்ந்து, பொருந்தி; உலமர - வருந்தியிருக்க.
3. இளையவர் - இளஞ்சிறார்; தழூஉ - தழுவிக்கொண்டு; எக்கர் வாய் - மணல் நிறைந்த; வியன்தெரு - அகன்ற தெரு.
4. வரற்கு - வருவதாய்.
5. உளைவு இலை - கவலையின்றி.
7. கேட்டீ - கேள்.

8. பெண்ணை - பனை மரம்; பிணர் - சொரசொரப்பு; தோடு - தோல்.
9. குடவாய் - வளைவான வாய்ப்பகுதி; கொடிப்பின்னல் - கொடியால் கட்டி; வாங்கி - இழுத்து; தளரும் - சோர்வடையும்.
10. குறுமக்கள் - இளஞ்சிறார்; நாப்பண் - நடுவே.
11. அகன்நகர் - அகன்ற வீடு; புரிஞெகிழ்பு - இதழ் நெகிழ்ந்த.
12. நீல நிரைப்போது - வரிசையாய் அமைந்த நீல மலர்; உறுகாற்கு - வீசுகின்ற காற்றுக்கு, (கால் - காற்று); உலைவன - அசைவன.
13. சாலகம் - சாளரம்; ஒல்கிய - சுருங்கிய; கண்ணர் - கண்களைக் கொண்டவர்; கீர்த்தி - பெருமை.
14. ஆல்அமர் செல்வன் மகன் - ஆலமரத்தடியில் அமர்ந்து ஞானமருளிய சிவபெருமான் மகன் முருகன்.
15. கால்கோள் - தொடக்கம்; ஊக்கி - நினைத்து; கதும் என - விரைவாய்.
16. நூபுரம் - சிலம்பு; ஆர்ப்ப - ஒலிக்க; இயலி - நடந்து.
17. கவுள் - கன்னம்; கவவியார்க்கு - தழுவியவர்க்கு.
18. ஒண்மை எதிரிய - உள்ளங்கையை ஒளி வீசுமாறு அசைத்துக் காட்டிய.
19. இவ்இரா - இந்த இரவு.
21. உள்ளா - நினையாத; நாண்இலி - வெட்கம் இல்லாதவன் (உன் தந்தை).
22. புலம்பு - வருத்தம். (உன் தந்தை பிரிந்ததால் ஏற்பட்ட வருத்தமெலாம் தீரப்பெறுவோம்.)
23. வேற்று ஆனாத் தாயர் - தந்தையோடு உறவு கொண்டிருப்பதால் தாயாய்க் கருதப்படுபவர்; எதிர்கொள்ள - விரும்பி அழைக்க; மாற்றாத - அதை மறுக்காத; கதியாதி - சினவாதே.
27. மெய்க்கண் - உடம்பில்.
28. கலம் காட்டி - கலன்களால் உண்டான குறிகளைக் காட்டியபடி.
29. நோய்த்தலை - துன்பத்தினும் மிகுதியாய்.
30. வடுவொடு - பரத்தையர் செயல்களால் உண்டான வடுக்களுடன்.
31. நிலை - நிற்கின்றான்.

தலைவி கூற்று

கலித்தொகை 85 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் தன் மகனைப் பாராட்டிப் பால் கூறிட்டு ஊட்டுகின்றவழிச் சிறைப்புறமாகக் கேட்டுப்புக்க தலைமகனைக் கண்டு, தன்னுள்ளே புலந்து, புலவியோடு பின்னும் பாராட்டியது.

கூற்று விளக்கம்

தலைவி தன் மகனைப் பாராட்டி விளையாட்டுக் காட்டியவாறு பாலைக் கூறிட்டு உண்பிக்கும் பொழுது, அங்குச் சிறைப்புறமாய்த் தலைவன் வந்து நிற்க, அவன்மீது கோபம் கொண்ட தலைவி அவ்வுணர்ச்சியோடு மகனிடம் கூறியது.

பாலைக் கூறிட்டு ஊட்டுதல்:

குழந்தைக்குப் பாலூட்ட விரும்பும் தாய்மார் அக்குழந்தை விரும்பி உண்ணும் வகையில், 'இந்தப் பகுதிப் பால் தந்தைக்கு; இந்தப் பகுதி அத்தைக்கு; இந்தப் பகுதி எனக்கு; மீதம் உள்ளவை உனக்கு' என்று அதனைக் கூறிட்டுச் சொல்லி ஊட்டுவர். (கூறிடுதல் என்பது வகைப் படுத்தல் ஆகும்.)

இப்படிப் பாலூட்ட விரும்பும் தாய், தன் மகன் அணிந்துள்ள அணிகலன்கள், ஆடை முதலியவற்றைச் சுட்டிப் பாராட்டி, விளையாட்டை நிறுத்திவிட்டு வந்து பாலுண்ணுமாறு அவனை அழைப்பாள். அந்த வகையில் தாய் தன் மகனை அழைப்பதாய் அமைந்துள்ள பாடல் இது.

காலவை, சுடுபொன் வளைஇய ஈரமை சுற்றொடு
பொடியழல் புறம்தந்த செய்வுறு கிண்கிணி,
உடுத்தவை, கைவினைப் பொலிந்த காசமை பொலங்காழ்; மேல்
மைஇல் செந்துகிர்க் கோவை; அவற்றின்மேல்
தைஇய, பூந்துகில், ஐதுகழல் ஒருதிரை;
கையதை, அலவன் கண்பெற அடங்கச் சுற்றிய
பலவுறு கண்ணுள் சிலகோல் அவிர்தொடி;
பூண்டவை, எறியா வாளும் எற்றா மழுவும்
செறியக் கட்டி ஈரிடைத் தாழ்ந்த

பெய்புல ழூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆனேற்று அவிர்பூண்;
சூடின, இருங்கடல் முத்தமும், பன்மணி பிறவும்ஆங்கு,
ஒருங்குடன் கோத்த உருள்அமை முக்காழ்;மேல்
சுரும்பார் கண்ணிக்குச் சூழ்நூ லாக,
அரும்பவிழ் நீலத்து ஆயிதழ் நாண,
சுரும்பாற்றுப் படுத்த மணிமருள் மாலை;
ஆங்க, அவ்வும் பிறவும் அணிக்குஅணி யாக,நின்
செல்வுறு திண்தேர்க் கொடுஞ்சினை கைப்பற்றிப்
பைபயத் தூங்கும்நின் மெல்விரல் சீறடி
நோதலும் உண்டு;ஈங்கு என்கை வந்தீ,
செம்மால்! நின்பால் உண்ணிய.

பொய்போர்த்துப், பாண்தலை யிட்ட பலவல் புலையனைத்
தூண்டிலா இட்டுத் துடக்கித்தான் வேண்டியார்
நெஞ்சம் பிணித்தல் தொழிலாத் திரிதரும்
நுந்தைபால் உண்டி, சில;

நுந்தைவாய், மாயச்சூள் தேறி, மயங்குநோய் கைமிகப்
பூஎழில் உண்கண் பனிபரப்பக் கண்படா
ஞாயர்பால் உண்டி, சில;

அன்னையோ, யாம்எம் மகனைப் பாராட்டக் கதுமெனத்
தாம்வந்தார், தம்பா லவரோடு; தம்மை
வருகஎன்றார், யார்கொலோ, ஈங்கு?

என்பால்அல், பாராட்டு உவந்தோய்! குடிஉண் டீத்தைஎன்
பாராட்டைப் பாலோ சில;

செருக்குறித் தாரை உவகைக்கூத் தாட்டும்
வரிசைப் பெரும்பாட்டொடு எல்லாம் பருகீத்தை—
தண்டுவென்,ஞா யர்மாட்டைப் பால்.

தெளிவுரை

"*செம்மலே! ஒளி வீசும் பொன்னைத் தணலில் உருக்கி, வார்த்தெடுத்து, வளைத்து, இரு சரங்களாக்கி நீ அணிந்திருக்கும்*

பாதசரம் என்னும் காலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றினுள் ஒலியெழுப்பும் கிண்கிணிகள் அமைந்துள்ளன.

“நீ உன் இடுப்பில் அணிந்திருக்கும் வடம், கை வேலைப் பாடுகள் மிகுந்த பொற்காசுகளையும் பவளங்களையும் கொண்டது; அதன்மேல் பூ வேலைப்பாட்டுடன் கூடிய ஆடையை அணிந்திருக்கிறாய்.

“நீ கையில் அணிந்துள்ள தொடி, நண்டின் கண் போன்று, ஒளிவிடும் வடிவமைப்பைக் கொண்டு அரும்புத்தொழில் நுட்பம் சுற்றிலும் அமையப்பெற்று அழகுற விளங்குகிறது.

“நீ கழுத்தில் அணிந்துள்ள பவள மாலையில் எருதின் வடிவம் (இடப முத்திரை) பதிக்கப்பட்டுள்ளது. அதற்கு இருபுறமும் வாள், மழு போன்ற உருவங்கள் பொன்னால் செய்யப்பெற்றுக் கோக்கப்பட்டுள்ளன (ஐம்படைத்தாலி). இந்த மாலை, மழைக் காலத்தில் காணப்படும் தம்பலப்பூச்சியின் நிறம் கொண்டதாய் இருக்கிறது.

“நீ சூடியிருக்கும் தலைமாலையில் கருங்கடலில் கிடைக்கும் முத்துகள் பதிக்கப்பெற்றுள்ளன; பலவகை மணிகளையும் அது கொண்டிருக்கிறது; மூன்று வடமாய் இணைக்கப்பட்டுள்ளது; கருநீல மலரைவிட மிக்க அழகுடன் விளங்குகின்ற கருநிற மணிகள் கோக்கப்பட்டுள்ளன.

“இவற்றையும் இன்னும் பிற அணிகளையும்விட நீ அழகுறத் தோன்றுகிறாய். விளையாட்டுத் தேரை இழுத்துக்கொண்டு மெல்ல மெல்ல அசைந்து வரும் உன் பாதங்கள் நோகும். எனவே, நீ தேர் உருட்டுவதை விட்டுவிட்டு என்னிடம் வந்து சேர்.

“மகனே! உனக்காக நான் வைத்திருக்கும் பாலை உண்ணுதற்கு நீ வரவேண்டும். பொய்யான சொற்களையே கூறி, பாணரின் உதவியுடன் பரத்தையரைத் தன் வசமாக்குவதையே தொழிலாய்க் கொண்டு திரிகிறார், உன் தந்தை. அவர் பங்குக்குள்ள பாலையும் நீயே குடி.

“உன் தந்தையின் பொய்ச் சூளுரையை நம்பி, அவருடன் கூடி, பிறகு அவர் கைவிட்டதனால் மிகவும் வருந்திய, பூப்போன்ற

கண்களில் நீர் ததும்ப வாழும் உன் தாயாகிய நான் உறங்காமல் இருக்கிறேன். என் பங்குக்கு உள்ள பால் இருக்கிறது. அதனையும் நீயே குடி.

(அப்போது அங்குத் தென்பட்ட தலைவனைப் பார்த்து அவன் காதில் விழும்படியாகத் தொடர்ந்து கூறுகிறாள்:) அடி அம்மா! நான் என் மகனைப் பாராட்டிப் பால் அருந்த அழைத்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இவரை இங்கு வருமாறு யார் அழைத்தார்கள்? அதுபற்றி எண்ணாமல், என் பாராட்டுக்கு உவகை கொண்ட மகனே, வா! என் பங்குக்கு உள்ள சிறிதளவுப் பாலையாவது குடி. கோபம் கொண்டவரை மகிழ வைக்கும் தகுதி உனக்குத்தான் உண்டு. நீ உன் தாயார்க்கு உரிய பாலைக் குடி; வா, நானே ஊட்டுகிறேன்" என்று அந்தத் தாய் கூறுகிறாள்.

கருத்து

'மகனே! உன் தந்தையின் தகாத நடத்தையால் இரவெல்லாம் உறங்காது வருந்தியிருக்கும் எனக்கு ஆறுதல் தரப் பாலை அருந்து' என்று தாய் மகனை அழைக்கிறாள்.

குறிப்பு

சங்க காலத்தில் குழந்தைக்கு அணிவித்த அணிகலன்களைப்பற்றி இப்பாடல் விரிவாய்க் கூறுகிறது. கிண்கிணி, பொற்காசு, பவளக்கோவை; அவிர்கொடி இருபுறமும் வாள், மழு போன்ற உருவங்கள் பொன்னால் செய்யப்பட்டுக் கோக்கப்பெற்றுள்ள பவள மாலை, முத்தும் இரத்தினமும் கோக்கப்பட்டுத் தலையில் அணிவிக்கப்படும் மூன்று வடச் சங்கிலி ஆகியவற்றோடு இன்னும் பல அணிகளையும் அணிவித்தனர்.

தாய் தன் மகனுக்குப் பாலூட்டும் முறையும் சிறப்பாக இப்பாடலுள் விவரிக்கப்பட்டுள்ளது.

சொற்பொருள்

1. கால் அவை - காலில் கிடக்கின்றன; சுடுபொன் - பொன் தகடு; ஈரமை - இரண்டாய் அமைந்த.
2. பொடி அழல் புறம் தந்த - பொற்கொடி மூடுதலாலே.

3. உடுத்தவை - நீ இடையில் உடுத்தியிருப்பவை.
4. மைஇல் - அழுக்கில்லாத; செந்துகிர் - செம்பவளம்.
5. தைஇய - உடுத்திய; ஐதுகழல் - நழுவி விழுகின்ற; ஒரு திரை - அழகிய பட்டாடை.
6. கையதை - கையில்; அலவன் - நண்டு.
7. பலவுறு கண்ணுள் - பல வகையான வேலைப்பாடு கொண்ட; கோல் - வளைந்த; அவிர்தொடி - ஒளி வீசுகின்ற வளையல்.
8. எறியா வாள் - வாள் உருவில் செய்யப்பட்ட அணி; எற்றா மழு - மழு வடிவில் செய்யப்பட்ட அணி; எனவே, எறியா வாள், எற்றா மழு எனப்பட்டன.
10. பெய்புல மூதாய் - மழைக்காலத்தில் காணப்படும் தம்பலப்பூச்சி; புகர் நிறம் - கருஞ்சிவப்பு நிறம்.
11. ஆனேறு - எருது; அவிர்பூண் - ஒளி வீசும் மணிப்பூண்
13. முக்காழ் - மூவடம்.
16. நீலமணியால் செய்யப்பட்ட மணிமாலை.
18. கொடுஞ்சி - கைப்பிடியாய் பயன்படும் தேர்த்தட்டின் முன் உள்ள ஓர் அலங்கார உறுப்பு.
19. பையத் தூங்கும் - மெதுவாய் நடக்கும்.
20. என் கை - என் கைக்கு; வந்தீ - வருக.
21. நின்பால் - உன் பங்குக்கான பால்.
22. பாண் தலையிட்ட பலவல் புலையன் - பாணன் முதலாகத் தீயோர் பலர்.
23. தூண்டிலாஇட்டு - தூண்டிலாய் விட்டு; துடக்கி - வலிய கைப்பற்றி.
25. நுந்தைபால் உண்டி - உன் தந்தை பங்குக்கான பால் உணவு.
26. மாயச்சூள் தேறி - பொய்யான சூளுரையினை மெய்யென்று கருதி; மயங்கு நோய் - வருத்த நோய்; கைமிக - அளவு கடக்க.
27. பனி பரப்ப - நீர் படர்ந்து; கண்படா - கண்கள் துளிக்க.
28. ஞாயர் - தாய்.
29. கதுமென - விரைவாய்.
30. தம்பாலவரொடு - தனக்கு வேண்டியவரோடு.
32. உண்டீத்தை - உண்பாயாக.
33. பாராட்டைப் பால் - பாராட்டி ஊட்டும் பால்.
34. செருக்குறித்தாரை - சினம் கொள்ளக் கருதினவர்களை; உவகைக் கூத்தாட்டும் - மகிழ்ச்சிக்கூத்திலே ஆட்டி வைக்கும்.

35. பாட்டொடு - பெருமையோடு.
36. தண்டுவென் - மனம் அமைதி கொள்வேன்; ஞாயர் மாட்டைப் பால் - தாய்மார் பகுதிக்கு உரிய பாலை.

தலைவி கூற்று

கலித்தொகை 80 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன் சிறைப்புறத்தானாகத் தலைமகள் மகனுக்கு உரைத்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீட்டிலிருந்து திரும்பிய தலைவன் தன் வீட்டு வேலி ஓரத்தே நின்றான். அப்பொழுது தலைவி, தலைவனின் காதில் விழும்படி தன் மகனிடம் பேசியது.

நயம்தலை மாறுவார் மாறுக; மாறாக்
கயம்தலை மின்னும் கதிர்விடு முக்காழ்ப்
பயந்தஎம் கண்ணார யாம்காண நல்கித்
திகழ்ஒளி முத்துஅங்கு அரும்பாகத் தைஇப்
பவழம் புனைந்த பருதி சுமப்பக்
கவழம் அறியாநின் கைபுனை வேழம்
புரிபுனை பூங்கயிற்றில் பைபய வாங்கி,
அரிபுனை புட்டிலின் ஆங்கண்ஈர்த்து, ஈங்கே
வருக!எம் பாக மகன்!
கிளர்மணி ஆர்ப்பஆர்ப்பச் சாஅய்ச் சாஅய்ச் செல்லும்
தளர்நடை காண்டல் இனிது;மற்று இன்னாதே
'உளம்'என்னா நுந்தைமாட்டு எவ்வம் உழப்பார்
வளைநெகிழ்பு யாம்காணுங் கால்.

ஐய, காமரு நோக்கினை, அத்தத்தா என்னும்நின்
தேமொழி கேட்டல் இனிது;மற்று, இன்னாதே,
உய்வின்றி நுந்தை நலன்உணச் சாஅய்ச் சாஅய்மார்
எவ்வநோய் யாம்காணுங் கால்.

ஐய, திங்கட் குழவி! வருக!என, யான்நின்னை
அம்புலி காட்டல் இனிது;மற்று, இன்னாதே,
நல்காது நுந்தை புறம்மாறப் பட்டவர்
அல்குல்வரி யாம்காணுங் கால்.

ஐய,எம் காதில் கனங்குழை வாங்கிப் பெயர்தொறும்
போதுஇல் வறுங்கூந்தல்; கொள்வதை, நின்னையான்
ஏதிலார் கண்சாய, நுந்தை வியன்மார்பில்
தாதுதேர் வண்டின் கிளைபடத் தைஇய
கோதை பரிபுஆடக் காண்கும்.

தெளிவுரை

தலைவி, தன் மகனிடம் கூறுகிறாள்:

யானையை நடத்துகின்ற என் மகனே! இங்கே வா! உன்னிடமும் அறவே அன்பில்லாதவராய் ஆகிவிட்டவர், உன் தந்தை; அவ்வாறே அவர் இருந்துவிட்டுப் போகட்டும்! உன்னைப் பெற்ற என் கண்களுக்கு விருந்தாக, தலையில் கிடந்து மின்னும் மூன்றுவட முத்துமாலையை அணிந்த என் மகனே, நான் காண வா! ஒளி வீசும் முத்துகளை அரும்பாய் விளிம்பில் அழுத்திப் பவளத்தால் வட்டமாய்ச் செய்யப்பெற்ற சிறு பலகையில், கவளத்தை அறியாத, மரத்தால் செய்யப்பெற்ற யானைப்பொம்மை பதித்து வைக்கப்பட்டுள்ளது. உருண்டு செல்லக்கூடிய அந்தப் பலகை கிண்கிணிகள் பொருந்திய உன் காலில் சிறு கயிற்றால் கட்டப்பட்டுள்ளது. அதை மெல்ல மெல்ல இழுத்துக்கொண்டு இங்கே வா!

மகனே! ஒளி பொருந்திய சதங்கைகள் ஒலிக்க ஒலிக்க, அசைந்து அசைந்து வரும் உன் தளர்நடையைக் காண்பது இனிதாய் இருக்கிறது. ஆனால், உன் தந்தையோடு பழகும் பரத்தை, 'உம்மிடந்தான் என் உள்ளமெலாம் இருக்கிறது' என்று அவனிடம் கூறிப் பொய்யாய் வருந்தி, வளை நெகிழுமாறு செய்விப்பதைப் பார்க்கும்போது வெறுப்பாயிருக்கிறது.

என் ஐயனே! விருப்பம் தரும் அழகினைக் கொண்டவனே! 'அத்தா, அத்தா' என்று உன் தந்தையை அழைக்கும் தேன்

போன்ற மழலைச்சொல்லைக் கேட்கும்போது இனிதா யிருக்கிறது! ஆனால், உன் தந்தையிடம் உள்ளத்தைப் பறி கொடுத்து அவர் நலத்தைப் பெறுதற்காகக் கை வளையல் கீழே நழுவி நழுவி விழ வருந்துவதுபோல் காட்டிக்கொள்ளும் பரத்தையரைப் பார்க்கும்போது வெறுப்பாயிருக்கிறது.

ஐயனே! 'வானத்து இள நிலவே! என் மகனோடு விளையாட வா!' என்று உனக்கு நிலவைக் காட்டுவது இனிதாயிருக்கிறது. ஆனால், உன் தந்தை என்மீது கொண்டிருந்த அன்பை மறந்து என்னைப் பிரிந்ததற்குக் காரணமாய் இருக்கும் பரத்தை தனது இடையில் கோலம் புனைந்துகொண்டு வருவதைப் பார்க்கும் போது வெறுப்பாயிருக்கிறது.

ஐயனே! உன் தந்தை இங்கு வரும்போது என் இடையின் மீதுள்ள நீ, என் காதில் அணிந்த குழையை அகற்றி எடுத்துக் கொண்டு அவரிடம் செல்வாய். நான் உடனே உன்னை இடையி லிருந்து எடுத்து, மலரில்லாத கூந்தலுக்கு அருகில் தோளில் உட்கார வைப்பேன். அது எதற்காக என்றால், நான் அவ்வாறு செய்யும்போது, நீ உன் தந்தை மார்பில் எவளோ அணிவித்த மாலையை அறுத்து எறிந்து விளையாட வேண்டும் என்பதற்குத் தான். அப்பொழுது உன் தந்தை பிறரிடம் வைத்துள்ள அன்பு தேயக் காண்பேன்.

கருத்து

'உன் மழலையைக் கேட்டு இன்பமடையும் நான், உன் தந்தையின் பரத்தமை ஒழுக்கத்தை வெறுக்கிறேன்' என்று தாய் தன் மகனிடம் கூறுகிறாள்.

விளக்கம்

பரத்தையிடம் சென்று மீண்ட தலைவன் தன் இல்லத்தின் வாயிலுக்கு வெளிப்பக்கம் வந்ததை அறிந்த தலைவி, அவன் வந்து நிற்பதை அறியாதாள்போலத் தன் மகனிடம் தன் மனத்தில் எழுந்த கருத்தை வெளிப்படுத்தினாள்.

மகன், சிறு குழந்தை; தட்டுத்தடுமாறி நடக்கும் பருவத்தினன். கயிற்றால் கட்டப்பட்ட யானைப்பொம்மை ஒன்றனை இழுத்து

விளையாடும் குழந்தையை நோக்கித் தலைவி தன் கணவனின் பரத்தமை ஒழுக்கத்தை வெறுத்துரைத்தாள். அவன் தான் கூறியவற்றைக் குழந்தையால் புரிந்து கொள்ள இயலாதவை எனினும், புறத்தே நின்று கொண்டிருக்கும் தலைவன் கேட்டு உணர்ந்து திருந்துவான் என்பதே அவள் நோக்கம்!

குறிப்பு

பாக மகன் என்பது, யானைக்குப் பாகனாய் விளங்கும் மகனே என்று பொருள்படும். அந்த யானை ஒரு விளையாட்டுப் பொம்மை. ஒரு பலகை மேல் இருத்தப்பட்ட அந்தப் பொம்மையை மகன் இழுத்து வருகிறான். ஆதலின், பாக மகனே என அழைத்தாள். அப்பலகை, முத்துகளால் பதிக்கப்பட்டுப் பவளத்தால் ஆக்கப்பட்டது.

பரத்தையர் தன் கணவனை விடாப்பிடியாய்த் தம்மிடம் வைத்துக் கொண்டு அவனிடம் அன்பு கொண்டுள்ளவர் போலவும், அவன் பிரிவால் வருந்துபவர் போலவும் நடிப்பதையும், அவன் தம்மோடு இருக்கிறான் என்ற செருக்கினால், காண்பார் கண்ணை ஈர்க்கும்வண்ணம் தம்மைப் புனைந்துகொண்டு தலைவி வாழும் தெருவின் பக்கம் வருவதையும் கண்டு தலைவி வெறுப்படைகிறாள்.

சொற்பொருள்

1. நயம் - அன்பு; மாறுவார் மாறுக என்பது தலைவனை நினைத்துக் கூறப்பட்டது.
2. கயம்தலை - மெல்லிய தலை; கதிர் விடும் - ஒளி வீசும்; முக்காழ் - மூன்று வடம்.
3. பயந்த - பெற்றெடுத்த; நல்கி - தந்து.
4. விளிம்புகளில் முத்துகளை அரும்பாய்ப் பதித்து, தைஇ - அழுத்தி.
5. பவழம் புனைந்த - பவளத்தால் செய்யப்பட்ட; பருதி - வட்டப் பலகை.
6. கவழம் - கவளம் - யானைக்கு அளிக்கும் உணவு உருண்டை, கவழம் அறியா யானை என்பதால், இது, மரத்தால் செய்யப்பட்ட யானைப் பொம்மையைக் குறிக்கிறது; வேழம் - யானை.
7. புரிபுனை - நன்றாய் முறுக்கிச் செய்யப்பட்ட; பைபய - மெதுவாய்; வாங்கி - கால் எடுத்து வைத்து.
8. ஈர்த்து - இழுத்து; ஈங்கே - இங்கே.
9. பாக மகன் - யானையை நடத்துகின்ற மகன்.

10. கிளர் - ஒளி வீசும்; சாஅய் - சாய்ந்து.
11. தளர்நடை - தளர்ந்த நடை.
12. நுந்தை மாட்டு - உன் தந்தையிடம்; எவ்வம் உழப்பார் - துன்பத்தில் உழல்பவர் (பரத்தை).
13. வளை நெகிழ்பு - வளைகள் நெகிழ்வதை.
14. காமரு நோக்கினை - விருப்பம் தரும் அழகுடையாய்; அத்தா அத்தா என்பது மகன் தந்தையை விளித்தல்.
15. தேமொழி - இனிய மொழி.
16. நலன் உண - நலத்தைப் பெறுவதற்காக; சாஅய்மார் - (நொந்து) தளர்வார்.
17. காணுங்கால் - காணும்பொழுது.
18. திங்கள்குழவி - இளம்பிறை.
19. அம்புலி காட்டல் - திங்களைக் காட்டி விளையாட அழைத்தல்.
20. நல்காது - அருளாது; புறம் மாறப்பட்டவர் - வெறுக்கப்பட்டவர்.
22. கனங்குழை - காதணி; வாங்கி - அகற்றி.
23. போதுஇல் - மலர் இல்லாத; வறுங்கூந்தல் - வெற்றுக்கூந்தல்; கொள்வதை - (உன்னை என் தோளில்) வைத்துக்கொள்வதை.
24. ஏதிலார் - அயலார்; கண் சாய - அயலாரிடம் உன் தந்தை கொண்டுள்ள அன்பு குறைய; வியன் மார்பு - அகன்ற மார்பு.
25. கிளைபட - சினம் பொய்க்க; தைஇய - தொடுக்கப்பட்ட
26. கோதை - மாலை; பரிபு - அறுத்து.

தலைவி கூற்று

கலித்தொகை 79 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

செல்லாக் காலைச் செல்கெனக் கூறி விடுத்தது. அது தலைமகன் இனிச் செல்லானென்பது இடமுங் காலமும்பற்றி அறிந்த காலத்து ஊடலுள்ளத்தாற் கூடப்பெறாதாள் செல்கெனக் கூறி விடுத்தாற்றுதலாம்.

கூற்று விளக்கம்

பரத்தையர் இல்லத்திலிருந்து தன் மனைக்கு வந்த தலைவன், இனிமேல் செல்ல மாட்டான் என்பதை இடத்தையும் காலத்தையும் கொண்டு அறிந்து,

தலைவி அவன்மீதுள்ள கோபத்துடன், 'இப்போது நீ செல்' என்று கூறியது. (ஒருவாறு ஊடல் தணியப்பெறுகிறாள் எனலாம்.)

பரத்தையர் இல்லம் சென்று இன்பம் நுகர்ந்த தலைவன் தன் இல்லத்திற்கு வந்தபோது, அவன் மகன் அவனை நோக்கிச் செல்கிறான். அப்போது தலைவி தலைவனை நோக்கி, 'என் மகனை நெருங்காதே! அவனைத் தழுவாதே! நில்; உன் மனங்கவர்ந்த மங்கையரிடம் செல்' என்று கூறுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது.

தரவு

புள்இமிழ் அகல்வயல் ஒலிசெந்நெல் இடைப்பூத்த
முள்அரைத் தாமரை முழுமுதல் சாய்த்து,அதன்
வள்ளிதழ் உறநீடி, வயங்கிய ஒருகதிர்,
அவைபுகழ் அரங்கின்மேல் ஆடுவாள் அணிநுதல்
வகைபெறச் செரீஇய வயந்தகம் போல்,தோன்றும்
தகைபெறு கழனிஅம் தண்துறை ஊர!கேள்.

தாழிசை

அணியொடு வந்துஈங்குஎம் புதல்வனைக் கொள்ளாதி
மணிபுரை செவ்வாய்நின் மார்பகலம் நனைப்பதால்;
தோய்ந்தாரை அறிகுவேன், யான்'எனக் கமழும்நின்
சாந்தினால் குறிகொண்டாள் சாய்குவள் அல்லளோ?

புல்லல்எம் புதல்வனை; புகல்அகல் நின்மார்பின்
பல்காழ்முத்து அணிஆரம் பற்றினன் பரிவானால்;
மாண்இழை மடநல்லார் முயக்கத்தை நின்மார்பின்
பூணினால் குறிகொண்டாள் புலக்குவள் அல்லளோ?
கண்டேஎம் புதல்வனைக் கொள்ளாதி; நின்சென்னி
வண்டுஇமிர் வகைஇணர் வாங்கினன் பரிவானால்;
'நண்ணியார்க் காட்டுவது இது'எனக் கமழும்நின்
கண்ணியால் குறிகொண்டாள் காய்குவள் அல்லளோ?

எனவாங்கு—

சுரிதகம்

பூங்கண் புதல்வனைப் பொய்பல பாராட்டி,
நீங்காய், இகவாய், நெடுங்கடை நில்லாதி;

ஆங்கே அவர்வயின் சென்றீ – அணிசிதைப்பான்
ஈங்குஎம் புதல்வனைத் தந்து.

தெளிவுரை

"பறவைகள் ஒலிக்கும் அகன்ற வயல்களிலே, நெற்பயிரானது கதிர் முற்றித் தலை சாய்க்கும் பருவத்தில் இருந்தது. அப்பயிரி டையே தண்டிலே முள் விளங்கும் தாமரை மலர் ஒன்றும் வளர்ந் திருந்தது. ஒரு நெற்கதிர், தன் அருகே வளர்ந்திருந்த தாமரையின் மலர்ந்த இதழ்களிலேயே சாய்ந்து கிடந்தது. அவையோர் புகழ ஆடுகின்ற ஆடல்மகள், தன் அழகிய நெற்றியிலே அழகுடன் செருகியிருந்த வயந்தகம் என்னும் ஆபரணத்தைப்போலத் தாமரை இதழிலே வீழ்ந்து கிடந்த அந்நெற்கதிர் விளங்கியது. இத்தகைய கழனிகள் சூழ்ந்த குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறை களையுடைய தலைவனே!

"பரத்தையரிடம் அணிந்த அணியோடு வந்து என் மகனைத் தழுவாதே; என் மகனின் பவளம் போன்ற சிறு வாயிலிருந்து ஒழுகும் உமிழ்நீர் உன் மார்பை நனைக்கக்கூடும். அதனால் நீ அணிந்துள்ள சந்தனம் குலையும். அயலாரைத் தழுவிச் சுகம் காணும் உன் பரத்தை, உன் மார்புச்சந்தனம் குலைந்திருப்பதைக் கண்டால் உன்னோடு தழுவியவரை நான் அறிவேன் என்று உன்னிடம் ஊடல் கொள்வாள். ஆகையினால், என் மகனைத் தழுவாதே!

"என் புதல்வனைத் தழுவுதல் வேண்டா. உன் அகன்ற மார்பில் நீ அணிந்துள்ள முத்துமாலைகளை அவன் பிடித்திழுக்கும் போது அவை அறுந்துவிட நேரும். அது நிகழ்ந்தால் நீ யாருடனோ இன்பம் நுகரத் தழுவியுள்ளாய் என்றெண்ணி உன்னை விரும்பும் பரத்தை உன்னோடு ஊடல் கொள்வாள். ஆகையினால், என் மகனைத் தொடாதே!

"என் மகன் தானாகவே ஓடிவந்து உன்னைத் தழுவிக்கொள்ள விரும்பினாலும் நீ அவனைத் தூக்காதே! உன் தலைமாலையை என் மகன் சிதைத்துவிட நேரும்; இதனை உணர இயலாத பரத்தை உன்னை வேறு யாரோ அனுபவித்துள்ளனர் எனத் தவறாய்க் கருதி உன்னை வெறுத்தொதுக்கவும் கூடும். ஆகை யினால், என் மகனைத் தொடாதே!

"நீ என் மகனைப் பாராட்டிப் பேசுவனவெல்லாம் பொய் யென்றுதான் நான் கருதுகிறேன். நீ எப்பொழுதும் உன் பரத்தை யரைத்தான் எண்ணிக்கொண்டுள்ளாய். அந்த எண்ணத்துடன் என் வீட்டு வாயிலில் நில்லாதே! என் மகனை என்னிடமே விட்டுவிடு."

கருத்து

பரத்தையர் இல்லத்திலிருந்து வந்துள்ள தலைவனே! என் மகனைத் தழுவாதே! அவனை என்னிடம் தந்துவிட்டு நீ இங்கிருந்து வெளியே செல்.

விளக்கம்

பரத்தை தன்னைத் தவிரப் பிறர் யாரும் தலைவனை முயங்கி விடக்கூடாது என்பதற்காகவே சாந்தினாலும், புனையும் அணிகளாலும், தலைக்கண்ணியாலும் அடையாளம் வைத்து அனுப்புகிறாள். தலைவன் தன் புதல்வனை எடுத்துத் தழுவினால் அவன் உமிழ்நீரால் மார்புச் சந்தனம் குலையும்; அவன், தன் தந்தையின் மார்பிலுள்ள முத்துவடங்களை அறுத்தெறிவான்; தலைமாலையினையும் கலைப்பான். ஆகவேதான், மகனைத் தொடாதே என்கிறாள், தலைவி.

குறிப்பு

தலைவன் தன் இல்லத்தை விட்டு, இனிமேல் எங்குமே செல்லக்கூடாது என்னும் கருத்துடனேயே தலைவி இவ்வாறு கூறினாள் எனக் கொள்ளலாம்.

உவமை விளக்கம்

நெல் வயல் ஓர் அரங்கம் எனவும், வயலிலிருந்த தாமரை மலர் ஆடல்மகள் எனவும், அவள் நெற்றி, அத்தாமரையின் இதழ் எனவும், ஆடல்மகள் நெற்றியில் அணிந்திருக்கும் வயந்தகம் என்னும் ஆபரணம் தாமரை இதழ் மீது படிந்த நெற்கதிர் எனவும் உருவகிக்கப்பட்டுள்ளன.

உள்ளுறை

நெற்கதிர்கள் பரத்தையர்க்கும், தாமரை இதழ் தலைவனுக்கும், நெற்கதிர்களுள் ஒன்று தாமரைமீது படிதல் பரத்தையருள்

ஒருத்தி தலைவனை ஆட்கொண்டதற்கும் உருவகங்களாக்கி உள்ளுறைப் பொருள் கொள்ளலாம்.

சொற்பொருள்

1. புள் - பறவை; இமிழ் - ஒலிக்கின்ற; ஒலி செந்நெல் - ஒலிக்கின்ற கதிர்கள்.
2. முள் அரை - முள்ளினைக் கொண்ட தண்டு; முழு முதல் - முழுக் கதிரும்; அதன் - அத்தாமரையின்.
3. வள் இதழ் - வளமையான இதழ்; வயங்கிய - விளங்கிய.
4. அரங்கு - நாட்டிய அரங்கு.
5. செரீஇய - செருகிய; வயந்தகம் - மகளிர் நெற்றியில் அணியப்படும் ஒருவகை அணி.
6. தகை - அழகு, பெருமை, தன்மை.
7. கொள்ளாதி - தழுவாதே.
8. மணிபுரை செவ்வாய் - பவளம் போன்ற வாய்.
9. தோய்ந்தாரை - தலைவனைத் தழுவுவோரை.
10. சாந்தினால் குறிகொண்டாள் - சந்தனத்தினால் குறி செய்து அனுப்பியுள்ள பரத்தை; சாய்குவள் - வருந்துவள்.
11. புல்லல் - தழுவாதே; புகல் அகல் - பரத்தையர்க்குப் புகலிடமாகிய அகன்ற.
12. பல்காழ் - பல வடங்களைக் கொண்ட; பரிவான் - அறுப்பான்.
13. நீ பிறரை முயங்கியிருப்பதை.
14. புலக்குவள் - ஊடல் கொள்வாள்.
15. சென்னி - தலை.
16. வண்டுஇமிர் - வண்டுகள் ஒலிக்கின்ற; வகை - கூறுபாடுடைய; இணர் - பூங்கொத்து.
17. நண்ணியார் - உன்னை அடைந்தவர்; இது - தலைமாலை.
18. காய்குவள் - சினம் கொள்வாள்.
20. பூங்கண் - பூப்போலும் கண்.
21. இகவாய் - கடவாய்; நெடுங்கடை - பெரிய வாயில்; நில்லாதி - நிற்காதே.
22. அணிசிதைப்பான் - உன் புனைவுகளைச் சிதைப்பவனாகிய புதல்வன்.
23. தந்து - என்னிடமே கொடுத்துவிட்டு.

தலைவி கூற்று

கலித்தொகை 81 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் பரத்தையிற்பிரிந்து வந்துழித் தலைமகள் தன் மகனைத் தழீஇ விளையாடுகின்ற விளையாட்டின்கண் தன் வரவு அறியாமைச் சென்றுநின்ற தலைவன், அவள் ஊடலுணர்வளவும் உறழ்ந்து சொல்லி, மகன் வாயிலாக ஊடல் தீர்ந்தது. (வரவு அறியாமை - வருவது தெரியாது; ஊடல் உணர்வளவும் - ஊடல் உள்ளவரை; உறழ்ந்து - மறுத்து).

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் வீட்டிலிருந்து திரும்பி வந்தான். தலைவி தன் மகனோடு விளையாடிக்கொண்டிருப்பதைப் பார்த்த அவன், அவள் அறியாமல் ஒருபுறமாய் ஒதுங்கி நின்றான். தலைவனைத் தலைவி பார்க்கவில்லை. ஆனால், அவளைப் பார்த்தவாறு விளையாடிக் கொண்டிருந்த மகன், தந்தையைப் பார்த்து விட்டான். தலைவி ஊடினாள். தலைவன் அவள் ஊடல் நீங்கும்வண்ணம் அவளோடு உரையாடினான். மகன் காரணமாய்த் தலைவியின் ஊடல் தீர்ந்தது.

புதல்வனை நோக்கித் தலைவி கூறுதல்

மைஅற விளங்கிய மணிமருள் அவ்வாய்தன்
மெய்பெறா மழலையின் விளங்குபூண் நனைத்தர,
பொலம்பிறை உள்தாழ்ந்த புனைவினை உருள்கலன்,
நலம்பெறு கமழ்சென்னி, நகையொடு துயல்வர
உருஎஞ்சாது இடைகாட்டும் உடைகழல் அம்துகில்
அரிபொலி கிண்கிணி ஆர்ப்புஒவா அடிதட்பப்
பாலோடு அலர்ந்த முலைமறந்து முற்றத்துக்
கால்வல்தேர் கையின் இயக்கி, நடைபயிற்றா,
ஆலமர் செல்வன் அணிசால் பெருவிறல்
போல, வரும்என் உயிர்.
பெரும! விருந்தொடு கைதூவா எம்மையும் உள்ளாய்,
பெருந்தெருவில் கொண்டாடி ஞாயர் பயிற்றத்
திருந்துபு நீகற்ற சொற்கள்யாம் கேட்ப,

அருந்துஒவா நெஞ்சிற்கு அமிழ்தம் அயின்றற்றா,
பெருந்தகாய்! கூறு, சில.

தோழியை நோக்கித் தலைவி கூறிய செய்தி

எல்லிழாய்! சேய்நின்று நாம்கொணர்ந்த பாணன் சிதைந்து,ஆங்கே
வாய்ஓடி, 'ஏனாதிப் பாடியம்' என்றற்றா,
நோய்நாம் தணிக்கும் மருந்து,எனப் பாராட்ட
ஓவாது அடுத்துஅடுத்து,'அத்தத்தா'என் பான்மாண
வேய்மென்தோள் வேய்த்திறம் சேர்த்தலும், மற்று,இவன்
வாய்உள்ளின் போகான் அரோ.

தலைவன் கேட்பத் தோழியை நோக்கித் தலைவி உரைத்தல்

உள்ளி உழையே ஒருங்கு படைவிடக்
கள்ளர் படர்தந் ததுபோலத் தாம்எம்மை
எள்ளுமார் வந்தாரே, ஈங்கு.

தலைவன் கூறியது

ஏதப்பாடு எண்ணிப் புரிசை வியல்உள்ளோர்
கள்வரைக் காணாது, 'கண்டேம்'என் பார்போலச்
சேய்நின்று, செய்யாத சொல்லிச் சினவல்;நின்
ஆணை கடக்கிற்பார் யார்?

தலைவி சொன்னது

அதிர்வில் படிறுஎருக்கி, வந்துஎன் மகன்மேல்,
முதிர்பூண் முலைபொருத ஏதிலாள் முச்சி
உதிர்துகள் உக்கநின் ஆடை ஒலிப்ப,
எதிர்வளி நின்றாய்;நீ செல்.

தலைவன் கூறியது

இனி!'எல்லா,யாம் தீதிலேம்'என்று தெளிப்பவும் கைந்நீவி
யாதொன்றும் எம்கண் மறுத்தரவு இல்லாயின்,
மேதக்க எந்தை பெயரனை யாம்கொள்வேம்,
தாவா விருப்பொடு கன்றுயாத் துழிச்செல்லும்
ஆபோல் படர்தக, நாம்.

தெளிவுரை

(புதல்வன் உயர்வைத் தாய் கூறுதல்)

"என் உயிர் போன்றவன் என் மகன்; எழுத்தில் வடிக்க இயலாத மழலை மொழி பேசுகிறான். அவன் வாய் உமிழ்நீர் மார்பின் அணிகலனை நனைக்கிறது. தலையில் பொற்பிறையோடு கூடிய முத்துவடமும் நெற்றியில் சுட்டியும் அசைகின்றன. இடையில் கட்டப்பட்டுள்ள சிற்றாடை நெகிழ்ந்து காலின்மீது பட்டு, காலில் உள்ள கிண்கிணியின் ஒலியைக் கேட்க இயலாதவாறு செய்கிறது. பால் குடி மறந்து, முற்றத்தில் தேர் உருட்டி அதோ முருகப்பெருமானைப் போல வருகின்றான்."

(தாய் தன் மகனை நோக்கி)

"பெரும! வீட்டுக்கு விருந்தாளி வந்ததால் ஓய்வின்றி வேலையில் ஈடுபட்டிருந்த என்னை நீ நினைப்பதில்லை; எப்பொழுதும் தெருவிலேயே விளையாடிக்கொண்டிருக்கிறாய். நீ விளையாடும் போது செவிலித்தாயர் உனக்குப் பேசக் கற்றுக் கொடுக்கின்றனர். அவர்களிடம் கற்றுக்கொண்ட சொற்களை நீ கூற அவற்றைக் கேட்டுத் துன்பத்தை மறந்து ஆறுதல் பெற்றிருக்கிறேன். பெருந்தன்மை கொண்ட மகனே! அமுதம் உண்டதுபோல இனிக்கும் அச்சொற்கள் சிலவற்றைக் கூறு."

(அப்பொழுது அவ்விடம் நின்றுகொண்டிருந்த **தோழியை நோக்கி)**

"ஒளி பொருந்திய அணிகலன்களைக் கொண்ட என் தோழியே! நமக்கு அறிமுகமான பாணன் ஒருவனை, 'நீ இப்போது எங்கே உள்ளாய்?' என்று கேட்டபோது, வாய் தவறி, மொழி பிழைபட்டு, 'ஏனாதிப் பாடியம்' என்று உளறிவிட்டான். அப்பாணன் உளறியது போல் என் மகனும் 'அத்தா அத்தா' என்றே கூறுகிறான். இவன் பேச்சு என் கவலைக்கு மருந்து போன்ற அமிழ்தமாய் இருக்கும் என்று எண்ணி, இவனைப் பேசு என்று பாராட்டி என் மூங்கில் போன்ற மென்மையான தோளில் வைத்துக்கொண்டாலும் அவன் மீண்டும் 'அத்தா அத்தா' என்றே சொல்லிக்கொண்டிருக்கிறானே, அது ஏன்?" என்றாள்.

(இதுவரை தலைவன் மறைவாய் நின்றுகொண்டிருந்ததை அறியாத தலைவி, மகன் அவனைப் பார்த்ததாலேயே, 'அத்தா அத்தா' என்றழைக்கிறான் என்பதை உணர்ந்து தலைவனைப் பார்க்காமலேயே அவன் காதில் விழுமாறு பேசுகிறாள்.)

"பகைவர்கள் தம் எதிரே வருவார்கள் என்று கருதிக் கள்வர்கள் தங்கள் ஆயுதங்களையெல்லாம், பகைவர்க்கு எதிராய்ப் பயன்படுத்துவதற்கு எடுத்து வந்ததுபோல, இவர் தம் வல்லமை எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்து என்னை இகழ்வதற்குத்தான் வந்திருக்கிறாரே அன்றி, எம்மீது கொண்ட அன்பினால் வரவில்லை" என்றாள்.

(இதைக் கேட்ட தலைவன் அவள் முன்னே வந்து நின்று பேசுகிறான்.)

"கள்வரைக் காணாத நிலையிலேயும், கோட்டைக் காவலர்கள் சிலர் முன்னெச்சரிக்கையாய், 'நாங்கள் கள்வரைக் கண்டோம்; விழிப்பாய் இருங்கள்' என்று மக்களிடம் கூறுவது போல, என்னிடத்தில் முகங்கொடுத்துப் பேசாமல் விலகி நின்று கொண்டு, 'நான் செய்யாத தவறுகளைக் கூறிக் கோபம் கொள்ளாதே. யாவரும் உன் ஆணைப்படி நடப்பார்களே தவிர, அதை மீறக்கூடியவர் எவருமிலர்" என்றான்.

(அதைக் கேட்டுத் தலைவி)

"என்னைச் சற்றும் தயக்கமின்றி வஞ்சித்து, வருத்தம் கொள்ளச்செய்து என் மகன் மேல் உள்ள ஆசையால், எதையும் எண்ணிப் பாராமல் இங்கு வந்திருக்கிறாய். நீ பரத்தையை அணைத்ததால் அவள் தலையில் உள்ள மலர்களின் மகரந்தப் பொடிகள் உன் ஆடையிலே படிந்துகிடக்கின்றன. எதிர்க் காற்றில் ஆடை படபடக்க அந்தப் பொடிகள் பறக்கின்றன. இந்தக் கோலத்தோடு வந்திருக்கிற நீ, இங்கு நில்லாதே போ" என்றாள்.

(அது கேட்ட தலைவன்)

"நான் குற்றமற்றவன் என்று பலமுறை உன்னிடம் கூறியும், சத்தியம் செய்தும் நீ நம்பவில்லை. நீ என்மீது கொண்டுள்ள

கோபத்தை விடவில்லை. உன்னை என்னிடம் வருமாறு செய்வது எப்படி என்று எனக்குத் தெரியும். மேயச் சென்ற பசு, வீடு திரும்பியதும் தன் கன்று கட்டப்பட்டுள்ள இடத்திற்குத்தான் ஆசையோடு ஓடி வரும். என் தந்தையின் பெயரைக் கொண்ட மகனை என்னுடன் எடுத்துச் செல்கிறேன்; அவனை நாடியாவது நீ என்னிடம் வருவாயன்றோ?" என்று தலைவியிடம் கூறினான்.

(மகனை எடுத்துச் சென்றுவிடுவானோ என்று கருதித் தலைவி தான் கொண்ட ஊடலை விட்டுவிட்டாள்.)

கருத்து

பரத்தை வீட்டிலிருந்து திரும்பிய தலைவனைத் தலைவி வெறுத்துத் 'திரும்பிப் போ' என்றாள். அவன், 'மகனை நான் எடுத்துச் செல்வேன்' என்றதும், அம்மகன் காரணமாய்த் தலைவி தான் கொண்ட ஊடலை விட்டு விட்டாள்.

விளக்கம்

பரத்தையரை விரும்பிச் சென்று இன்பம் நுகர்ந்த தலைவன், தன் இல்லம் வந்தான். தலைவி, இல்லத்து முற்றத்திலே சிறுதேர் உருட்டியவாறு விளையாடிக்கொண்டிருந்த தன் மகனிடம் கூறுவது போலவும், அங்கு வந்த தன் தோழியிடம் கூறுவது போலவும் தலைவனின் பரத்தமைப் பண்பைப் பழித்துக் கூறினாள். தலைவிக்கு எதிரில் மகனும் தோழியும் நிற்கும்போது தலைவிக்குப் பின்புறம் வந்து தலைவன் நிற்கிறான். தன் பின் தலைவன் நிற்பதைத் தலைவி அறியவில்லை. மகன், 'அத்தா அத்தா' என்று தந்தையை அழைத்ததால், தலைவன் தன் பின்னே நிற்பதைத் தலைவி உணர்ந்தாள்.

உணர்ந்ததும், அவன் தகாத செயல்களைக் கூறி ஊடல் கொண்டாள். தலைவன் தான் குறையற்றவன் என்று கூறியும் தலைவியின் சினம் தணியவில்லை. எனவே தலைவன், தன் தந்தையின் பெயரால் அழைக்கப்படும் தன் மகனைத் தழுவிக் கொண்டு, "இவனை நான் தூக்கிச் சென்றுவிடுவேன். தாய்ப் பசு, கன்று இருக்கும் இடத்தை நாடிச் செல்வதுபோல், உன் குழந்தை இருக்கும் இடத்துக்கு நீ வந்துதானே தீரவேண்டும்"

என்று கூறிய பின் ஒருவாறாய்த் தலைவி தான் கொண்ட ஊடலை விட்டுவிட்டாள்.

குறிப்பு

1. இப்பாடல் ஓர் ஓரங்க நாடகம்போல அமைந்துள்ளது.
2. ஊர்ப்பகுதிகளாகிய சேரிகளுக்குச் சிறப்புப் பட்டங்களின் பெயரைச் சூட்டுதல் மரபு. 'ஏனாதி' என்பது அமைச்சர், சேனாதிபதி ஆகியோர்க்கு அரசன் வழங்கும் சிறப்புப் பட்டம். அதுபோலப் பரத்தையர் சேரிக்கு 'ஏனாதிப் பாடியம்' என்று பெயரிடப்பட்டிருந்தது. (பாடியம் - சேரியிடம்).
3. என் மகன் என்று கூறி, தலைவி உரிமை கொண்டாடியபோது தலைவன், 'அவன் என் தந்தைக்குப் பேரன் (பெயரினன்)' என்று உரிமை கொண்டாடினான். ஆண் மகனுக்கு, அவன் தந்தையைப் பெற்ற தந்தை பெயரைச் சூட்டுவது மரபு.

சொற்பொருள்

1. மை - குற்றம்; மணி - பவளம்; மருள் - ஒத்த; அவ்வாய் - அழகிய வாய்.
2. மெய்பெறா - மெய்யான உருவம் பெறாத; நனைத்தர - நனைக்க.
3. பொலம்பிறை - பொன்னால் செய்த பிறை; உள்தாழ்ந்த - (வினைப் பெயராய்) முத்துவடத்தைக் குறிக்கிறது; புனைவினை - வேலைப் பாடமைந்த; உருள்கலன் - வட்டமான அணிகலன் (நெற்றிச்சுட்டி).
4. சென்னி - நெற்றி; நகையொடு - ஒளியுடன்; துயல்வர - அசைய.
5. உரு - நிறம்; எஞ்சாது - குறையாமல்; உடை கழல் - அவிழ்ந்து விழும்; அம்துகில் - அழகிய ஆடை.
6. அரிபொலி - உள்ளே இட்ட பரலால் அழகு பெற்ற; ஓவா - இடைவிடாது; தட்ப - தடுக்க.
7. அலர்ந்த - பருத்த; முற்றம் - தாழ்வாரம்.
8. கால்வல் தேர் - வலிமையான சக்கரம் பூட்டப்பெற்ற தேர்; இயக்கி - இழுத்து.
9. ஆல்அமர் செல்வன் - சிவபெருமான்; பெருவிறல் - முருகன்.
10. என் உயிர் - என் உயிர் போன்ற மகன்.
11. கை தூவா - கை ஓயாத.
12. கொண்டாடி - பாராட்டி; ஞாயர் - உன் தாயர், செவிலியர்; பயிற்ற - கற்றுத் தர.

13. திருந்துபு - திருத்தமாய்.
14. அருந்துஓவா - (கேட்ட) அவ் இனிமை மாறாத; அயிலுதல் - அருந்துதல்.
15. பெருந்தகாய் - பெருமைக்குரிய தன்மை கொண்டவனே!
16. எல்இழாய் - ஒளி வீசும் அணிகலன்களை அணிந்தவளே!; சேய் நின்று - தொலைவிலிருந்து; சிதைந்து - தடுமாறி.
17. வாய் ஓடி - வாய் மறந்து; என்றற்றா - என்றாற்போல.
18. மகன் பேச்சு கவலைக்கு மருந்து என்று நாம் பாராட்ட.
19. அவனோ இடைவிடாது அடுத்தடுத்து 'அத்தா அத்தா' என்கிறான்.
19.மாண - சிறந்த.
20. வேய் - மூங்கில்.
21. வாய் உள்ளின் - வாயிலிலிருந்து; போகான் - நீங்கான்.
22. உழையே - கோட்டையினுள்.
23. படர்தந்தது - மறைந்து வந்தது.
24. எள்ளுமார் - இகழ்வதற்காகவே.
25. ஏதப்பாடு - குற்றம்; புரிசை - கோட்டை; வியல் உள்ளோர் - உள்ளே இருக்கும் காவலர்.
27. சேய் நின்று - தொலைவிலே இருந்து; சினவல் - சினங்கொள்ளாதே.
28. ஆணை - உத்தரவு; கடக்கிற்பார் - கடந்து செல்பவர், மீறுபவர்.
29. அதிர்வு - நடுக்கம்; படிறு - வஞ்சனை; எருக்கி - வருத்தி.
30. ஏதிலாள் - அயலாள், பரத்தை; முச்சி - தலை உச்சி.
31. உதிர் - உதிர்ந்த; உக்க - படிந்த.
32. எதிர்வளி - எதிர்காற்று.
33. தெளிப்பவும் - தெளிவுபடுத்தவும்; கைந்நீவி - கை கடந்து.
34. மறுத்தர - மறுமொழி கூற.
35. மேதக்க - மேன்மை பொருந்திய; எந்தை - என் தந்தை; யாம் கொள்வோம் - நான் எடுத்துச் செல்வேன்.
36. தாவா - குறையாத; யாத்துழி - கட்டப்பட்டுள்ள இடம்.
37. ஆபோல் - பசுவினைப் போல; படர்தக - வருமாறு.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 138 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடு இணங்கிய மைந்தனை இனிதில் புகழ்ந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தலைவியைக் கூடிச் சென்றான். சென்றவன் திரும்பி வரக் காரணமாய் விளங்கிய மகனைத் தழுவி, தலைவி உரைத்தது.

கன்றுள்ளிச் சோர்ந்தபால் காலொற்றித் தாமரைப்பூ
அன்றுள்ளி அன்னத்தை ஆர்த்துவான் – சென்றுஉள்ளி
வந்(து)ஐஆ என்னும் வகையிற்றே மற்றிவன்
தந்தையார் தம்ஊர்த் தகை.

தெளிவுரை

என் மகனுக்குத் தந்தையாகிய மருத நிலத் தலைவனுக்குரிய ஊர் வயல்களில் காணப்படும் எருமைகள் தம் கன்றுகளை நினைந்து மடிவழியாய்ப் பாலை ஒழுகவிடும். அந்தப் பால், வாய்க்காலாய் ஓடிச் சென்று தாமரைப் பொய்கையை அடைந்து, அங்குள்ள தாமரைப்பூக்களில் வெள்ளைப் புள்ளிகள்போல் விளங்கும் அன்னப்பறவைகளை உண்பிக்கும்.

கருத்து

ஊடல் தீர்தற்குக் காரணமாயிருந்த மகனைப் புகழும் முறையில் தலைவி தனக்குப் புணர்ச்சி இன்பமளித்த தலைவனையும் புகழ்கிறாள்.

குறிப்பு

“கன்றுள்ளிச் சோர்ந்தபால் காலொற்றித் தாமரைப்பூ அன்றுள்ளி அன்னத்தை ஆர்த்துவான்” : அஃதாவது, எருமைகள் தம் கன்றை நினைந்தமையால் அவற்றினிடமிருந்து சொரிந்த பால், தாமரைப்பூவில் தங்கியிருக்கும் அன்னத்திற்கு உணவாகியது என்பதாம். இத்தொடர்மூலம், தலைவன் தன் மகனை நினைந்ததால் ஏற்பட்ட அன்பினால் தன் வீடு வந்து

சேர்ந்து, தலைவிக்கும் இன்பமளித்தான் என்னும் இறைச்சிப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. உள்ளி - நினைந்து; சோர்ந்த - ஒழுகிய; கால் ஒற்றி - வாய்க் காலாய்ப் ஓடிச் சென்று.
2. வன்துளி - வல்துளி - பெரிய வெண்மையான துளியினைப் போன்று; சென்று - தாமரைக்குளத்தைச் சேர்ந்து; உள் - உள்ளிருந்து.
3. வந்து - மேலேறி; ஐ ஆ என்னும் - அழகிய காட்சி என்று வியக்கும்; வகையிற்று - மேன்மையினைக் கொண்டது; இவன் - இம்மைந்தனின்.
4. தந்தையார் - தகப்பனாராகிய தலைவன்; தம் - அவருடைய; ஊர் - மருத நிலத்து ஊரின்; தகை - தன்மை.

தலைவி ஊடல் தீர்ந்தது.

தலைவி கூற்று

கலித்தொகை 89 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் 'காமத்தின் வலியும்' என்றதனால், ஆற்றாமை வாயிலாக வலிந்து புக்கு, நெருங்கிக் கூடுமிடத்து, அவனுடன் தலைமகள் ஊடிச் சில சொல்லி, அவன் ஆற்றாமை கூறுவது கேட்டு ஊடல் தீர்ந்தது.

கூற்று விளக்கம்

பரத்தையர் இல்லம் சென்றிருந்த தலைவனோடு தலைவி ஊடல் கொண்டிருந்தாள். அவ்வூடலைத் தீர்க்க வேறு யாரையும் தூது அனுப்பாது தலைவன் தானே வலிய வந்து தலைவியை நெருங்குகிறான். தலைவி அவனிடம் சினந்து சில சொன்னாள். அவன் தன் ஆற்றாமை கூறுவது கேட்டு முடிவில் அவள் அவன்மீது கொண்டிருந்த ஊடலை நீக்கிச் சொல்லியது.

தலைவி

யார்இவன்? எம்கூந்தல் கொள்வான்? இதுவும்ஓர்
ஊராண்மைக்கு ஒத்த படிறுடைத்து; எம்மனை
வாரல்;நீ வந்தாங்கே மாறு.

தலைவன்

என்இவை, ஒருயிர்ப் புள்ளின் இருதலை யுள்ஒன்று
போரெதிர்ந் தற்றாப் புலவல்?நீ கூறின்,என்
ஆருயிர் நிற்குமாறு யாது?

தலைவி

ஏஎ! தெளிந்தேம்யாம்; காயாதி; எல்லாம்!வல் எல்லா
பெருங்காட்டுக் கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு,
வருந்தல்நின் வஞ்சம் உரைத்து.

தலைவன்

மருந்தின்று; மன்னவன் சீறின், தவறுண்டோ? நீநயந்த,
இன்னகை! தீதோ இலேன்.

தலைவி (தனக்குள்)

மாண மறந்து,உள்ளா நாணிலிக்கு இப்போர்
புறம்சாய்ந்து காண்டைப்பாய்!– நெஞ்சே! உறழ்ந்துஇவனைப்
பொய்ப்ப விடேஎம் எனநெருங்கின், 'தப்பினேன்'
என்றுஅடி சேர்தலும் உண்டு!

தெளிவுரை

பரத்தமை கொண்ட தலைவன் தன் இல்லம் திரும்பித் தன் தலைவியை நெருங்கி, அவள் கூந்தலை அவன் கோதிய பொழுது அவள் தன் ஊடலைத் தெரிவிக்கின்றாள்.

தலைவி : *யார் இவன், என் கூந்தலை வந்து பற்றுகிறான்? ஊராரைப் பாதுகாப்பதுபோல நடித்து உண்மையாகப் பாது காவல் செய்யாதது போன்ற குற்றத்தினைக் கொண்டது, உன் செயல். என் வீட்டிற்குள் வாராதே; வந்ததுபோலவே திரும்பிப் போய்விடு.*

தலைவன் : *இவை என்ன பேச்சு? இரு தலையினைக் கொண்ட ஒரு பறவையின் ஒரு தலை மற்றொரு தலையுடன் போருக்கு*

வந்தாற் போன்று சினமுற்றுப் பேசுகிறாயே! இப்படிப் பேசினால் என் உயிர் எவ்வாறு நிற்கும்?

தலைவி : *ஏஎ! நானும் புரிந்துகொண்டேன். என்னை இனியும் வருத்தாதே. எல்லாம் அறிந்த பெருங்காட்டுத் தெய்வம் கொற்றவையிடம் பேய் விடுகதை சொல்வதுபோல, உன் வஞ்சனையை நானறிந்துள்ளேன்; நீ அதை மறுத்துப் பேசித் துன்பமுறச் செய்யாதே!*

தலைவன் : *இனிய புன்னகை கொண்டவளே! அரசன், தன் ஆளுகைக்குட்பட்டவர்மீது சீறினால் அதைத் தடுக்க இயலுமா? நீ என்மீது ஏற்றிச் சொல்ல விரும்பும் குற்றம் எதையும் நான் செய்யவில்லை.*

தலைவி *(தனக்குள்): நெஞ்சே! இவனோடு மாறுபட்டு, இவனைப் பொய் பேச விடோம் என்று நெருக்கினால், 'தவறு செய்துவிட்டேன்; என்னை மன்னித்துவிடு' என்று நம் காலடியில் வீழ்ந்து வணங்கினாலும் வணங்குவான். அதற்கு இடம் கொடாமல், நீண்ட நாள் நம்மை மறந்து, நினைத்தும் பாராத, நாணம் இல்லாத இவனுக்கு விட்டுக் கொடுத்தாவது ஏதேனும் பயன் ஏற்படுமா என்று பார்ப்போம்' என்று [க]ருதுகிறாள். பின்பு, தலைவி தான் கொண்ட ஊடலை விலக்கு[கி]றாள்.*

கருத்து

'தலைவனிடம் மாறுபட்டுப் பேசினால் நம் காலடியில் வீழ்ந்து கெஞ்சினாலும் கெஞ்சுவான். அதற்கிடமின்றி ஊடலை விலக்குவோம்' என்றெண்ணினாள், தலைவி.

விளக்கம்

பரத்தையர் இல்லம் சென்றிருந்த தலைவன் தன் இல்லம் திரும்பினான். ஊடல் கொண்டிருந்த தலைவி தன்னை நெருங்க விடாமல் அவனைத் தடுத்தாள். தான், தவறேதும் செய்யவில்லை எனக் கூறிய தலைவன், அவள் தன்னை ஏற்காவிடில் தன் உயிர் நிற்காது என்றும் கூறினான். பலவாறு கூறிய அவனை மேலும் நெருக்கினால் அவன் நம் காலடியில்

வீழ்ந்தாவது தப்பிக்க முனைவான்; மறந்தும் மாண்புடைய வாழ்வைக் கருத மாட்டான்! வெட்கங் கெட்ட வாழ்க்கை வாழும் இவனுடன் கொண்ட ஊடல் போரில் தோற்பதனால் பயன் ஏதாவது ஏற்படுமா என்று பார்ப்போம்' என்று தலைவி எண்ணினாள். அதனால் ஊடலைத் தவிர்த்தாள்.

குறிப்பு

(1) ஊராண்மைக்கு ஒத்த படிறுடைத்து.

(2) ஒருயிர்ப் புள்ளின் இரு தலையுள், ஒன்று போரெதிர்தல்.

(3) கொற்றிக்குப் பேய்நொடித் தாங்கு.

(4) மருந்தின்று, மன்னவன் சீறின்.

இப்பாடலில் உள்ள இத்தொடர்கள் நயம் நிறைந்தவை.

சொற்பொருள்

2. ஊராண்மைக்கு ஒத்த படிறுடைத்து - ஊரைப் பாதுகாப்பது போல நடித்து அவ்வாறு செய்யாதது போன்ற குற்றத்தினைக் கொண்டது.
3. வாரல் - வாராதே; மாறு - திரும்பு.
4-5. ஒருயிர்ப் புள்ளின் இருதலை - ஒரே உடலில் இரு தலைகள் கொண்ட பறவை - பறவையின் உயிர் ஒன்று, தலைகள் இரண்டு; புலவல் - சினம் கொள்ளாதே.
6. நிற்றல் - தங்குதல்.
7. காயாதி - கடிந்து கூறாதே.
8. கொற்றி - கொற்றவைத் தெய்வம்; நொடித்தல் - விடுகதை கூறல்.
9. வஞ்சம் - வஞ்சனை.
11. இன்னகை - புன்னகை கொண்டவளே!
12. மாணமறந்து - நெடுங்காலம் மறந்து; நாணிலி - வெட்கம் இல்லாதவன்.
13. புறம் சாய்ந்து - தோற்று; காண்டைப்பாய் - காண்பாய்; உறழ்ந்து - மாறுபட்டு.
14. நெருங்கின் - விடாது கோபித்தால்.
15. அடிசேர்தல் - காலில் விழுந்து வணங்குதல்.

தலைவி கூற்று

கலித்தொகை 88 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

அவ்வாற்றால் புக்க தலைமகனுடன் ஊடியும் உறழ்ந்துஞ் சொல்லிப் பொய்ச்சூள் அஞ்சி ஊடல் தீர்ந்தது.

கூற்று விளக்கம்

தலைவன், பரத்தையின் இல்லம் சென்று மீண்டு, தன் இல்லம் வந்தான். தலைவி அவனோடு ஊடல் கொண்டும், மாறுபட்டுப் பேசியும் அவனை ஏற்க மறுக்கிறாள். இன்னும் நெருங்கிப் பேசினால் தலைவன் பொய்ச் சத்தியங்கள் செய்யத் தொடங்கிவிடுவான் என்றெண்ணிய தலைவி தன் ஊடலை விலக்கியது.

தலைவி

ஒரூஉ; கொடிஇயல் நல்லார் குரல்நாற்றத்து உற்ற
முடிஉதிர் பூந்தாது மொய்ம்பின வாகத்
தொடிய எமக்குநீ யாரை? பெரியார்க்கு
அடியரோ, ஆற்றா தவர்?

தலைவன்

கடியர்தமக்கு யார்சொல்லத் தக்கார் மாற்று?

தலைவி

வினைக்கெட்டு, வாயல்லா வெண்மை உரையாது, கூறுநின்
மாயம், மருள்வார் அகத்து.

தலைவன்

ஆயிழாய்! நின்கண் பெறின்அல்லால். இன்னுயிர் வாழ்கல்லா
என்கண் எவனோ தவறு?

தலைவி

இஃதுஒத்தன்! புள்ளிக் களவன் புனல்சேர் பொதுக்கம்போல்,
வள்உகிர் போழ்ந்தனவும், வாய்எயிறு உற்றனவும்,
ஒள்இதழ் சோர்ந்தநின் கண்ணியும், நல்லார்
சிரறுபு சீறச் சிவந்தநின் மார்பும்,
தவறாதல் சாலாவோ கூறு.

தலைவன்

அதுதக்கது; வேற்றுமை என்கண்ணோ ஓராதி; தீதுஇன்மை
தேற்றக்கண் டயாய்; தெளிக்கு

தலைவி

இனித் தேற்றேம்யாம்.
தேர்மயங்கி வந்த தெரிகோதை அம்நல்லார்
தார்மயங்கி வந்த தவறுஅஞ்சிப் போர்மயங்கி,
நீஉறும் பொய்ச்சூள் அணங்காகின், மற்றுஇனி
யார்மேல் விளியுமோ? கூறு.

தெளிவுரை

(பரத்தையரிடமிருந்து மீண்ட தலைவன், தலைவியை நெருங்கித் தொட முயன்றபோது)

தலைவி : *கொடி போன்ற பரத்தையரின் கூந்தலினின்றும் உதிர்ந்த மணம் வீசும் பூந்துகள்கள் உன் தோளிலே கிடக்கின்றன. தொடியணிந்தவனே! நீ எமக்கு என்ன உறவு? நீயோ பெரியவன். ஆற்றாதவளாகிய நான் உனக்கு அடிமையா?*

தலைவன் : *மனத்தில் கடுமையான சினம் கொண்டிருப்பவர்க்கு மறுமொழி சொல்லி அவரைத் தெளிவிக்க எவரால் இயலும்?*

தலைவி : *"உன் வேலையை விட்டுவிட்டு இங்கு வந்து பொருளற்றவற்றைச் சொல்லாதே. உன் மாயப்பேச்சைக் கேட்டு மயங்குபவர் இருப்பாராயின், அவரிடம் போய்ச் சொல்.*

தலைவன் : *ஆயிழையே! உன் அருள் பெற்றால் வாழ்வேன்; இல்லையேல் வாழேன். என்னிடம் என்ன தவறு உள்ளது?*

தலைவி : *நீர்க்கரையிலே புள்ளி கொண்ட நண்டுகள் நடந்தால் தடங்கள் தோன்றும். அவைபோல உன் மார்பில் வடுக்கள் உள்ளன; உடலில் பற்கள் பதிந்த குறிகள் உள்ளன. இவை உன் பரத்தையரால் செய்யப்பட்டவைதாமே! உன் மாலை வாடி, இதழ்கள் உதிரப்பெற்றிருப்பது அவர்கள் தழுவியதனால்தானே. உன் பரத்தையர் பூச்செண்டால் அடித்ததால் உன் மார்பு சிவந்துள்ளது. இவை போதாவா? வேறு தவறுகளையும் கூற வேண்டுமா?*

தலைவன் : என்னோடு வேற்றுமை கொள்ளாதே; நான் எவ்விதத் தீதும் செய்யவில்லை. அதனை நான் தெளிவிப்பேன்.

தலைவி : இனி நீ தெளிவித்து நான் தெளிய வேண்டியது எதுவு மில்லை. ஒரு நாள் நீ தேரேறி வரும்போது, உன் பரத்தையின் மாலையை, உன் மாலையாய்க் கருதி மயங்கி எடுத்து அணிந்து வந்தாய். நான் ஊடல் கொண்டு நீ செய்த குற்றத்தைப்பற்றிக் கூறினேன். நீ பொய்ச்சூள் செய்து என்னை ஆற்றுவித்தாய். இப்போது, பொய்ச்சூள் கூறுவாயாயின் அது யாருக்குத் தீமையை விளைவிக்குமோ? எனவே, நீ பொய்ச்சூள் உரை யாதே" என்று கூறித் தன் ஊடலை நீக்கிக் கொண்டாள்.

கருத்து

தலைவி, 'தலைவன் பொய்ச்சூள் கூறினால் அஃது அவனுக்கு மட்டுமன்றி மகனுக்கும் தீதாய் முடியுமே' என்றஞ்சி, ஊடலை நீக்கிக் கொண்டாள்.

விளக்கம்

களவுக் காலத்தே தலைவன் தன்னிடம் பொய்ச்சூள் உரைத் ததுபோல, கற்புக் காலத்தும் தலைவன் பொய்ச்சூள் உரைத்துத் தன் ஊடலை நீக்க முற்படுவானோ என்று தலைவி அச்சம் கொள்கிறாள். களவுக் காலத்துக் கூறிய பொய்ச்சூள் அவனுக்கு மட்டுமே தீங்கு விளைக்கும். கற்புக் காலத்துப் பொய்ச்சூள் அவனுக்கு மட்டுமன்றி மகனுக்கும் தீங்கு விளைக்கும் என்று அஞ்சி அவன் பொய்ச்சூள் உரையா வண்ணம் தலைவி ஊடலை நீக்கிக்கொண்டாாள்.

சொற்பொருள்

1. ஒரூஉ - நீங்கு; குரல் - கூந்தல்.
2. மொய்ம்பு - தோள்.
3. தொடிய - வளையணிந்தவனே!
5, கடியர் - கடுமையான சினம் கொண்டவர்; மாற்று - மறு பேச்சு.
6. வாயல்லா - உண்மை அல்லாத; வெண்மை - பொருளற்றது.
7. மாயம் - மாயப்பேச்சு; மருள்வார் - மயங்குபவர்.
8. நின்கண் - உன் அருள் நோக்கம்; வாழ்கல்லா - வாழ்ந்திருக்க இயலாத.

10. இஃது ஒத்தன் - இவன் ஒருவன்; களவன் - நண்டு; பொதுக்கம் - கீறல், தடம்.
11. வள் உகிர் - கூரிய நகம்; எயிறு உறுதல் - பற்குறி பதிதல்.
12. சோர்ந்த - வாடிய; கண்ணி - தலைமாலை.
13. சிரறுபு - கோபித்து.
14. சாலாவோ - போதாவோ?
15. ஓராதி - நினையாதே.
16. தேற்றக்கண்டீயாய் - தெளிவிக்கக் காண்பாய்.
19. தார் மயங்கி வந்த தவறு - பரத்தை மாலையைத் தன் மாலை என எடுத்து அணிந்து வந்த தவறு; போர் - மாறுபாடு.
20. பொய்ச்சூள் - பொய்ச்சத்தியம்; அணங்காகின் - வருத்துமானால்.
21. யார்மேல் - யாரை; விளியுமோ - அழிக்குமோ?

தலைவி கூற்று

கலித்தொகை 87 — **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் சேரிச் சென்றமை அறிந்திலள் எனத் தலைமகள்மாட்டுச் சென்றவனோடு அவள் ஊடி உறழ்ந்து கூறித் தோழி வாயிலாக ஊடல் தீர்வாள், தன் நெஞ்சொடு கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன், தான் பரத்தையர் சேரியில் தங்கியிருந்ததைத் தலைவி அறிய மாட்டாள் என்று கருதித் தன் வீட்டுக்குச் சென்றான். ஆனால், தலைவி அவனோடு ஊடல்கொண்டு மாறுபட்டுப் பேசினாள். தோழி, தலைவியை அமைதிப்படுத்தியதும், தலைவி ஊடலை நீக்கத் தன் நெஞ்சொடு கூறியது.

தலைவி

ஒருஉ;நீ எம்கூந்தல் கொள்ளல்;யாம் நின்னை
வெரூஉதும்; காணும் கடை.

தலைவன்

தெரிஇழாய்! செய்தவறு இல்வழி யாங்குச் சினவுவாய்?
மெய்பிரிந்து, அன்னவர் மாட்டு?

தலைவி

ஏடா! நினக்குத் தவறுண்டோ? நீவீடு பெற்றாய்;
இமைப்பின் இதழ்மறைபு ஆங்கே கெடுதி;
நிலைப்பால் அறியினும்; நின்நொந்து நின்னைப்
புலப்பார் உடையர், தவறு.

தலைவன்

அணைத்தோளாய்! தீயாரைப் போலத் திறன்இன்று உடற்றுதி;
காயும் தவறிலேன் யான்.

தோழி

மான்நோக்கி நீஅழ நீத்தவன் ஆனாது
நாண்இல னாயின் நலிதந்து அவன்வயின்
ஊடுதல் என்னோ, இனி?

(தலைவி)

'இனி யாதும்மீக் கூற்றம் யாம்இலம்' என்னும்
தகையது காண்டைப்பாய், நெஞ்சே! பனிஆனாப்
பாடுஇல்கண் பாயல் கொள.

தெளிவுரை

(தன் இல்லம் திரும்பிய தலைவன், தன் தலைவியின் கூந்தலைத் தொட்டுக் கோதியபோது) "நீ என் கூந்தலைத் தொடாதே! உன்னைக் கண்டாலே எனக்கு வெறுப்பாய் உள்ளது" என்று தலைவி தலைவனிடம் கூறினாள்.

அது கேட்ட தலைவன், "ஆராய்ந்தெடுத்த அணிகலன்களை அணிந்தவளே! நான் உண்மையாய்த் தவறு ஏதும் செய்யாதவன்; அவ்வாறிருக்க ஏன் என்மீது சினங்கொள்கிறாய்?" என்றான்.

தலைவி, "ஏடா! உன்னிடமென்ன தவறா? கண் இமைக்கும் நேரத்தில் பார்வை மறைவதுபோல் ஒரு விநாடிப்பொழுதில் என்னை விட்டு நீங்கிவிடுகின்றாய். சென்ற இடத்திலே கெட்டொழிகிறாய். உன் குணத்தை அறிந்திருந்தும் முயன்று உன்னைத் திருத்திவிடலாம் என்று கருதுகின்ற நானே தவறு செய்தவள் ஆனேன்" என வெறுத்துக் கூறினாள்.

அது கேட்ட தலைவன், "மெத்தென்னும் தலையணை போன்ற தோள்களைக் கொண்டவளே! தீயவர்கள்மீது சினம் கொள்வது போல் தீமையினை அறியாத என்மீதும் சினம் கொள்கிறாய். நீ சினம் கொள்ளுமாறு நான் தவறேதும் செய்ய வில்லையே" என்றான்.

(இந்த உரையாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்த தலைவிக்கு உயிர்த்தோழியானவள் தலைவியை நோக்கி) "மானின் நோக்கினைக் கொண்ட என் தலைவியே! உன்னை அழ வைத்துப் பிரிந்தவன், நாணமில்லாதவனாய் இங்கு வந்திருக்கிறான்; அவனிடம் இனி ஊடல் கொள்வதால் என்ன பயன்? (ஊடலை நீக்கி இனிதாய் வாழ முற்படு" என்று அறிவுரை கூறினாள்.)

(தோழி கூறியதைக் கேட்ட தலைவி தன் நெஞ்சத்தினிடம் கூறிக் கொள்கிறாள்.) 'நெஞ்சே! இனி நான் சொல்வதற்கு என்ன உள்ளது? கண்ணீர் சொரிந்து உறக்கம் கொள்ளாத கண்கள் இனியாவது உறங்கத் தொடங்கட்டும். இத்தோழி சொல்வது பற்றி நீ ஆராய்ந்து பார்' என்று கூறிக்கொண்டு, தன் ஊடலை நீக்க முற்பட்டாள்.

கருத்து

'தலைவியே! உன்னை அழவைத்துப் பிரிந்தவன், நாணமின்றி இங்கு வந்துள்ளான். இனியும் அவனை வெறுப்பதால் என்ன பயன்? சிந்தித்துப் பார்' என்று தோழி கூற, அதை ஏற்றுத் தலைவி ஊடலை நீக்கிக் கொண்டாள்.

விளக்கம்

பரத்தையர் சேரி சென்று, பரத்தையரோடு இன்பம் நுகர்ந்து விட்டு இல்லத்திற்குத் திரும்பி வந்த தலைவனோடு ஊடல் கொண்ட தலைவியைத் தோழி அமைதிப்படுத்தி, 'தலைவன்மீது சினம் கொள்வதில் பயனேதும் கிட்டப்போவதில்லை' என்று சொன்னாள். அது கேட்ட தலைவி, வேறு வழியறியாது, தன் ஊடலை விலக்கிக்கொண்டு தன் நெஞ்சத்தினிடம் நொந்து கொண்டாள்.

குறிப்பு

தலைவன் பரத்தையரோடு உறவு கொண்டிருந்ததைத் தலைவி உணர்ந்தாலும், அவனை மன்னித்து ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியறியாதிருந்தாள். இது சங்க கால வழக்கம் என அறிகிறோம்.

சொற்பொருள்

1. ஒரூஉ - நீங்கு.
2. வெரூஉதும் - வெறுக்கின்றோம்; காணும் கடை - காணும்போது.
3. சினவுவாய் - சினங்கொள்வாய்.
4. அன்னவர் - பரத்தையர்.
5. வீடு பெற்றாய் - நீங்கிவிடுகின்றாய்.
6. இதழ்மறைபு - மறைந்துவிடுகிறாய்.
7. நிலைப்பால் - நிலையினை, குணத்தினை; நொந்து - வெறுத்து.
8. புலப்பார் - வேறுபடுபவர், அறிவுறுத்துபவர்.
9. உடற்றுதி - சினங்கொள்கின்றாய்.
10. காயும் - கடிந்து கூறும்.
11. ஆனாது - அளவு கடந்து.
12. நலிதந்து - வருத்தி.
14. மீக் கூற்றம் - மிகுத்துக் கூறுதல்
15. தகையது - தன்மையை; காண்டைப்பாய் - காண்பாய்; பனி - கண்ணீர்; ஆனா - வற்றாத, நீங்காத.
16. பாடு இல் - பொருத்துதல் (உறக்கம்) இல்லாத; பாயல் - உறக்கம்.

தலைவி கூற்று

கலித்தொகை 86 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

"தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால், அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்" என்பதனால், மகனைத் தலைமகனை ஒக்கல் ஆம் குணனும் ஒக்கல் ஆகாக் குணனும் தலைமகள் கூறுகின்றுழி, மறைந்து புக்க தலைமகன் அவள் ஊடலுணர்வன சொல்ல, மகன் வாயிலாக ஊடல் தீர்வாள் தன்னுள்ளே கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனைப் போலவே உருவ அழகில் ஒப்பானவனாய் விளங்கும் தன் மகன் விளையாடிக்கொண்டிருந்தபோது தலைவி, அவனை அழைத்துத் தழுவிக்கொண்டிருந்தாள். அப்போது அவள் அறியாது தலைவன் அங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும் தகாத அவன் செயல்களைச் சொல்லி ஊடல் கொண்டாள். தலைவன் தான் தவறு புரியாதவன் என்று தலைவியிடம் சொல்லியவாறே மகனைத் தழுவி அவன் வாயிலாக ஊடல் தீர்ந்தபோது தலைவி சொல்லியது.

மைபடு சென்னி மழகளிற்று ஓடைபோல்,
கைபுனை முக்காழ் கயந்தலைத் தாழப்
பொலஞ்செய் மழுவொடு வாள்அணி கொண்ட
நலங்கிளர் ஒண்பூண் நனைத்தரும் அவ்வாய்
கலந்துகண் நோக்குஆரக் காண்புஇன் துகிர்மேல்
பொலம்புனை செம்பாகம் போர்கொண்டு இமைப்பக்
கடிஅரணம் பாயாநின் கைபுனை வேழம்,
தொடியோர் மணலின் உழக்கி, அடியார்ந்த
தேரைவாய்க் கிண்கிணி ஆர்ப்ப, இயலும்என்
போர்யானை, வந்தீக, ஈங்கு!

செம்மால்! வனப்பெலாம் நுந்தையை ஒப்பினும், நுந்தை
நிலைப்பாலுள் ஒத்த குறிஎன்வாய்க் கேட்டுஒத்தி;
கன்றிய தெவ்வர்க் கடந்து களம்கொள்ளும்
வென்றிமாட்டு ஒத்தி, பெரும!மற்று ஒவ்வாதி,
'ஒன்றினேம் யாம்'என்று உணர்ந்தாரை, நுந்தைபோல்,
மென்தோள் நெகிழ விடல்.

பால்கொளல் இன்றிப் பகல்போல், முறைக்குஒல்காக்
கோல்செம்மை ஒத்தி, பெரும!மற்று ஒவ்வாதி
கால்பொரு பூவின் கவின்வாட, நுந்தைபோல்,
சால்புஆய்ந்தார் சாய விடல்.

வீதல் அறியா விழுப்பொருள் நச்சியார்க்கு
ஈதல்மாட்டு ஒத்தி, பெரும!மற்று ஒவ்வாதி,
மாதர்மென் நோக்கின் மகளிரை, நுந்தைபோல்,
நோய்கூர நோக்காய் விடல்.

(மறைய நின்ற தலைவனைத் தலைவி கண்டு கூறியது)

ஆங்க—
திறன்அல்ல யாம்கழற, யாரை நகும்,இம்
மகன்அல்லான் பெற்ற மகன்?
மறைநின்று, தாம்மன்ற வந்தீத் தனர்.

(தலைவன் கூறியது)

'ஆயிழாய்! தாவாத எற்குத் தவறுண்டோ? காவாதுஈங்கு
ஈத்தை, இவனையாம் கோடற்கு' சீத்தை,யாம்

(தலைவி கூறியது)

கன்றி அதனைக் கடியவும், கைநீவிக்
குன்ற இறுவரைக் கோள்மா இவர்ந்தாங்குத்
தந்தை வியன்மார்பில் பாய்ந்தான் – அறன்இல்லா
அன்பிலி பெற்ற மகன்.

தெளிவுரை

"மகனே! இளங்களிற்றின் மத்தகத்தில் தொங்கும் நெற்றிப் பட்டம்போல, உன் மென்மையான தலையிலும் மூவடக் கோவை தொங்குகிறது. பொன்னால் செய்யப்பட்ட வாளும் மழுவும் சேர்ந்து அழகு செய்யும் எருது (இடப) இலச்சினை உன் கழுத்திலே இருக்கிறது. உன் வாயிலிருந்து வடிகின்ற உமிழ்நீர் அதனை நனைக்கிறது. அவற்றோடு ஒன்றிக் கலந்து என் கண்கள் ஆசைதீர உன்னைப் பார்க்கின்றன. இரு யானைகள் ஒன்றோடு ஒன்று போரிடுவதுபோலப் பவள வட்டப்பலகைமேல் அமைக்கப் பெற்றுள்ள உன் விளையாட்டு யானையை நீ இழுத்து விளையாடுகிறாய். தொடி புனைந்த மகளிர் மணல் வீடுகளை இழைத்துள்ளனர். அவற்றைக் கலைத்தவாறு காலடியில் அணிந்துள்ள தவளை வாய் போன்ற சதங்கைகள் ஒலி முழக்கிட வந்துகொண்டிருக்கும் மகனே! போர்யானை போன்ற மாவீரனே! இங்கே வா" என்று தலைவி தன் மகனை அழைத்து அவனை அணைத்தவண்ணம் அவனிடம் பேசுகிறாள்.

"செம்மலே! அழகில் உன் தந்தையைப் போலவே இருக்கிறாய். உன் தந்தை கொண்டுள்ள நிலைமைகளுள் உனக்கு ஏற்றன

வற்றைச் சொல்கிறேன்! அதனைக் கேட்டு, அவற்றில் மட்டும் அவனைப் போல நீயும் விளங்கு. சினந்தெழும் பகைவரைப் போர்க்களத்தில் அவன் வெல்வதுபோல நீயும் வெற்றி பெறும் வீரனாய் விளங்கு. பெருமானே! என் மகனே! 'உன்னுடன் ஒன்றிவிட்டோம்' என்று சொன்னவன், உன் தந்தை. தோள்கள் மெலியக் கைவிட்டுச் செல்பவன். இச்செயலில் நீ அவனை ஒத்திருக்க வேண்டா.

"ஒரு பக்கம் சார்ந்திராது, கதிரவனைப்போல் நீதி வழுவாது ஆட்சி செய்வதிலே உன் தந்தையைப்போலவே திகழ்ந்திரு. ஆனால், காற்று மலர்களை உதிர்த்து அவற்றின் அழகு கெடுமாறு செய்வதுபோல, நற்குணம் வாய்ந்த சிறந்த மனைவியைக் கைவிட்டுப் பரத்தமை கொள்ளும் உன் தந்தையைப்போல நீ இருக்க வேண்டா.

"பெருமை நிறைந்த என் மகனே! வாடி வந்தவர்களுக்கு உன் தந்தை அழிவில்லாச் சிறந்த பொருள்களை வழங்குவதுபோல நீயும் ஈகையில் சிறந்து விளங்கு. ஆனால், காதல் கொண்ட மென்மைப் பண்பு வாய்ந்த மகளிரை உன் தந்தை வருத்தமடையச் செய்வதுபோல நீ செய்யாதே!" என்று கூறினாள்.

இவ்வாறு மனைவி தன் மகனிடம் கூறிக்கொண்டிருந்த பொழுது (தலைவன் அங்கே வரவும்) தாயணைப்பிலிருந்த மகன் தன் தாய்க்குப் பின்புறம் நின்ற தகப்பனைக் கண்டு மெல்லச் சிரிக்கிறான். (சிரிக்கவும், தாய்), திறனல்லாத செயல்களைச் செய்யாதே என்று நான் சொல்லக் கேட்டும் மக்கட் பண்பில்லா தலைவர் பெற்ற இந்த மகன் யாரைப் பார்த்துச் சிரிக்கிறான்?"

(மறைந்து நின்ற தலைவன் அப்போது வெளியே வந்து பேசினான்.)

தலைவன், "ஆயிழாய்! பிறர்பால் மனத்தைச் செலுத்தாத என் மீது ஏதும் தவறுண்டா? மகனைப் பிடித்துக்கொண்டிராமல், நான் எடுத்துக்கொள்ளுமாறு விடு" என்றான். (புதல்வன் உடனே தந்தையிடம் சென்று, அவன் மார்பைப் பற்றித் தழுவிக் கொண்டான்.)

உடனே தலைவி, "இம்மகன் ஒரு கழிசடை! உன் தகப்பனிடம் நீ செல்லக்கூடாது என மனம் வெறுத்துத் தடுத்தும், நம் கையை உதறிவிட்டு, சிங்கக்குட்டி மலைப்பக்கத்தை நோக்கிப் பாய்ந்தது போலத் தன் தந்தையின் மார்புமீது பாய்ந்துவிட்டானே. என்மேல் அன்பில்லாதவன் பெற்ற மகன்தானே இவனும்! இவன் மட்டும் எப்படி என்மீது அன்பு காட்டுவான்?" என்று கூறினும், மகனை விரும்பும் தந்தையைத் தான் எப்படி விலக்க இயலும் என்று எண்ணித் தலைவி தன் ஊடலையும் நீக்கிக்கொண்டாள்.

கருத்து

தந்தையைக் கண்ட மகன் தாவி அவனிடம் செல்கிறான். 'அவனை எப்படித் தந்தையிடமிருந்து விலக்க இயலும்?' என்றெண்ணிய தலைவி தன் ஊடலை நீக்கிக்கொண்டாள்.

விளக்கம்

தன் தலைவன், தன்னை விட்டுப் பிரிந்து சென்று, பரத்தையரிடம் இன்பம் நுகர்ந்து வந்ததால் அவனோடு தலைவி ஒருத்தி ஊடல் கொண்டிருந்தாள். அந்த நிலையில் தன் மகனுக்கு அறிவுரை சொல்வாள்போல, "மகனே! தந்தை போன்றவன் மகன் என்று உலகினர் கூறுவர்; அவரிடமுள்ள அழகையும் வீரத்தையும் கொண்டிரு; ஆனால், உன் தந்தை தான் மணம் செய்துகொண்ட மனைவியைத் தவிக்கவிட்டுப் பரத்தமை ஒழுக்கத்தை மேற்கொண்டதைப்போல் நீ வாழக்கூடாது" என்று கூறினாள். அந்த நேரத்தில் அங்கு வந்த தன் தந்தையைக் கண்ட மகன், தந்தையின் மார்பைத் தழுவிக்கொண்டான். அதைக் கண்ணுற்ற தலைவி, 'என்மேல் அன்பில்லாதவனுக்குப் பிறந்தவன் என்பதைக் காட்டிவிட்டான்' என மகனைப் பழித்துக் கூறினாள். எனினும், மகனைக் காரணமாய்க் கொண்டு தன் ஊடலைக் கைவிட்டாள்.

சொற்பொருள்

1. மை - கருமை; சென்னி - தலை; மழகளிறு - இளங்களிறு; ஓடை - யானையின் நெற்றிப்பட்டம்.
2. முக்காழ் - மூவடம்; கயந்தலை - இளந்தலை; தாழ - கிடக்க.
3. பொலஞ்செய் - பொன்னால் செய்யப்பட்ட.

4. நலங்கிளர் - அழகொளிரும்; ஒண்பூண் - ஒளி பொருந்திய இடப இலச்சினை.
5. நோக்கு ஆர - கண் நிறைய; துகிர் - பவளம்.
6. செம்பாகம் - சரிபாதி.
7. கடிஅரணம் - காவல் மிகுந்த கோட்டை; பாயா - தாக்காத; கைபுனை வேழம் - கையால் செய்யப்பெற்ற யானைப்பொம்மை.
8. உழக்குதல் - விளையாடுதல்; அடிஆர்ந்த - காலடியில் அணிந்துள்ள.
9. தேரைவாய் - தேரை வாயைப் போன்ற (தேரை - தவளை); கிண்கிணி - கால் அணி; இயலும் - அசைந்து நடக்கும்.
10. போர் யானை - போர் யானை போன்றவனே; வந்தீக - வருக.
12. நிலைப்பால் - தன்மையுள்; ஒத்த - ஒத்திரு.
13. கன்றிய - சினம் கொண்ட; தெவ்வர் - பகைவர்; கடந்த - வெற்றி கொண்ட.
14. வென்றி - வெற்றி; ஒவ்வாதே - ஒத்திராதே.
15. ஒன்றினேம் - ஒன்றுபட்டோம்; நுந்தை - உன் தந்தை.
16. நெகிழ விடல் - நிலை குலைய விடாதே.
17. பால்கொளல் - ஒரு பக்கமாய்ச் சார்ந்திராது; பகல் - கதிரவன்; முறை - நீதி; ஒல்கா - குறையாத.
18. கோல் செம்மை - செங்கோன்மை.
19. கால் - காற்று.
20. சால்பு - நற்குணம்; சாய - கைவிட்டு.
21. வீதல் - வறுமை, சாதல்; நச்சுதல் - விரும்புதல்.
22. ஈதல் மாட்டு - கொடுத்தலில்.
23. மாதர் - அழகு.
24. நோய் கூர - வருத்தம் மிக.
25. கழற - கூற; யாரை நகும் - யாரைக் கண்டு சிரிக்கிறான்.
26. மகன் அல்லான் - மக்கட்பண்பில்லாதவன்.
27. மறை நின்று - மறைந்து நின்று; வந்தீத்தனர் - வந்து சேர்ந்தான்.
28. தாவாத - குற்றமில்லாத.
29. ஈத்தை - கொடு; கோடற்கு - எடுத்துக்கொள்ளுவதற்கு; சீத்தை - குணமில்லாதவன்.
30. கன்றி - சினந்து; கை நீவி - மீறி.
31. இறுவரை - பெரிய மலை; கோள்மா - சிங்கம்; இவர்தல் - பாய்தல்.
32. வியன்மார்பு - அகன்ற மார்பு.
33. அன்பிலி - அன்பு இல்லாதவன்.

தலைவி கூற்று

கலித்தொகை 77 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் சேரியிற் சென்று வந்த தலைமகனோடு ஊடிய தலைமகள் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையின் வீட்டிற்குச் சென்று வந்த தலைவனின் செயலுக்காக வருந்தினாள், தலைவி. எனினும், அவன்மேல் தான் கொண்டுள்ள காதலன்பு நீங்காதிருப்பதைக் குறிப்பாய்க் கூறி ஊடலைக் கைவிட்டதைக் கூறியது.

தரவு

இணைஇரண்டு இயைந்துஒத்த முகைநாப்பண், பிறிதுயாதும்
துணைஇன்றித் தளைவிட்ட, தாமரைத் தனிமலர்;
திருமுகம் இறைஞ்சினள், வீழ்பவற்கு இனைபவள்,
அரிமதர் மழைக்கண்ணீர் அலர்முலைமேல் தெறிப்பபோல்,
தகைமலர்ப் பழனத்த புள்ஒற்ற, ஒசிந்துஒல்கி,
மிகநனி சேர்ந்தஅம் முகைமிசை அம்மலர்
அகஇதழ்த் தண்பனி உறைத்தரும் ஊர!கேள்.

தாழிசை

தண்தளிர்த் தகைபூத்த தாதுஎழில் நலம்செலக்
கொண்டு,நீ மாறிய கவின்பெறல் வேண்டேன்மன்–
உண்டாதல் சாலாஎன் உயிர்சாதல் உணர்ந்து,நின்
பெண்டுஎனப் பிறர்கூறும் பழிமாறப் பெறுகற்பின்.

பொன்எனப் பசந்த,கண் போதுஎழில் நலம்செலத்
தொன்நலம் இழந்தகண் துயில்பெறல் வேண்டேன்மன்–
நின்அணங்கு உற்றவர் நீசெய்யும் கொடுமைகள்
என்னுழை வந்து,நொந்து உரையாமை பெறுகற்பின்.

மாசற மண்ணுற்ற மணிஏசும் இருங்கூந்தல்
வீசேர்ந்து வண்டுஆர்க்கும் கவின்பெறல் வேண்டேன்மன்–
நோய்சேர்ந்த திறம்பண்ணி, நின்பாணன், எம்மனை
நீசேர்ந்த இல்வினாய் வாராமை பெறுகற்பின்.

20 ஆங்க–

சுரிதகம்

> ‘கடைஇய நின்மார்பு தோயலம்’ என்னும்,
> இடையும் நிறையும் எளிதோ?நின் காணின்,
> கடவுபு, கைத்தங்கா, நெஞ்சுஎன்னும் தம்மோடு
> உடன்வாழ் பகைஉடை யார்க்கு?

தெளிவுரை

“வயல் ஒன்றில் எல்லா வகையிலும் இணைந்து ஒத்திருப் பவையான இரு தாமரை மொட்டுகளுக்கு நடுவிலே, எதுவும் துணை இல்லாமல் தன் இதழை விரித்திருந்தது, ஒரு தாமரை மலர். மலர்கள் நிறைந்த அவ்வயலில் இருந்த பறவை ஒன்று, மலர்ந்திருந்த அம்மலர்மீது மோத, அது சாய்ந்து வளைந்து, இணைந்திருந்த அந்த இரட்டை மொட்டுகளின்மேல் தன்னுள் இருந்த நீர்த்துளிகளைச் சிந்தியது. இக்காட்சி, பெண் ஒருத்தி, தன்னால் விரும்பப்பட்ட ஒருவன் பிரிந்து சென்றதை எண்ணி அழும்போது அவள் சிந்திய கண்ணீர் அவள் முலைகளின்மேல் பட்டுத் தெறிப்பதுபோல இருந்தது!

“இத்தகைய காட்சிக்குரிய ஊருக்குத் தலைவனே! கேள். குளிர்ச்சி பொருந்திய இளந்தளிரில் பூந்தாது உதிர்ந்து காணப் படுவதுபோல உன் பிரிவால் என் மேனியெங்கும் தேமல் படர்ந்து என் எழில் நலம் குறைந்துவிட்டது; நீ மீண்டும் வந்து என் எழிலை அளிக்க வேண்டுமென்றுகூட நான் விரும்ப வில்லை. இருக்கிறது என்று கூற இயலாத நிலையிலுள்ள என் உயிர் என்னை விட்டு நீங்காதிருக்க, ‘உன் மனைவி’ என்று என்னைப் பிறர் பழி தூற்றாமல் இருந்தாலே போதும்!

“மலர் போன்று அழகுடன் காட்சி தந்த என் கண்கள் அழகழியப்பெற்றுப் பசலை நிறம் கொண்டன. ஒளியிழந்த என் கண்கள் துயில் பெற வழி செய்யுமாறுகூட நான் உன்னிடம் வேண்டவில்லை. உன்னால், கொடுமைக்கு ஆளாக்கப்படுகின்ற பரத்தையர், என்னிடம் வந்து மனம் வருந்தி எதுவும் உரைக் காமல் இருந்தாலே போதும்!

“மாசறக் கழுவிய நீலமணியையும் பழிக்கும் என் கருங்கூந்தல், வண்டுகள் தேனுண்ண மொய்க்குமளவிற்கு மலர்கள் சூடப் பெற்று அழகு பெற வேண்டும் என்றுகூட நான் விரும்பவில்லை. எனக்கு வருத்தம் தரும் பண்ணிசையை முழக்கிக்கொண்டு உன்னைத் தேடி வரும் பாணன், நீ எந்தப் பரத்தை வீட்டில் இருக்கிறாய் என்று என்னைக் கேட்காமல் இருந்தாலே போதும்!

“பரத்தையர் வீடு சென்று வந்த உன் மார்பைத் தழுவக் கூடாது என்றுதான் நினைத்தேன். ஆனால், உன்னைக் கண்டால், என் நெஞ்சம் என்னை உன்னிடத்திலே தள்ளிவிட்டுத் தானும் உன்னுடன் வந்து தங்கிக்கொள்கிறது. என் நெஞ்சமே எனக்குப் பகையாகிவிடுகிறது. எனவே, உன்னைத் தழுவ மாட்டேன் என்று கூறி ஊடல் கொண்டு உறுதியோடு இருத்தல் எனக்கு எளிதன்று” என்று தலைவி தலைவனிடம் கூறித் தன் ஊடலை விலக்கிக்கொண்டாள்.

கருத்து

‘தலைவன் தவறுகள் பல செய்தாலும் என் நெஞ்சம் அவனைக் கண்டதும் என்னையும் மீறி அவனிடம் சென்றுவிடுகிறது. என் செய்வேன்?’ என்று கூறித் தன் ஊடலை விலக்கிக்கொண்டாள், தலைவி.

விளக்கம்

பரத்தையர் இல்லம் சென்று இன்பம் நுகர்ந்து திரும்பிய தலைவனோடு ஊடல் கொண்டாள், தலைவி. அவள் தான் ஊடல் கொள்வதால் பயனில்லை என்பதையும், தலைவன் பிற மகளிரிடம் சென்று வந்தபோதும், தன் உள்ளம் தலைவனோடு கூடவே விரும்புகிறது என்பதையும் உணர்ந்தாள். தன் நெஞ்சமே தனக்குப் பகையாய் இருப்பதையும் உணர்ந்து தலைவி வருந்துவதுபோல இப்பாடல் அமைந்துள்ளது.

குறிப்பு

தாமரை மொட்டுகள்போலத் தலைவியின் முலைகள் உள்ளனவாகவும், பூத்த தாமரையைப்போல அவள் கண்கள் அமைந்திருப்பனவாகவும், பூத்த தாமரையிலிருந்து மொட்டுகளின் மீது கொட்டும் நீர்த்துளியைப்போல அவள் கண்களிலிருந்து கண்ணீர் சிந்துவதாகவும் உவமித்திருப்பது மிகுந்த நயம் வாய்ந்தது.

சொற்பொருள்

1. இயைந்து ஒத்த - எல்லா வகையிலும் ஒத்திருந்த; முகை - தாமரை மொட்டு, அரும்பு; நாப்பண் - நடுவே.
2. தளைவிட்ட - இதழ் விரிந்த; தாமரைத் தனிமலர் - தனித்து நின்ற தாமரை மலர்.
3. வீழ்பவற்கு - தன்னை விரும்பினவர்க்கு; இனைபவள் - வருந்துபவள்.
4. அலர் - பரந்த; தெறிப்ப - சிதறுதல்.
5. பழனம் - வயல்; புள் - பறவை; ஒற்ற - மோத; ஒசிந்து - சாய்ந்து; ஒல்கி - வளைந்து.
6. மிக நனி சேர்ந்த - மிகவும் நெருங்கிச் சேர்ந்திருந்த; முகை - மொட்டுகள்; அம்மலர் - பூத்த அழகிய மலர்.
7. தண்பனி - குளிர்ந்த நீர்; உறைத்தரும் - துளிர்க்கும்.
8. நலம் - அழகு; செல - நீங்க.
9. மாறிய - மாற்றிய; கவின் - அழகு.
10. சாலா - பொருந்தாத.
11. பெண்டு - மனைவி; மாற - நீங்க; பெறுகற்பின் - பெற்றால்.
13. தொல் நலம் - பழைய அழகு.
14. அணங்கு - துன்பம்; உற்றவர் - பரத்தையர்.
15. என்னுழை - என்னிடம்; நொந்து - வருந்தி.
16. மண்ணுற்ற - கழுவப்பெற்ற; மணி - நீலமணி; ஏசும் - தோற்கச் செய்யும்; இருங்கூந்தல் - கருங்கூந்தல்.
17. வீ - மலர்; ஆர்க்கும் - ஒலிக்கும்.
18. நோய் சேர்ந்த திறம் - எனக்கு நோயை உண்டாக்கும் பண்ணைக் கொண்ட திறன் ஆகிய பண்; பண்ணி - இசைத்து.
19. இல்வினாய் - இல்லத்தைக் கேட்டு.
21. கடைஇய - பரத்தையர் கவர்ந்த; தோயலம் - தழுவ மாட்டோம்.
22. இடை - கற்பு; நிறை - நெஞ்சை ஒருவழி நிறுத்தும் குணம்; எளிதோ - எளிதன்று; நிற்காணின் - உன்னைக் காணும்போது.
23. கடவுபு - செலுத்தி; கைத்தங்கா - என்னிடம் தங்காது (உன்னிடம் தங்கி).
24. தம்மோடு உடன்வாழ் பகை - தலைவி தன் நெஞ்சை இவ்வாறு குறிப்பிடுகிறாள்.

தலைவி கூற்று

கலித்தொகை 67 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

வாயின் மறுத்த தலைமகள், ஆற்றாமை வாயிலாகப் புக்குக் கூடிய தலைமகனது நீக்கத்துக்கண், புக்க தோழிக்குக் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் வீட்டிற்குச் சென்ற தலைவனோடு தலைவி ஊடல் கொண்டாளாயினும், அவனைப் பிரிந்திருந்து ஆற்ற இயலவில்லை. ஓதைத் துணையாகக்கொண்டு தலைவன் அவளோடு கூடினான்; ஆன்றாலும், மறுபடியும் பிரிந்துவிட்டான். அந்நிலையில் அங்கு வந்த தோழியிடம் இந்நிலை ஏற்படுவதற்கான காரணத்தைத் தலைவி கூறியது.

தரவு

கார்முற்றி, இணர்ஊழ்த்த கமழ்தோட்ட மலர்வேய்ந்து,
சீர்முற்றிப் புலவர்வாய்ச் சிறப்புஎய்தி, இருநிலம்
தார்முற்றி யதுபோலத் தகைபூத்த வையைதன்
நீர்முற்றி, மதில்பொரூஉம் பகையல்லால், நேராதார்
போர்முற்றுஒன்று அறியாத புரிசைசூழ் புனல்ஊரன்–

தாழிசை

நலத்தகை, எழில்உண்கண் நல்லார்தம் கோதையால்
அலைத்தபுண் வடுக்காட்டி, அன்பின்றி வரின்–எல்லா!
புலப்பேன்யான் என்பேன்மன்; அந்நிலையே அவற்காணின்,
கலப்பேன் என்னும்இக் கையறு நெஞ்சே.

கோடுஎழில் அகல்அல்குல் கொடியன்னார் முலைமூழ்கிப்
பாடுஅழி சாந்தினன், பண்பின்றி வரின்–எல்லா!–
ஊடுவேன் என்பேன்மன்; அந்நிலையே, அவற்காணின்,
கூடுவேன் என்னும்,இக் கொள்கைஇல் நெஞ்சே.

இனிப்புணர்ந்த எழில்நல்லார் இலங்குஎயிறு உறாஅலின்,
நனிச்சிவந்த வடுக்காட்டி நாணின்றி வரின்– எல்லா!

துனிப்பேன்யான் என்பேன்மன்; அந்நிலையே அவற்காணின்,
தனித்தே தாழும்,இத் தனியில் நெஞ்சே.

எனவாங்கு –

சுரிதகம்

பிறைபுரை ஏர்நுதால்! தாம்எண்ணியவை எல்லாம்
துறைபோதல் ஒல்லுமோ– தூவாகாது ஆங்கே
அறைபோகும் நெஞ்சுடை யார்க்கு?

தெளிவுரை

"கார் காலத்தில் பூங்கொத்துகள் தோன்றி, மணம் கமழும் தம் இதழ் விரிந்த மலர்கள் வீழ்ந்தமையால், புலவர்களால் சிறப்பித்துப் போற்றப்பெறும் வையை ஆறு அம்மலர்களால் நீர்ப் பரப்பெல்லாம் மறைந்திட ஓடி வருகிறது. அது, நிலமகள் மாலை சூட்டிக்கொண்டதுபோல இருக்கிறது. வையை தனது வெள்ளத்தால் மோதுகின்ற பகையைத் தவிர வேறு பகை அறியாத, கோட்டை சூழ்ந்த, நீர்வளம் நிறைந்த ஊரினுக்குத் தலைவன், நம் தலைவன்.

"தோழியே! நலம் செறிந்த அழகிய மையுண்ட கண்களைக் கொண்ட பரத்தையர் தம் தலைமாலையால் அடித்தமையால் ஏற்பட்ட புண்ணின் வடுவைக் காட்டிக்கொண்டு தலைவன் நம்மிடம் அன்பில்லாமல் இங்கு வந்தால், அவன்மீது கோபம் கொள்ள வேண்டும் என்று உறுதி கொண்டிருந்தேன். ஆனால், அவனைக் கண்டவுடன் செய்வதறியாது என் மனம் மாறி விடுகிறது. அவனோடு கூடிவிடுகின்றேன்! அந்நிலையில் நான் என் செய்வேன்?

"பக்கம் உயர்ந்த எழுச்சி கொண்ட அகன்ற அல்குலும், கொடி போன்ற இடையும் கொண்டவரான பரத்தையரின் முலைகளிலே கிடந்து, சிதைந்த சந்தனப்பூச்சைக் கொண்டவனாய்ப் பண்பின்றி இங்கு அவன் வந்தால், அவனோடு ஊடல் கொள்ள வேண்டும் என்றுதான் கருதியிருந்தேன். ஆனால், கொள்கையற்ற என் நெஞ்சு அவனைக் கண்டதும் கூட வேண்டும் என்கிறதே! அந்நிலையில் நான் என் செய்வேன்?

"இனிதாய்க் கூடிய அழகு வாய்ந்த பரத்தையரின் பற்பதிந்த வடுக்களைக் காட்டிக்கொண்டு, இங்கு நாணமின்றி அவன் வந்தால் அவன்மீது வெறுப்புற்றுக் கோபம் கொள்ள வேண்டும் என்ற உறுதியோடுதான் நான் இருந்தேன். ஆனால், அந்நிலை யிலும் அவனைக் கண்டதும் என் நெஞ்சம் என்னைத் தவிக்க விட்டுவிட்டுத் தானாகவே அவனுக்கு இணங்கி விடுகிறதே! அந்நிலையில் நான் என் செய்வேன்?

"பிறை போன்ற அழகிய நுதலைக் கொண்டவளே! நம் நெஞ்சம் நம்மை வஞ்சித்து அவரோடு செல்வதாயுள்ளது. இப்படிப்பட்ட நெஞ்சினைக் கொண்ட நாம், கருதியதை (கருதியவாறு) நிறைவேற்றிக்கொள்ள இயலுமா? இயலாதே!

கருத்து

"பரத்தையிற் பிரிந்திருக்கும் தலைவனை ஏற்கக்கூடாது என்றிருக்கும் என் மன உறுதி அவனைக் கண்டதும் மாறி அவனிடம் சென்றுவிடுவதால் அவனை நீக்க இயலாததாகிறது. அதனைப் பயன்படுத்தி என்னோடு கூடியவன் மீண்டும் பிரிந்துவிட்டான்" என்று தலைவி தோழியிடம் கூறி வருந்தினாள்.

விளக்கம்

தன்னைப் பிரிந்து, பரத்தையரோடு கூடி மகிழ்ந்திருக்கும் தலைவன் திரும்ப வந்தால் அவனைத் திரும்பிக்கூடப் பார்க்கக் கூடாது என்று கருதியிருந்தாள், தலைவி. ஆனால், அவன் திரும்ப வந்தபோது அவனோடு கூடி மகிழ வேண்டும் என்னும் எண்ணமே தலைவியிடம் தலைதூக்கியது. தலைவியின் ஆற்றாமையினையே துணையாய்க் கொண்டு தலைவன், 'நான் இனிப் பிரியேன்' என்று கூறி அவளோடு கூடி மகிழ்ந்தான். என்றாலும், கூடி மகிழ்ந்தபின் தலைவியைவிட்டுப் பிரிந்து சென்று விட்டான். அந்நிலையில் வருந்திக்கொண்டிருந்த தலைவியைக் காண வந்த தோழியிடம், தன் நிலையைக் கூறினாள், தலைவி.

தோழியோ, "நீ அவன் வந்தபோது ஊடல் கொண்டிருக்க வேண்டும். அப்படியின்றி அவன் விருப்பத்துக்கு இணங்கி விட்டாய்" என்றாள்.

தலைவி தோழியை நோக்கி, "அவன் இங்கு வரும்வரை நானும் அப்படித்தான் கருதிக்கொண்டிருந்தேன். ஆனால், அவனைக் கண்டதும் அத்தகைய எண்ணமெல்லாம் எங்கோ மறைந்து விட்டது. என் நெஞ்சம் அவனோடு கூடி மகிழ முயன்றது. என் ஆற்றாமையைப் பயன்படுத்திக்கொண்டு, என்னோடு கூடி மகிழ்ந்து, மறுபடியும் பிரிந்து போய்விட்டான்" என்று கூறினாள்.

சொற்பொருள்

1. முற்றி - முதிர்ந்து; இணர் - பூங்கொத்து; ஊழ்த்த - மலர்ந்த; தோட்ட - இதழ்களைக் கொண்ட (தோடு - இதழ்).
2. சீர்முற்றி - சிறப்பு நிறைந்து; இரு நிலம் - பெரிய உலகம்.
3. தார் - மாலை; முற்றியது - அணிந்தது; தகை பூத்த - பெருமை நிறைந்த; வையை - வையை ஆறு.
4. முற்றி - நிறைந்து; மதில் - கோட்டைச்சுவர்; பொரூஉம் - மோதுகின்ற; நேராதார் - பகைவர்.
5. புரிசை - கோட்டை.
6. நலத்தகை - நலம் நிறைந்த; உண்கண் - மை எழுதப்பெற்ற கண்; நல்லார் - பரத்தையர்; கோதை - தலைமாலை.
7. அலைத்த - அடித்த; எல்லா - தோழி.
8. புலப்பேன் - ஊடுவேன்.
9. கலப்பேன் - கூடுவேன்; கையறுதல் - (செய்யும்) செயல் அறுதல்.
10. கோடு - பக்கம்; அகல் - அகன்ற.
11. பாடு - பெருமை; சாந்து - சந்தனம்.
14. எயிறு - பல்; உறாஅலின் - பதிதலின்.
15. நனி - மிகவும்; வடு - அடையாளம்.
16. துனிப்பேன் - வெறுப்பேன்.
17. தாழ்தல் - பெருமையை விட்டு ஆசைப்படுதல்.
19. பிறை - நிலவுப்பிறை; புரை - ஒப்ப; ஏர் - அழகு; நுதல் - நெற்றியினைக் கொண்ட தோழியே!
20. துறை போதல் - முற்ற முடித்தல்; ஒல்லுமோ - இயலுமோ?; தூவாகாது - தூ + ஆகாது - துணை ஆகாது.
21. அறைபோதல் - கீழறுத்தல், வஞ்சித்தல்.

தலைவி கூற்று

கலித்தொகை 66 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன் தனது ஆற்றாமையே வாயிலாகத் தலைமகளுழைச்சென்றாற்கு, அவன் முன்பு வதுவை யயர்ந்ததூஉம், அப்பொழுது புனலாடியதூஉம், இப்பொழுது துணங்கை ஆடியதூஉங் கூறிப் புலந்தாள் தலைமகள். அவள் புலந்தவாறு கண்டு, சென்று சார்ந்த தலைமகனுடன் ஊடல் தீர்கின்றாள் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தை காரணமாகப் பிரிந்த தலைவன் தன் வீடு திரும்புகிறான். தலைவி அவன் பரத்தையுடன் தொடர்பு கொண்டது, புனல் ஆடியது, அண்மைக் காலத்தில் துணங்கைக் கூத்தாடியது ஆகியவற்றைக் கூறி ஊடல் கொண்டாள். தலைவன் அவளை நெருங்கி அமைதிப்படுத்த, ஊடலை நீக்கித் தலைவனிடம் தலைவி கூறியது.

தரவு

வீங்குநீர் அவிழ்நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந்து, ஊர்புகுந்த வரிவண்டு,
ஓங்குஉயர் எழில்யானைக் கனைகடாம் கமழ்நாற்றம்
ஆங்கவை விருந்தாற்றப் பகல்அல்கிக், கங்குலான்
வீங்குஇறை வடுக்கொள வீழுநர்ப் புணர்ந்தவர்
தேங்கமழ் கதுப்பினுள் அரும்புஅவிழ் நறுமுல்லை
பாய்ந்துஊதிப், படர்தீர்ந்து, பண்டுதாம் மரீஇய
பூம்பொய்கை மறந்து,உள்ளாப் புனல்அணி நல்ஊர!

தாழிசை

'அணைமென்தோள் யாம்வாட, அமர்துணைப் புணர்ந்துநீ,
மணமனையாய்' எனவந்த மல்லலின் மாண்புஅன்றோ –
பொதுக்கொண்ட கவ்வையின் பூவணிப் பொலிந்தநின்
வதுவைஅம் கமழ்நாற்றம் வைகறைப் பெற்றதை?

'கனலும்நோய்த் தலையும்நீ கனங்குழை அவரொடு
புனல்உளாய்' எனவந்த பூசலின் பெரிதன்றோ–

தார்கொண்டாள் தலைக்கோதை தடுமாறிப் பூண்டநின்
ஈரணி சிதையாது,எம் இல்வந்து நின்றதை?

'தணந்ததன் தலையும்,நீ தளர்இயல் அவரொடு
துணங்கையாய்' எனவந்த கவ்வையின் கடப்பன்றோ—
ஒளிபூத்த நுதலாரோடு ஓரணிப் பொலிந்தநின்
களிதட்ப வந்தஇக் கவின்காண இயைந்ததை?

எனவாங்கு –

சுரிதகம்

அளிபெற்றேம்; எம்மைநீ அருளினை; விளியாது
வேட்டோர் திறத்து விரும்பியநின் பாகனும்,
'நீட்டித்தாய்' என்று, கடாஅம்,கடும் திண்தேர்;
பூட்டு விடாஅ நிறுத்து.

தெளிவுரை

"நீர் வளம் நிறைந்த ஊரினுக்கு உரியவனே! உன் ஊரில் நீர் நிறைந்த குளங்களிலே மலர்கள் பல பூத்துக் குலுங்குகின்றன. வண்டுகள் தாமரை மலர்களில் அமர்ந்து தேனுண்டு மகிழ்ந்திருக் கின்றன. வயல்களிலே குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. பூ விற்போர் அக்குவளை மலர்களைப் பறித்து ஊருள்ளே விற்பதற்காகக் கொண்டுசெல்கின்றனர். தாமரைப் பொய்கை யில் உள்ள மலரில் தேனுண்ட வண்டுகள் அதை விட்டு, குவளை மலரில் தேனுண்ண ஆசைப்பட்டு, பூ விற்பவரோடு ஊருக்குள் வந்து சேர்கின்றன. அவ்வூரிலிருந்த பெரிய களிறுகள் மதநீரை ஒழுகவிட்டிருந்தன. மலரில் உள்ள தேனை உண்டுகொண் டிருந்த வண்டுகள், மதநீர் வாடையை அறிந்ததும் மலர்களை விட்டு நீங்கி மதநீரில் சென்று மொய்த்தன. இவ்வாறு தாமரைத் தேனை உண்டுகொண்டிருந்த வண்டுகள் கருங்குவளையையும் பின் மதநீரையும் நாடிச் சென்று பகல் நேரம் முழுதும் மகிழ்ந்திருந்தன.

"உன் ஊர் மகளிர் பலரும் மாலை நேரத்தில் முல்லை அரும்பு களைத் தலையில் சூடுவர். அவர்கள் இரவிலே தம் கணவருடன் கூடி மகிழ்ந்திருக்கும் வேளையில் (அவ்வரும்புகள்) மலர்ந்து மணம் வீசும். முல்லை மணம் நுகர்ந்த வண்டுகள் முல்லைத்

தேனையும் உண்ண எண்ணி மங்கையர் கூந்தலை வட்டமிடத் தொடங்கின. முன்பு தேனுண்ட பொய்கைப் பூக்களை அவை இப்போது மறந்துவிட்டன.

"அத்தகைய வண்டுகள் போன்றவன்தான் நீ என்பதை நான் உணர்ந்துகொண்டேன். பஞ்சணை போன்ற என் தோள்கள் வாடிக்கொண்டிருக்கும் இந்த வைகறைப்பொழுதில், உன் பரத்தையரோடு கூடி மகிழ்ந்திருந்த அந்த மணம் மாறாமல் என் முன் வந்து நிற்கிறாய். ஊரார் உன்னைப் பழித்துப் பேசவும், இப்படி என் முன் வந்து நிற்பது உனக்கு மிகவும் பெருமையுடையதன்றோ?

"நீ பரத்தையர் பலரொடும் கூடி நீர் விளையாட்டு ஆடி மகிழ்ந்த செய்தியைப் பிறர் என்னிடம் கூறியபோது, அப்பழிச் சொல் நெருப்பாய்ச் சுட நான் உள்ளம் வெந்து நொந்து கிடக்கிறேன். நீ அணிந்திருந்த மாலையை உன் காதற் பரத்தைக்குச் சூட்டிவிட்டு, அவள் தன் தலையிலே அணிந்திருந்த மாலையை உன் மார்பிலே சூட்டிக்கொண்டு மயக்க நிலையில் என் முன் வந்து நிற்கிறாயே! இந்தப் பெருமை நீ அவளுடன் நீராடியதால் எழுந்த அந்தக் கூச்சலைக் காட்டிலும் பெரியது அன்றோ?

"நீ என்னைப் பிரிந்து சென்று பரத்தையருடன் துணங்கைக் கூத்தாடினாய் என்பதை அறிந்து நான் மிகவும் வருந்தி நொந்திருக்கும் இப்போது நீயோ உன் பரத்தையரோடு மகிழ்ச்சியிலே திளைத்த அழகுடன் என் முன் வந்துள்ளாய். உன்னை இவ்வாறு காணும்போது எனக்கு ஏற்படும் வருத்தம், முன் நான் வருந்தியதை விஞ்சியதாய் உள்ளது. இஃது உனக்குப் பெருமை அளிக்கும் செயல்தானே!

"எப்படியோ என் நினைவெழுந்து இங்கு வந்து எனக்கும் அருள் செய்துள்ளாய். இதுவே எனக்குப் போதும். இனி நீ காதல் கொண்ட பரத்தையிடமே செல்லலாம். உன் தேர்ப்பாகன் குதிரை பூட்டப்பட்ட தேரோடு காத்திருக்கிறான்; இங்கே நீ காலம் கடத்தினால் உன்னைத் தேரில் ஏற்றிக் கொள்ளாமல் அவன் சென்று விடக்கூடும். என்னோடு நீ கொண்டிருக்கும்

உறவைப் போன்று, பரத்தையரோடு நீ கொண்டுள்ள உன் பிணிப்பு அற்றுவிடாமல் அதனையேனும் நிலைநிறுத்த உடனே நீ செல்" என்று தலைவி தலைவனிடம் கூறினாள். (தலைவன் மேலும் தன் ஆற்றாமை கூறியது கேட்டுத் தலைவி இரக்கமுற்று ஊடலை விலக்கினாள்.)

கருத்து

தலைவனைத் தலைவி பலவாறு இடித்துரைத்தும் தலைவன் மேலும் மேலும் தன் ஆற்றாமையைக் கூறியதால் தலைவி மனமிரங்கி ஊடலை விலக்கிக் கொண்டாள்.

கருத்து

பரத்தையரை நாடிச் சென்று அவரோடு கூடி மகிழ்ந்த தலைவன், விடியற் காலையில் தன் வீடு சேர்ந்தான். தலைவியுடன் கூடி மகிழ அவளை நெருங்கினான். அவளோ, அவன் பரத்தையரோடு கொண்டுள்ள தொடர்பு பற்றி ஊரார் கூறிய செய்திகளை எடுத்துரைத்து ஊடல் கொண்டாள். அவள் சினம் தணியவில்லை. "உன்னைப் பரத்தையர் வீட்டுக்கு அழைத்துச் செல்ல உன் பாணன் தேரினைத் தயாராய் நிறுத்தியுள்ளான்; நீ உடனடியாய்த் திரும்பிச் செல்லாவிட்டால் தேரினைப் பாணன் ஓட்டிக்கொண்டு சென்று, நீ இங்கேயே தங்கிவிட்டதாய் உன் பரத்தையிடம் சொல்லிவிடுவான். அதனால் எழும் அவள் கோபத்தை உன்னால் பொறுத்துக்கொள்ள இயலாது. ஆகவே, நீ உடனே இங்கிருந்து சென்றுவிடு" என்று தலைவி கூறினாள். (ஆயினும், இறுதியில் அவன் வேண்டுதலுக்கு இரங்கி ஊடலை விலக்கிக் கொண்டாள்.)

சொற்பொருள்

1. வீங்குநீர் - பெருகும் தண்ணீர்; அவிழ் நீலம் - பூத்த நீலமலர்; பகர்பவர் - விற்பவர்.
2. ஞாங்கர் - பக்க இடம்; சூழ்தந்து - சூழ்ந்து வந்து.
3. கனைகடாம் - நிறைந்த மதநீர்.
4. ஆங்கவை விருந்தாற்ற - பூக்களிலும் மதநீரிலும் உண்ட வண்டுகள்; அல்கி - தங்கி; கங்குல் - இரவு.
5. வீங்குஇறை - பருத்த முன்கை; வீழுநர் - விரும்பிய கணவருடன்; புணர்ந்தவர் - கூடிய பெண்டிர்.
6. தேம் கமழ் - தேன் மணம் வீசுகின்ற; கதுப்பு - கூந்தல்.

7. பாய்ந்து ஊதி - மொய்த்து உண்டு; பண்டு தாம் மரீஇய - முன்பு தாம் மொய்த்திருந்த; மரீஇய - மருவிய, பொருந்திய.
8. பூம்பொய்கை மறந்து - பொய்கைப் பூக்களை மறந்து; உள்ளா - நினைக்க மாட்டா.
9. அணை - பஞ்சு மெத்தை; அமர் துணை - விருப்பம் தரும் பரத்தையர்.
10. மணமனையாய் - திருமணக்கோலத்துடன்; மல்லல் - பெருமை; மாண்பு அன்றோ? - பெருமையினைக் கொண்டது அன்றோ?
11. பொதுக்கொண்ட - ஊரார் கூறும்; கவ்வை - பழிச்சொல்.
12. வதுவை - திருமணம்.
13. கனலும் - சுடும், வருத்தும்; நோய்த்தலை - காமநோய்க்கு மேலும்; அவரொடு - பரத்தையரோடு.
14. புனல் உளாய் - நீர் ஆடினாய்; பூசல் - அலர், பழிச்சொல்.
15. தார் - ஆடவர் அணியும் மார்பு மாலை; தடுமாறி - மனம் தடுமாறி; கோதை - மகளிர் அணியும் தலைமாலை.
16. ஈரணி - நீராடும்போது கொண்ட கோலம்; சிதையாது - கெடாது.
17. தணத்தல் - பிரிதல்; தளர் இயல் - மெல்லிய இயல்பு; அவர் - பரத்தையர்.
18. துணங்கை - பெண்கள் ஆடும் கூத்து (ஆடினாய்); கவ்வை - கூச்சல்; கடப்பு - மிகுதி.
19. ஒளி பூத்த நுதலார் - ஒளி பொருந்திய நெற்றியினைக் கொண்டவர் (பரத்தையர்).
20. களி தட்ப - மகிழ்ச்சியிலே திளைத்து.
22. அளி - கருணை; விளியாது - கேளாமலேயே.
23. வேட்டோர் - விரும்பிய பரத்தையர்.
24. கடாஅம் - செலுத்தும்; கடும் திண்தேர் - விரைந்து செல்லும் உறுதியான தேர்.
25. பூட்டு விடாஅ - அற்றுப்போதலின்றி; நிறுத்து - நிலைநிறுத்து.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 14 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகள் புணர்ச்சி வேட்கையைக் குறிப்பினால் உணர்ந்த தோழி, 'அவன் கொடுமை நினையாது, அவன் மார்பை நினைந்து ஆற்றா யாகின்றது என்னை?' என்றாட்குத் தலைமகள், 'அவன் கொடியனே ஆயினும் அவன் மார்பு குளிர்ந்த துயிலைச்செய்யும் இனிய சாயலை யுடைத்து, ஆதலாற் காண்' எனச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனால் கொடுமையை உணர்ந்திருந்தும் தலைவிக்கு அவனிடத்தே மனம்போக, அதுகுறித்துத் தோழி அவளிடம் வினவ, தோழியிடம் தலைவி தன் மன நிலையைப் புலப்படுத்திக் கூறியது.

கொடிப்பூ வேழம் தீண்டி, அயல
வடிகொள் மாஅத்து வண்தளிர் நுடங்கும்
அணித்துறை ஊரன் மார்பே
பனித்துயில் செய்யும் இன்சா யற்றே.

தெளிவுரை

வேழத்தின் நீண்ட வெண்பூ தீண்டுதலால் வடுக்கள் கொண்ட மாமரத்தின் வளமையான தளிர்கள் அசையும். அழகிய நீர்த் துறையினையுடையவன், தலைவன். அவன் மார்பானது குளிர்ச்சி பொருந்திய துயிலினை உண்டாக்கும் இனிய சாயலைக் கொண்டதாயிருக்கிறதே!

கருத்து

"தலைவன் கொடுமை செய்யினும் அவன் மார்பு இன்பம் தருவதாய் உள்ளதுவே! அதனாலேயே அவன் கொடுமையினைப் பொறுப்பவ ளாயினேன்."

விளக்கம்

தலைவி தலைவனைப் புணர விரும்புவதைத் தோழி குறிப்பால் உணர்ந்தாள்; அவளை நோக்கி, 'தலைவன்

கொடுமையை மறந்து, அவனையே நினைந்து பொறுமை இழந்து புலம்புவதேன்?' என்று வினவினாள். அதற்குக் காரணம், 'அவன் கொடியவனே; என்றாலும், அவன் மார்பு குளிர்ச்சியையும் உறக்கத்தையும் தரும் இனிய சாயல் கொண்டதாய் இருப்பதால் தான்' என்று தலைவி கூறினாள்.

உள்ளுறை

"கொடிப்பூ வேழம் தீண்டி, அயல வடிகொள் மாஅத்து வண்தளிர் நுடங்கும்" : அஃதாவது, நீண்ட பூவினைக் கொண்ட வேழக்கரும்பு தீண்டுவதால் வடுக்களைக் கொண்ட மாந்தளிர் அசையும் என்பதாம். இத்தொடர்மூலம், தலைவன் மார்பைப் பரத்தையர் தீண்டுதலால், அவன் அவரிடம் செல்லும் மனத்தைக் கொண்டவன் ஆனான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கொடிப் பூ - நீண்ட பூ; வேழம் - வேழக்கரும்பு; தீண்டி - தீண்ட; அயல - அருகிலுள்ள.
2. வடி - பிஞ்சு, வடு; கொள் - கொண்டுள்ள; மா - மாமரம்; வண் தளிர் - வளமான தளிர்; நுடங்கும் - அசையும், வளையும்.
3. அணித்துறை - அழகு வாய்ந்த நீர்த்துறை.
4. பனித்துயில் - குளிர்ச்சியைக் கொண்ட துயில்; சாயல் - அழகு, மேன்மை.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 11 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பாணன் முதலாயினார்க்குத் தலைமகன் கொடுமை கூறி, வாயில் மறுத்த தலைமகள், கழறிய பாங்கற்கு வாயில் நேர்வாள் கூறியது.

கூற்று விளக்கம்

பரத்தையரோடு உறவு கொண்டு வாழ்ந்த தலைவன் தன் வீடு திரும்பப் பாணன் முதலியோரைத் தூதுவராய் அனுப்பினான். தலைவி அவர்கள் பேச்சைக் கேட்க மறுத்துவிட்டாள். அது தகாது என்று கடிந்துகொண்டான், தலைவனுக்கு நண்பன். அவனுக்கு விடையாகத் தலைவி கூறியது.

மனைநடு வயலை வேழம் சுற்றும்
துறைகேழ் ஊரன் கொடுமை நாணி,
'நல்லன்' என்னும், யாமே;
'அல்லன்' என்னும்என் தடமென் தோளே.

தெளிவுரை

மனையில் நட்டு வளர்க்கப்பட்ட வயலைக்கொடி வீட்டுக்கு அருகேயுள்ள நாணலைச் சுற்றிப் படரும் துறை பொருந்திய ஊரினை உடையவன், தலைவன். அவன் செய்த தீயொழுக்கத்தினை அறிந்து நாணி (அவன் செயலைப் பிறர் அறியாதிருக்க வேண்டுமெனக் கருதி) 'அவன் நல்லவன்' என்று யாம் கூறிக் கொண்டிருக்கின்றோம். ஆனால், என் மெல்லிய பெரிய தோள்களோ தம் மெலிவாலே 'அவன் நல்லவன் அல்லன்' என்னும் உண்மையைப் பிறரும் நன்றாய் அறியுமாறு புலப்படுத்திவிடுமே!

கருத்து

'அவன் எனக்குச் செய்துகொண்டிருக்கும் கொடுமையை நான் மறைப்பினும், என் தோள்கள் தம் மெலிவாலே அவன் நல்லவன் அல்லன் என்பதைப் பிறர் அறியுமாறு காட்டிவிடுகின்றன. என் துயர், அடக்க அடங்கும் அளவினது அன்று' என்று சொல்லித் தலைவி ஊடலை விலக்கிக் கொள்கிறாள்.

விளக்கம்

தலைவனின் பரத்தமை ஒழுக்கம் தலைவியிடத்தே மனத் துயரையும் உடல் நலிவினையும் உண்டாக்கினாலும் அவள் அவற்றைப் பிறர் அறியாதவாறு தன் கற்புத்திறனால் அடக்க முயல்கிறாள். ஆனால், காண்பார் தாமே உணருமாறு, அவள் தோள்கள், மெலிவின்மூலம் காட்டிவிடுகின்றன.

குறிப்பு

வீட்டில் நட்ட வயலைக்கொடி வெளியே நிற்கும் வேழத்தைச் சுற்றும் என்பதன் வாயிலாய், தலைவன் தன் வீட்டிலேயே தங்கினாலும், பரத்தையர்க்கு வேண்டிய நன்மைகளையே செய்வான் என்பதை அறியலாம்.

தலைவி அவனை 'நல்லவன்' என்று கூறுகிறாள்; ஆனால், அவள் தோள்களோ அவன், 'நல்லவன் அல்லன்' என்பதைக் காட்டுகின்றன.

'அல்லன்' என்னும் சொல் அவள் வாயில் மறுப்பதைக் குறிப்பிடினும், 'நல்லன் என்றும் யாமே" என்னும் சொற்கள் அவள் வாயில்நேர்வதைக் குறிப்பிடுகின்றன.

சொற்பொருள்

1. வயலை - வயலைக்கொடி; வேழம் - வேழக்கரும்பு; சுற்றும் - சுற்றிப் படரும்.
2. துறைகேழ் - துறை பொருந்திய.
4. தட - பெரிய; மென் - மென்மையான.

தலைவன் கூற்று

நற்றிணை 120 **மாங்குடி கிழார்**

திணை : மருதம்

கூற்று

விருந்து வாயிலாகப் புக்க தலைமகன் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து தலைவன் பரத்தையிடம் சென்றதால் தலைவி ஊடல் கொண்டிருந்தாள். அவ்வூடலைத் தணிக்கத் தலைவன் விருந்தினன் ஒருவனுடன் வந்தான். விருந்தினனைக் கண்ட தலைவி தன் சினத்தை அடக்கி, விருந்தினனை வரவேற்றாள்; சமையலறைக்குச் சென்று விருந்து ஆக்கிப் படைத்தாள். தலைவியின் ஊடல் தீர்ந்ததற்குக் காரணம் விருந்தே என்பதால் இனி எப்போதும் 'விருந்து வந்து உதவுக' என்று தலைவன் கூறியது.

தடமருப்பு எருமை மடநடைக் குழவி
தூண்தொறும் யாத்த காண்தகு நல்இல்
கொடுங்குழை பெய்த செழுஞ்செய் பேதை
சிறுதாழ் செறித்த மெல்விரல் சேப்ப
வாளை ஈர்ந்தடி வல்லிதின் வகைஇப்
புகையுண்டு அமர்த்த கண்ணள், தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அம்துகில் தலையில் துடையினள், நப்புலந்து
அட்டி லோளே அம்மா அரிவை!
எமக்கே வருகதில் விருந்தே! சிவப்புஆன்று,
சிறுமுள் எயிறு தோன்ற
முறுவல் கொண்ட முகம்காண் கம்மே!

தெளிவுரை

“வளைந்த கொம்பினைக் கொண்ட எருமையின் இளநடைக் கன்றுகள் தூண்தோறும் கட்டப்பட்டுள்ள காட்சிக்கினிய வீடு; அவ்வீட்டில் வளைந்த குழையணிந்த செழுமையான காதுகளைக் கொண்ட நம் காதலி இருக்கிறாள். அவள், கற்கள் பதித்த மோதிரம் அணிந்த மென்மையான விரல்களைக் கொண்டுள்ளாள். அவ்விரல்கள் சிவக்கும்படி வாளை மீனின் குளிர்ச்சி பொருந்திய தசையை அதனை உண்ணும் வகையில் பொடிப் பொடியாய் நறுக்கிக் கண்களில் புகை படிய உணவு சமைத்தலால் அவள் கண்கள் சோர்வோடு இருக்கும். பிறை போன்ற அழகு கொண்ட அவள் நெற்றியில் அரும்பிய வியர்வைத் துளிகளைத் தன் அழகிய புடைவையின் தலைப்பால் துடைத்தவாறு சமையல் செய்துகொண்டிருப்பாள். இவ்வாறு ஈடுபட்டோடு சமைக்கின்ற தலைவி நான் பரத்தை வீடு சென்றதால் என்மேல் ஊடல் கொண்டன்றோ இருக்கிறாள்! இப்போது விருந்தாய் வருபவர் வருக! அவ்வாறு விருந்தினர் வந்தால் அழகும் மாந்தளிர் மேனியும் கொண்ட அரிவை சினம் தணிவாள்; அதனால் முள் போன்ற பற்கள் தோன்றப் புன்னகையும் புரிவாள். அதை நான் காண இயலும் என்றான், தலைவன்.”

கருத்து

தலைவன்மீது தலைவி ஊடல் கொண்டிருந்தாள், விருந்தினருடன் தலைவன் சென்றால், வந்த விருந்தினரை முகம் மலரத் தலைவி வரவேற்பாள். அதனால் தலைவன் விருந்தினர் தன்னுடன் வரவேண்டும் என்று விரும்புகிறான்.

விளக்கம்

தலைவன் பரத்தை வீடு சென்றமையால் சினமுற்ற தலைவியின் முகம் கடுகடுப்போடிருந்தது. தலைவன் விருந்தினர் ஒருவரோடு வீட்டிற்கு வந்தான். 'முகம் திரிந்து நோக்கக் குழையும்' விருந்து. ஆதலால், தலைவி கடுகடுப்பை நீக்கி இன்முகத்துடன் விருந்தினரை 'வருக வருக' என்று வரவேற்றாள். அதனையே தனக்குரிய வரவேற்பாய் எடுத்துக்கொண்டு தலைவனும் இல்லத்தினுள் நுழைந்துவிடுகிறான்.

சொற்பொருள்

1. தட - வளைந்த; மருப்பு - கொம்பு; மடநடை - இளநடை; குழவி - கன்று.
2. யாத்த - கட்டப்பெற்ற; நல் இல் - நல்ல வீடு.
3. கொடுங்குழை - வளைந்த குழை.
4. சிறுதாழ் - மோதிரம்; சேப்ப - சிவப்ப.
5. வாளை - வாளை மீன்; ஈர்ந்தடி - குளிர்ச்சி பொருந்திய தசையை; வல்லிதின் - விரைவாய்; வகைஇ - வகைப்படுத்தி.
7. பொறித்த - தோன்றிய; நுண் - நுண்ணிய; வியர் - வியர்வை.
8. அம்துகில் - அழகிய புடைவை; துடையினள் - துடைத்தனள்; நப்புலந்து - நம்மோடு ஊடல் கொண்டு.
9. அட்டிலோள் - சமையல் அறையில் உள்ளாள்.
10. சிவப்பு - சினம்; ஆன்று - தணிந்து.
11. முள் - கூரிய.
12. முறுவல் - புன்முறுவல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 140 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பாணன் தூதாகிச் செல்ல வேண்டுங் குறிப்பினளாகிய தலைமகள் அவற்குத் தன் மெலிவு காட்டிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் வீட்டில் இருக்கும்போது தன் இல்லம் வந்த பாணனைத் தலைவனிடம் தூதாய் அனுப்ப விருப்பம் கொண்டவளாய்த் தலைவி, தன் மெலிவைக் கூறியது.

காண்மதி, பாணநீ! உரைத்தற்கு உரியை
துறைகெழு கொண்கன் பிரிந்தென,
இறைகேழ் எல்வளை நீங்கிய நிலையே.

தெளிவுரை

பாணனே! தலைவன் இருக்கும் இடம் தேடிச் சென்று தூது மொழியை உரைக்கும் உரிமை கொண்டவன் நீ. ஆதலால், கடற்கரைத் துறைகள் பொருந்திய பகுதிக்கு உரியவன், தலைவன். அவன் என்னைப் பிரிந்த அப்பொழுதே என் முன்கையில் செறிவாக அதுவரை இருந்த ஒளிமிக்க வளையல்கள் கழன்று வீழ்ந்திருக்கும் நிலையை நன்றாய்ப் பார்த்துக்கொள்! (இதனைத் தலைவனிடம் எடுத்துரைத்து அவனை மீண்டும் என்னிடம் வரச் செய்.)

கருத்து

'பாண! என் மெலிவை எடுத்துச் சொல்லித் தலைவனை இங்கு வரச் செய்' என்று தலைவி பாணனிடம் கூறினாள்.

விளக்கம்

பாணன் தலைவன் சார்பினனே; பரத்தையரிடம் செல்லத் துணை நிற்பவனே; எனினும், தன் மெலிவினை நோக்கியாவது தலைவனிடம் சென்று தன் நலிவைப்பற்றிச் சொல்லி அவனை இல்லத்திற்குத் திரும்புமாறு செய்ய வேண்டும் என வேண்டு கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. காண் - பார்; உரிமை - உரியவன்.
2. கொண்கன் - தலைவன்; பிரிந்தென - பிரிந்ததால்.
3. இறைகேழ் - முன் கையில் பொருந்திய; எல்வளை - ஒளிமிக்க வளையல்.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 138 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் வாயில் பெற்றுப் புகுந்தது அறியாது வந்த பாணற்குத் ;லைமகள் நகையாடிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் தூதனுப்பித் தலைவியின் இசைவு பெற்றுத் தன் இல்லம் வந்து லைவியோடு கூடியும் இருக்கிறான். அதனையறியாதே பாணன் வந்து, லைவனுக்காகத் தலைவியிடம் பரிந்து பேசுகின்றான். அப்போது தலைவி அவனைப் பழித்துச் சொல்லியது.

பண்புஇலை மன்ற, பாண! இவ்ஊர்
அன்புஇல கடிய கழறி,
மென்புலக் கொண்கனைத் தாரா தோயே.

தெளிவுரை

பாணனே! நீ நெய்தல்நிலத் தலைவனைக் கண்டு, அவனை இவ்வூரார் அன்பில்லாமலும் கடுமையாகவும் சொல்வதை எடுத்துக் கூறி, இடித்துரைத்து, அவனை எம்மிடம் கொண்டு வந்து சேர்க்காதிருக்கிறாய். (தலைவனுடைய குற்றத்தை மறைத்துக் குணம் கூறிப் பொய்ம்மொழி பேசுகிறாய்.) எனவே, நீ நற்குணம் இல்லாதவனாய் இருக்கிறாய்.

கருத்து

'பாண! தலைவனைத் திருத்தி என்னிடம் அழைத்து வாராதவனாய் இருக்கிறாய்.'

விளக்கம்

பாணன் தலைவனைக் கொண்டுவந்து சேர்க்கவில்லை. அவன் தானாகவே வந்துவிட்டான். அதனையறியாது தலைவனுக்காகப் பரிந்து பேசும் பாணனை நோக்கி, தலைவனுக்கு அவன் குற்றத்தை எடுத்துக் கூறித் திருத்தி, 'நீ தானே அவனை இங்குக் கொண்டு வந்து சேர்த்திருக்க வேண்டும். அதை விடுத்து, 'தலைவன் நற்பண்புகள் கொண்டவன் என்று என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறாயே!' எனக் கூறி அவனைப் பழித்துரைக்கிறாள்.

குறிப்பு

தலைவன் தன் இல்லத்திற்கு வந்திருத்தலையே அறிந்துகொள்ளாத பாணன், அவன் குணங்களைப் புகழ்ந்து கூறுகின்றான். ஆதலின், அவனைப் 'பண்பில்லாதவனே' எனப் பழிக்கிறாள், தலைவி.

சொற்பொருள்

1. பண்பு இலை - பண்பில்லாதவன். (நற்குணம் இல்லாதவன்).
2. கடிய - கடுமையான சொற்கள்; கழறி - கூறி.
3. தாராதோய் - கொண்டுவந்து சேர்க்காதவன்.

தலைவி கூற்று

குறுந்தொகை 75 **படுமரத்து மோசிகீரனார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் வரவுணர்த்திய பாணர்க்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவனது வரவைப் பாணன்மூலம் அறிந்த தலைவி, 'நீ பாடலிபுரத்தைப் பெறுக' என்று மகிழ்ந்து கூறியது.

நீகண் டனையோ? கண்டார்க்கேட் டனையோ?
ஒன்று தெளிய நசையினம்; மொழிமோ!
வெண்கோட்டு யானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்!
யார்வாய்க் கேட்டனை, காதலர் வரவே?

தெளிவுரை

பாண! தலைவன் வருவதை நீயே நேரில் கண்டாயா? அல்லது பார்த்தவர் எவராவது சொல்லக் கேட்டாயா? அவ்வாறாயின், எவர் கூறக் கேட்டாய்? உண்மையைத் தெளிவாய் அறிய விரும்பியே இதைக் கேட்கிறோம்! மறுமொழி கூறுக. வெண்ணிறத் தந்தங்களைக் கொண்ட யானைகள் படிந்து நீராடும் சோணை ஆற்றின் கரையிலுள்ள பொன் மிகுந்த பாடலி நகரத்தையே பெறுவாய்!

கருத்து

'தலைவன் வரலை உணர்த்திய பாணனே! நீ பெருஞ்செல்வம் பெறுக!'

விளக்கம்

தலைவன் வரவைப் பலமுறை எதிர்பார்த்தும் அவன் வாராமையால், ஏமாற்றமுற்ற தலைவி, அவன் வருவதைப்பற்றி இப்போது பாணன் கூறியதும், 'நீ கண்டாயா? பிறர் சொல்லக் கேட்டாயா? யார் சொல்லக் கேட்டாய்?' என அடுத்தடுத்துப் பல முறை கேட்பது அவள் கொண்டுள்ள ஆர்வத்தைப் புலப் படுத்துகிறது.

குறிப்பு

'பாடலி நகரத்தைப் பெறுவாய்' என்பது பாணன் பெருஞ்செல்வம் பெறுவான் என்பதைக் குறிப்பதற்கே.

வரலாற்றுக்குறிப்பு

பாடலிபுத்திரம் இன்று பாட்னா என்று வழங்கப்படுகிறது. கங்கைக் கரைக்கு வடக்கே சோணையாறு கங்கையில் கலக்குமிடத்தில் இருக்கிறது. இது மகத நாட்டிற்குத் தலைநகராய் விளங்கியது. நந்தர்கள் அங்கிருந்து ஆண்டுவந்தனர்.

சொற்பொருள்

1. **கண்டனையோ? - கண்டாயா?; கண்டார் - பார்த்தவர்; கேட் டனையோ? - சொல்லக் கேட்டாயா?**
2. **ஒன்று - உண்மையை; தெளிய - தெளிவாய்; நசையினம் - அறிய விரும்பினோம்; மொழி - சொல்.**

3. வெண்கோடு - வெண்மையான கொம்பு, தந்தம்; சோணை - சோணை நதி; படியும் - படிந்து நீராடும்.
4. பொன்மலி - பொன் நிறைந்த; பாடலி - பாடலிபுத்திரம் என்னும் நகர்; பெறீஇயர் - பெறுவாய்.
5. யார் வாய்க் கேட்டனை - யார் சொல்லக் கேட்டாய்?

தோழி கூற்று

குறுந்தொகை 359 **பேயனார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற்பிரிந்து வந்த தலைமகன் வாயில் வேண்டிப் பெறாது, தானே புக்குக் கூடியது கண்டு, தோழி பாணற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் இல்லிற்குச் சென்றிருந்த தலைவன் வாயில் அனுப்பாது, தானே சென்று தலைவியோடு அளவளாவியபொழுது அவள் ஊடலை விலக்கியிருந்தாள். அதற்கான காரணம் இஃது எனத் தோழி, பாணனிடம் கூறியது.

கண்டிசின் பாண! பண்புஉடைத்து அம்ம;
மாலை விரிந்த பசுவெண் நிலவின்
குறுங்கால் கட்டில் நறும்பூஞ் சேக்கை,
பள்ளி யானையின் உயிர்த்தனன் நசைஇ,
புதல்வற் தழீஇயினன் விறலவன்;
புதல்வன் தாய்அவன் புறம்கவைஇ யினளே.

தெளிவுரை

"*பாண! மாலை (முன் இரவு) வேளை வெண்மையான நிலவொளி பரந்து வீசிட, குறுகிய கால்களைக் கொண்ட கட்டிலின்மீது நறுமணம் கமழும் பூக்களாலாகிய படுக்கையில் படுத்து, யானையைப் போலப் பெருமூச்சு விட்டவாறு தூங்கு கின்றான், வெற்றி மிக்க நம் தலைவன். அவன் அன்போடு தன் மகனைத் தழுவிக்கொண்டான். அதைக் கண்ட தலைவி தன் பிணக்கத்தை விடுத்து, தலைவனின் முதுகுப்புறத்தைத்*

தழுவிக்கொண்டாள். அவளது இச்செயல் பண்பு வாய்ந்தது எனத் தோழி பாணனிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் தானே சென்று, தலைவியோடு அளவளாவி, அவள் ஊடலைப் போக்கினான்.

சொற்பொருள்

1. கண்டிசின் - காண்க; பண்பு உடைத்து - கற்புப் பண்பாடு கொண்டது.
3. சேக்கை - படுக்கை.
4. பள்ளியானை - உறங்குகின்ற யானை; உயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்; நசை - விருப்பம்.
5. விறல் - வெற்றி (விறலவன் - வெற்றியைக் கொண்டவன்).
6. அவன் - தலைவன்; புறம் - முதுகு; கவைஇயினள் - தழுவிக் கொண்டனள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 198 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தையர் மனைக்கண் பன்னாள் தங்கிப் பின்பு ஆற்றாமையே வாயிலாக வந்த தலைமகனை எதிர்ப்பட்ட தோழி தலைமகட்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையர் மனையில் நெடுநாள் தங்கி இன்பம் துய்த்தவனாயினும், தன் மனைவியைப் பிரிந்த ஏக்கம் அவனைப் பற்றியது. அவ்வேக்கத்தினால் தலைவியைக் கூடும் விருப்பத்துடன் தலைவன் தன் இல்லம் திரும்பினான். அவனை எதிர்ப்பட்ட தோழி, தலைவியிடம் வந்து சொல்லியது.

வளைஅணி முன்கை, வால்எயிற்று அமர்நகை,
இளையர் ஆடும் தளைஅவிழ் கானல்,
குறுந்துறை வினவி நின்ற
நெடுந்தோள் அண்ணல் கண்டிகும், யாமே.

தெளிவுரை

தலைவியே! மொட்டு விரிந்த மலர்களைக் கொண்டிருக்கும் கானற்சோலையில் வளையலணிந்த முன்கையையும், வெண் பற்கள் விளங்கும் முறுவலையும் கொண்ட இளமகளிர் விளை யாடிக் கொண்டிருப்பர். முன்பு நம்மை அறிந்த நாளில், அக்கானற்சோலையிடத்திற்கு வந்து, 'கடலில் இறங்கி விளை யாடுதற்கேற்ற துறை எங்குள்ளது?' என்று கேட்டவாறு நின்ற, நெடிதுயர்ந்த தோள்களைக் கொண்ட நம் தலைவன் இப்போது இங்கு வரக் காண்போம்.

கருத்து

'சற்று நேரத்தில் நம் தலைவன் இங்கு வரக் காண்போம்' எனத் தோழி தலைவியிடம் கூறுகிறாள்.

விளக்கம்

"தலைவன் களவுக் காலத்தில் தலைவியைக் குறியிடத்தில் காணவந்து, 'கானற்சோலை எங்குள்ளது?' என்று கேட்ட பழைய இனிய நிகழ்ச்சியினைப்பற்றித் தோழி நினைவூட்டு கிறாள். அத்தகைய மிகுந்த காதல் கொண்டவன், இடையே மனந்தளர்ந்து புறம்போயினும், மீளவும் உன்னையே நாடி வந்துள்ளான்.

"ஆகவே, சினம் கொண்டு அவனை ஒதுக்காது மகிழ்ந்து ஏற்று இனியும் புறம்போகாவண்ணம் உன்னோடு அவனைப் பிணித்துக் கொள்ள வேண்டும்" என்று கூறித் தலைவனை ஏற்குமாறு தலைவியிடம் தோழி கூறுகிறாள்.

சொற்பொருள்

1. வால் - வெண்மையான; எயிறு - பல்; அமர் நகை - முறுவல்.
2. இளையர் - இளம் மகளிர்; ஆடும் - விளையாடும்; தளைஅவிழ் - மொட்டு விரிந்த.
3. குறுந்துறை - சிறிய துறை; வினவி - எங்கேயுள்ளது என்று கேட்டு.
4. அண்ணல் - தலைவன்; கண்டிகும் - கண்டோம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 349 **சாத்தனார்**

திணை : நெய்தல்

கூற்று

பரத்தைமாட்டுப் பிரிந்துவந்த தலைமகன் கேட்கும் அண்மையனாகத் தோழிக்குக் கிழத்தி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வீட்டிலிருந்து மீண்டும் தலைவி இருக்கும் இடத்திற்கு வந்தபொழுது, அவன் வந்திருப்பதை அறியாதவள்போன்று அவன் கேட்கும் வகையில் தலைவி தோழியிடம் கூறியது.

'அடும்புஅவிழ் அணிமலர் சிதைஇய மீன்அருந்தி,
தடந்தாள் நாரை இருக்கும் எக்கர்த்
தண்ணம் துறைவற் றொடுத்து, நம்நலம்
கொள்வாம்' என்றி தோழி! கொள்வாம்;
இடுக்கண் அஞ்சி இரந்தோர் வேண்டிய
கொடுத்து 'அவை,தா'எனக் கூறலின்,
இன்னா தோநம் இன்உயிர் இழப்பே?

தெளிவுரை

தோழி! அடும்பங்கொடியின் மலரைச் சிதைத்து, அம்மலர் மீது அமர்ந்து மீனைத் தின்னும், வளைந்த காலைக் கொண்ட நாரை இருக்கும் மணல்மேட்டினைக் கொண்ட குளிர்ச்சி பொருந்திய கடல்துறையை உடையவன், நம் தலைவன். அவனைக் கண்டு, அவனை வளைத்துக்கொண்டு, 'எம் பெண்மை நலத்தைத் திரும்பத் தா' என்று கூறி நம் அழகைத் திரும்பப் பெறுவோம் என்கிறாய்! அதுபோலவே கொள்வோம்! ஆனால், ஒருவர் படும்துன்பத்தைக் கண்டு வருந்தி, அவர் இரந்து கேட்ட பொருளைக் கொடுத்த பின்பு, அதனைத் திரும்பத் தா என்று கேட்பதைவிட, நம் இனிய உயிரை இழப்பது இன்னாதது ஆகுமோ?' (கொடுத்ததைக் கேட்பது பெருமையாகாது.)

கருத்து

'வருந்தி வரும் தலைவனிடம் எதிரெதுவும் பேசாது அவனை ஏற்பதே இனியது' என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

விளக்கம்

ஒருவன் துன்புற்று வருந்தி இரந்து கேட்டதைக் கொடுத்து விட்டுப் பின்னர்த் தனக்குற்ற ஒரு துன்பம் காரணமாய்த் திருப்பிக் கொடு என்று கேட்பதைவிட இறந்துவிடுதலே இனியது.

குறிப்பு

மணல்மேட்டில் அமர்ந்திருந்த நாரை அடும்ப மலர் சிதையுமாறு அதனை மிதித்தவாறு மீனை அருந்தும். அதுபோலத் தலைவன் தலைவியின் பெண்மை நலம் சிதையுமாறு செய்துவிட்டுத் தலைவியைப் பிரிந்து பரத்தையை நுகருகிறான் என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. அடும்பு அவிழ் - அடும்பங்கொடியில் மலர்ந்த; சிதைஇய - சிதைத்து.
2. தடந்தாள் - வளைந்த கால்; இருக்கும் - தங்கியிருக்கின்ற; எக்கர் - மணல்மேடு.
3. தொடுத்து - வளைத்துக்கொண்டு.
4. கொள்வாய் - கொடு என்று கேட்டு வாங்கிக்கொள்வோம்.
5. இடுக்கண் - துன்பம்; இரந்தோர் - இரந்து கேட்டவர்.
6. 'அவை தா' - கொடுத்த அவற்றைத் திரும்பத் தா.
7. இன் உயிர் - இனிய உயிர்; இழப்பு - விடுவது; இன்னாதோ - துன்ப முறுவதாகுமோ?

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 99 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

தோழி முதலாயினோர் தலைமகன் கொடுமை கூறி விலக்கவும் தலைமகள் வாயில் நேர்ந்துழி அவன் உவந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தோழி முதலான வாயில்கள் அனைவரும் தலைவன் பரத்தை வீட்டிலேயே தங்கியிருந்து தலைவிக்கு இழைத்த கொடுமையைக் கூறி வாயில் மறுத்தனர். ஆனால், தலைவி மட்டும் மறுக்காமல் தலைவனுக்கு வாயில் நேர்ந்து வீட்டினுள் அனுமதித்தாள். அப்போது தலைவன் மகிழ்ந்து கூறியது.

பழனப் பாகல் முயிறுமூசு குடம்பை,
கழனி எருமை, கதிரொடு மயக்கும்
பூக்கஞல் ஊரன் மகள்இவள்
நோய்க்குமருந்து ஆகிய பணைத்தோ ளோளே.

தெளிவுரை

பழனங்களிலுள்ள பாகல் கொடியில் முயிறுகள் மொய்த்து உறையும் கூடுகளை, வயலிலே மேய்கின்ற எருமை நெற்கதிரோடு சேர்த்துச் சிதைக்கும். இத்தகைய வயல்களோடு பூக்கள் நிறைந் திருப்பதுமான ஊருக்குரிய தலைவன் மகள் இவள். நான் உற்ற காமநோய்க்கு மருந்தாகும் பருத்த தோள்களை இவள் கொண்டுள்ளாள்.

கருத்து

தலைவி தான் கொண்டிருந்த ஊடலை நீக்கித் தலைவனை ஏற்றபோது, 'என் காமநோய்க்கு மருந்து, இவள் தோள்களே' என்று கூறினான்.

விளக்கம்

எறும்பு வகைகளுள் ஒன்று, முயிறு. இம்முயிறுகள் மரங் களிலும் செடிகளிலும் இலைகளைப் பிணைத்துக் கூடு கட்டி,

முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். பழனமும் கழனியும் அடுத்தடுத்து இருத்தலின் பழனத்துப் பாகல் கொடிகள் வயலிலுள்ள நெற்பயிர்களின்மீதும் படர்ந்திருந்தன. இதனால் எருமை நெற்பயிரையும் பாகல் கொடியையும் ஒரே நேரத்தில் சிதைக்கும்.

குறிப்பு

முயிறுகள் வாழும் கூடுகளை நெற்கதிரோடு எருமை சிதைக்கும். அதுபோல, தான் தலைவிக்கு இழைத்த கொடுமையையும், வாயில்கள் சொன்ன சொற்களையும் பொருட்படுத்தாது தலைவி தனக்கு நலம் செய்தாள் எனத் தலைவன் மகிழ்ந்து கூறினான்.

சொற்பொருள்

1. பழனம் - தோட்டம்; பாகல் - பாகல் கொடி; முயிறு - ஒரு வகை எறும்பு; மூசு - மொய்க்கின்ற; குடம்பை - கூடு.
2. கழனி - வயல்; கதிர் - நெற்கதிர்; மயக்கும் - சிதைக்கும்.
3. கஞல் - நிறைந்த.
4. நோய்க்கு - என் காம நோய்க்கு; பணை - பருத்த; தோளோள் - தோள்களைக் கொண்டவள்.

தலைவி கூற்று

நற்றிணை 260 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

ஊடல் மறுத்த தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியைப் பிரிந்து சென்று பரத்தையோடு உறவு கொண்ட தலைவன் மீண்டுவந்து அவளை விருப்போடு தழுவுகின்றான். ஆனால், அவள் சினம் தணிந்திலள்; என்றாலும், அவனைத் தடுத்திடாதவளாய் அவன் குற்றத்தைச் சுட்டி உரைத்தது.

கழுநீர் மேய்ந்த கருந்தாள் எருமை
பழனத் தாமரைப் பனிமலர் முணைஇ,
தண்டுசேர் மள்ளரின் இயலி, அயலது
குன்றுசேர் வெண்மணல் துஞ்சும் ஊர!

வெய்யை போல முயங்குதி, முனைஎழுத்
தெவ்வர்த் தேய்த்த செவ்வேல் வயவன்
மலிபுனல் வாயில் இருப்பை அன்னஎன்
ஒலிபல் கூந்தல் நலம்பெறப் புனைந்த
முகைஅவிழ் கோதை வாட்டிய
பகைவன் மன்?யான் மறந்துஅமை கலனே!

தெளிவுரை

தலைவனே! கரிய கால்களைக் கொண்ட எருமை கழுநீர் மலரை மேய்ந்தது; பிறகு, வயலில் படர்ந்துள்ள தாமரையின் குளிர்ச்சி பொருந்திய மலரை உண்டு அதனையும் வெறுத்தது; படையணியில் சேர்ந்த மறவரைப் போலச் செருக்கோடு நடந்து சென்று, வயல்களை அடுத்துக் குன்றுபோல் குவிந்துள்ள வெண்மணலில் படுத்துறங்கியது. இத்தகைய காட்சி கொண்ட ஊருக்கு உரியவனே! நீ இப்போது என்னிடம் மிகுதியான அன்பு கொண்டவன்போல என்னைப் பல முறையும் தழுவுகின்றாய். பகை முளைத்து எழுந்ததால் உண்டாகிய போரில் அப் பகைவரை அழித்து வெற்றி கொண்ட செவ்வேலை ஏந்திய மாவீரன் 'விரான்' என்பவன். மிகுந்த நீர்நிலை பொருந்தியதும், அவ்விரானுக்கு உரியதுமான 'இருப்பை' ஊரைப் போன்றது, என் எழில்நலம். அந்நலம் கெடவும், அடர்ந்த கூந்தலில் அழகு பெறச் சூட்டிய பூமாலை வாடும்படியாகவும் பிரிந்துபோன பகைவன் நீ அல்லனோ? உன் செய்கையை நான் மறவேன்.

கருத்து

'மிகுந்த விருப்பினைக் கொண்டவன்போல நீ இப்போது என்னைத் தழுவுகின்றாய். என்னைப் பிரிந்து, பரத்தையிடம் சென்று, என் மாலை வாடுமாறு செய்த பகைவனும் நீதான் என்பதை நான் மறக்கவில்லை' என்று தலைவன் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டித் தலைவி தன் ஊடலை விலக்கிக்கொண்டாள்.

விளக்கம்

'தலைவனே! என்னிடம் பேரன்பு கொண்டவன்போல் தழுவுகின்றாய். இப்போது நீ தழுவுவது அன்புடையதாய்த்

தோன்றுகிறது. ஆயினும், சில நாள்களுக்கு முன்பு, என் கூந்தலில் அழகுறப் புனையப்பெற்ற பூமாலை வாடி உதிருமாறு என்னைப் பிரிந்து என்னை வருத்திய பகைவனாய் நீ இருந்ததை நான் இன்னும் மறக்கவில்லை என்பதை உணர்ந்துகொள்' எனத் தலைவன் செய்த தவற்றினைத் தலைவி சுட்டிக் காட்டுகிறாள்.

உள்ளுறை

"கழுநீர்.... துஞ்சும்" : அஃதாவது, செங்கழுநீரைத் தின்ற எருமை, பிறகு தாமரை மலரைத் தின்று, அதனையும் வெறுத்துச் சென்று மணல்மேட்டில் படுத்துறங்கும் என்பதாம். இத்தொடர் மூலம், தலைவி நலனை நுகர்ந்த தலைவன் பின்பு காதற் பரத்தையோடு கூடி இன்புற்று, அவளிடத்தும் தங்காது, செருக்கோடு சென்று சேரிப்பரத்தையின் இல்லத்தில் உறங்கும் தன்மையன் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

சொற்பொருள்

1. கழுநீர் - கழுநீர்ப்பூ.
2. பழனம் - வயல்; பனிமலர் - குளிர்ச்சி பொருந்திய மலர்; முனைஇ - வெறுத்து.
3. தண்டு - படைக்கலன்; மள்ளர் - வீரர்; இயலி - இயங்கி.
4. துஞ்சும் - தூங்கும்.
5. வெய்யை - விருப்பமுள்ளவன்; முயங்குதி - தழுவுகின்றாய்; முனை - போர்முனை.
6. தெவ்வர் - பகைவர்; தேய்த்த - அழித்த; வயவன் - வீரன் (விரான் என்பவன்).
7. இருப்பை - இருப்பையூர் (விரானுக்கு உரியது).
8. ஒலிபல் கூந்தல் - தழைத்த கூந்தல்; புனைந்த - சூட்டிய.
9. முகை - மொட்டு; கோதை - மாலை; வாட்டிய - வருத்திய.
10. மறந்து அமைகலன் - நான் மறந்துவிடவில்லை.

ஊடல் தீர்ந்தபின் நிகழ்ந்த உரையாடல்.

தலைவி கூற்று

அகநானூறு 26 பாண்டியன் கானப்பேரெயில் தந்த உக்கிரப்பெருவழுதி

திணை : மருதம்

கூற்று

தலைமகன் தோழியை வாயில் வேண்டி, அவளால் தான் வாயில் பெறாது, ஆற்றாமையே வாயிலாகப் புக்குக் கூடிய தலைமகனின் நீக்கத்துக்கண் புக்க தோழிக்குத் தலைவி சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தமை ஒழுக்கம் கொண்ட தலைவனோடு ஊடல் கொண்டாள், தலைவி. மீண்டு வந்த தலைவன் அவ்வூடலை நீக்கத் தோழியை வேண்டினான். தோழி, தலைவன் பெருந்தவறு செய்திருப்பதால் தன்னால் தலைவியின் ஊடலை விலக்க இயலாது என்றாள். தலைவனோ தன் ஆற்றாமையைத் தலைவியிடம் தானே நேரில் சொல்லித் தன்னை ஏற்க வேண்டினான். தலைவியும் ஊடலை நீக்கினாள். ஊடலை நீக்கியதற்கான காரணத்தைக் கேட்ட தோழியிடம் தலைவி சொல்லியது.

கூன்முள் முள்ளிக் குவிகுலைக் கழன்ற,
மீன்முள் அன்ன, வெண்கால் மாமலர்
பொய்தல் மகளிர் விழவுஅணிக் கூட்டும்
அவ்வயல் நண்ணிய வளங்கேழ் ஊரனைப்
புலத்தல் கூடுமோ- தோழி! அல்கல்
பெருங்கதவு பொருத யானை மருப்பின்
இரும்புசெய் தொடியின் ஏர ஆகி,
மாக்கண் அடைய மார்பகம் பொருந்தி,
முயங்கல் விடாஅல் இவைஎன மயங்கி,
யான்ஓம் என்னவும் ஒல்லார், தாம்மற்று
இவைபா ராட்டிய பருவமும் உளவே, இனியே;
புதல்வன் தடுத்த பாலொடு தடைஇ,
திதலை அணிந்த தேம்கொள் மென்முலை
நறுஞ்சாந்து அணிந்த கேழ்கிளர் அகலம்
வீங்க முயங்கல் யாம்வேண் டினமே;
தீம்பால் படுதல் தாம்அஞ் சினரே; ஆயிடைக்

கவவுக்கை நெகிழ்ந்தமை போற்றி, மதவுநடைச்
செவிலி கைஎன் புதல்வனை நோக்கி,
'நல்லோர்க்கு ஒத்தனிர் நீயிர், இஃதோ
செல்வர்க்கு ஒத்தனம்; யாம்'என, மெல்லஎன்
மகன்வயின் பெயர்தந் தேனே, அதுகண்டு,
'யாமும் காதலம், அவற்கு,எனச் சாஅய்,
சிறுபுறம் கவையின னாக, உறுபெயல்,
தண்துளிக்கு ஏற்ற பலஉழு செஞ்செய்
மண்போல் நெகிழ்ந்து,அவற் கலுழ்ந்தே
நெஞ்சுஅறை போகிய அறிவி னேற்கே?

தெளிவுரை

'பெரிய மதிற்கதவினைப் பெயர்த்த யானையின் தந்தங்களில் பொருந்தியுள்ள இரும்பாற்செய்த பூண் போன்ற அழகினைக் கொண்டனவாய் உன் கருத்த முலைக்கண்கள் உள்ளன' என்று நம் தலைவர் என் மார்பகங்களைப் பாராட்டி, அவை தம் மார்பிலே அழுந்தப் பொருந்துமாறு முயங்கி இன்புறுவார். நான் விலக்கவும் அதற்கு உடன்படாதிருந்து பாராட்டிய காலமும் உண்டு.

இப்பொழுதோ, புதல்வன் உண்கின்ற பாலோடு சரிந்து, தேமல் படர்ந்த இனிய மென்மையான என் முலைகள், சந்தனம் அணிந்து நன்னிறத்துடன் விளங்கும் அவர் மார்பில் விம்முமாறு முயங்க நான் விரும்பினேன். அவரோ அஞ்சினார். முன்பு அணைத்தலை விடாத அவர் கைகள் இப்போது நெகிழ்ந்தமை கண்டேன். அதனால் செவிலியின் கையிலிருந்த மெல்லிய நடையினைக் கொண்ட என் புதல்வனை நோக்கி மெல்லெனச் சென்றவாறே தலைவனிடம், 'நீயிர் நும் அழகிய பரத்தையர்க்குப் பொருந்தியவர் ஆவீர்; இதோ இந்தச் செல்வனுக்கு நாங்கள் பொருந்தியவர் ஆவோம்' என்று கூறினேன்.

அதைக் கேட்டு அவரும், 'நானும் அவனிடத்துப் பெருங் காதல் கொண்டவனே' என்று கூறிச் சாய்ந்து என் முதுகினைப் பற்றிக் கொண்டார். குளிர்ச்சி பொருந்திய பெருமழை பெய்து,

பல முறையும் உழவு செய்யப்பட்ட செம்மையான நிலத்தின் மண்போல் என் நெஞ்சம் நெகிழ்ந்தது.

வளைந்த நீர்முள்ளிச்செடியின் குவிந்த பூங்கொத்திலிருந்து வீழ்ந்த, மீன் முள் போன்ற வெண்மையான காம்பினைக் கொண்ட அழகிய மலர்களை விளையாட்டு மகளிர் தாம் நடத்தும் விழாவில் அழகு செய்வதற்காகக் கூட்டுவர். அத்தகைய காட்சி கொண்ட அழகிய வயல்கள் பொருந்திய வளமிக்க ஊருக்கு உரியவனாகிய என் தலைவனோடு அந்நிலையில் ஊடல் கொள்ள இயலுமோ?

கருத்து

'தலைவனின் அன்பு என் மனத்தை இளகச் செய்துவிட்டது; ஆகவே, அவனை ஏற்றுக்கொண்டேன்' என்கிறாள், தலைவி.

விளக்கம்

"தோழியே! ஒரு காலத்தில் என் மார்பினை நெருங்க அணைத்து, நான் விலக்கவும் விலகாதவனாய் இருந்தவன், தலைவன். ஆனால், அவன் இப்போது புதல்வன் உண்ணும் பாலால் நனைந்துள்ள என் மார்பைத் தழுவினால் தன்மீது பால் படும் என்றெண்ணி அணைத்திடாது விலகுகின்றான். நான் என் மகனிடம் சென்று கொண்டே, தலைவனிடம் 'நீ பரத்தைக்குரிய வனாய் இருக்கின்றாய்; நான் இம்மகனுக்காக இருக்கிறேன்' என்று கூறினேன். அது கேட்ட தலைவன், 'இவனிடம் நானும் அன்பு கொண்டவனே!' என்று கூறி என் முதுகினைத் தொட்டணைத்தவாறு நின்றான். அந்நிலையில், நன்கு மழை பெய்து பன்முறையும் உழப்பட்ட வயலின் மண்போல என் மனம் நெகிழ்ந்தது. அதன்பின் அவனோடு ஊடல் கொள்ளவும் இயலுமா?" என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

உள்ளுறை

முள்ளிச்செடியில் தோன்றிய பூவானது பருவம் காரண மாய்ச் செடியைவிட்டு உதிர்ந்து மகளிர் தம் விழாவில் அழகு செய்யப் பயன்படுகின்றது. இத்தொடர்மூலம், தலைவியின் இளமை நலம் குன்றியமையால் தலைவன் மனமும் பரத்தையிடம் செல்லலாயிற்று என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. கூன்முள் - வளைந்த முள்; முள்ளி - நீர்முள்ளி.
2. வெண்கால் - வெள்ளிய காம்பினைக் கொண்ட; மாமலர் - கரிய மலர்.
3. பொய்தல் - விளையாட்டு; விழவுஅணி - விழாவிற்கு அழகு செய் வதற்காக.
4. நண்ணிய - பொருந்திய; கேழ் - மிக்க.
5. புலத்தல் - ஊடுதல்; அல்கல் - இரவில்.
6. பொருத - பாய்ந்து பிளந்த; மருப்பு - கொம்பு.
7. தொடி - பூண்; ஏர ஆகி - அழகினைக் கொண்டவனாகி.
8. மாக்கண் - கரிய கண்களைக் கொண்ட.
9. முயங்கல் - தழுவுதலை; விடாஅல் - விலக்காதே.
10. ஓம் - ஒழியும்; ஒல்லார் - பொருந்தாதவர்.
11. இவை - இம்மார்பகங்களை; பருவம் - காலம்.
12. தடைஇ - சரிந்து.
14. கேழ்கிளர் அகலம் - நன்னிறம் விளங்கும் மார்பு.
15. வீங்க - விம்ம.
16. ஆயிடை - அவ்விடத்து; அவரோ, தம் மார்பில் பால் படுமே என அஞ்சினர்.
17. கவவுக் கை (முன்பு) அணைத்தலை விடாத அவர் கைகள்; நெகிழ்ந்தமை - விலகியமை கண்டு; போற்றி - கண்டு; மதவு நடை - மெல்லிய நடை.
19. நல்லோர்க்கு - பரத்தையர்க்கு; ஒத்தனிர் - பொருந்தினிர்.
20. செல்வர்க்கு - புதல்வனுக்கு.
21. பெயர் தந்தேன் - சென்றேன்.
22. யாமும் காதலம் - அப்புதல்வனிடம் நானும் அன்பு கொண்டவன்; சாஅய் - பணிந்து.
23. சிறுபுறம் - முதுகு; கவையினன் - அணைத்துக்கொண்டான்; உறுபெயல் - மிகுதியாய்ப் பெய்த.
24. தண்துளி - குளிர்ச்சி பொருந்திய மழை; பலஉழு - பலமுறை உழுத; செஞ்செய் - செம்மையாகிய செய்.
25. கலுழ்ந்து - கலங்கி.
26. நெஞ்சு அறை போகிய - என்னை வஞ்சித்து அவரிடம் சென்ற; அறிவினேற்கு - அறிவினைக் கொண்ட எனக்கு.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 29 **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகன் புணர்ந்து நீங்கிய பின்பு சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் பிரிவாற்றாமையையே பற்றுக்கோடாய்க் கொண்டு தலைவன் தலைவியோடு கூடச் சென்றான். அவன் சென்ற பின்பு தோழி தலைவியிடம் வந்தாள். அப்போது தலைவி தோழியிடம் கூறியது.

ஒல்லென் ஒலிபுனல் ஊரன் வியன்மார்பம்
புல்லேன்யான் என்பேன் புனையிழையாய் – புல்லேன்
எனக்கோர் குறிப்பும் உடையனோ ஊரன்
தனக்கேவல் செய்தொழுகு வேன்.

தெளிவுரை

"அழகிய அணிகலன்களை அணிந்த தோழியே! 'ஒல்' என ஒலிக்கின்ற ஆரவாரம்மிக்க நீர் சூழ்ந்த மருதநில ஊர்களை உடையவன், தலைவன். அத்தலைவனின் மார்பைத் தழுவ மாட்டேன் என்று முன்பு உன்னிடம் சொல்லியிருந்தேன். ஆனால், அவன் திரும்ப வந்தபோது, முன்பு கூறியதை மறந்து அவன் தழுவ இடந்தந்துவிட்டேன். நான் அவனுக்கு ஊழியம் புரிந்து நடக்கக்கூடிய தன்மையினள் ஆவேன்; ஆதலின், அவனைக் கண்ட பின் 'தழுவ இடந்தரேன்' என்று கூறி மறுக்கவா இயலும்?" என்று தான் தலைவனை ஏற்றுக்கொண்டதற்கான காரணத்தைத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

'தலைவனைப் பார்த்த அளவில் அவன் வயப்பட்டுச் செயலற்று விட்டேன்.'

சொற்பொருள்

2. புனை இழையாய் - அணிகலன்களைப் பூண்டுள்ள தோழியே!

1. ஒல் என் - 'ஒல்' என்று ஒலிக்கும்படியாக; ஒலி புனல் ஊரன் - ஆரவார மிக்க நீர் சூழ்ந்த மருத நில ஊர்களை உடையவன்; வியன் மார்பம் - அகன்ற மார்பினை.
2. புல்லேன் என்பேன் - (அவனைக் காணுவதற்கு முன்பு) தழுவ மாட்டேன் என்று கூறியிருந்தேன்.
4. (ஆயினும் நான் ஊரன்) தனக்கு - ஊரனாகிய தலைவனுக்கு; ஏவல் செய்து ஒழுகுவேன் - அவன் ஏவியவாறு செயல்பட வேண்டியவள் ஆதலால்.
2. புல்லேன் - தழுவேன் (என்று கூறுதற்கு).
3. எனக்கு ஓர் குறிப்பும் - ஒரு செயலும்; உடையனோ - பெற்றுள் ளேனா?

தலைவி கூற்று

நாலடியார் 389 சமணப் புலவர் ஒருவர் - பெயரை அறிய இயலவில்லை

திணை : மருதம்

கூற்று

பரத்தையிற் பிரிந்துவந்த தலைமகனோடு நீ, புலவாமைக்குக் காரணம் ஏன்? என்ற தோழிக்குத் தலைமகள் கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தை வீடு சென்று திரும்பினான். சினந்து ஊடல் கொள்ள வேண்டிய தலைவி, அவ்வாறின்றித் தலைவனை ஏற்றது என்? என்று வினவிய தோழிக்குத் தலைவி கூறியது.

சாய்ப்பறிக்க நீர்திகழும் தண்வயல் ஊரன்மேல்
ஈப்பறக்க நொந்தேனும் யானேமன்! – தீப்பறக்கத்
தாக்கி முலைபொருத தண்சாந்(து) அணிஅகலம்
நோக்கி இருந்தேனும் நான்.

தெளிவுரை

கோரைப் புற்களைப் பறித்த இடத்தில் நீர் சுரந்து தோன்றும் குளர்ச்சி பொருந்திய வயல்கள் சூழ்ந்த ஊரில் உள்ள தலைவன்மீது ஈ பறந்தாலும் அது கண்டு முன்பு வருந்தியவளும்

நானே! இப்போது தீப்பொறி எழுமாறு பொதுமகளிரின் கொங்கைகள் மோதப்பெற்றுச் சந்தனம் கலைந்த தலைவனின் மார்பைப் பார்த்துப் பொறுத்துக்கொண்டிருப்பவளும் நானே! (எனவே அவன் பரத்தமையைக் கண்டு ஊடவில்லை.)

கருத்து

'தலைவன் பரத்தையரைக் கூடினும் கற்புடைய மகளிர் பொறுத்திருக்கும் இயல்பினரே அவர்.

சொற்பொருள்

1. சாய் - கோரைப் புல்; திகழும் - தோன்றும்.
2. நொந்தேன் - வருந்தியவளும் (நோதல் - வருந்துதல்); பறக்க - எழுமாறு.
3. தாக்கி - பதிந்து; பொருத - தாக்க; சாந்து - சந்தனம்.
4. நோக்கி - பார்த்து.

தலைவி கூற்று

ஐந்திணை ஐம்பது 30 **மாறன் பொறையனார்**

திணை : மருதம்

கூற்று

ஆற்றாமையே வாயிலாகப் புக்க தலைமகன் புணர்ந்து நீங்கிய பின்பு சென்ற தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவியின் பிரிவாற்றாமையையே பற்றுக்கோடாய்க் கொண்டு தலைவன் தலைவியைக் கூடச் சென்றான். அவன் சென்ற பின்பு தோழி தலைவியிடம் வந்தாள். அப்போது தலைவி தோழியிடம் கூறியது.

குளிரும் பருவத்தே ஆயினும் தென்றல்
வளிஎறியின் மெய்யிற் கினிதாம் – ஒளியிழாய்
ஊடி இருப்பினும் ஊரன் நறுமேனி
கூடல் இனிதாம் எனக்கு.

தெளிவுரை

"ஒளி வீசும் அணிகலன்களை அணிந்த தோழியே! குளிர் காற்று வீசும் குளிர் காலமே என்றாலும் தென்றல் வீசினால் அது நம் உடலுக்கு இன்பமளிக்கும். அதுபோல் நான் தலைவனைக் காணாத போது அவனுடன் ஊடல் கொண்டிருப்பினும், அவன் ஆற்றாமை மீதூரக் கூட வரும்போது அத்தலைவனின் மண மிகுந்த மேனியைக் கூடுதல் எனக்கு இன்பத்தைத் தரு கின்றது"எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

'அவனைக் காணாதபோது கடுஞ்சினம் கொண்டிருப்பினும், கண்டதும் அவன் வயப்பட்டுச் சினம் நீங்கிவிடுகிறது.'

சொற்பொருள்

1. பருவம் - காலம், நேரம்.
2. ஒளியிழாய் - ஒளி வீசும் அணிகளை அணிந்த தோழியே!; (தென்றல்) வளி - தென்றல் காற்று; எறியின் - வீசினால்; மெய்யிற்கு - உடலுக்கு; இனிதாம் - இன்பமாகும்.
3. ஊடி இருப்பினும் - நான் தலைவனோடு மாறுபட்டு இருந்தாலும்; ஊரன் நறுமேனி - தலைவனின் மணமிகுந்த மேனி.
4. கூடல் - அவனைப் புணர்தல்; எனக்கு இனிதாம் - எனக்கு இன்பத்தைத் தருகிறது.

தலைவி கூற்று

குறுந்தொகை 252 **கிடங்கில் குலபதி நக்கண்ணனார்**

திணை : குறிஞ்சி

கூற்று

தலைமகன் வரவறிந்த தோழி, 'அவர் நம்மை வலிந்து போயினார்க்கு எம்பெருமாட்டி தீயன கடிந்து நன்கு ஆற்றினாய்!' என்றாட்குக் கிழத்தி உரைத்தது.

(வலிந்து போயினார் - சொல் கேளாது சென்றார்; தீயன கடிந்து - அவனுக்கு வருத்தம் தரும் எதனையும் செய்யாது நீக்கி; ஆற்றினாய் - பொறுத்திருந்தாய்; என்றாட்கு - என்று கூறிய தோழிக்கு.)

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் வீட்டுக்குச் சென்றதால் அவனோடு தலைவி ஊடல் கொண்டிருந்தாள். தலைவன் மீண்டு வந்தான். அவனோடு, ஊடல் கொள்ளாமலும் குறையும் கூறாமலும் அவனைத் தலைவி ஏற்றுக் கொண்டாள். ‘கொடுமை இழைத்த தலைவனை மறுப்பு எதுவுமின்றி ஏற்றது ஏன்?’ என்று தோழி கேட்டதற்குத் தலைவி கூறியது.

நெடிய திரண்ட தோள்வளை ஞெகிழ்த்த
கொடியன் ஆகிய குன்றுகெழு நாடன்
வருவதோர் காலை, இன்முகம் திரியாது,
கடவுட் கற்பின் அவன்எதிர் பேணி,
‘மடவை மன்ற நீ’எனக் கடவுபு
துனியல் வாழி தோழி! சான்றோர்
புகழும் முன்னர் நாணுப;
பழியாங்கு ஒல்பவோ காணுங் காலே?

தெளிவுரை

“ ‘குன்றுகள் பொருந்திய நாட்டினையுடைய தலைவன், நீண்டு திரண்ட உன் தோள்வளை நெகிழுமாறு கொடுமை செய்தவன். அவன் பரத்தையர் இல்லத்திலிருந்து திரும்பி வந்தபோது, இனிய முகத்திலே வெறுப்பைக் காட்டாமல் தெய்வத் தன்மை கொண்ட உன் கற்பினால் அவனை எதிர் சென்று வரவேற்று உபசரித்த நீ உறுதியாய் அறிவில்லாதவளே’ என்று என்னிடம் கூறும் தோழியே, நீ வருந்தாதே! நீ வாழ்க! நான் ஏன் தலைவனை அவ்வாறு ஏற்றுக்கொண்டேன் என்றால், என் தலைவன் சான்றோன். சான்றோர் தம்மை யாராவது புகழ்ந் தாலே நாணம் அடைவர். அப்படிப்பட்டவர் பழி எதுவும் நேர்ந்தால் எங்ஙனம் தாங்குவர்? (அதனால்தான் முகம் சுளிக் காமல் வரவேற்றேன்)” என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

கருத்து

‘தலைவன் அறிவு மிகுந்தவன்; பழிக்கு அஞ்சும் தன்மை வாய்ந்தவன்; ஆதலால், அவனைப் பழிக்காமல் ஏற்றுக்கொண்டேன்.’

விளக்கம்

'அறிவு மிகுந்தவர் தம்மைப் புகழ்ந்தாலே நாணுவர்; அத்தகையவர் தம்மை எவரேனும் பழித்தால் அச்சொற்களைக் கேட்டு மிகவும் தளர்ச்சியடைவர். ஆதலால்தான், அறிவு மிகுந்த என் காதலனை நான் பழிக்காமல் வரவேற்றேன்'' எனத் தலைவி தோழியிடம் கூறினாள்.

சொற்பொருள்

1. நெடிய - உயர்ந்து; திரண்ட - திரட்சியான; ஞெகிழ்த்த - கழலச் செய்த.
2. குன்று கெழு - குன்றுகள் பொருந்திய.
3. வருவது ஓர் காலை - பரத்தையர் இல்லத்திலிருந்து தலைவன் திரும்பி வந்தபோது; திரியாது - மாறுபடாது, வெறுப்புக் காட்டாது.
4. கடவுள் கற்பின் - தெய்வத் தன்மையுள்ள கற்பினால்; எதிர் பேணி - எதிர் சென்று.
5. மடவை நீ - நீ அறிவில்லாதவள்; கடவுபு - என்று கேட்டு.
6. துனியல் - வருந்தாதே.
7. நாணுப - வெட்கமுறுவர்.
8. பழி - பழிச்சொல்லுக்கு; யாங்கு ஒல்பவோ? - எவ்வாறு பொறுப்பர்?

தலைவி கூற்று

அகநானூறு 236 **பரணர்**

திணை : மருதம்

கூற்று

ஆற்றாமை வாயிலாகப் புக்க தலைமகன் நீக்கத்துக்கண் புக்க தோழிக்குத் தலைமகள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தமை ஒழுக்கம் பூண்டதால் தலைவி ஊடினாள். ஆனால், அவள், தலைவன் வந்தபோது அவனுடன் ஊடல் கொள்ளாது மகிழ்ந் திருந்தாள். மறுநாள் தலைவன் இல்லாதபோது அங்குச் சென்ற தோழிக்குத் தான் ஊடாமைக்குக் காரணம் என்னவெனத் தலைவி சொல்லியது.

மணிமருள் மலர முள்ளி அமன்ற,
துணிநீர், இலஞ்சிக் கொண்ட பெருமீன்
அரிநிறக் கொழுங்குறை வௌவினர் மாந்தி,
வெண்ணெல் அரிநர் பெயர்நிலைப் பின்றை,
இடைநிலம் நெரிதரு நெடுங்கதிர்ப் பல்சூட்டுப்
பனிபடு சாய்ப்புறம் பரிப்ப, கழனிக்
கருங்கோட்டு மாஅத்து அலங்குசினைப் புதுப்பூ
மயங்குமழைத் துவலையின் தாஅம் ஊரன்
காமம் பெருமை அறியேன், நன்றும்
உய்ந்தனென்– வாழி, தோழி!– அல்கல்
அணிகிளர் சாந்தின் அம்பட்டு இமைப்ப,
கொடுங்குழை மகளிரின் ஒடுங்கிய இருக்கை
அறியா மையின் அழிந்த நெஞ்சின்,
'ஏற்றுஇயல் எழில்நடைப் பொலிந்த மொய்ம்பின்,
தோட்டுஇருஞ் சுரியல் மணந்த பித்தை,
ஆட்டன் அத்தியைக் காணீ ரோ?'என,
நாட்டின் நாட்டின், ஊரின் ஊரின்,
'கடல்கொண் டன்று'என் 'புனல்ஒளித் தன்று'என,
கலுழ்ந்த கண்ணள், காதலற் கெடுத்த
ஆதி மந்தி போல,
ஏதம் சொல்லி, பேதுபெரிது உறலே.

தெளிவுரை

தோழி வாழ்க! தெளிந்த குளிர்ச்சி பொருந்திய நீரைக் கொண்ட குளத்திற்கு அருகே நீர்முள்ளிச் செடிகள் நிறைந்து வளர்ந்துள்ளன. அவற்றின் மலர்கள் நீலமணி போல் தோன்று கின்றன. நம் ஊர் வயலில் நெல்லை அறுவடை செய்வோர் அக்குளத்திலுள்ள பெரிய மீன் ஒன்றைப் பிடித்துத் துண்டாக்கி உண்டனர். உண்ட மிச்சத்தைக் களத்திலே போட்டுவிட்டுச் சென்றனர். நெற்கதிர்கள் கட்டுக்கட்டாய்ச் சிறிதும் இடமின்றி அடுக்கப்பட்டிருந்தன. அக்களத்தைச் சுற்றிலும் கோரைப் புற்கள்

முளைத்திருந்தன. அருகிலுள்ள மாமரக் கிளைகளிலிருந்து பூக்கள் மழைத்துளிபோல் உதிர்ந்து எங்கும் பரவிக் கிடந்தன. இத்தகைய காட்சிகள் கொண்ட ஊரில் வாழும் தலைவனின் அன்பு, பெருமை ஆகியவற்றை நான் அறிந்துகொள்ளவில்லை.

நேற்று இருள் அடர்ந்த இரவில் தலைவர் சந்தனமும் பட்டாடையும் அணிந்து பரத்தை ஒருத்தியோடு காலங்கழித்து விட்டு இன்று காலை வந்தார். அவர் என்னைக் கண்டதும் மகளிரைப்போல நாணி, கூனிப் படுக்கையறையில் இருந்தார். அக்காட்சியைக் கண்ட என் நெஞ்சு அன்பால் உருகி விட்டது. முன்னாளில் ஆட்டன்அத்தி, ஆதிமந்தி ஆகிய இருவரும் ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டிருந்தனர். ஒரு நாள் காவிரியில் நீராடியபோது ஆட்டன் அத்தி வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டான். தன் காதலனை இழந்த ஆதிமந்தி கலங்கிய கண்களோடு, "ஏறுபோன்ற எழுச்சியான நடையினையும், அழகுமிக்க தோள்களையும், அடர்ந்த கருமையான சுருண்ட தலைமயிரையும் கொண்ட என் காதலன் ஆட்டன் அத்தியைக் கண்டீரோ?" என்று பலரிடமும் கேட்டாள்; நாடுதோறும், ஊர்தோறும் சென்று என் காதலனைக் 'கடல் கொண்டுவிட்டது', 'புனல் ஒளித்துக்கொண்டது' எனத் தன் துன்பத்தைச் சொல்லி மயங்கினாள். அவளைப்போல என் துன்பத்தைப் பிறரிடம் சொல்லி மயங்குவதிலிருந்து நான் தப்பிப் பிழைத்தேன்."

கருத்து

"தோழி! நம் தலைவர் நாணத்தோடு படுக்கையில் இருப்பதைக் கண்டு நெஞ்சம் உருகி அவர் விருப்பத்துக்கு இணங்கிவிட்டேன்'என்று தலைவி தோழியிடம் கூறினாள்.

விளக்கம்

நேற்றைய இரவுப்பொழுதைப் பரத்தை ஒருத்தியோடு காலங்கழித்த தலைவர் இன்று காலை இங்கு வந்தார். என்னைக் கண்டதும் நாணி, கூனிப் படுக்கையறையில் இருந்தார். அக் காட்சியைக் கண்ட என் மனம் அன்பால் உருகிவிட்டது. காவிரி

வெள்ளத்தால் ஆட்டன் அத்தி இழுத்துச் செல்லப்பட்டபோது அவன் காதலி ஆதிமந்தி, ஊர் தோறும் சென்று, 'என் காதலனைப் புனல் ஒளித்துக் கொண்டது, கண்டீரோ?' என்று தன் துன்பத்தைச் சொல்லி மயங்கினாள். என் தலைவர் வீட்டுக்கு வந்துவிட்டதால் ஆதிமந்திபோல நான் துன்பப் படவோ, என் துன்பத்தை மற்றவரிடம் சொல்லி அழவோ வேண்டாதாயிற்று.

சொற்பொருள்

1. மணிமருள் - நீலமணியினை ஒத்த; முள்ளி - நீர் முள்ளி; அமன்ற - நிறைந்த.
2. துணி - தெளிந்த; இலஞ்சி - மடு.
3. அரிநிறம் - வரிகள் பொருந்திய நிறம்; கொழுங்குறை - கொழுத்த துண்டு; வெளவினர் - கௌவிப் பிடித்தனர்; மாந்தி - உண்டு.
4. அரிநர் - அரிபவர்; பெயர்நிலைப் பின்றை - எழுந்த பின்னர் கொண்டு போய்ப் போட்ட.
5. இடை நிலம் நெரிதரு - களத்தில் சிறிதும் இடமின்றி அடுக்கப்பட்ட; சூட்டு - நெற்கட்டு.
6. சாய்ப்புறம் - கோரை.
7. மாஅத்து - மாமரத்தின்; அலங்குசினை - அசையும் கிளை.
8. துவலை - துளி; தாஅம் - பரந்து கிடக்கும்.
9. காமம், பெருமை ஆகியவற்றினை அறியேன்.
10. அல்கல் - இரவில்.

9-10. நன்றும் நான் உய்ந்தனென்.

11. சாந்து - சந்தனம்; அம்பட்டு - அழகிய பட்டாடை; இமைப்ப - ஒளி செய்ய.
12. ஒடுங்கிய - நாணியிருந்த; இருக்கை - படுக்கை.
13. மடமையால் உருகப்பெற்ற நெஞ்சினேன் ஆயினமையின்.
14. ஏற்று இயல் - ஏற்றின் தன்மை; மொய்ம்பு - தோள்.
15. தோடு - தொகுதி கொண்ட; இருஞ்சுரியல் - கரிய சுருள்; மணந்த - பொருந்திய; பித்தை - தலைமயிர்.
16. ஆட்டன் அத்தியாகிய என் தலைவனைக் காணீரோ.
18. என் கணவனைக் கடல் கொண்டது, புனல் ஒளித்தது.
19. கலுழ்ந்த - அழுத; கெடுத்த - போக்கிய.
21. ஏதம் - துன்பம்; பேது - மயக்கம்.

தலைவி கூற்று

கலித்தொகை 75 **மருதனிளநாகனார்**

திணை : மருதம்

கூற்று

'தலைமகன் நாடோறும் வதுவை அயர்ந்து வந்தால், யான் அதற்குப் பொறேனாக, நீ ஊடலின்றி அவன் வந்தபொழுதே எதிர்கொள்ளுதி' என்ற தோழிக்குத் தலைமகள் அதற்குக் காரணம் கூறியது.

கூற்று விளக்கம்

'தலைவன் நாள்தோறும் பரத்தையரை நுகர்ந்துவிட்டு வருவதை என்னாலேயே பொறுத்துக்கொள்ள இயலவில்லை ஆனால், நீ அவன் வரும்பொழுது ஊடல் கொள்ளாமல் ஏற்றுக்கொள்கிறாயே, ஏன்?' என்று கேட்ட தோழியிடம் தலைவி காரணம் கூறியது.

தரவு

'நீர்ஆர் செறுவின் நெய்தலொடு நீடிய
நேரிதழ் ஆம்பல் நிரையிதழ் கொண்மார்,
சீரார் சேயிழை ஒலிப்ப, ஓடும்
ஓரை மகளிர் ஓதை வெரீஇஎழுந்து,
ஆரல் ஆர்கை அம்சிறைத் தொழுதி
உயர்ந்த பொங்கர் உயர்மரம் ஏறி,
அமர்க்கண் மகளிர் அலப்பிய அந்நோய்
தமர்க்குஉரைப் பனபோல், பல்குரல் பயிற்றும்,
உயர்ந்த போரின் ஒலிநல் ஊரன்
புதுவோர்ப் புணர்தல் வெய்யன் ஆயின்,
வதுவை நாளால் வைகலும், அஃதுயான்
நோவேன், தோழி! நோவாய், நீ'என
எற்பார்த்து உறுவோய்! கேள்;இனித் தெற்றென.

தாழிசை

எல்லினை வருதி; எவன்குறித் தனை?'எனச்
சொல்லாது இருப்பே னாயின், ஒல்லென,
விரிஉளைக் கலிமான் தேரொடு வந்த
விருந்துஎதிர் கோடலின், மறப்பல், என்றும்;

வாடிய பூவொடு வாரல்,எம் மனை'என
ஊடி இருப்பே னாயின், நீடாது,
அச்சுஆ றாக உணரிய வருபவன்
பொய்ச்சூள் அஞ்சிப் புலவேன் ஆகுவல்;

'பகல்ஆண்டு அல்கினை! பரத்த', என்றுயான்
இகலி இருப்பே னாயின், தான்தன்
முதல்வன் பெரும்பெயர் முறையுளிப் பெற்ற
புதல்வன் புல்லிப் பொய்த்துயில் துஞ்சும்;
ஆங்க—

சுரிதகம்

விருந்துஎதிர் கொள்ளவும், பொய்ச்சூள் அஞ்சவும்,
அரும்பெறற் புதல்வனை முயங்கக் காணவும்,
ஆங்குஅவிந்து ஒழியும்என் புலவி தாங்காது;
அவ்வவ் இடத்தான் அவைஅவை காண—
பூங்கண் மகளிர் புனைநலம் சிதைக்கும்
மாய மகிழ்நன் பரத்தைமை
நோவேன், தோழி! கடன்நமக்கு எனவே.

தெளிவுரை

தோழி, தலைவியை நோக்கி, "தலைவனின் ஊரில் நீர் நிறைந்த கழனிகள் உள்ளன. அவற்றில் நெய்தல் மலர்களும் ஆம்பல் மலர்களும் மிகுந்துள்ளன. அங்கு விளையாடும் சிறுமியர் காலில் சிலம்பு ஒலிக்கப் பூக்களைப் பறிக்க ஓடுகின்றனர். அந்த ஓசை மிகுதியால் ஆரல் மீன்களைப் பிடித்துத் தின்று கொண்டிருந்த பறவை இனங்கள் அஞ்சிப் பறந்து சென்று சோலையில் உள்ள மரங்களின் உச்சிக்கொம்பில் அமர்ந்து கொள்கின்றன. மகளிரின் சிலம்புகள் எழுப்பிய மிகுந்த ஓசையால் தாங்கள் மீன் உண்ண இயலாததைத் தம் இனத்தவர்க்கு அறிவிப்பதுபோல அவை பல குரல்கள் எழுப்புகின்றன. இத்தகைய ஒலி நிறைந்த ஊரினைக் கொண்டவன், தலைவன். அவன் புதிய புதிய மகளிரோடு சேரும் விருப்பினனாய் இருக்கிறான். அதனால் அவனுக்கு நாள் தோறும் மணநாளாய்

இருக்கிறது. என் தலைவியே! நானே இதைக் கண்டு கோபம் கொள்கின்றேன். ஆனால் நீயோ, சினங்கொள்வதில்லை. என்ன காரணத்தால் இவ்வாறு செயல்படுகிறாய்?" என்று கேட்டாள்.

"தோழி! என்ன காரணம் என்றா கேட்கிறாய்? தெளிவாய்க் கூறுகிறேன், கேள்.

"தலைவனிடம், 'இரவெல்லாம் எங்கோ சென்றுவிட்டு இப்படிக் காலையில் வருகிறாயே! நீ என்ன கருதிக்கொண்டிருக் கிறாய்?' என்று கேட்டு அவனோடு ஊடல் கொண்டு பேசாமல் இருந்தால், குதிரைகள் பூட்டிய தேரில் விருந்தினர்களை அழைத்து வருகிறான். அவர்களைப் பேண வேண்டியிருத்தலால் அவன்மீது கொண்ட ஊடலைக் கைவிட வேண்டியதாய் உள்ளது. அந்நிலையில் நான் கொள்ளும் ஊடலால் என்ன பயன்?

" 'பரத்தையரோடு கூடியிருந்துவிட்டு வாடின மாலையோடு என் வீட்டுக்கு வாராதே' என்று ஊடல் கொண்டு பேசா திருந்தால், அவன் என் ஊடலைப் போக்குதற்குப் பொய்ச் சத்தியம் செய்வான். அப்பொய்ச் சத்தியத்தினால் அவனுக்கு துன்பம் ஏற்படும் என்று அஞ்சி, ஊடலைக் கைவிட நேரிடுகிறது. நான் கொள்ளும் ஊடலால் என்ன பயன்?

" 'பரத்த! பகலிலே பரத்தையர் வீட்டிலே இருந்தாய்' என்று அவனிடம் மாறுபாடு கொண்டு இருப்பேனேயானால் அவன், தன் தந்தையின் பெயர் சூட்டப்பட்டுள்ள புதல்வனை அணைத்துக்கொண்டு பொய் உறக்கம் கொள்ளுகின்றான். அந்நிலையில் நான் கொள்ளும் ஊடலால் என்ன பயன்?

"என் தோழியே! அழகிய கண்களைக் கொண்ட பெண்களை நலங்கெடச் செய்யும் மாயனாய் விளங்கும் என் கணவன்மீது சினம் கொண்டிடவேதான் கருதுவேன். ஆனால், அவனோடு வரும் விருந்தினைப் பேண வேண்டியிருப்பதாலும், அவன் கூறும் பொய்ச் சத்தியத்திற்கு நான் அஞ்சுவதாலும், அவன் தன் மகனைத் தழுவிக்கொள்வதை நான் காண்பதாலும் என் கணவனை நோவாமல் உள்ளேன். இதுதான் மகளிராகிய நமக்குக் கடமைபோலும்" என்று தலைவி கூறினாள்.

கருத்து

தோழி! தலைவன் விருந்துடன் வருவதாலும் மகனைத் தழுவிக்கொள்வதாலும் என் ஊடலை நீக்கிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

விளக்கம்

தோழி வருத்தத்துடன் தன் தலைவியை நோக்கி, "உன் கணவன் நாள்தோறும் பரத்தையரை நுகர்ந்து வருவதை என்னாலேயே பொறுத்துக்கொள்ள இயலவில்லை. அவ்வாறிருக்க நீ ஏன் அவனோடு ஊடல் கொள்ளாதிருக்கிறாய்?" என்று கேட்டாள். அதற்குத் தலைவி, "நான் கண்டிக்கத்தான் செய்கிறேன். நான் ஒருமுறை கண்டித்தால் மறுமுறை அவன் வரும் போது நான் ஊடுவேன் என அஞ்சி விருந்தினர் ஒருவரோடு வந்து விடுகிறான். விருந்தினரைப் பேண வேண்டிய நிலையில் அவனோடு ஊடல் கொள்ள இயலுமா? அஃதன்றிப் பொய்ச் சத்தியம் செய்கின்றான். அதனால் அவனுக்கு ஏதாவது துன்பம் நேர்ந்துவிடுமோ என அஞ்சி அவனோடு ஊடல் கொள்வதில்லை. சில வேளை, என் மகனை அணைத்துக்கொண்டு தூங்குவதுபோல் நடிக்கிறான். அவனை என் செய்வது? எனவே, நான் ஊடல் கொள்ளாது தலைவனை ஏற்றுக்கொள்ள வேண்டியதாயிற்று" என்று கூறினாள்.

குறிப்பு

தந்தைக்குத் தந்தை பெயரைக் குழந்தைக்கு இடுவது அன்றைய வழக்கமாயிருந்தது. பெயரன் - தந்தைக்குத் தந்தையின் பெயரைக் கொண்டவன்.

சொற்பொருள்

1. ஆர் - நிறைந்த; செறு - வயல்.
2. நேர் - நீளம்; நிரை - ஒழுங்கு; கொண்மார் - பறிப்பவர்.
3. சேயிழை - சிவந்த அணிகலன், சிலம்பு.
4. ஓரை - மகளிர் விளையாட்டு; ஓதை - ஒலி, ஆரவாரம்; வெரீஇ - அஞ்சி.
5. ஆரல் - ஆரல் மீன்; ஆர்கை - உண்ணும்; தொழுதி - கூட்டம்.
6. பொங்கர் - சோலை.
7. அமர்க்கண் - விரும்பத் தகுந்த கண்; அலப்பிய - துன்புறுத்திய; நோய் - துன்பம்.

8. தமர் - தம் இனத்தவர், சுற்றத்தார்; பயிற்றும் - ஒலிக்கும்.
9. போரின் ஒலி - பல குரல்கள்.
10. புதுவோர் - புதிய பரத்தையர்; வெய்யன் - விருப்பம் கொண்டவன்.
11. வதுவை - திருமணம்; வைகலும் - நாள்தோறும்.
12. நோவேன் - வருந்துவேன்.
13. எற்பார்த்து - என்னை நோக்கி; உறுவோய் - வருத்தம் உறுபவளே! தெற்றென - தெளிவாய்.
14. எல்லினை வருதி? - இரவில் வெளியே சென்றுவிட்டு காலையில் வருகிறாய்; எவன் குறித்தனை? - எங்குச் சென்றிருந்தாய்?
16. உளை - பிடரி மயிர்; கலிமான் - எழுச்சி மிக்க குதிரை.
17. எதிர்கோடல் - பேணுதல்; மறப்பல் - ஊடலை மறப்பேன்.
18. வாடிய பூவொடு - முயக்கத்தால் வாடிய பூவுடன்.
19. நீடாது - காலம் நீட்டிக்காது.
20. அச்சு - அச்சம்; ஆறாக - வழியாய்க் கொண்டு; உணரிய - ஊடலைப் போக்க.
21. பொய்ச்சூள் - பொய்ச்சத்தியம்; புலவேன் - ஊடல் கொள்ள மாட்டேன்.
22. ஆண்டு - அங்கே (பரத்தை வீட்டில்); அல்கினை - தங்கினாய்.
23. இகலி - ஊடல் கொண்டு.
24. தன் முதல்வன் - தன் தந்தை; முறையுளி - முறைப்படி.
25. புல்லி - அணைத்து; பொய்த்துயில் - தூங்குபவன் போல படுத்திருப்பவன்.
27. பொய்ச் சூள் - பொய்யான உறுதிமொழி (பொய்ச்சத்தியம்).
29. அவிந்து - அழிந்து; தாங்காது - நிலைத்து நிற்காது.
30. அவ்வவ் இடத்தான் - அந்தந்த இடத்திலேயே; அவை அவை காண - அவ் அவற்றைக் காண்பதனால்.
31. சிதைக்கும் - அழிக்கும்.
32. மகிழ்நன் - கணவன்.
33. கடன் - கடமை.

தலைவன் கூற்று

ஐங்குறுநூறு 97 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புறத்தொழுக்கம் இன்றியே இருக்கவும், உளதென்று புலந்த தலைமகளைப் புலவி நீக்கிய தலைமகன், புணர்ச்சியது இறுதிக்கண் தன்னுள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவனுக்குப் பரத்தையரோடு தொடர்பு இல்லாதபோதும், இருப்பதாய்க் கருதித் தலைவி ஊடல் கொண்டிருந்தாள். தலைவன், அவள் ஊடலை நீக்கித் தெளிவித்து அவளோடு கூடி மகிழ்ந்தான். அவன் அக்கூடலின் இறுதியில் தலைவியின் தன்மையை நினைந்து வியந்து கூறியது.

பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக்
கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்,
பொய்கை, ஊரன் மகள்இவள்;
பொய்கைப் பூவினும் நறுந்தண் ணியளே.

தெளிவுரை

பகன்றையின் வெண்மையான மலர்கள் சுற்றப்பட்டிருந்த எருமையின் கொம்பினைக் கண்டு, கரிய கால்களைக் கொண்ட அதன் கன்று அஞ்சும். இத்தகைய காட்சி கொண்டுள்ள பொய்கைகளைக் கொண்ட ஊரன் மகள், இவள். இப்பொய்கைகளில் மலரும் தாமரைப்பூவினும் மணமும் குளிர்ச்சியும் உடையவள்.

கருத்து

ஊடல் நீங்கியதால் கூடிய தலைவன், 'இவள் என்றும் என்னிடம் குளிர்ச்சி பொருந்திய அன்பினைக் கொண்டவளே!' என்றான்.

விளக்கம்

"*பகன்றை வான்மலர் மிடைந்த கோட்டைக் கருந்தாள் எருமைக் கன்று வெரூஉம்*" : *அஃதாவது, எருமையின் கொம்பில் பகன்றை மலர் சுற்றப்பட்டிருந்தது; அதனைக் கண்டு அதன்*

கன்று, அது தன் தாய் அன்று, வேறு எனக் கருதி அஞ்சியது என்பதாம். இத்தொடர்மூலம், தலைவன் மார்பில் கிடந்த மாலையினைக் கண்டு, அது பிறரால் சூட்டப்பட்டது எனப் பிறழக்கொண்டு தலைவி தலைவனை வெறுத்தொதுக்கினாள் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. வான்மலர் - வெண்ணிறமான பூ; மிடைந்த - சுற்றப்பட்டிருந்த; கோட்டை - கொம்பினை.
2. கரு - கரிய; தாள் - அடி; வெரூஉம் - அஞ்சும்.
3. பொய்கை - குளம்.
4. நறுந்தண்ணியள் - மணமும் குளிர்ச்சியும் கொண்டவள்.

விறலி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 134 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

பல வாயில்களை மறுத்த தலைமகள் தனக்கு வாயில் நேர்ந்தமையினைத் தோழிக்கு விறலி கூறியது.

கூற்று விளக்கம்

தலைவன் பல வாயில்களைத் தலைவியிடம் அனுப்பினான். அவர்கள் எல்லாரிடமும் மறுத்துரைத்த தலைவி தன்னை அணுகிய விறலியிடம் மறுத்துரைக்காமல் இசைவு தந்தாள். அதனை விறலி தோழியிடம் கூறியது.

கிழமை பெரியோர்க்குக் கேடின்மை கொல்லோ
பழமை பயன்நோக்கிக் கொல்லோ – கிழமை
குடிநாய்கர் தாம்பல பெற்றாரின் கேளா
அடிநாயேன் பெற்ற அருள்.

தெளிவுரை

"*யாவரையும் தம் உறவினர் என்று பாராட்டும் தன்மை, பெருந்தன்மை முதலிய நற்பண்புகள் ஆகியன மிகுந்து இருப்பவரி*

டமிருந்து நீங்காது. பழமையானவை மக்கட்குப் பல வகையிலும் பயன்படுபவை என்று கருதுவதால் உரிமை படைத்த மக்கள் சிறந்த தலைவர்களைப் பெறுகின்றனர். அதுபோல மிகவும் எளியவளாகிய நான் உறவினர் போன்று இருந்து வாயில் நேர்ந்ததன் காரணமாய்த் தலைவி காட்டிய அருள் எனக்கு வாய்த்தது" என்று விறலி தோழியிடம் கூறினாள்.

கருத்து

தலைவன் அனுப்பிய பல தூதுகளை மறுத்துவிட்ட தலைவி, விறலியின் தூதினை ஏற்றுத் தலைவனோடு மகிழ்ந்திருந்ததைக் கண்ட விறலி, அருகே இருந்த தோழியிடம் தனக்குக் கிடைத்த வாய்ப்புச் சிறப்பானது என்று கூறினாள்.

விளக்கம்

தலைவி நற்பண்பு மிக்கவள். நான்; பழைய நாளிலிருந்து அவளிடம் உறவு பூண்டுள்ள எளிய தன்மையளாதலின் தலைவி என் உரையை மறுத்துரைக்கவில்லை.

குறிப்பு

விறலி - பாடினி. இவள் இசையினாலும் கூத்தினாலும் தலைவன் முதலியோரை மகிழ்விப்பவள்.

சொற்பொருள்

1. கிழமை - உரிமை; கேடு இன்மை - நீங்காது உறையும்.
2. பழமை - பழமையானவை; பயன் நோக்கி - பயனுறுதலை நினைந்து
3. நாய்கர் - தலைவர்; குடி பல - குடிமக்கள் பலர்; பெற்றாரின் - பெற்றவர்களைப் போல; கேள்ஆ - சுற்றம் போன்று.
4. அடிநாயேன் - மிகவும் தாழ்மையுள்ள நான்; அருள் - தலைவி காட்டிய அருள்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 143 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

புறத்துத் தங்கி வந்த தலைமகற்குத் தோழி சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையோடு தங்கியிருந்த தலைவன், தலைவியிடம் திரும்பி வந்திருந்தான். அவனைப் பார்த்துத் தோழி சொல்லியது.

எக்கர் ஞாழல் புள்இமிழ் அகன்துறை
இனிய செய்து நின்றுபின்
முனிவு செய்தஇவள் தடமென் தோளே!

தெளிவுரை

தலைவனே! பெரிய மென்மையான இவள் தோள்கள், களவுக் காலத்தில், மணல் பரப்பில் நிற்கின்ற ஞாழல் மரத்தில் தங்கிய பறவைகள் ஓசை செய்யும் அகன்ற துறையில் உனக்கு இன்பம் தந்தன. ஆனால், அவை இப்பொழுது வெறுப்பைத் தருகின்றன.

கருத்து

களவுக் காலத்தில் இனிமையாயிருந்த இவள் தோள்கள், கற்புக் காலத்தில் வெறுப்பைத் தருவது ஏனோ?

விளக்கம்

தலைவி அரியளாயிருந்த களவுக் காலத்தில் அவள் தோள்கள் உனக்கு இனிமை தந்தன. அவள் எளியளாயுள்ள இக்கற்புக் காலத்தில் அவை உனக்கு வெறுப்பைத் தந்தன.

குறிப்பு

ஞாழலில் தங்கிய பறவைகள் ஒலி செய்யும் என்பது இவ்வூரில் உள்ள துறை மக்கள் அலர் தூற்றுவர் என்னும் குறிப்புப் பொருளைத் தருகிறது.

சொற்பொருள்

1. எக்கர் - மணல்பரப்பு; ஞாழல் - ஞாழல் மரம்; புள் - பறவை; இமிழ் - ஒலிக்கும்; அகன்துறை - அகன்ற கடற்கரைத்துறை.
2. இனிய - இனிமை.
3. முனிவு - வெறுப்பு; தடமென் தோள் - பெரிய மெல்லிய தோள்.

ஊடல் தீர்ந்த பின் உரையாடல்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 1 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு தலைமகளோடு கூடி ஒழுகாநின்ற தலைமகன் தோழியரோடு சொல்லாடி, 'யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்குத் தோழியர் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையொடு நெடுநாள் பழகினான். அது தவறு என்று மனம் தெளிந்தான். பரத்தையைவிட்டு மீண்டும் தலைவியோடு கூடி வாழ்ந்தான். அப்பொழுது தோழியரோடு உரையாடிய தலைவன், 'நான் பரத்தையோடு வாழ்ந்தபோது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?' என்று வினவினான். அதற்குத் தோழி கூறியது.

'வாழி ஆதன், வாழி அவினி!
நெல்பல பொலிக! பொன்பெரிது சிறக்க!'
எனவேட் டோளே; யாயே; யாமே,
'நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்!
யாணர் ஊரன் வாழ்க!
பாணனும் வாழ்க' எனவேட் டேமே.

தெளிவுரை

தாய்த்தன்மை பொருந்திய தலைவி, 'எம் மன்னன் ஆதன் அவினி (நெடிது) வாழ்க!' என்று மன்னனை வாழ்த்தினாள்;

'நாட்டில் நெல் மிகுதியாய் விளைக! பொன் மிகவும் பெருகுக' என்றும் விரும்பி வாழ்த்தினாள். அவள் தோழியராகிய நாங்கள், 'அரும்புகள் நிரம்பிய காஞ்சி மரங்களும், முட்டைகளை மிகுதியாய்க் கொண்ட சிறு மீன்களும் நிறைந்த ஊருக்குத் தலைவன் வாழ்க! அவனுடன் அவன் பாணனும் வாழ்க!' என விரும்பி வாழ்த்தினோம்.

கருத்து

தன் இல்லறக் கடமைகள் சிறப்பதற்கு ஆவனவற்றைத் தலைவி விரும்பி வேண்டினாள். நாங்களோ அவள் நலன் பெறுவதற்காக உன் நலனை வேண்டியிருந்தோம்.

விளக்கம்

'ஆதன்' என்பது அரசனது குடியையும், 'அவினி' என்பது அரசன் பெயரையும் குறிப்பன. காவலன் முறையோடு காவாது விடின் அறம் குன்றும்; ஆதலால், முதலில் தலைவி அவனை வாழ்த்தினாள். மக்கள் சிறப்புடன் வாழ, மிகுதியாய் நெல் விளைய வேண்டும், பொன் பெருகிட வேண்டும் என விரும்பினாள். தலைவியின் வாழ்வு சிறக்கத் தோழியர், தலைவன் நலமுடன் திகழ வேண்டினர். மேலும், தலைவனோடு பரத்தையைக் கூட்டுவித்துக் கற்பிற் சிறந்த தலைவிக்குப் பாணன் தீங்கிழைத்தனன்; ஆதலின், அத்தீயசெயலின் விளைவால் அவன் துயருறாதபடி இருக்கவும் விரும்பினர்.

குறிப்பு

மக்கள் நலம் பெறத் தலைவி, நாடு நலம் பெற வேண்டினாள். தலைவி நலம் பெற, நாங்கள் உன் நலனை வேண்டியிருந்தோம்.

உள்ளுறை

"நனைய காஞ்சிச் சினைய சிறுமீன் யாணர் ஊரன்" : அஃதாவது, அரும்புகள் நிறைந்த காஞ்சியும், முட்டைகளைக் கொண்ட சிறு மீனும் நிறைந்த ஊரினை உரிமையாய்க் கொண்டவன், தலைவன் என்பதாம். இத்தொடர்மூலம், 'தலைவன் உயர்ந்த தலைவியையும் இழிந்த பரத்தையையும் ஒன்றுபோலக் கருதினான்' என்னும் உள்ளுறைப் பொருள் பெறப்படுகிறது.

சொற்பொருள்

1. ஆதன் அவினி - மன்னன்.
2. பொலிக - விளைக; சிறக்க - பெருகுக.
3. வேட்டோள் - விரும்பினாள்; யாய் - தலைவி; யாமே - தோழியராகிய நாங்கள்.
4. நனைய - அரும்புகளைக் கொண்ட; காஞ்சி - காஞ்சி மரங்கள்; சினைய - முட்டைகளைக் கொண்ட.
5. யாணர் - புதுவருவாய்.
6. வேட்டேம் - விரும்பினோம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 2 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு தலைமகளோடு கூடி ஒழுகாநின்ற தலைமகன் தோழியரோடு சொல்லாடி, 'யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையொடு நெடுநாள் பழகினான்; அது தவறு என்று மனம் தெளிந்தான்; பரத்தையைவிட்டு மீண்டு தலைவியோடு கூடி வாழ்ந்தான். அப்பொழுது தோழியரோடு உரையாடிய தலைவன், 'நான் பரத்தையோடு வாழ்ந்தபோது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?' என்று வினவினான். அதற்குத் தோழி கூறியது.

'வாழி ஆதன், வாழி அவினி!
விளைக வயலே! வருக இரவலர்!
எனவேட் டோளே; யாயே; யாமே
'பல்இதழ் நீலமொடு நெய்தல் நிகர்க்கும்
தண்துறை ஊரன் கேண்மை
வழிவழிச் சிறக்க!' எனவேட் டேமே.

தெளிவுரை

'ஆதன் வாழ்க! அவினி வாழ்க! வயல் விளைக; இரவலர் வருக!' எனத் தலைவி விரும்பி வேண்டினாள். 'இதழ்கள் பல பொருந்திய நீலத்தோடு நெய்தலும் ஒப்ப மலரும் குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறைகளைக் கொண்ட தலைவனின் காதலுறவு வழிவழிச் சிறக்க' என்று நாங்கள் வேண்டி வாழ்ந்தோம்.

கருத்து

தலைவி தன்னலம் கருதாது பொது நலனையே விரும்பினாள். நாங்களோ உன் நட்பு வழிவழிச் சிறக்க வேண்டினோம்.

குறிப்பு

சிறப்புடைய குவளையுடன் சிறப்பில்லாத நெய்தல் பூ ஒப்பாகும் ஊரனென்றது, தலைவன் குலமகளிருடனே பொதுமகளிரைச் சமமாய் மதித்து ஒழுகுதலைச் சுட்டியது.

சொற்பொருள்

2. இரவலர் - இரப்போர், ஏற்போர்.
3. வேட்டோள் - விரும்பினாள்; யாய் - தலைவி.
4. பல்இதழ் - இதழ்கள் பல; நீலம் - நீல (குவளை) மலர்; நெய்தல் - நெய்தல் மலர்; நிகர்க்கும் - ஒப்ப மலரும்.
5. தண்துறை - குளிர்ச்சி பொருந்திய நீர்த்துறை; கேண்மை - நட்பு.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 3 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு, தலைமகளோடு கூடி ஒழுகாநின்ற தலைமகன் தோழியரோடு சொல்லாடி, 'யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையொடு நெடுநாள் பழகினான்; அது தவறு என்று மனம் தெளிந்தான்; பரத்தையைவிட்டு மீண்டு தலைவியோடு கூடி வாழ்ந்தான். அப்பொழுது தோழியரோடு உரையாடிய தலைவன், 'நான் பரத்தையோடு வாழ்ந்த போது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?' என்று வினவினான். அதற்குத் தோழி கூறியது.

'வாழி ஆதன், வாழி அவினி!
பால்பல ஊறுக! பகடுபல சிறக்க!'
எனவேட் டோளே; யாயே; யாமே,
'வித்திய உழவர் நெல்லொடு பெயரும்
பூக்கஞல் ஊரன் தன்மனை
வாழ்க்கை பொலிக' எனவேட் டேமே.

தெளிவுரை

'ஆதன் வாழ்க! அவினி வாழ்க! ஆநிரைகள் பால் நிறையச் சுரப்பனவாகுக! எருதுகள் எண்ணிக்கையில் மிகுவனவாக!' என *விரும்பியிருந்தாள், தலைவி. நாங்களோ, 'பின்விளைவை விரும்பி வயலுக்கு விதை கொண்டுசென்ற உழவர் முன் விளைந்த நெல்மணிகளை மனைக்குக் கொண்டு மீளுதற்கு இடமான பூக்கள் மலிந்த ஊருக்கு உரியவன், தலைவன். அவன் மனையற வாழ்க்கை என்றும் சிறப்பதாக'* என *வேண்டியிருந்தோம்.*

கருத்து

தலைவி இல்லறக் கடமையாற்றுவதில் முட்டுப்பாடு இல்லாத வளமை மிகுதியை வேண்டினாள்; நாங்களோ உம் மனைவாழ்க்கை சிறப்படை வதையே விரும்பி வேண்டினோம்.

விளக்கம்

குடும்ப நல்வாழ்வுக்குப் பாற்பயன் மிகுமாறும், வயல் வளம் செழிப்பதற்குப் பகடுகள் பெருக்கமுறுமாறும் தலைவி வேண்டினாள். தலைவி மகிழ்ச்சியோடு இருக்க, தலைவன் மனையறம் வழாது வாழவேண்டும் எனத் தோழியர் வேண்டினர். வித்திய உழவர் நெல் கொண்டு பெயர்தலாவது, வயலில் முன்பு

விதைக்கப்பட்டு நன்கு விளைந்து அறுவடையான நெல்லொடு திரும்புதலாகும்.

குறிப்பு

இனி வரும் விளைவு கருதி விதைத்த உழவர், விளைந்த நெல்லோடு திரும்புவர் என்பது கொண்டு, தலைவன் இனிவரும் பரத்தையருக்கு வேண்டுவனவற்றைச் செய்து இக்காலத்தில் பழகுகிற பரத்தையரோடு கூடி வாழ்கிறான் எனத் தோழி தலைவனைச் சாடுகிறாள்.

சொற்பொருள்

2. பால் பல ஊறுக - பால் வளம் மிகுந்து சிறக்கட்டும்; பகடு - எருது.
4. வித்திய உழவர் - நெல்லை விதைத்த உழவர்; நெல்லோடு - முன்பு விளைந்த நெல்லோடு; பெயரும் - திரும்புவர்.
5. பூக்கஞல் - பல்வகைப் பூக்கள் நெருங்கிய.

5-6.மனை வாழ்க்கை - இல்லற வாழ்க்கை.

6. பொலிக - சிறக்கட்டும்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 4 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு, தலைமகளோடு கூடி ஒழுகாநின்ற தலைமகன் தோழியரோடு சொல்லாடி, 'யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையொடு நெடுநாள் பழகினான்; அது தவறு என்று மனம் தெளிந்தான்; பரத்தையைவிட்டு மீண்டு தலைவியோடு கூடி வாழ்ந்தான். அப்பொழுது தோழியரோடு உரையாடிய தலைவன், 'நான் பரத்தையோடு வாழ்ந்தபோது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?' என்று வினவினான். அதற்குத் தோழி கூறியது.

'வாழி ஆதன், வாழி அவினி!
பகைவர்புல் ஆர்க! பார்ப்பார் ஓதுக!'
எனவேட் டோளே; யாயே; யாமே,
'பூத்த கரும்பின், காய்த்த நெல்லின்
கழனி ஊரன் மார்பு
பழனம் ஆகற்க;' எனவேட் டேமே.

தெளிவுரை

'மன்னன் வாழ்க! அவன் பகைவர் தம் பெருமை இழந்து புல்லரிசிச் சோறு உண்க. பார்ப்பார் தமக்குரிய மறைகளை ஓதிக் கொண்டிருப்பாராக' என விரும்பி வேண்டினாள், தலைவி. நாங்களோ, 'பூத்தும் பயன்படாக் கரும்பும், காய்த்துப் பயன்படும் நெல்லும் ஒருசேர விளையும் வயல்களைக் கொண்ட ஊரன் மார்பு, ஊர்க்குப் பொது நிலம்போலப் பலர்க்கும் பொது வாகாமல் இருப்பதாக' என விரும்பினோம்.

கருத்து

நாடு பகையற்று, மக்கள் தத்தம் தொழில்களை முறைப்படி செய்ய வேண்டும் எனத் தலைவி பொதுநலத்தை விரும்பினாள். நாங்கள், தலைவன் புறத்தொழுக்கம் இல்லாதவனாய், தலைவிக்கே உரியவனாய்ப் பிரியாது வாழ்வானாக எனத் தலைவியின் நலம் வேண்டியிருந்தோம்!

உள்ளுறை

"பூத்த கரும்பின், காய்த்த நெல்லின் கழனி ஊரன்" : அஃதாவது, பூத்துப் பயன்படாத கரும்பும், காய்த்துப் பயன் தரும் நெல்லும் கொண்டவன் ஊரன் என்பதாம். இத்தொடர்மூலம், குடிக்கு விளக்காகும் மக்களை ஈன்று தரும் தலைவியையும், அச் சிறப்பில்லாத பரத்தையரையும் தலைவன் ஒப்பாய்க் கருதி வாழ்பவன் என்னும் உள்ளுறைப் பொருள் வெளிப்படுகிறது.

குறிப்பு

கரும்பும் பூக்கும்; நெல்லும் பூக்கும்; நெல் பூத்துக் காய்த்து அடுத்த தலைமுறையைத் தோற்றுவிக்கும்; ஆனால், கரும்போ காய்த்துத் தன் பரம்பரையைத் தோற்றுவிக்காது. தலைவி மகப்பெற்றுக் குடியை வளரச்

செய்வதுபோலப் பூப்புற்றாலும் பரத்தை மகப்பெற்றுக் குடியை வளர்க்க மாட்டாள்.

சொற்பொருள்

2. புல் ஆர்க - புல்லரிசிச் சோற்றினை உண்பாராக.
5. கழனி - வயல்.
6. பழனம் - பொது நிலம்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 5 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

புறத்தொழுக்கத்திலே நெடுநாள் ஒழுகி 'இது தகாது' எனத் தெளிந்த மனத்தனாய் மீண்டு, தலைமகளோடு கூடி ஒழுகாநின்ற தலைமகன் தோழியரோடு சொல்லாடி, 'யான் அவ்வாறொழுக நீயிர் நினைத்த திறம் யாது?' என்றாற்கு அவள் சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையொடு நெடுநாள் பழகினான்; அது தவறு என்று மனம் தெளிந்தான்; பரத்தையைவிட்டு மீண்டு தலைவியோடு கூடி வாழ்ந்தான். அப்பொழுது தோழியரோடு உரையாடிய தலைவன், 'நான் பரத்தையோடு வாழ்ந்தபோது நீங்கள் என்ன நினைத்தீர்கள்?' என்று வினவினான். அதற்குத் தோழி கூறியது.

'வாழி ஆதன், வாழி அவினி!
பசிஇல் ஆகுக! பிணிசேண் நீங்குக!'
எனவேட் டோளே; யாயே; யாமே,
'முதலைப் போத்து முழுமீன் ஆரும்
தண்துறை ஊரன் தேர்எம்
முன்கடை நிற்க' எனவேட் டேமே.

தெளிவுரை

'ஆதன் குடியினனான மன்னன் அவினி வாழ்க! நாட்டில் பசி இல்லாதாகட்டும்; பிணிகள் எப்போதும் இல்லாது நீங்கட்டும்'

என விரும்பி வாழ்ந்தாள், தலைவி. நாங்களோ 'இளம் முதலை தன்னுடன் வாழும் பெரிய மீனைத் தேர்ந்து உண்ணும் குளிர்ச்சி பொருந்திய நீர்நிலைகளைக் கொண்ட ஊரனுடைய தேர், பிற பெண்டிர் வீட்டிற்கு முன் நிற்றலைத் தவிர்த்துத் தலைவியின் முற்றத்திலேயே நிற்கட்டும்' என விரும்பி வாழ்ந்தோம்.

கருத்து

தலைவியோ பசியும் பிணியுமின்றி நாடு வாழ வேண்டும் என விரும்பினாள். தோழியரோ தலைவன் என்றும் தலைவியுடனேயே கூடி வாழ வேண்டும் என்று விரும்பினர்.

குறிப்பு

நீர்த்துறையில் வாழும் முதலைப்போத்து, தன்னுடனேயே வாழும் மீனைப் பற்றியுண்ணும் என்னும் தொடர், தலைவன் தன் மனையிலே தன்னுடன் வாழும் தலைவியின் நலம் கெடும்படி செயல்படுகிறான் என்னும் குறிப்பினைக் கொண்டது.

சொற்பொருள்

2. பசி இல் ஆகுக - பசி இல்லாதாகட்டும்; பிணி - நோய்; சேண் நீங்குக - நெடுந்தூரம் சென்று இருந்திடுக.
4. போத்து - இளம் முதலை; முழு மீன் - முதிர்ந்த மீன்; ஆரும் - உண்ணும்.

5-6. எம்முன் கடை நிற்க - தலைவியின் வீட்டு வாயில் முன் நிற்க.

தலைவி கூற்று

ஐங்குறுநூறு 150 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

முன்னொருகாற் பிரிந்துவந்த தலைமகன் பின்னும் பிரிந்து வந்துழி அவனை முயங்காளாக, தோழி, 'நீ இவ்வாறு செய்வதற்குக் காரணம் என்?' என்று வினவியவழித் தலைமகள், தலைமகன் கேட்பத் தோழியிடம் சொல்லியது.

கூற்று விளக்கம்

முன் ஒருகால் தலைவி வருந்துமாறு பிரிந்து சென்றிருந்த தலைவன் மீண்டு வந்து அவளைத் தெளிவித்துக் கூடியிருந்தான். மீண்டும் அவள் வாடும்படியாகப் பிரிந்து சென்றவன் திரும்பவும் வந்து அவளைத் தழுவி இன்புற விரும்பினான். தலைவி அவனை ஏற்காது ஒதுக்கினாள். 'ஏன் இவ்வாறு செய்தாய்?' என்று தோழி கேட்க, தலைவன் கேட்குமாறு தலைவி தோழியிடம் சொல்லியது.

எக்கர் ஞாழல் நறுமலர்ப் பெருஞ்சினைப்
புணரி திளைக்கும் துறைவன்
புணர்வின் இன்னான்; அரும்புணர் வினனே.

தெளிவுரை

மணல்மேட்டில் நின்ற ஞாழல் மரத்தின் நறுமணம் மிக்க மலர்களைக் கொண்ட பெரிய கிளைகளைக் கடலலைகள் தழுவிச் செல்லும் நாட்டினையுடையவன், நம் தலைவன். அவன் நம்முடன் கூடியிருக்கும்பொழுதும் துன்பமே தருபவன்; (இன்பமளிப்பவனவாய் இருப்பதில்லை.) மேலும், அரிதாய் வந்து நம்மைப் புணர்பவனாகவும் உள்ளான்.

கருத்து

தலைவன் தழுவலைப் பெறாததால் எனக்குச் சிறிதளவு வருத்தமும் இல்லை.

விளக்கம்

தலைவன் தலைவியைக் கூடியிருக்கும்போதும் பரத்தையர் பற்றிய நினைவினைக் கொண்டவனாய்த் தலைவியை ஆரத் தழுவாதிருந்தான். மேலும், அவன் எந்த நேரத்திலும் பிரியும் நோக்கம் கொண்டவனாகவே இருந்தான். அதனால் அவன் கூட்டுறவே வேண்டியதில்லை என்கிறாள், தலைவி.

உள்ளுறை

"எக்கர் ஞாழல் நறுமலர்ப் பெருஞ்சினைப் புணரி திளைக்கும்" : அஃதாவது, ஞாழல் மரத்தின் மலர்மணம் மிக்க கிளைகளைக் கடலலைகள் தழுவித் திரும்பும் என்பதாம்.

இத்தொடர்மூலம், தலைவன் தலைவியிடம் அடிக்கடி வந்து அன்பு செய்வதுபோலக் காட்டிவிட்டுத் திரும்பச் சென்று விடுபவனாயிருக்கிறான் என்னும் உள்ளுறைப் பொருள் பெறப் படுகிறது.

சொற்பொருள்

1. எக்கர் - மணல்மேடு; ஞாழல் - ஞாழல் மரம்; பெரும் சினை - பெரிய கிளை.
2. புணரி - கடலலை; திளைக்கும் - தழுவிச் செல்லும்.
3. புணர்வின் - புணர்ச்சிக்காலத்தில்; இன்னான் - துன்பத்தைச் செய்பவன்; அரும் புணர்வினன் - அருமையாகவே நம்மை வந்து அடைபவன்.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 52 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

வாயில் பெற்றுக் கூடியிருந்த தலைமகற்குத் தோழி நகையாடிச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தை வீட்டிலிருந்தவாறு தூதனுப்பித் தலைவியின் இசைவைப் பெற்ற தலைவன் வீடு திரும்பித் தலைவியோடு சேர்ந்திருந்தான். அவனைப் பார்த்து, தோழி விளையாட்டாய் எள்ளி நகையாடிப் பேசியது.

பயலைச் செங்கொடிப் பிணையல் தைஇச்
செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கண்
செவ்வாய்க் குறுமகள் இனைய;
எவ்வாய் முன்னின்று மகிழ்நநின் தேரே?

தெளிவுரை

தலைவ! சிவந்த பசலைக்கொடியால் மாலை கட்டினாள், தலைவி; சிவப்பான அவள் விரல்கள் அதனால் மேலும் சிவந்தன; செவ்வரி படர்ந்த அவள் கண்கள் நீரைச் சிந்தின; அவள் செவ்வாய் மேலும் சிவந்தது. இவ்விளமையோள்,

அழுதழுது வாடி வருந்துமாறு, உன் தேர் எந்த வாயிலின் முன் நிற்பதற்குக் கருதுகிறது?

கருத்து

'இப்பொழுது இனிமையாய் இவளுடன் கூடிக் களிக்கும் நீ எங்ஙனம் பிரிந்திருந்தனையோ?'

விளக்கம்

தோழி தலைவனை எள்ளி நகையாடும் நோக்கில் உன் தேர் எந்த வீட்டு வாயிலின்முன் நிற்கக் கருதுகிறது என்று கேட்கிறாள். தலைவனுடைய தேர் இளையவளான தலைவியின் வீட்டை விட்டு அகன்று வேறு எவர் வீட்டின் முன்னும் நிற்கக்கூடாது என்று தோழி வற்புறுத்துகிறாள்.

சொற்பொருள்

1. பயலை - பசலை; செங்கொடி - சிவந்த கொடி; பிணையல் - மாலை; தைஇ - தொடுத்து.
2. சிவந்த - மேலும் சிவந்தன; சேயரி - செவ்வரி படர்ந்த; மழைக்கண் - நீர் சொரியும் கண்கள்.
3. குறுமகள் - இளம் மகள்; இனைய - வருந்த.
4. எவ்வாய் - எவ் வீட்டின் முன்; முன்னின்று - நிற்கக் கருதுகிறது.

வாயில்கள் கூற்று

ஐங்குறுநூறு 96 **ஓரம்போகியார்**

திணை : மருதம்

கூற்று

பரத்தையர் பலரோடும் ஒழுகுதல் கண்டு பொறாதிருந்த தலைமகள், தலைமகன் மனைக்கட் புகுந்துழி, உடன்படுதல் கண்ட வாயில்கள் தம்முள்ளே சொல்லியது.

கூற்று விளக்கம்

தலைவன் பரத்தையர் பலருடன் உறவு கொண்டபோது தலைவி மிகவும் மனம் வெதும்பியிருந்தாள். தலைவன் தன்னிடம் மீண்டதும் முன்பு

கொண்ட வெறுப்பினை நீக்கி, அவனொடு மகிழ்ந்திருந்தாள். அது கண்ட வாயில்கள் தம்முள் பாராட்டிக் கூறியது.

அணிநடை எருமை ஆடிய அள்ளல்
மணிநிற நெய்தல் ஆம்பலொடு கலிக்கும்
கழனி ஊரன் மகள்இவள்
பழன ஊரன் பாயல்இன் துணையே!

தெளிவுரை

பெருமித நடையினைக் கொண்ட எருமை புகுந்து கலக்கிய சேற்றில் நீலமணி நிறமுள்ள நெய்தலோடு ஆம்பலும் தழைக்கும். அத்தகைய கழனிகளைக் கொண்ட ஊரன் பெற்ற மகள் இவள். மருத நில வயல்களையுடைய ஊரனாகிய தன் கணவனுக்கு இவள் அவன் படுக்கையில் இனிய துணையாயினாள்.

கருத்து

தலைவி ஊடல் நீங்கிக் கூடியது கண்ட வாயில்கள் 'தலைவியின் கற்பின் மாண்பு போற்றுதற்குரியது' எனத் தம்முளே சொல்லிக்கொண்டனர்!

விளக்கம்

தாம் வாழும் சேற்றில் புகுந்து கலக்கிய எருமைக்குத் தாமே தழைத்துப் பயன்படும் நெய்தலும் ஆம்பலும் உள்ள கழனிகளைக் கொண்ட ஊரன் மகள், தலைவி. அதனால்தான் அவள், தலைவன் தன் பரத்தமை ஒழுக்கத்தால் தன் மனத்தைக் கலக்கி உடலை வருந்தச் செய்தாலும் பரத்தையை விட்டு விலகி அவன் தன் மனை புகுந்தபோது ஏற்று வழிபடும் கற்பினைக் கொண்டவளாயிருக்கிறாள்.

சொற்பொருள்

1. அணி நடை - பெருமித நடை; ஆடிய - கலக்கிய; அள்ளல் - சேறு.
2. மணி - நீலமணி; நெய்தல் - நெய்தல் பூக்கள்; ஆம்பலொடு - ஆம்பல் பூக்களோடு; கலிக்கும் - தழைக்கும்.
3. கழனி - வயல்.
4. பழனம் - தோட்டம்; பாயல் - படுக்கை; இன்துணை - இனிய துணை.

தோழி கூற்று

ஐங்குறுநூறு 283 **கபிலர்**

திணை : குறிஞ்சி

கூற்று

தோழி வாயில் மறுக்கவும், தலைமகன் ஆற்றாமை கண்டு தலைமகள் வாயில் நேர, அவன் பள்ளியிடத்தானாய் இருந்துழிப் புக்க தோழி கூறியது.

கூற்று விளக்கம்

தோழி தலைவனுக்கு வாயில் மறுத்தாள். அதனைப் பொறுத்திட இயலாமல் தலைவன் வருந்தினான். அவன் ஆற்றாமை கண்டு தலைவி வாயில் நேர்ந்தாள். தலைவன் தலைவியோடு படுக்கை அறையில் இருந்தபோது தோழி கூறியது.

வன்கண் கானவன் மென்சொல் மடமகள்
புன்புல மயக்கத்து உழுத ஏனல்
பைம்புறச் சிறுகிளி கடியும் நாட!
பெரிய கூறி நீப்பினும்,
பொய்வலைப் படூஉம் பெண்டுதவப் பலவே.

தெளிவுரை

"குறவன் வன்கண்மை மிக்கவன். மென்மையான சொற்களைப் பேசும் அவன் மகள், புன்செய் நிலத்தில் உழுது விதைத்து விளைந்த தினையைப் பச்சைக்கிளிகள் கவராதவாறு அவற்றை விரட்டிக்கொண்டிருக்கிறாள். இத்தகைய காட்சி கொண்ட மலை நாட்டிற்குத் தலைவனே! தம் உறவினர் உறுதிபயக்கும் சொற்கள் பலவற்றையும் கூறி விலக்கியபோதும், இவ்வுலகத்தில் தம் கணவன்மார் கூறுகின்ற பொய்களாகிய வலையில் சிக்கி அவர்கட்கு ஆட்பட்டழியும் பெண்டிர் எண்ணற்றவர் ஆவர்" (இவளும் அவர்களுள் ஒருத்தி) என்று தோழி கூறுகிறாள்.

கருத்து

தலைவன் சொற்கேட்டு ஊடலை விலக்கிக் கூடியிருந்த தலைவியைக் கண்டு, 'கணவன் சொற்கேட்டு ஏமாறுபவர் எண்ணற்றவர்; இவளும் அவர்களுள் ஒருத்தி' என்று தோழி கூறினாள்.

விளக்கம்

தலைவி தன் கணவனின் பரத்தமைக்காக முதற்கண் வருந்தினாள்; எனினும், பின்னர் அவன் சொன்ன சொற்களில் உண்மையிருப்பதாய் நம்பி, அவனை ஏற்று மகிழ்ந்தாள். பொதுவாகப் பெண்டிர் இங்ஙனம் ஏமாறும் தன்மையரே என்று தோழி கூறினாள்.

சொற்பொருள்

1. வன்கண்மை - உள்ளத் திண்மை; கானவன் - குறவன்; மடமகள் - இளமையான மகள்.
2. புன்புலம் - புன்செய் நிலம்; மயக்கத்து உழுத - புரட்டி உழுத; ஏனல் - தினைப்புனம்.
3. பைம்புறம் - பச்சையான மேற்புறம்; கடியும் - விரட்டும்.
4. பெரிய கூறி - ஆடவரின் பெரிய குறைகளைக் கூறி; நீப்பினும் - விலக்கினாலும்.
5. பொய்வலை - பொய்யாகிய வலை; படூஉம் - சிக்கும்; தவப் பல - மிகப் பலர்.

தலைவி கூற்று

திணைமாலை நூற்றைம்பது 139 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

மணந்தவன் போயபின் வந்த பாங்கியோடு இணங்கிய மைந்தனை இனிதில் புகழ்ந்து சொல்லியது.

கூற்று விளக்கம்

தன்னைப் பிரிந்து பரத்தை வீடு சென்ற தலைவன் திரும்பி வரக் காரணமாய் விளங்கிய மகனைத் தழுவித் தலைவி உரைத்தது.

மருதோடு காஞ்சி அமர்ந்துயர்ந்த நீழல்
எருதோ(டு) உழல்கின்றார் ஓதை – குருகோடு
தாராத்,தோ(று) ஆய்ந்தெடுப்பும் தண்அம் கழனித்தே
ஊராத்,தே ரான்தந்தை ஊர்.

தெளிவுரை

மேலே ஏறி அமர்ந்து பயணம் செய்யப் பயன்படாத பொம்மைத் தேரினைக் கொண்ட என் மகனைப் பெற்ற தந்தையின் மருத நிலத்து ஊர்களில் மருத மரங்களும் காஞ்சி மரங்களும் கூடி வானளாவ உயர்ந்து வளர்ந்திருக்கும். அவற்றின் நிழலில் எருதுகளுடன் உழைப்பவரான உழவர் எழுப்பும் ஒலியுடன் நாரைகளுடன் வாத்துகள் சேர்ந்து எழுப்பும் ஒலியும் கலந்திருக்கும்.

கருத்து

ஊடலை நீக்கிப் புணர்ந்து மகிழ்கின்ற தலைவி, அப்புணர்ச்சிக்குக் காரணமான தன் மகனைப் புகழும்போது, மணாளனையும் புகழ்கிறாள்.

குறிப்பு

உழவர் ஒலியும் பறவைகள் ஒலியும் ஒன்றுகூடி மிகுந்து ஒலித்ததுபோல, தலைவியின் அன்போடு தலைவனின் அன்பு கலந்து பேரின்பத்தைத் தந்தது என்பது குறிப்பு.

சொற்பொருள்

1. மருது, காஞ்சி - மரங்கள்; அமர்ந்து - பொருந்தி; உயர்ந்த - வானளாவி வளர்ந்ததால் உண்டான; நீழல் - நிழல்.
2. உழல்கின்றார் - உழைப்பவர்; ஓதை - ஒலி; குருகு - நாரை.
3. தாரா - வாத்து; தோறும் - ஒலிகளுடன்; ஆய்ந்து - சென்று கலந்து; எடுப்பும் - மிகும்; தண்அம் - குளிர்ச்சி பொருந்திய அழகிய.
4. ஊராத்தேர் - மேலே ஏறி ஊர்தற்குப் பயன்படாத பொம்மைத்தேர்; தந்தை - (அவன் தந்தையாகிய) தலைவன்.

தலைவன் கூற்று

திணைமாலை நூற்றைம்பது 150 **கணிமேதாவியார்**

திணை : மருதம்

கூற்று

தலைமகன் தலைமகளைப் புணர்ந்து மகிழ்ந்து பாணனிடம் கூறியது.

கூற்று விளக்கம்

பாணனை வாயிலாய்க்கொண்டு தலைவியின் ஊடலை நீக்கி, அவளோடு கூடிய தலைவன், தன் மகிழ்ச்சியைப் பாணனிடம் கூறியது.

கண்ணுங்கால் என்கொல்? கலவையாழ்ப் பாண்மகனே!
எண்ணுங்கால் மற்(று)இன்(று) இவளொடுநேர் – எண்ணின்
கடல்வட்டத்(து) இல்லையால் கல்பெயர் சேராள்
அடல்வட்டத்(து) ஆர்உளரேல் ஆம்.

தெளிவுரை

பல பண்களையும் கலந்து பாடும் யாழ்ப்பாணனே! ஆராய்ந்து பார்த்தால், எனக்கு மகிழ்ச்சியைத் தந்துகொண்டிருக்கும் என் மனைவிக்கு நிகரானவளை, கடல்சூழ் இவ்வுலகத்தில் காண இயலாது; அறக்கற்பினளாகிய இவளுக்கு நிகரானவளை வெற்றி மிக்க மேலுலகத்தில் வாழும் தேவமகளிருள் ஒருவேளை காணலாம்.

கருத்து

தலைவியின் ஊடலை நீக்கி அவளோடு கூடிய தலைவன், 'என் தலைவிக்கு நிகரான பெண் ஒருத்தி கடல்சூழ் இவ்வுலகில் எங்கும் இராள்; ஒருவேளை மேலுலகத் தேவமகளிருள் இருக்கலாம்' என்று புகழ்ந்தான்.

குறிப்பு

வீரம் மிக்க வீரர்களின் பெயர்கள் நடுகற்களில் பொறிக்கப்படுகின்றன. அப்பெயர்கள் வீரர்களின் மறத்தன்மையைக் குறிக்கும். ஆதலின், 'கல்பெயர் சேராள்' என்பது மிகுந்த அறப்பண்பு வாய்ந்த பெண்ணையே குறிப்பதாகும்.

சொற்பொருள்

1. கண்ணுங்கால் - கருதுமிடத்து; கலவை - பல பண்களையும் கலந்து பாடும்.
2. எண்ணுங்கால் - ஆராயுங்கால்; இவள் - என் மனைவி; நேர் - ஒப்பு, நிகர்.
3. கடல் வட்டம் - கடல் சூழ்ந்துள்ள இவ்வுலகம்; கல்பெயர் சேராள் - அறக்கற்பினளாகிய தலைவி.
4. அடல் வட்டம் - வெற்றி மிக்க மேலுலகம் (அடல் - வெற்றி); ஆர் - யாராவது; உளரேல் - இருப்பாராயின்; ஆம் - இருக்கலாம்.

தலைவி கூற்று

குறுந்தொகை 49 **அம்மூவனார்**

திணை : நெய்தல்

கூற்று

தலைமகன் பரத்தைமாட்டுப் பிரிந்தவழி ஆற்றாளாகிய தலைமகள், அவனைக் கண்டவழி அவ் ஆற்றாமை நீங்குமன்றே; நீங்கியவழிப் பள்ளியிடத்தானாகிய தலைமகற்குச் சொல்லியது.

கூற்று விளக்கம்

பரத்தையிடமிருந்து மீண்ட தலைவனுடன் கூடியிருந்த தலைவி, தான் முன்பு கொண்ட வருத்தம் புலப்பட, 'பிறவிதோறும் யானே உன் மனத்திற்கு உகந்தவளாய் ஆகுக' எனக் கூறுகிறாள்.

அணிற்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!
இம்மை மாறி மறுமை யாயினும்
நீஆ கியர்என் கணவனை
யான்ஆ கியர்நின் நெஞ்சுநேர் பவளே.

தெளிவுரை

அணிலின் பற்களைப் போன்ற முள்களைக் கொண்ட மகரந்தம் நிறைந்த முள்ளிச்செடிகளையும், நீலமணி போன்ற

நிறமுள்ள கரிய நீர்ப்பரப்பினையும் கொண்ட கடற்கரைக்குத் தலைவனே! இப்பிறப்பு நீங்கி மறுபிறப்பு உண்டாயினும் நீயே என் கணவன் ஆகுக; நான் உனது நெஞ்சுக்கு உகந்த மனைவி ஆகுக!

கருத்து

தலைவனோடு கொண்ட ஊடல் தீர்ந்த வழி, 'தலைவ! நம் அன்பு எப்பிறவியிலும் தப்பாது தொடர வேண்டும்' என்னும் விழைவைப் புலப்படுத்துகிறாள், தலைவி.

விளக்கம்

தலைவி, நான் உன் மனைவி ஆகுக என்னாது 'நெஞ்சு நேர்பவள் ஆகுக' என்றதால், பரத்தையிடமிருந்து வந்த தலைவனிடம், குறிப்பாய்த் தன் வருத்தத்தைச் சொல்வதாகிறது. அடுத்த பிறவியிலாவது நான் உனக்கு மனைவியாக மட்டுமன்றி, உன் நெஞ்சிற்கு உகந்தவளாயும் ஆதல் வேண்டுமெனத் தலைவி கூறுகிறாள். இது தலைவனது பரத்தைமையை மிகக் கூர்மை யாய்க் கடிவதாய்த் தொனிக்கிறது.

இறைச்சி

முள்ளிச்செடி முள்ளினைக் கொண்டதாயினும் அது மலர் களையும் மணத்தையும் பூந்தாதினையும் மிகுதியாய்ப் பெற்றி ருக்கும். அதுபோலத் தலைவன் புறத்தொழுக்கம் கொண்ட வனாயிருப்பினும் தலைவியிடம் அன்பு கொண்டவனாகவே இருப்பான் என்பது இறைச்சிப் பொருளாம்.

சொற்பொருள்

1. கொங்கு - பூந்தாது; முதிர் - நிறைந்த; முண்டகம் - நீர்முள்ளிச் செடி.
2. மணி - நீலமணி; கேழ்அன்ன - நிறத்தைப் போன்ற; மாநீர் - கடல்; சேர்ப்ப! - தலைவ!
3. இம்மை - இப்பிறவி; மறுமை - மறு பிறப்பு.
4. ஆகியர் - ஆகுக.
5. நின் நெஞ்சு நேர்பவள் - உன் மனத்துக்கிசைந்த மனைவி.

சங்க இலக்கியங்கள், பழந்தமிழர் வாழ்வியலின்
பண்பாட்டுக் களஞ்சியங்கள்;

சாதாரண வரிக்குக் கூட மெருகூட்டி மிளிரச் செய்யும்
மேதை சிலம்பொலியின் முத்தான உரைகளோடு
தமிழுக்கு ஓர் அருங்கொடையாய்த்
தன் வாழ்நாளின் ஒப்பற்ற சாதனையாய்ப்

பதினான்கு தொகுதிகளாக வெளிவருகின்றன.
சிலம்பொலி செதுக்கியுள்ள உரைச்சிறப்பங்கள் இவை
வெறும் பொழிப்புரைகள் அன்று, பொன்னுரைகள்.

சிலம்பொலி...

செந்தமிழர் செவிகளுக்குத் தேனொலி;
செம்மாந்த சிந்தனையின் பேரொளி;
நன்னெறியாளர்; நுண்ணறிவாளர்;
தன்னலம் கருதாத் தமிழ்ப்பேரறிஞர்.
சங்கத்தமிழின் ஆழம்கண்ட வேழம் இவர்.

தமிழ் கூறு நல்லுலகம்
சிலம்பொலியின் சீர்மிகு படைப்புக்குச்
சிவப்புக் கம்பள வரவேற்பு நல்கிப்
பெரிதும் பயன்பெறும்; அவரைப்
போற்றிப் பாராட்டும்.

இலக்கியவீதி இனியவன்

ஆறாயிரம் பக்கங்களில் பதினான்கு தொகுப்புகளாகச் சிலம்பொலி செல்லப்பனார் வடித்திருக்கும் "செம்மொழித் தமிழ் அகப்பொருள் களஞ்சியம்", தமிழின் அக இலக்கிய உலகிற்கு அருளப்பட்டிருக்கின்ற அரும்பெரும் கொடை. ஐம்பதாண்டுக் காலத்திற்குமேல் தமிழின் அக இலக்கியங்களில் ஆழ்ந்து தவமிருந்து, சிலம்பொலியார் அயராமல் உழைத்ததன் காரணமாக, நமது இளம்தலைமுறையினருக்கு இப்படியோர் வரம் கிடைத்திருக்கிறது. தவமிருந்தவர் சிலம்பொலியார்; வரம் பெற்றவர்களோ தமிழர்கள்.

தமிழைத் திரட்டித் திரட்டி நிகழ்காலத்தின் கரங்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற இந்நூல் வரிசை, என்றென்றைக்கும் நமது அகநூல் களுக்கான களஞ்சியமாகவும், அவற்றுக்கான அரணாகவும், அவற்றை நோக்கிப் பயணிக்க உதவுகின்ற பண்பட்ட பாதையாகவும் திகழும். இப்படைப்பு வரிசை உலகெங்கும் விரிந்து பரவுகின்ற உயிர்த்தன்மை மிக்க, உண்மைத்தன்மை மிக்க, படிப்போரை உயர்த்தும் தன்மை மிக்கவை. வணங்குவதற்கு மட்டுமன்று; நன்றி கூறவும் கைகூப்புவோம், சிலம்பொலியாரை நோக்கி.

கவிஞர் ஜெயபாஸ்கரன்

Set of 14 Books
ISBN: 978-81-8379-767-2

Vol-14
ISBN: 978-81-8379-781-8

விலை ரூ. 7200/-